இருத்தை - சந்திரனுன்காம் பக்கம், செங்கொட்டை, நாழிகைவட்டில்.

இருநா - உடம்பு, பாம்பு.

இருநிதிக்கிழவன் - குபேரன்.

இருந்து / இருந்தை } அசைச்சொல், கரி.

இருபன்னியம் - செங்கொட்டை.

இருபால் - இரண்டுவகை.

இருபாவிருபது - ஓர் பிரபந்தம்.

இருபாற்று - இருபாலையுடையது.

இருபான் - இருபது.

இருபிறப்பாளர் - அந்தணர்.

இருபிறப்பு - அந்தணர், சந்திரன், சிறகு, முட்டையிற் பிறப்பன, பல்.

இருபெயரொட்டு - இருசொல்லொருசொல்லாக நிற்பது.

இருபெயரொட்டுப் பண்புத்தொகை - ஆகியவென்னும் பண்புருபு தொக்கு நிற்க முதலாவது சிறப்புப்பெயரு மிரண்டாவது பொதுப்பெயருமாய் ஒரு பொருட் கிருபெயர் வருவன.

இருபெயர் - பொதுப் பெயர், காரணப்பெயர்.

இருபொருள் - கல்விப்பொருள், செல்வப் பொருள்.

இருபோகம் - இரண்டுதரம் விளைவு.

இருப்பவல் - ஓர் பூண்டு.

இருப்பிடம் - இசனம், இருக்குமிடம்.

இருப்பு - இருக்கத்தக்கவிடம், இருக்குந்தன்மை, இருக்கை, குதம், பீடம், மிகுந்திருப்பவை.

இருப்புக்காய்வேளை - ஓர் வகைக் காய்வேளை.

இருப்புக்கிட்டம் - கீச்சுக்கிட்டம்.

இருப்புக்கொல்லி - சிவனார் வேம்பு.

இருப்புப்பாரை - குழிகல்லுங் கருவி.

இருப்புமுள் - குற்றுக்கோல்.

இருப்புமுறி - ஓர் செடி.

இருப்புலி - துவரை.

இருப்பூறல் - இருப்புக்கறை.

இருப்பை - ஓர் மரம்.

இரும்டியாகுபெயர் - ஆகுபெயர் மீண்டும் வேறொரு பொரு ளுக்கு ஆகு பெயராய் வரு வது.

இருமடிபேவல் - ஈரேவல்.

இருமணம் - நற்கந்தம், துர்க்கந் தம்.

இருமரபு - தாய்மரபு, தந்தை மரபு.

இருமல்- இருமுதல்,கக்கல்நோய்.

இருமல்லி - சிறுமல்லி, பெரு மல்லி.

இருமனம் - சந்தேகம்.

இருமு - இரண்டசையாலாகிய மொழி.

இருமை - இம்மை மறுமைகள், இரண்டு, இருதன்மை,கருமை, துக்கம், பெருமை, மகிமை.

இருமைக்குறில் - உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில்.

இரும்பலி } ஓர் செடி.
இரும்பிலி }

இரும்பன் - காரெலி.

இரும்பு - ஆயுதப்பொது, கரும் பொன்.

இரும்புளி - ஓர் மரம்.

இரும்பை - குடம், பாம்பு.

இருவகைத்தோற்றம் - சராசரம்.

இருவர் நூல் - கடவுள்; பின்ன வன் என்னும் இருவராற்செய் யப்பட்ட முதனூல் வழிநூல்.

இருவர்மாறுகோள் ஒருதலை துணிவு - ஒருவராலே மாறுபட்ட இரண்டனுள் ஒன்றை நீக்கி ஒன்றைத் துணிந்து எடுத்துக்கொள்ளுதல்.

இருவழக்கு - உலக வழக்கு, செய்யுள் வழக்கு.

இருவழி - வேற்றுமைவழி, அல்வழி.

இருவாச்சி - கருமுகைச்செடி.

இருவி - இருவிக் காந்தம், ஓர் நாபி, தினைத்தாள்.

இருவிக்காந்தம் - ஓர்நச்சுமூலிகை.

இருவினை - நல்வினை, தீவினை.

இருவேலி - வெட்டிவேர்.

இருவேளை - தைவேளை, நல்வேளை.

இருளர் - வேடர்.

இருளல் - அந்தகாரமாதல், இருளுதல், வியங்கோண்முற்று.

இருளி - இருசி, கருஞ்சீரகம், பன்றி, மூலையிலி, வெட்கம்.

இருளை - எாணம்.

இருளிச்செவி - அமுக்கிராச் செடி.

இருளுதல் - ஒளிமழுங்கல், மங்கலாதல்.

இருள் - அந்தகாரம், இருட்டு, இருளென்னேவல், உன்மத்தம், கறுப்பு, நரகம், மயக்கம், யானை.

இருள்வலி - சூரியன்.

இரெப்பை - கண்மடல்.

இரேகை - எழுத்து, சந்திர ரேகை, சித்திரமெழுதல், வரி.

இரேசகம் - பிராணயாமத்தில் ச்வாஸத்தை விடல், பேதி மருந்து.

இரேசகி - கடுக்காய், சீந்தில்.

இரேசனம் - பேதி.

இரேசன் - வெள்ளைப்பூண்டு

இரேசிதம் - குதிரைவட்டமா யோடல், பரதவுறுப்பு களுளொன்று.

இரேசுதல்-அஜீரணம், அந்திப்பு.

இரேணு - அணு, அழகு.

இரேணுகம் - ஓர் மருந்து.

இரேதஸ் - விந்து, வீரியம்.

இரேபதம் - அட்டாதச தரும நூலிலொன்று.

இரேயம் - கள்.

இரேவகுப்தி - ஓரிராகம்.

இரேவதம் - இரேவதிநாள்.

இரேவதன் - பலதேவன் மாமன்.

இரேவதி - கடைநாள், பலதே வன் மனைவி.

இரேவதிகொண்கன் - பலதே வன்.

இரை - ஆகாரம், இருப்பு, இலக் குமி, இரையென்னேவல், உணவு, ஒலி, பறவையுணவு.

இரைச்சல் - இரம்பம், ஒலி, வீக்கம்.

இரைதல் - ஒலித்தல், சீறுதல்.

இரைத்தல் - ஒலித்தல், சப்தித்தித்தல், வீங்குதல்.

இரைத்து - இண்டஞ்செடி, இரண்டு, உப்பிலி, புலிதொடக்கி, வெண்கலம்.

இரைப்பெலி - ஓர்வகையெலி.

இரௌத்தர் - குதிரைச் சேவகர், சோனகர்.

இரௌத்திரம் - பெருங்கோபம், நவரஸங்களிலொன்று.

இரௌத்திரி - ஓர் வருடம்.

இரௌரவம் - ஓர் நரகம், சிவகாமமிருபத்தெட்டினொன்று.

இர் - பன்மை விகுதி, முன்னிலை விகுதி.

இலஈடம் - யானைமேற்றவிசு.

இலகம் - ஊமத்தை.

இலகரி - ஓர் நூல், பெருந்திரை, மஸ்து, மிகுபுகழ்ச்சி, வெறி.

இலகல் - ஒலிசெய்தல், விளங்கல்.

இலகிமா-அட்டசித்தியிலொன்று

இலகிரி - அபின், கஞ்சா, சாதிக்காய், சாதிப்பத்திரி.

இலகு - அகில், இலகென்னேவல், குறிலெழுத்து, நொய்மை, தணிவு, தசகாலப்பிரமாணங்களுளொன்று.

இலகுசம் - ஈரப்பலா.

இலகுதல் - ஒளி செய்தல்.

இலக்கணச்சிதைவு - இலக்கண வழு.

இலக்கணப்போலி - இலக்கணமுடையதுபோல் வருவது.

இலக்கணம் - அடையாளம், அழகு, இயல், இலக்கியத்தினமைதி, ஒழுங்கு, சிறப்பு, தன்மை, பேர், போதப்பிரகாரம் மூன்றினொன்று, அஃது - தான் விவரிக்கும் பொருளின் சிறப்பைக்கூறல், முறைமை.

இலக்கணவழு - இலக்கணப் பிழை.

இலக்கணவிளக்கச்சூறாவளி - ஓர் இலக்கண நூல்.

இலக்கணவிளக்கம் - இயற்றமிழ் நூலிலொன்று.

இலக்கணி - இலக்கண மறிந்தவன்.

இலக்கணை - இயற்பொருளின் சம்பந்தியை யுணர்த்துவது.

இலக்கம் - இலட்சம், ஒளி, எண், குறிப்பு, துலக்கம்.

இலக்கம், இலக்காரம் - கந்தை, சீலை.

இலக்கியம் - இலக்கண நூற்படி முன்னோர் தந்த செய்யுள். உதாரணம், குறி.

இலக்கினம் - இராசிகளினுதயம், முகூர்த்தம்.

இலக்குமணன் } இராமனுக்கிளை
இலட்சுமணன் } யோன்.

இலக்கு - எண்ணம், எதிர், ஏது, ஒட்டம், ஒப்பு, குறிப்பு, சமயம், சுவடு.

இலக்குப்பார்த்தல் - குறிப்புப் பார்த்தல்.

இலக்குமணை - சாரசபட்சியின் பேடு.

இலக்குமி } சீதேவி,
இலட்சுமி } செல்வம்.

இலக்கம் - எறும்பு, களரி, கூட்டம், முடம்.

இலங்கனம் - கடத்தல், தாண்டுகை, பட்டினி.

இலங்கிசார் - அலைக்கழிவு, இடைஞ்சல்.

இலங்கு - ஒளிசெய்யென்னேவல், குளம்.

இலங்குதல் - ஒளி செய்தல், பிரகாசஞ் செய்தல்.

இலங்கை - ஆற்றிடைக்குறை, இலங்கைத்தீவு, இராவணனரண்.

இலசுனம் - மணியின் குற்றத்தொன்று, வெள்ளைவெங்காயம்.

இலச்சினை - குறி, முத்திரை, மோதிரம்.

இலச்சை - அவமதிப்பு, கூச்சம், தொந்தரவு, வெட்கம்.

இலச்சைகெட்டமரம் - கற்றேக்கு.

இலஞ்சம் - பரிதானம்.

இலஞ்சி - எரி, கீழ், குணம், குளம், கொப்பூழ், சாரைப்பாம்பு, புனம், புன்கு, மடு, மதில், மகிழமரம்.

இலட்சணம் - இடம், இலக்கணம், குறி, பார்வை, பேர்.

இலட்சம் - அடையாளம், இலக்கம், நூறாயிரம்.

இலட்சியம் - குறி.

இலட்சுமணம் - தாளி.

இலட்டுகம் - அப்பவர்க்கம், தோசை, பொரிமாத்திரனை.

இலணை - அரசு.

இலண்டம் - யானையிலத்தி.

இலதை - கோற்கொடி, தக்கோலம், படர்கொடி.

இலதைவன்னி - கொடிவேலி.

இலந்தை - ஓர் மரம், குளம்.

இலபனம் - வாய்.

இலிபி - எழுத்து, பேறு, விதி.

இலிபிதம் - சம்பவிப்பது, பட்சித்தல், பேச்சு, பேறு, விதி.

இலிபித்தல் - சித்தித்தல், பேறு கிடைத்தல்.

இலப்தம் - அடைதல், பாசிதம்.

இலம்பகம் - அத்தியாயம், நுதலணிமாலை, மாலை.

இலம்படை - இடுக்கண், தரித்திரம்.

இலம்பம் } உச்சத்திற்குந்துரு
இலம்பனம் } வத்திற்குமுள்ளதூ
ரம், கைக்கூலி, தொங்குவது, நிறுதிட்டவரி, மாலை.

இலம்பாடு - தரித்திரம், வறுமை.

இலம்பாட்டோன் - தரித்திரன்.

இலம்பிகை - அண்ணாக்கு.

இலம்பிதமதி - சுத்தசசிபுடம்; கிராந்திமண்டலத்திற் கணக்கிட்ட சந்திரபுடம்.

இலம்பிதச்சா - உச்சராசி.

இலம்பிதம் - அசைவு, உயர்ச்சி, சந்திரபுடத்தை சூரிய பாதையிற் சேர்க்குமோரளவு, தொங்கல்.

இலம்போதரன் - விநாயகன்.

இலயம் - அடங்குகை, உருக்கல், ஒடுக்கம், கூத்தின் விகற்பம், கரைவு, கூத்து, சாவு, மறைவு.

இலயஸ்தானம் - ஒடுக்குமிடம்.

இலயித்தல் - ஒடுங்கல், சாதல்.

இலயை - தாளப்பிரமாணம்பத்தினொன்று.

இலலாடம் - நெற்றி.

இலலாடலிபி - தலையிலெழுத்து.

இலலிதம் - அழகு, அபிநயம், உபசாரம், ஓரிராகவிகற்பம், காமக்குறி, மாதுரியம்.

இலலிதை - இராக முப்பத்திரெண்டினொன்று, பார்வதி.

இலவங்கம் - ஓர் வாசனைப்பண்டம், கராம்பு.

இலவணபஞ்சாட்சரம் - ஓர் மந்திரம், ஓர் மாந்திரீக நூல்.

இலவணபாஷாணம் - ஓர் பாஷாணம்.

இலவணம் - உப்பு, உவர்ப்பு.

இலவந்திகை - தண்ணீரிறைக்கும் யந்திரம்.

இலவம் - அழிவு, அற்பம், எழுதீவுகளிலொன்று, எண்கணப்பொழுது, கராம்பு, காலக்ஷப்மரமாணத்தொன்று, அது - எட்டுகணங்களைக்கொண்டது, சாதிக்காய், பஞ்சுமரம், பிழை நீக்கல், பூசை.

இலவன் - இராமன் முதல் மைந்தன்.

இலளிதபஞ்சகம் - ஓரிராக விகற்பம்.

இலளிதம் - அழகு, உபசாரம், ஓரிராகம், சரசம், சிவாகமமிருபத்தெட்டிலொன்று, மாதுரியம்.

இலளிதை - பார்வதி.

இலாகரி - மஸ்து, வெறி.

இலாகவம், இலாகு - இலகு, சாமர்த்தியம்.

இலாகன் - ஓர் மீன்.

இலாக்கை - ஈர்.

இலாங்கலி - கலப்பை, செங்காந்தள், தென்னமரம், பனைமுதலியன.

இலாங்கூலம் - வால்.

இலாசசம் - ஓர் நில அளவை, மரக்கால்.

இலாஞ்சனம் - அடையாளம், கீர்த்தி.

இலாஞ்சனை - அலைவு, இலாஞ்சனம், புள்ளி, பெயர், முத்திரை.

இலாஞ்சி - ஏலம்.

இலாடம் - ஓர்தேசம், ஓர்பாஷை, நெற்றி.

இலாடசிந்தூரம் - குதிரைக்குளம்பிரும்பைப் புடஞ் செய்த பொடி.

இலாடன்பருத்தி - ஓர் வகைப் பருத்தி.

இலாபம் - ஆதாயம், நயம்.

இலாமச்சை, இலாமிச்சை - ஓர்வாசனைப்புல், விழல்.

இலாயம் - ஏலரிசி, குதிரைப்பந்தி.

இலாலனம், இலாலனை - அன்புவைத்தல், கெஞ்சுதல், சீராட்டு, தாலாட்டு, நயஞ்செய்கை.

இலாலி - ஓர் வாழ்த்து, கற்பழிப்போன், நயஞ்செய்கை, துதி, மங்கலப்பாடல்.

இலாவணியம் - அழகு.

இலாவிருதம் - நவகண்டத்தொன்று.

இலி - இல்லாதவன்.

இலிகி - எழுதுகை, எழுத்து.

இலிகிதம் - கையெழுத்துப்பிரதி, கலைஞான மறுபத்து நான்கினொன்று.

இலிகுசம் - எலுமிச்சை.

இலிங்ககோளம் - கோசகோளம்.

இலிங்கபாஷாணம் - முப்பத்திரண்டு பாஷாணங்களிலொன்று.

இலிங்கபுடோல் - ஐவிரலி.

இலிங்கபுராணம் - பதினெண்புராணத்தொன்று.

இலிங்கம் - அடையாளம், ஆண்குறி, சிவலிங்கம், இங்குலிகம்.

இலிங்கிகள் } முனிவர்.
இலிங்கர் }

இலிதை - குறிப்பிசை, பூமி.

இலிந்தகம் - கருங்குவளை.

இலிபி - இலக்கம், எழுத்து, மெழுகுதல், விதி.

இலிபித்தல் - அனுகூலமாதல், எழுதுதல், நியமித்தல், விதித்தல்.

இலிர்த்தல் - சிலிர்த்தல், தளிர்த்தல்.

இலீக்கை - ஈர், ஈமடு.

இலீலாவதி - ஓர் பீஜக்கணிதத்தின் பெயர்.

இலீலை - சரசம், புணர்ச்சி, விளையாட்டு.

இலுதை - அணில்.

இலுப்பை - இருப்பைமரம்.

இலேககன் - எழுதுவோன், கணக்கன்.

இலேகம் - எழுத்து, திருமுகம்.

இலேகர் - வானோர்.

இலேகியம் - நக்கல்.

இலேகினி - எழுதுகோல், எழுத்தாணி, தூவல்.

இலேகை - எழுத்து, சித்திரம், வரிவரை.

இலேசம் - இலேசு, ஓரலங்காரம், காலவிரைவு, நொய்மை.

இலேசு - கனமின்மை, விதப்புக்கிளவி.

இலேசுணம் - அரிதாரம்.

இலேந்து }
இலேவுந்து } கல்லுப்பு.

இலேபம் - வால்மிளகு.

இலேபனம் - தாதுவலுவிற்குப் பூச்சுமருந்து, புணர்ச்சி, பூச்சுமருந்து, வாசனைத்தைலம்.

இலேம்புகம் - நிலக்கடம்பு.

இலேவணம் - மெழுகுதல்.

இலை - உலோபம், ஏடு, தழை, வெற்றிலை.

இலைகிள்ளல் - சைச்சித்திரமைந்தி னொன்று.

இலைக்கள்ளி - ஓர்வகைக்கள்ளி.

இலைக்கிளி - தத்துக்கிளி.

இலைக்கொடி - வெற்றிலைக்கொடி.

இலைங்கம் - அட்டாதச புராணத் தொன்று.

இலைச்சுருளி - ஓர் பூண்டு.

இலைத்தல் - சாரமின்மை, சுவை குறைதல்.

இலைப்பசளி - பெரும்பசளி.

இலையம் - கூத்தின் விகற்பம், கூத்து.

இலையாடுபொலிகை - கடும்புலிகை.

இலையான் - ஈ.

இலையுதிர்வு - இலைச்சொரிவு, முது காடு.

இலௌகிகம் - உலகசம்பந்தம்.

இல் - இடம், இல்லையெனல், இராசி, இல்வாழ்க்கை, ஐந்த னுருபு; ஏழனுருபு, ஓர் வினைப் பகுதி, சாவு, தலைவி, மனைவி, வினையெச்ச விகுதி, வேற்று மையுருபு.

இல்பொருள் - உவமை.

இல்லடை - அடைக்கலம், இல் லுவமரம், பண்டகசாலை.

இல்லம் - இல்லறம், தேற்றாமரம், வீடு.

இல்லல் - கடத்தல், நடத்தல்

இல்லவள் - தரித்திரி, மனைவி.

இல்லவன்
இல்லான்
இல்லோன்
} கணவன்.

இல்லவை - இல்லாப்பொருள், மனைப்பொருள்.

இல்லாண்முல்லை - புறப்பொருட் டுறையுளொன்று.

இல்லாமை - இன்மை, தரித்திரம்.

இல்லார் - தரித்திரர்.

இல்லாள் - தரித்திரி, தலைவி, மனைவி.

இல்லி - சில்லி, தேற்று, பொள் ளல், வால்மிளகு.

இல்லிக்குடம் - ஓட்டைப்பானை.

இல்லிடம் - அகலம், வீடு.

இல்லுனர் - மேவினர்.

இல்லெனல் - இரத்தல், இல்லை யெனல், சாதல்.

இல்லை - இன்மை, சாதல்.

இல்லோன் - கணவன், தரித்தி ரன், தலைவன்.

இவக்காண் - இங்கே, இந்நேர மளவும், இப்பொழுது.

இவணம் - இங்கே.

இல்வலன் - ஓர் அஸுரன்.

இல்வழக்கு - கூடாவழக்கு.

இல்வாழ்வு - இல்வாழ்க்கை.

இவண் - இவ்விடம்.

இவநட்டம் - மிளகு.

இவரும் - உலாவும்.

இவர்தல் - ஆசை, ஆசைப்பெருக்கம், எழுச்சி, ஏறுதல், செறிவு, சேறல், நடத்தல், படர்தல், பரத்தல், விரும்பல்.

இலவு - இழிவு.

இவறல் - ஆசை, ஆசைப்பெருக்கம், மறதி.

இவறன்மை - அசட்டை, ஆசை, உலோபகுணம்.

இவறுதல் - ஆசைகூறல், உலோபஞ்செய்தல், உலோபகுணம், மறத்தல்.

இவன் - சுட்டுச்சொல்.

இவுளி - குதிரை.

இவுளிமறவன் - குதிரைவீரன்.

இவை - இவ்.

இவ் - இவை, சுட்டுச்சொல்.

இழத்தல் - இழந்துபோதல், வீணாகப் போக்கடித்தல்.

இழப்பு - இழத்தல், கீழ்மை, நஷ்டம்.

இழவு - இழத்தல், சாதல்.

இழி - இகழ்வு, இழியென்னேவல், கீழ்மை.

இழிகடை - அறக்கீழானது.

இழிகண் - இழியற்கண்.

இழிகுலம் - தாழ்ந்தகுலம்.

இழிங்கு - ஈனம், வடு.

இழிஇருபால் - அஃறிணையில் வரும் இரண்டுபால்.

இழிசொல் - கடுஞ்சொல், கோள் குறளை, பயனில்சொல், பழிச் சொல், பொய்மொழி.

இழிஞர் - சண்டாளர்.

இழிதகவு - இழிவு, எளிமை.

இழிதல் - இறங்குதல், இழிவுறு தல், தாழ்தல், விழுதல்.

இழிதிணை - அஃறிணை.

இழித்தல் - இறக்குதல், கீழ்ப்படுத் தல், கெஞ்சுதல்.

இழிந்தோன் - தாழ்ந்தோன்.

இழிபு - ஓரலங்காரம், கீழ்மை, தாழ்வு.

இழிப்பு - நவரசத்தொன்று, பழிப்பு.

இழிவு - ஈனம், குற்றம், கேடு, தாழ்வு, நிந்தை, பள்ளம்.

இழுக்கம் - இழிவு, ஈனம், குறைவு, தளர்வு, தவறு, தாமதம், பின்வாங்குதல், வசை, வழிவிலகுதல்.

இழுக்கல் - தளர்தல், வழுவுதல், வழுக்கு நிலம்.

இழுக்கார் - வழுவாது கூறுவார் கள்.

இழுக்கு - ஈனம், கேடு, தப்பு, தளரென்னேவல், பொய், மறதி, வழு.

இழுது - தித்திப்பு, நிணம், நெய்.

இழுதுதல் - கொழுத்தல், நெய்த்தல்.

இழுதை - அறிவிலான், பேய், பொய்.

இழுத்தல் - இழுக்குதல், உறிஞ்சல், சுரம்பாடுதல், தாமதித்தல், பின்வாங்குதல், வசமாக்குதல், வலித்தல்.

இழுபறி - தொந்தரை, வாது.

இழுப்பறை - ஓர் பெட்டியில் இழுக்கும்படியான சின்ன அறை.

இழுப்பாணி - கலப்பையிணை குறுப்பு, தாமதக்காரன்.

இழுப்பு - இசைப்பு, இசைக்குதல், தாமதம்.

இழுமு - தித்திப்பு.

இழுமெனல் - அநுகரணவோசை, இனிமை, சீர்மை.

இழுவை - ஓர் முட்செடி.

இழை - ஆபரணம், இழையென்னேவல், எண்வனப்பிலொன்று, நூற்கிறநூல், பஞ்சின்நூல்.

இழைக்கை - கலத்தல், செய்தல்.

இழைதல் - உரிஞல், உட்குழைதல், கலத்தல், பிணைதல்.

5

இழைத்தல்-அழுத்துதல், ஆராய்தல், ஒழுகுதல், கலப்பித்தல், செய்தல், நியமித்தல், மணிபதித்தல்,முடைதல், விதித்தல்.

இழைத்து - எழுதி.

இழைபு - செய்யுள் வனப்பிலொன்று.

இழைபோடல் - பொத்துதல்.

இழைப்பிடித்தல்-காயங்கட்டல்.

இழைப்புளி - சீவுளி.

இழையிடல் - இழைபோடல்.

இழையோடுதல் - நூலோடுதல்.

இழைவாங்கி - இழையூசி.

இள - இளைய.

இளகல் - அசைந்து விழுதல்.

இளகுதல் - எரித்தல், கரைதல், குழைதல், தணிதல், தளர்தல், நுகைதல், நெகிழ்தல், மிருதுவாதல்.

இளக்கம் - இளகியதன்மை, தணிவு, நுகைவு.

இளக்கரித்தல் - அஞ்சுதல், தளர்தல், தாழ்தல்.

இளக்காரம் - இளக்கம்.

இளக்குதல் - இளகச்செய்தல், நுகைத்தல்.

இளங்கண்ணன் - இளைய கண்களையுடையவன்.

இளங்கார் - ஓர்வகை நெல்.

இளங்கால் - இளங்கொழுந்து, வெற்றிலைக்கொடி.

இளங்காற்று - சிறுகால்.

இளங்கோக்கன் - வைசியர் பொது.

இளத்தல் - இழுக்கடித்தல்.

இளநிறம் - வெண்ணிறம்.

இளநீர் - தெங்கினிளங்காய், தேங்காய்க்குண்ணீர், மணிகளின் வெள்ளொளி.

இளநீர்க்குழம்பு - ஓர் கண்மருந்து.

இளநெஞ்சு - இளகியமனம், கோழைமனம்.

இளந்தண்டு - முளைக்கீரை.

இளந்தலை - இளக்கம், இளப்பு, இளமைப்பருவம், எளிமை.

இளந்தென்றல் - சிறுதென்றல்.

இளந்தை - இளவயசு, இளையது, குழந்தை.

இளந்தோயல் - ஆயுதங்களினிளகிய தோய்ச்சல், தயிரிளந்தோயல்.

இளப்பம் - கீழ்மையானது, திடமின்மை.

இளமட்டம் - குறுங்குதிரை, வாலிபமுடையது.

இளஞ்சூல் - பயிரிளங்கதிர்.

இளமை - இளையதன்மை, உள்மந்தம்.

இளம்பதம் - இளம்பாகம், பக்குவமற்றது.

இளம்பிடி - சிறிய பெண்யானை.

இளம்புல் - அறுகு.

இளம்பெண் - கற்றாழை.

இளவரசு - பட்டத்திற்குரிய இராசகுமாரன்.

இளவல் - இளையோன், குழந்தை, தம்பி.

இளவழிபாடு - நிலையின்மை, சிறுபிள்ளைக்கல்வி.

இளவாடை - சிறுவாடை.

இளவுச்சம் - உச்சத்திற்கணிமை.

இளவேனில் - சித்திரை வைகாசியின் பருவம், வெப்பம்.

இளி - அவமதிச்சிரிப்பு, இகழ்ச்சிக்குறிப்பு, சிரிப்பு, நெற்றியிற்பிறக்குமிசை, இணக்கம், யாழிலோர் நரம்பு.

இளிவு - இழிவு.

இளை - இளமை, இளைத்தலைச் செய்யென்னேவல், காவற்காடு, தலைக்காவல், புதன் மனைவி, மேகம், வேலி.

இளைஞர் - இளையோர், தம்பியர்.

இளைத்தல் - சக்திகுறைதல், தளரல், தோய்ந்து போதல், தோற்றுப்போதல், மெலிதல், வளங்குன்றதல்.

இளைப்பம் - சொற்பம், தீமை.

இளைப்பு - தொய்வு, மெலிவு.

இளையாள் - இலக்குமி, தங்கை.

இளையோன் - இளைஞன், இலக்குவன், முருகன், தம்பி.

இற - இறவென்னேவல், இருல்.

இறகர் - இறகு, சிறை, சிறகு.

இறகு - சிறகு.

இறக்கம் - இறங்குதுறை, சரிவு, போகிறவழி.

இறக்குதல் - இறங்கச்செய்தல், கவலையொழித்தல், கீழ்ப்படுத்தல், சாதல், தாழ்த்தல், தைலம் முதலிய படித்தல்.

இறங்கர் - குடம்.

இறங்கல் - இழிதல்.

இறடி - கருந்தினை.

இறஞ்சி - அவுரி.

இறத்தல் - அழிதல், கடத்தல், சாதல், மரித்தல், நடத்தல், மிகுதி.

இறந்தகாலம் - சென்றகாலம், போனகாலம்.

இறந்துபடல் - சாதல்.

இறந்தோர் - செத்தோர்.

இறந்தோர்சேர்வனம் - சுடுகாடு.

இறப்பு - அழிகை, சாவு, போக்கு, மரிப்பு, மிகுதி, வலைவீ, போனகாலம்.

இறலி - இத்திமரம், எழுநீவுகளிலொன்று, கொன்றை, மருது.

இறல் - அழிதல், இறுதல், இற்றுப்போதல், கிளிஞ்சல், கேடு, சாவு.

இறவு - அழிவு, இறப்பு, இறால், உற்றசமயம், எல்லை, செல்கை, மிகை.

இறவுளர் - குறிஞ்சிநிலமக்கள்.

இறவை - ஏணி, கூடை.

இறாதல் - ஆறுபலங்கொண்ட நிறை.

இறால் - இடபவிராசி, எருது, ஓர் மீன், கார்த்திகைநாள், தேன் கூடு.

இறுகுதல் - அழுந்துதல், கடினமாதல், கட்டியாதல், நெருங்கல், முரணுதல்.

இறுக்கம் - அழுத்தம், உருமம், ஒடுக்கம், கடினம், கையழுத்தம், நெருக்கம்.

இறுக்கர் - பாலைநில மக்கள்.

இறுக்கல் - இறுகச்செய்தல், உடுத்தல், உறுக்கல், ஒடுக்கல், கடிந்துகொள்ளல், வியங்கோண்முற்று.

இறுங்கு - ஓர்வகைச் சோளம்.

இறுதல் - அறுதல், ஒடிதல், கெடுதல், முடிதல்.

இறுதி - எல்லை, கடைசி, கடைநிலை, சாவு, முடிவு.

இறுதிஅழிவு - ஈறுகெடுதல்.

இறுதிநிலை - ஈற்றிலே நிற்பது.

இறுதிநிலைத்தீவகம் } தீபகச்
இறுதிவிளக்கு } சொற்கள்
கடையினிற்பது.

இறுதிப்போலி - கடைப்போலி.

இறுத்தல் - இறையிறுத்தல், ஒடித்தல், செலுத்தல், சொல்லுதல், சேரல், தங்கல், தெளிதல், முடித்தல், முறித்தல், வடித்தல், வெட்டல்.

இறுநாகம் - இலாமிச்சை.

இறுப்ப - கிடக்க.

இறுப்பு - குடியிறை, இறுத்தல்.

இறுமாப்பு - எமாப்பு, மிகுமகிழ்ச்சி.

இறும்பல் - அதிசயம்.

இறும்பி - எறும்பு.

இறும்பு - இளமரக்காடு, காந்தள், கார்த்திகைப்பூ, குறுங்காடு, சிறுமலை, தாமரைப்பூ, வண்டு, தூறு, மலை.

இறும்பூது - அதிசயம், அற்புதம், காந்தள், சிறுதூறு, தாமரைப்பூ, தளிர், தீபம், பித்திகை, பெருமை, மலை,

இறுவதஞ்சாமை - வணிகரெண்குணத்தொன்று.

இறுவரை - முடிவு.

இறுவாய் - இறுதி.

இறை - அணு, அரசன், அற்பம், இறகு, இறையென்னுமேவல்,

உயர்ச்சி, ஊழித்தீ, உயர்ந்தோன், எப்பொருட்கு மிறைவன், கடன், கடவுள், காலவிரைவு, குடியிறை, கையிறை, சிவன், சிறுமை, தங்கல், தலை பெருமை, மூத்தோன், பிரமன், வருத்தம், விடை, வீட்டிறப்பு.

இறைத்தல் - அளவுபார்த்தல், நிதானம் பண்ணுதல்.

இறைகூடை - சிலாப்பூட்டை, நீரிறைக்குங்கூடை, பூட்டை.

இறைச்சிப்பொருள்-ஓரலங்காரம், புறத்துச்சொல்லுங் குறிப்புப்பொருள்.

இறைஞ்சல் - குனிதல், தொழுதல், வணங்கல், வியங்கோண் முற்று.

இறைஞ்சி - மரவுரி.

இறைதல் - சிதறுதல், சிந்தல்.

இறைதிரியல் - அரசு நீதிதிறம்பல்.

இறைத்தல் - அள்ளிச்சொரிதல், சிதறல், சொரிதல், நீரிறைத்தல்.

இறைபயப்பது - இருவகைவிடையினென்று, அது - விளுவெதிர்விளுவல், உடன்படல்,உறுவதுகூறல், உற்றதுரைத்தல், ஏவல்,சொற்றொகுத்திருத்தல், மறுத்தல்.

இறைமகள் - இராசகுமாரத்தி.

இறைமகன் - இராசகுமாரன், முருகன், விநாயகன்.

இறைமாட்சி - அரசர்மாண்பு.

இறைமாண்டார் - அரசர்.

இறைமை - அரசாட்சி, தலைமை தெய்வத் தன்மை.

இறைமையாட்டி - அரசி, தலைவி.

இறையவன் } கடவுள்.
இறையோன் }

இறையனாரகப்பொருள் } ஓர்
இறைவனாரகப்பொருள் } பொருளிலக்கணம்.

இறைவழு - விடைவழு.

இறைவன் - அரசன், எப்பொருளிலுமுறைபவன், கடவுள், குரு, சிவனார்வேம்பு, சிவன் தந்தை, தலைவன், பிரமன் மூத்தோன்.

இறைவன்வேம்பு - சிவனார் வேம்பு.

இறைவாசநல்லூர் - ஓரூர்.

இறைவி - அரசி, அன்னை, குருவின் மனைவி, தலைவி.

இறைவை - இறைகூடை, ஏணி, நீரிறைக்கு மரப்பத்தல்.

இற்செறித்தல் } அகப்பொருட்
இற்செறிப்பு } றையிலொன்று

இற்பிறப்பு - குடிப்பிறப்பு.

இற்புலி - பூனை.

இற்று - இஃது, இத்தன்மைத்து, ஓர்சாரியை.

இற்றை - இன்று.

இற்றைநாள் - இன்று.

இனக்கட்டு - இனக்கூட்டம், உறவின்முறை.

இனக்குறில் - நெட்டெழுத்திற் கினமாகிய குற்றெழுத்து.

இனஞ்சனம் - சுற்றத்தார்.

இனத்தார் - சுற்றத்தார்.

இனமணி - ஒரு சாதிமணி.

இனமிகல் - வருமெழுத்திற்கு இனமான எழுத்துமிகல்.

இனமொழி - ஓர் இறை.

இனமொழிவிடை - இனத்தைச் சொல்விடை.

இனமோனை - இனவெழுத்தால் வருமோனை.

இன - இவைபோல்வன, பிற.

இனம் - அரசர்க்குறுதிச்சுற்றம், குலம், கூட்டம், சேர்க்கை, சுற்றம், பசுக்கூட்டம், பந்துக்கள், திரள்.

இனவழி - வமிசபரம்பரை.

இனவெதுகை - இனவெழுத்துக் களாலாகு மெதுகை.

இனவெழுத்து - இனமாயுள்ள வெழுத்து.

இனனிலை - சூரியன் நிற்கு நிலை.

இனன் - அரசன், சந்திரன், சூரியன்.

இனி - இப்பொழுது, இப்பால், பின்பு.

இனிது - இனிமையுடையது.

இனிப்பு - இனிமை, சிநேகம், தித்திப்பு.

இனிமை - இனிமை, சந்தோஷம், தித்திப்பு.

இனிய - இன்பமான.

இனியசொல் - இன்சொல்.

இனியவைகூறல் - நயச்சொல்.

இனியதுநாற்பது - ஓர் நூல்.

இனைதல் - இரங்குதல், துயருறல்.

இனைத்தல் - ஒலித்தல், வருத்தல்.

இனைத்து - இத்தன்மைத்து, இப்படி, இவ்வளவிற்று.

இனைய - இவைபோல்வன, பிற.

இனையன் - இத்தன்மையன்.

இன் - இறந்தகாலவிடைநிலை, இனிய, ஐந்தனுருபு, சாரியை, பூவின் மணம், மலைவீழருவி, வினையெச்ச விகுதி.

இன்கண் - இன்பம்.

இன்சொல் - இனிய சொல்.

இன்சொல்லுவமை - ஒருவுவமையணி.

இன்பம் } அகமகிழ்ச்சி, இனிமை,
இன்பு } ஓரலங்காரம், நவரசத்தொன்று, நூற்பயனென்று.

இன்பன் - கணவன்.

இன்பு - இன்பம்.

இன்புறல் - மகிழ்ச்சிபொருந்தல்.

இன்பூறல் - சாயவேர்.

இன்மை - இல்லாமை, தூக்கம், வறுமை.

இன்றியமையாத - இல்லாமல் தீராத.

இன்றியமையாமை - இல்லாது முடியாமை.

இன்று - அசைச்சொல், இந்நாள்.

இன்ன - இத்தன்மைய, உவமையுருபு.

இன்னணம் - இவ்விதம்.

இன்னம் - அதிகம், இதுவரையும், மறுபடியும், மேலும்.

இன்னலம் - இனியநலம்.

இன்னல் - தீமை, துன்பம்.

இன்னன - இவைபோல்வன.

இன்ஞ - ஆகாமை, இகழ்ச்சி, கீழ்மையான, தீமை, துன்பம், வெறுப்பு.

இன்ஞங்கு - தீமை, துன்பம்.

இன்ஞச்சொல் - இழிசொல், கடுஞ்சொல், நகைச்சொல்.

இன்னாதார் - பகைவர்.

இன்னாது - தீது, தீமையுள்ளது.

இன்னாநாற்பது - ஓரிலக்கண நூல். அது-கெடுதியை விவரிக்கும் நாற்பது பாட்டுள்ள ஒரு நூல்.

இன்னாமை - ஆகாமை, இனிதாகாமை, தவறு, துயரம், துன்பம், தீமை, வேண்டாமை.

இன்னாய் - இல்லாததாக.

இன்னார் - இத்தன்மையர், பகைவர்.

இன்னாலை - இலைக்கள்ளி.

இன்னிசை - இராகம், எழு நரம்புள்ள வீணை.

இன்னிசைக்கலிப்பா - கலிப்பாவுளொன்று.

இன்னிசைகாரர் - பாணர்.

இன்னிசைவெண்பா - வெண்பாவுளொன்று.

இன்னியம் இனியவாத்தியம்.

இன்னியர் - பாவலர்.

இன்னினியே - உடனே.

இன்னே - இப்பொழுது, இத்தன்மையாய்.

இன்னோசை - இனியவோசை.

ஈ

ஈ - அமபு, அரைநாண், இந்திரவில், இலக்குமி, ஈயென்னேவல், ஈப்பொது, ஓரெழுத்து,

கொாசகு, நெட்டெழுத்து, தேனீ, ஸரஸ்வதி, தாமரை யிதழ், பாம்பு, பார்வதி,முன் னிலை யசைச்சொல், வண்டு, வினைப்பகுதி.

ஈஇர் - ஈரமான.

ஈகம் - சந்தனம்.

ஈகை - இண்டங்கொடி, ஈதல், கற்பகம், கொடை, தானம், பொன், மேகம்.

ஈகையன்
ஈகையாளன் } கொடுப்போன்.

ஈக்க - தருக.

ஈங்கம் - சந்தனமரம்.

ஈங்கிசை - இமிசை. கொலை நிந்தை, வடு, வருத்தம்.

ஈங்கு - அண்டங்கொடி, அவ் விடம், சந்தனம்.

ஈங்கை - அண்டங்கொடி.

ஈசசகன் - குபேரன்.

ஈசதேசாத்தி - பெருமருந்து.

ஈசத்துவம்
ஈசிதை } அட்டசித்தியி லொன்று.

ஈசல் - ஈசெல், சீழ்க்கை.

ஈசனுள் - ஆதிரைநாள்.

ஈசன் - அயன், அரசன், அரன், அரி, ஆதி கடவுள், எப்பொ ருட்கு மிறைவன், கடவுள், குரு, கௌரிபாஷாணம், மூத் தோன்.

ஈசன்மைந்தன் - முருகன், விநாயகன், வீரபத்திரன்.

ஈசன்மூர் - கொன்றைமாலை, கொன்றை.

ஈசானமேரு - சிவனுரை, வெள்ளிமலை.

ஈசானம் } சிவனைம்முகத்
ஈசானியம் } தொன்று, வடகீழ்த்திசை.

ஈசானன் } சிவன், கடவுள்,
ஈசானியன் } வடகீழ்த்திசைப் பாலகன்.

ஈசானி - சிவன் பஞ்சசக்திபி லொன்று.

ஈசுவரதரு - கடம்பு.

ஈசுரன் }
ஈசுவரன் } கடவுள், சிவன்.

ஈசுரன்முகம் - சிவனுடையஐந்துமுகம் அது- ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம்.

ஈசுரமூலி - தாராசுக்கொடி, பெருங்கிழங்குக் கொடி, பெருமருந்துக்கொடி.

ஈசுரவிந்து - பாதரசம்.

ஈசுவரி - பார்வதி.

ஈசுவரிநாதம் }
ஈசுவரிவிந்து } கந்தகம்.

ஈசெல் - சிறகுள்ள கறையான்.

ஈசை - ஏர்க்கால், கலப்பை.

ஈச்சு - ஈச்சமரம்.

ஈச்சுக்கொட்டல் - சீழ்க்கை விடுதல்.

ஈச்சுர - ஓர் வருடம்.

ஈச்சுரம் - சிவதத்துவமைந்தி னொன்று.

ஈஞ்சை - இகழ்ச்சி, கொலை, நிந்தை.

ஈடணம் - புகழ்.

ஈடணை - விருப்பம், (ஈஷணாத்திரயம், புத்திரேஷணை, வித்தேஷணை, லோகேஷணை.)

ஈடழிதல் - பெருமை குன்றல்.

ஈடழிவு - சீர்கேடு.

ஈடன் - பணக்காரன், பலசாலி, பெருமையுடையோன்.

ஈடாடுதல் - தளர்தல், நேர்நிற்றல்.

ஈடாட்டம் - கொடுக்கல் வாங்கல், திராணி, விசாலம்.

ஈடிகை - எழுதுகோல், தூரிகை.

ஈடிதம் - துதித்தல்.

ஈடு - அடகு, இலக்காதல், உவமை, குழைதல், பதில், பெருமை, வலி.

ஈடுகட்டல் - ஈடுசெய்தல், பிணை கொடுத்தல்.

ஈடுசெலுத்தல் - பதிலளித்தல்.

ஈடுபாடு - ஒப்பு.

ஈடேறுதல் - உய்யப்பெறுதல், கடைத்தேறுதல், வாழ்வடைதல்.

ஈடேற்றம் - இரட்சிப்பு, உய்வு, கடைத்தேற்றம், மீட்பு.

ஈடை - ஈசை, புகழ்ச்சி.

ஈட்சணம் - நோக்கம், பார்வை.

ஈட்டம் - ஈட்டல், கூட்டம், திரள், தேட்டம்.

ஈட்டல் - கூட்டல், சம்பாதித்தல், தொகுத்தல்.

ஈட்டி - குந்தம், சவளம்.

ஈட்டியது - சஞ்சிதவினை, தேடியது.

ஈணை - அகணி.

ஈண்டல் - கூட்டல், நிறைதல்.

ஈண்டு - இவ்வண்ணம், இவ்விடம், ஈண்டென்னேவல், சீக்கிரம், புலிதொடக்கி.

ஈண்டை - இவ்விடம்.

ஈண்டையான் - இவ்விடத்தவன்.

ஈதல் - கற்பித்தல், கொடுத்தல், சொரிதல், பிரித்தல்.

ஈதி - உபத்திரவம், குட்டி, பயணம்.

ஈந்து - ஈஞ்சு, கர்ச்சூரம்.

ஈப்பி - இலையாவெச்சம், ஈர்.

ஈப்பிணி - உலோபி.

ஈமத்தாடி - சிவன்.

ஈமப்பறவை - கழுகு, காகம், பருந்து.

ஈமம் - சுடுகாடு, விறகு.

ஈம் - சுடுகாடு.

ஈயக்குழவி - நீலபாஷாணம்.

ஈயம் - பஞ்சலோகத்தொன்று, பாதிரி, மிருதார்சிங்கி.

ஈயல் - ஈதல், தம்பலப்பூச்சி.

ஈயவரி - பெருமருந்து.

ஈயுவன் - இராவணன்.

ஈயை - இஞ்சி, சிங்கிலி.

ஈரக்கல் - இருந்தக்கல்.

ஈரங்கொல்லியர் - வெண்ணார்.

ஈரசைச்சீர் - ஆசிரியச்சீர்.

ஈரடி - இணையடி, ஈரொட்டு, கவர்.

ஈரடிப்பா - இரண்டடிச்செய்யுள்.

ஈரடிமடக்கு - வந்த சொல்லே யிரண்டடியினும் வரப்படுவது.

ஈரடிவெண்பா - குறள் வெண்பா.

ஈரடுக்கொலி - உபயவோசை.

ஈரடை - இரண்டு அடைமொழிகள்.

ஈரணம் - வெறுநிலம், தளர்நிலம்.

ஈரப்பலா - ஆசினிப்பலா.

ஈரமதி - குளிர்ந்த சந்திரன்.

ஈரம் - அழகு, அறிவு, அன்பு, கரும்பு, கிருபை, குளிர்ச்சி, குங்குமப்பூ, நனைவு, பகுதி, பண்பு.

ஈரல் - ஈருள்.

ஈரல்கருகல் - நாணுதல், பயப்படுதல்.

ஈரவன் - சந்திரன்.

ஈரழிதல் - கடைசியில் கெடுதல்.

ஈரறம் - இல்லறந்துறவறம்.

ஈரறிவுயிர் - இப்பி, சங்குமுதலியன.

ஈராசிடைவெண்பா - இரண்டாசிடையிட்டுவரும் வெண்பா.

ஈராடி - ஈரம், காற்றினமைவு, நிலையின்மை, மழைக்குணம்.

ஈரி - கந்தைப்புடவை, பலாக்காய்த்தும்பு.

ஈரிப்பு - ஈரம், குளிர்மை.

ஈரியநெஞ்சம் - அன்புள்ளமனம்.

ஈருள் - ஈரல்.

ஈரெச்சம் - பெயரெச்சம் வினையெச்சம்.

ஈரொட்டு - இரண்டுக்குற்றது, சந்தேகம்.

ஈரொற்றுவாரம் - இரண்டு மாத்திரை பெற்றுவரும் செய்யுள்.

ஈர் - ஈரமான, இரண்டு, ஈர்தலைச்செய்யென்னேவல், கரும்பு, மயிர்பற்றுமீர், முன்னிலைப் பன்மைவிகுதி.

ஈர்க்கில் - அம்பிறகு.

ஈர்க்கு - ஈர்க்கு.

ஈங்கதிர் - குளிர்ந்தகதிர், சந்திரன்.

ஈர்தல் - அறுத்தல், பிளத்தல், வெட்டல்.

ஈர்த்தல் - அறுத்தல், இழுத்தல், உரித்தல், குளிர்மையாதல், பிளத்தல்.

ஈர்ப்பு - இசிவு, இழுப்பு, ஈர்த்தல்.

ஈர்வான் - இரம்பம்.

ஈலி - கைவாள், சுரிகை.

ஈவிரக்கம் - இரக்கமுங்கொடையும்.

ஈவு - கொடுக்கப்பட்டது, கொடை, வரம்.

ஈழத்தலரி - ஓரலரி, பெருங்கள்ளி.

ஈழம் - உலோகக்கட்டி, கள், கள்ளி, சிங்களதேசம், பொன்.

ஈழை - காசநோய், கோழை, தொய்வு.

ஈழைக்கொல்லி - தாழகம்.

ஈளை - கோழை.

ஈறல் - துக்கம், நெருக்கம், பின்னல்.

ஈறிலான் } கடவுள்.
ஈறிலி }

ஈறு - இறுதி, உப்பளம், எல்லை, பல்லிடையின் முரசு, பள்ளம், முடிவு.

ஈறுகட்டி - இரசகருப்பூரம்.

ஈறுகெடுதல் - ஈறழிதல்.

ஈறுநிலை - எழுத்துக்கள்சொல்லின் கடைசியில் நிற்கும் இலக்கணம்.

ஈறுபோதல் - சொல்லின் கடைசியில் கெடுதல், இறுதி விகுதி நீங்கல்.

ஈற்றசை - இறுதியிலசையாகுமிடைச்சொல்.

ஈற்றயல் - கடையயல்.

ஈற்று - ஈறுகை, பெறுகை.

ஈற்றெலும்பு - கடையெலும்பு.

ஈற்றெழுத்து - கடையெழுத்து.

ஈனமிலணங்கு - தெய்வப்பெண்.

ஈனம் - இழிவு, கள்ளி, குறைபாடு, கேடு, தள்ளல்.

ஈனல் - ஈன்றல், கதிர், தருதல், பிறப்பித்தல்.

ஈனனம் - வெள்ளி.

ஈனுயம் - நிந்தை.

ஈனுமணிமை - சூதகம், புனிறு.

ஈனை - இலைகரம்பு, ஓர் வியாதி.

ஈன்றல் - உண்டாதல், பெறுதல்.

ஈன்றாள் - பார்வதி, தாய்.

ஈன்றான் - பிரமன், தந்தை.

உ

உ - இரண்டென்னு மெண்ணின் குறி, ஓரெழுத்து, ஓர் வினை யெச்சவிகுதி, சாரியை,சிவன், சுட்டெழுத்து, பிரமன்.

உஃது - ஒன்றன் படர்க்கைச் சுட்டுப்பெயர்.

உககனல் - வடவைத்தீ.

உகசந்தி - உகத்தின்சந்தி.

உகட்டு - உவட்டு.

உகட்டுதல் - தேக்கெடுத்தல், புரளுதல்.

உகத்தல் - உயர்தல், எழும்பல், சந்தோஷம், மகிழ்தல், விரும்பல்.

உகந்தது - அங்கீகரிக்கத்தக்க வஸ்து, தகுந்தது.

உகந்தவன் - இஷ்டமானவன், தகுந்தவன், பிரியமானவன்.

உகப்பிரளயம் - யுகமுடிவு.

உகமாருதம் - ஊழிக்காற்று.

உகப்பு - உயர்ச்சி, மகிழ்ச்சி.

உகம் - இரண்டு, நாள், பாம்பு, பூமி, முடிவு, யுகம்.

உகரம் - ஐந்தாமுயிர்.

உகரக்குறுக்கம் - குற்றியலுகரம்.

உகல் - உதிரல், கழலல், சிந்தல், சொரிதல்.

உகவல்லி - நாகமல்லி.

உகவை - சந்தோஷம், மகிழ்ச்சி.

உகளம் - இஷ்டம், இரண்டு.

உகளல் - கடத்தல், குதித்தல், பாய்தல்.

உகளித்தல் - குதித்தல், பாய்தல்.

உகா - உகாமரம்.

உகாதி - அருகன், யுகாதி.

உகாந்தகாலன் } சிவன்,
உகாந்தநாதன் } விஷ்ணு.

உகாந்தம் - யுகமுடிவு.

உகிரம் - இலாமிச்சை.

உகிர் - நகம்.

உகுணம் - முகட்டுப்பூச்சி,

உகுதல் - உதிர்தல், சிந்துண்ணல், சொரிதல்.

உகுத்தல் - சிந்தல், சொரிதல், விடுத்தல்.

உகைதல் - எழுதல், செல்லல்.

உகைத்தல் - அம்புவிடுதல், எழுப்புதல், எறுதல், செலுத்தல்.

உக்கம் - ஆலவட்டம், எறு, கோழி, தீ, தூக்குக்கயிறு, பசு, பந்து, மருங்கு.

உக்கரித்தல் - உக்காரம்போடல், வாந்தி பண்ணுதல்.

உக்கலை - மருங்கின் பக்கம்.

உக்கல் - உக்கினது, உக்குதல், உளுத்தது, பக்கம், பதனழிவு.

உக்களம் - இராக்காவல், தலைக்காவல், பாளையஞ்சூழ்கழி.

உக்களவர் - இராக்காவலர்.

உக்காக்கம் - அரைநாண்.

உக்காரம் - சத்தியண்ணல், தொனுப்போடல்.

உக்காரி - பிட்டு.

உக்கிடர் - சிலந்திப்பூச்சி.

உக்கிரகந்தம் } கரும்பு, வெள்
உக்கிரகந்தி } ளுள்ளி, பெருங்காயம், வசம்பு, வேம்பு.

உக்கிரமது - வெறிதருமது.

உக்கிரம் - உத்திரம், உறைப்பு, கடுமை, கொடுமை, கோபம், தலைக்காவல், பயங்கரம், பரணி, பாத்திரபதம், மகம், முருங்கை, மூர்க்கம், வியாதி, வெப்பம், வேகம்.

உக்கிரன் - சிவன்.

உக்கிராணம் - களஞ்சியம், வசம்பு.

உக்கிருட்டம் - உத்கிருஷ்டம், மிகுதி, மேன்மை.

உக்கிரை - கருவசம்பு.

உக்கு - இலவங்கம்.

உக்குதல் - இற்றுப்போதல், பயப்படல்.

உக்குளான் - சருகுமுயல்.

உக்குறள் - குற்றியலுகரம்.

உங்கரித்தல் - அதட்டுதல், உம்மென வெகுளல்.

உங்காரம் - அதட்டுகை, உம்மென வெகுள்கை, வண்டினொலி.

உங்கை - உன்றங்கை.

உசிகம் - ஆமணக்கு.

உசரிதம் - நெருஞ்சில்.

உசரு - உயரு.

உசலம் - உசிலம்.

உங்ஙனம் - அத்தன்மை, இத்தன்மை, இவ்விடம், உவ்விடம்.

உசற்காலம் - வைகறை.

உசனம் - அஷ்டாதச தருமநூலி லொன்று.

உசனன் - சுக்கிரன்.

உசா - ஆராய்வு, ஆலோசனை, உசாவென்னேவல், ஒற்றர்.

உசா } சூரியன் மனைவி.
உசாதேவி }

உசாத்துணை } ஆலோசனைத் துணைவன்.
உசாவுதுணை }

உசாவுதல் - ஆராய்தல், உசாவல், எண்ணல், யோசனைகேட்டல்.

உசி - கூர்மை, விருப்பம்.

உசிதசமயம் - அவதாரம்.

உசிதம் - அழகு, உத்தமம், தகுதி, மேன்மை, யோக்கியம்.

உசிதன் - பாண்டியன்.

உசிரம் } இலாமிச்சைவேர்.
உசீரம் } வெட்டிவேர்.

உசிரம் - இடபம், இலாமிச்சை வேர், கிரணம், செவ்வியம், மிளகு.

உசிர் - உயிர்.

உசிலம் }
உசிலை } சீக்கிரிமரம்.
உசில் }

உசு - உளு.

உசுப்பல் - எழுப்பல், ஏவுதல்.

உசும்புதல் - இயங்குதல்.

உசுவாசம் - உச்சுவாசம், மூச்சை யுள்ளேயிழுக்கை.

உஷை - இரவு, காலை, மாலை, பாணாசுரன் மகள்.

உச்சடை - கொடிக்கொம்பு, கோபம், வழக்கம்.

உச்சட்டம் - இலக்கு, நேர்.

உச்சந்தம் - அதிகப்படுதல், ஒடுக்கம், தணிவு, விலையுயர்வு.

உச்சம் - உயர்ச்சி, நுதி, மத்தியானம், கிரகநிலையிலொன்று, வல்லிசை.

உச்சயினி - ஓர் நகரம்.

உச்சரித்தல் - சொல்லுதல்.

உச்சரிப்பு - எழுத்தோசை, மந்திரோச்சாரணம்.

உச்சலம் - அறிவு, மனம்.

உச்சவம் - உற்சவம்.

உச்சாகம் - உற்சாகம், முயர்ச்சி.

உச்சாடனம் - அகற்றல், எவுதல், கலைஞானமறுபத்து நான்கி ஞென்று.

உச்சாரணம் } உச்சரிப்பு.
உச்சாரணை }

உச்சி - ஆண்மயிர், சிகரம், தலை, நடுத்தலை, நடுப்பகல், நாய், நுனி, மயிர்முடி.

உச்சிக்கிழான் - சூரியன்.

உச்சிகாட்டல் - உச்சுக்காட்டல்

உச்சிக்கலயம் - சிறியமட்பானை.

உச்சிக்குழி - உச்சித்துவாரம், தலைநடு.

உச்சிக்கொம்பன் - காண்டா மிருகம்.

உச்சிச்செடி - புல்லுருவி.

உச்சிட்டசாங்கரியம் - ஒரேபாத்திரத்தில் பலர் கூடியுண்ணல்.

உச்சிட்டம் - எச்சில்.

உச்சிதம் - அரியது, அழகு, உசிதம், உயர்ச்சி, கொடை, தகுதி, நெருஞ்சில், மேன்மை.

உச்சிப்பொழுது - நடுப்பகல்.

உச்சிரதம் - பிரண்டை.

உச்சிரயம் - உயரம், முக்கோணத்தினின்றுதிட்டவரி.

உச்சினி - உச்சயினி.

உச்சுதல் - இலக்குக்கெறிதல், கவரல், தள்ளுதல், வெல்லுதல்.

உச்சைசிரவம் - இந்திரன் குதிரை.

உஞற்று - உஞற்றென்னேவல், ஊக்கம், முயற்சி, வழக்கோதல்.

உஞ்சை - அவந்திநகர்.

உடக்கு - திருகாணிச்சுரையினுட் சுற்று.

உடங்கு - உருங்கு, ஒன்றிப்பு, கூடிநிற்றல்.

உடசம் - சிறுகுடில், பர்ணசாலை,

உடப்பு - தொரட்டுமுள்மரம்.

உடம்படுமெய் - உயிருமுயிரும் புணர விடைவருஞ் சந்தியொற்று.

உடம்பிடி - வேல்

உடம்பு - உடல், ஒற்றெழுத்து, தேகம்.

உடம்பை - கலங்கனீர்.

உடலம் - உடம்பு.

உடலல் - சினக்குறிப்பு, சினத்தல், பகைத்தல், பிரகாசித்தல், பொருதல்.

உடலிலான் - காமன்.

உடலூதல் - வருத்தப்படுதல்.

உடல் - உடம்பு, ஒற்றெழுத்து, சரீரம், பொருள், முப்பகையினொன்று, பொருளென்னேவல், பொன்.

உடற்குறை - உறுப்புக்குறை, முண்டம்.

உடற்கூற்றுத்தத்துவம் - சரீரத் தினிலக்கணநூல்.

உடற்றல் - சினங்கொண்டு தாக்கல், பெருங்கோபம்.

உடற்றுதல் - அழித்தல், சிதற டித்தல், தூரத்தல், பிரயோ கித்தல், பொருதல், வருத்தல்.

உடனிகழ்ச்சி - ஒருங்கு சம்பவித் தல், வினைகொண்டு முடிகிற பொருளினது தொழில் போன்ற தொழிலைத் தன்னி டத்திலும் உடனிகழ்கிறதாக உடையது.

உடனிலைமயக்கம் } ஒன்றோடொன்
உடனிலைமெய்ம்மயக்கம் } றேதன்
ஞேடுதான் மயங்குதல்.

உடனே - அப்பொழுதே, சம்ப வித்ததும்.

உடன் - அந்நேரம், கூட, மூன் ரும் வேற்றுமையின் சொல் லுருபு.

உடன்படல் - சம்மதித்தல், ஒப் புக்கொள்ளல், பிறர்மதத்திற் குத்தான் உடன்படல்.

உடன்பாடு - சம்மதம், விதி.

உடன்பாட்டுவினை - விதிவினை.

உடன்பிறந்தார் - சகோதரர்.

உடன்றல் - கோபம், சினக் குறிப்பு, பொருதல்.

உடு - அகழி, அம்பிறகு, அம்பு, அம்புத்தலை, ஆடு, உடுவென்னேவல், ஓடக்கோல், சீக்கிரி மரம், விண்மீன்.

உடுகாட்டி - பொன்னாங்காணி.

உடுக்கு - இடைசுருங்குபறை, ஒருசட்டபறை, சீலை.

உடுண்டுகம் - வாகைமரம்.

உடுநீர் - அகழி.

உடுபதம் - ஆகாயம்.

உடுபதி - சந்திரன், மாமஞ்சள்.

உடுபம் - தெப்பம்.

உடுபாதகம் - பனை.

உடும்பு - இரண்டு நாக்குள்ள ஓர் செந்து.

உடுவை - அகழ்.

உடை - உடைமை, உடையென்னேவல், உள், கலணை, கால், சீலை, செல்வம், வஸ்திரம், வேலமரம்.

உடைதல் - ஒடிதல், கெடுதல், சாய்தல், தளர்வு.

உடைத்தல் - இரித்தல், ஒடித்தல், கெடுத்தல், தகர்த்தல்.

உடைமை - ஆபரணம், உடைமைப்பொருள், உரிமை, செல்வம், பாக்கியம், பொருள்.

உடைய - ஆறும் வேற்றுமையினோர்சொல்லுருபு, உட, உடை

உடையல் - உடைக்குதல், உடைந்தது, கெடல், முரியல்

உடையவன் - உரிமைக்காரன், எசமான், கடவுள்.

உடையார் - ஓர்சாதியின் பட்டப் பெயர்.

உடைவு - இரிவு, கேடு, தகாவு, தளர்வு, மனநெகிழ்ச்சி.

உட்கரணம் - அந்தக்கரணம்.

உட்கருத்து - உட்பொருள், கருத்துரை, மனக்கருத்து.

உட்கல் - அஞ்சல், மடிதல், வெட்கம்.

உட்கு - அச்சம், உட்கென்னேவல், நாணம்.

உட்குயிர் - உள்ளுயிர்.

உட்குறிப்பு - உள்ளக்குறிப்பு.

உட்கை - உட்கல், உளவு, உள்ளங்கை.

உட்கொள்ளுதல் - அருந்துதல், உட்கருதல், மனசில் வைத்தல், விழுங்கல்.

உட்சூத்திரம் - இலேசானவகை, உட்குறிப்பு, உள்ளுபாயம், நுட்பமான வகை, மூலகாரணம், மூலசூத்திரம்.

உட்டணசஞ்சீவி - நீர், பிரண்டை.

உட்டணம் - அகோரம், மிளகு, வெப்பம்.

உட்டணுதிக்கம் - அதிகவெப்பம்.

உட்டிரம் - களர்நிலம், தேட்கொடுக்கி, நீர், முட்செவ்வந்தி.

உட்டெரிவு - உள்வைரம், உள்ளத்தெளிவு, பேரறிவு, வடித்த சாறு.

உட்பகை - காமமுதலிய அறுபகை.

உட்பற்று - அகப்பற்று.

உணக்கம்-உலர்ந்ததன்மை, வாட்டம்.

உணங்கல் - உலர்தல், ஓசிதல், காய்தல், துக்கப்படுதல், வருந்தல், வாடல்.

உணரல் - உணர்தல், அறிதல்.

உணராமை - உன்மத்தம், மயக்கம்.

உணர்ச்சி - அறிவு, கல்வி, சுவரணை, நினைவு, புத்தி, மனச்சாட்சி.

உணர்தல் - அறிதல், ஊடறீர்தல், எண்ணல், தெளிவு, நினைத்தல், வாடல்.

உணர்த்துதல் - அறிவித்தல், கற்பித்தல்.

உணர்வியல் - அறிவுமயம்.

உணர்வின்றேற்றல் - அறிவில்லாமற்கொள்ளல்.

உணர்வு - அறிவு, உணர்ச்சி, ஊடலுந்துயிலு நீங்கல், கல்வி, தெளிவு, நீங்கல், புலன்.

உணவு - உணா.

உணா - உண்டி, சோறு.

உணேதல் - மெலிதல்.

உண் - வினைப்பகுதி, உள் என்பதின் விகாரம்.

உண்ணோக்கல் - தியானம்.

உண்டல் - புசித்தல்.

உண்டாட்டு - மகளிர்விளையாட்டு, மதுவுண்டல், விளையாட்டு.

உண்டி - இரை, உணவு உண்டல், சோறு, பறவையுணவு.

உண்டுகம் - பெருவாகை.

உண்டை - திரட்சி, படைவகுப்பு.

உண்ணல் - புசித்தல்.

உண்மாசு - உபமலம்.

உண்மை - அறிவு, இயல்பு, ஊழ், நேர்மை, மெய்.

உண்மையளவை - பிரத்தியட்சப் பிரமாணம்.

உண்மையுவமை - ஓரலங்காரம்.

உதகக்கிரியை - நீர்க்கடன்.

உதகம் - நீர், பூமி, மழை, மழைத்துளி.

உதகவன் - கொடுவேலி, தீ.

உதகு - புன்கு.

உதக்கு - வடக்கு.

உதணம் - மொட்டம்பு.

உததி - கடல், நீர்குடல், முகில்.

உதபாரம் - மேகம்.

உதபானம் - கிணறு.

உதம் - அழைத்தல், கேட்டல், நீர்.

உதயகிரி - உதயமலை.

உதயம் - உதயவிராசி, பிறப்பு, விடியல்.

உதயலக்கினம் - சென்மவிராசி.

உதயன் - சூரியன்.

உதயாதிபன் - உதயவிராசிக் கதிபதி.

உதயாத்தமனம் - உதயமுமத்த மயமும்.

உதரகோமதம் - பாலடை.

உதரக்கனல் - தீபனக்கினி.

உதரநாடி - அடிவயிற்றோடு சம் பந்தமுள்ள நாடி.

உதரபந்தனம் - அரைப்பட்டிகை.

உதரப்பிரிவு - தங்குடித்தமர்.

உதரம் - அடிவயிறு, கருப்பை, வயிறு, யுத்தம்.

உதரவணி, உதரவாணி - கண்டங்கத்தரி.

உதராவி - மரமஞ்சள்.

உதர்க்கம் - எதிர்காலம், வரப் போகிறகாலம்.

உதவகன் - நெருப்பு.

உதவல் - ஈதல், சகாயம், துணை செய்தல்.

உதவி - ஒத்தாசை, கொடை, சகாயம், துணை.

உதன் - ஆடு, மேடவிராசி, வெள்ளாட்டுக்கடா.

உதறல் - உதறுதல், நடுங்கல்.

உதறிமுறிப்பான் - விஷ்ணுக்ராந்தை.

உதாசனம் } நிந்தை.
உதாசினம் }

உதாசனன் - அக்னி தேவன், கண்குத்திப்பாம்பு, கொடுவேலி, தீ.

உதாத்தம் - ஓரலங்காரம், எடுத்தலோசை, வேதஸ்வரத்திலொன்று.

உதாரணம் - இலக்கியமெடுத்துக்காட்டல், உதாஹரணம், ஒப்பனை, திருஷ்டாந்தம், துணைக்காரணம்.

உதாரம் - உத்தண்டம், ஓரலங்காரம், கொடை, தாராளம், வீரம், வாசகதாட்டிகம்.

உதாரன் } கொடையாளன், சாதுரியன், வீரன்.
உதாரி }

உதாவணி - கண்டங்காலி.

உதானம் } கண்டத்தியங்கும் வாயு, கண்மடல்.
உதானன் }

உதி - உதித்தலைச்செய்யென்னேவல், உலைத்துருத்தி, ஒதியமரம்.

உதிட்டிரன் - தருமராசன்.

உதித்தல் - தோன்றல், படுத்தல்.

உதிப்பு - தோற்றம், பிறப்பு.

உதியன் - சேரன், பாண்டியன்.

உதிரம் - இரத்தம்.

உதிரன் - செவ்வாய்.

உதிரி - உதிர்ந்தது, ஓர்வகை வாழை, சிறுகீரை, துளசி, வசூரி.

உதிரோற்காரி - சத்தமுகிலி லொன்று.

உதிர்தல் - சாதல், சிந்தல், சொரிதல்.

உதிர்த்தல் - உகுத்தல், கண்ணீருகுத்தல், சொரிவித்தல், பொடியாக்கல்.

உதீசி - வடக்கு.

உதீர்ணன் - புருஷார்த்த சிந்தையுள்ளவன்.

உது - உஃது.

உதும்பரம் - அத்திமரம், எருக்கு, செம்பு, வாயிற்படி.

உதை - உதைத்தல், உதையென்னேவல், காலாலுழத்துகை.

உதைதல் - தாக்கிமீளல், பிரயோகித்தல்.

உதைத்தல் - அதைத்தல், அலட்சியம்பண்ணல், காலாலுதைத்தல், பிரயோகித்தல்.

உதைப்பு - உதைக்கை, தாக்குகை.

உத்கமம் - பிறப்பு, வியாபாரம்.

உத்கீதம் - கானம், ஸாமவேதம், பிரணவம், மேகம்.

உத்தண்டம் - அதிகாரம், இராசதம், உக்கிரம், கொடை, தைரியம், துணிவு, மகத்துவம், வலிமை.

உத்தமசத்து - அவுபல பாஷாணம்.

உத்தமதாளி } வேலிப்
உத்தமாகாணி } பருத்தி.

உத்தமபரி - இலை, கொத்துமல்லி.

உத்தமபலம் - முந்திரிகைப்பழம்.

உத்தமபுருஷன் - சன்மார்க்கன், தன்மை.

உத்தமம் - உண்மை, நன்மை, முதன்மை, மென்மை.

உத்தமவிம்சதி - அறுபது வருடங்களில் முதலிருபது.

உத்தமாங்கம் - தலை.

உத்தமி } நற்குணமுடையவள்.
உத்தமை }

உத்திரக்கிரியை - கருமாந்தரம்.

உத்தரகுருவம் - போகபூமியாறிலொன்று.

உத்தரகோசமங்கை - ஓர் சிவஸ்தலம்.

உத்தரணி - சுருவை, பஞ்சபாத்திரக்கரண்டி.

உத்தரதுருவம் - வடதுருவம்.

உத்தரபாகம் - பிற்கூறு.

உத்தரபாத்ரபதம் - உத்திரட்டாதி, இரேவதி.

உத்தரபூமி - வடபூமி.

உத்தரமங்தோச்சம் - சூரியனுக்கும் கிரகங்களுக்குமுள்ள அதிதூரம்.

உத்தரமீமாம்ஸை - சாத்திரமாறினுென்று.

உத்தரம் - அபரம், உயர்ச்சி, ஊழித்தீ, எதிர்மொழி, சேடம், பலம், பின், மறுமொழி, வடக்கு.

உத்தரவாதம் - ஈடு, வகைசொல்லுந்தன்மை.

உத்தரவு - கட்டளை, மறுமொழி, விடுதலை, விடை.

உத்தராசங்கம் - உத்தரீயம்.

உத்தராசாடம் - உத்திராடம்.

உத்தராயணம் - அரிபதம் முதல் விஷுபதம் வரையில் சூரியன் செல்லுதல்.

உத்தரி - குதிரை.

உத்தரித்தல் - அழுந்தல், அனுபவித்தல், ஈடுசெய்யல், சாதித்தல், மறுமொழிசொல்லல்.

உத்தரீயம் - ஏகாசம்.

உத்தரோத்தரம் - எதிர்மறுமொழி, மிகுதி, மேலும் மேலும்.

உத்தவன் - கிருஷ்ணனுடைய மந்திரி.

உத்தளம் - உத்தூளிதம்.

உத்தாபம் - உபத்திரவம், தவிப்பு, மிகுவெப்பம், முயற்சி.

உத்தாரணம் - உயர்த்துதல், நிலை நிறுத்தல், பிரித்தல்.

உத்தாரம் - அடுப்பு, உத்தரவு, உயர்ச்சி, கட்டளை, பங்கு, மறுமொழி.

உத்தாலகம் - ஓர்வகைச்சோளம், ஓர்மணி.

உத்தாலகன் - ஓர் முனிவன்.

உத்தாலம் - நறுவிலி.

உத்தானபாதன் - ஓரரசன்.

உத்தானம் - அடுப்பு, அத்தநாள், ஆழமின்மை, இசைப்பு, உயிர்ப்பித்தெழுதல், ஊழித்தீ, எல்லை, எழும்புதல், புடைப்பு, முயற்சி, முற்றம், யுத்தம்.

உத்தானி - அகங்கையை மேற்புறமாய்த்திருப்பும் பேசி.

உத்தி - அபிநி, அறிவு, இசைவு, இணக்கம், செல்வம், சொல், தந்திரவுத்தி, திருவுறுப்பு, தூக்கங்கள், தேமல், பாம்பின் படப்பொறியுத்தி புத்திநுட்பம்.

உத்திட்டம் - குறிப்பு.

உத்தியம் - யாகமிருபத்தொன்றி ஞென்று.

உத்தியாபனம் - நோன்பு முடிவு, முடிவு.

உத்தியானம் } பூந்தோட்
உத்தியானவனம் } டம்.

உத்தியுத்தர் - உருபாதீபர்.

உத்தியோகபர்வம் - பாண்டவரும் கௌரவரும் யுத்தத்துக்கான முயற்சி செய்வதைத் தெரிவிக்கும் பருவம்.

உத்தியோகம் - உள்ளமிகுதி, தொழில், டயற்சி.

உத்திரட்டாதி - ஒரு நக்ஷத்திரம்.

உத்திரம் - ஒரு நக்ஷத்திரம்.

உத்திராசாடம் } ஒரு நக்ஷத்
உத்திராடம் } திரம்.

உத்திராபன்னி - சணல்.

உத்திரி - அருச்சை, செபம், தியானம், பருத்தி, பூசை, மந்திரம்.

உத்திரேகம் - தொடக்கம், மிகுதி.

உத்தீபகம் - மலையெறும்பு.

உத்தீபனம் - தீபமேற்றல், விகாரமூட்டல்.

உத்து - அத்தாட்சி, தெளிவு.

உத்துங்கம் - உயர்ச்சி, மேன்மை.

உத்துவாகனம் - இருமுறையேருழல்.

உத்துவாகிதமுகம் - அண்ணாந்து பார்த்தல், பரதவுறுப்பு ளொன்று.

உத்துவாசனம் - கொலை, மிக வளர்ச்சி.

உத்தவேகம் - அச்சம், துக்கம், பாக்கு.

உத்தூளனம் } உடம்பெங்கும்
உத்தூளிதம் } பொடி விபூதி தரித்திருத்தல்.

உத்தேசம் - ஒப்பந்தம், சொல்லல், நோக்கம், போதப்பிரகார மூன்றினென்று, அஃது-மதிப்பு, விசாரணை, விபரம்.

உத்தேசனம் - அனுப்பல், சாணை பிடித்தல்.

உத்தேசித்தல் - கருதல், தீர்மானித்தல்.

உத்தேரிதம் - குதிரை நடையைந்தினொன்று.

உத்பிஜ்ஜம் - நிலத்தைப் பிளந்துகொண்டு முளைக்குஞ்செடி முதலானவை.

உத்பிரேக்ஷை - அலங்காரம், தற்குறிப்பேற்றம்.

உத்பூதம் - ஆரம்பம், பிறந்தது.

உந்தரம் - எலி, வழி.

உந்தி - ஆறு, ஆன்கூட்டம், உயர்ச்சி, கடல், கொப்பூழ், தேருருளை, நடு, நீர்ச்சுழி, பரப்பு, மகளிர் விளையாட்டிலொன்று, யாழினுறுப்பு.

உந்திக்கமலம் - கொப்பூழாகிய கமலம்.

உந்திச்சுழி - கொப்பூழ்ச்சுழி.

உந்திபூத்தோன் - விஷ்ணு.

உந்தியார் - ஒரு வேதாந்தநூல்.

உந்து - கச்சோலம்.

உந்துதல் - உயர்ச்சி, எழும்பல், எறுதல், செலுத்துதல், தள்ளுதல்.

உந்துரு - பெருச்சாளி.

உந்தை - உன்றந்தை.

உந்நதம் - உயர்ச்சி.

உந்மத்தம் - ஊமத்தை.

உந்மாதம் - அடித்தல், கொல்லல், சித்தப்பிரமை, மன்மதவிகாரம்.

உந்மானம் - எடைக்குண்டு முதலானவை.

உந்மேஷம் - கண்ணிமைகளை விரித்தல்.

உப - அதிசயம், அலங்காரம், இரண்டு, உவமை, கட்டளை, கண்டனை, கீழ்மை, கொலை, சமீபம், துணை, மிகுதி, முயற்சி, விருப்பம், இவற்றைக் காட்டுமோருபஸர்க்கம்.

உபகசிதம் - சிரிப்பு.

உபகந்தம் - வாசனை.

உபகமம் - கொள்கை, சமீபம், பொருத்தம்.

உபகரணம் - அரசசின்னம், துணைக்காரணம்.

உபகாசம் - பரிகாசம்.

உபகாரம் - ஆதரவு, ஈகை, சகாயம், தயவு.

உபகாரி - ஈகையாளன், துணை செய்வோன், நன்மைசெய்வோன்.

உபகிருதம் } உதவுகை.
உபகிருதி }

உபகுல்லம் - சுக்கு.

உபகேசி - பார்வதி.

உபக்கிரமம் - ஆரம்பம்.

உபசம்ஹாரம் - அழித்தல், ஆட்சேபம், விலக்குதல்.

உபசத்தி - ஈகை, உதவி, ஊழியம், ஐக்கியம், தொண்டு.

உபசமனம் - அமைவு, சமாதானம்.

உபசயம் - உயர்ச்சி, குவியல், திரட்சி, மிகுதி.

உபசரணை - உபசாரம், வழிபாடு.

உபசர்க்கம் - இடையூறு, உற்பாதம், சரக்குறி, சிவப்பு, மாறுதல், வடமொழி முதனிலையடை.

உபசாந்தம் } அமைவு, ஒழிவு.
உபசாந்தி }

உபசாபம் - வேறுபாடு, துரோகம், பிரிவினை.

உபசாரம் - ஆசாரம், உபகாரம், ஊழியம், சங்கித்தல், தொழில், மரியாதை, வழிபாடு.

உபசுந்தன் - ஓரிராக்கதன்.

உபதாமனநாடி - சுவாஸக்குழல், நாடி.

உபதானம் - அத்திவாரம், தலையணை.

உபதி - அச்சம், அணுப்பு, கை, சில், தேருருள்.

உபதேசம் - தீட்சை.

உபதேசகலை - கடவுள் குணம் தொழில் முதலியவற்றை விளக்கும் வேதபாகம்.

உபதை - காணிக்கை, கையடை.

உபத்தம் - சமீபம், பெண்குறி.

உபநயம் } பூணூற் கல்யாணம்,
உபநயனம் } மூக்குக்கண்ணாடி.

உபநளகம் - முன்காற் சிற்றெலும்பு.

உபநாகம் } இரணத்திற்கிடு
உபநாயம் } மருந்து.

உபநாகனம் - பூசுதல்.

உபநிடதம் - வேதநுட்பம்.

உபநிட்கிரமணம் } பிறந்த நான்
உபநிட்டானம் } காம் மாசம் பிள்ளைக்குச் சந்திரனைக்காட்டல்.

உபநியாசம் - ஈடு, பிரசங்கம், சொல்லிய நியாயத்தை விடைகூற அவதானித்தல், பிரமாணம், முகவுரை, விவரம்.

உபநியாயம் - துணை நியாயத்தொடர்.

உபபத்தி - கூட்டம், சம்பந்தம், சேவகம், தியானம், பிரதிபாதித்தல், பிறப்பு, முகாந்திரம், முடிவு.

உபபலம் - உதவி, படைத்துணை.

உபபாதகம் - பஞ்சமகாபாதகங் களுக்கடுத்த பாதகம்.

உபபுராணம் - பதினெண்புரா ணத்தின் சார்புப் புராணம்.

உபபோகம் - அனுபவம், இன் பம்.

உபமம் - உவமை, பாவனை.

உபமலம் - மனமாசு.

உபமானம் - உவமானம், ஒர ளவை.

உபமிதி - ஒப்பு.

உபமேயம் - உவமிக்கப் படும் பொருள்.

உபமை - உவமை.

உபயகோமுகி - கன்றின் றலையுத யமாய் நிற்கும் பசு.

உபயமம் - கலியாணம்.

உபயமாதம் - கன்னி, தனுஸு, மிதுன மீனமாதங்கள்.

உபயம் - இரண்டு, உபகாரம், கோயிற் காணிக்கை, மகிமை.

உபயராசி - கன்னி, தனுஸு, மிதுனம், மீனம்.

உபயவோசை - ஈரடிக்கொலி.

உபயார்த்தம் - இருபொருள்.

உபயோகம் - உதவி, கருவி, சமீபம், நன்கொடை, பாவிப்பு, பிரயோகம்.

உபயோகி - உதவியானவன்.

உபரசம் - கடனுரை, சிலை, இரத்தினம், மண் முதலியவற்றினுட்சத்து.

உபரதி - மூன்றுஞ்சாதனமாறிலொன்று.

உபராகம் - கிரகணம்.

உபராசன் - இளவரசன்.

உபரி - அதிகம், மேல்.

உபரியாவி - கோஷ்டம்.

உபரோதம் - கட்டுதல், சூழ்தல், தடை, தற்காப்பு.

உபலப்தி - அறிவு, எண்வகை பிரமணத்தொன்று, சம்பாத்தியம்.

உபலம் - எறுமுட்டை, கல், சிறுகல்.

உபலாலனம் - சீராட்டு, அயதாக்கல்.

உபலேபனம் - கோமயத்தால் மெழுகல்.

உபலோத்திரம் - விளாம்பிசின்.

உபவம் - சீந்தில்.

உபவனம் - காஞ்சொரி, நந்தனவனம், பூங்கா.

உபவீதம் - பூணூல்.

உபவேசம் - ஆசனம், இருத்தல், மலங்கழித்தல்.

உபவேசனம் - உட்காரல், மலங்கழித்தல்.

உபாகமம் - சார்பாகமம், பொருத்தம்.

உபாகிதம் - உற்கை.

உபாகிதை - விண்வீழ்க்கொள்ளி.

உபாக்கியானம் - இதிகாசம்.

உபாங்கம் - அணியப்படுவன, ஒருவகைத்தோற்கருவி, சார்புறுப்புகள், பரதவுறுப்புளொன்று.

உபாசனம் - ஆசனம், வில்வித்தை.

உபாசனை - ஆசரணை, வழிபாடு.

உபாதானம் - உபயர்த்தம், ஈவு, எண்ணம், ஐம்புலனடக்குகை, துணைக்காரணம், பிச்சை, முதற்காரணம், விலக்கல்.

உபாதி - காரியம், தடை, தியானம், யாதை, வருத்தம், வியாதி.

உபாந்தியம் - ஈற்றயல், கடைக்கண்.

உபாயம் - உபசாரச்சொல், சூழ்ச்சி, சொற்பம், தந்திரம், வகை.

உபாலம்பம் - நிந்தை.

உபானம் } கோபுரத்தினடிச்
உபானவரி } சித்திரவரி.

உபேட்சை - அசட்டை, அருவருப்பு, உபாயம், நிந்தை, பிரியவீனம், பொறுமை, மாயம், விடுதல்.

உபேந்திரன் - விஷ்ணு.

உபோதம் - பேய்ப்பசளை.

உப்பக்கம் - முதுகு.

உப்பமைப்போர் } உப்புச் செய்
உப்பளவர் } வோர், நெய்த நிலமக்கள்.

உப்பரிகை - மேனிலைமாடம்.

உப்பளம் - உப்பு விளை நிலம், கழிக்கரை.

உப்பிலி - இண்டு, ஈர்க்கொல்லிக் கொடி.

உப்பு - அரகம், இலவணம், இனிமை, உப்புத்தலைச் செய் யென்னேவல், உவர்த்தல், கடல், மகளிர் விளையாட்டு.

உப்புக்கீரை - ஓர் கீரை.

உப்புதல் - ஊதுதல், பொரு முதல், வீங்கல்.

உப்புத்திராவகம் - இலவணதிரா வகம்.

உப்புவாணிகர் - உப்புவிற்போர்.

உப்பை - ஒளவை முதலிய பெண்பாலருளொருத்தி, (ஒளவை, உறுவை, வள்ளி.)

உமணர் - உப்பமைப்போர்.

உமம் - இறங்கு துறை.

உமரி - ஓர் பூடு, நத்தை.

உமலகம் - அரிதாரம்.

உமல் - செம்படவர்களின் ஓலைப் பை.

உமா - குன்றி.

உமாகடம் - சணல்.

உமற்கடம்-குசைப்புல், தருப்பை.

உமாகுரு - இமயமலை.

உமாசக்தன் - சிவன்.

உமாசுதன் - உமைமைந்தன், (கணேசன், ஸ்கந்தன், வீரபத்திரன்.)

உமாதசி - சணல்.

உமாபட்சி - ஓர் புள்.

உமாபதி - சிவன்.

உமி - உமியென்னேவல், தானியங்களின் மேற்ரோல்.

உமித்தல் - இற்றுப்போதல், பதனழிதல்.

உமியல் - வசம்பு.

உமிழ்தல் - கொப்பளித்தல், சத்தி செய்தல், சொரிதல், தெவிட்டல்.

உமை - அமைதி, காரகத்தி, கீர்த்தி, துர்க்கை, பார்வதி, பிரகாசம், மஞ்சள்.

உமைகரநதி - கங்கை.

உமையவள் - பார்வதி.

உமையாள் - சவர்க்காரம், பார்வதி, மயிலிறகு.

உம் - இடைச்சொல், உந்தாகல், உம்விகுதியானது உந்து எனத் திரிதல்.

உம்பரான் - உயர்ந்தோன், காமதேனு.

உம்பருலகு - தேவலோகம்.

உம்பர் - ஆகாயம், உயர்ச்சி, உவவிடம், பார்ப்பார், மேல், வானோர்.

உம்பல் - ஆட்டுக்கடா, ஆண் யானை, எருது, எருமைக்கடா, எழுச்சி, குலம், கோத்திரம், முறைமை, யானை, வலி, விலங்கேற்றின் பொது.

உம்பி - உன்றம்பி, நும்பி.

உம்மை - உங்களை, உம்மென்னு மிடைச்சொல், கழிபிறப்பு, மறுமை, வருபிறப்பு.

உம்மைஎட்டு - உம் என்னும் இடைச்சொல் எட்டுவகைப் பொருளைத்தரும், அஃது - ஆக்கப் பொருள், எண்பொருள், எதிர்மறைப் பொருள், ஐயப்பொருள், சிறப்புப்பொருள், தெரிநிலைப்பொருள், முற்றுப்பொருள்.

உம்மைத்தொகை - உம்மென்றுஞ்சொல் தொக்கு நிற்பது.

உயக்கம் - உபத்திரவம், துக்கம், வருத்தம், வாட்டம்.

உயக்கல் - வருத்தல்.

உயங்கல் - மனந்தளர்தல், வருந்தல், வாடுதல்.

உயத்தி - வெள்ளைப்பாஷாணம்.

உயரம் - உச்சம், மிகுதி, மேல்.

உயராய்தம் - தன் அரைமாத்திரையிற் குறுகாதது.

உயர்ச்சி - மேல்.

உயர்தல் - அதிகப்படல், இறுமாப்படைதல், உன்னதப்படல், ஏறுதல், நிமிர்தல், மேலாதல், வளர்தல்.

உயர்திணை - உயர்ந்த குலம், அஃறிணை - மக்கள், தேவர், நரகர்.

உயர்திணைப்பெயர் - உயர்ந்த குலப்பெயர்.

உயர்தினம் - சுபநாள், திருவிழா, மங்கலநாள்.

உயர்த்தல் - உயரச்செய்தல்.

உயர்நிலத்தோர் - வானோர்.

உயர்நிலம் - உப்பரிகை, தேவலோகம், மேடு.

உயர்நிலை - தேவலோகம், மேன்மாடம்.

உயர்ந்த குளச்சி - பவளப்புற்றுப் பாஷாணம்.

உயர்ந்தோர் - அறிஞர், பார்ப்பார், முனிவர், வானோர்.

உயர்ப்பு - அதிகப்பாடு, நிமிர்ச்சி, வளர்ச்சி.

உயர்முப்பால் - உயர்திணையில் வருமூன்று பால்கள்.

உயர்வு - உயர்ச்சி, உயர்தல், மேம்பாடு, மேன்மை.

உயர்வுநவிற்சியணி-ஓரலங்காரம்.

உயல் - உயிர்வாழ்தல், உய்யல், மிகுந்திருத்தல்.

உயவர் - வருந்தினர்.

உயவல், உயவு - துன்பம், நினைப்பு, வருத்தம்.

உயவை - காக்கணஞ்செடி, துன்பம், மேகம்.

உயா - வருத்தம்.

உயிரல்பொருட்குணம் - வட்டம், சதுர முதலியன.

உயிரல்பொருள் - அறிவுமயமாம் உயிர் ஒன்றுமேயின்றி உடம்பு முதலிய உலகத்துப்பொருள்களெல்லாம் ஆம்.

உயிரளவு } பாட்டிலோசை
உயிரளபெடை } குறைந்த
விடத்து உயிரெழுத்து அளபெடுத்து வருதல்.

உயிரோம்பல் - உயிர்காத்தல்.

உயிர் - ஆன்மா, உயிரெழுத்து, உயிறு, காற்று, சீவராசிப் பொது.

உயிர் ஈற்றுப்புணரியல் - உயிர் எழுத்துக்கள் சொல்லின் கடைசியில் சேர்ந்து நிற்குந் தன்மையைச் சொல்வது.

உயிர்எழுத்து - அச்சு, ஆவி.

உயிர்க்கணம் - அட்டகணத்தி லொன்று.

உயிர்க்குணம் - அறிவு முதலிய முப்பத்திரண்டுகுணம்.

உயிர்த்தல் - உயிரடைதல், ஈனல், பிறப்பித்தல்; மணத்தல், வாய்விடல், விடுத்தல்.

உயிர்த்துணை - கடவுள், கணவன், பிராணசினேகன், மனைவி.

உயிர்த்தொடர் - உயிரெழுத்தைத் தொடர்ந்து வருவது.

உயிர்நிலை - உடல், உயிர்நிற்கும் நிலை, சீவன்.

உயிர்ப்பு - காற்று.

உயிர்மெய் - உயிரெழுத்தும் மெய்யெழுத்துங்கூடி இருக்கிற எழுத்து.

உயிறு - இலாமிச்சை.

உய்தல் - உயிர்வாழ்தல், ஈடேறுதல், சகத்தோடிருத்தல், தப்புதல், தாழ்தல், பிழைத்தல்.

உய்தி - உயிர்வாழ்தல்.

உய்த்தல் - செலவழித்தல், செலுத்தல்.

உய்த்தலில் பொருண்மை - ஓரலங்காரம், அஃது - கருதியபொருள் தோன்றப்பாடப் படுவது.

உய்த்துணர்தல் - ஆராய்ந்தறிதல், நுட்பமாய்த்தேர்தல்.

உய்த்துணரவைப்பு - உத்திமுப் பத்திரண்டினொன்று.

உய்மணல் - கருமணல்.

உய்யக்கொண்டான் - எருமை முல்லை, கொய்யா.

உய்யாணம் } சோலை, பூந்
உய்யானவனம் } தோட்டம், சிங் காரவனம்.

உய்வித்தல் - ஈடேற்றுதல், பிழைப்பித்தல், வாழ்வித்தல்.

உய்வு - ஈடேற்றம், பிழைப்பு.

உரகபந்தம்
உரகபந்தனம் } நாகபந்தனம்.

உரகமல்லி - நாகமல்லி.

உரகம்
உரங்கம் } நாகமல்லிகைபாம்பு.

உரகர் - சமணர், நாகர்.

உரகவல்லி - வெற்றிலைக்கொடி.

உரகன் - ஆதிசேடன்.

உரகாதிபன்
உரகேந்திரன் } ஆதிசேடன்.

உரகாரி - கருடன்.

உரக்க - கெட்டியாக, வலிதாக.

உரசல் - உரிஞ்சல், தேய்த்தல்.

உரசி - நெஞ்சம்.

உரசிதம் - முலை.

உரஞ்சுதல் - துடைத்தல், தேய்த்தல்.

உரஞ்செய்தல் - உரங்குத்தல், திரப்படுத்தல்.

உரணம் - ஆட்டுக்கடா, முகில்.

உரண்டம் - காக்கை.

உரத்தல் - பலத்தல், வலியுறல்.

உரப்பல் - அதட்டல்.

உரப்பு - உரத்தல், உரப்பென்னேவல், திண்மை, பலப்பு, வலி.

உரம் - உள்ளமிகுதி, ஊக்கம், ஞானம், திண்மை, மதில், மார்பு, வலி.

உரல் - இடியப்பவுரல், நென் முதலிய குத்துமுரல்.
உரவன் - அருகன், அறிஞன், வலியன்.
உரவு - அறிவு, வலி.
உரவுநீர் - உவர்நீர்.
உரவோர் - அறிஞர், பெரியோர், மூத்தோர், வல்லமையுள்ளவர்.
உரறல் - பெருங்கோபம்.
உரற்றல் - ஒலித்தல், பேரொலி.
உரன் - அறிவு, உள்ளமிகுதி, ஊக்கம், பலம், மார்பு, வல்லமை, வெற்றி.
உராஞ்சல் - உரைதல்.
உராதரம் - முலை.
உராய்தல் - உரைதல்.
உராய்ப்போதல் - உரைதல்.
உரி - உரிச்சொல் புணர்ச்சி, உரிதலைச் செய்யென்னேவல், பண்புத்தொடர்.
உரிஇயல் - உரிச்சொல்லானது பொருளினது குணப்பண்பு தொழிற்பண்புகளை விளக்கி நிற்றல்.
உரிச்சீர் - ஓர்வகைச்சீர்.
உரிச்சொல் - பொருள்களின்பல வகைக் குணங்களையு முணர்த்துஞ்சொல்.
உரிச்சொற்புணர்ச்சி - உரிச்சொல், ஓரளவு, கொத்துமல்லி, தோல், பண்புத்தொடர்.

உரிஞல்
உரிஞ்சல் } உராய்தல்.

உரிதல் - கழலல், கழற்றல், முளைத்தல்.

உரித்தல் - உரித்தல், கழற்றல்.

உரித்திரம் - மஞ்சள், மரமஞ்சள்.

உரித்து - உரியது, கடமை, பட்சம், வினையெச்சம்.

உரிப்பொருள் - அகத்திணை முப்பொருளிலொன்று. அது - புணர்தல், ஊடல், இரங்கல்.

உரிமை - ஆட்சி, இஷ்டம், இனம், உரித்து, ஒவ்வொன்றிற்குத்தகுவது, குணம், சினேகம், சுதந்திரம், மனைவி.

உரியன
உரியாள் } மனையாள்.

உரியர்
உரியார்
உரியோர் } அறிஞர், உறவோர்.

உரியன்
உரியான்
உரியோன் } புருடன்.

உரிவை - தோல், மரவுரி.

உரு - அட்டை, அதிகம், அழகு, உடல், உருத்தலைச்செய்யென்னேவல், உள், எலு, மிச்சை, கரு, கலை, கோபம், செபத்தினுரு, நிறம், நோய், நீண்ட, பெரிய, மரக்கலம், வடிவு, விலையுயர்ந்தது.

உருகம் - பிறப்பு.

உருகுதல் - இறங்குதல், உருகுதல், கரைதல், நீராழமாதல், மனங்கரைதல்.

உருக்கம் - அன்பு, இரக்கம், உருகுந்தன்மை, தொடை.

உருக்கல் - உருக்குதல், வருத்தல்.

உருக்கினம் - அஞ்சன பாஷாணம், வெண்கார முதலியன.

உருக்கு - உருக்கென்னேவல், எஃகு, எருக்கு.

உருக்குக்காரம் - வெண்காரம்.

உருக்குதல் - உருகச்செய்தல், கெடுத்தல், தீயிற்கரைத்தல், வாட்டல்.

உருக்குப்பிரமியம் - இரத்தப்பிரமியம், நீரழிவு.

உருக்குமம் - பொன்.

உருசி - இன்பம், சுவை, மதுரம்.

உருசு - அத்தாட்சி, திருஷ்டாந்தம்.

உருட்சி - உருண்டிருத்தல், சில்லுருட்சி, திரட்சி.

உருட்டல் - உருளச்செய்தல், கவறெறிதல், திரட்டல், புரட்டல், வெல்லல்.

உருட்டுவண்ணம் - துரிதவண்ணம்.

உருத்தரித்தல் - வடிவங்கொள்ளல்.

உருத்தல் - கன்மம் விளைதல், கோபம், சினக்குறிப்பு, தோற்றம், மிகுதி, முளைத்தல், பொருத்தம்.

உருத்திதம் - உரிய பொருள், தொழிலிலாபம், வளர்தல், வட்டி.

உருத்திரசடை - சிவதுளசி.

உருத்திரபஞ்சமம் - ஓர் பண்.

உருத்திரம் - வெகுளிதோன்றக் கூறல், பெருங்கோபம், மஞ்சள்.

உருத்திரரோகம் - மாரடைப்பு.

உருத்திரவீணை - ஓர்யாழ்.

உருத்திரன் - கொடுங்கோபி, சிவன்.

உருத்திராக்கம், உருத்திராட்சம் - உருத்திராட்சமணி.

உருத்திராணி, உருத்திரை - பார்வதி.

உருத்திராபிஷேகம் - உருத்திரமந்திரஞ் செபித்துச் செய்யுமபிஷேகம்.

உருத்திரோற்காரி - ஓர் வருடம்.

உருநாட்டு - சித்திரம், விக்கிரகம்.

உருபு - அவயவம், உருவம், வடிவம், வேற்றுமையுருபு முதலிய விடைச் சொற்கள்.

உருபுத்தொகை - உவமையுருபு தொக்கு நிற்பது.

உருபுப்புணர்ச்சி - வேற்றுமையுருபு முதலிய புணர்க்கை.

உருபுமயக்கம் - ஒருவேற்றுமைப் பொருளில் வேறு வேற்றுமையுருபு வருதல்.

உருபுவமானத்தொகை - உருபுமுவமானமுந் தொக்குநிற்பது.

உருபுவமைத்தொகை - உருபுவமை தொக்கு நிற்பது.

உருப்பசி - தெய்வப்பெண்களிலொருத்தி.

உருப்பம் - உட்டணம், கோபம், திணிமா, மிகுதி.

உருப்பிரமம் - ஆட்டுக் கொம்பு.

உருப்பு - பூரணம், மிகுதி, வெப்பம்.

உருமணி - கருவிழி.

உருமம் - உட்டணம், மத்தியானம்.

உருமலைவாரி - உலோகமணல்.

உருமு - அச்சம், உருமேறு, இடி.

உரும் - அச்சம், இடி, விடுதல்.

உரும்பரம் - சர்ப்பம், செம்பு, பெருங்காயம்.

உருவகஉவமை - உருவகமும், உவமையும் என இரண்டும்.

உருவகப்படுத்தல் - அலங்காரப் படுத்திச்சொல்லல்.

உருவகம், உருவகவணி - உபமான உபமேயங்களின்வேற்றுமையை ஒழித்து ஒன்றெனவைப்பது.

உருவகவுருவகம் - உருவகத்தையே பெயர்த்துப் பிறிதொன்றாகவுருவகஞ்செய்வது.

உருவங்காட்டி - கண்ணாடி.

உருவசாத்திரம் - கலைஞான மறு பத்து நான்கிலொன்று.

உருவசி - ஊர்வசி

உருவம் - அழகு, உடலுறுப்பு, உடல், காணக்கூடியது, சொரூபம், நிறம், வடிவு, விக்கிரகம்.

உருவல் - உருவுதல், காதணியிலொன்று.

உருவாரம் - வெள்ளரி.

உருவி - செம்முள்ளி, நாயுருவி, புல்லுருவி, முள்ளி.

உருவியுப்பு - நாயுருவியுப்பு.

உருவிலி - உருவில்லாதவன, மன்மதன்.

உருவு - அச்சம், உருவம், உருவென்னேவல், வடிவு.

உருவுதல் - உறுப்பு, கணைவேன் முதலிய புகுந்தோடல், தழை முதலிய வுருவல், வாண் முதலிய கழற்றல்.

உருவுவமம் - வடிவுவமை.

உருவுள்ளு - கொள்.

உருவை - சூரை, முள்ளி.

உருவெளி - உருவெளிப்பாடு.

உருளரிசி - கொத்துமல்லி.

உருளல் - உருளுதல்.

உருளி - உரோகணிநாள், தேருருளை, யாக்கையின்மூட்டு, வட்டம்.

உருளுதல் - அழிதல், உருண்டையாதல், புரளுதல்.

உருளை - உருண்டை, உருள், உருள்பொருள், வெள்ளைப்பாஷாணம்.

உருள் - உருளென்னேவல், உரோகணி நாள், சக்கிரம், தேருருளை, பண்டி, வட்டம்.

உரூடபதம் - இடுகுறி, பிரக்கியாதி, மாத்திரப் பெயர்.

உரூடி - இடுகுறி, பிரவித்தியானது.

உரூபகம் - அத்தாட்சி, உரூபகதாளம், ஓரலங்காரம்.

உரூபகாரம் - திருட்டாந்தம்.

உரூபதன்மாத்திரை - பஞ்சதன்மாத்திரையிலொன்று.

உரூபம் - அழகு, உருவம், சாயல், நிலை, நிறம், விக்கிரகம்.

உரூபாரூபம் - உருவமருவும், நவபேதத்தொன்று, அது—சதாசிவம்.

உரூபி - அழகன், உருவுள்ளது.

உரூப்பியம் - அழகுள்ளது, பொன்னகை, வெள்ளி, வெள்ளிநகை.

உரேந்திரன் - வீரம்.

உரை - உயர்ச்சி, உரையென்னே வல், ஒலி, சொல், சொற்பயன், தேய்வு, பொன், வியாக்கியா னம்.

உரைஅசை - உரையசைப்பொ ருள்.

உரைக்கட்டு - உரைபண்ணுதல்.

உரைகடல் - கட்டளைக்கல்.

உரைகாரன் - நூலுக்கு உரை செய்பவன்.

உரைக்கோள் - உரையாசிரியர் கருத்து.

உரைசல் - உரைதல்.

உரைத்தல் - ஒலித்தல், கற்பித் தல், சொல்லுதல், தேய்த்தல்.

உரைத்தாமென்றல் - இதுமுன் சொன்னேமென்றல், ஒருத்தி.

உரைத்துமென்றல் - இவ்விதி பின்பு சொல்வோமென்றல்.

உரைநூல் - உரைபெற்றநூல்.

உரையல் - உரைதல், வியங் கோண்முற்று.

உரையாசிரியர் - நூலுக்கு உரை எழுதுவோன்.

உரையாடல் - சொல்லல், பேசல்.

உரையிலக்கணம் - உரைசெய்பு முறை.

உரைவன்மை - சாதுரியம், சொற்றிட்பம்.

உரையிற்கோடல் - நூலிற்சொல் லாதிருந்தும் உரியபொருளை உரையிற்கொள்ளுதல்.

உரோககம் - சிவனடிபாதம்.
உரோகணி - உரோகணி நட்சத்திரம், பலதேவன்ருய்.
உரொக்கம் - கையிருப்பு.
உரோகதி - நாய்.
உரோகம் - இறங்குதல், ஏறுதல், ஒளியின்மை, நோய், பூவரும்பு.
உரோகி - பிணிவுற்ருேன்.
உரோகிணி - உரோகிணிநாள், பலராமன்ருய், கடுகுரோகணி, பீதரோகணி, ஒன்பதாண்டுப் பெண்.
உரோகிணிதநயன் - பலபத்திரன்.
உரோங்கல் - உலக்கை.
உரோசம்-மானம்,முலை,வெட்கம்
உரோசல் - உராய்தல்.
உரோசனகம் - எலுமிச்சை.
உரோசனம் - முள்ளிலவு.
உரோசனை - கடுகு, கோரோசனை, செந்தாமரை.
உரோணி - உரோகணி நாள்.
உரோதனம் - அழுதல், கண்ணீர்.
உரோமசன் / உரோமமுனி } பதினெண் சித்தரிலொருவன்.
உரோமம் - புறமயிர், மயிர்ப் பரப்பு.
உரோமரேகை / உரோமாவலி } மயிரொழுங்கு.
உரோமாஞ்சம் - மயிர்சிலிர்ப்பு, தநாகலிப்பு.

உரோருகம் - முலை.

உலகசஞ்சாரம் - பூமியிற்சஞ்சரிக்கை.

உலகசயன் - புத்தன்.

உலகநாதன் - கடவுள், பிரமன்.

உலகேந்திரன் - சூரியன்.

உலகபாந்தவன் - சூரியன்.

உலகமலையாமை - நூலழகுபத்தினொன்று, உயர்ந்தோர் வழக்கத்தோடுமாறு கொள்ளாமை, அல்லது உலகமலை வில்லாமற் சொல்லல்.

உலகமலைவு - ஓரலங்காரவழு.

உலகமாதா - உமையவள், இலக்குமி, சரசுவதி.

உலகமீன்றாள் - பார்வதி.

உலகமுண்டோன் - விஷ்ணு.

உலகம் - ஆகாயம், உயர்ந்தோர், உலகு, பிரபஞ்சம்.

உலகர் - உலகப்பற்றுள்ளோர்.

உலகளந்தோன் - விஷ்ணு.

உலகாயிதம் - புறச்சமயமாறினொன்று, சார்வாகம்.

உலகியல் - அறிவு, உலகநடை.

உலகு - ஆகாயம், உயர்ந்தோர், உலகம், திசை, நாடு, பூமி.

உலகுண்டோன் - விஷ்ணு.

உலகுலம் - திப்பிலி, திரிபாலை.

உலகோம்பல் - அரசராறுதொழிலுளொன்று.

உலக்கை - உலக்கை, திருவோணம், மெருகன் கிழங்கு.

உலங்கு - கொசுகு.

உலண்டு - கோற்புழு.

உலத்தல் - கெடுதல், கெடல், சாதல்.

உலப்பு - ஒழிபு, கேடு, சாதல்.

உலமால் - அச்சக்குறிப்பு, அஞ்சல், துன்பம், துன்புறல்.

உலம் - கற்றிரள், திரண்டகல்.

உலம்பல் - ஒட்சித்தல், ஒலித்தல், முழங்கல்.

உலால் } காய்தல், வாடல்.
உலர்தல் }

உலவல் - உலாவல்.

உலவாக்கிழி - எடுக்கவெடுக்கக் குறையாநிதிப்பொதி.

உலவுதல் - உலாவுதல், ஒழிதல், கூசிக்குறைத்தல்.

உலவை - ஊர், ஓடைக்கொடி, காற்று, குடி, குலம், தாழை, மரக்கொம்பு, மரப்பொந்து, முல்லைநிலக்கான்யாறு, வள்ளி, விலங்கின்கொம்பு, விறகு.

உலறல் - காய்தல், சிதைத்தல், சிலும்பல், சினக்குறிப்பு.

உலா - உலாவென்னேவல், ஓர் பிரபந்தம், (நேரிசைக்கலிவெண்பா) சாரிவருதல், பவனிவருதல்.

உலாகுமம் - மனோசிலை.

உலாங்கிலி } காவட்டம்புல்.
உலாங்கு }

உலாஞ்சுதல் - கிறுகிறுத்தல், தள்ளாடுதல்.

உலாத்துக்கட்டை - கதவுக்குடுமி, சுழியாணி, முளையாணி.

உலாமடல் - ஓர் பிரபந்தம்.

உலாமா - கச்சமரம்.

உலாவல் - பொழுது கழித்து விளையாடல், மெல்லநடத்தல், வியங்கோண்முற்று.

உலிற்கள் - வெண்கல.

உலுக்குதல் - அசைத்தல், குலுக்குதல், நடுங்கல்.

உலுத்தம் - உலோபம்.

உலுத்தன் - உலோபி.

உலுவா } பெருஞ்சீரகம்,
உலுவாவரிசி } வெந்தயம்.

உலூகம் - கோட்டான், ஓர்வகை பரி.

உலூகலம் - உரல், குங்குலியம்.

உலூதை - சிலந்திப்பூச்சி.

உலை - உலையென்னேவல், கொல்லனுலை முதலியன, பாகஞ்செய்யவைக்கு நீருலை.

உலைக்களம் - அடுப்பு, உலைமுமுகம், கொல்லனுலையிடம்.

உலைக்குறடு - கம்மாளர்கருவியிலொன்று.

உலைசல் - உலைவு, ஒவ்வாமை, கெடுதல்.

உலைதல் - அலைதல், அழிதல், கலைதல், கெடுதல், சீரழிதல், முறியடித்தல், வருந்துதல்.

உலைப்பு - அலைப்பு, வருத்தம்.

உலைவு - அச்சம், அலைவு, அழிவு, உலைதல், கெடுதி, நடுக்கம், நிலையின்மை.

உலோகதாது - துத்தபாஷாணம்.

உலோகபாலன் - அரசன்.

உலோகம் - இரத்தம், இரும்பு, எழுவகையுலோகம், பஞ்சலோகம், பார்வை, பூமி, மனிதன்.

உலோகரூடம் - உலகவழக்கம்.

உலோகார்த்தம் - உலகநன்மை.

உலோகிதம் - இரத்தம், சிவப்பு, செவ்வாய், மஞ்சள், யுத்தம்.

உலோசனம் - கண்.

உலோசி - பேய்ப்பசளை.

உலோசிதம் - சந்தனமரம்.

உலோபம் - அற்பம், ஆசை, ஈயாமை, உட்பகையாறினொன்று, குறைவு, கொஞ்சம், கெடுதல், பொருளாசை, விகாரமெட்டினொன்று.

உலோபி - பிசுனன்.

உலோமசம் - சடாமாஞ்சில்.

உலோமம் - ஒழுங்கு, வால், வாலுளி.

உலோலம் - அசைவு, ஆசைப் பெருக்கம்.

உலோலிதமுகம் - சிந்தையாலொ ருதோண்மேற்றலை சாய்ந்து நிற்குமுகம், ஓர் பரதவுறுப்பு.

உலோலிதம் - அசைவு, பயம்.

உல்கு - ஆயம்.

உல்லங்கனம் } அவமதிப்பு, கலக்
உல்லிங்கனம் } கம், கடத்தல், நிந்தை, மீறுதல்.

உல்லம் - ஓர்மீன்.

உல்லரி - தளிர்.

உல்லாசம் - அத்தவாளம், அத்தியாயம் உள்ளக்களிப்பு, இறுமாப்பு, தேசு.

உல்லாசவபிநயம் - உள்ளக்களிப்பைக் காட்டுமபிநயம்.

உல்லாபம் - கலிந்தமொழி, மழலைச்சொல்.

உல்லாமன் - நோயுற்றொழிந்தோன்.

உல்லி - ஒல்லி, மெல்லிய ஆள், மெல்லியது, வெங்காயப்பூ.

உல்லியர் - கூவநூலோர்.

உல்லேகம் - உச்சரிப்பு, எழுதல், ஓரலங்காரம்.

உல்லோசம் - மேற்கட்டி.

உல்லோலம் - பெருங்கடற்றிரை.

உவகுலம் - திப்பிலி, திரிபாலை.

உவகை - களிப்பு, பிரியம், மாயயாக்கை, பதினெண்குற்றத்தொன்று.

உவக்காண் - அப்பொழுது, அவ்விடம்.

உவச்சர் - ஓச்சர், சோனகர்.

உவட்சி - அசைவு, துவளுகை.

உவட்டல் - அருவருத்தல், எதிரெடுத்தல், பெருகல், வெறுத்தல்.

உவட்டு-அருவருப்பு, குமட்டுகை, புரட்சி, பெருக்கு.

உவட்டுரை - இகழ்ச்சிச்சொல்.

உவணசேதனன் } விஷ்ணு.
உவணமுயர்த்தோன் }

உவணம் - உயர்ச்சி, கருடன், கழுகு, பருந்து.

உவணன் - கருடன்.

உவணி - வாள்.

உவணை-உவ்விடம்,தேவலோகம்.

உவண் - உவ்விடம்.

உவதி - தருணி.

உவதை - மலையின் வீழருவி.

உவத்தல் - மகிழ்தல், விரும்பல்.

உவப்பு - உயரம், சந்தோஷம், பிரியம், பொலிவு, மகிழ்வு, விளையாட்டு.

உவமஉருபு } ஒப்புருபு, வினை,
உவமையுருபு } பயன், மெய், உருவு என்பவற்றைப்பற்றி வருகிற உவமை உருபுகள்.

உவமத்துருபு - போல முதலிய உவமை உருபுகள்.

உவமத்தொகை - உவமையுருபுகள் மறைந்து நிற்பவை.

உவமப்பொருவு - ஒன்றிரென்று சமமாக உணர்த்துவது.

உவமாதீவகம் - உவமைவிளக்கணி, ஓரலங்காரம்.

உவமானிலம் - சுவர்.

உவமானசக்கிரகம் - உவமையைப்பற்றி விவரிக்கும் ஓர் நூல்.

உவமானப்பிரமாணம் - அளவையெட்டினொன்று.

உவமானம் - உவமிக்கும்பொருள், சமானம்.

உவமேயம் - உவமிக்கப்படு பொருள்.

உவமை - உவமம், ஓரலங்காரம்.

உவமைத்தொகை - உவமையுருபு தொக்கசொல்.

உவமையசத்திணை - இருபொருட்குமொன்றனை யொப்புமை காட்டி யுரைத்தல்.

உவமையாகுபெயர் - உவமையினால் வருகிற ஆகுபெயர், உவமானத்தின் பெயரையுவமேயத்திற்கு வழங்குவது.

உவராகம் - கிரகணகாலம்.

உவரி - கடல், சிறுநீர், மகளிர் விளையாட்டு.

உவர் - உப்பு, உவரென்னேவல், உவர்ப்பு, கடல், கடுகெடுப்பு, வெறுப்பு.

உவர்க்களம் - உப்பளம், சவர் நிலம்.

உவர்க்காரம் - சவர்க்காரம்.

உவர்ச்சங்கம் - முட்சங்கு.

உவர்த்தரை - உப்பளம், உப்பு விளைநிலம்.

உவர்த்தல் - அரோசித்தல், ஓர்சுவை, துவர்ப்பு, வெறுத்தல்.

உவர்ப்பு - உப்புக்கரிப்பு, நிந்தை, வெறுப்பு.

உவர்மண் - உழுமண், சவர்மண்.

உவலை - தழை, பொய்.

உவளகம் - அந்தப்புரம், இடைச்சேரி, இரண்டு, உப்பளம், ஓர்பக்கம், குளம், பள்ளம், மதில்.

உவளம்பே - சாறு, யானைக்கயனம்.

உவளல் - துவளல்.

உவளித்தல் - சுத்தஞ்செய்தல், ஆயதாக்கல்.

உவணயம் - துவைத்துக்கட்டும் மருந்து, உவனி, வாள்.

உவன் - ஓர் சுட்டுச்சொல்.

உவா - அமாவாசை, இளமை, இளையோன், கடல், தம்பி, நிறைவு, பூரணை, யானை, வாலிபன்.

உவாமதி - பூரணசந்திரன்.

உவாய் - ஓர்மரம்.

உவாலம்பம் } தூஷணை,
உவாலம்பனம் } நிந்தனை.

உவை } ஓர் சுட்டுச்சொல்.
உவ் }

உவ்வி - தலை, தலைவி.

உவ்வு - தவம்.

உவ்வுரு - உகரம் பெருவாம்.

உவ்வுறும் - உகரச்சாரியை பொருந்தும்.

உழக்கல் - கலக்கல், சிலம்பம் பழகல், மிதித்தல்.

உழக்கால் - உழவுகோல்.

உழக்கு - உழக்கென்னேவல், ஓரளவு, ஓரளக்குங்கருவி.

உழச்சியர் - உழத்தியர், மருதநிலப் பெண்கள்.

உழத்தல் - துன்பப்படுத்தல், பழகல், புரளல், வருந்தல்.

உழத்தி - மருதநிலப்பெண்.

உழத்தியர் - மருதநிலப்பெண்கள்.

உழப்பல் - கலக்கல்.

உழப்பித்தல் - துன்பப்படுத்தல்.

உழப்பு - ஊக்கம், எழுத்திற்குரிய மூவகை ஒலி, கைத்தொழில், முயற்சி, பழக்கம்.

உழம்பல் - ஒலித்தல், கலங்கல், குழம்பல், பிதற்றல்.

உழலல் - அசைதல், ஆடல், சுழலல், தளம்புதல், மனஞ்சுழலல், வருந்தல்.

உழல் - உழலென்னேவல், உழுதல்.

உழவர் } சூத்திரர், படைவீரர்,
உழவோர் } பூவைசியர், வேளாளர், மருதநிலமக்கள்.

உழவாரப்படை - உழைவாரம்.

உழவு - உழுதல், பயிர்த்தொழில்.

உழற்சி - ஆட்டம், சுழற்சி, திரிதல், வருத்தம்.

உழி - அளவு, இடம், எழனுருபு பக்கம்.

உழிஞை - சிறுபூளை, பகைவரரண்பிடிப்பார்க்குமாலை.

உழிதரல் - சுழலல், திரிதல்.

உழுகை - உழுதல், உழல்.

உழுதல்-உழல், நிலத்தைக் கிளைத்தல்.

உழுநர் - உழவர்.

உழுந்து - ஓர் பயறு.

உழுபடை - கலப்பை.

உழுவம் - எறும்பு.

உழுவல் - குணம், முறைமை, விடாது தொடர்ந்தவன்பு.

உழுவை - ஓர் மீன், புலி.

உழை - இடம், உழையென்னே வல், எழனுருபு, சிரத்தாற் பிறக்குமிசை, பக்கம், பசு, யாழிஞேர்நரம்பு, மான், வைகறை.

உழைத்தல் - சொல்லாலெழு மொலி, துன்புறல்.

உழைப்பு - சுறுசுறுப்பு, சேகரிப்பு, பிரயாசம், முயற்சி, வருந்தி யீட்டுகை.

உழையர் - ஏவல் செய்வோர். மந்திரிகள்.

உழைவாரம் - ஓராயுதம், புற்செதுக்கி.

உளகு - யாழிஞேறுருப்பு.

உளத்தியலிடை - வியப்புச்சொல்.

உளப்பாடு - உட்படல்.

உளப்பாட்டுவினை - பிறவிடத்தாரைத் தன்ஞேடுட் படுத்தும் வினை.

உளம் - உள்ளம், கருத்து, பொருள், மனம்.

உளர்தல் - சிந்தல், தடவல்.

உளவு - அசுகை, உட்காரியம், ஒற்றன், ஒற்று, வேவு.

உளறுதல் - அசைதல். இறகு, உதறுதல், இறகுகோதல், ஈடாடுதல், குரலையிடல், குளிருதல், தமொறிப் பேசல், பிதற்றல், பேரொலி.

உளி - இடம், எழுனுருபு, ஓர் கருவி, செதுக்குங்கருவி.

உளியம் - கரடி.

உளை - ஆண்மயிர், உளையென் னேவல், ஒலி, குதிரைக் கழுத்திலணியுமயிர், சேறு, புறமயிர், பேசலாவெழு மொலி.

உளைதல் - உவாதிப்படல், நொதி த்தல், பிரசவவேதனைப் படல், மனம்நோதல்.

உளைத்தல் - அலைத்தல், ஒலித் தல், வருத்தல்.

உள் - இடம், உட்புறம், எழு னுருபு, நினையென்னேவல், மனம், வினைப்பகுதி.

உள்கல் - நினைத்தல்.

உள்வழிகடந்தோன் - கடவுள்.

உள்வளி - உள்ளே நின்ற உதா னன் என்னுங் காற்று.

உள்வினை - உட்பகை, ஊழ்வினை.

உள்ளங்கை - அகங்கை.

உள்ளத்துறைவோன் - கடவுள்.

உள்ளமிகுதி - ஊக்கம்.

உள்ளம் - அந்தக்கரணம், உள் ளே இருப்பது, கருத்து, மனம், முயற்சி.

உள்ளல் - உள்ளான் குருவி, நினைத்தல்.

உள்ளார் - பகைவர்.

உள்ளாசனம் - கூத்தின் விகற்பம்.

உள்ளான் - ஓர் குருவி.

உள்ளி - வெங்காயம், வெள்ளைப் பூண்டு.

உள்ளுடைதல் - ஊக்கமழிதல், மனமுறிதல்.

உள்ளுதல் - நினைத்தல்.

உள்ளுயிர் - கடவுள்.

உள்ளுயிர்க்குன்று - நத்தை.

உள்ளுறை - உட்கருத்து, பாடும்படி புலவர்க்குக் கொடுக்குஞ் சமிசை, மறைபொருள்.

உள்ளுறையுவமம் - தோன்றாதுவமிப்பது.

உறக்கம் - ஒடுக்கம், நித்திரை, துயில், தூக்கம், மரணம், யாக்கைக் குற்றம் பதினெட்டினொன்று.

உறக்குதல் - துயிற்றல்.

உறங்கல் - துயிலல், நித்திரை செய்தல்.

உறந்தை - ஓர் ஊர்.

உறத்தல் - பிதுக்கல்.

உறல் கிட்டல், கிடைத்தல், சேர்தல், பொருந்தல், வருதல்.

உறவர், உறவோர் - சுற்றத்தார்.

உறவி - உயிர், உலைக்களம், ஊற்று, எறும்பு, உறவு,

ஓர் புழு, கிணறு, மலை முருங்கை.

உறவு - உற்றசமயம், எறும்பு, ஐக்கியம், ஒற்றுமை, சம்பந்தம், சுற்றம், நட்பு, பொருத்தம்.

உறழ - ஒருவமையுருபு.

உறழல் - பெருக்கல்.

உறழ் - இடையீடு, ஒப்பு, காலம், பெருக்கம்.

உறழ்ச்சி - விகற்பம்.

உறழ்தல் - இகலல், இடையிடல், உவமித்தல், எதிராதல், ஒத்தல், பகைத்தல், போறுதல், பெருக்கல், பொருந்தல், விகற்பித்தல்.

உறழ்தரல் - பெருக்கல்.

உறழ்பெருவு - உயர்வு தாழ்வுகளை உணர்த்துவது.

உறழ்வு - இடையீடு, உணர்வு, உவமை, எண்ணின் பெருக்கம், எதிர், சமம், ஒப்பு, பகை, போர், விகற்பம்.

உறி - உறி, உறியென்னேவல், ஆக்கு.

உறிதல் - உறிஞ்சல்.

உறியடி - ஒரு திருவிழா.

உறு - உறுவென்னேவல், உண்டாகுதல், மிகுதி, மிகுந்த.

உறுகணாளர் - தரித்திரர்.

உறுகண் - அச்சம், தரித்திரம், துன்பம், நோய், பயம், வறுமை.

உறுக்கல் - அதட்டல், கடத்தல், கோபம், சினத்தல், சுகித்தல், நடத்தல்.

உறுசூது - மிகுவஞ்சனை.

உறுதல் - அடைதல், உண்டாதல், கிடைத்தல், கூடல், சம்பவித்தல், சேர்தல், பொருந்தல், வருந்தல்.

உறுதி - அங்கம, அறிவு, ஆட்சிப் பத்திரம், உண்மை, கல்வி, நிச்சயம், நன்மை, தளராமை, நிடன், திறம், பிடிவாதம், முறிச்சீட்டு, வலி.

உறுதிச்சுற்றம் - உற்றதுணைவர்.

உறுதிப்பொருள் - கடவுள், ஞானம், நிச்சயார்த்தம்.

உறுதியர் - தூதர், மந்திரிகள்.

உறுத்தல் - உறுவித்தல், ஏற்படுத்தல், ஒற்றுதல், சேர்த்தல், தாக்கல், நாட்டல், நினைப்பித்தல், பயத்தல், வருவித்தல்.

உறுத்தை - அணில்.

உறுபு - செறிவு, பாலையாழ்த்திறம், மிகுதி, வினையெச்சம்.

உறுப்படக்கி - ஆமை.

உறுப்பில் பிண்டம் - கரு.

உறுப்பு - அங்கம், அடையாளம், அவயவம். உடல், உறுதி,

சினைப்பெயர், மரக்கொம்பு, மிகுதி, துறவல், நெருக்கம்.

உறுப்புக்குறைவிசேடம் - வேண்டுமுறுப்புக் குறைவைச் செயலினருமை தோன்றக் கூறுவது.

உறுப்புமயக்கம் - உறுப்புக்குறையெட்டினொன்று.

உறுமல் - இரைதல், உறுமுதல், எழும்பல், குமுறல், சினத்தல்.

உறுமி - ஓர் பறை, தண்ணுமை.

உறுவர் - முனிவர்.

உறுவல் - துன்பம்.

உறுவன் - அருகன், முனிவன்.

உறுவித்தல் - வருவித்தல்.

உறுவை - ஔவை முதலிய பெண்பாலுள்வருளொருத்தி.

உறை - ஆடையழுக்ககற்றுநீர், இடம், இரை, உயர்ச்சி, உறையென்னேவல், ஓரிலக்கக் குறிப்பு, காரம், கிணற்றுறை, கௌசனை, நீளம், படைக்கூடு, பண்டம்பெய்யுறை, பாம்பின் விஷப்பை, பாலிடுபிரை, மருந்து, மழை, மழைத்துளி, வாழ்நாள், விலங்குணவு, வெண்கலம்.

உறைதல் - இருத்தல், சஞ்சரித்தல், செறிதல், தோய்தல், நடத்தல், பால் முதலியன விறுகுதல், வசித்தல்.

உறைத்தல் - அழுந்தல், எரிதல், கார்த்தல், தாக்கல்.

உறைத்துளி - மழைத்துளி.

உறைபதி - இருப்பிடம், தங்குமிடம்.

உறைப்பு - உக்கிரம், எரிவு, காரம், கூர்மை, கொடுமை, தாக்குகை, பதிவு, பலப்பு.

உறையுள் - ஆயுள், உறைகாலம், தங்குமிடம், ஊர்ப்பொது, நாடு, மக்கட்படுக்கை, மருதநிலத்தூர், வீடு.

உறையூர் - சோழனூர், மருதநிலத்தூர்.

உறைவு - இருப்பு, உறையுந்தன்மை, கிரட்சி.

உற்கடம் - செருக்கு, நன்னாரி, மதயானை.

உற்கடிதம் - பஞ்சதாளத்தொன்று.

உற்கம் - வேள்வித்தீ, கடைக்கொள்ளி, தீத்திரள்.

உற்கரித்தல் - சினத்தார்த்தல், வாந்தித்தல்.

உற்காரசூலை - ஓர்நோய்.

உற்காரம் - அதிர்ச்சி, இரைதல், உக்காரம், தானியந்தூற்றல், வாந்திசெய்தல்.

உற்குரோசம் - அமலை, நீர்வாழ்பறவை.

உற்கை - கடைக்கொள்ளி, சுவாலை, தீ, விண்மீன், விண்வீழ் கொள்ளி.

உற்சர்க்கம் - அத்திவாரம், கைவிடல்.

உற்சர்க்கத்தலம் - மூலாதாரம்.

உற்சவம் - ஆசைப்பெருக்கம், உயர்ச்சி, களிப்பு, கோபம், திருவிழா, விவாகம்.

உற்சாகம் - உறக்கம், ஊக்கம், நூல், மனம்பூரித்தல், மனோசுகம், முயற்சி.

உற்சாதனம் - அழித்தல், உயிர் திரட்டித்தல், போதல், வாசனையூட்டல்.

உற்பத்தி - கருவினுருவாதல், தோற்றம், பிறப்பு.

உற்பலசாரன் - பெருங்காயம்.

உற்பலம் - கருநெய்தல், குவளை, செங்குவளை.

உற்பவமாலை - ஓர் பிரபந்தம்.

உற்பவம் - கருதரித்தல், பிறப்பு.

உற்பனம் } தோற்றம்,
உற்பன்னம் } பிறப்பு.

உற்பாதம் - கொடுமை, துன்னிமித்தம், நுண்ணறிவு, பூகம்ப முதலியன, விண்வீழ்கொள்ளி.

உற்பிரேட்சை - ஓரலங்காரம்.

உற்பின்னம் - பிளவுபடுதல்.

உற்பீசம் - நிலத்தில் பிறப்பன.

உற்றதுரைத்தல் - ஓர் இறை, உண்டானதைச்சொல்லுதல்.

உற்றபண்புணரப்போர் - தூதர்.

உற்றறிதல் - ஆராயந்தறிதல், உணர்தல், பரிசித்தறிதல்.

உற்றூர் - உறவோர், சிநேகர்.

உற்றிடம்-அடைக்கலம், ஆபத்து, உற்றசமயம்.

உற்றுழி - ஆபத்துக்காலம்.

உன்மத்தம் - ஊமத்தை, பைத்தியம், மயக்கம், மன்மதாவஸ்தையினொன்று, வெறி.

உன்மத்தர் - பித்தர், மயக்கமுடையோர், வெறியர்.

உன்மத்தகி - குறிஞ்சா.

உன்மனே - பிராசாதவியல்பினொன்று.

உன்மாதம் - மயக்கம், வெறி.

உன்முகம் - ஒன்றிற்கருத்தாயிருக்கை, மேனோக்கியமுகம்.

உன்மை - தசைபிடுங்குங்குறடு.

உன்னதம் - உயர்ச்சி, மேன்மை.

உன்னம் - அன்னப்புள், ஈரம், தசைக்கிழிக்கும் குறடு, நினைவு, நீர்வாழ் பறவைப் பொது, மனம்.

உன்னயம் } உயர்த்துகை.
உன்னுயம் }

உன்னயனம் - அருத்தாபத்தி, ஆலோசித்தல், தியானம்.

உன்னலர் - பகைவர்.

உன்னல் - நினைத்தல்.

உன்னி - அழிஞ்சில், குதிரை.

உன்னிப்பு - உயர்வு, ஊகிப்பு, கவனிப்பு, குறிப்பு, பலம், முயற்சி.

உன்னியர் - பந்துக்கள்.

உன்னுதல் - இழுத்தல், உந்தல், கிளர்தல், நினைத்தல், பாய்தல், விரைந்தெழும்பல்.

ஊ

ஊ - உணவு, ஊன், ஓரெழுத்து, ஓரொலிக்குறிப்பு, மாமிசம், வினையெச்சவிகுதி.

ஊகடன் - முருங்கை.

ஊகம் - ஊமத்தை, கருத்து, குரங்கு, தியானம், நினைவு, படைவகுப்பு, புலி.

ஊகனம் - நியாயம் சொல்லுகை, அநுமித்தல்.

ஊகனி - துடைப்பம்.

ஊகித்தல் - உத்தேசித்தல், நியாயம் சொல்லல், நினைத்தல், மட்டுக்கட்டுதல், யோசித்தல்.

ஊகை - யூகை.

ஊக்கம் - உண்மை, உயர்ச்சி, உள்ளமிகுதி, உற்சாகம், மனவுறுதி, முயற்சி, வலி.

ஊக்கல் - எழுப்பல், எறுதல், தளர்த்தல், முயன்று செய்தல்.

ஊக்கு - ஊக்கம், முயற்சி.

ஊக்குதல் - எறுதல், முயலுதல்.

ஊங்கு - உயர்ச்சி, உவ்விடம், மிகுதி.

ஊங்குதல் - முன்னிலையிடம், மிகுதல்.

ஊசரம் - பூவழலை.

ஊசலாடல் - அடிக்கடி போக்குவரத்தாயிருத்தல்.

ஊசல் - அசைதல், ஊஞ்சல், ஊழல், ஓர் பிரபந்தம், பதனழிதல்.

ஊசா - மூக்குத்திக்கொடி.

ஊசி - இழைவாங்கி, எழுத்தாணி, கடிகாரத்தினூசி, நிறைகோலினடுமுள்.

ஊசிக்காந்தம் - இரும்பிழுக்கும் காந்தக்கல் சலாகை, சம்புகம்.

ஊசிப்பாலை - ஓர்பாலை.

ஊசிமிடறு - சிறுதொண்டை.

ஊஞ்சல் - ஊசல்.

ஊஷம் - உவர்மண், வைகறை.

ஊஷணம் - சுக்கு, மிளகு, மிளகுக்கொடி.

ஊடரக்கல் - சுக்கான்கல்.

ஊடரத்திராவணம் - வெடியுப்பு.

ஊடரம் - பூவழலை.

ஊடலொழித்தல் - ஊடனீக்கல்.

ஊடல் - கலவியிற் பிணங்கல், பிரிவு, விரோதித்தல், வெறுப்பு.

ஊடான் - ஓர் மீன்.

ஊடு - உள், ஊடென்னேவல், ஏழனுருபு, தார் நூல், நடு.

ஊடை - நூற்றூர், புடவையின் குறுக்குநூல், மனைவி.

ஊட்டம் - உண்டி.

ஊட்டல் - இன்ப துன்பங்களை யருத்தல், உண்பித்தல், விலங்கின்கன் றுண்ணல், உணவு கொடுத்தல், விருந்திடல்.

ஊட்டி - உணவு, பறவையுணவு, மழை, மிடறு.

ஊட்டிரம் - தேட்கொடுக்கி.

ஊணம் - ஓர் தேயம்.

ஊணர் - ஊணதேயத்துள் ளோர், பேருண்டி யுண்போர்.

ஊண் - இரை, உணவு.

ஊதல் - ஆரவாரம், காற்று, துளைக்கருவி யிசைத்தல், துருத்திமுதலியவூதல், வண்டு முதலிய வூதல், வீங்கல்,

ஊதாரித்தனம் - அழிப்பு, வீண் செலவு.

ஊதிகை - முல்லைக்கொடி.

ஊதியம் - இலாபம், கல்வி,பயன்.

ஊதுவாரம் - வெள்ளி.

ஊதை - காற்று, குளிர்காற்று, வாதம்.

ஊத்தை - அழுக்கு, ஊண், சுரோணித நீர், புலால்.

ஊர்து - கச்சோலம்.

ஊமத்தம்
ஊமத்தை } பூமத்தை.

ஊமன் - ஊமை, கூகை.

ஊமை - ஊமன், மூகை.

ஊமையெழுத்து - மெய்யெழுத்து.

ஊம் - மௌனம்.

ஊய்தல் - பதனழிதல்.

ஊரண்டிஞர் - கள்ளி.

ஊரல் - ஈரம், உரிஞ்சல், ஊருதல், கிளிஞ்சில், குருவையென்னும் பறவை, பசுமை.

ஊரன் - மருதநிலத்தலைவன்.

ஊராண்மை - மிக்கசெயல்.

ஊரி - இளமை, சங்கு, மேகம்.

ஊரின்னிசை - ஓர் பிரபந்தம்.

ஊரு - அச்சம், அட்டை, தொடை.

ஊருகால் - சங்கு.

ஊருசன் - வைசியன்.

ஊருடை - முருங்கை.

ஊருணி - ஊரடுத்த குளம், (ஊரார்க்குப் பொதுவான ஊற்று).

ஊருதல் - ஏறுதல், நகருதல்.

ஊர் - ஊரென்னேவல், ஊர், ஊரால் வருபெயர், பரிவேடம்.

ஊர்கிழான் - மருதநிலத்தலைவன்.

ஊர்கோள் - சூரியனைச் சூழ்ந் தோன்றும் வட்டம்.

ஊர்க்குருவி - அடைக்கலக் குருவி.

ஊர்ச்சம் - கார்த்திகை மாதம்.

ஊர்ச்சிதம் - உறுதி, தத்துவம், திரம், நிலைப்படுதல், பலம்.

ஊர்ணம் - ஆடு முதலியவற்றின் மயிர், நூலிழை, புருவநடுவி லுள்ள சுழி.

ஊர்ணுயு - ஆடு, சிலந்திப்பூச்சி.

ஊர்தல் - ஊருதல், ஏறுதல், செலுத்தல், தவழ்தல், தினவுறல், பரத்தல்.

ஊர்தி - எருது, குதிரை, சிவிகை, தேர், யானை, பண்டி முதலிய வாகனங்கள்.

ஊர்த்தமுகம் } உயர்த்திருப்பது, நிமிர்ந்திருப்பது.
ஊர்த்துவமுகம் }

ஊர்த்துவகதி - மேற்கதி.

ஊர்த்துவகாமி - மேனோக்கிய பார்வை.

ஊர்த்துவகாயம் - சரீரத்தின் மேற்பாகம், மானிடதேகம்.

ஊர்த்துவபுண்டரம் - மேனோக்க விடுந்திருமண்.

ஊர்த்துவராசி - மேனோக்கிய விராசி.

ஊர்நேரிசை - ஓர் பிரபந்தம்.

ஊர்ப்புலம் - ஆமணக்கு.

ஊர்மி - அலை, வருத்தம், வஸ்திரமடிப்பு, வயிறு முதலிய விடங்களிலுள்ள மூன்று மடிப்பு, விரஹ மாற்றாமை, விரைவு.

ஊர்மிமாலி - கடல்.

ஊர்வெண்பா - ஓர் பிரபந்தம்.

ஊலுகம் - ஆந்தை, கோட்டான்.

ஊழல் - ஆகாதது, ஊத்தை, கெட்டது, நரகம், நாற்றம், பழுதானது.

ஊழி - உறைகாலம், பூமி, யுக முடிவு, விதி.

ஊழிக்கால் - உகாந்தவாயு.

ஊழைக்குருத்து - துளசி.

ஊழித்தீ - வடவாநலம்.

ஊழ் - உலகமுடிவு, ஊழ்த்தலைச் செய்யென்னேவல், குணம், பகை, பழவினை, பழமை, முடிவு, முறை, வெயில்.

ஊழ்த்தல் - உதிர்தல், ஊன், சமயம், செவ்வி, நினைத்தல், பதனழிவு, புலால், மடித்தல், மலர்தல்.

ஊழ்த்துணை - மனைவி.

ஊழ்வினை - விதி, தெய்வம், பழவினை.

ஊழ்முறை - விதிமுறை.

ஊளான் - ஆணரி, நரி.

ஊளா } நெடுவாய்மீன்.
ஊளி }

ஊளை - ஊத்தை, சளி, நாய், நரி, முதலிய வோலிடுஞ்சத்தம்.

ஊளைகொள்ளுதல் - ஓலிடல், குரவையிடுதல்.

ஊறல் - ஊறுதல், ஊற்று, களிம்பு, காய்ந்தபச்சை, சருமநோய், தினவு, பஞ்சலோகக் கலப்பு.

ஊறு - இடையூறு, ஊறெனேவல், காயம், கொலை, தழும்பு, தீண்டல், தீமை, பரிசம்.

ஊறுகோள் - காயம், கொலை.

ஊறுநீர் - ஊற்றுநீர்.

ஊறுபாடு - இடையூறு, இரணம், காயம், சேதம், தீமை.

ஊற்றம் - அசைவின்றி நிற்றல், அறிவுடைமை, ஆற்றல், பற்றுக்கோடு, புகழ், மிகுதி, முயற்சி, வலி.

ஊற்றல் - நீர்முதலியவூரிவருதல், பெய்தல்.

ஊற்றால் - உரோகணிநாள், கரப்பு, மீன்கூடு.

ஊற்று - ஈரம், ஊற்றென்னேவல், ஊன்றுகோல், நீரூற்று.

ஊற்றுக்கோல் - ஊன்றுகோல்.

ஊனம்-ஈனம், குறைபாடு, கேடு, சாரம், தீமை, மாசமிசநீர்.

ஊனன் - குறையுள்ளோன்.

ஊனி - அமுக்கிருகிழங்கு.

ஊன் - உடல், கொழுப்பு, தசை, மாமிசம்.

ஊன்றல்-இருகப்பிடித்தல், ஊன்றிநிற்றல், தள்ளல், சார்தல், நடுதல், நிறுத்தல், நிலைத்தல், பதித்தல், மெய்பரிசமெட்டினொன்று.

ஊன்றி - ஓர்பாம்பு.

ஊன்றுகோல் - பற்றுக்கோல்.

ஊன்றுதல் - அமர்தல், தாபரங்கொடுத்தல், நிலைப்படுத்தல், பதித்தல், பலப்பித்தல், வேர்வைத்தல்.

எ

எ - ஓரெழுத்து, வினாவெழுத்து, எழெனெண்ணின்குறி.

எஎ - இகழ்ச்சிக்குறிப்பு.

எஃகம் - அவிழ்தல், எட்டுதல், எதிர்தாக்கல், எறிபடை, கைவேல், சக்கரம்.

எஃகல் - ஏறல், தாழ்ந்தெழும்பல், நீளல், நெகிழல், நொய்தாக்கல், பஞ்சு முதலிய வெஃகுதல், மேலே வாங்சல்.

எஃகு - ஆயுதப்பொது, உருக்கு, எஃகென்னேவல், கூர்மை, மதிநுட்பம், மனவொடுக்கம், வேல்.

எஃகுகோல் - பஞ்சுகொட்டும் வில்.

எகரம் - ஓரெழுத்து.

எகரவினு - எ என்னும் வினுச்சொல்.

எகினம் } எகின் } அழிஞ்சில், அன்னம், கவரிமா, செம்மரம், நாய், நீர்நாய், புளி, புளிமா, புளியமரம்.

எகுன்று - குன்றிகொடி.

எக்கச்செக்கம் - இடக்கு, ஒவ்வாமை, குழப்பம், தாறுமாறு.

எக்கர் - இடக்கர், சொரிதல், மறைத்தசொல்.

எக்கண்டம் - ஒருமிக்க, முழுதும்.

எக்கரவம் } எக்காரணம் } தொனுப்போடுதல், முக்காரம்.

எக்கல் - எட்டல், ஏறுதல், குவிதல், சொரிதல், பதிவு, பொருதல், வற்றல்.

எக்கழுத்தம் - இறுமாப்பு.

எக்களித்தல் - மிகுமகிழ்ச்சி.

எக்காளம் - ஒருதுகுழல், காக
ளம்.

எக்கியம் - யாகம்.

எக்ஞோபவீதம் - பூணூல்.

எங்கண் - எவ்விடம்.

எங்கு - எவ்விடம், எங்கே.

எங்கும் - எல்லாவிடத்தும்.

எங்ஙனம் } எவ்விடம்,
எங்ஙன் } எவ்விதம்.

எசம் - நரம்பு.

எச்சச்சொல் - பெயர், வினை, உம்
மை, சொல், பிரிநிலை, என,
ஒழியிசை, எதிர்மறை, இசை
குறிப்பு முதலிய குறைந்து நிற்
குஞ்சொல்.

எச்சமிடம் - பறவை, மலம் கழித்
தல்.

எச்சம் - ஈரெச்சம்.அது - சொல்
லெச்சம், குறிப்பெச்சம் என
இருவகை, உண்மை, எச்சில்
குறைபாடு, சொல்லொழிபு
சேஷம், மகள், மகன், யாகம்

எச்சரிக்கை - அமைதியாயிருக்க
சொல்லுகை, ஓர் பிரபந்தம்
கண்டிப்பு, கருத்து, கவனம்.

எச்சரித்தல் - கடிந்து கொள்ளல்
புத்திசொல்லல், முன்னறிவி
தல், விழிக்கப்பண்ணுதல்.

எச்சவனுமானம் - நால்வகையனு
மானத்தொன்று.

எச்சு - உயர்வு, ஓர் வாச்சியக் கருவி.

எஞ்சணி - எஞ்சிநிற்கும்சொல்.

எஞ்சல் - எறைதல், ஒழிதல், சுருங்கல், தொக்குநிற்றல்.

எஞ்சாமை - குறையாமை.

எஞ்சிய - மற்றவைகள்.

எஞ்சியசொல்லினெய்தக்கூறல் - முப்பத்திரெண்டுத்தியொன்று.

எஞ்சு - எச்சம்.

எஞ்ஞான்றும் - எப்போழ்தும்.

எடுத்தல் - அங்கீகரித்தல், இடங்குறித்தல், உடைத்தாதல், எடுக்குதல், உயர்த்திக்கூறல், ஓரோசை, சுமத்தல், தரித்தல், தாங்குதல், தூங்குதல், தெரிந்துகொள்ளல், தொடக்குதல், நிறுத்தல், நீக்குதல், பற்றிக்கொள்ளல், பொருந்தல், வாங்குதல், வீடு முதலியகட்டல்.

எடுத்தல்ளவையாகுபெயர் - தூக்கிநிறுக் குங்கருவிக்கு வழங்குபெயர்.

எடுத்தலும்மைத்தொகை - நிறையளவும்மைத் தொக்குநிற்பது.

எடுத்துக்காட்டல் - தான்சொல்லப்படும் இலக்கணம் அமைந்தசொற்களை எடுத்துக்காட்டுதல்.

எடுத்துக்காட்டுரை - உதாரணம்.

எடுத்துக்காட்டுவமை - ஓரலங் காரம். அஃது - பிம்பப்பிரதி பிம்பாவத்தைக் காட்டுவது.

எடுபடுதல் - அழிந்துபோதல், எழும்புதல், திக்கற்றுப்போ தல், நியமந்தப்புதல், நீக்கப் படுதல், வெளி வருதல்.

எடுபாடு - அழிகை, உயர்ச்சி, நிமிர்ச்சி, நிலையின்மை, மகி மை, மேட்டிமை, விசாலமான நடை.

எடுப்பல் - எடுத்தல், ஆங்கினே ரை எழுப்பல்.

எடுப்பு - இறுமாப்பு, உயரம், எடுத்தல், தூக்குகை.

எட்சிணி - ஓர் பெண் பிசாசு.

எடை - எடுத்தல், எழுப்பல், எற் றுக்கொள்கை, தூக்குகை, நிறையிடை.

எட்ட - தூரமாக

எட்டர் - மங்கலபாடகர்.

எட்டல் - தாவுதல், வியங்கோண் முற்று.

எட்டனுருபு - எட்டாம் வேற்று மையினுடைய உருபுகள்.

எட்டி - ஓர்சாதி, காஞ்சிரமரம், வைசியர் பொது.

எட்டினர் - சிநேகிதர்.

எட்டு - அட்டம், ஆசை, எட் டென்னேவல், ஓரெண்.

எட்டுக்கோள் - பொருள்கோள் எட்டு அவை-ஆற்றுநீர்,மொழி

மாற்று, நிரைநிறை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு, அடிமறிமாற்று என்பனவாம்.

எட்டுருபு - பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி என்பனவாம்.

எண் - இலக்கம், இலேசு, எண்ணிக்கை, எண்ணென்னுமேவல், எளிமை, எள், கணக்கு, சோதிடநூல், மதிப்பு, வரையறை, விசாரம்.

எண்கணன் - பிரமன்.

எண்காற்புள் - சரபம்.

எண்கு - கரடி.

எண்குணம் - கடவுளெண்குணம்.

எண்குணன் - அருகன், கடவுள், சிவன்.

எண்சிறப்புள்ளோன் - அருகன்.

எண்சுவை - சிருங்காரம் முதலிய வெண்சுவை.

எண்டோளன் - சிவன்.

எண்டோளி - காளி. துர்க்கை.

எண்ணம் - ஆலோசனை, இறுமாப்பு, கருத்து, கனம், கிலேசம், குறிப்பு, நம்பிக்கை, நினைவு, நோக்கம், மதிப்பு, விசாரம்.

எண்ணர் - மந்திரிகள், கணிதர்.

எண்ணலர் - பகைவர், பிறரை மதியாதோர்.

எண்ணலளவை - இலக்கணத்தா லெண்ணு மளவு.

எண்ணலளவையாகுபெயர் - அளவையாகு பெயர் நான்கி லொன்று.

எண்ணலும்மைத்தொகை - எண்ணலும்மை தொக்கு நிற்பது.

எண்ணல் - ஆலோசித்தல், இறுமாத்தல், உத்தேசித்தல், எண்ணுதல், கணிதம், கவலைப்படல், குறித்தல், நினைத்தல், தேர்ச்சி, மதித்தல், யோசித்தல்.

எண்ணுர் - பகைவர்.

எண்ணில் கண்ணுடையோன் - கடவுள், புத்தன்.

எண்ணும்மை - எண்ணுக்கு நிற்கு மும்மெனு மிடைச்சொல்.

எண்ணும்மைத்தொகை - எண்ணலும்மைத்தொகை.

எண்ணுவமம் - ஒருவமானம்.

எண்ணேகாரம் - எண்ணைக் காட்டுமேகாரம்.

எண்பொருள் - எண்ணப்பட்ட பொருள்.

எண்மர் - எட்டுப்பெயர்.

எண்மூவெழுத்து - இருபத்து நான்கு எழுத்துக்கள்.

எண்மை - இலேசு, எளிமை, கணிசம், பரிதாபநிலை.

எண்மையன் - இலேசானவன், எளியவன்.

எதார்த்தம் - உண்மை, தகுதி, நிச்சயம்.

எதிரதுபோற்றல் - ஓர் யுக்தி, (முன்பில்லாததாய்ப் பின்பு வழங்கி வருமாயின் அதனைத் தழுவிக் கொள்ளுதல்.

எதிருரை - எதிர்மொழி, வாது.

எதிருன்றல் - எதிரல்.

எதிரெடுத்தல் - தேக்கெடுத்தல், வாங்கித்தல்.

எதிரேற்றல் - எதிரேவல், எதிர்த்தல், தடுத்தல்.

எதிரொலி - பிரதித்தொனி.

எதிர்காலம் - வருங்காலம்.

எதிர் - உத்தரம், எதிரிடை, எதிரென்னேவல், ஒப்பு, பகை, முன்.

எதிர்கோள் - எதிர்கொள்ளல்.

எதிர்தல்- சந்தித்தல், தோன்றல், மலைதல், மாறுபடுதல்.

எதிர்த்தல் - அலைத்தல், எதிர்பார்த்தல், சந்தித்தல், தடுத்தல், நோதல், மாறுபடுதல், முற்படுதல்.

எதிர்த்தவன் - ஓர் பாஷாணம்.

எதிர்நிரைநிறை / எதிர்நிரணிறை } நேரின்றி மாறி வரும் நிரனிறை.

எதிர்நிலையகத்திணை - அகப்பொருளுறுப்பிலொன்று.

எதிர்நிலையணி - உவமானத்திற்குறைவுதோன்றச்சொல்.

எதிர்ந்தோர் - பகைவர்.

எதிர்ப்பு - அலைப்பு, இலக்கு, எதிர்த்தல், எதிர்மொழி, சண்டிவாளம், திருப்பு, வருங்காலம்.

எதிர்ப்பை - கைம்மாறு.

எதிர்மறுத்தல் - எதிர்தடுத்தல்.

எதிர்மறை - உடன்பாட்டிற்கு மாறாகச் சொல்லுதல்.

எதிர்மறையணி - ஓரலங்காரம்.

எதிர்மறையும்மை - எதிர்த்து மறுத்துச்சொல்லுமும்மை.

எதிர்மறையெச்சம் - எதிர்மறுப்பைக்காட்டுமெச்சம்.

எதிர்மறைவிகுதி - எதிரேநின்று அவ்வினையை மறுப்பவைகளின் கடைநிலை.

எதிர்மறைவினை - எதிர்மறுப்புள்ளவினை.

எதிர்வினை - எதிர் மறைவினை, வருவினை.

எதிர்வினைவிலக்கு-ஓரலங்காரம்.

எதிர்வு - எதிர்காலம், எதிர்த்தல், நேர்பாடு, வருங்காலம்.

எது - யாது.

எதுகை - இரண்டாமெழுத் தொன்றி வருவது.

எதுகைத்தொடை - செய்யுட் டொடையிலொர்வகை.

எதோத்தேசபக்ஷம் - காரணத் தைக் கருதிப் பலவுஞ்சென்று முடித்தல்.

எத்தல் - நறுக்குதல்.

எத்தனம் - ஆயத்தம், கருவி, பிரயத்தனம்.

எத் - எவ்வளவு.

எத்து - அழைப்பு, எத்தென்னே வல், எற்று, வஞ்சகம்.

எத்துணை - எவ்வளவு.

எந்திரம் - ஆலை, சூத்திரம், தேர், மதிலுறுப்பு.

எந்தை - தந்தை.

எப்படி - எவ்விதம்.

எப்பொருட்குமிறைவன் - கட வுள்.

எப்பொழுதும் - எக்காலமும்.

எமகணம் } நமன்றூதர், யமக
எமகிங்கரர் } ணம்.
எமதூதர் }

எமதூதன் - நாகப்பாம்பின் நச் சுப்பல்லிலொன்று.

எமநாகம்-அசமதாகம், ஓமத்தை.

எமநாமம் - ஓமத்தை.

எமர்
எமரர் } எம்முடையவர்.

எமன் - எம்முடையவன்.

எம் - எமது. கூட்டாளி, கூட்டு, தன்மைப் படர்க்கையுளப்பாட்டுப் பன்மை விகுதி.

எம்பர் - எவ்விடம்.

எம்பி - என்றம்பி, தம்பி.

எம்பிராட்டி - எங்கள் தலைவி.

எம்பிரான்
எம்பெருமாள் } எம்மிறைவன், ஓர் விஷ்ணுபக்தன்.

எம்புகம் - நிலக்கடம்பு.

எம்மை - எங்களை, எப்பிறப்பும்.

எம்மட்டு - எவ்வளவு.

எம்மனோர் - எம்மோடொத்தவர்

எம்மாத்திரம் - எவ்வளவு.

எம்மான் - எங்கள் தெய்வம், எம்பிரான்.

எயில்-ஊர்ப்பொது,நகரம்,மதில்.

எயிறலைப்பு - பற்கடிப்பு.

எயிறிலி - சூரியன்.

எயிறு - பல், பன்றிக்கொம்பு, யானைக்கொம்பு.

எயிற்றியர் - பாலைநிலப்பெண்கள், வேடுவப் பெண்கள்.

எயினக்குடி
எயின்குடி } எயினர்குடி, வேடர்குடி.

எயினர் - பாலைநிலமக்கள், வேடர்.

எயின் - வேடர்சாதி, வேடருக்குரியன.

எய் - அம்பெய்யென்னேவல், முட்பன்றி.

எய்தல் - அடைதல், அம்பெய்தல், பெறுதல், பொருந்தல், வருதல்.

எய்துபெயர் - ஏற்கும்பெயர்கள்.

எய்த்தல் - அறிதல், இளைத்தல், தரித்திரமடைதல், பெறுதல்.

எய்ப்பாடி - வேடரூர்.

எய்ப்பில்வைப்பு - தான் தளர்ந்தும் பிறரைத்தாங்கல்.

எய்ப்பு - இளைப்பு, பலவீனம்.

எரி - எரியென்னேவல், கந்தம், கேட்டை நாள், தீ, நரகம், செல்விக்காய், பிரகாசம், புனர்ப்பூசம்.

எரிகரும்பு - விறகு.

எரிகாசு - காசுக்கட்டி.

எரிகுஞ்சி - செம்மயிர்.

எரிசனம் - நரகர்.

எரிசினம் - கொடுங்கோபம், வெஞ்சினம்.

எரிச்சல் - அழற்றல், உறைப்பு, எரிதல், கோபம், பெருமை.

எரிசுடர் - அக்கினி, விளக்கு.

எரிதல் - எரியல், வேதல்.

எரிதைலம் - எரித்தெடுக்குந்தைலம்.

எரித்தல் - எரியச்செய்தல்.

எரிநாள் - கார்த்திகைநாள்.

எரிபடுபவன் - பிளவை.

எரிபொழுது - இலங்குபொழுது.

எரிப்பு - எரித்தல், பொருமை.

எரிப்புறம் - நரகம்.

எரிமுகி - சேங்கொட்டைமரம்.

எரியல் - எரிதல், பிரகாசித்தல், வியங்கோண்முற்று.

எரிவனம் - சுடுகாடு.

எரிவு - அழற்சி, எரிதல், கோபம்.

எரு - சாணி, வயலுக்கிடும் எரு.

எருக்கல் - கொல்லல், சுமத்தல், வெட்டல்.

எருக்கு - எருக்கென்னேவல், ஓர் செடி.

எருது - இடபவிராசி, எருது.

எருத்தடி - ஈற்றயலடி.

எருத்தம் - தாவரம், பிடர்.

எருத்து - ஈற்றயல், பிடர்.

எருத்தி - இப்பி, பேராமுட்டி.

எருந்து - உரல், கிளிஞ்சில்.

எருமணம் - செங்குவளை.

எருமுட்டைப்பீநாறி - வெதுப்படக்கி.

எருமை - எருமை, காரா.

எருமைக்கடா - பகடு.

எருமைக்கற்றாழை - ஓர் கற்றாழை.

எருமைக்காஞ்சொறி - ஓர் காஞ்சொறி.

எருமைக்கொத்தான் - ஓர்கொடி.

எருமைத்தக்காளி - ஓர்செடி.

எருமைநாக்கி-ஓர்மீன், சாணாக்கி.

எருமையூர்தி - நமன்.

எருவை - உதிரம், ஓர் பூடு, கழுகு. கழுதை கோரை, கொறுக்கை செம்பு, திரம், நாணல், யானை.

எலி - எலி, கள்ளிமரம், பூரநாள்.

எலிச்செவி - சவரியார் கூந்தல்.

எலித்திசை - வடமேற்கு.

எலித்துருமம் - தான்றி.

எலிப்பாஷாணம் - ஓர் மருந்து, காட்டாமணக்கு.

எலிப்பாலை - ஆமணக்கு.

எலியோட்டி - குருக்கப்பூடு.

எலு - கரடி, தோழமை.

எலுநன் - சோழன்.

எலுமிச்சை - எலுமிச்சை.

எலும்புருக்கி - ஓர்நோய், ஓர்பூடு, ஓர் மரம்.

எலுவன் - தோழன்.

எல் - இகழ்ச்சிக்குறிப்பு, இரவு, ஒளி, சூரியன், பகல், நாள், வெயில்.

எல்லம் - இஞ்சி.

எல்லரி - கைமணி.

எல்லவர் - எல்லாரும்.

எல்லவன் } சூரியன்.
எல்லோன் }

எல்லாம் - முழுவதும், மூன்றிடத்திற்கும் பொதுப்பெயர்.

எல்லாரும் - எல்லீரும், சகலரும்.

எல்லி - இராத்திரி, சூரியன்.

எல்லை - அவதி, அளவு, எல்லைப் பொருள், கூப்பிடுதூரம், சூரியன், நாள் முடிவு, பொருளடக்கம், வரையிலும்.

எல்லையின்மை - அளவின்மை.

எல்லைக்கட்டு - இறைக்கட்டு, எல்லைமானம், கட்டுப்பாடு, வரம்பு.

எல்லைப்படுத்தல் - அளவு படுத்தல், எல்லை கட்டுதல், தீர்த்தல்.

எல்லைப்பொருள் - ஒருபொருளினது திசையளவைக் குறிப்பதற்கு எல்லையாய் நிற்கும் பொருள்.

எல்லைமானம் - அளவு, எல்லை.

எல்லை - காலம், நாள்.

எவட்சாரம் - வெடியுப்பு.

எவண் - எவ்விடம்.

எவன் - என்ன, என்னை, யாவன், ஐயக்கிளவி, யாது, யாவை.

எவையும் - எவ்லாம்.

எவ் - எவை.

எவ்வம் - இகழ்ச்சி, குற்றம், தனிமை, தீராதநோய், தூக்கம், துன்பம்.

எவ்வனம் - இளமை, மதர்த்தல்.

எழல் - எழும்பல், துக்கம்.

எழால் - ஓர் பறவை, யாழ், யாழ்நரம்பிேைசை.

எழிலி - கடையெழு வள்ளலி லொருவன், மேகம்.

எழில் - அழகு, இளமை, வண்ணம், வலி.

எழினி இடைச்சீலை, திரைச்சீலை.

எழு - உருக்கு, உழலைமரம், எழுவென்னேவல், வழு, ஓர் மரம், கம்பம், வளைதடி.

எழுகூற்றிருக்கை - ஓர் பிரபந்தம்.

எழுகை - எழுதல்.

எழுச்சி - இறுமாப்பு, எழும்புதல், எறிச்செல்வல், கண்ணேயினின்று, காதிலெழும்புமோர் புண், மன முயற்சி.

எழுச்சிமுரசம் - தேவாரசரிவர்களை வைகறையி லெழுப்ப முழக்கு முரசம்.

எழுஞாயிறு - உதயாதித்தியன், ஓர்வியாதி.

எழுதகம் - எழுதப்பட்டரூபம், சித்திரக்கம்பி, சித்திரசொரூபம்.

எழுதல் - எழல், எழுதுதல், எழும்புதல், கிளர்தல்.

எழுதாக்கிளவி } வேதம்.
எழுதாமறை

எழுதுகோல் - தூரியக்கோல்.

எழுதுபடம் - கிழி.

எழுதுவரிக்கோலம் - பத்திக்கற்று.

எழுத்ததிகாரம் - எழுத்திலக்கணம், எழுத்தில் அகத்திலக்கணம், புறத்திலக்கணமாகிய இரண்டையும் உணர்த்திய அதிகாரம்.

எழுத்தலங்காரம் - எழுத்தணி.

எழுத்தாளர் - அறிஞர்.

எழுத்தானந்தம் - செப்பு.

எழுத்தியல் - எழுத்தின் அகத்திலக்கிணத்தையுணர்த்தியஇயல்

எழுத்திலக்கணம் - எழுத்ததிகாரம்.

எழுத்து - அக்கரம், இரேகை, இலேகை, எழுதப்படுவது, தன்னே, பொறி, வரி.

எழுத்துச்சந்தி - எழுத்துப்புணர்ச்சி.

எழுத்துச்சாரியை - எழுத்தான் வருஞ்சாரியை.

எழுத்துச்சுருக்கம் - ஓரணி.

எழுத்துத்திரிபு - மூன்றுவிகாரத் தொன்று.

எழுத்துமடக்கு - ஓரணி.

எழுத்துவர்த்தனம் - சித்திரக் கவியிலொன்று.

எழுநா - கொடுவேலி, நெருப்பு.

எழுந்தருளல் - தோன்றல், பெரியோரெழுதல்.

எழுந்தேற்றம் - உற்சவம்,எழுந்தமானம், எழுந்தருளல்,துணிவு, பெருமை.

எழுபவம் - உயர்பிறப்பு, எழுபிறப்பு, அவை,தேவர், மக்கள், விலங்கு, பறவை, நீர்வாழ்வன, ஊர்வன, தாவரம்.

எழுபான் - எழுபது.

எழுப்பம் - உயர்ச்சி, எழுச்சி, நடமாட்டம், வளர்ச்சி.

எழுப்புதல் - எழுப்பிவிடுதல், கிளப்பிவிடல், சண்டை மூட்டல்.

எழுமதம் - எழுவகைமதம்.

எழுமான்
எழுமான்புலி } ஓர் பூடு.

எழுமை - உயர்ச்சி, எழு, ஏழ் பிறப்பு.

எழும்பல் - எழும்புதல், கைத்தோம்பு.

எழுவரைக்கூடி - சவ்வீரபாஷாணம்.

எழுவாயுருபு - திரிபில்லாத பெயர்ச்சொல், பெயருருபு.

எழுவாயெழுஞ்சனி - மகநாள்.

எழுவாய் - ஆதி, முதல், முதல் வேற்றுமை.

எளிசு - அருமையற்றது, இலேசானது, எளியது.

எளிஞர் - எளியர்.

எளிதரவு - எளிமைத்தனம், தரித்திரம்.

எளிதீவில்லாதது - எளிதாகக் கொடாதது.

எளிமை - தளர்வு, தனிமை, வறுமை.

எளியர் - தரித்திரர்.

எள் - எள், எள்ளென்னேவல்.

எள்கல் - இகழ்தல், நிந்தித்தல்.

எள்ள - உவமைச்சொல், வினையெச்சம்.

எள்ளல் - அவமதிச்சிறிப்பு, இழிவாகப்பேசல், தள்ளல், நகைத்தல், நிந்தித்தல்.

எறிகால் - பெருங்காற்று.

எறிதல் - அடித்தல், உதைத்தல், குத்தல், வெட்டல்.

எறித்தல் - ஒளிவீசல், வெயில் காதல்.

எறிபடை - எறியாயுதம், கைவிடு படை.

எறிமணி - சேமக்கலம்.

எறிவளையம் - சக்கராயுதம்.

எறும்பி - யானை.

எறும்பு - பிபீலிகை.

எறுழி - காட்டுப்பன்றி, பன்றி.

எறுழ் - தடி, தண்டு, தூண், வலி.

எற்றல் - அடித்தல், அறுத்தல், இறைமரம், எறிதல், கொல்லல், வெட்டல், குத்தல்.

எற்றித்தல் - இரங்கல்.

எற்று - இரக்கக்குறிப்பு, எத்தன்மைத்து, எறிதல், எற்றென்னேவல், தட்டுகை.

எற்றுதல் - அடித்தல், எறிதல், குத்தல், புடைத்தல்.

எற்றே - எவ்வளவு.

எற்றோ - அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல், எத்தன்மைத்தோ.

என - என்க, என்னுடையது, ஒருவமையுருபு, ஒழிக்கச் சொல்.

எனல் - என்றல்.

எனவெஞ்சணி - எனவென்னெச்சம்.

எனா - எண்ணிடைச்சொல்.

எனாது - எனது.

எனில் - என்று சொல்லில்.

எனை - எத்தன்மைத்து, எவ்வளவு.

எனைத்துணை - எவ்வளவு.

என் - இகழ்ச்சிக்குறிப்பு, இடைச் சொல், ஐயக்கிளவி, ஓர்விகுதி, என்ன, சொல்லுக, தன்மை யொருமைச்சொல்.

என்க - என்று சொல்லும்.

என்ப - என்றுசொல்லுவர்.

என்பாபரணன் - சிவன்.

என்பிந்தல் - அத்தாட்சிப் படுத் தல், என்று சொல்லுவித்தல்.

என்பிலி - புழு.

என்பு - எலும்பு, புல்.

என்மர் - என்று சொல்லுவார்.

என்மனார் - என்று சொல்லுவர்.

என்ரு - எண்ணிடைச்சொல்.

என்று - எந்நாள், சூரியன்.

என்றும் - எப்பொழுதும்.

என்றூழ் - கோடை, சூரியன், வெயில்.

என்ன - உவமைச்சொல், எத்தன் மைய, என்றுசொல்க, பாவை.

என்னே - அதிசயவிரக்கச்சொல் என்ஞு.

என்னை - என்றந்தை, என், என்ன, விரவுத்திணையொ ருமைத்தன்மை செயப்படு பொருள்.

என்ஞோ - அதிசயவிரக்கச்சொல், இகழ்ச்சிக்குறிப்பு, இரக்கச் சொல், ஐயக்கிளவி.

ஏ

ஏ - அடே, அம்பு, இகழ்ச்சிக் குறிப்பு, இசைநிறைச்சொல், ஈற்றசைச்சொல், எட்டன் உருபு, எண்ணின் குறிப்பு, ஓரெழுத்து, தேற்றக்குறிப்பு, பாணம், பிரிவின் குறிப்பு, வினக்குறிப்பு.

ஏஏ - இகழ்ச்சிக் குறிப்பு.

ஏகசக்கரம் - ஓராழி, தனியாட்சி.

ஏகசரம் - காண்டாமிருகம்.

ஏகதந்தன் - விநாயகன்.

ஏகதாரன் - ஒரேமனமுள்ளவன்.

ஏகதாளம் - ஆதிதாளம்.

ஏகதேசம் - அரிது, அலங்காரத்தொன்று, ஒட்டுக்கு, ஓரிடம், சந்தேகம், பங்கு, முன்பின்னுகல், வித்தியாசம்.

ஏகதேசவுருவகம் - உருவகாலங்காரத்தினென்று.

ஏகதேவன் - கடவுள், புத்தன்.

ஏகநாதன், ஏகநாயகன் - கடவுள்.

ஏகபத்தினி - ஒரேமனைவி, கற்புடைமனைவி.

ஏகபாதம் - ஓரிருக்கை, நான்கடியுமோரடியாய் வருங்கவி.

ஏகபாதர் - சிவன்.

ஏகபாதவாதனம் - நிஷ்டைநிலையினென்று.

ஏகபாவனை - ஒருமைப்பாவனை.

ஏகபோகம் - இஷ்டம், சுகதுக்கங்களைச்சமமாக நினைக்கை.

ஏகம் - உடன்பாடு, ஒப்பில்லாதது, ஒன்று, தனிமை, திப்பிலி, முழுவதும்.

ஏகம்பட்சாரம் - ஓர்வகை யுலோகம்.

ஏகரூபன் - கடவுள்.

ஏகல் - உயர்ச்சி, கெடுதல், செல்லல், நடத்தல், போகுதல், வியங்கோண்முற்று.

ஏகவசனம் - ஒருமை, ஒரே மொழி, மெய்.

ஏகவஸ்து - கடவுள்.

ஏகவாசம் - ஆலமரம், கூடியிருத்தல், தனியிருப்பு.

ஏகவீரம் - ஓர் மரம், மான்.

ஏகவேணி - ஒற்றைசடை, மூதேவி.

ஏகன் - ஒருவன், கடவுள்.

ஏகாக்கிரம் } ஒருமனம், ஒரே
ஏகாக்கிருதை } நோக்கம்.

ஏகாங்கம் - சந்தனம், தனிமை, புதன்.

ஏகாங்கவுருவகம் - உருவகாலங்காரத்திலொன்று.

ஏகாங்கி - சன்னியாசி, தனிமையாயிருப்பவன், பிரமசாரி.

ஏகாசம் - உத்தரீயம், மேற்கொள் போர்வை.

ஏகாட்சரம் - பிரணவம், சக்தி, மிறைக்கவியிஞென்று.

ஏகாட்சரிகட்சம் - ஓர் மந்திர நூல்.

ஏகாட்சி - ஒற்றைக்கண்ணன், காக்கை, சுக்கிரன்.

ஏகாண்டம் - ஆகாயம், பூர்ணம், வெளி.

ஏகாதசம் - பதிஞென்று.

ஏகாதசி - பதிஞேராந்திதி.

ஏகாதிபத்தியம் - தனியாட்சி செய்தல்.

ஏகாந்தசேவை - தனிச்சேவை, தனித்துக் குருவைப்பணிகை.

ஏகாந்தம் - சந்தனம், தனித்திருக்குமிடம், தனித்துயோகஞ் செய்கை, தனிமை, புதன்.

ஏகாந்தவாழ்வு - ஒப்பற்றவாழ்வு, தனி வாழ்வு,

ஏகாம்பரன் - சிவன்.

ஏகாயனன் - அசையாமன முள்ளவன்.

ஏகாரவ்வலி - பலா, பாகல்.

ஏகார்க்களம் - ஏர்பூட்ட நாட பார்க்கை.

ஏகாலி - சலுக்காரம், வண்ணுன்.

ஏகி - கைம்பெண்.

ஏகீபவித்தல் - ஒன்றித்தல், சேருதல்.

ஏகீபாவம் - ஒருமைப்பாவனே.

ஏகுதல் - கழிதல், போகுதல்.

ஏகோதகம் - நதிசங்கமம்.

ஏகோத்திஷ்டம் - அபரக்கிரியையி ஞென்று.

ஏக்கம் - ஏங்கல், கவலை, பயம், பேராசை.

ஏக்கழுத்தம் - இறுமாப்பு, மேன் மை.

ஏக்கறல் - பணிதல்.

ஏங்கல் - அஞ்சல், அழுதல், இரங்கல், ஒலித்தல், ஓரிழுப்பு, மயிற்குரல், மனமிடிதல்.

ஏசல் - இகழ்தல், ஓர்பாடல், பழிமொழி, வைதல்.

ஏசறவு - துக்கம்.

ஏசாதவர் - குற்றமில்லாதவர், தேவர், நல்லோர்.

ஏசி - கிளி.

ஏசு - இகழ்ச்சி, ஏசென்னேவல், குற்றம்.

ஏட - தோழன் முன்னிலை.

ஏடகம் - ஆட்டுக்கடா, சீலை, தென்னமரம், பலகை, பனை மரம், பூவிதழ்.

ஏடலகம் - அதிமதுரம்.

ஏடல் - கருத்து.

ஏடன் - செவிடன், தோழன்.

ஏடா - தோழன் முன்னிலை.

ஏடி - தோழிமுன்னிலை.

ஏடு - கண்ணிமை, பனையேடு, பாலாடை, பூவிதழ்.

ஏட்டை - ஆசை, தளர்வு, துன்பம், வறுமை.

ஏட்டைப்பருவம் - இளம்பருவம்.

ஏணம் - எலும்பு, நிலைபெறுதல், மான், மான்றோல், வலி.

ஏணல் - வளைவு.

ஏணசினம் - மான்றோல்.

ஏணைப்பு - இறுமாப்பு.

ஏணி - இறவை, எல்லை, ஏணி, நாடு, மான்கன்று.

ஏணிலாதவர் - நிலையிலார்.

ஏணிலையுடைமை - கண்ணோட்டம்.

ஏணுற்றார் - வலியார்.

ஏண் - நிலையுடைமை, பெருமை, வலி.

ஏதம் - குற்றம், கேடு, துன்பம், பலவண்ணம், மான்.

ஏதர் - எதி, ஆயுதப்பொது, கெட்டவர்கள், துண்டு, வாள்.

ஏதிலார் - அயலோர், பகைவர், வறிஞர்.

ஏதில் - அயல், அன்னியம்.

ஏதின்மை - பகைமை, பிரியவீனம், வெறுமை.

ஏது - உபகாரணம், எத்தனம், ஏன், ஓரலங்காரம், காரியப்படுபொருள், திராணி, நிமித்தம், மூலம், யாது.

ஏதுப்பொருள் - காரணப்பொருள்.

ஏதுவிலக்கு - ஓரலங்காரம், காரணவிலக்கு.

ஏதுவின்முடித்தல் - ஒருத்தி, முடிவுபெறுதலைக் காரணத்தால் முடியவைத்தல்.

ஏதுவுவமை - காரணவுவமை, அது காரணங்களைக்காட்டியுவமையைப் பொருட் கொப்பிட்டுக்கூறுவது.

ஏதை - பேதை, வறியன்.

ஏத்தல் - துதித்தல், வணங்கல்.

ஏத்து - துதியென்னேவல், துதி.

ஏத்துவம் - பின்பு.

ஏத்துவாபாசம் - தூஷணை.

ஏந்தல் - அரசன், உயர்ச்சி, ஏந்திசை, ஏந்துதல், பெருமை, பெருமையிற் சிறந்தோன், மலை, மேடு.

ஏந்தல்வண்ணம் - ஓர் சந்தம், அது - சொல்லியது சிறந்து வருவது.

ஏந்திசை - இராகத்தகுதியுளொன்று.

ஏந்திசைச்செப்பல் - வெண்சீர் வெண்டளையான் வருவது.

ஏந்திசைத்துள்ளல் - கலித்தளையிசைந்து வருவது.

ஏந்திசைத்தூங்கல் - வஞ்சித்தளை யொன்றி வருவது.

ஏந்திசையகவல் - நேரொன்ற சிரியத்தளையான் வருவது.

ஏந்திரம் - இயந்திரம், திரிகை.

ஏந்திழை - பெண்.

ஏந்துகொம்பு - தாங்குகொம்பு, மேல் வளைவான யானைக் கொம்பு.

ஏந்துதல் - தாங்கல்.

ஏந்தெழில் - மிக்க அழகு.

ஏப்பம் - ஏவறை, தேக்கெறிவு.

ஏமகூடம் - எட்டுமலையிற்பொன் மலை.

ஏமசிங்கி - மிருதாரசிங்கி.

ஏமதவஞ்சம் - போகபூமியாறி னொன்று.

ஏமத்தி - பொற்றெட்டிப்பாஷா ணம்.

ஏமத்தூரி - பொன்னூமத்தை.

ஏமபத்திரம் - மலையத்தி.

ஏமம் - இரா, இன்பம், உன்மத் தம், களிப்பு, காவல், திரைச் சீலை, புதையல், பொன், மயக் கம், விபூதி.

ஏமரல் - கலங்குதல், களித்தல், காத்தல், திகைத்தல், மூர்க்க முறல்.

ஏமவதி - கடுக்காய், வசம்பு.

ஏமாத்தல் - அவாவுறல், செருக்குறல், களித்தல்.

ஏமாயிரகம் - பொன்னப்பிரகம்.

ஏமாப்பு - கருத்து, காவல், செருக்கு, மிகுகளிப்பு.

ஏமார்த்தல் - மோசம்போகுதல்.

ஏமாறுதல் - அலமருதல், தடுமாறல், மோசம் போதல்.

ஏமி - உடனிகழ்வான்.

ஏமிலாந்தல் - திகைத்துப் பார்த்தல், நினைவு சிதறல்.

ஏமுறல் - ஏமாப்புறல், களிக்குதல், மயங்குதல்.

ஏம்புதல் - கலங்குதல்.

ஏயது - ஏற்றது.

ஏயும் - ஏகாரமிகுதல்.

ஏய்தல் - இயைதல், ஒப்பாதல், சேர்தல், பொருந்தல்.

ஏய்த்தல் - அனுப்புதல், இளைத்தல், உவமித்தல், சமானித்தல் வஞ்சித்தல்.

ஏய்ப்ப - உவமைச்சொல்.

ஏய்ப்பு - ஏய்த்தல், வஞ்சகம்.

ஏரகம் - ஆடு, சுப்பிரமணியதலமாதிலொன்று.

ஏரகை - பெண்ணாடு.

ஏரடித்தல் - ஏருழல்.

ஏரண்டம் - ஆமணக்கு.

ஏரண்டை - திப்பிலி.

ஏரத்தை - பிடரிக்காம்பு.

ஏரம்பன் - விநாயகன்.

ஏரல் - கிளிஞ்சில். சமுத்திரச் சண்டி.

ஏரா - ஏராளம், மரக்கலத்தினடி மரம்.

ஏராண்மை - உழவு.

ஏராளம் - மிகுதி.

ஏராளர் - உழுநர்.

ஏரி - இயில், குளம், புனர்பூசம், புரைகுழல்.

ஏரின்வாழ்நர் } பூவைசியர்.
ஏர்த்தொழிலர்

ஏருழப்பு - பயிர் செய்தல்.

ஏரெழுபது - ஓர் நூல்.

ஏர் - அழகு, உவமை, உழுபடை, உழுமாடு.

ஏர்க்கால் - கலப்பையினோ ருருப்பு, வண்டியினோருருப்பு.

ஏர்ச்சீர் - உழவுக்கிசைந்த தளபாடம்.

ஏர்நாழி - கலப்பையினோருருப்பு.

ஏர்பு - எழுச்சி, கிரககதி.

ஏர்ப்பன் - ஏர்ச்சீர், பூட்டாங் கயிறு.

ஏர்ப்பு - ஈர்ப்பு.

ஏர்ப்பூட்டு - ஏர்தொடுத்தல்.

ஏர்மங்கலப்பாட்டு - ஏரைப்பாடு வது.

ஏல - இயல, முன்னம்.

ஏலக்காய் - ஓர் வாசனைச்சரக்கு.

ஏலப்பாட்டு - இழுக்குநர் சொல் லும்பாட்டு.

ஏலக்கோலம் - ஆயத்தம்.

ஏலம் - ஆஞ்சி, இயங்கு, ஓர் மரம், மயிர்ச்சாந்து, முதிரை, வாச னைப்பண்டம், விலை கூறுகை.

ஏலல் - இயலல், பொருந்தல்.

ஏலவே - முன்னே.

ஏலாதது - இயலாதது, பொருந் தாதது.

ஏலாதார் - இயலாதார், பகைவர்.

ஏலாதி - ஓர் நூல்.

ஏலாமை - இயலாமை, கூடாமை, துன்பம்.

ஏலா - ஏலம், தோழிமுன்னிலை, பேரேலம்.

ஏலி - கள்.

ஏலு - சங்கஞ்செடி.

ஏலுதல் - இயலுதல், கூடல், பொருந்தல்.

ஏலுநன் - சோழன்.

ஏல் - ஆனால், இருந்தால், எதிர்மறை ஒருமைவிகுதி, ஏலென்னேவல், ஏற்றுக் கொள், ஒப்பு, கிளிஞ்சில்.

ஏல்வை - காலம், குளம், நாள்.

ஏவம் - குற்றம்.

ஏவல் - ஆணைசெலுத்தல், ஏழுப் பல், ஏவுதல், ஏவல் வினை முற்று, செலுத்தல், தூண்டல்.
ஏவல்வினை - ஏவும் வினை.
ஏவல்வினை - கட்டளைப்பொரு ளுள்ள தொழில்.
ஏவாங்கம் - ஓமம்.
ஏவிளம்பி - ஓர் வருடம்.
ஏவி - அம்பு, செலுத்தென்னே வல், வருத்தம.
ஏவுதல் - அனுப்புதல், எய்யல், எழுப்பி விடுதல், கட்டளை யிடல், கற்பித்தல், செலுத்து தல், தூண்டி விடுதல்
ஏவும்வினைமுதல் - ஏவுதற்கருத் தா.
ஏழகம் - ஆடு, செம்மறிக்கடா, துருவாட்டேறு.
ஏழனுருபு - ஏழாம்வேற்றுமை யுருபு.
ஏழிலம்பாலை - ஓர்மரம்.
ஏழை - அறிவில்லான், தரித் திரன், பெண், பேதை.
ஏழைமை - அறியாமை, தரித் திரம், பேதைமை.
ஏழ் - ஓரெண்.
ஏழ்பரியோன் - சூரியன்.
ஏழ்பவம் - ஏழுபிறப்பு.
ஏழுபிறப்பு - ஏழுபிறப்பு, அது, ஊர்வன, தாவரம், தேவர், நீர் வாழ்வன, பறவை, மக்கள் விலங்கு.

ஏளனம் - அவமதிச்சிரிப்பு, சரசம், நீக்கல், பரிகாசம்.

ஏற - அதிகாரமாக, உயர.

ஏறங்கோட்பறை . ஏற்றுப்பறை, முல்லைப்பறை.

ஏறல் - ஏறுதல், கிளிஞ்சல்.

ஏறி - ஏறினவன்.

ஏறிட்டுப்பார்த்தல் - உற்றுப் பார்த்தல்.

ஏறியவீரி - சவ்வீரபாஷாணம்.

ஏறு - அச்சுவினிநாள், இடபவிராசி, இடி, எருது, எருமை, கவரி, சங்கு, சிங்கம், சுறு, பசு, பன்றி, புல்வாய், மரை, மானிவற்றாண், ஏறென்னேவல், தழும்பு, விலங்கேற்றின் பொது, பனைமுதலியவற்றிறாண்.

ஏறுதழுவல் - விடைதழுவல்.

ஏறுழவர் - படைவீரர்.

ஏறூர்ந்தோன் - சிவன்.

ஏற்குதல் - இணங்கல், இரத்தல், எதிர்த்தல், ஒப்புக்கொள்ளல், தாங்குதல், பிச்சைவாங்குதல்.

ஏற்கும் - பொருந்தும்.

ஏற்ப - ஏற்க.

ஏற்பன - ஏற்றமொழிகள், பொருந்துவன.

ஏற்பில - ஏலாதன.

ஏற்பு - இரப்பு, ஈர்ப்பு, பொருத்தம்.

ஏற்புக்கோடல் - ஏற்குமிடத்து வருவித்துக்கொள்ளல்.

ஏற்புழி - ஏற்குமிடம்.

ஏற்போர் - இரப்போர்.

ஏற்ற - தகுதியான, பக்குவமான.

ஏற்றத்தாழ்ச்சி - ஒவ்வாமை, முன்பின்னாக, வேற்றுமை.

ஏற்றமாலை - ஓர் பிரபந்தம்.

ஏற்றம் - அதிகம், உயர்ச்சி, உயர்வு, ஏற்றமரம், துலா, நீரேற்றம், புகழ், மிகுதி, மேன்மை.

ஏற்றல் - அங்கீகரித்தல், அடுக்குதல், இணங்கல், இரத்தல், உணர்த்தல், எதிர்த்தல், எழுப்பல், ஏற்றுக்கொள்ளுதல், கொள்ளல், பெறுதல், வியங்கோண்முற்று.

ஏற்றுப்பனை - ஆண்பனை.

ஏற்றுவாகனன் - சிவன்.

ஏன - ஏனைய.

ஏனக்கோடு - பன்றிக்கொம்பு, வெதுப்படக்கி.

ஏனம் - இயற்று, எழுத்தின் சாரியை, ஓலைத்தடை, கருவி, தப்பிதம், பன்றி, பாத்திரம், பாவம்.

ஏனல் - கதிர், தினைப்புனம், செந்தினை, பைந்தினை.

ஏனாதி - தந்திரி, தளகர்த்தன், நாவிதன், மந்திரி, மறவன்.

ஏனாதிநாயனார் - சிவனடியாரறு பத்து மூவரிலொருவர்.

ஏனும் - ஓர்வினையெச்சம்.

ஏனை - ஒழிந்த, மலங்குமீன், மற்ற.

ஏனையவும் - எனவும், மற்றைய வும்.

ஏன் - இரக்கப்பொருளைத் தரு மிடைச்சொல், என்னை, தன் மையொருமை விகுதி.

ஏன்றல் - இயலல், குறித்தல், பொருந்தல்.

ஐ

ஐ - அரசன், அழகு, ஆசான், இரண்டாம் வேற்றுமையி னுருபு, இருமல், எசமான், ஓரிடைச்சொல், ஓரெழுத்து, கடவுள், கோழை, சவ்வீரம், சாரியை, சுவாமி, நுண்மை, யானைப்பாகன் தட்டுமோசை, பெயர்விகுதி, தொழிற் பெயர் விகுதி முன்னிலை யொருமை விகுதி, தந்தை.

ஐகாரக்குறுக்கம் - தன்மாத்தி ரையிற் குறைந்த ஐகாரம்.

ஐகாரம், ஐகான் - ஐயெனுமெழுத்து.

ஐக்கியம் - ஒற்றுமை, ஒன்றிப்பு.

ஐங்கணைக்கிழவன் - மன்மதன்.

ஐங்கரற்கிளையோன் - முருகன், வீரபத்திரன்.

ஐங்கரன் - விநாயகன்.

ஐங்குரவர்-ஐம்பெரியோர், அவர், இராசா, குரு, தன்மையன், பிதா, உபாத்தியாயன்.

ஐங்குழு - அரசர்க்குரிய ஐந்து குழு, அவர், சாரணர், சேனபதியர், தூதர், புரோகிதர், மந்திரியர்.

ஐங்காண்டிகையுறுப்பு - காண்டிகையுரையின் அவயவமாகிய ஐந்து.

ஐசானி - வடகீழ்த்திசையானை.

ஐசானியன் - ஈசானன்.

ஐசுவரியம் - செல்வம், பாக்கியம்.

ஐதி - ஒரளவை.

ஐது - அடர்த்தியற்றது, அழகிய பொருள்.

ஐந்தடக்கம் - ஐம்பொறிகளை யடக்கல், ஐந்து உறுப்புக்களை அடக்கல்.

ஐஞ்சடிவிருத்தம் - கலிவிருத்தம், தரவு கொச்சகம்.

ஐந்தரம் - அழகுள்ளது, நெருக்கமின்மை, பனை, மந்தம்.

ஐந்தரு - பஞ்சதரு, அது-ஹரிசந்தனம், கற்பகம், ஸந்தானம், பாரிஜாதம், மந்தாரம் என்பன.

ஐந்தவி - ஸரஸ்வதி.

ஐந்தவித்தல் - ஐம்பொறியடக்கல்.

ஐந்தனுருபு - ஐந்தாம் வேற்றுமையுருபு.

ஐந்தானம் - மிருகசீரிஷம்.

ஐந்திணை - அன்புடைக்காமம், ஐந்துவகையான நிலம்.

ஐந்திணைச்செய்யுள் - ஓர் பிரபந்தம்.

ஐந்திணைச்செய்யுள் - ஓர் பிரபந்தம். அது - ஐயந்திரப் பொருளும் விளங்கக் குறிஞ்சி முதலியவைந்திணையினையுங் கூறுவது.

ஐந்திரம் - இந்திர வியாகரணம் கிழக்கு, சிற்பநூலிலொன்று.

ஐந்திரீ - கீழ்த்திசை, கிழக்கு, கேட்டைநாள்.

ஐந்துப்பு - பஞ்சலவணம். அவை - இந்துப்பு, கல்லுப்பு, கறியுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு.

ஐந்துறுப்படக்கி - ஆமை.

ஐந்தை - சிறுகடுகு.

ஐந்தொகைமொழி - வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத்தொகை நிலைத்தொடர்சொல்.

ஐந்தொழில் - பஞ்சகிருத்யம்.

ஐப்பசி - ஓர்மாதம்.

ஐமுகன் } சிவன்.
ஐயானனன் }

ஐமுகாத்திரம் - ஓர் பாணம்; பஞ்சமுகாத்திரம்.

ஐமுகி - ஆமணக்கு.

ஐமை - அடர்பு, கூட்டம், தகட்டு வடிவு, பகுதி.

ஐம்பால் - அத்தநாள், ஐம்பகுதி, அவை - ஒருவன், ஒருத்தி, ஒன்று, பலர், பல; பெண் மயிர், ஐவகை மயிர்முடி.

ஐம்புலத்தடங்கான் - கடவுள்.

ஐம்புலம்வென்றோர் - முனிவர்.

ஐம்புலன்விழையான் - முனிவன்.

ஐம்பூதம் - பஞ்சபூதம்.

ஐம்பொறி - பஞ்சேந்திரியம்.

ஐம்பொறிநுகர்ச்சி - பஞ்சேந்திரியானுபவம்.

ஐம்பொன் - பஞ்சலோகம். அவை - இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளி.

ஐயக்காட்சி - அதுவோவிதுவோவெனக்காண்டல், சந்தேகம்.

ஐயக்கிளவி - ஐயச்சொல்.

ஐயங்கவீனம் - புதுவெண்ணெய்.

ஐயநாடி - சிலேட்டுமநாடி.

ஐயந்திரப்பொருளையுணர்த்தல் - பிறருக்குச் சந்தேகம் நீங்கப் பொருளைத் தெரிவித்தல்.

ஐயமறுத்தல் - சந்தேகந்தீர்த்தல்.

ஐயமிடல் - பிச்சையிடல்.

ஐயமுறல் - சந்தேகித்தல்.

ஐயம் - இரப்போர்கலம், சந்தேகம், பிச்சை.

ஐயர் - பார்ப்பார், முனிவர், வானோர்.

ஐயவணி - சந்தேகாலங்காரம்.

ஐயவதிசயம் - ஓரலங்காரம்.

ஐயவி - கடுகு.

ஐயவும்மை - சந்தேகவும்மை.

ஐயவுவமை - ஓரலங்காரம்.

ஐயறிவுயிர் - மக்கள், வானவர், நரகர், விலங்கு, புள் முதலியவை.

ஐயனார் - ஹரிஹரபுத்திரன்.

ஐயன் - உபாத்தியாயன், ஐயனார், குரு, தந்தை, அரசன், மூத்தோன், உயர்ந்தோன்.

ஐயானனம் - சிங்கம்.

ஐயிருகுற்றம் - பத்துக்குற்றம்.

ஐயுறல் - ஐயுருபுபொருந்தல், சந்தேகப்படல்.

ஐயெனல் - விரைவின் குறிப்பு.

ஐயே - விளிக்குறிப்பு.

ஐயை - காளி, தலைவி, தவப்பெண், துர்க்கை, பார்வதி, மகள்.

ஐயோ - அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல்.

ஐராணி - இந்திராணி, பார்வதி.

ஐராவணம் } இந்திரன்யானை.
ஐராவதம் }

ஐராவணன் } இந்திரன்.
ஐராவதப்பாகன் }

ஐவகைப்பொழுது - சிறுபொழுதின்வகை ஐந்து, அவை - காலை, நண்பகல், மாலை, யாமம், வைகறை.

ஐவணம் } மருதோன்றி.
ஐவணி }

ஐவனம் - மலைநெல்.

ஐவாய் - ஐந்து இடம்.

ஐவிரலி - ஐவேலி.

ஐவிரல் - அத்தநாள்.

ஒ

ஒ - ஒருயிரெழுத்து.

ஒகரம் - ஒரெழுத்து, மயில்.

ஒக்க - ஒருமிக்க, கூட, சமமாயிருக்க, தகுதியாயிருக்க, நிகர்க்க, பொருந்த, மெத்த.

ஒக்கம் - அசமதாகம், உயர்ச்சி, ஊர்ப்பொது, எழுதல், கரை, கிராமம், பட்டினம்.

ஒக்கலை - மருங்கின் பக்கம்.

ஒக்கல் - இடைப்பக்கம், உறவு, ஒத்தல், குடி, மூட்டுதல்.

ஒக்கல்போற்றல் - சுற்றத்தைப் பேணல்.

ஒக்குதல் - ஒத்திக்குத்தல், கொப்பளித்தல், சமாளித்தல், பிற்படவிடல்.

ஒக்கொலை - அம்பர்.

ஒசிதல் - அசைதல், ஒடிதல், துவளல், முறிதல்.

ஒசிவு - அசைவு, முரிவு.

ஒச்சம் - ஒச்சை, கவனித்தல், பழுது, வெட்கம்.

ஒடிசில் - கவண்.

ஒடிதல் - ஒளிசெய்தல், முறித்தல்.

ஒடு - எண்பொருள், ஒடுக்கட்டி, ஓர்மரம், ஓரிடைச்சொல், மூன்றனுருபு.

ஒடுக்கம் - அடக்கம், குறைதல், பதுங்கல், முடிவு, நெருக்கம், வழிபாடு.

ஒடுக்கல் - அடித்தல், முடித்தல், வருத்தல்.

ஒடுக்கு - அடக்கம், இடுக்கு, ஒடுக்கென்னேவல், ஒடுங்கினது, நெருக்கமானது.

ஒடுக்குதல் - அடக்குதல், இறையிறைத்தல், குறைத்தல், சுருங்கப்பண்ணுதல், வருத்தப்படுத்தல்.

ஒடுங்கல் - அடங்கல், ஒதுங்கல், ஒளிமழுங்கல், கீழ்ப்படிதல், சுருங்கல், சோரல், பதுங்கல்.

ஒடுங்கி - ஆமை.

ஒடுவடக்கி - குப்பைமேனி, திராய் மரம்.

ஒடை - ஓர்மரம்.

ஒட்ட - அடியோடே, அணுக, இறுக, கிட்ட, சேர.

ஒட்டகைப்பாரை - ஒட்டாம்பாரை, ஓர் மீன்.

ஒட்டகம் - ஒட்டை.

ஒட்டச்சி - பூவழலை.

ஒட்டத்தி - ஒட்டுத்துத்தி.

ஒட்டம் - ஓடு, சபதம், தோண்டவளவைத்திடர், பந்தயப் பொருள்.

ஒட்டர் - ஒட்டதேசத்தர், மண் வேலைக்காரர்.

ஒட்டல் - உடன்படல், ஒன்றல், குறுகல், சேரல், பொருத்தல், பொருந்தல், பந்தயம்வைத்தல்.

ஒட்டார் - பகைவர்.

ஒட்டியம் - ஓர்தேசம், ஓர்பாஷை.

ஒட்டு - அருகு, இகலாட்டம், ஓரலங்காரம், ஒட்டென்னேவல், ஒளிப்பிடம், ஒன்றிப்பு, கண்ணி, படைவகுப்பு.

ஒட்டுதல் - இடங்கொடுத்தல், சுருங்கல், சேர்த்தல், பொருந்துதல்.

ஒட்டுத்துத்தி - ஓர் பூடு.

ஒட்டுநர்
ஒட்டினர் } மித்திரர்.

ஒட்டை - ஒட்டகம்.

ஒட்பம் - அழகு, நன்மை, முதுக்குறைவு.

ஒண்டன் - ஆணரி.

ஒண்டொடி - பெண்.

ஒண்பொருள் - முறைமையாய்த் தேடிய பொருள்.

ஒண்ணல் - பொருந்தல்.

ஒண்மை - அழகு, அறிவு, ஒழுங்கு, ஒளி, நன்மை, மிகுதி.

ஒண் - ஒளியுள்ள.

ஒதி - ஒதிமரம்.

ஒதுக்கம் - ஒதுங்கி யிருத்தல், தாழ்மை, தீட்டு, நடை, பதுங்குகை, பின்னிடுகை, மறைவு.

ஒதுக்கல் - ஒதுங்கச்செய்தல், தீர்த்தல்.

ஒதுங்கல் - நடத்தல், பதுங்கல், விலக்கல்.

ஒத்தபண்புரைப்போர் - தூதர்.

ஒத்தல் - இசைவாக நடத்தல், ஒக்கப்படுபொருள், ஒத்துதல், ஒப்பு, தாளம்போடல், நடு, பொருந்தல்.

ஒத்தறுத்தல் - தாளம்போடல்.

ஒத்தியல்பொருள் - தமதுதொழிலில் இடையறாது ஒத்து நிகழுகின்ற பொருள்கள்.

ஒத்து - ஓரிசைக்கருவி, தாளவொத்து, ஒத்தறுக்கை, ஒத்திசை.

ஒப்ப - உவமையுருபு.

ஒப்பணி - ஓரலங்காரம்.

ஒப்பம் - அதிகாரப் பத்திரம், ஒப்பு, கையெழுத்து, சமம், மினுக்குதல்.

ஒப்பல் - ஒக்குதல்.

ஒப்பளவை - உவமானப்பிரமாணம்.

ஒப்பனை - அலங்கரித்தல், அலங்காரம், உவமை.

ஒப்பாரி - ஒப்பு, ஒப்புசசொல்லியழுதல்.

ஒப்பின்முடித்தல் - ஓர் யுத்தி, அது - ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக்கணம் வேறொன்றற்கும் ஒத்து வருமாயின் அதற்கும் அதுவே இலக்கணமாக முடிவுசெய்தல்.

ஒப்பு - அழகு, உவமை, உவமிக்கப்படுபொருளால் வருபெயர், ஒப்பென்னேவல், கூட்டு, சமன், சாயம், பொருந்தல்.

ஒப்புப்பொருள் - புகழ் பொருளினுந் தன்னிலுமிருக்கிற பொதுத்தன்மையால் உபமானமாகிறபொருள் உவமிக்கப்படுபொருளால் வருபெயர்.

ஒப்புமை - ஒத்திருக்குந் தன்மை, சமானம்.

ஒப்புமைக்கூட்டவணி - ஓரலங்காரம்.

ஒப்புரவு - உபகாரம், ஒற்றுமை, கொடை, சமம், சமாதானம், முறைமை.

ஒப்புருபுகள் - போல முதலிய உவமை யுருபுகள்.

ஒப்போன்-சமானமுடையோன்.

ஒராஅல - ஒருவுதல்.

ஒரீஇ - ஒருவி, விட்டு, நீங்கி.

ஒம்மல் - ஒமல்.

ஒய்யல் - நீங்கல், செலுத்தல்.

ஒய்யெனல் - மந்தக்குறிப்பு.

ஒருகுறி - ஒருதரம்.

ஒருகுடி } தாயத்தார்.
ஒருகுடித்தமர் }

ஒருக்கல் } அழித்தல், ஒருமைப்படுத்தல்.
ஒருக்குதல் }

ஒருக்கம் - ஒற்றுமை, ஒருமனப் படுத்தல்.

ஒருங்கல் - அடங்கல், ஒருவழிப் படல், கேடு.

ஒருங்கு - அடக்கம், எல்லாம்கூடி நிற்றல், ஒருங்கென்னேவல், ஒருமிக்க, முழுவதும்.

ஒருங்குடன்றோற்றம் - ஓரலங் காரம்.

ஒருசார் - ஒருபுடை.

ஒருசிறை - ஒதுக்கிடம், ஒருசார்.

ஒருசொன்னீர்மை - ஒரு சொற் றன்மை.

ஒருதலை - ஒருபக்கம், உறுதி, நிசம்.

ஒருதலைக்காமம் - கைக்கிளை.

ஒருதலைதுணிதல் - உத்தியி னொன்று. இருவராலே மாறுபட்ட இரண்டனுள் ஒன்றைத துணிந்தெடுத்துக்கொள்ளல்.

ஒருதன்மை - ஒருநிலை, ஒரே விதம், மாறாத்தன்மை.

ஒருத்தல் - எருமை, கரடி, கவரி, பன்றி, புலி, புல்வாய், மரை, மான், யானை இவற்றினாண், விலங்கேற்றின்பொது, யானை.

ஒருபவம் - ஒரு பிறப்பு.

ஒருபஃது - ஒருபத்து.

ஒருபாவொருபஃது - ஓர் பிரபந்தம்.

ஒருபுடை - ஒரு பக்கம்.

ஒருபுடையொப்புமை - ஏகதேசவுவமம்.

ஒருபுணர் - ஒரு புணர்ச்சி.

ஒருபொருட்டீவகம் - ஒருபொருள் தீபகம் - ஓரலங்காரம்.

ஒருபொருட்பன்மொழி - ஒரு பொருளைக்குறித்து வரும் பல சொல்.

ஒருபொருள் - கடவுள்.

ஒருபோகு - கொச்சகக்கலிப் பாவினொன்று.

ஒருப்படல் - ஒருமனப்படல், ஒன்றுதல், சம்மதித்தல்.

ஒருமரம் - அழிஞ்சில், செம்மரம்.

ஒருமித்தல் - ஒன்றுபடல்.

ஒருமை - ஆண்பால், இறையுணர்வு, ஒருபிறப்பு, ஒற்றுமை, ஒன்றன்பால், தனிமை, நிச்சயம், பெண்பால்

ஒருமைப்பாடு - ஒருமனம்.

ஒருமையிற்பன்மை - ஒருமைப்பாலிற் பன்மைப்பாற் சொல்.

ஒருமைமகள் - பதிவிரதை.

ஒருமொழி - ஒருபொருளைத் தருகின்றசொல், பகாப்பதமாயினும் பகுபதமாயினும், ஒன்று நின்று தத்தம் ஒருபொருளைத் தருவன.

ஒருவர்தம்-உறுதி, ஒற்றுமை, சம்பந்தம், தனித்திருக்குமிடம்.

ஒருவயிற்போலியுவமை - உவமையணியிலொன்று.

ஒருவர் - உயர்திணை, ஆண்பெண் இவ்விருபாற்கும் பொதுப்பெயர் (ஒருவன், ஒருத்தி, ஒருவர்.)

ஒருவன் - ஆண்பாற் பெயர், ஒன்றென்னும் எண்ணுல் வரும் உயிர்திணை ஆண்மைப்பெயர்.

ஒருவினைச்சிலேடை - சிலேடையணியிலொன்று.

ஒருவு - ஆடு, ஒருவென்னேவல்.

ஒருவுதல் - தவிர்தல், நீங்கல், விட்டுநீங்கல், விலகல்.

ஒருஉமோனே - செய்யுட்டொடையினென்று.

ஒரோவழி - ஓரோர் இடங்கள்.

ஒரோவென்று - ஒவ்வொன்று.

ஒலி - அணுத்திரளின்காரியஒலி, ஆரவாரம், இடி, ஒலியென்னேவல், ஓசை, காற்று, கொடிவேலி, கோஷ்டய், சப்தம், முழக்கம்.

ஒலிக்குறிப்பு - அநுகரணவோசை.

ஒலித்தல் - ஆடைவெளுத்தல், ஆரவாரித்தல், ஆர்த்தல், ஓசையிடுதல், சப்தித்தல், தழைத்தல்.

ஒலிப்பண்பு - ஓசைப்பண்பு.

ஒலிமுகம் } புறவாயில்.
ஒலிமுகவாயில்

ஒலியலந்தாதி - ஓர் பிரபந்தம்.

ஒலியல் - ஆறு, சீலை, தெரு, தோல், பூமாலை.

ஒலியெழுத்து-ஒலிவடிவெழுத்து.

ஒலிவடிவெழுத்து - செவிப்புலனால் அறியப்படுகிற நாதமாத்திரையாற் பிறக்குமெழுத்து.

ஒலுங்கு - கொசுகு.

ஒல் - ஒலிக்குறிப்பு, ஒல்லென்னேவல், முடிவிடம்.

ஒல்கல் - அருகல், ஒடுங்கல், குழைதல், குறைதல், தளர்தல், துவளல்.

ஒல்லல் - இசைதல், இயலல், இணங்கல், பொத்துதல்.

ஒல்லாமை - இகழ்தல், இயலாமை, இசையாமை, வெறுப்பு.

ஒல்லார் - பகைவர்.

ஒல்லி - ஒடுங்கின ஆள், ஒடுங்கினது, துடைப்பம், மெலிந்தது, வெறித்தாய்ப்போன தேங்காய்.

ஒல்லுதல் - இணங்குதல், இயலுதல், கூடுதல், நம்பவித்தல், நிறுத்தல், நிறைவேற்றல், பொருப்தல்.

ஒல்லுநர் - நூலுரையுணர்வோர், மித்திரர்.

ஒல்லெனல்- அனுகரணவோசை, ஒல்லென்றொலித்தல்.

ஒல்லை - கடுப்பு, காலவிரைவு, சிறுபொழுது, சீக்கிரம், பழமை

ஒவ்வாப்பக்கம் - பொருந்தாப்பக்கம்.

ஒவ்வாமை - இயலாமை, தகுதியீனம், பொருந்தாமை.

ஒவ்வுதல் - இசைதல், இணங்குதல், பொருந்துதல்.

ஒவ்வுறல் - பொருந்தல்.

ஒழிதல் - சாதல், தவிர்த்தல், தொக்கு நிற்றல், மறைதல்.

ஒழித்தல் - எழுச்சி, கொல்லல், தவிர்த்தல், நீக்கல்.

ஒழிந்த - ஒழிந்திருப்பன.

ஒழிபியல் - சொல்லாது விட்டவற்றைக் கூறுமியல்.

ஒழிபு - எச்சம், குறைவு.

ஒழியிசை - ஒழிந்தஇசை, ஒழிந்த சொல்.

ஒழியளவை - ஓரளவை.

ஒழிவித்தல் - அழித்தல், ஒழிய வைத்தல், முடித்தல்.

ஒழிவு - ஒழிகை, குறிப்பனுமானம்.

ஒழுகல் - உயர்ச்சி, ஒழுகுதல், ஒழுக்கம், நடத்தல், நீர் முதலியவோடல், நீளம்.

ஒழுகிசை - பாவினோசையுளொன்று.

ஒழுகிசைச்செப்பல் - வெண்சீர் வெண்டளையியற்சீர் வெண்டளையும் விரவி வருவது.

ஒழுகிசையகவல் - நேரொன்றாசிரியத்தளையும், நிரையொன்றாசிரியத்தளையும் வரவி வருவது.

ஒழுகியலோசை - தளைதட்டுவதால் வரும் ஓசை.

ஒழுகுவண்ணம் - ஓர்சந்தம்.

ஒழுகை - ஒழுகு, பண்டி.

ஒழுக்கம் - உயர்ச்சி, எழுச்சி, நடை, குலம், நல்லொழுக்கம், பண்பு, முறைமை, வழி.

ஒழுக்கல் - எழுச்சி, ஒழுகுவித்தல்

ஒழுக்கு - ஒழுகல், நல்லொழுக்கம்.

ஒழுங்கல் - நிரல்படல்.

ஒழுங்கு - ஒழுங்கென்னேவல், நிரல், வரிசை.

ஒளி - ஒளிப்பிடம், ஒளியென்னேவல், சந்திரன், சூரியன், நெருப்பு, நேத்திரேந்திரபார்வை, புகழ், பிரமை, மிருகம், விளக்கு, விண்மீன், வெயில், விஷயம்.

ஒளிக்கடல் - பல்.

ஒளித்தல் - பதுங்கல், மறைதல்.

ஒளியுருவியகல் - வைடூரியம்.

ஒளியோன் - சூரியன்.

ஒளிர்தல் - ஒளி செய்தல்.

ஒளிர்முகம் - வைரமணி.

ஒளிவட்டம் - கண்ணாடி, சக்கரம்.

ஒளிவட்டி - பச்சைக்கருப்பூரம்.

ஒளிவிளங்குமேனி - ஓர் பாஷாணம்.

ஒளிவு - ஒளி, மறைவிடம்.

ஒளிறல் - ஒளிக்கொள்ளல்.

ஒளிறு - பிரகாசம்.

ஒள் - அழகு, ஒளி, நல்ல, மேன்மை.

ஒள்ளியர் - அறிவுடையோர், மாசற்றவர்.

ஒள்ளியோன் - அறிவுடையோன், ஒளிசெய்வோன், சுக்கிரன், வருந்துதல்.

ஒறுத்தல் - அலேத்தல், கடிதல், குறைத்தல், நோய்செய்தல், வருத்துதல், வெறுத்தல்.

ஒறுப்பு - அடக்கம், அதட்டுதல், கடிவு, குறைவு, தண்டிப்பு, வெறுப்பு.

ஒற்கம் - அடக்கம், ஒடுக்கம், குறைவு, பொருமை, வறுமை.

ஒற்றர் - தூதர், வேவுகாரர்.

ஒற்றல் - உடுத்தல், ஒற்றுதல்.

ஒற்றளபெடை - இசைகுன்றில் மெய்யெழுத்து தம்மாத்திரையில் மிக்கொலிப்பது.

ஒற்றூடல் - தூதுசெலுத்தல்.

ஒற்றி - நிலவடைமானம், வினையெச்சம்.

ஒற்றித்தல் - ஒற்றைப்படவெண்ணல்.

ஒற்று - மெய்யெழுத்து, ஒற்றென்னேவல், செங்கோட்டியாழுறுப்பினுளொன்று. தூதன், தூது, வேவு.

ஒற்றுக்கேடு - ஒற்றுக்கெடுதல்.

ஒற்றுதல் - அடுத்தல், உடுத்தல், ஒற்றல், தொடுதல், நெருங்கல், விலகுதல்.

ஒற்றுப்பெயர்த்தல் - மிறைக்கவியிேனாருறுப்பு.

ஒற்றுமை - உரிமை, ஒருமை, கலப்பு, குறிப்பு, செல்வம், தகுதி, மனமொன்றுகை.

ஒற்றுமைகோடல் - வேளாண்மைமார்தரியல்பினுளொன்று

ஒற்றுமைநயம் - ஒருமைப்பாடு, ஒன்றுபட்டு நிற்குந்தன்மை.

ஒற்றெழுத்து - மெய்யெழுத்து.

ஒற்றை - ஒன்று.

ஒற்றைக்கண்ணன் - குபேரன், சுக்கிரன்.

ஒற்றைக்கொம்பன் - விநாயகன்.

ஒற்றையாழித்தேரோன் - சூரி - யன்.

ஒற்றையாழித்தேர் - சூரியன் றேர்.

ஒன்பான் - ஒன்பது.

ஒன்றல் - பொருந்தல்.

ஒன்றன்கூட்டம் - ஒரு பொருட் கூட்டம்.

ஒன்றன்பால் - அஃறிணையொரு மைப்பால்.

ஒன்றார் - பகைவர்.

ஒன்றினமுடித்தல் - ஒன்றைச் சொல்லுமிடத்து அதற்கின மான மற்றொன்றையும் அத னோடு முடித்தல்.

ஒன்று - ஏகம், ஒன்று, ஒன்றென் னேவல், ஒன்றன்பாற்பெயர்.

ஒன்றுநர் - சினேகிதர்.

ஒன்றுதல் - கூடுதல்.

ஒன்றெழிபொதுச்செயல் - இரு திணையாண் பெண்ணா ளான் றனை யொழிக்கும் பொதுச் சொல்.

ஒன்றொழி - ஒன்று ஒழிந்த, ஒன்று குறைய.

ஒன்றோ - அதிசயவிரக்கச்சொல், இடைச்சொல்.

ஒன்னலன் - பகைவன்.

ஒன்னார் - பகைவர்.

ஓ

ஓ - உகாரசந்தியக்ஷரம், அயன், அரன், அழைத்தல், இரக்கம் இவற்றைக் காட்டுமோருபஸர்க்கம், ஓகாரம், இடைச்சொல், அது - ஒழியிசை, வினா, சிறப்பு, தெரிநிலை, கழிவு, பிரிநிலை; மடையடைக்குங்கதவு.

ஓகணம் - பேன், மூட்டைப்பூச்சி.

ஓகம் - அடைக்கலம், ஓர்குருவி, சமூகம், திரட்டு, புகலிடம்.

ஓகை - உவகை.

ஓகோ - அதிசயவிரக்கச்சொல்.

ஓக்கமிரட்டி - ஓர்வகைக்கலித்தாழிசை.

ஓக்கம் - உயர்ச்சி, எழுச்சி, பருமை, பெருமை.

ஓங்கலுற்பவன் - கந்தபாஷாணம்.

ஓங்கல் - அரசன், உயர்ச்சி, எழுச்சி, சுத்திபண்ணல், மலை, மூங்கில், மரக்கலம், மேடு, யானை, வலியுடையோன்.

ஓங்காரம் - ஓம், பிரணவம்.

ஓங்காரவுரு - கௌரிபாஷாணம், பிரணவவடிவம்.

ஓங்குதல் - அதிகப்படல், உயர்தல், தேறுதல், வளர்தல்.

ஓசம் - கீர்த்தி, கோசம், தாபரம், பிரகாசம்.

ஓசனித்தல் - பறவைசிறகடித்தல்.

ஓசன் - உவாத்தி, பூசாரி.

ஓசு - கீர்த்தி.

ஓசை - ஒலி, கீர்த்தி, வாழை.

ஓசையுடைமை - நூல் பத்தழகினொன்று, சந்த இன்பம் உடைத்தாயிருத்தல்.

ஓச்சல் - எறிதல், ஓட்டல், ஓங்கல், செலுத்தல், தூண்டல்.

ஓஜம் - அறிவு, ஸத்துவகுணம், செருக்கு, பலம், பிரகாசம்.

ஓடதி - ஒருகாற்காய்த்துப் படுமரம், கொடி, செடி, மரமுதலியன மருந்து.

ஓடம் - நீர்மேலோடு மோடம், மிதவை.

ஓடல் - அச்சக்குறிப்பு, ஓடல், கெடல்.

ஓடன் - ஆமை.

ஓடியம் - சபைக்கடாப்பேச்சு.

ஓடியவோடம் - கிளிஞ்சல்.

ஓடு - ஆமை முதலியவற்றினோடு, இரப்போர்கலம், உடைந்த மண்பாண்டம், ஓடென்னே

வல், நீளுதல், மூன்றும், வேற்றுமையுருபு, வித்துமுதலியவற்றிேனாடு, வீடுவேயும் ஓடு.

ஓடை - அகழி, உலவை, ஓர் கொடி, கிலுகிலுப்பை, குளம், நீரோடை, நெற்றிப்பட்டம், மலைவழி, யானை நுதற்பட்டம்.

ஓட்டம் - உதடு, ஓடுமோட்டம், தோல்வி, நீரோட்டம், மேலுதடு.

ஓட்டல் - செலுத்தல்.

ஓட்டாம்பாரை - ஓர்மீன்.

ஓட்டுத்துத்தி - ஓர் பூண்டு.

ஓணம் - ஆறு, திருவோணம்.

ஓதம் - ஈரம், கடல், கடற்றிரை, வெள்ளம்.

ஓதல் - ஒழிதல், சொல்லல், படித்தல், பயிற்சிசெய்தல், புகழ்தல், வாசித்தல்.

ஓதனம் - உண்டி, சோறு, பெருமை, போர்.

ஓதன்மை - ஓதற்றன்மை, பாடல்

ஓதி - அறிவி, அறிவுடையோன், இடங்கழிமை, ஓதுவான், ஓந்தி, கல்வி, ஞானம், பூனை, பெண்மயிர்.

ஓதிமமுயர்ந்தோன் - பிரமன்.

ஓதிமம் - அன்னம், கவரிமா, புளியமரம், மலை.

ஓதுதல் - ஓதல், சொல்லுதல், படித்தல், மந்திரமுச்சரித்தல்.

ஓதுவான் - ஆசான், படிப்பவன், திருப்பாட்டுப் பாடுவோன்.

ஓதுவித்தல் .. படிப்பித்தல்.

ஓதை - ஒலி, பேரொலி, மதி லுண்மேடை, மதில்.

ஓத்தி - ஒந்தி.

ஓத்து - ஓரினப்பொருளை யொரு வழி வைத்திருக்குமியல், வேதம்.

ஓத்துப்புறனடை - இயற்புற னடை.

ஓத்துமுறைவைப்பு - முப்பத்தி ரெண்டுத்தியினொன்று, இயல் களைக் காரண காரிய முறைப் படி வைத்தல்.

ஓத்துரையோர் - உவாத்தியாயர், பொருந்தச்சொல்வோர்.

ஓந்தி - ஓணான்.

ஓமகுண்டம் - வேள்விக்குண்டம்.

ஓமசாந்தி - ஓமம் வளர்த்துச் சாந்தி பண்ணல்.

ஓமத்திரவியம் - யாகத்தின் உப கரணம்.

ஓமப்பொடி - திருநீறு.

ஓமமண்டபம் - யாகசாலை.

ஓமம் - அசாமோதம், அப்பிரகம், ஒர் பூடு, வேள்வி.

ஓமாக்கினி - ஓமத்தீ.

ஓமான் - ஓந்தி.

ஓமை - மாமரம்.

ஓம் - ஆமெனல், பிரணவம், தன்மைப்பன்மை விகுதி.

ஓம்படை - காவல்.

ஓம்படைக்கிளவி - கையடை கொடுத்தல், பெரியோர்சொல்.

ஓம்பல் - பாதுகாத்தல், வளர்தல்.

ஓம்புதல் - பாதுகாத்தல்.

ஓய்தல் - ஆறுதல், ஒழிதல், தளர்தல், முடிதல்.

ஓய்வு - சாதல், தளர்வு, முடிதல்.

ஓரடிமடக்கு - நான்கடியுமோரடியே மடங்கி வருவது.

ஓரம் - சத்திசாரம், பக்கவாதம், விளிம்பு.

ஓரல் - ஆய்தல், ஒடுக்கமானது, தெளிதல்.

ஓரறிவுயிர் - புல்மரமுதலியவை.

ஓரன்ன - ஒருதன்மையான.

ஓரா - ஓர்மீன்.

ஓராசிடைவெண்பா - ஓராசிடை விட்டுவரும் வெண்பா.

ஓராயம் - இணைப்பு, சத்தார், சாய்வு.

ஓரி - ஆணரி, ஆண்மயிர், ஆண்முசு, கடையெழுவள்ளலிலொருவன், காளிவாகனம், கிழநரி, புறமயிர், விலங்கேற்றின் பொது.

ஓரிசு - ஆயத்தம், இசைவு, இணக்கம், சமாதானம், தீர்மானம்.

ஓரிதழ்த்தாமரை - ஓர்பூடு.

ஓரிருகிழமை - தற்கிழமை, பிறிதின் கிழமை.

ஓரும் - அசைச்சொல்.

ஓரெழுத்தியல்பதம் - ஒரு எழுத்தாய்ப்பொருளைக் காட்டுகிற சொல்.

ஓரெழுத்துமடக்கு - அடிகடோறுமிடை பிறிதெழுத்தின்றி வந்தவெழுத்தே வருவது.

ஓரை - இராசிப்பொது, இலக்கினம், கலன்கள், சமயம், தோழி, மகளிர் கூட்டம், மாதர் விளையாடுங்களம், விளையாட்டு.

ஓர் - எண்.

ஓர்குடிமணாளன் - சகலன்.

ஓர்குண்டலன் - பலபத்திரன்.

ஓர்க்கொலை - அம்பர்.

ஓர்ச்சி, ஓர்தல் - ஆராய்தல், உய்த்துணர்தல், தெளிதல்.

ஓர்ப்பு - ஆடூஉக்குணம், நான்கினொன்று, அஃது - ஓர்மம், சருமமுடிக்குந்துணிவு, பொறுக்கட்டுதல், பொருமை, ஆராய்தல்.

ஓர்மம், ஓர்மிப்பு } மனத்திடன்.

ஓர்மை - துணிவு.

ஓலக்கம்- மந்திராலோசனைசபை, சபாமண்டபம், திரிச்சமுகம்.

ஓலம் - ஒலி, கடல், பாம்பு.

ஓலிடல் - ஒலித்தல், ஓலமிடல்.

ஓலை - ஒலி, தாழையோலை, தென்னோலை, பனையோலை.

ஓலைநீட்டும்படை - எழுத்தாணி.

ஓலைத்தூக்கு - சீட்டுக்கவி.

ஓல் - ஒலி.

ஓவர் - கம்மாளர், பாடற்கீழ் மக்கள்.

ஓவல் - ஒலிதல், ஒழிதல், நீங்கல், வருந்தல்.

ஒவியம் - சித்திரம்.

ஓவியர் - கம்மாளர், சித்திரக்காரர்.

ஓளி - ஒழுங்கு, யானைக்கூட்டம்.

ஓற்பலம் - கொங்கு.

ஓனம் - எழுத்தின் சாரியை.

ஔ

ஔ, ஔகாரம் } அழைத்தல், அனந்தம், உயிரெழுத்திலொன்று, ஔவென்னேவல், கடித்தல், தடை இவற்றைக் காட்டுமோருபசர்க்கம், பூமி, வியப்பு.

ஔகாரக்குறுக்கம் - தன்மாத்திரையிற்குறைந்த ஔகாரம்.

ஔகான் - ஔ, ஔகாரக்குறுக்கம்.

ஔசனம் - தருமநூல் பதினெட்டினொன்று.

ஔடதம் - மருந்து.

ஔதாரியம் - மிகுகொடை.

ஔதாரியன் - வரையாது கொடுப்போன்.

ஔபாசனம் - உபாசனம், ஓமத்தீயோம்பல்.

ஔரசன் - குலமொத்த கன்னியைத் தீவேட்டுப்பெற்றபுத்திரன்.

ஔவித்தல் - அழுக்காறடைதல், பொறாமையடைதல்.

ஔவியம் - அழுக்காறு, பொறாமை, தேவர்களுக்குச் செய்யும் சடங்கு.

ஔவுதல் - அங்கலாய்த்தல், கௌவுதல்.

ஔவை - தவப்பெண், தாய், திருவள்ளுவர் சகோதரி.

க

க - அரசன், ஆன்மா, உடல், ஓரெழுத்து, ஒன்றெனுமெண்ணின்குறி, காமன், காற்று, சூரியன், செல்வன், திருமால்,

தீ, தொனி, நமன், பிரமன், மயில், மனம், விநாயகன், வியங்கோள் விருதியிஃதென்று

ககாரம்
ககரம் } ககரவெழுத்து.
ககாரம்

கஃசு - காற்பலம்.

ககபதி - கருடன்.

ககமாறம் - மணித்தக்காளி.

ககம் - அம்பு, சரகண்டபாஷாணம், பறவை, மணித்தக்காளி.

ககவசுகம் - ஆலமரம்.

ககனம் - ஆகாயம் ஓர்கிழங்கு, காடு, படை, பெரிது.

ககனாரவிந்தம் - ஆகாயத்தாமரை, பொய்.

ககன் - ஸூரியன்.

ககாரம் - ஓரெழுத்து.

கடு - தீச்செய்கை.

கடுஞ்சலம் - சாதகப்புள்.

கருதி - முத்திரைகுத்தின எருது

ககுத்து - இராசலட்சணம், எருத்தின் பிடர், நாக்கு, முக்கியம்.

ககுபம் - திசை, மருதமரம்.

ககேசன்
ககேந்திரன் } கருடன்.

ககோளசாஸ்திரம் - வான சாஸ்திரம்.

ககோளம் - அண்டகோளம், கோளம், வானவட்டம்.

கக்கக்கெனல் - ஒலிக்குறிப்பு.

கக்கசம் } பிரயாசம்.
கக்கிசம் }

கக்கபாளம் - கக்கப்பை.

கக்கம் } அக்குள், எண்ணெய்க்
கட்சம் } கடுகு, கைக்குழியின் கீழ்.

கக்கரி - ஓர்காய், ஓர்கொடி.

கக்கலாத்து - கரப்பான் பூச்சி.

கக்கல் - இருமல், கக்கப்பட்டது, கக்குதல், வாயிலெடுத்தல்.

கக்கார் - தேமா.

கக்கிசம் - பிரயாசம், வருத்தம்.

கக்குதல் - ஆணி முதலிய புறப்படுதல், உட்கொள்ளாமை, வெளி வருதல், எதிரெடுத்தல், கதிர் குலை முதலிய வீனுதல், கொப்பளித்தல், சர்த்தித்தல்.

கங்கணம் - கடகம், கைவளை, நீர்த்துளி, நீர்வாழும் பறவை, முடி.

கங்கதம் - சீப்பு.

கங்கபத்திரம் - அம்பு, உமி, பருந்திறகு.

கங்கம் - கழுகு, கோளக பாஷாணம், சீப்பு, தீப்பொறி, பருந்து, பெருமரம், மரணம், வரம்பு.

கங்கரம் - மோர்.

கங்கன் - ஓரரசன், பிறவிச்சீர் பந்தபாவநாணம்.

கங்காசுதன் - குமரன், பீஷ்மன், விநாயகன்.

கங்காதரன் - சிவன்.

கங்காதீரம் - கங்கைக்கரை.

கங்காதேவி - கங்கை.

கங்காளமாலி - சிவன்.

கங்காளம் - முழுவெலும்பு.

கங்காளன் - சிவன், துருசு.

கங்காளி - காளி.

கங்கானம் - குதிரை.

கங்கு - எல்லை, கருந்தினை, கரை, கவர், கழுகு, தீப்பற்றியதுரும்பு தீப்பொறி, பக்கம், பருந்து, பனைமட்டையின்கவை, வரம் பருகு, வரம்பு, வரையறை.

கங்குல் - இரா, இருள், பரணி நாள்.

கங்குல்விழிப்பு - இராக்காவல், கூகை.

கங்குற்சிறை - இராக்காவல், சந்திரன்.

கங்குநிறம் - கருப்புநிறம்.

கங்கை - ஓராறு, சிவன் மனைவி.

கங்கைகோத்திரம் - நீர் விளங் குன்றம், வேளாளர்குலம்.

கங்கைக்குணன் - நவட்சாரம்.

கங்கைசக்களத்தி - பார்வதி.

கங்கைபெற்ருேன் } பீஷ்மன்,
கங்கைமைந்தன் } முருகன்,
விநாயகன்.

கங்கையோன் - துருசு.

கங்கைவேணியன் - சிவன்.

கசகசப்பு - ஒலிக்குறிப்பு.

கசகசா - ஓர்பூண்டு, ஓர்மருந்துச் சரக்கு.

கசகம் - வெள்ளரி.

கசகரிகம் - கக்கரி.

கசகன்னம் - காதையசைக்கும் வித்தை, மாரீசம்.

கசகன்னி - வெருகு.

கசக்கார் - தேமா.

கசக்கு - கயக்கு, சோர்வு.

கசக்குதல் - கயங்கச் செய்தல், நழுவுதல், வருந்துதல்.

கசங்கம் - பீநாறி.

கசங்கலம் - கடல்.

கசங்கல் - குழைதல்.

கசங்கனம் - கடைவீதி.

கசங்கு - ஈந்து, ஒலை நீங்கிய வீந்தின் மட்டை, கசங்கென் னேவல், கயங்கு.

கசங்குதல் - குழைதல், தேம்பல், மனநோவல், வேலையினு லிளைத்தல்.

கசடன் - கீழ்மக்கள்.

கசடு - ஐயம், கீழ்மை, குறைவு, குற்றம், தழும்பு, மாசு.

கசட்டை - இளமை, கசப்பு, கயர், துவர்ப்பு.

கசத்தல் - கைத்தல், வெறுத்தல்.

கசந்தலை - கயந்தலை.

கசவம் - புல்.

கசபரீட்சை - கலைஞான மறு பத்து நான்கினுென்று.

கசப்பி - மயிர்ச்சிகைப்பூண்டு, வல்லாரை, வேம்பு.

கசப்பு - கைப்பு, மனத்துக்கம், வெறுப்பு.

கசமாது - ஊமத்தை.

கசம் - ஓரளவு, ஓர்நோய், கயம், தாமரை, மயிர், யானை.

கசரிபு - சிங்கம்.

கசர்ப்பு - இறைச்சி.

கசலை - துன்பம்.

கசறபம் - மஞ்சள்.

கசனை - ஈரம், காவி, குறிச்சூடு.

கசாகு - பாம்பு.

கசாரி - சிங்கம்.

கசாருகன் - கொலையாளன்.

கசாளம் - அடையல்.

கசிதம் - துடிப்பு, பதித்தல், பூச்சு.

கசிதல் - அழுதல், இரங்கல், உருகல், ஊறுதல், கரைதல்.

கசித்தி - வீழி.

கசியபன் - கசியபரிஷி.

கசிவு - அழுகை, அன்பு, கசிதல், வருத்தம், வெயர்வை.

கசுகசுத்தல் - ஈரலித்தல், கசிவாயிருத்தல்.

கசுகசுப்பு - ஒட்டீரத்தன்மை.

கசுகுசெனல் - மெதுவாகப் பேசுதல்.

கசுமால் - அழுக்கு, கெட்டது.

கசை - கவசம், குதிரைச்சம்மட்டி, சவுக்கு, சாட்டை, சித்திரவேலே, பசை, பின்னற்கயிறு, முறுக்கின கம்பி.

கசைமுறுக்கி - தட்டான்குறடு.

கச்சகம் - குரங்கு.

கச்சகர் - கொள்ளு.

கச்சபக்கடாய் - ஆமை ஓடு.

கச்சபம் - ஆமை, மற்போர் நிலேயினென்று.

கச்சம் - அளவு, ஓர்மீன், கடன், கடுகு ரோகணி, கவசம், காய்ச்சர் பாஷாணம், குதிரையங்கவடி, துணிவு, நிச்சயம், மாக்கால், மீனெலும்பு, மூலேக்கச்சு, முன்றூனே, மோர், யானேக்கழுத்திடு கயிறு, வார், விநயம்.

கச்சல் - இளம்பிஞ்சு, ஒல்லியாள், ஓர்மீன், கைப்பு, சிறுமை, பிசகு, வாழைக்கச்சல், வெறுப்பு.

கச்சளம்-இருள், கண்ணிலிடுமை.
கச்சன் - ஆமை.
கச்சாலம் - காய்ச்சற்பாஷாணம்.
கச்சாலை - கச்சபாலயம்.
கச்சி - காஞ்சீபுரம், சீந்தில்.
கச்சு - இடைக்கட்டு, பிணிக்கை, முலைக்கட்டு.
கச்சுரு - நெருப்பு.
கச்சூரம் - கழற்சிக்கொடி, சிறு குறட்டை, பேரீந்து.
கச்சை - கயிறு, கவசம், தழும்பு, முழுப்புடவை, யானைகட்டுங் கயிறு.
கச்சைக்கொடியோன் - கர்ணன்
கச்சோணி - வாசனைப்பண்டம்.
கச்சோதம் - மின்மினி.
கச்சோலம் - ஏலப்பட்டை, கிச்சிலிக்கிழங்கு, மாஞ்சில்.
கஞலல் } கஞறல் } எழுச்சி, கடுப்பு, சினக்குறிப்பு, நெருங்கல், பொலிவு, மிகுதி.
கஞலுதல் - ஒளிர்தல்.
கஞறம் - கள்.
கஞன்றல் - எழுச்சி.
கஞ்சகம் - கச்சு விடுந் தலைப்பு கண்ணிலிடுமோர் மருந்து, முன்றானை.
கஞ்சக்கருவி - வெண்கல வாத்தியம்.
கஞ்சகாரர் - கன்னார்.
கஞ்சம் - அப்பவருக்கம், அமிர்தம், கஞ்சா, கற்கடகபாஷா

ணம், கைத்தாளம், தாமரை, துளசி, நீர், வஞ்சகம், வெண்கலம்.

கஞ்சரீடம் - வலியான்குருவி.

கஞ்சனம் - கரிக்குருவி, கண்ணுடி, கைத்தாளம், வலியான்.

கஞ்சனே - கண்ணுடி, கலசப்பானை.

கஞ்சன் - ஓரரசன், அவன் - கிருஷ்ணன் மாமன், பிரமன்.

கஞ்சா - கஞ்சா, கோரக்கர்மூலி, கள்.

கஞ்சாரி - விஷ்ணு.

கஞ்சி - அன்னப்பால், கஞ்சி, காஞ்சி.

கஞ்சிகை - இரத்தின சிவிகை, சீலை, திரைச்சீலை.

கஞ்சுகம் - சட்டை, சிலந்தி, பாம்பின்றோல், மார்ச்சட்டை, புடவை, முருக்கு.

கஞ்சுகன் - வயிரவன், காவலன்.

கஞ்சுகி - அந்தப்புரத்துக் காவல், காவலன், சட்டை, திரைச்சீலை, பாம்பு.

கஞ்சுளி - சட்டை, சோழியப்பை

கடகடெனல் - கடகடென்றொலித்தல், வசக்கேடு.

கடகம் - ஆயுதவர்க்கம், இராசதானி, உருள், கங்கணம், கர்க்கடகம் கூத்தின் விகற்பம்,

கெண்டிகை, கேடகம், கை வளை, நாடு, படை, மதில், மலை, மலைப்பக்கம், யானைக் கூட்டம், வட்டம்.

கடங்கரம் - உமி.

கடத்தல் - செலுத்தல், தாண்டல், நடத்தல், நெடுகவிடுதல், பாய்தல், பொழுது போக்கல், மீறுதல், விலக்குதல்.

கடப்பாடு - ஈகை, கடமை, செய்யவேண்டுவது, நடை, நேர்மை, முறைமை.

கடமா
கடமான் } காட்டுப்பசு.

கடமா - மதயானை.

கடமுனி - அகத்தியன்.

கடமை - இறை, கடன், காட்டுப் பசு, குடியிறை, தகுதி, முறைமை.

கடம் - அருநெறி, உடல், ஒருப நிடதம், கடமை, கடன், கயிறு, காக்கை, காடு, குடமுழவு, குடம், கொடிக்கடை, கோளை, சாரல், சுடலை, தோட்டம், நண்டு, நீதி, பதக்கு என்னு மோரளவு, பாண்டம், மயானம், மரமஞ்சள், மலைப்பக்கம், மறைவு, யானைக்கதுப்பு, யானைக்கூட்டம், யானைமதம், யானை மத்தகம், வாச்சியம், வானம்.

கடம்பம் - அம்பு, ஓர்மரம், கீரைத் தண்டு, வாலுளுவை.

கடம்பர் - ஓர் சாதியார், குறும்பர்.

கடம்பல் - குமிழமரம்.

கடம்பன் - முருகன்.

கடம்பவனம்
கடம்பாவனம் } மதுரை.

கடம்பு - கருங்குருவைநெல், நீபமரம், பிள்ளை பிறந்தவுடன் சுரக்கும் பால்.

கடம்பூர் - ஓர் ஊர், ஓர் மரம்.

கடரி - மரமஞ்சள்.

கடயம் - அத்தகடசம், ஓர்வகைக் கூத்து.

கடவகம் - ஊர்க்குருவி, ஆமணக்கு, பூமி.

கடலஞ்சிகம் - தருப்பை.

கடலடக்கி - பேய்முசுட்டை.

கடலடைத்தான் - அபினி, கஞ்சா.

கடலர் - நெய்தனிலமக்கள்.

கடலாடி - நாயுருவி.

கடலிராஞ்சி - ஓர்மரம்.

கடலுராய்ஞ்சி - ஓர் நீர்வாழ்பறவை

கடலெலி - ஓர்மீன்.

கடலை - ஓர் பயறு.

கடலோடி - மரக்கல மோட்டுவோன்.

கடல் - ஓரெண், ஸமுத்திரம், பசு.

கடல்படுதிரவியம் - கடலிலுண்டாகுந்திரவியமைந்து. அவை-

அக்கு, உப்பு, சங்கு, பவளம், முத்து.

கடல்மாதர் - நீர்மகளிர்,

கடல்வண்ணன் - ஸ்ரீபரன், விஷ்ணு.

கடவ - அப்படியாக.

கடவது - ஆகட்டும், கூடியது, செய்யவேண்டியது.

கடவல்லி - ஒருபண்டம்.

கடவல் - செலுத்தல்.

கடவன் - செய்வானாக.

கடவு
கடவுமரம்
கடவை } தணக்கு மரம், வழி.

கடவுட்பணி - ஆதிசேஷன், தேவதொண்டு.

கடவுண்மூர்த்தி - அருகன்.

கடவுளர் - தேவர்.

கடவுளர்தாரம் - தேவதாரம்.

கடவுள் - குரு, தெய்வம், நன்மை, முனிவன்.

கடவுள்வணக்கம் - கடவுள் வாழ்த்து, தெய்வ வணக்கம்.

கடவை - ஏணி, கடவுமரம், குற்றம்.

கடறு - அருநெறி, காடு, வானுறை, சுரம்.

கடற்குருவி - கல்லுப்பு.

கடற்சார்பு - நெய்தநிலம்.

கடற்சேர்ப்பன் - நெய்த நிலத் தலைவன்.

கடற்பச்சை - சமுத்திரப் பச்சை.

கடற்பிணா - நெய்த நிலப்பெண்.

கடற்பிறந்தாள் - இலக்குமி.

கடற்றீ - கடனுரை.

கடனம் - தாழ்வாரம், முயற்சி.

கடன் - அளத்தல், இருணம், குடியிறை, கடமை, மரக்கால், முறைமை.

கடா - ஆடு எருமை இவற்றி னாண், கடாவென்னேவல், வினா.

கடாகம் - கிணறு, கொப்பரை.

கடாட்சம் } கடைக்கண், கடாக்ஷம் } கருணை.

கடாம் - யானைமதம்.

கடாரம் - ஓரூர், கருமை கலந்த பொன்மை, கொப்பரி.

கடாரி - ஈனாவிளமாடு, நாடு.

கடாரை - ஓர் நாரத்தை.

கடாவல் - கடவல், செலுத்தல், வினவல்.

கடி - அச்சம், அதிசயம், அரை, இடுப்பு, இரப்போர், இன்பம், ஒளி, கடியென்னேவல், கடிது, கரிப்பு, களிப்பு, காலம், காவல், கூர்மை, கைப்பற்றல், சிறப்பு, சீக்கிரம், தொனி, நந்தவனம், நிதம்பம், நீக்கல்,

பிரகாசம், புணர்வு, புதுமணம், புதுமை, பொழுது, மிகுதி, வாசனை, விளக்கம், விரைவு.

கடிகண்டு - பூனைக்காலி.

கடிகம் - கரமுட்டி.

கடிகாரம் - நாழிகைவட்டம்.

கடிகை - அரையாப்பு, உண்கலம், கரகம், சமயம், நாழிகை, தாழ்க்கோல், துண்டம், வேதம்.

கடிகைமாக்கள்-மங்கலப்பாடகர்.

கடிகைவெண்பா - ஓர்பிரபந்தம்.

கடிசு - கடுமை, நிமிர்வு.

கடிசூத்திரம் - அரைநாண்.

கடிச்சை - ஓர்செடி, ஓர்மீன்.

கடிஞை - இரப்போர்கலம்.

கடிதடம் - அரை, நிதம்பம்.

கடிதம் - அடுக்கல், இணைவு, காகிதம், செய்யப்பட்டது, பிசின்.

கடிதல் - அழித்தல், அறுத்தல், ஒடுக்கல், கண்டித்தல், கோபித்தல், சினக்குறிப்பு, தடைசெய்யல், தண்டித்தல், நீக்கல், வெட்டல்.

கடிந்தோன் - முனிவர்.

கடிப்பகை - கடுகு, வேம்பு.

கடிப்பம் - ஆபரணப்பெட்டி, காதணி, கெண்டிகை.

கடிப்பிணை - காதணி.

கடிப்பிரதேசம் - பின்பக்கம்.

கடிப்பு - குணில்.

கடிப்பை - சிறுகடுகு.

கடியிரத்தம் - மூக்கிரட்டை.

கடிரோமம் } கோரைக்கிழங்கு.
கடிலா }

கடிவை - யானை.

கடினம் - அழுத்தம், கொடுமை, வன்மை.

கடினை - கண்ணின் வெண்மையான வெளிச்சவ்வு.

கடு - கசப்பு, கடுகுரோகணி, கடுக்காய், கடுக்காய்மரம், கடுவெண்ணேவல், கார்த்தல், கூன் நஞ்சு, பாம்பு, முதலை, முள், முள்ளி, முன்.

கடுகம் - கார்ப்பு, கடுகுரோகணி சுக்கு, திப்பிலி, மிளகு.

கடுகல் - சமீபித்தல், விரைதல்.

கடுகியகாந்தி - இரஜதபாஷாணம்.

கடுகு - ஐயவி, கடுகென்னேவல், குன்றிச்செடி.

கடுகுரோகணி - ஓர் மருந்து.

கடுக்காய் - ஹரீதகி.

கடுக்கை - கொன்றைமரம்.

கடுக்கைக்கண்ணியன் } சிவன்.
கடுக்கைசூடி. }

கடுங்காந்தி - இரஜதபாஷாணம்.

கடுங்கூர்மை - அமரியுப்பு, கடுந்திலாலவணம்.

கடுசரம் - கடுகுரோகணி.
கடுசாரம் - காசிச்சாரம்.
கடுஞ்சாரி - நவட்ச்சாரம்.
கடுஞ்சுண்ணத்தீ - சீனக்காரம்.
கடுடம் - மருக்காரை.
கடுதல் - திருடல், பறித்தல்.
கடுத்தலை - வாள்.
கடுத்தல் - உவமை, ஐயம், சோபம், சினம், வேகம்.
கடுந்தழற்பூமி - உழுமண்.
கடுந்திலாலவணம் - எள்ளுப்பு.
கடுப்படக்கி - எருமுட்டைப் பீநாறி.
கடுப்ப - போல.
கடுப்பு - சினம், விரைவு.
கடுப்பை - வெண்கடுகு.
கடுமுள் - ஆயுதப்பொது.
கடுமை - அகோரம், கடினம், கண்டிப்பு, குரூரம், கொடுமை, கோபம், சீக்கிரம், மிகுதி, மூர்க்கம், வன்மை, விறைவு.
கடும்பச்சை - நாகப்பச்சை.
கடும்பு - உறவு, சும்மாடு, சுற்றம்.
கடுகுரோகணி - கடுகுரோகணி.
கடுவளி - பெருங்காற்று.
கடுவன் - குரங்கு, பூனை முசு இவற்றினாண், விலங்கேற்றின் பொது.

கடை - அங்காடி, ஆபணம், இடம், எழுஞருபு, கடைசி, கடையென்னேவல், கீழ், பணிப்பூட்டு, புறவாயில், முடிவு, வழி, வாயில், வினையெச்சவிகுதி.

கடைகழிமகளிர் - பொதுமகளிர்.

கடைக்கணித்தல் - கடாட்சித்தல், கடைக்கண்ணாற் பார்த்தல், புறக்கணித்தல்.

கடைக்கனல் - ஊழித்தீ.

கடைக்காப்பு - பதிகத்தின் கடைசிப்பாட்டு.

கடைக்குளம் - உத்திராடநாள்.

கடைக்குறை - ஈறு குறைந்து நிற்குஞ்சொல்.

கடைக்கூழை - ஓர் தொடை, பிற்படை.

கடைசியர் - பள்ளத்தியர்.

கடைச்சங்கம் - பிற்சங்கம்.

கடைச்சி - கெட்டி, மருதநிலப் பெண்.

கடைஞர் - மருதநிலமாக்கள்.

கடைதடம் - வாயில்.

கடைதலைப்பூட்டு - விற்பூட்டுப் பொருள்கோள்.

கடைதல் - குடைதல்.

கடைதிறப்பு - கதவுதிறத்தலைக் குறித்த ஓர்பிரபந்தம்.

கடைநாள் } இரேவதி.
கடைமீன் }

கடைநிலை - ஈற்றெழுத்து, ஓர் பிரபந்தம், கடையில் நிற்பது, புறவாயில்.

கடைநிலைத்தீபகம் - ஒருசொல் செய்யுட் கடையில் நின்று மற்றுஞ் சொல்லோடு சேர்ந்து பொருள் கொடுப்பது.

கடைநிலையளபெடை - ஓர் பாட்டின் சொல்லினீற்றில் வருமளபெடை.

கடைநிலையெழுத்து - இறுதிநிலை.

கடைபோதல் - நிறைவேறல், முடித்தல்.

கடைப்பாடு - இழிவு, தீர்மானம்.

கடைப்பிடி - உறுதி, கருமமுடிக் குந்துணிவு, தளரா முயற்சி, தேற்றம், மறவாமை.

கடைப்போலி - இறுதிப்போலி.

கடைமடக்கு - சொல்லணியி லொன்று.

கடைமுரண் - ஓர் தொடை.

கடைமுறை - கடைசி.

கடைமோனை } நான்கடியி
கடையாகுமோனை } னீறுமோ
னெழுத்தின் முடியுங்கவி.

கடையம் - இந்திராணி கூத்து.

கடையயல் - ஈற்றயல்.

கடையர் - கடைஞர்.

கடையழிதல் - குன்றல், கெடுதல், கேடுறல், தேய்தல், மிடித்தல், வருந்தல்.

கடையளபெடை - செய்யுளுருப்பினொன்று.

கடையனல் - ஊழித்தீ

கடையாகெதுகை ஓர்தொடை.

கடையாயர் - கடையர்.

கடையிணைமுரண்-ஓர் தொடை.

கடையெழுஞ்சனி - உத்திரநாள்.

கடைவள்ளல் - கேட்டபின் கொடுப்போன்.

கடோரம் - கடிமை, கொடுமை, நிறைவு.

கட்கத்தம்பம் - கலைஞான மறுபத்து நான்கினொன்று.

கட்கம் - வாள்.

கட்சம் } சங்கபாஷாணம், நவக்கி
கக்ஷம் } ரக கட்சம், தந்திரவிதி.

கட்சி - காடு, சரீரம், பறவைக்கூடு, பக்கம், மனிதர்படுக்கை, வழி.

கட்செவி - பாம்பு.

கட்டங்கம் - தண்டு, பொல்லு, மாத்திரைக்கோல்.

கட்டம் - காடு, தாடி, துன்பம், மலம்.

கட்டல் - இறுகல், உடுத்தல், தடை, தழுவல், திருடல்,

தோண்டல், பிணித்தல், மூடல் மெய்ப்பரிசமெட்டினென்று.

கட்டழகு - அலங்காரம், பேரழகு.

கட்டழல் - கடுந்தீ.

கட்டளை - அளவு, உத்தரவு, உருவங்கள்வார்க்கு உரைகல், உவமை, ஒழுங்கு, கருவி, கற்பனை, செங்கல்லச்சு, துலாராசி, நிறை, நிறையறிகருவி.

கட்டளைக்கலித்துறை - ஓர்வகை கலித்துறை, ஓர்விதப்பா.

கட்டளைக்கலிப்பா - ஓர்வகைக் கலிப்பா.

கட்டளைக்கல் - உரைகல், நிறை கல், படிக்கல்.

கட்டாஞ்சி - முள்வேல்.

கட்டாடி - குறிசொல்வோன், வண்ணான்.

கட்டாணி - உலோபி, கடைப் பூட்டாணி, தூர்த்தன், பல் சாலி, பேராசைக்காரன்.

கட்டாண்மை - பேராண்மை.

கட்டாம்பாரை - ஓர்மீன்.

கட்டாயம் - கடுமை, கட்டுப்பாடு, நெருக்கிடை, பலாத்காரம், வெறுப்பு.

கட்டார்ச்சிதம் } வருந்தித் தேடியபொருள்
கஷ்டார்ஜிதம் }

கட்டி - அகமகிழ்ச்சி, இடப்பு, ஓர் புள், கட்டி, கருப்புக்கட்டி, கற் கண்டு, பாடை.

கட்டியக்காரர் - புகழ்வோர்.

கட்டியங்கூறல் - எழுச்சிகூறல், புகழ்கூறல்.

கட்டியம் - ஓர் கூத்து, புகழ்ந்து பேசல்.

கட்டில் - மஞ்சம்.

கட்டிளமை - மிக்கிளமை.

கட்டு - அரண், ஆணை, உறுதி, கட்டென்னேவல், காவல், குறி, சம்பந்தம், சிலர்திப்பரு, தளை, பொய், மலைப்பக்கம், மிகுதி, மூட்டை, வரம்பு.

கட்டுரை - உறுதிச்சொல்.

கட்டுரைத்தல் - தீர்மானித்துச் சொல்லல்.

கட்டை - விறகு.

கட்டோசை - பேரொலி.

கட்புலன் - நேத்திரேந்திரியம்.

கணகம் - படையிலோர்தொகை.

கணக்கதிகாரம் - கணக்கு நூல்.

கணக்கன் - கணக்கன், புதன், கணக்கில் வல்லவன்.

கணக்காயர் - அறிஞர், ஒத்துரைப்போர், பொருந்தச்சொல்வோர்.

கணக்கு - எண், எழுத்து, காரியம், மட்டு.

கணக்குவகை - சங்கலிகிதம் என்னும் தொகை, பாகாரம் என்னும் பிரிவு, குணம்

என்னும் பெருக்கு; விவகலிதம் என்னும் கழிவு.

கணநாதர்
கணநாயகர் } கணுதிபர்.

கணபதி - விநாயகன்.

கணப்பு - சூடு, தீச்சட்டி.

கணப்பொருத்தம் - செய்யுட்பொருத்தத்தொன்று, விவாகப்பொருத்தம்பத்திலொன்று.

கணமூலி - சாணுக்கி.

கணமொழி - பன்மையைக்காட்டுவது.

கணம் - ஓர்நோய், காலநுட்பம், கூட்டம், சிறுமை, நான்குநிமிஷம், திரட்சி, படையிலோர் தொகை, பிசாசம், மாத்திரை, வட்டம், வர்க்கம், விலங்கின் கூட்டம், விண்மீன்.

கணவம் - அரசமரம்.

கணவன் - கொழுநன், தலைவன்.

கணவீரம் - அவரிச்செடி.

கணனம் - எண்ணல்.

கணுதன் - ஓர்முனிவன்.

கணுதிபன் - விநாயகன்.

கணி - ஓர்ஜாதி, கணிப்போன், கணியென்னேவல், கூத்தாடுந்தொழில், மருதநிலம், வேங்கைமரம்.

கணிகம் - நூறுகோடி.

கணிகை - தாசி, வேசி.

கணிச்சி - உளி, கோடாரி, நமனு யுதம், மழு, மூக்கரிகத்தி, வெற்றிலை.

கணிதசிந்தாமணி - ஓர் சோதிட நூல்.

கணிததீபிகை - ஓர் நூல்.

கணிதம் - எண், எண்ணல், சோதிட நூல்.

கணிதர்-கணக்கறிந்தோர், கணக் கெழுதுவோர், சோதிடர்.

கணித்தல் - அளவு குறித்தல், எண்ணல், மதித்தல்.

கணியான் - கூத்தாடி.

கணீர்கணீரெனல் - கணீர்கணீ ரென்றொலித்தல்.

கணு - கவர், என்புக்கணு, மரத் தின் முளி, மூட்டு.

கணேசன் - விநாயகன்.

கணை - அம்பு, ஒலி, ஓர்நோய், திப்பிலி, திரட்சி, நிறைவு, பூரநாள், வளைதடி.

கணைக்கால் - சங்கம்.

கணையம் - அம்பு, காவற்காடு, பொன், போர், யானைக்கம்பம், வளைதடி.

கணையாழி - மோதிரம்.

கண் - அக்கி, இடம், இரக்கம், ஏழனுருபு, கணு, கண்ணென் னேவல், கண்ணோட்டம், நேத்திரம், பெருமை, மயிற் றோகைக்கண், விழி.

கண்கூடு - கண்குவளை, காட்சி யளவை, பிரத்தியட்சம்.

கண்டகசங்கம் - முட்சங்கு.

கண்டகதுவாரம் - முட்டொளை.

கண்டகம் - காடு, சுரிகை, தடை, நீர்முள்ளி, புளகம், மரவைரம், முள், வாள்.

கண்டகர் - அஸுரர், கீழ்மக்கள்.

கண்டகி - ஓர்நதி, முள்ளெலும்பு.

கண்டகிச்சிலை - சாலக்கிராமம்.

கண்டத்தலம் - கழுத்து.

கண்டது - செய்தது.

கண்டநாளம் - தொண்டைக்குழி.

கண்டம் - அக்குரோணி, எல்லை, எழுத்தாணி, ஓர் யோகம், கண்ட சருக்கரை, கவசம், கழுத்து, கள்ளி, கைப்பிடிவாள், குன்றிவேர், சாதிலிங்கம், சிறுவாள், தத்து, திரைச்சீலை, துண்டம், நவகண்டம், நாடு, பிரிவு, மணி, மணியுளோசை, மிடறு, யானைக்கச்சை, யானைக்கழுத்து, வெல்லம்.

கண்டரை - இரத்தாசயத்தின் இடச்சடரத்திலிருந்து (கீழறை) எழும்பும் பெருநாடி.

கண்டர் - துருசி.

கண்டல் - ஓர்மரம், தாழை, நீர்முள்ளி, முள்ளி.

கண்டறை - கற்புழை, மலைக்குகை.

கண்டனம் }
கண்டனை } நிராகரிப்பு.

கண்டன் - எசமான், ஓர் சோழன், புருடன், வீரன்.

கண்டாஞ்சி - முள்வேல்.

கண்டாரவம் - ஓரிசை, மணியினோசை.

கண்டாலிழ்தம் - கண்டூரம், கண்டௌஷதம்.

கண்டி - ஓரூர், கண்டியென்னேவல், கழுத்தணியிலொன்று.

கண்டிகை - உருத்திராட்சமாலை, கடகம், தோளணி, நிலப்பிரிவு, பதக்கம், பணிச்செப்பு, மாதரணிவடம்.

கண்டிதம் - உறுதி, கண்டிப்பு, தண்டனை.

கண்டித்தல் - கடிதல், தறித்தல், வெட்டல்.

கண்டிப்பு-கண்டித்தல், நிச்சயம்.

கண்டியர் - பாணர்.

கண்டில் - இருபத்தெட்டுத் துலாங்கொண்டது.

கண்டீரவம்-சதுரக்கள்ளி, சிங்கம்.

கண்டு - கருப்புக்கட்டி, கழலைக்கட்டி, கற்கண்டு, கண்டங்கத்திரி, சொரி, நூற்பந்து, பரு.

கண்டுகம் - மஞ்சிட்டி.

கண்டூதி - காஞ்சொறி, தினவு.

கண்டூரம் - கண்டாவிழ்தம்.

கண்டை - சிலை, பெருமணி, யானைமணி, வீரக்கழல்.

கண்ணகி - கோவலன் மனைவி.

கண்ணஞ்சல் - அஞ்சுதல், கண்ணை மின்னுதல்.
கண்ணல் - கருதல், குறித்தல்.
கண்ணழித்தல் - பதப்பொருளுரைத்தல்.
கண்ணறை - அகலம், குருடு.
கண்ணன் - திருமால்.
கண்ணா - ஓர் மரம், திப்பிலி.
கண்ணாம்பூச்சி - ஓர் விளையாட்டு, கண்மயக்கம்.
கண்ணாளன் - கணவன், தோழன்.
கண்ணி - அரும்பு, கயிறு, கண்ணையுடையவள், கொழுந்து, தாம்பு, புடபடுக்குங்கயிறு, பூங்கொத்து, பூட்டாங்கயிறு, பூமாலை.
கண்ணிகம் - மணித்தக்காளி.
கண்ணிகை - தாமரைக்கொட்டை, பூவரும்பு.
கண்ணிக்கொடி - ஓர்படர்கொடி.
கண்ணிலி - குருடன், திருதராஷ்டிரன்.
கண்ணீராக்கி பச்சைக்கர்ப்பூரம்.
கண்ணுகம் - குதிரை.
கண்ணுக்கரசன் - துருசு.
கண்ணுக்கினியான் - கரிசிலாங்கண்ணி, பொன்னங்காணி.
கண்ணுதல் - கருதல், குறித்தல், சிவன்.
கண்ணுவம் - கம்மியம்.
கண்ணுவன் - ஓரிருஷி.
கண்ணுளர் - கண்ணுளர், நாடகர்.

கண்ணுள் - கூத்து.

கண்ணுறல் - இடத்தைச் சேரல், காணல்.

கண்ணுறை - மேலீடு.

கண்ணெச்சில் - கண்ணேறு.

கண்ணேறு - திருஷ்டிதோஷம்.

கண்ணோடல் - தயவாதல்.

கண்ணோட்டம் - கடைக் கண் பார்வை, நாகரீகம், தயவு, மரியாதை.

கண்படல் - நித்திரை செய்தல்.

கண்படை - நித்திரை, மனிதர் படுக்கை.

கண்படைநிலை - ஓர் பிரபந்தம்.

கண்பாடு - நித்திரை.

கண்புதைத்தல் - கண்பொத்தல்.

கண்மணி - கண்ணின் கருமணி.

கண்மை - கண்ணுக்கிடுமை, கண்ணோட்டம்.

கண்வளர்தல் - துயிலல்.

கண்விதுப்பழிதல் - கண்ணவாக் கெடல், கண்ணின தழருகெடல்.

கண்வினைஞர்
கண்வினையாளர் } கம்மாளர்.

கதகாலம் - செல்காலம்.

கதண்டு - கருவண்டு.

கதம்-கோபம், செல்கை, பாம்பு.

கதம்பம் - ஆன்கூட்டம், கடம்ப மரம், காறுங்கோழிக்கூட்டம்,

மேகம், வாசனைப்பொடி, வெண்கடம்பு.

கதலி - காற்றாடி, தேற்றாமரம், வாழை, விருதுக்கொடி.

கதலிகம் - தேற்றாமரம்.

கதலிகை - துகிற்கொடி.

கதலிச்சி - கருப்பூரம்.

கதலீபாகம் - செய்யுள் நடை நான்கிலொன்று.

கதலுதல் - அசைதல்.

கதவம் - கதவு, காவல்.

கதவாக்கியம் -சோதிடத்திலோர் வாக்கியம்.

கதழ்வு - உக்கிரம், உவமைச் சொல், கடுப்பு, சிறப்பு, சினம், பருதி, பெருமை.

கதறல் - அழுதல், கத்தல், கூப்பிடல்.

கதனம்-கடுப்பு,கலக்கம், கொலை, பேச்சு, போர்.

கதாபாணி - தண்டபாணி.

கதாமஞ்சரி - கதைத்திரட்டு.

கதாயுதம் தண்டாயுதம்.

கதாயுதன் - வயிரவன், வீமன்.

கதாயுத்தம் - தண்டாயுதப்போர்.

கதி - அடைக்கலம், அதிட்டம், ஆதரவு, ஐசுவரியம், கதியென்னேவல், கிரகநடை, குதிரை நடை, திராணி, நரகர், நாற்கதி-தேவர், மக்கள், மிருகம் என்னும் நால்வகைக்கதிகள், பதவி, பரகதி, புகலிடம், மோக்ஷம்.

கதிக்கும்பச்சை - நாகப்பச்சை.

கதிக்கை - அதிகரிப்பு, கருக்கு வாளிமரம்.

கதித்தல் - எழுச்சி, ஒலித்தல்.

கதிரம் - அம்பு, ஓர் மரம், கருங் காலி, பிசின்.

கதிரவன் } சூரியன்.
கதிரோன் }

கதிரெழுதுகள் - அணு எட்டுக் கொண்டது, சூரியகிரணத் தெழுந்துகள்.

கதிர் - இருப்புமுள், கிரணம், சூரியகிரணம், சூரியன், தேருட் பரப்பின்மரம், பயிர்க் கதிர்.

கதிர்காமம் - ஓர்தலம்.

கதிர்நாள் - உத்திரநாள்.

கதிர்ப்பகை - அல்லி, இராகு, குவளை, கேது.

கதிர்மகன் - கர்ணன், சனி, சுக் கிரீவன், நமன்.

கது - வடு, வெடிப்பு.

கதுப்பு - கவுள் பசுக்கூட்டம், பெண்மயிர், மைந்தர் மயிர்.

கதுமெனல் - சீக்கிரம், சீக்கிரக் குறிப்பு.

கதுவாய் - இடையிட்டுவருவது, கீழ்க்கதுவாய், மேற்கதுவாய், மோனைத்தொடை, வடுப்ப டல்.

கதவுதல் - கலங்குதல், நீங்காது பற்றல், பற்றுதல், வாங்குதல்.

கதை - கட்டுக்கதை, காரணச் சொல், சரிதம், சொல், சொல் லென்னேவல், தடி. தண்டா யுதம்.

கதைத்தல் - சொல்லுதல்.

கதோபகதனம் - சம்பாஷணை.

கத்தபம் - கழுதை.

கத்தம் - புஜம், கதை.

கத்தரி - ஓர்பாம்பு. கத்தரியென் னேவல், வழுதுணை.

கத்தரிகை - கத்தரிக்குங்கருவி.

கத்தரிக்கை - அறுத்தல், கத்தரித் தல்.

கத்தரிநாயகம் - யானைச்சீரகம்.

கத்தரிமணியன் - ஓரெலி.

கத்தல் - கூப்பிடல், பிதற்றல், விலங்குசாதிகத்தல்.

கத்தன் - அருகன், கத்தா, கட வுள், செய்பவன்.

கத்தி - வாள், வெட்டுக்கத்தி.

கத்திகை-கருக்குவாளிமரம், சிறு கொடி, துகிற்கொடி, பூமாலை.

கத்தியம் - இலக்கணமின்றியிலக் கணப்பாட்டுபோற்சொல்வது, சிலை, நல்லாடை.

கத்தியோதம் - மின்மினிப்பூச்சி.

கத்திரி - ஓர் வகைச்செடி, ஓர் பாம்பு, ஓராயுதம், ஓர் வகைப், பாறை.

கத்து - கத்தென்னேவல், சந்து, பிதற்றுதல்.

கத்துதல் - கத்தல், கூப்பிடல், முழங்கல்.

கத்துரு - ஆதிசேஷன்தாய், கத்தன்.

கத்துருபம் - குதிரைப்பற்பாஷாணம்.

கத்தூரி-கத்தூரிமிருகம், நாணம்.

கத்தை - கழுதை.

கந்தகசிந்தூரம்
கந்தகசுண்ணம் } கந்தகபஸ்பம்.
கந்தகநீறு

கந்தகதிராவகம்-கந்தகச்செந்நீர்.

கந்தகபாஷாணம் -அவுபலபாஷாணம்

கந்தகம் - அவுபல பாஷாணம், உள்ளி, ஓர் மருந்து.

கந்தகரசாயனம் - ஓர் மருந்து.

கந்தகவுப்பு - கடுங்கூர்மை.

கந்தஷட்கம் - தமரத்தை.

கந்தசன்மாத்திரை - மண மறி புலன்.

கந்தநாகுலி - செவ்வியம், மிளகு.

கந்தநாகுலியம் - அரத்தை.

கந்தபூதியம் - நாய்வேளை.

கந்தப்புராணம் - ஸ்காந்தம்.

கந்தப்பொடி - வாசனைப்பொடி.

கந்தமலை - சுப்பிரமணிய ஸ்லதமுள்ள ஓர் குன்று.

கந்தமாதனம் - இராமேச்சுரத்திற்கயலான ஓர்மலை, குலகிரியெட்டிலொன்று.

கந்தம் - அனுத்திரள், இந்திரியம், உள்ளி, கருணை, கழுத்தடி, கிழக்குப்பொது, சந்தனம், நாற்றமெனும்புலன், பங்கு, பஞ்சகந்தம், வாசனை.

கந்தரக்காட்டம் - வெள்ளைப்பாஷாணம்.

கந்தரசு - சாம்பிராணி.

கந்தரம் - கடற்பாசி, கழுத்து, கற்கடக பாஷாணம், தீ முருகற் பாஷாணம், புனல்முருங்கை, மலைக்குகை, மேகம்.

கந்தருவம் - இசை, இசைப்பாட்டு, குதிரை, எண்மணத்தினொன்று.

கந்தருவர் - தேவசாதியிலோர் வகையார்.

கந்தரை - குகை.

கந்தர்ப்பன் - மன்மதன்.

கந்தலோகம் - சுப்பிரமணிய பதம்.

கந்தல் - அழிதல்,கெடுதல்,பீறல்.

கந்தவகம் - மூக்கு, மோத்தல்.

கந்தவகன் } காற்று.
கந்தவாகன் }

கந்தவருக்கம் - சுகந்தம், வாசனைத்திரவியங்கள்.

கந்தவாரம் - அந்தப்புரம், அரசன்றேவியிருக்கை.

கந்தனம் - கதுப்பு, கவசம், தளிர், பொன், போர்.

கந்தனேந்திரர் - ஓர் சித்தர்.

கந்தன் - அருகன், காமன், குமரன், சீர்பந்தபாஷாணம், சூதபாஷாணம்.

கந்தி - கந்தகம், கந்தகபாஷாணம், கமுகு, தவப்பெண், மணவென்னேவல், வாசம்.

கந்தித்தல் - மணத்தல்.

கந்தியுப்பு - கந்தகவுப்பு.

கந்திவாருணி - பேய்த்தும்மட்டி.

கந்து - அருகு, கட்டுத்தறி, கந்தென்னேவல், கழுத்தடி, கெடுவென்னேவல், தூண், பண்டி, பண்டியுள்ளிரும்பு, பற்றுக்கோடு, யாக்கையின்மூட்டு, யானையணைதறி, வைக்கோற்றிரள்.

கந்துகம் - குதிரை, குறுநிலமன்னர் குதிரை, பந்து.

கந்துகன் - தான்றி.

கந்துதல் - கந்தல், கெடுதல்.

கந்துளம் - பெருச்சாளி.

கந்துள் - கரி.

கந்தேறு - கோடகசாலை.

கந்தை - கரணை, சீலை, நல்லாடை, பீறல்.

கந்தொட்டம் - கருங்குவளை, வெண்குவளை.

கபடம் - தந்திரம், வஞ்சகம்.
கபந்தம்-உடற்குறை, கவடம், நீர்.
கபம் - கோழை.
கபம்பம் - வாலுளுவை.
கபாதம் - சிவன்சடை.
கபாடம் - கதவு, காவல்.
கபாய் - நிலையங்கி.
கபாலதரன் } சிவன்.
கபாலன் }
கபாலபாணி - சிவன்.
கபாலம் - தலையோடு, இரப்போர்கலம்.
கபாலன் - சேர்பந்த பாஷாணம்.
கபாலி - சிவன்.
கபி-கயிறிழுக்குங்கருவி, குரங்கு.
கபிகுலம் - குரங்கினம்.
கபிஞ்சலம் - ஆந்தை, காடை, சாதகப்புள்.
கபிதம் - கருஞ்சீரகம்,
கபித்தம் - கொட்டிக்கிழங்கு, விளாமரம்.
கபிலம் - கருமை கலந்த பொன்மை, பதினெண் புராணத்தொன்று.
கபிலன் - ஓரறிஞன், திருவள்ளுவர் ஸஹோதரன்.
கபிலை - கருமை கலந்த பொன்மை, தென்கீழ்த்திசையானைக் குப்பெயர், தேவபசு, நீரிறைக்கும் சூத்திரத்தொன்று, பசு.

கபோதம் - கரும்புறா, சித்திரக் கம்பி, புறா.

கபோலம் - கதுப்பு.

கப்படம் - சீலை.

கப்பணம் - இரும்பினியற்றிய நெருஞ்சின்முள், ஓராபரணம், கழுத்திடுமிரும்புத்தகடு, கை வேல்.

கப்பம் - அரசிறை.

கப்பரை - இரப்போர்கலன்.

கப்பி - ஓர்கருவி, கயிறிழுக்குங் கருவி, கழிகடை, குறுணல், தானியம்.

கப்பு - கவர்க்கொம்பு.

கமகன் - அரும்பொருளைச் செம் பொருணடையிற் காட்டிப் பாடுவோன்.

கமடம் - ஆமை.

கமண்டலம் - கரகம், கெண் டிகை, சுரைக்குடுக்கை.

கமநம் - நடை.

கமம் - நிறைவு, விளைநிலம்.

கமர் - நிலப்பிளவு.

கமலக்கண்ணன் - விஷ்ணு.

கமலகிருத்தம் - கூத்தினோர் விகற்பம்.

கமலம் - தாமரை, நீர்.

கமலயோநி - பிரமன்.

கமலவூர்தி - அருகன்.

கமலாகாரம் - தாமரைவடிவம்.

கமலாசனி - இலக்குமி.

கமலாலயம் - திருவாரூர்.

கமலாசனன் - பிரம்மன்.

கமலாலயை - இலக்குமி.

கமலி - குங்குமபாஷாணம்.

கமலினி - பார்வதியின் சேடி களிலொருவள்.

கமலை - இலக்குமி, திருவாரூர்.

கமல் - குடசப்பாலை, வெட்பாலை.

கமழ்தல் - மணத்தல், வாசனை யாதல்.

கமனகுளிகை - சித்தர்குளிகையி லொன்று.

கமனசித்தர் - நினைக்குமிடந்தோ றும் செல்லவல்ல சித்தர்.

கமி - மிளகு.

கமித்தல் - க்ஷமித்தல், பொறுத் தல்.

கமுகு - பாக்குமரம்.

கமுக்கட்டு - அக்குள்.

கமை - க்ஷமை, பொறுமை.

கமையிலான் - பொறையிலான்.

கம் - அறிவு, ஆகாயம், ஆட்டுக் கடா, இந்திரியம், கம்மியர் தொழில், காற்று, சந்தோஷம், செயல், தலை, நீர், பிரமன், மேகம், விந்து, வெண்மை.

கம்பம் - அசைவு, தூண், நடுக் கம், பாய்மரம், விளக்குத் தண்டு, வெள்ளைப்பாஷாணம்.

கம்பலம் - கம்பளி, செவ்வாடை மேற்கட்டி.

கம்பலை - அச்சம், ஒலி, ஓசை, சண்டை, துன்பம், நடுக்கம், மருதநிலம். வயல்.

கம்பளம் - ஓர்நாடு, கம்பளி, செம்மறிக்கடா, செவ்வாடை, திருவாட்டேறு.

கம்பளர் - கம்பள நாட்டார்; மருதநிலமக்கள்.

கம்பளிக்கொண்டான் - ஓர்செடி.

கம்பளம் - அசைவு, அதிர்த்தல்.

கம்பன் - ஓர் புலவன்.

கம்பாநதி - வேகவதியாறு.

கம்பி - இரும்பு முதலியவற்றின் கம்பி, கம்பி யென்னேவல், காசு, காதணி, சித்திரக்கம்பி, வெடியுப்பு.

கம்பிதம் - அசைவு, நடுக்கம்.

கம்பித்தல் - அசைதல், நடுங்கல்.

கம்பீரம் - ஆர்ப்பரிப்பு, ஆழம், கனம். செருக்கு.

கம்பு - ஓர் பயிர், சங்கு, செந்தினை, மரக்கொம்பு, தடி.

கம்புள் - சங்கு, சம்பங்கோழி, வானம்பாடி.

கம்பை - எல்லை, கம்பாநதி, பொறுப்பு

கம்பஞ்செய்மாக்கள் - கைப்பாடுபடுவோர்.

கம்மம்-கம்மியர்தொழில், வேலை.

கம்மாளர் - கம்மியர்.

கம்மல் - இருமல், காதோலை, மங்கல், மாசு.
கம்மியம் - கைத்தொழில், பேறு.
கம்மியர் - கம்மாளர், தொழிற் செய்வோர்.
கம்மெனல் - வாசனைக்குறிப்பு.
கம்மை - சிறகீரை.
கயக்கு - கசக்கென்னேவல்; கைக்குதல், சோர்வு.
கயங்குதல் - குழைவு, சோர்தல், நொந்து மெலிதல், விலகிவிடுதல்.
கயந்தலை - மனத்துயர், யானைக் கன்று.
கயப்பிணை - வங்கமணல்.
கயமுகன - விநாயகன்.
கயமை - கீழ்மை.
கயம் - அகழ், அழிவு, ஆழம், இளமை, கருமை, ஓர் நோய், கீழ், குளம், கேடு, தேய்வு, நீர், பெருமை, மேன்மை, யானை.
கயல் - கெண்டைமீன்.
கயவர் - கீழ்மக்கள்.
கயவாய் - கரிக்குருவி, கழிமுகம்.
கயவு - உயரம், கழிமுகம், களவு, பெருமை, மிகுதி, மேன்மை.
கயாகரம் - ஓர் நிகண்டு.
கயிங்கரியம் - கைங்கரியம்.
கயிங்கரியர் - ஊழியஞ்செய்வோர், தொண்டு புரிபவர்.

கயிரம் - அலரி.

கயிரவம் - செவ்வாம்பல், வெள்ளாம்பல்.

கயிரிகம் - ஓர்மண், காவிக்கல்.

கயிரை - சுற்றம்.

கயிலாசம் - கயிலை, வெள்ளிமலை.

கயிலாயன் - சிவன்.

கயிலையிற்கடுங்காரி-மாமிசபேதி.

கயில் - ஆபரணக்கடைப்புணர்வு, தேங்காய்ப்பாதி, பிடரி.

கயிறு - வடம்.

கயினி - அத்தநாள், கைம்பெண்.

கயை - ஓர் புண்ணியஷேத்திரம், ஓராறு.

கர - ஓர் வருஷம், கரவென்னேவல்.

கரகம் - ஆலாங்கட்டி, கமண்டலம், கெண்டிகை, தாதுமாதுளை, வட்டில்

கரகவசம் - கைக்கவசம்.

கரசம் } யானைக்கரணம்.
கரசை }

கரசாகை - விரல்.

கரசீகரம் - துதிக்கையுமிழ்நீர்.

கரடகபாஷாணம் - ஓர் பாஷாணம்.

கரடகம் - தந்திரம், வஞ்சனை.

கரடகம் - காக்கை, யானைமதம், யானைமதம் பாய்சுவடு.

கரடி - ஐவாய்மிருகம், சிலம்பம்

கரடிகை - ஓர்பறை.

கரடு - ஓர்புல், காற்பரடு, மரக் கணு, முரடு, வஞ்சகம்.

கரணம் - அந்தக்கரணம், உபகரணம், எண்ணிக்கை, ஐம்பொறி கணிதம், கலவி, காரணம், கூத்தின் விகற்பம், நல்வினை தீவினை, பஞ்சாங்கத்திலொன்று

கரணவாசனை - கரணவாதனை.

கரணி - சஞ்சீவி, செயல், செய்பவன்.

கரணிதம் - அஹங்காரம், கலவி, கூட்டம், கூத்தின் விகற்பம், சித்தம், புத்தி, மனம்.

கரணியமேணிக்கல் - கரும்புள்ளிக்கல்.

கரணை - ஓர் செடி, ஓர் நூறு, ஓர் வகைக்கட்டு, மூளி, வீணைத் தண்டு

கரண்டகம் - சுண்ண முதலிய பெய்யுஞ்செப்பு.

கரண்டம் - கமண்டலம், கரண்டகம், நீர்க்காக்கை.

கரண்டை - முனிவர் வாசம்.

கரதலம் - உள்ளங்கை.

கரதாளம் - பனை.

கரத்தல் - ஒளித்தல், கொடாமை, திருடல், தொக்கு நிற்றல், மறைதல்.

கரநியாசம் - ஜபம் செய்யும் பொழுது பெருவிரலால் விரலிறைகளைத் தொடல்.

கரந்துறைகோள்-காணுக்கிரகம்.

கரந்துறைச்செய்யுள் - மிறைக்கவியிலொன்று.

கரந்தை - ஓர்பூடு, கல்லாரை, நிரைமீட்டவர்களணியுமாலை.

கரபத்திரம் - ஈர்வாள்.

கரபம் - கழுதை,

கரபரிசம் - கையாற் றொடல்.

கரபாத்திரம் - கையிலன்னம் வாங்கிப்புசித்தல்.

கரப்பு - ஒளித்தல், களவு, மத்து, மீன்கூடு.

கரமஞ்சரி, கருமஞ்சரி - நாயுருவி.

கரமுகன் - விநாயகன்.

கரம் - எழுத்தின் சாரியை, கழுதை, கிரணம், குடியிறை, கை, செய்வதென்னும் பொருளிலே வடமொழிப் பெயரோடு வருவது, யானைத்துதிக்கை, நஞ்சு, முழம்.

கரம்பு, கரம்பை - சிறுகளா, பாழ்நிலம்.

கரருகம - நகக்கண், நகம்.

கரவடம் - களவு, வஞ்சகம்.

கரவடர், கரவர், கரவடோர் - திருடர், வஞ்சகர்.

கரவாகம் - காக்கை.

கரவாளம் - கைவாள்.

கரவிந்தை - களாச்செடி.

கரவீரம் - அலரிச்செடி.

கரவு-உலோபம், ஒளித்தல், களவு, கொடாமை, வஞ்சம்.

கரளம் - எட்டிமரம், நஞ்சு.

கரன் - ஓரவுணன்.

கரா
கராம் } ஆண்முதலை, முதலை.

கராசலம் - யானை.

கராசனம் - புலி.

கராடம் - மருக்காரை.

கராலகம் - கருந்துளசி.

கராளம் - கராளி, தீக்குணம்.

கராளமுகம் - பயங்கரமுகம்.

கரி - இருந்தை, கரியென்னேவல், கருமை, சாட்சி, திருட்டாந்தம், நஞ்சு, யானை, வயிரம்.

கரிக்ரலீலை - கலவி விளையாட்டினொன்று.

கரிகன்னி - வெருகு.

கரிகாடு - கரிந்தகாடு, யானை திரியுங்காடு.

கரிகாலன் - ஓர் சோழன்.

கரிக்கண்டு - கரிசலாங்கண்ணி.

கரிக்கோலம் - அழிஞ்சில்.

கரிசம் - பஞ்சம்.

கரிசலாங்கண்ணி - கையாந்தகரை.

கரிசலை - பொற்றலைக் கையாந்தகரை.

கரிசல் - கருமை, முதிர்ந்தவிலை.

கரிசற்காடு - அடர்ந்தகாடு, கருமண்ணிலம்.

கரிசனம் - அன்பு, இழுத்தல், உழுதல், பிரிவு, பொற்றலைக்கையார்ந்தகரை, யானைக்கோடு.

கரிசன்னி - வெண்சாக்கணம்.

கரிசாலை - கையாந்தகரை.

கரிசி - இருநூறுபறைகொண்ட அளவு, குறைவு, குற்றம், தவறு.

கரிசு - குற்றம்.

கரிணி - பெண்யானை, யானை.

கரிதல் - கருகுதல், காந்தல், தீதல், பெருங்கோபம்.

கரிதன் - அச்சமுள்ளோன்.

கரிப்பான் - ஓர்பூடு.

கரிப்பு - அச்சம், கரித்தல்.

கரிப்புறத்திணை - புறத்திணையினொன்று.

கரிமா - அட்டசித்தியினொன்று.

கரிமுகன் - விநாயகன்.

கரிய - கருமையானவை.

கரியபோளம் - கருப்புக்குங்கிலியம், நறும்பிசின்.

கரியமால் - காய்ச்சசற்பாஷாணம், விஷ்ணு.

கரியல் - கருகல், வளாமரம்.

கரியவன் - கடவுள், சனி, தேவேந்திரன், நமன், விஷ்ணு.

கரியவன் - கருமையுடையவன்.

கரில் - கார்ப்பு, குற்றம், கொடுமை.

கரிவாகனன்-ஐயனார், இந்திரன்.

கரீரம் - அகத்தி, கருவேல், குடம், கும்பவிராசி, மிடா, மூக்கிற் பொந்து, யானை, யானைக்கொம்பு.

கரு - அட்டகருமக்கரு, கருப்பம், கருப்பொருள், நடு, நிறம், பிள்ளை, பெருமை, முட்டை, மேடு, மேன்மை, யோசனை.

கருகல் - கரியாதல், தீதல், மறைபொருள், மாலைநேரம்.

கருக்கல் - இருள், கருக்குதல், கருப்பாக்கல், சாய்ந்த பயிர், சப்பட்டை, மப்பு, மனதை நோவச்செய்தல், மாலைநேரம்.

கருக்கு - கருக்கென்னெவல், கூர், பனைமட்டை, வாட்கருக்கு.

கருக்குடி - சவர்க்காரம்.

கருக்குவாளி - ஓர் மரம்.

கரிக்கூட்டுதல் - கருத்துவிசாரித்தல், சினைத்தல், நியாயந்தேடுதல், யோசனைசெய்தல்

கருங்கடல்வண்ணன் - ஐயனார். விஷ்ணு.

கருங்காக்கணம் ஓர்காக்கணம்.

கருங்காலி - ஓர் மரம்.

கருங்குதிரையாளி - வயிரவன்.

கருங்குந்தம் - கண்ணோயி னொன்று.

கருங்குவளை - நீலோற்பலம்.

கருங்கை - அரியவேலை.

கருங்கொல் - இரும்பு.

கருங்கொல்லர் - கருமார்.

கருங்கோட்டு - கடுமையான கொம்பையுடையது.

கருங்கோள் - இராகு.

கருசம் - ஓர் தேசம்.

கருச்சிதம்-முழக்கம், வீராவேசம்.

கருஞ்சனம் - முருங்கை.

கருடகேதனன் - விஷ்ணு.

கருடதிசை - கீழ்த்திசை.

கருடதியானம் - ஓர் மந்திரம்.

கருடத்தொண்டை - காக்கணஞ் செடி, கொவ்வை.

கருடன் - செம்பருந்து, விஷ்ணு வாஹநம்.

கருணன் - கர்ணன்.

கருணை - ஓர் வாச்சியம்.

கருணாகரம்-கருணைக்கிருப்பிடம்.

கருணாகரன் - கடவுள்.

கருணாநிதி - கடவுள், காருண் ணியன், கிருபையிற் சிறந் தோன்.

கருணாலயன் - கடவுள், சிவன்.

கருணி - குகை, பிடியன்யானை, வெற்பு.

கருணிகை - பூவினுட்கொட்டை.

கருணீகன் - கணக்கன்.

கருணை - ஓர் கிழங்கு, ஓர்செடி, கிருபை, பட்சம், பொரிக்கறி.

கருதலர் } பகைவர்.
கருதார் }

கருதல் - எண்ணல், சிந்தித்தல், நினைத்தல், மதித்தல், விரும்பல்

கருதல்அளவை - அநுமானப்பிரமாணம்.

கருத்தபம் - கழுதை.

கருத்தமன் - வருணன் றந்தை.

கருத்தவியம் - செய்யத்தக்கது, தத்துவம்.

கருத்தன் - அரன், அருகன், செய்வோன், தலைவன்.

கருத்தா - அருகன், கடவுள், சிவன், வினைசெய்வோன், வினை முதற்பொருள்.

கருத்து - அபிப்பிராயம், ஆழமானபயன், எண்ணம், கவனம், குறிப்பு, சித்தம், சிந்தனை, சொற்பொருள், தாற்பரியம், நினைவு, பலன், விழிப்பு, விவேகம்.

கருத்துப்பொருள் - நினைக்கப்படும்பொருள்.

கருத்துரை - செய்யுட்கருத்துரைத்தல்.

கருநந்து - நத்தை.

கருநாள் - கெட்டநாள்.

கருநிலம் - நீரின் மலையின் வனத்திற் பயன்படாநிலம்.

கருநெறி - தீ.

கருநெய்தல் - கருங்குவளை.

கருந்தனம் - மிகுசெல்வம்.

கருந்தாது - இரும்பு.

கருந்திடர் - மேடு.

கருந்துகிலோன் - பலபத்திரன்.

கருந்துகில் - கருப்புச்சீலை.

கருந்தோழி - அவுரி.

கருப்பகோளகை - கருப்பாசயப்பை.

கருப்பகிருகம் - மூலஸ்தானம்.

கருப்பப்பரிசம்-கருப்பந்தரித்தல்.

கருப்பம் - உள், கருப்பாசயம், சினை.

கருப்பரம் - அத்தி, இருப்புப் பாண்டம், தலையோடு.

கருப்பவதி, கருப்பிணி - கருப்பந்தரித்தவள்

கருப்பாதானம் - ஓர் சடங்கு.

கருப்பு - அரிது, குறுவிலை.

கருப்புவில் - மன்மதன் வில்.

கருப்புவில்லி - மன்மதன்.

கருப்பூரசிலாசத்து - ஓர்மருந்து.

கருப்பூரப்புல் - ஓர்வாசனைப்புல்.

கருப்பூரம் - கர்ப்பூரம், சூடன், பொன்.

கருப்பை - கருவின்பை,காரெலி.

கருப்பொருள் - அந்தந்த நிலத்தினுற்பத்தியாகும் பொருள், உரிமைப்பொருள்.

கருமகள் - கரும்பிள்ளை.

கருமகாண்டம் - கன்மநிவிருத்தி முதலியவற்றைச் சொல்லுதல்.

கருமகாண்டிகன் - கிரியாகாண்டிகன்.

கர்மகாரன் - கம்மாளன், வேலையாள்.

கருமசம் - அரசமரம், கலியுகம், களங்கம், சத்து, தீவினை.

கருமணி - கண்மணி, நீலமணி.

கரும்த்தலைவர் - வருங்காரியஞ் சொல்லுவோர்.

கருமபந்தம்
கருமபந்தனம் } கருமபாசம்.

கருமபாகை - வேதநூற்பொருள்.

கருமபூமி - வினைசெய்தற்குரிய பூமி.

கருமம் - காரியம், உஷ்ணம், கடமை, காரியம், செய்படுபொருள், தொழில், முன்வினை.

கருமயிர் - கரடி.

கருமா - யானை, பன்றி.

கருமாதி - ஈமச்சடங்கு, அந்தியேஷ்டி முதலியவை.

கருமாத்துமா - கன்மஞ் செய்தவன்.

கருமாநுஷ்டானம்-நியமநிஷ்டை

கருமாந்தம் - கருமாந்தரம், கார் காலம்.

கருமாயம் - அதிகவிலை, அருமையானது.

கருமாரன் - கொல்லன்.

கருமாரி - ஓர் மரம், பிரசூத வேதனை.

கருமானம் - கரியவானம், கருவித்தை.

கருமானுபவம் - செய்வினைபோகம்.

கருமான்- கலைமான், கொல்லன், பன்றி.

கருமி - நித்தியகருமம் வழுவாது செய்வோன், பாவி.

கருமுகிற்சிலை - காந்தக்கல்.

கருமுகிற்பாஷாணம் - ஓர் பாஷாணம்.

கருமுகை-இருவாக்ஷி, சிறுசெண்பகம்.

கருமேந்திரியம்-கன்மேந்திரியம்.

கருமை - கறுப்பு, நஞ்சு, பெருமை, வலி, வெள்ளாடு.

கரும்பாம்பு - இராகு.

கரும்பாலை - கரும்பாடியந்திரம்.

கரும்பிள்ளை - காக்கை.

கரும்பு - கன்னல், புனர்ப்பூசம்.

கரும்புசம் } வண்டு.
கரும்புள் }

கரும்புறம் - பனை.

கரும்பொன் - இரும்பு.

கருவங்கம் - காரீயம்.

கருவடம் - மலையுமாறுஞ் சூழ்ந்த ஆர், ஊர்நானூற்றின் தலையூர்.

கருவம் - அலங்காரம், ஓர் எண், சினை.

கருவரி - இருள்.

கருவழலை -ஓர் பாம்பு.

கருவா - இலவங்கமரம்.

கருவாமுப்பு - வெடியுப்பு.

கருவி - அகக்கருவி, ஆயுதப் பொது, உபகரணம், கவசம், காரணம், குதிரைக்கல்லணை, கூட்டம், தொடர்பு, நட்பு, புறக்கருவிகள், மேகம், யாழ், வாச்சியம், வீணைக்கருவி.

கருவிகரணம் - பொறியுங்கரணமும்.

கருவிகாண்டம் } வாசிக்கப்பழ
கருவிநூல் } கும் புஸ்தகம்.

கருவிப்புட்டில் - ஆயுதவுறை.

கருவிளங்கனி - மூன்று நிரை யசையாய் வருஞ்சீர்க்கு வாய்ப் பாடு.

கருவிளங்காய் - நிரை நிரை நேராய்வருஞ்சீர்க்குவாய்பாடு.

கருவிளநறுநிழல் - நான்கு நிரை யசையாய்வருஞ்சீர்வாய்பாடு.

கருவிளநறும்பூ - நிரை நிரை நிரை நேராய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.

கருவிளந்தண்ணிழல் - நிரை நிரை நேர் நிரையாய் வருஞ் சீர்க்கு வாய்பாடு.

கருவிளந்தண்பூ - நிரை நிரை நேர் நேராய் வருஞ் சீர்க்கு வாய்பாடு.

கருவிளம் - இரண்டு நிரையசை யாய் வருஞ்சீர்க்கு வாய்பாடு, காக்கணஞ்செடி.

கருவிளை - காக்கணஞ்செடி.

கருவுயிர்த்தல் - ஈனல்.

கருவுளமைப்பு - ஜன்மத்தினி யமம், (பெறுதல், இழத்தல்-இழவு, இன்பம், பிணி அல்லது இடையூறு, மூப்பு, சாக்காடு, பிரித்தல், பிரிவிலா திருக்கை)

கருவூர் - சேரனூர்.

கருவூலம் - பொக்கிஷம்.

கருவை - ஓரூர், வரகுவைக் கோல்.

கருள்-இருள், கறுப்பு, நல்லாடை

கருனை - பொரிக்கறி.

கரேணு - பெண்யானை, யானை.

கரை - அருகு, எல்லை, கரை யென்னேவல், கானல், சொல், தீரம், முடிவு, வார்த்தை.

கரைக்கல்லோலம் - கடற்பாசி.

கரைஞ்சான் - அகில்.

கரைதல் - அழுதல், அழைத்தல், ஆரவாரம், இரங்கல், இளைத்தல்.

உருவழிதல், ஒலித்தல், கரைதல், சொல்லுதல், பதனழிதல், பேரொலி.

கரைதுறை - துறைமுகம், முடிவு.

கரைத்தல் - உருக்குதல், எழுத்திலாவோசை, கரைக்குதல், சொல்லாலெழுமொலி.

கரைப்போக்கு - இழிவானது, கரையோரம், கரைவழி, போலிமணி.

கரோடம் - தலையோடு.

கரோடி - தலையோட்டுப் பொருத்து, முடிமாலை.

கரோடிகை - கழுதை, சூட்டுமாலை, முடிமாலை.

கரோருகம - நகம்.

கர்க்கடகம் - ஓரிராசி, நண்டு.

கர்ச்சிதம் - இடிமுழக்கம், யானைப்பிளிறொலி

கர்சூரம் - கழற்கொடி, பேரீந்து.

கர்த்தபம் - கழுதை.

கர்வடம் - நானூறு கிராமத்திற்குத் தலைக்கிராமம், மலையுமாறுஞ் சூழ்ந்தவூர்.

கர்வம் - இலஷூங்கோடி, செருக்கு.

கலகம் - பேரொலி, போர்.

கலகண்டம் - குயில்.

கலகலம் - பறவைக்குரல், இரைச்சல்.

கலகலெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.

கலக்கம் - அச்சம், ஆரவாரம், குழப்பம், சஞ்சலம், துன்பம், தெளிவின்மை.

கலக்கல் - அச்சுறுத்தல், குழப்பல்.

கலங்கரைவிளக்கம் - கப்பலைய ழைக்குந் தீபமென்னும் விளக்கு.

கலங்கல் - அஞ்சல், அழுதல், கலங்குதல், சேற்றுநீர், துன்பமுறல், நீர்பாயுமதகு.

கலசப்பானை - கஞ்சனை, சிறுபானை.

கலசமுனி - அகத்தியன்.

கலசம் - குடம், பால்முட்டி

கலணை - குதிரைக்கல்லணை.

கலணைக்கரடு - குதிரைக்கல்லணைக்கணு.

கலதி - மூதேவி.

கலதை - கலக்கம்.

கலத்தல் - எழுத்திலாவோசை, கூடல், புணர்ச்சி.

கலந்தருநர் - குசவர், பணித் தட்டார்.

கலந்தை - பெருமை.

கல்பம் - கலாபம், மயிற்றோகை யானைக்குட்டி.

கலப்பு - கலத்தல், கலவை.

கலப்புறமொழி - இருதிணையி ய்நு கலந்து வருவது.

கலப்பை - உபகரணம், உழுபடை, கலப்பையுறுப்பு.
கலப்பைக்கிழங்கு - கார்த்திகைக் கிழங்கு, வெண்தோன்றிக் கிழங்கு.
கலப்பைப்படை - ஹலாயுதம்.
கலமர் - பாணர்.
கலம் - ஆபரணம், ஆயுதப்பொது, உண்கலம், ஓரளவு, பாத்திரம், மட்கலம், மரக்கலம், யாழ், ரேவதி.
கலம்பகம் - ஓர்பிரபந்தம், கலப்பு, சாந்து.
கலர் - கீழ்மக்கள்.
கலவசம் - காக்கை.
கலவர் - கடலோடிகள், படைவீரர்.
கலவல் - எழுத்திலாவோசை, கலத்தல்.
கலவி - புணர்ச்சி.
கலவை - கலப்பு, சாந்து, சேறு.
கலச்சேறு - சாந்து, பரிமளச் சேறு.
கலனை - கலப்பை, கலப்பை யுறுப்பு.
கலன் - ஆபரணம், ஓமவுபகரணம், ஓர் அளவை, பாத்திரம், மரக்கலம், யாழ், வழக்கு.
கலன்கழிமடந்தை - கைம்பெண்.
கலாங்கம் } சித்தபாஷாணம்.
கலாங்கன் }
கலாநிதி - சந்திரன்.

கலாபம் - அம்புக்கூடு, அரைப் பட்டிகை, கலம்பகம், சரம ணிக்கோவை, பதினறுகோ வையுள்ளமணி, பீலிக்குடை, மயிலிறண், மயிற்றேகை.

கலாபி - ஆண்மயில்.

கலாம் - ஊடல், கொடுமை, கோபம், சினம், பகை.

கலாம்பூரம் - ஓர் மருந்து.

கலாவல் - கலத்தல்.

கலி - அம்பு, ஒலி, ஓசை, ஓர்பா, கடல், கடையுகம், கலிப்பா, கலியென்னேவல், கேடு, சனி, சிறுமை, போர், வஞ்சகம், வலி.

கலிகம் - கற்பரிபாஷாணம்.

கலிகாலம் - உபத்திரவகாலம்.

கலிகை / களிகை - இளம்பூவரும்பு, நாக மல்லி.

கலிங்கத்துப்பரணி - ஓர்செய்யுள்.

கலிங்கம் - ஆற்றுத்தும்மட்டி, ஊர்க்குருவி, ஓர்தேசம், கண் மருந்து, குதிரை, சீலை, பதி னெட்டு பாஷைகளிலொன்று, வானம்பாடி, வெட்பாலை.

கலிசம் - வன்னிமரம்.

கலிதம் - பாய்கை, பெருக்கு, பொருத்தம்.

கலிதி - திப்பிலி.

கலித்தல் - ஆரவாரம், எழுச்சி, ஒலித்தல், தழைத்தல், பொ லிகுதல், பொலிவு.

கலித்தளை - செய்யுட்டளையி ஞென்று.
கலித்தாழிசை - ஓர்கவி, ஓர் யாப்பு.
கலித்துருமம் - தான்றிமரம்.
கலித்துறை - ஓர்பாவினம், கலிப் பாவினத்திலொன்று.
கலித்தொகை - ஓர் பிரபந்தம்.
கலிந்தம் - ஓர் மரம், ஓர் மலை.
கலிபணம் - ஓர் பணம்.
கலிப்பா - பாநான்கிஞென்று.
கலிப்பு - உயரம், எழுச்சி, ஒலி, கக்குதல், தரா, மிகுதி.
கலியர் - படைவீரர், தரித்திரர்.
கலியாணம் - கொண்டாட்டம், சந்தோஷம், சுபம், பொன், விவாஹம்.
கலியாணி - ஓரிராகம், பார்வதி.
கலியாத்தம் - கலியுகவருடம்.
கலியுகம் - கடையுகம்.
கலிவிருத்தம் - கலிப்பாவினத் திஞென்று.
கலிவெண்பா - வெண்டளை தட்டு வெள்ளோசை தழுவி யொரு பொருண்மேல் வந்து ஈற்றடி முச்சீரால் முடிவது.
கலினி - திப்பிலி.
கலினை-கைமை,கொள்ளு,மிளகு.
கலீர்கலீரெனல் - ஒலிக்குறிப்பு.
கலீமை - கடிவாளம்.
கலுடம் - கலங்கனீர், பாவம்.

கலுவடம் - பூவரும்பு.

கலுழம் - கலங்கனீர்.

கலுழன் - கருடன்.

கலுழி - கலங்கனீர் முல்லைநிலக் கான்யாறு.

கலுழ்தல் - அழுதல், கலங்கல்,

கலேர்
கலேல் } ஒலிக்குறிப்பு.

கலை - அரைப்பட்டிகை, ஆண்மான், ஆண்முசு, இடைகலை, கலையென்னேவல், கல்வி, காலநுட்பம் சந்திரன், சரீரம், சீலை, சுறுமீன், துர்க்கைவாகனம், நூல், பங்கு, மகரவிராசி, மகரமீன், மரக்கொம்பு, மேகலை, வயிரம், விலங்கேற்றின் பொது, பாகையிலறுபதிலொன்று, பிங்கலை, வண்ணங்களிலோரடி, வித்தியாதத்துவமேழிலொன்று, பிரகாசம்.

கலைஞர் - புலவர், கலையணர்ந்தோர்.

கலைஞானம் - கல்வியுணர்வு, கல்விநூல், அறுபத்துநான்கு கலை, அதாவது - அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாஸ்திரம், ஜோதிஷசாஸ்திரம், தர்ம சாஸ்திரம், யோகசாஸ்திரம், மந்திரசாஸ்திரம், சகுனசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம் உருவசாஸ்திரம், இதிஹாஸம்,

காவியம், அலங்காரம், மதுர பாஷணம், நாடகம், நிருத்தம், சப்தபிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அஸ்திர பரீக்ஷை, கனக பரீக்ஷை, இரதபரீக்ஷை, கஜபரீக்ஷை, அச்வபரீக்ஷை, இரத்தின பரீக்ஷை, பூமி பரீக்ஷை, ஸங்கிராமவிலக்கணம், மல்லயுத்தம், ஆகர்ஷணம், உச்சாடனம், வித்வேஷணம், மதன சாஸ்திரம், மோஹநம், வசீகரணம், ரஸவாதம், காந்தர்வ வாதம், பைபீலவாதம், கவுத்துக வாதம், தாதுவாதம், காருடம், நஷ்டம், முஷ்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப் பிரவேசம், அதிர்ச்யம், இந்த்ரஜாலம், மஹேந்த்ரஜாலம், அக்கிஸ்தம்பநம் ஜலஸ்தம்பநம், வாயுஸ்தம்பநம், திருஷ்டிஸ்தம்பநம், வாக்ஸ்தம்பநம், சுக்லஸ்தம்பநம், கர்ணஸ்தம்பநம், கட்கஸ்தம்பநம், அவத்தைப் பிரயோகம்.

கலைதல் - குலைதல்.

கலைத்தல் - ஓட்டுதல், குலைத்தல், நீக்கல், பிரித்தல்.

கலைநாதன் - அருகன்.

கலைநாயகன் - புத்தன்.

கலைபயில்தெளிவு - நூல்களிலே பழகிய தெளிவு.

கலைமகள் } ஸரஸ்வதி.
கலைமடந்தை }
கலைமலைவு - சாஸ்திரவிரோதம்.
கலையானத்தி } துர்க்கை.
கலையூர்தி }
கலையினன் - சந்திரன்.
கலையுணர்புலவன் - குமரன்.
கலையூர்தி - ஸரஸ்வதி, துர்க்கை.
கலையோதல் - நூலோதல்.
கலைவல்லோர் - அறிஞர், புலவர்.
கல்-அரதனம், இரத்தினம்,ஒலிக்குறிப்பு,கல்,கல்லென்னேவல், சிலை, மலை.
கல்லகம் - மலை.
கல்காரம் } செங்குவளை, நீர்க்குளிரி.
கல்லாரம் }
கல்லடிமூலம் - ஓர் பாஷாணம்.
கல்லல் - தோண்டல், பேசலாவெழுமொலி.
கல்லலை } மலைமுழைஞ்சு.
கல்வலை }
கல்லாடம் - ஓர் நூல்.
கல்லாடர் - ஓர் புலவர்.
கல்லார் - கீழ்மக்கள், அறியாதார்.
கல்லி - ஆமை, ஊர்க்குருவி.
கல்லிச்சி } இத்தி, ஓர்மரம்.
கல்லித்தி }
கல்லியம் - கட்டை, கள், கால், சாராயம்.
கல்லுக்கலைக்காத்தாள் - பொன்னுங்காணி.

கல்லுண்டை - ஓர் நெல்.
கல்லுருணி - புல்லுருவி.
கல்லுருவி - ஓர் பூடு.
கல்லுசி - ஓர் மருந்து.
கல்லூரி - கல்விபயிலிடம்.
கல்லெறி - கவண்.
கல்லெனல்-அநுகரணவோசை.
கல்லை - இலை, இலைக்கலம், பாத குறட்டின் குமிழ், பிணக்கு.
கல்லைநீராக்கி - மாமிசபேதி.
கல்லொட்டி - கத்தை.
கல்லோலம் - கடற்பெருந்திரை, புனற்றிரை.
கல்வரை - மலைப்பிளப்பு.
கல்வி - அறிவு, கற்றல், நூல், புண்ணியத் தோற்றம் நான்கி னொன்று, வித்தை.
கல்விபயிலிடம் - பள்ளிக்கூடம்.
கல்வியூரி - கல்லூரி.
கல்வெட்டு - அழியாதசொல், ஓர் பிரபந்தம், சிலா சாஸனம், புகழ்ச்சிச்செய்யுள்.
கல்வேகம் - அன்னபேதி.
கல்வேதி - ஸஹஸ்ரபேதி.
கவக்குன்று - கடல் கடைந்தமத் தாகிய மந்தரமலை.
கவசகுண்டலன் - கவசத்தோ டும் குண்டலத்தோடும் பிறந்த கர்ணன்.
கவசம் - காவற் பண்ணுமந்திரம், சட்டை, சீலமண்.

கவடி - பலகறை, சோழி.

கவடு - கபடம், கப்பு, கழுத்திடு கயிறு, மரக்கொம்பு, யானை கட்டுங் கயிறு.

கவட்டல் - மெல்லல்.

கவணை - கவண்.

சிலை - ஒலி, ஓசை, ஓர்மரம், கல், சிலையென்னேவல், சூதபாஷாணம், தனுவிராசி, மலை, மனோசிலை, மூலநாள், விக்கினம், வில்.

சிலைத்தல் - ஒலித்தல், சப்தித்தல்.

சிலையாவி
சிலைவிந்து } கல்நார்.

சிலைவைரம் - வைரமணி.

சிலோச்சயம் - மலை.

சில் - அற்பம், ஆரவாரம், ஒலிக்குறிப்பு, தேருருளை வட்டம்.

சில்லம் - அவதி, எட்டி, துண்டு, தேற்றுமரம்.

சில்லர் - வேடர்.

சில்லரை - சிதறின தொகை, சொச்சம்.

சில்லி - கண்ணறை, சிள்வண்டு, சிறுகீரை, தேருருளை, வட்டம்.

சில்லிகை - சிள்வண்டு, சீலை, சூரியகிரகணம், நல்லாடை.

சில்லிடுதல் - ஒலிக்குறிப்பு, பயப்படல், விம்முதல்.

சில்லை-இழிவு, சிவல், சிள்வண்டு, தூர்த்தை.

சில்வழி - சிலவிடம்.

சிவகதியிறைவன் - அருகன், சிவன்.

சிவகம்-சாதிக்காய், நாய்ச்சீரகம்.

சிவகரந்தை - நறுங்கரந்தை.

சிவகாமி - பார்வதி.

சிவஞானசித்தி - ஓர் சைவசித்தாந்த நூல்.

சிவணல் - அளவளாவல், கலத்தல், கிட்டல், நட்பாடல், பொருத்தல், வியங்கோண் முற்று.

சிவதத்துவம் - முப்பதாறுவது தத்துவம்.

சிவதம் - இருக்குவேதம்.

சிவதன்மம் - அட்டாதசவுப்புராணத்தொன்று.

சிவதை - ஓர் கொடி.

சிவத்தம் - செம்முருங்கை.

சிவத்தல் - கோபம், சிவக்குதல், சினக்குறிப்பு.

சிவந்தி - கொடிப்பாலை.

சிவப்பிரகாசம்-ஓர்சித்தாந்தநூல்.

சிவப்பு - சிவப்பு, சினக்குறிப்பு, செம்மைநிறம்.

சிவமது - சிறுபுள்ளடி.

சிவமரம் - ஓர் மரம்.

சிவமல்லி - கொக்கு மந்தாரை.

சிவம் - உயர்வு, ஓர் குளிகை, கடலுப்பு, கடவுள், குறுணி, சயஞ்சீவம், சிவதத்துமைந்தி னொன்று, நன்மை, நித்திய லோகத்தொன்று, முத்தி.

சிவலோகச்சேவகன் - காந்தம்.

சிவலோகம் - மேலுலகங்களெல்லாவற்றுக்குமேலாகியலோகம், மோக்கத்தானம்.

சிவல் - கவுதாரி, பகண்டை.

சிவவாக்கியம் - ஓர்நூல்.

சிவவாக்கியர் - ஓர் நூலாசிரியர்.

சிவனார்கிழங்கு - கார்த்திகைக் கிழங்கு.

சிவனார்வேம்பு - ஓர் செடி.

சிவன் - உருத்திரன், வைடூரியம்.

சிவா-கடுக்காய், கீழ்காய்நெல்லி, நெல்லி, பங்கம்பாலை, வன்னி.

சிவாகமம் - இருபத்தெட்டு ஆகமங்கள், அவை—காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானசருவோத்தம், பரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுலம் என்ப.

சிவிகரம் - சாதிக்காய்.

சிவிகை - தண்டிகை, பாண்டியன் பூண்டவூர்தி.

சிவிறி - நீர்வீசுந்துருத்தி, பெருந்துருத்தி, விசிறி.

சிவுகம் - தாடை.

சிவேதை - ஓர்கொடி, சீந்திற்கொடி, தெற்கு, பகன்றை.

சிவை - ஆணரி, உலைத்துருத்தி, உலைமூக்கு, நெல்லிக்காய், பார்வதி, வேர்.

சிவ்வல் - கடற்பாசி.

சிள்வீடு - சில்வண்டு.

சிறகு - சிறகு.

சிறக்கணித்தல் - உபேட்சித்தல், குறைதல், சுருங்குதல்.

சிறக்கணிப்பு - கடைக்கணித்த பார்வை, சுருங்குகை.

சிறத்தல் - அருமையாயிருத்தல், கீர்த்திபெறுதல், சிறப்பு, மங்கலமாதல், மேற்படல், விசேஷித்தல்.

சிறந்தகற்பகம் - நாகபாஷாணம்.

சிறந்தோர் - அழகுள்ளோர், உறவோர், உயர்ந்தோர், துறந்தோர், பெருமையிற்சிறந்தோர்.

சிறப்பகத்திணை - அகத்திணை வகையினொன்று.

சிறப்பிலாதாள் - மூதேவி.

சிறப்பு - அருமை, அலங்காரம், அழகு, இடைப்பொருள், உபசாரம், உயர்வு, ஒன்றற்கேயுரியது, சுபம், மகிமை, மிகுதி, மேன்மை, விசேஷம்.

சிறப்புச்சூத்திரம் - சிறப்புவிதி.

சிறப்புச்சொல் - ஒன்றற்கே யுரித்தாய் வருஞ்சொல்.

சிறப்புப்பாயிரம் - பொதுப்பாயிரம், ஆக்கியோன் முதலிய பதினொருவகையு முடையது.

சிறப்புப்பெயர் - ஒருபொருளை விசேஷித்துக் காட்டுவது.

சிறப்புவிதி - விசேஷிக்கும் விதி.

சிறப்பெழுத்து - ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்துத் திரிந்த எழுத்து.

சிறார் - சிறுவர்.

சிறிட்டம் - வெள்ளிலோத்திரம்.

சிறிது - சிறுமையுடையது.

சிறியசிந்தையர் - கீழ்மக்கள்.
சிறியத்தினி-உத்தாமணி, வேலிப்பருத்தி.
சிறியர் - அற்பர், கீழ்மக்கள்.
சிறியாணங்கை - ஓர் பூடு.
சிறிவில் - அகில்.
சிறு - ஓர் விகாரமொழி, தெரிநிலைவினைப்பகுதி.
சிறுகடலாடி - நாயுருவி.
சிறுகல் - குறைதல்.
சிறுகாக்கைபாடினியம் - ஓர் நூல்.
சிறுகாப்பியம், சிறுகாவியம்.
சிறுகாரிடம் - சாதிக்காய்.
சிறுகால்-காவட்டம்புல்,தென்றல்
சிறுகாஞவாழை - ஓர் பூடு.
சிறுகு - இடைஞ்சல், சிறுகென்னேவல், துன்பம்.
சிறுகுடி - குறிஞ்சிநிலத்தூர், சிற்றில்.
சிறுகுரு - உவர்மண்.
சிறுகுழி - சிறுகோளீளமகலங்கொண்டது.
சிறுகுறிஞ்சா - ஓர்கொடி.
சிறுக்கல் - குறைத்தல்.
சிறுக்குதல் - கோபித்தல், சிறியதாக்கல்.
சிறுசின்னம் - சிறுகாளம், பீலி.
சிறுசெருப்படி - ஓர் பூடு.
சிறுசொல் - பழிச்சொல்.
சிறுதாரை - நீர்வீசுந்துருத்தி.

சிறுதாளி - ஓர்செடி.

சிறுதுருமம் - வெடியுப்பு.

சிறுதூறு - மரச்செறிவு.

சிறுத்தல் - இளத்தல், சிறிதாதல்.

சிறுத்தை - சிறுபுலி.

சிறுத்தொண்டன் - அறுபத்து மூன்று நாயன்மாரிலோர் தொண்டன்.

சிறுநறளை - ஓர்வகை நறளை.

சிறுநன்னாரி - ஓர்வகை நன்னாரி.

சிறுபஞ்சமூலம் - ஓர்நூல், கண்டங்கத்தரி, சிறுமல்லி, சிறுவழுதுணை, நெருஞ்சி, பெருமல்லி, இவைகளுடைய வேர்.

சிறுபதம் - சிறுவழி.

சிறுபதி - சிற்றூர்.

சிறுபறை - ஓர்பறை, பிள்ளைக்கவியிலோர் பகுதி.

சிறுபான்மை - அருகல்விதி, ஒரோவிடத்து அரிதாய் வருவது.

சிறுபுறம்-உயர்ந்த பக்கம், பிடரி.

சிறுபொழுது - ஐந்திணைக்குரிய முதற்பொருளினொன்று, அது - மாலை, யாமம், வைகறை, (ஏற்படு), காலை, நண்பகல் என்பது, காலநுட்பம்.

சிறுமணி - ஓர் நெல்வகை, சதங்கை, சிறுமட்டம், குள்ளம், சிற்றளவு.

சிறுமல் - தண்ணீர்விட்டான்.

சிறுமாரோடம் - செங்கருங்காலி.

சிறுமி - பெண்.

சிறுமியம் - சோறு.

சிறுமூலகம் } ஓர்கிழங்கு,திப்பிலி.
சிறுமூலம்

சிறுமை - அற்பம், இளமை, எளிமை, கீழ்மை, குறைவு, தரித்திரம், துன்பம், நோய்.

சிறுமையர் - கீழ்மக்கள்.

சிறுவரை - அற்பம், காலநுட்பம். சிறுபொழுது.

சிறுவர் - மக்கள்.

சிறுவன் - மகன்.

சிறுவி - புத்திரி, மகள்.

சிறுவிதி - தக்கன்.

சிறுவிதிமகஞ்சிதைத்தோன்- வீரபத்திரன்.

சிறுவிலை - குறுவிலை, பஞ்சம்.

சிறை - அடிமை, அழகுள்ளவள், இடம், இறகு, கட்டுப்பாடு, காவல், சிறைச்சாலை, தடை, நீர்க்கரை, பக்கம், பிணிப்பு, மதில்.

சிறைப்புறம் - மதிற்புறம், மறைவிடம்.

சிற்குணன் - கடவுள்.

சிற்சக்தி - அறிவாற்றல், பஞ்சசத்தியிலொன்று, விசேஷ சக்தி.

சிற்சபை - சபையைந்திலொன்று.

சிற்சுகம் - ஞானசுகம்.

சிற்சொரூபம் - ஞானரூபம்.

சிற்பம் - அற்பம், சிற்பநூல், சிற்பத்தொழில், நுண்மை.

சிற்பரக்கூர்மை - கந்தகவுப்பு.

சிற்பரம் - கடவுள், பிரமம்.

சிற்பரன் - சிவன்.

சிற்கரை - பார்வதி, சவர்க்காரம், பொன்னிமிளை, பராசக்தி.

சிற்பர் - சித்திரக்காரர்.

சிற்பியர் - கம்மாளர்.

சிற்றம்பலம் - சிற்சபை.

சிற்றறிவு - புல்லறிவு.

சிற்றுமணக்கு - ஓராமணக்கு.

சிற்றுலவட்டம் - விசிறி.

சிற்றுள் - ஏவலாள்.

சிற்றிலக்கம் - கீழ்வாயிலக்கம், சிற்றெண்.

சிற்றிலை-குன்றி, கடுமரம், நெய்ச்சிட்டி.

சிற்றில் - குடிசை, சிலை, பிள்ளைக் கவியிலோர் பகுதி.

சிற்றினம் - அற்பச்சங்காத்தம், ஆகாத கூட்டம்.

சிற்றின்பம் - காமநுகர்ச்சி.

சிற்றுண்டி - அப்பவருக்கம்.

சிற்றுயிர் - அற்பசந்து.

சிற்றுரு - குறள், சிறுதோணி.

சிற்றூர்-சிறூர், குறிஞ்சிநிலத்தூர்.

சிற்றாரல் - சிறியஆற்று.

சிற்றெண் - கீழெண், குறளடி பதினறுன் வருவது.
சினகரம் - தேவர்கோவில்.
சினத்தல் - கோபித்தல்.
சினத்தன் - கோபமுள்ளோன்.
சினந்தவிர்ந்தோன் - அருகன்.
சினப்பு-கோபம், பரு, விம்முதல்.
சினம் - கோபம்.
சினவரன் } அருகன், புத்தன்.
சினன் }
சினவர் - பகைவர்.
சினவுதல் - கோபித்தல், சினக்குறிப்பு, பொருதல்.
சினு - பங்கம்பாலை, வட்டத்திருப்பி.
சினுவில் - தும்பை.
சினீவாலி - உமை, மதிதெரி கலையிரா.
சினேகம்-எண்ணெ, நட்பு,பட்சம்.
சினேசம் - சாதிக்காய்.
சினேந்திரம்-சைனவியாகரணம்.
சினேந்திரன் - அருகன், புத்தன்.
சினை - அவயவம், உறுப்பு, கருப்பம், கொழுப்பு, சினையென்னேவல், பூவரும்பு, பொருளாதியாறினுளொன்று, மரக்கொம்பு, முட்டை, மூங்கில்.
சினைத்தல்-அரும்புதல், எழுதல், சினைகொள்ளல்.
சினைப்பு-சினைத்தல், வியர்க்குரு.
சினைப்பெயர் - உறுப்புப்பெயர்.

சினைப்பொருள் - உறுப்புப் பொருள்.

சினைமுதற்பெயர் - சினையையும் முதலையும் பற்றிவரும் பெயர்.

சினைவினை - முதல்வினை, அவயவத்தின் றொழிலாகிய வினை.

சின் - அசைச்சொல்.

சின்னீற - சிறியதன்மையுடையன.

சின்மயம் - ஞானமயம்.

சின்மயாத்மா - ஞானாத்துமா.

சின்மாத்திரம் - ஞானமாத்திரம்.

சின்முத்திரை - ஞானமுத்திரை.

சின்மொழி - இழிந்த மொழி, வானமொழி.

சின்னப்பூ - ஓர் பிரபந்தம்.

சின்னம் - அடையாளம், அற்பம், ஈனம், காளம், சங்கு, சிறுமை, தட்டு, துண்டு, பராகம், பெண் குறி, முறம், விசித்திரம்.

சின்னுருகம் - சீந்தில்.

சின்னி - இலவங்கம், ஓர் செடி.

சின்னிவிரல் - சிறுவிரல்.

சின்னீர் - நிலையாமை.

சீ

சீ - ஓரெழுத்து, இகழ்ச்சிக் குறிப்பு, அடக்கம், இலக்குமி, காந்தி, சம்பத்து, சரச்சுவதி, சீயென்னேவல், பார்வதி, பிரகாசம், பெண், விடம், விந்து.

சீகம் - தமரத்தை.

சீகரம் - கடற்றிரை, கரகம், கவரி, தலை, திருநலம், திவலை, புனற்றிரை, மலையுச்சி, மழை, மழைத்துளி, மழைத்தூவல், வாழ்வு.

சீகரி } நீர்த்திவலை.
சீகர் }

சீகாரம் - ஓர்பண்.

சீகாழி - ஓர் சிவத்தலம்.

சீக்கிரம் - அம்பு, காரம், குரூரம், கோபம், விரைவு.

சீக்கிரி - உசிலமரம்.

சீக்கு - செத்தை, நோய்.

சீக்குரு - முருங்கை.

சீக்கை - ஓர் நூல்.

சீசகம் } ஈயம்.
சீசம் }

சீச்சீ - இகழ்ச்சிக்குறிப்பு.

சீடர் - மாணாக்கர்.

சீடு - நூற்சீடு (குஞ்சம்)

சீணம் - பதனழிவு.

சீண்டுதல் - சருவுதல், தொடுதல்.

சீதகம் - ஈயம், குளிர்ந்தகாலம், தரா, தேள்.

சீதகன் - சந்திரன், சுக்கிரன், சோம்பன்.

சீதம் - அகில், சந்தனமரம், குளிர்ச்சி, கொடுந்தமிழ் நாட்டி லொன்று, நறுவிலி, நீர், பற்படாகம், மேகம், வெண்மை.

சீதரன் - விஷ்ணு.

சீதவாதக்கடுப்பு - சீதவாதம்.

சீதவாரம் - உத்தாமணி.

சீதளம் - ஈரம், குளிர்ச்சி, கொடி மாதளை, கோடகசாலை, சந்தனம், சிற்றகத்தி, தாமரை, துரிசு, பச்சைக் கர்ப்பூரம், முத்து.

சீதளை - ஒரு நாரத்தை, கொடி மாதளை.

சீதன் - சந்திரன்.

சீதாங்கபாஷாணம் - ஓர் பாஷாணம்.

சீதாங்கம் - ஓர் கள்ளி, சன்னி.

சீதாங்கனை - இராமன் மனைவி.

சீதாபதி - இராமன்.

சீதாளம் - தளப்பனைமரம்.

சீது - ஈயம், கள், யானைக்கண் மதம்.

சீதேவி - இலக்குமி.

சீதை - உழுபடைச்சால், சீதை, பொன்னாங்காணி.

சீதோதகம் - குளிர்ந்தநீர்.

சீத்தலைச்சாத்தன் - ஓர் புலவன்.

சீத்தல் - செப்பம்பண்ணல், தூய தாக்கல், நீக்கல்.

சீத்துவம்-சித்தம்,செம்மை,நிறம்.

சீத்தை - கீழ்மக்கள், சிதம்பல், சீட்டிச்சீலை, பதனழிவு,பீழை.

சீந்தில் - ஓர் படர்கொடி.

சீந்துதல் - சீறுதல், விரும்புதல்.

சீபதி-அருகன்,கடவுள், விஷ்ணு.

சீபாதம் - குருவடி, திருவடி.

சிப்பு - எலும்புக்கோவை, கதவின்ருள், தாழ்க்கோல், தோளெலும்பு, மயிர்சீவுஞ்சிப்பு, வாழைக்குலைச் சீப்பு, விலாவெலும்பு.

சீமந்தம் - ஓர்சடங்கு, முதுகு நீரிடுகை.

சீமந்தனி-ஓர்மாது, மூத்தபெண்.

சீமாட்டி - தலைவி.

சீமான் - அருகன், குபேரன், செல்வன்.

சீமுக - ஓர் வருடம்.

சீமுகம் - திருமுகம்.

சீமூதம் - நீருண்டமேகம்,பிடியன் யானை, மலை, மேகம்.

சீமூதன் - இந்திரன், உழவன், ஓரசுரன், துன்புறுவோன், நரகாசுரன் சாரதி.

சீமூதை-இரா, கொடிமுந்திரிகை.

சீமை-அனுஷ்டிப்பு,எல்லை, கரை, தேசம், தோண்மேல், வயல்.

சீயகங்கன் - ஓரரசன்.

சீயம் - எருக்கம்பால், சிங்கம், சிங்கவிராசி, தென்றிசைப் பாலன்குறி.

சீய்த்தல் - உரஞ்சுதல், சிறுய்த்தல், சீவுதல், செருக்குதல்.

சீரகத்தாமன்
சீரகத்தாரோன் } குபேரன்.

சீரகம் - சீரகம்.

சீரங்கம் - அரங்கம்.

சீரணம் - உண்டது சமித்தல், கேடு, பதனழிவு.

சீரணி - ஓமச்செடி, காடு, கூத்தின் விகற்பம், சிறந்த வழகு, சீரணியென்னேவல்.

சீரமோடா-காட்டெருமைப்பால், கார்ச்சீலை, விழுதி.

சீரம் - இரேகை, இலாமிச்சை, எழுத்து, கலப்பை, சீலை, பால், மரவுரி.

சீரா - கவசம், தலைச்சீரா, பலாசு.

சீராட்டல் - சிறப்புச்செய்தல்.

சீராளன் - சிறுத்தொண்டநாயனார் மகன்.

சீரி - பலதேவன், புளியமரம்.

சீரிடம் - தலை, வாகை.

சீரியர் - அறிஞர், உயர்ந்தோர், சிறந்தோர், நல்லோர், புலவர்.

சீருணம் - செம்பு.

சீருணி - சீருணம்.

சீருத்திரம் - உருத்திரம்.

சீருள் - ஈயம், காரீயம், செம்பு, செல்வம், பஞ்சலோகம்.

சீரை - சீலை, சீலைத்துணி, மரவுரி.

சீர் - அழகு, அளவு, இரைச்சல், ஒலி, ஒழுங்கு, காற்றண்டை, காவுதடி, சித்திரம், சிலம்பம், சுபாவம், செய்யுளுறுப்பு, செல்வம், சொல், தண்டாயுதம், தராசு, தாளவொத்து, துலாராசி, நடுத்தரம், நன்மை, நன்னடை, பாரம், புகழ், பெருமை, பொன்.

சீர்கேடி - மூதேவி.

சீர்க்கோழி - நரைக்கொள்ளு.

சீர்செய்தல் - சீராக்கல்.

சீர்த்தி - மிகுபுகழ்.

சீர்த்துழாய் - ஓர் துளசி.

சீர்பதி - கடவுள்.

சீர்பாதம் - சீபாதம்.

சீர்மை - எண்வகையூரிலொன்று, கீர்த்தி, சங்கை, சிறப்பு.

சீலம் - அழகு, குணம், சரித்திரம், சீந்தில், சுபாவம், தருமம், தன்மை, நல்லறிவு, நல்லொழுக்கம், பரிசுத்தம், நிலை.

சீலன் - குணவான்.

சீலா - இறைகூடை, இறைபட்டை, ஓர் நீர் பறவை.

சீலை - சீலை, வஸ்திரம்.

சீவகம் - இலந்தைப்பிசின், எலம்.

சீவகர் - புத்ததேவர்.

சீவகலை - இராகக்காட்சி, உயிர்ப்பு.

சீவகன் - ஓரரசன், குறவன், சீவன்முக்தன், வேலைக்காரன்.

சீவசாட்சி - அறிவுக்காதாரமாயிருப்பது.

சீவதம் - ஆமை, சன்மார்க்கம்.

சீவதேகம் - சீரத்திரயம்.

சீவந்தி - கடமரம், சீந்திற்கொடி, பாலைமரம், புல்லூரி, வெட்பாலை.

சீவம் - அர்த்தச்சா, சீவன், பரமாத்துமா.

சீவரத்தினம் - திருமாலணியுமணி, நாகரத்தினம்.

சீவரர் - புத்ததவத்தோர்.

சீவல் - சீவுதல், மிருதுவானது.

சீவனம் - அமுதம், உத்தியோகம், உயிர்வாழ்தல், தைத்தல், நீர், மூளை, வெண்ணை.

சீவனுகினி - நீர், வெற்றிலை.

சீவனி - ஆடுதின்னுப்பாலை, சகநம், சஞ்சீவி, சீவகாடி, செவ்வள்ளி, பாலைமரம், மந்தாரச்சிலை, வெட்பாலை.

சீவனீயம் - நீர்.

சீவன் - உயிர், காந்தம், சிந்தை, சீவாத்துமா, பிராணி, முயற்சி, வியாழன்.

சீவன்முக்தன் - துறந்துஞானமடைந்தோன்.

சீவாளம் - வீணையின்சீர்.

சீவி - அழிஞ்சில்.

சீவிகா - சாதிக்காய்.

சீவிதம் - உயிர்வாழ்க்கை.

சீவியம் - ஆயுள், உயிரோடிருக்கை, காலக்ஷேபம், சீவனம், வாழ்நாள்.

சீவினி - சஞ்சீவி, செல்வழிப்பண், யாழிறைசை.

சீறல் - அதட்டல், இரைதல், சினக்குறிப்பு, பெருங்கோபம், வேகம்.

சீறுதல் - கோபித்தல்.

சீறூர் - குறிஞ்சி நிலத்தூர், வேடரூர்.

சீற்றம் - கோபம், சினம்.

சீனம் - ஓர்தேசம், பதினெண் பாடையினொன்று, மான்.

சு

சு - அதட்டுமோசை, ஓரெழுத்து, நன்மை, ஒருபசர்க்கம், சுவ, நல், வியப்புக்குறிப்பு.

சுஃறெனல் - ஒலிக்குறிப்பு.

சுகட்டான் - நாணற்புல், முடக்கற்றான்.

சுகசிம்பி - பூனைக்காலி.

சுகதபேதம் - பேதம் மூன்றினொன்று, அது — மரத்துக் கிளை, காய் முதலிய வித்தியாசம்.

சுகதாதை - வியாசர்.

சுகதாரு - கடம்பு.

சுகதுக்கி - பிறந்திறந்தழுந்துவோன்.

சுகத்திரம் - வாகை.

சுகந்தம் - அரத்தை, கிழங்கு, சீரகம், நறுநாற்றம், வாழை.

சுகந்தி - செவ்வந்திக்கல்

சுகம் - ஆரோக்கியம், இன்பம், கிளி, தர்மம், நன்மை, முத்தி, மூலைக்கண்.

சுகம்பல் - புளிநறளை.

சுகருமம் - யோகமிருபத்தேழி னொன்று.

சுகன் - ஓர் கந்தருவன், சுவர்க்க
முற்றோன், வியாசன் புதல்வன்.

சுகாந்தம் - ஈரவெண்காயம்.

சுகிதம் - பால்.

சுகிர் - உட்டுளை, உட்டுளைப்
பொருள், சுகிரென்னேவல்,
தெரிநிலை வினைப்பகுதி.

சுகிர்தம் - அறம், இன்பம், தவஞ்
செய்தல், தயவு, நற்செய்கை,
நன்மை, நெய்.

சுகிர்தல் - நார்முதலிய வகிர்தல்.

சுகிர்லாபம் - நட்புப்பேறு.

சுகுமாரம் - ஓர்கரும்பு, மிருது.

சுகோடம் - நகுலருடைய சங்கு.

சுகோததி - இன்பக்கடல்.

சுகோதரம் - தாளிசபத்திரி.

சுக்கியானம் }
சுஞ்ஞானம் } பரமஞானம்.

சுக்கியானர் - கடவுள்.

சுக்கிரசிடர் - அஸுரர்.

சுக்கிரபகவான் - நவக்கிரஹ
தேவர்களிலொருவன்.

சுக்கிரம் - ஆனிமாதம், கண்
ணோய், கழுநீர், கள், நீர்
பொன், விந்து, வெண்ணிறம்.

சுக்கிரன் - அஸுரகுரு.

சுக்கிரீவன் - கிட்கிந்தையரசன்.

சுக்கில - ஓர் வருடம்.

சுக்கிலசோணிதம் - விந்துநாதம்.

சுக்கிலத்தம்பம்-சுக்கிலங்கட்டல்.

சுக்கிலபட்சம் - வளர்பிறை.

சுக்கிலபுட்டா - குங்குமமரம்.

சுக்கிலம் - இந்திரியம், இரேதசு, கண்ணேயினென்று, பழமுண்ணிப்பாலை, பாலைமரம், புளி, பூர்வபட்சம், வெண்ணெய், வெண்மை.

சுக்கிலாசயம் - சுக்கிலமுறைவிடம்.

சுக்கு - சுக்கான்கல், சுண்டி, துண்டு.

சுக்குதல் - செய்தல், புணர்தல்.

சுக்குநாறிப்புல் - ஓர்புல்.

சுக்குமம் - சிற்றேலம்.

சுக்கை - கப்பற்கேழ்வு, மாலை, விண்மீன், முசுமுசுக்கை.

சுங்கம்-ஆடுதின்னப்பாலை, ஆயம், களவு.

சுங்கன் - சுக்கிரன்.

சுசனம் - காற்று.

சுசி - ஆடிமாதம், இணக்கம், கழுவுகை, காமக்கவலை, கொடிவேலி, கோடைகாலம், சந்திரன், சுத்தம், சுசீலம், நெருப்பு, பாதரசம், வெண்குடை, வெண்மை.

சுசிகம் - புளியாரை.

சுசிதம் - பால்.

சுசிருடை - பணிவிடை.

சுசீலம் - நல்லொழுக்கம்.

சுசுந்தரி - நாவி, மூஞ்சூறு.

சுசூக்குமை - விந்தகலை.

சுச்சு - சுக்கு, சுண்டி, பறவை மூக்கு.

சுடரோன் - சூரியன்.

சுடர் - ஒளி, சந்திரன், சூரியன், தீ, தீச்சிகை, விளக்கு.

சுடர்க்கடை - மின்மினி.

சுடர்ச்செலவு - ஆறுவருக்கத் தோன்று, அது—இராசியை இரண்டாகப் பகிர்தல்.

சுடர்தல் - ஒளிசெய்தல்.

சுடர்நிலை - தகழி, விளக்குத்தண்டு.

சுடர்மௌலியர் - வானோர்.

சுடர்விழியோன் - வீரபத்திரன்.

சுடலை - சவர்க்காரம், சுடுகாடு.

சுடலையாடி - சிவன்.

சுடிகை - உச்சி, கள், சடாமுடி, சூட்டு, தலை, நெற்றிச்சுட்டி, மயிர்முடி, முடி.

சுடரம் - துவாரம்.

சுடு - சுடுதல், தெரிநிலை வினைப் பகுதி, வெம்மையுறல்.

சுடுகலம் - இட்டிகை, குயக்கலம், செங்கல்.

சுடுகாடு - ஈமம், சுடலை, மயானம்.

சுடுசுண்டை - சுட்டசாந்து.

சுடுதல் - உலோகங்களை யொட்டுதல், கெடுத்தல், சூடுகாணுதல், தகித்தல், விசனமடைதல், வேகவைத்தல்.

சுடுதூரத்தம் - சித்திரப்பாலாவி.

சுடுநிலம் - மயானம்.

சுடுமண் - ஓடு, செங்கல்.

சுடுமருந்து - எரிமருந்து.

சுடுவல்
சுடுவனம் } இரத்தம்.
சுடுவன்

சுடுவு - சும்மாடு.

சுட்கம் - வறட்சி.

சுட்குதல் - வறளல்.

சுட்டல் - காட்டுதல், குறித்தல், சுடுதல், சுடல், மதித்தல்.

சுட்டி
சுட்டிகை } ஒரு வினையெச்சம், துட்டன், நெற்றிச் சுட்டி, நுதலணி.

சுட்டு - எண்ணம், குறிப்பு, சுட்டென்னேவல், சுட்டெழுத்து நான்கு, அவை—புறச்சுட்டு, அண்மைச்சுட்டு, சேய்மைச் சுட்டு, பொதுச்சுட்டு, என்ப; நன்கு மதிப்பு.

சுட்டுக்கோல் - உலையாணிக் கோல், தீயோன்.

சுட்டுச்சொல் - ஒன்றைக் குறித்துக்காட்டு மொழி.

சுட்டுதல்-எண்ணுதல், கருதுதல், குறித்தல், குறித்துக்காட்டல், மதித்தல்.

சுட்டுப்பொருள்-குறித்தபொருள்.

சுட்டுவிடை - சுட்டிக்காட்டும் விடை.

சுட்டுவிரல் - ஆட்காட்டி விரல்.

சுட்டுவைத்தல்-இலக்குவைத்தல்.

சுட்டெழுத்து - சுட்டிக்காட்டுகிற எழுத்து அது, அ, இ, உ என்னுமெழுத்துக்கள்.

சுணக்கம் - சோர்வு, தாமதம், பிணக்கம்.

சுணங்கன் - நாய்.

சுணங்கு - சுணங்கென்னேவல், தேமல், பூந்தாது, மெலிவு.

சுணை - அபிமானம், கூர்மை, சுணைக்கோரை, சாணை, தினவு.

சுணைக்கோரை - ஓர்புல்.

சுணைவு - பேய்க்கடலை.

சுண்டகம் - மூங்கில்வில்.

சுண்டங்காய் - சிறுகாய், சுண்டிக்காய்.

சுண்டம்-கள், யானைத்துதிக்கை.

சுண்டல் - இறுகல், எய்தல், சுண்டற்கறி, சுண்டுதல், தெறித்தல், வற்றுதல்.

சுண்டன் - அறிவிலி, சதயநாள், மூஞ்சூறு.

சுண்டாலம், சுண்டாலி - யானை, யானைத்துதிக்கை.

சுண்டான் - கள், அளவு.

சுண்டி - கள், சுக்கு, சுண்டில், தொட்டால்வாடி, நீர்ச்சுண்டி, வினையெச்சம்.

சுண்டிகை - உண்ணு.

சுண்டியம் - சுக்கு.

சுண்டியுண்டை - கொஞ்சி, சதுரங்கம், சீரகம்.

சுண்டு - அடிப்பற்றியது, அற்பம், ஓர் சிறு அளவு, சுண்டென்னேவல்.

சுண்டுகெட்டை - நெய்வார் கருவியிலொன்று.

சுண்டுவிரல் - சின்னவிரல்.

சுண்டை - கள், கிணறு, சுண்டைச்செடி, நீர்ச்சுண்டு, யானைத் துதிக்கை.

சுண்ணக்கல் - சுக்கான்கல்.

சுண்ணமொழிமாற்று, மொழிமாற்றுப் பொருள்கோல்.

சுண்ணம் - கந்தப்பொடி, சதயம் சுட்டசார்ந்து, சுண்ணப்பொடி, பச்சைக்கற்பூரம், பராகம், புழுதி.

சுண்ணித்தல்-நீற்றுதல், பூசுதல்.

சுதந்தி - வடமேற்றிசைப்பெண் யானை, பெண்யானை.

சுதந்திரம் - உரிமை.

சுதந்திரி - இட்டமாய் நடத்துவோன், உரிமைக்காரன்.

சுதம்-கேடு, நெருஞ்சில், பரமாகமம், மலத்துவாரம், முறைமை.

சுதரிசனம் - அமராவதி, அழகு, கண்ணாடி, சக்கரம், சம்புநாவல், தேவலோகம், மேருமலை, வலியான்.

சுதருமம்
சுதர்மம்
சுதன்மம் } அறம், தேவஸபை.

சுதலம் - கீழேழுலகத்தொன்று.

சுதனம் - ஆயுதப்பொது, நற்பாக்கியம்.

சுதன் - இராசகுமாரன், மகன்.

சுதன்மம் - தேவேந்திரன் மண்டபம், நல்லதருமம்.

சுதன்வன் - விச்வகர்மா, வில்லாளி.

சுதாகரன் - கருடன், சந்திரன்.

சுதாச்சி
சுதர்ச்சி } சதுரக்கள்ளி.

சுதாசூதி-சந்திரன்,யாகம்,வசனம்.

சுதாநிதி - சந்திரன்.

சுதாமனு - மலை, முகில்.

சுதாவாக - தாருக.

சுதி - அறிஞன், குதத்துவாரம், சுருதி, பூருவபக்கம், பெண், யாழிநரம்பு.

சுதினம் - நல்லதினம்.

சுதை - அக்கினிதேவி, அமிழ்து, உதை காற்பசு, கங்கை, சுண்ணச்சாந்து, சுண்ணம்பு,சுவை, பால்,பூந்தேன்,பொருள்,மகள், மருந்து, மின், வெண்மை.

சுத்தக்கரணம் - அஹங்காரம். பரதவுறுப்புளொன்று.

சுத்தகாந்தாரம் - ஓரிராகம்.

சுத்தகேவலம் . ஓரவத்தை.

சுத்தகௌடம் - பஞ்சகௌடத் தொன்று.

சுத்தசைதன்னியம் - சுத்தஸ்வரூபஞானம்.

சுத்தசைவம் - ஓர் சைவம்.

சுத்ததத்துவம் - சிவதத்துவமைந்திலொன்று.

சுத்ததாளம் - ஓர்வகைத் தாளம்.

சுத்ததினம் - சென்றநாள், புண்ணியதினம், வருடத்தின் முதனாள்.

சுத்தநிருத்தம் - சாந்திக்கூத்துளொன்றாகிய சொக்கம்.

சுத்தப்புடம் - எண்ணலிற் களைந்தெடுத்தது.

சுத்தமாயை - ஆறுவித அத்துவாக்களுக்கும் மேலாகிய காரணமாயுள்ளது.

சுத்தமார்க்கம் - சத்தியமார்க்கம், நன்னடை.

சுத்தம் - உண்மை, கலப்பற்றது, குற்றமற்றது, சுக்கிலபக்கம், சயம், சுசி, சுத்தாவத்தை, தூய்மை, பவித்திரம், பொறிக்கறி.

சுத்தம்பண்ணுதல் - தூயதாக்கல்.

சுத்தவாசனை - நறுமணம்.

சுத்தவிக்கேபம் } சுத்தவிட்சேபம்.
சுத்தவிட்சேபம் }

சுத்தவித்தை - சிவதத்துவமைந்திலொன்று.

சுத்தன் - அயன், அருகன், கடவுள், மெய்யன், நிர்மலன், யாவற்றையும் கடந்து நிற்பவன், விஷ்ணு.

சுத்தாவத்தை - ஓரவத்தை.

சுத்தி - அரைப்பலம், இரப்போர் கலம், ஓர் கருவி, கிளிஞ்சல், சும்பிடுகிளிஞ்சல், சங்கு, சுத்தியல், செய்க்குத்தி முதலியன, பரிசுத்தம், பவித்திரம்.

சுத்திகரம் - சுத்திசெய்தல்.

சுத்திகை - அகல், இப்பி.

சுத்தியல் - சிறுசம்மட்டி.

சுத்துரம், சுத்துரு - கண்டங்கத்திரி.

சுத்தோதகம்-சுத்தஜலம்,நன்னீர்.

சுநகன் - நாய், நிருருதிதிக்கு.

சுநச்சேபன்-ரிசீகமுனி புத்திரன்.

சுநாசீரன் - இந்திரன்.

சுநாரம் - வுடைக்கலான் குருவி, நாய்ப்பால், பாம்பின்முட்டை.

சுநி - பெண்ணாய்.

சுநிதம் - நன்னடை.

சுந்தரபாண்டியன் - ஓர் பாண்டியவரசன்.

சுந்தரமூர்த்தி - அறுபத்துமூவரிலொருவர்.

சுந்தரம் - அழகு, நன்மை, நிறம்.

சுந்தரன் - அழகன், காமன், சுந்தரமூர்த்தி.

சுந்தரி - அழகுள்ளவள், இந்திராணி, சிறுசெருப்படி, துர்க்கை, பார்வதி, பெண், மூஞ்சூறு.

சுந்தன் - ஓரரக்கன்.

சுபகதி - சந்தோஷம், மோக்கம்.

சுபகரன் - ஈகையாளன், நன்மைசெய்வோன்.

சுபகிருது - ஓர் வருடம்.

சுபக்கம் } தன்பக்ஷம், பொருளிருக்கும்பக்கம்.
சுபட்சம் }

சுபத்திரை - அருச்சுனன்மனைவி.

சுபமிருத்து - நன்மரணம்.

சுபம் - காற்று, தருமம், நன்மை, நித்தியலோகத்தொன்று, பரிசம், மங்களம், மோட்சம், யுத்தம், வாழ்த்து.

சுபயோகம் - ஓர்யோகம், அமுதயோகம்.

சுபராசி - நல்லராசி, அவை— கற்கடகம், மிதுனம், இடபம், கன்னி, தனுஸு, துலாம், மீனம் என்னுமேழாம்.

சுபவாதனை - ஆன்மாவானந்தத்தழுந்தல், ஞானுனுபவம்.

சுபன்னன் - கருடன், சேவல்.

சுபாசுபம் - இன்பதுன்பம், நன்மை தீமை.

சுபாலம் - உபநிடதங்களி லொன்று.

சுபாலிகை - அடுப்பு.

சுபாவஞானம் - அதிட்டானமு மாரோபமுமற்றிருத்தல்.

சுபாவமுக்தி - சுத்தமுக்தி.

சுபாவம் - இயல்பு, கபடமின்மை.

சுபாவவாதம் - ஓர் சமயநூல்.

சுபானு - ஓர் வருடம்.

சுபிட்சம் - செழிப்பு.

சுபுகம் - மோவாய்க்கட்டை.

சுபுட்பம் - கராம்பு, பவளமரம்.

சுபுத்தி - நற்புத்தி.

சுபை - அரசாட்சி, தேவகூட்டம், நியாயஸ்தலம், மூங்கில்.

சுபையதார் - ஓரதிகாரி.

சுப்பியம் - மாவிலிங்கம்பட்டை, விளாம்பட்டை, வெள்ளிலோத்திரம்.

சுப்பிரசுதை - காட்டெருமைப் பால்.

சுப்பிரதந்தி - வடமேற்றிசை யானையின் பெண்யானை.

சுப்பிரதீபம் - மிக்கவொளி, வடகீழ்த்திசையானை.

சுப்பிரபேதம் - சிவாகமத்தொன்று.

சுப்பிரமதுவா - கூகைநீறு.

சுப்பிரம் - ஒளி, ஓர்யோகம், கருடப்பச்சையின் குணம், சந்தனம், நீர்மிக்கவொளி, வெண்மை, வெள்ளி.

சுப்பிரயோகம் - பஞ்சபாணுவத்தையிடுனென்று.

சுப்பெனல்-ஓரொலிக்குறிப்பு, நீர் வற்றல், விரைவின் குறிப்பு.

சுமங்கலம் - நன்மங்கலம்.

சுமங்கலை - உமை, மங்கலியப் பெண்.

சுமங்கை - ஆடுதின்னப்பாலை, வறட்சுண்டி.

சுமடர் - அறிவிலார், கீழமக்கள்.

சுமடு - அறிவின்மை, சும்மாடு, சுமை.

சுமதி - அறிஞன், நற்குணமுடையாள், நற்குணன், நற்புத்தி, நன்மதி, பாரம், மிகுதி.

சுமத்தல் - கட்டளைசார்தல், தண்டஞ்சார்தல், தாங்குதல், பாரமேற்றல், பொறுத்தல்.

சுமத்திரை - பாண்டுவின் மனைவிகளுளொருவள்.

சுமத்து - சுமத்துதல், சுமத்தென்னேவல்.

சுமம் - பூ.

சுமரணம் } உணர்ச்சி, சுரணை,
சுமரணை } சொரணை, நினைப்பு.

சுமருதல் - சுமக்குதல்.

சுமனசம் - பூமலர்.

சுமாரகம் - ஞாபகம், நினைவு.

சுமார் - ஏறக்குறைய.

சுமார்த்தம் - ஞாபகத்தோடு சம்பந்தப்பட்டது, ஸ்மிருதியிலே விதிக்கப்பட்டது.

சுமாலி - ஓரரக்கன், கள்.

சுமித்திரை - தசரதன் மனைவி.

சுமை - பாரம்.

சுமைதலை - பொறுப்பு.

சுமைதாங்கி - ஏதண்டை, பொறுப்பாளி.

சுமையடை - சும்மாடு.

சும்பகம் - ஊசிக்காந்தம், தீத்தட்டிக்கல்.

சும்பகன் - ஸ்திரீலோலன்.

சும்பனம் - சூப்புதல், முத்தம்.

சும்பித்தல் - முத்தமிடல்.

சும்புதல் - வாடிச்சுருங்கல்.

சும்புன் - கடம்பு.

சும்மா-இயல்பு, உபசாரமின்மை, ஒழிவிலாமை, தொழிற்படாமை, முகாந்தரமின்மை, மௌனம்.

சும்மை - ஆவாரை, ஊர், ஒலித்தல், சுமை, நகர், நாடு, நெற்போர்.

சுயஞ்சோதி - இயற்கையொளி, கடவுள், கலப்பிலாவொளி.

சுயபுணர்ச்சி - தற்புணர்ச்சி.
சுயம் - இயல்பு, கலப்பற்றது, சொந்தம், தானுதல்.
சுயம்பாகி - சமையற்காரன், சவர்க்காரம்.
சுயம்பிரகாசன் - தற்சோதியானவன்.
சுயம்பு இயற்கை, கடவுள், சிவன், சுயாதீனம், தானுகவாதல், பிரமன்.
சுயம்வரம் - கணவனைத்தானுகத் தேர்ந்தெடுப்பது.
சுயிரகம் - குசைப்புல்.
சுயேச்சை - தன்னிச்சை, தன்னிஷ்டம்.
சுயோகி - கள்.
சுயோதனன் - துரியோதனன்.
சுரகுரு - இந்திரன், வியாழன்.
சுரங்கம் - ஒளிப்பிடம், கீழறை, சாதிலிங்கம், திலகசிந்தூரம், தேன், தோடம் பழம், தோன்றுமவுள்ளறுக்குந்துவாரம்.
சுரசம் - அரத்தை, சாறு, சிறுகிழங்கு, சுகிர்தசாரம், துளசி, நறும்பிசின், நொச்சில், பாதரசம், முறித்தசாறு.
சுரசனி - இரவு.
சுரசா - துளசி.
சுரசி - வெண்ணொச்சி.
சுரசை - சிற்றரத்தை.
சுரஞ்சனம் - கமுகு.

சுரடி - ஓர்பண்.

சுரண்டல் . கவருதல், சீண்டுதல், தூண்டுதல், விபசாரஞ்செய்யல்.

சுரதநூல் - காமநூல்.

சுரதம்-அன்பு, இசைப்பு, இரதம், ஒட்டல், பாதரசம், புணர்ச்சி, மருந்திழிசாரம்.

சுரதனு - வானவில்.

சுரதரு - கற்பகம்.

சுரத்தல் - இடைவிடாது சொரிதல், உண்டாதல், ஊறுதல், நிறைதல், பயத்தல்.

சுரத்துய்த்தல் - ஒருதுறை.

சுரநதி - ஆகாயகங்கை, கங்கை.

சுரபதம்-ஆகாயம், தேவலோகம்.

சுரபி - கந்தகத்தூள், கள்ளி, காமதேனு, சாதிக்காய், சித்திரைமாதம், துளசி, தேட்கொடுக்கி, பசு, பிரமிப்பூடு, பூமி, மது, மல்லிகை, வாசனை.

சுரபு - இல்வம்பிசின்.

சுரபுன்னைகம் } ஓர் மரம், வாழை.
சுரபுன்னை

சுரப்பு - சுரத்தல்.

சுரப்புவடிவு - மூலமேற்றிரன்.

சுரமதி - சிலந்தி.

சுரம் - அருநெறி, இசை, இராகத்தகுதி, இராகபேதம், உட்டுளை, இருப்பு, கள், காடு,

காய்ச்சல், கொம்பினுட் குரு த்து, பாலைநிலம், வழி.

சுரரிடம் - தேவலோகம்.

சுரர் - வானோர்.

சுரர்துருமம் - தேவதாரு.

சுரர்பகைவர் - அஸுரர்,

சுரர்பதி - இந்திரன்.

சுரன் - அறிஞன்; சுரம், சூரியன், பாலை நிலம்.

சுரா - கள்.

சுராட்டு - இந்திரன், சிவன், விஷ்ணு.

சுராட்புருடன் - சிவன், வாஸ்து புருடன், விஷ்ணு.

சுராபகை - கங்கை.

சுராலயம் - கள்ளுக்கடை, சுவர்க்கலோகம், மேரு.

சுராலை - சாம்பிராணி.

சுரி - ஆணரி, எட்டுத்துளை, சங்குச்சுரி, சுரியென்னேவல், சுழற்சி, சேறு, தமர், முறுக்கு.

சுரிகுழல் - அளகம், கவசம், சுருண்டகுழல், பெண்மயிர்.

சுரிகை - உடைவாள், ஒருப நிடதம், கத்தி, கவசம்.

சுரிதகம் - கலிப்பாவுறுப்பாறனு ளொன்று.

சுரிதம் - கலக்கப்பட்டது, வெட் டப்பட்டது.

சுரிதல் } சுருங்கல், சுழித்தல்,
சுரித்தல் } சுழித்துள்ளே வாங்கல், சேறுதல், திரைதல்.

சுரிப்புறம் - சங்கு, துவாரமுள்ள பக்கம், நத்தை.

சுரியல் - இளைஞர் மயிர், சுரிதல், சுழலல், நீர்ச்சுழி, பெண்மயிர், மயிர், வளைவு.

சுருக்கம் - அடக்கமான செய்கை, கட்டல், குறைவு, சங்கிரகம், சிறுமை, சுருங்கல், வறுமை.

சுருக்கல் - அடக்கல், கட்டல், சுருக்குதல்

சுருக்கி - ஆமை, ஓர் வினையெச்சம், சிறுகீரை, தொட்டாற் சுருக்கி.

சுருக்கு - உருவுதடம், கட்டு, கண்ணி, கயிற்றுச் சுருக்கு, சுருக்கம், சுருக்கென்னேவல், சுருங்கப்பிடித்துக் கட்டியது, நெய்த்துடுப்பு, மடிப்பு.

சுருங்கச்சொல்லல் - நூலழகிலொன்று, அது—சொற் சுருங்கச்சொல்லுதல்.

சுருங்கல் - குறைதல், சுருங்குதல், திரைவு, நுழைவாயில், மாலை.

சுருங்கு - சலதாரை, சுருங்கென்னேவல்.

சுருங்குதல் - அடக்கமாயிருத்தல், அலைசுருங்கல், இறுகுதல், ஒடுங்குதல், ஒழுக்கந்தப்பல், குறைதல், கூம்புதல், கெடுதல், சங்கிரமாதல்.

சுருங்கை - கரந்தகற்படை, கோட்டையிற் கள்ள வழி, நுழைவாயில், மதகு.

சுருசுருத்தல் - ஊடுருவுமொழிக் குறிப்பு, விரைவுக்குறிப்பு.

சுருட்டல் - சுருட்டுதல்.

சுருட்டி - ஆலவட்டம், ஓரிராகம், மயிர்ச்சிகைப்பூடு.

சுருட்டு - உபாயம், சீலைச்சுருட்டு, சுருட்டென்னேவல், சுருள், மடக்குகை.

சுருண்டுபோதல் - சோர்ந்துபோதல், பலங்குன்றல்.

சுருணி - யானைத்தோட்டி.

சுருணை - ஓர் வளைவு, சுருண்டது, நூல் முதலியவற்றின் பந்து, மயிர்ச்சுருணை.

சுருதி - இசை, ஒலி, காது, சுதி, சுரம், மங்கலச்சொல், மந்திரம், வேதம்.

சுரும்பர் - ஆண்வண்டு, மலைவண்டு.

சுரும்பாவன் - மன்மதன்.

சுரும்பு - ஆண்வண்டு, வண்டு.

சுருவை, சுருவம் } நெய்த்துடுப்பு.

சுருளல் - சுருளுதல், மயிர்ச்சுருள், வளைதல்.

சுருள் - ஐம்பாலி லொன்று, அஃது,—பின்னே செருகல், சுருளென்னேவல், தாமரையுட்சுருள், நூற்சுருள் முதலியன, பெண்மயிர், வெற்றிலைச் சுருள், வட்டாகாரமாய் மடிப்புண்ட பாத்திரம்.

சுரூபம் - உருவம், நல்லுருவம்.

சுரூபவதி - அழகுடையவள்.

சுரேசன் - இந்திரன், ஈசானன், குமரன்.

சுரேந்திரன் - இந்திரன்.

சுரேந்திரன்மைந்தன் - அருச்சுனன், சயந்தன்.

சுரை - அமுதம், அம்புத்தலை, உட்டுளை, களவு, கள், குழாய், சுரைக்கொடி, சூர்ணம், பசு, பசுவின் முலை, பூண், விலங்கின் முலை.

சுரோணராசம்வர்த்தம் - சிகப்பு இரத்தினம்.

சுரோணி - நிதம்பம்.

சுரோணிதம் - உதிரம், சிவப்பு, மகளிர் சூதகம்.

சுரோத்திரம் - காது, கேள்வி.

சுரோத்திரேந்திரியம் - ஞானேந்திரியமைந்திலொன்று.

சுலபம் - அற்பம், இலேசு.

சுலவல் - சுழலல், சுழற்றுதல்.

சுலனன் - அக்கினி.

சுலவுதல் - சுழலல், சுழற்று, சூழுதல்.

சுலுகம் - கலகம், குறைவு, சிரங்கை, சேறு.

சுலுப்பு - ஓர் மரக்கலம்.

சுலோகம் - ஆரியச்செய்யுள், பழமொழி, புகழ், வசனம்.

சுலோகி - கள்.

சுலோசனம் - சிறந்தவிழி, மான், மூக்குக்கண்ணாடி.

சுலோபம் - அற்பம், எளிது, எறும்பு, மூதுரை.

சுல்கம் - கிரையப் பொருள்.

சுல்வம் - கயிறு, தாமிரம்.

சுல்லி - அடுப்பு, மடைப்பள்ளி.

சுல்லு - வெள்ளி.

சுவ - சொந்த.

சுவகதம் - ஒன்றிற்றோன்றி அஃதை நீங்காது பலதன்மையாயிருத்தல்.

சுவகபோலம் - தானுயுண்டு பண்ணல்.

சுவசனம் - சாதுரியம், நல்ல வசனம்.

சுவச்சம் - அழுக்கின்மை, எண்ணெய், குற்றமற்றது, சொச்சம், செள்க்கியம், நின்மலம், வெண்மை.

சுவடி - பனையோலையில் எழுதிய புத்தகம்.

சுவடு - அங்கவடி, அடிச்சுவடு, அடையாளம், இரும்புக்கவசம், கட்டு, கபடம், குறிப்பு, சுளுகு, தழும்பு, நெல்விலக்கம், பக்கரை, வண்டித்தடம்.

சுவணம் - கருடன், கழுகு, பொன்.

சுவத்தம் - சொஸ்தம், சுகம்.

சுவத்தி } ஓரடையாளம், நவா
சுவத்திகம் } சனத்திலொன்று, மங்கலவடையாளம்.

சுவநம் - சண்பகம், சுவப்பநம்.

சுவநன் - சூரியன், சந்திரன், தீ.

சுவப்பிரம் - நரகம், பாதாளம், வளை.

சுவம் - ஐசுவரியம், சொந்தம்.

சுவயம் - உரிமை, சுயம், தான்.

சுவயம்வரை - தானேமாலையிட்டு மணமுடித்த பெண்.

சுவயேச்சை - தன்னிச்சை.

சுவரகழ்கருவி - கன்னக்கோல்.

சுவரொட்டி - அணைசுவர், ஆட்டின் மண்ணீரல், சுவர் முள்ளங்கி.

சுவர் - அண்டச்சுவர், அலங்காரம், ஆகாயம், காயத்திரியினோருறுப்பு, தேவலோகம், மதில், வீடு முதலியவற்றின் சுவர்.

சுவர்க்கம் - தேவலோகம், மூலை.
சுவர்க்கர் - வானோர்.
சுவர்க்கோழி - ஓர்வண்டு.
சுவர்ச்சாதி - சத்திச்சாரம்.
சுவர்ணம் - சொன்னம், பொன்.
சுவலை - அரசமரம்.
சுவலோகம் - மேலேழுலகி னொன்று.
சுவல்வி - கார்போகிவிதை.
சுவல் - குதிரைக்கழுத்தின்மயிர், தோண்மேல், பிடர், முதுகு, மேடு.
சுவல்வரி - அணில்.
சுவவு - சுவர்க்கம், பறவைமூக்கு, மூஞ்சூறு.
சுவறல் - உறிஞ்சல், ஊறுதல், காய்தல், வற்றல்.
சுவற்றுதல் - குடித்தல்.
சுவன்னகாரன் - பொற்கொல்லன்.
சுவன்னயூதி - செப்புமல்லிகை.
சுவா - நாய்.
சுவாகதம் - இன்னா, க்ஷேமம், நல்வரவு, விசாரித்தல்.
சுவாகா } அக்கிதேவி, மந்திர
ஸ்வாஹா } முடிவினொன்று.
சுவாசகம் - எட்டி, இளி, சவட்டுமண், புருமுட்டி, பேராமுட்டி, விஷமுட்டி.

சுவாசம் - உயிர்ப்பு, சவட்டுமண், நல்லிருப்பிடம், நன்மணம்.

சுவாசிநீ - பாதிரிமரம்.

சுவாதகத்தி - இத்திமரம்.

சுவாதம்-உருசித்தல், ஒருநோய், சுவாசம், பாகஞ்செய்தல், புசித்தல்.

சுவாதி - ஓர் நக்ஷத்ரம், சோதிநாள்.

சுவாதிட்டானம் - ஆதாரங்களா றிலிரண்டாவது.

சுவாது - ஆடாதொடை, தித்திப்பு, நல்சலம்.

சுவாதுகண்டகம் - நெருஞ்சில்.

சுவாதுகந்தி - துளசி.

சுவாத்தியம் - இன்பம், சுகம், பாக்கியம்.

சுவாத்தியாயம் - அத்தியயனம், வேதமோதல், வேதம்.

சுவாந்தம் - மனம்.

சுவாபப்பிரமாணம் - ஓரளவு, அஃது— ஒருசொற்பல பொருள் விரிந்தவழி அதற்கேற்ற பொருள் கொள்ளல்.

சுவாபம் - இயல்பு.

சுவாமி - அரசன், அருகன், உவாத்தி, எசமானன், கடவுள், கணவன், கந்தன், குரு, சிவன், பொன்.

சுவாயம்பு - ஓர்மனு.

சுவாயம்புவம் - சிவாகமத் தொன்று.

சுவாரசம் - இனிமை, வெள்ளிலோத்திரம்.

சுவாரி - கப்பலின்பின்னணியம், சவாரி, சிவிகை முதலிய யானம்.

சுவார்த்தானுமானம் - தற்குறிப்பனுமானம்.

சுவாலை - சொலிப்பு.

சுவானம் - நாயுருவி, நாய், பொன்.

சுவானுபவம் } தெய்வவருள்,
சுவானுபூதி } தெய்வவறிவு.

சுவி - இத்திமரம், துளசி.

சுவிகை - கச்சோலம், கள்.

சுவீகாரம் - அங்கீகரிப்பு, அனுபவம், தனதாக்குதல்.

சுவீரியம் - இலந்தைக்கனி.

சுவேசம் - வெண்கரும்பு.

சுவேச்சை - தன்னிச்சை.

சுவுகம் - மோவாய்க்கட்டை.

சுவேதகம் - சவரிலோத்திரம்.

சுவேதகாண்டம் - வஞ்சிக்கொடி.

சுவேதகுசுதம் - வெள்ளெருக்கு.

சுவேதசம் - வியர்வையிற்பிறப்பன.

சுவேதசாரம் - நாணற்புல்.

சுவேதநீர் - சுக்கிலம்.

சுவேதமூலம் - சாரணை.

சுவேதம் - நாணல், மாவிலங்கம், வஞ்சிமரம், வியர்வை, வெண்மை, வெள்ளி.

சுவேதவராககற்பம் - ஓர்கற்பம்.

சுவேதவனப்பெருமாள் - சிவஞானபோதஞ்செய்த மெய்தேவர்.

சுவேதவனம் - திருவெண்காடு.

சுவேதவாகனன் - அருச்சுனன்.

சுவேதனை - தன்னறிவு.

சுவேதனைக்காட்சி - அபரோட்சஞானம்.

சுவேதாசுவதரம் - ஒருபநிடதம்.

சுவை - அறுசுவை, அவை— இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, இனிமை, இரசாலங்காரம், உருசி, ஐம்புலத்தொன்று, சித்திரைநாள், சுவையென்னேவல், விலங்குறுகுறிப்பினுளொன்று.

சுவைத்தல் . இன்பந்தரல், உண்டல், உருசித்தல், போகம்நுகரல், முலையுண்ணல்.

சுழலல் - கன்றுதல், சுழல்வு.

சுழலாவிரை - பொன்னூவிரை.

சுழலுதல் - கலங்குதல், சுழலல், சுற்றுதல்.

சுழல் - காற்றூடி, சுழலென்னேவல், சுழல், சுழிநீர் முதலியன, வஞ்சனை, வளைதடி, வளைவு.

சுழல்காற்று - சூறைக்காற்று.

சுழல்படை - சக்கரம், வளைதடி.

சுழல்வு - கலக்கம், சுற்று, சுழற்சி.

சுழற்றல் - உழற்றல், கிறுகிறுப்பு, சுற்றியாட்டல்.

சுழாரை - பொன்னவிரை.

சுழி - அங்கச்சுழி, அக்ஷரச்சுழி, இலக்கணச்சுழி, உரோமச்சுழி, கபடம், சுழியென்னேவல், நீர்ச்சுழி முதலியன, மூர்க்கம், விந்து.

சுழிகுளம் - சித்திரக்கவியிலொன்று, அது—நான்கடியுஞ் சுற்றி வாசிக்கினுஞ் சரிவரத் தொடக்குங் கவி.

சுழிகை - ஓர் சிவஸ்தலம், கள், சுருள், சுழிதல்.

சுழிதல்- கபடமுண்டாதல், கலங்கல், கழித்தல்.

சுழித்தல் - அலைதல், எழுச்சி, சுழிக்குதல், மறைத்தல், வேறோரிடத்தின்றி நிற்றல்.

சுழிமுனை - ஆறுதாரத்தையு மூடுருவிநிற்கும்நாடி, நடுநாடி மூன்றிலொன்று.

சுழியச்சு - தட்டார் கருவியிலொன்று.

சுழியல் - சுழிதல், சுருள், திருச்சுழியென்னுமோர்தலம்.

சுழிவு - ஒளிவு.

சுழுத்தி - ஐந்தவத்தையி னொன்று, அஃது—மயக்கமான நித்திரை, மூன்றாமவத்தை, அஃது இதயத்தானம்.

சுழுமுனை - மூவகை நாடியி னொன்று.

சுளகு - முறம், விசாகநாள்.

சுளி - புளியாரை.

சுளிகை - முருங்கை.

சுளிக்கு - ஊன்றுகோல்.

சுளித்தல்-கோபம், சினக்குறிப்பு. சினம், திரும்பல், வெறுப்பு.

சுளுகு-அற்பம், இலகு, உபாயம், சிறுமை.

சுளுகோதகம் - சிறங்கைநீர்.

சுளுந்து - கோரான், சூள்.

சுளுவு-இலேசு, சலக்கரணை, சுலபம், தணிவு.

சுளை - பலாக்காய் முதலியவற்றின் சுளை.

சுள் - அற்பம், உறைப்பு, கருவாடு, சூள், மெல்லியது.

சுள்ளக்கம் - கோபம், மேட்டிமை, வேர்க்குரு.

சுள்ளக்காய் - மிளகாய்.

சுள்ளம் - கோபம்.

சுள்ளாணி - மெல்லியவாணி.

சுள்ளாப்பித்தல் - அடித்தல், உறைத்தல், எரிதல், சூடுகாட்டல், வீசுதல், வேகங்கொள்ளல்.

சுள்ளாப்பு - அடி, உறைப்பு, சீக்கிரம், பழிச்சொல், வெப்பம்.

சுள்ளி - அனிச்சமரம், ஆச்சமரம், சிறுகொம்பு, சிறுவிறகு, ஞாழல், மயிர்க்கொன்றை, மாமரம்.

சுள்ளிடுதல்-உறைத்தல், நோதல்.

சுள்ளிடுவான் - ஒருபூச்சு, மிளகுக்காய்.

சுள்ளு - கோபம், கள், வெப்பம்.

சுள்ளை - காளவாய், சூளை, மட்கலஞ்சுடுசூளை.

சுறடு - வறண்டது.

சுறட்டன் - முரடன்.

சுறட்டு - சிக்கு, தலையிடுகை, துறட்டு, தொரந்தரை, மூர்க்கம்.

சுறணம் - கருணைப் பூண்டு.

சுறண்டு - கோள், சருவுதல், தூண்டிவிடுதல், புரூண்டுதல்.

சுறவு - சுறு.

சுறு - தேக அழுக்கு, மகரமீன், மகரவிராசி.

சுறுளம் - கதி, கோபம்.

சுறீரெனல் - ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.

சுறுக்கு - ஆத்திரம், கதி, காரம், கூர்மை.

சுறுக்கெனல் - கடுப்பின்குறிப்பு.

சுறுசுறுப்பு - சாக்கிறதைவிரைவு, வேகம்.

சுறை - கொத்தான்.

சுரோணிதவழலை - இந்துப்பு.

சுற்பம் - செப்பு, சொற்பம்.

சுற்றத்தார் - இனத்தார், துணைவர், பரிசாரகர்.

சுற்றந்தாழல் - இனந்தழுவியிருத்தல்.

சுற்றம் - அரசர்க்குத் துணையினொன்று, உறவு, உற்றூர்.

சுற்றல் - உடுத்தல், எழுச்சி, சுற்றுதல், சூழ்தல், வட்டமாயோடல்.

சுற்றிக்கொள்ளுதல் - கவர்தல், சிக்குப்படுதல், சூழ்ந்து கொள்ளுதல்.

சுற்று - உழற்சி, கயிறு முதலிய சுற்றுஞ்சுற்று, கவர்தல், சுருள், சுற்றளவு, சுற்றுப்புறம், சுற்றென்னேவல், மதில், மரச்சுற்று, வட்டமாயோடல்.

சுற்றுதல் - அணிதல், கவர்தல், சுழற்றல், சூழுதல், நடத்தல், நூன் முதலிய சுற்றல், வஞ்சித்தல், வட்டமாயோடல்.

சுற்றுப்புறம் - அயல்.

சுற்றுவழி - நேரற்ற பாதை.

சுற்றுவாரி - கல்லூரி, சுவற்புறத்து நீண்டவுத்திரம்.

சுனகன் - நாய், நிருருதிமூலை.

சுனக்குடம் - சதுரக்கள்ளி.

சுனை - உரோசம், கரு, குளம், கூர், தினவு, நீரடுத்தவிடம், நீரூற்று, பசும்புற்றரை, மலைச் சுனை.

சுனைக்கரந்தை - ஓர் கரந்தை.

சுனைதல் - குழியாக்கல், குழைதல், சொறிதல், மிருதுவாதல், வாடல்.

சுனைத்தல் - சொறிதல்.

சுனைவு - பேய்க்கடலை, மலைத் தண்ணீர்.

சுன் - சனி, சுன்னை, வட்டம், வெண்மை, வெறுமை.

சுன்னச்சி - சத்திச்சாரம்.

சுன்னிதம் - நுண்மை.

சுன்றுக்குட்டி - திரட்டுப்பாற் கட்டி.

சுன்னை - பூச்சியம்.

சூ

சூ - ஓரெழுத்து, விலங்கினங்களை யோட்டுமோர் குறிப்பு, வியப்புச்சொல்.

சூகம்-அம்பு, இரக்கம், ஊர்வன, காற்று, சுனை, தவழ்சாதிப் பொது, தாமரை, நெல்வால்.

சூகரம் - பன்றி, மான்.

சூகை - ஓரெறும்பு, சுழற்சி, தலைச்சுழற்சி, யானை, வீட்டின் பின்புறம்.

சூக்கம் - சூட்சம்.

சூக்காட்டுதல் - உச்சக்காட்டுதல்.

சூக்குமசரீரம் - ஸ்தூலசரீரமல்லாதது, நுண்வடிவானவுட்சரீரம்.

சூக்குமதண்டுலம் - திப்பிலி.

சூக்குமபத்திரம் - கடுகு, கொத்தமல்லி, சீரகம், செங்கரும்பு.

சூக்குமபூதம் - ஸ்தூலபூதமல்லாதது.

சூக்குமம் - அணு, அற்பம், ஓரலங்காரம், கடவுள், சிவாகமத்தொன்று, சீந்தில், சீவதேகம் மூன்றிலொன்று, தவறு, நுண்ணிய வறிவு, நுண்மை, வஞ்சகம், வானோர்வரம் நான்கிலொன்று, அஃது — கண்டிப்பின்மை.

சூக்குமில் - சிலந்திப்பூச்சிக்கூடு.

சூக்குமை - நான்குவாக்கிலொன்று.

சூக்குளி - வெற்றிலை.

சூக்தம் - புகழப்படுவது.

சூங்குமம் - வேலிப்பருத்தி.

சூசகம் - உளவு, தருப்பைப்புல்.

சூசகவாயு - சூதகவாயு.

சூசகன் - உவாத்தி, ஒற்றன்.

சூசம் - தருவாட்டேறு.

சூசநம் - அறிவித்தல், பார்த்தல்.

சூசனை - சமிக்ஞை, நுண்மை, போதனை, விவேகம்.

சூசாக்கிரம் - ஊசிமுனை.
சூசி - ஊசி, குறிப்பு, துளை.
சூசிகம் - ஓர் வாச்சியம்.
சூசிகாமுகம் - சங்கு.
சூசிகை - ஊசி, குறிப்பு, யானைத் துதிக்கை.
சூசியம் - ஊசிக்காந்தம், சூட்டிறைச்சி.
சூசியாசியம் - பாதவுறுப்புகளொன்று, மூஞ்சூறு.
சூசகம் - முலைக்கண்.
சூடகம் - கிணறு, கைவளை, சடை
சூடம் - உச்சி, தலை.
சூடல் - அணிதல், சூடுதல், முடி தரித்தல்.
சூடன் - ஓர்மீன், கருப்பூரம்.
சூடாகரணம் - குடுமிவைத்தல்.
சூடாமணி - ஓர் காப்பியம், ஓர் தேவமணி, குன்றிமணி, முடி மணி.
சூடாமணிநிகண்டு - வீரைமண்டலவர்செய்தநிகண்டு.
சூடாலம் - சணப்புவிதை, தலை.
சூடாலைக்கல் - ஓர் கல்.
சூடி - சிலை, சூடினவன், புடவை.
சூடிகை - முடி.
சூடிச்சி - எவட்சாரம்.
சூடிணர் - கோங்குமரம்.

சூடு - அரிக்கட்டு, உச்சிக்குடுமி, எருத்துத்திமில், சுடுதல், சூடுதல், சூடென்னேவல், சேவற்குடு, தலை, நுனி, நென் முதலியவற்றினரிக்குவி யல், மயிற்சூடு, முடி, வெடி, வெப்பம்.

சூடை - ஓர்மீன், குடுமி, கைக் கடகம், வீட்டிறப்பு.

சூட்சி - உபாயம்.

சூட்சமபுத்தி - நுண்ணியபுத்தி.

சூட்சமம் - சூட்சமசரீரம், தந்தி ரம், நுட்பம்.

சூட்டல் - அணிவித்தல், ஏற்று தல், வியங்கோண் முற்று.

சூட்டு - குற்றச்சாட்டு, கூர்மை, சூட்டுந்தன்மை,சூட்டென்னே வல், தரித்தல்,நுதலணிமாலை; பாம்பின் சூட்டு, மயில் முத லியவற்றின் சூட்டு, மாலை, முடிப்பு.

சூதகசத்துரு - காந்தம்.

சூதகம் - அருவருப்பு, கிணறு, தீட்டு, பழமை, பிறப்பு,மகளிர் துடக்கு, மாமரம்.

சூதத்தைப்பொன்ணுக்கி - நாக பாஷாணம்.

சூதநதி - பொருனைநதி

சூதநோக்கல் - நீலாஞ்சனக்கல்.

சூதபாஷாணம் - இரசபாஷா ணம்.

சூதம் - இரசம், சூறி, கேட்டல், சூதாடு கருவி, சூது, பவளமல்லிகை, பாதரசம், புளிமா, மடைத்தொழில், மன்மதன் கணை, மாமரம், வண்டு, விழுதல்.

சூதர் - சூதாடுபவர், தேர்ப்பாகர், பாணர், புகழ்வோர், வியாஸர் மாணாக்கர்.

சூதவஞ்சனம் - சூதநோக்கல்.

சூதவம் - வண்டு.

சூதனம் - அழித்தல்.

சூதன் - சமையற்காரன், சூதமாமுனி, சூதாடுவோன், சூரியன், தச்சன், தேர்ப்பாகன், பாணன், புகழ்வோன், வஞ்சகன்.

சூதி - அசைவு, கதி, தைத்தல், நடை, பிள்ளைபெற்றவள்.

சூதிமம் - தைத்தல்.

சூது - ஓரிதழ்த்தாமரை, சூதாடு கருவி, சூதாட்டு, தாமரை, தாயம் விளையாடல், வஞ்சகம்.

சூதுவென்றி - ஒருதுறை.

சூத்திரதாரி - கடவுள், பதுமையாட்டி.

சூத்திரநிலை - கருத்துத்தொடர்ந்துநிற்குநிலை, சூத்திரப்பாடல்.

சூத்திரப்பா - ஓரகவல், நூற்பா.

சூத்திரப்பாவை - கயிற்றினாலாட்டும் பாவை.

சூத்திரப்புறனடை - சூத்திரத்துக்கு விலக்கு முதலியன கூறும் விதி.

சூத்திரம் - இயந்திரம், இரகசியம், உபாயம், ஒழுங்கு, சூத்திரயாப்பு, தீர்ப்புநூல், பஞ்சிநூல், பூணூல், வழி நூல்.

சூத்திரர் - சூத்திரவேலை செய்வோர், நான்காம் வருணத்தோர்.

சூத்திரர்தொழில் - சூத்திரர்க்குறியவறுதொழில், அவை—உழுதல், காருகவினைகளாக்கல், குயிலுவத்தொழில், பசுக்காத்தல், மூன்று வர்ணத்தோர்க்குமேவல் செய்தல், பொருளீட்டல்.

சூத்திரவிருத்தி - சூத்திரர்தொழில், சூத்திரங்களுக்குரிய ஓர் உரை.

சூத்திரன் - புஷ்பராகம், வைடூரியம்.

சூநம் - இறைச்சிக்கடை, பிறப்பித்தல், பூமலர், மான், வீக்கம்.

சூநர் - ஊன்விற்போர்.

சூநியன் - முடவன்.

சூநு - சூரியன், பின்னோன், மகள், மகன்.

சூர்நுமம் - சிலர்தி நாயகம்.

சூபகாரன் - சமையற்காரன்.

சூபம் - அம்பு, ஓர் பயறு, மடைத்தொழில்.

சூப்பியம் - பாம்புகொல்லி.

சூப்புதல் - உமிந்தெடுத்தல், சுருக்குதல், சும்பனம்பண்ணல்.

சூமம் - ஆகாயம், நீர், பால்.

சூரசுதன் - சனி.

சூரசூதன் - அருணன், புதன்.

சூரசேனம் - ஓர் தேசம்.

சூரசேனன் - கண்ணன்பாட்டன்.

சூரணம் - கருணைக்கிழங்கு, பஸ்மம்.

சூரணிகை - ஒருவகைப்பா, கருத்துப்பொருள், விவரம்.

சூரணித்தல் - பொடித்தல்.

சூரபன்பன் - சூரன்.

சூரம் - அச்சம், கடலை, வீரம்.

சூரர் - படைவீரர்.

சூரலன் - பாண்டியன்.

சூரல் - சூரைப்பூ, பிரம்பு.

சூரன் - ஒரஸௗரன், கரடி, கிருஷ்ணன் பாட்டன், கோழிச்சேவல், கௌரிபாஷாணம், சிங்கம், சூரபன்மன், சூரியன், தீ, நவச்சாரம், நாய், புலவன், வீரன்.

சூரி - எருக்கு, காடுகொள், காளி, கிருஷ்ணன், சூரியன், நத்தைச்சூரி, பண்டிதன், புத்தகுரு, புலவன், புளிச்சக்கீரை, மட்குக்கத்தி, வீரமுள்ளவள்.

சூரியகணம் - அமங்கலகணம் நான்கினொன்று, நேர்நிரை நேரடுத்து வருவது.

சூரியகரந்தை-ஓர்விதக்கரந்தை.

சூரியகலை - சூரியசரம், பிங்கலை.

சூரியகாந்தம் - ஓர்பூ, சூரியமுகத்துத் தீவிடுங்கல்.

சூரியகுலம் - சூரியவமிசம்.

சூரியசங்கிரமம் } மாதப்பிறப்பு.
சூரியசங்கிராந்தி }

சூரியசரம் - பிங்கலை.

சூரியசித்தாந்தம்-ஓர்கணிதநூல்.

சூரியசித்திரம் - சூரியபுத்தி.

சூரியபுடம் - ஓர் கணிதபுடம்.

சூரியபுத்திரன்- சனி, சுக்கிரீவன், நமன், வருணன்.

சூரியபுராணம் - பதினெண்புராணத்தொன்று.

சூரியமணி - ஓர்மரம், சூரியகாந்தம்.

சூரியமண்டலம் - ஓர் மண்டலம், சூரியலோகம்.

சூரியர்-துவாதசாதித்யர், புலவர்.

சூரியவிட்சேபம் - சூரியனது பதனகேந்திரம்.

சூரியன் - ஆதித்தன், செப்புமலை, செவ்வெருக்கு, சோழன், ஞாயிறு.

சூரியாஸ்தமயம் - மாலைப்பொழுது.

சூரியாஸ்திரம் - ஓர்பாணம்.

சூரியாலோகம் - சூரியகிரணம்.

சூரியேந்துசங்கமம்-அமாவாசை.

சூரியை - புதுமணப்பெண்.

சூரியோதயம் - உதயகாலம்.

சூருமம் - குசைப்புல், மாந்தப்புல்.

சூரை-ஓர்செடி, ஓர்பயிர், ஓர்மீன், கள், தூதுளை, நெற்றிப்புல்.

சூர் - அச்சம், ஓரஸுரன், கொடுமை, சூரென்னேவல், துன்பம், தெய்வப்பெண், தெய்வம், நோய், மிளகு, யோகினி, வனதேவதை, மிளகு, வால்மிளகு.

சூர்த்தநோக்கு - கொடுங்கண், கொடுமை.

சூர்த்தல் - அச்சங்கொடுத்தல், சினத்தல், சுகிர்தல், சுழற்றல்.

சூர்ப்பகன்னம் - யானை.

சூர்ப்பகைவன் - முருகன்.

சூர்ப்பநகி } இராவணன்
சூர்ப்பநகை } றங்கை.

சூர்ப்பம் - சுளகு, தாணியென்னு மோரளவை.

சூர்ப்பு-கொடுந்தொழில், சுழற்சி, பயம், வளைந்தகடகம்.

சூர்மகள் - தெய்வப்பெண், யோகினி.

சூர்வு - சுகிர்வு.

சூலதரன்
சூலபாணி } சிவன், வயிரவன்.

சூலம் - இரேவதிநாள், ஓராயுதம் கழு, சதுரக்கள்ளி, சாமரம், சூலைநோய், துகிற்கொடி, நித்தியயோகத்தொன்று, மரணம்.

சூலல் - அறுத்தல், தோண்டல்.

சூலி - கருப்பிணி, காளி, சிவன், துர்க்கை, யோகினி.

சூலிகம் .. கோழி.

சூலிகை - யானைக்காதடி.

சூலினி - சவர்க்காரம், வெற்றிலை.

சூலுதல் - அறுத்தல், குடைதல், தோண்டல்.

சூலை - ஓர் நோய்.

சூல் - கருப்பம், சூலென்னேவல், முகிற்கரு.

சூழல் - ஆராய்தல், ஆலோசனை, இடம், கருத்து, குறிப்பு, கூட்டம், சுற்றுப்புறம், சூழ்ச்சி.

சூழாமை-ஆராய்வின்மை, ஆலோசனையின்மை.

சூழி - உச்சி, உச்சிக்கொண்டை, கடல், குளம், சுனை, நெற்றி, யானைமுகபடாம்.

சூழிகை - கள்.

சூழுதல் - ஆலோசனைபண்ணல், சூழ்ந்திடல்.

சூழ்ச்சி - ஆராய்தல், ஆலோசனை, உபாயம், நுண்ணறிவு.

சூழ்ச்சித்துணைவர் - மந்திரிமார்.

சூழ்தல் - அறிதல், ஆராய்தல், ஆலோசனைபண்ணல், கருதல், கூடல், தரித்தல், சூழ்ந்திடல், பிற்படை, பொருந்துதல், வட்டமிடல், வளைதல்.

சூழ்தாமை - தாமரை.

சூழ்ந்திடல் - வளைந்துகொள்ளல்.

சூழ்ந்தோர் - அடுத்தோர், உறவோர், சூழநிற்போர், மந்திரிகள்.

சூழ்வு - ஆராய்கை, உபாயம், சுற்றுகை, பக்கம்.

சூழ்வோர் - உறவினர், சூழ்ந்து நிற்பவர், மந்திரிகள்.

சூளாமணி - ஓர் நிகண்டு, சூடாமணி.

சூளி - ஆண்மயிர்.

சூளிகம் - அப்பவருக்கம்.

சூளிகை - அரமியம், உப்பரிகை, யானைச்செவியடி.

சூளுறல் - சத்தியம் செய்தல்.

சூளை - குயவன் சூளை, வேசி.

சூள் - ஆணை, சத்தியம், சபதம், சாபம், சுளுந்து, பாளை முதலியவற்றின்சூள்.

சூறல் - தோண்டல்.

சூறன் - மூஞ்சூறு.

சூறுவளி - சுழல்காற்று.

சூறை - ஆறலைத்தல், கொள்ளை, சுழல்காற்று, பனிச்சை.

சூனம் - பிறப்பித்தல், பூமலர், மான், வீக்கம்.

சூனர் - ஊன்விற்போர்.

சூனி - வேட்டைக்காரன்.

சூனியகதி - பிரபுலிங்கையிலோர் சருக்கம்.

சூனியதிசை - இயங்காத்திசை, தென்கீழ்த்திசை.

சூனியதிதி - சிரார்த்தத்திற் கொவ்வாத் திதி.

சூனியத்துவம் - நாசம்பண்ணுதல், வெறுமை.

சூனியமாதம் - ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி மாதங்கள்.

சூனியம் - அசுசி, ஆகாயம், இன்மை, பாழ், புள்ளி, பூச்சியம், பொறி, மாயை, மாரண வித்தை.

சூனியம்பண்ணுதல் - கெடுத்தல், சூனியஞ் செய்தல்.

சூனியவாதம்-கடவுளில்லையென்னுமோர் சமயவாதம்.

சூனியார்க்கம் - இன்ன இன்ன மாதத்தில் அகவிலேயேற்ற மென்பதை அறிதற் கருவியாயுள்ளதொன்று.

சூனு - சூரியன், பின்னோன், மகள், மகன்.

சூனை - குற்றம், சூனம், சொத்தை, மகள்.

சூன்முகில் - கரிமுகில்.
சூன்றல் - தோண்டல்.
சூன்றிடல் - குடைதல்.

செ

சே - ஓரெழுத்து, செம்மைப் பொருளடி.
செகதம் - பட்சித்தல்.
செகரிகம் - நாயுருவி.
செகில் - செதிள், தோண்மேல், தோள்.
செகிள் - கேழ்வரகின் கப்பி.
செகுத்தல் - அழித்தல், வெல்லுதல்.
செக்கர் - சிவப்பு, செவ்வானம், மாலைநேரம்.
செக்கர்வானிறத்தோன் - அரன், வீரபத்திரன்.
செக்கவுரி - கற்சூரை.
செக்கான்-எண்ணெய்,வாணியன்
செக்கு - காணம், செக்கு, சதய நாள்.
செங்கட்டி - காவிக்கல், சாதிலிங்கம், செங்கற்கட்டி.
செங்கணன், செங்கண்மால் - விஷ்ணு.
செங்கத்தரி - அலந்தல்.
செங்கதிரோன் - சூரியன்.

செங்கதிர்நாள் } உத்திர
செங்கதிர்பிறந்தநாள் } நாள்.

செங்கமலம் - செந்தாமரை.

செங்கமலை - இலக்குமி.

செங்கல் - காவிக்கல், சுட்டகல்.

செங்கழுநீர் - செங்குவளை.

செங்களம் - போர்க்களம்.

செங்களை - குதிரைப்பற் பாஷாணம், செங்கரும்பு.

செங்காகம் - செம்போத்து.

செங்காடு - ஓர்சிவஸ்தலம், சிவந்த நிலம், செங்காட்டான்குடி.

செங்காந்தள் - சிவப்புக்காந்தள்.

செங்காரணி - கருஞ்சிவலை.

செங்கார் - ஓர்விதநெல், கருஞ்சிவப்பு.

செங்கினுவை - ஓர் பறவை, ஓர் மரம்.

செங்கீரை - ஓர் கீரை, பிள்ளைக்கவியிலோருறுப்பு.

செங்குத்து - நேரேநிமிர்ந்தது.

செங்குந்தம் - கண்ணோயுளொன்று.

செங்குந்தர் - கைக்கோளர்.

செங்குமுதம் - செவ்வாம்பல்.

செங்குவளை - செங்கழுநீர்.

செங்கை - ஆதிரைநாள், சிவந்தகை.

செங்கையான் - ஓர்பூடு.

செங்கொடிவேலி } ஓர்கொடி.
செங்கொடுவேலி }

செங்கொல் - பொன்.

செங்கொல்லர் - தட்டார்.

செங்கோடு - ஓர்மலை, செருந்தி மரம்.

செங்கோடுபாய்தல் - மலை யுச்சியிலிருந்து பாய்தல்.

செங்கோட்டம் - ஓர் மருந்து.

செங்கோட்டியாழ் - நால்வகை யாழியொன்று.

செங்கோலம் - செம்புமணல்.

செங்கோலோச்சல் - அரசாளல்.

செங்கோல் - ஆணை நடத்துங் கோல், நீதி.

செங்கோற்கடவுள் - நமன்.

செச்சை-உதயசந்திரன், சட்டை, சிவந்தநிலம், செங்காடு, செஞ்சாந்தின் குழம்பு, செந்துளசி, சோடு, நீறு, வீட்டின் மேற்பக்கம், வெட்சிமரம், வெள்ளாட்டுக்கடா.

செஞ்ச } சேர, நிறைய, நேராக.
செஞ்சவே }

செஞ்சடையோன் - காசி நிறப் படிகம், சிவன், வயிரவன், வீரபத்திரன்.

செஞ்சால்-துப்பாக்கி முதலியன.

செஞ்சி - அரணை பட்டினம், ஓரூர்.

செஞ்சிலை - கற்காவி, சாத்திர வேதி, செங்கல்.

செஞ்சீரகம் - ஓர் சீரகம்.

செஞ்சுடர் - சூரியன், தீ.

செஞ்சுடர்ப்பகவன் - சூரியபகவான், தீ.

செஞ்செயல் - உரியபொருளை யுணர்த்துவது.

செஞ்செழிப்பு - செழிப்பு, தாராளம், முகமலர்ச்சி.

செஞ்சேறு - இரத்தச்சேறு.

செஞ்சொல் - செம்மொழி, செவ்வியமொழி, நேர்மொழி.

செடல் - செடில்.

செடி - அற்பம், ஒளி, குணமின்மை, குற்றம், செத்தை, செறிவு, பதனழிவு, பற்றை, பாவம், புதர், பூண்டு, முடைநாற்றம்.

செடியன் - கூட்டற்றவன்.

செடில் - ஓர் கருவி.

செட்டி - குமரன், ஜட்டி, வாணியன், வைசியன்.

செட்டு - சிக்கனம், செட்டிமை, வியாபாரம்.

செட்டை - இறகு, கைப்பட்டை.

செண்டாயுதன் - ஐயனார்.

செண்டு - ஓராயுதம், குதிரை வையாளிவீதி, நூற்பந்து, பந்து, பந்தெறிவீதி, பூஞ் செண்டு.

செண்ணம் - நுண்ணியதொழில், வடிவு.

செண்பகம் - சண்பகம்.

செதில் - சிறுதுண்டு, சீவல், செகிள், தோல், பொருக்கு.

செதுக்கல் - செதுக்குதல்.

செதுக்கு - உடற்றழும்பு, சேறு, செதுக்கென்னேவல், பூதம், மந்தி, வாடல்.

செதுக்குதல் - சீவுதல், புன் முதலிய செதுக்கல்.

செதும்பு - சின்னீர், சேறு.

செத்தல் - அறக்காய்ந்தது, ஒத்தல், சாதல், சாகுதல், பசுமையற்றது, மெலிந்தது.

செத்து - அறிந்து, உவமையுருபு, ஒத்து, கருதி, சந்தேகம்.

செத்தை - உலர்ந்த சரகு முதலியன, துராய்.

செந்தணற்கொடி - பவளம்.

செந்தண்டு - சிவந்ததாள், செங் குருத்து, செந்தண்டுக்கீரை, பவளம்.

செந்தமிழ் - இயற்றமிழ், செந் தமிழ் நிலத்துமொழி.

செந்தமிழ்க்குரியோன் - அகத் தியன், வயிரவன்.

செந்தமிழ்நாடு - பாண்டிநாடு, அஃது—"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ் சவுந்தர பாண்டியன் எனுந்தமிழ் நாட னும், சங்கப் புலவருந் தழைத் தினி திருக்கு மங்கலப் பாண்டி வளநாடென்ப.

செந்தழல் - கேட்டைநாள், செந் தணல்.

செந்தழற்கொடி - தழற்சிகை, பவளக்கொடி.

செந்தளிர் - இளந்தளிர்.

செந்தாது - செம்பொன்.

செந்தி - திருச்செந்தூர்.

செந்திரம் - சிவப்பு, செய்தநிலம்.

செந்திரு - இலக்குமி, தாளகம்.

செந்திலந்தாதி - ஓரந்தாதி.

செந்திறம் - குறிஞ்சியாழ்த்திறம், சிவப்பு.

செந்தினை - கம்பு, சிவந்ததினை.

செந்தீ - அக்கினி, ஓர் சிலந்தி.

செந்தீக்கடவுள்-அக்கினிதேவன்.

செந்தீவண்ணன் - சிவன், செவ் வாய்.

செந்தீவளர்ப்போர் - அந்தணர்.

செந்து - அணு, ஊர்வன, ஓசை, கிழநரி, சடாமாஞ்சி, சீவன், நரகம், பெருங்காயம்.

செந்துத்தானம் - எழுநரகிலொ ன்று.

செந்துத்தி - ஒருவகைத்துத்தி.

செந்துத்தீ - சடாமாஞ்சி,பெருங் காயம்.

செந்துரசம் - ஓர் பிசின்.

செந்துருக்கம் - ஓர்செடி, ஓலை யை யடைக்குஞ்சுருள்.

செந்துருதி - ஓர் நரகம், ஓர்பண், செந்நிறம்.

செந்துறை - ஆடற்கேற்கும் பாட்டு, குறட்செந்துறை.

செந்துறைவெண்பா - ஈரடியா யளபொத்துமுடியும் வெண்பா.

செந்தூக்கு - ஓர்வகைப்பாட்டு, கைத்தூக்கு, தாளங்களின் வழி வருவனவாகிய தூக்குக்கள் ஏழனுளொன்று.

செந்தூரத்தாசி - கந்தகம்.

செந்தூரம் - இலிங்கபாஷாணம், சுண்ணம்.

செந்தொடை - ஓர் தொடை, சிவந்தமாலை.

செந்தொடையன் - சிவன், வயிர வன்.

செந்தொட்டி - ஓர் பாஷாணம், சிறுகாஞ்சொறி.

செந்தோன்றி - கார்த்திகைப் பூ, செங்கழுநீர், செங்காந்தள்.

செந்நாகம் - கேது.

செந்நாடிக்கா - மூக்கிரட்டை.

செந்நாயுருவி - ஓர் நாயுருவி.

செந்நாய் - ஓநாய்.

செந்நிறக்கல் - மாமிசச்சிலை.

செந்நீர் - இரத்தம், சுரோணிதம்,

செந்நெல் - நன்னெல்.

செந்நெறி-சன்மார்க்கம், நல்வழி.

செந்நொச்சி - ஓர் நொச்சி.

செப்படி - செப்பிடுவித்தை.

செப்பட்டை - செட்டை, தோட்பட்டை.

செப்பமிடுதல் - செவ்வை பண்ணுதல், திருத்துதல்.

செப்பம் - இணக்கம், ஒப்பரவு, கருத்துஞ் சொல்லுஞ் செய்லுந் தம்முண் மாறுகாமை, செவ்வை, திருத்தி, நடுநீதி, மார்பு, வழி, வீதி.

செப்பலோசை - வெண்பாவினோசை.

செப்பல் ஓரோசை, சொல்லுதல்.

செப்பனிடுதல் - ஒப்பமாக்கல், செவ்வைபண்ணுதல்.

செப்பிடில் - சடாமாஞ்சி.

செப்பியம் - திரும்பத்திரும்பவுச் சரித்தல்.

செப்பிலை - தும்பை.

செப்பு - சிமிழ், செப்பென்னேவல், சொல், விடை.

செப்புச்சிலை - மாந்தளிர்க்கல்.

செப்புதல் - சொல்லல்.

செப்புத்தொட்டி - வைப்புப் பாஷாணமுப்பத்திரண்டி னொன்று.

செப்புநெருஞ்சி - ஓர்நெரிஞ்சி.

செம் - சிவப்பு, செம்மை.

செம்பசலை / செம்பசளை } ஓர் பசளை.

செம்பஞ்சு - சிவத்தபஞ்சு.

செம்படாம் - செவ்வாடை.

செம்படிகம் - செம்பளிங்கு.

செம்பணை - காவற்பணை.

செம்பரத்தை - செவ்வரத்தை.

செம்பருத்தி - ஓர் பருத்தி.

செம்பாகம் - இயல்பானநடை, சமபாகம், தெளிந்தசொன்னடை, நடுநிலை, நல்லபக்குவம்.

செம்பாம்பு - கேது.

செம்பாலை - ஓரிசை.

செம்பால் - இரத்தம்.

செம்பாலை - பாலையாழ்த்திறத்தி னொருவகை.

செம்பி - கருவண்டு, சிவப்பி, மருதோன்றி.

செம்பிச்சி-செந்தோட்டிப்பாஷாணம்.

செம்பியன் - சோழன், முதலெழு வள்ளலிலொருவன்.

செம்பில்வேதை - சோரபாஷாஷணம்.

செம்பிறை - கற்கிட்டம், கானற் கல், தேகக்கல்.

செம்பின்பச்சை - நாகப்பச்சை.

செப்புக்குள்வேதை - கற்பரி பாஷாணம்.

செம்புலம் - சுடுகாடு, செம்புமலை, பாலைநிலம், போர்க்களம்.

செம்புள் - பருந்து.

செம்புனல் - இரத்தம், புது வெள்ளம்.

செம்பூறல் - செம்பிறகளிம்பு.

செம்பை - ஓர்மரம், சிற்றகத்தி.

செம்பொருள் - அறம், உண்மைப் பொருள், கடவுள், தெளிவான பொருள்.

செம்பொன் - சுத்தப்பொன், பொன்.

செம்போத்து - சகோரம்.

செம்மட்டி-ஓர்மட்டி, மரமஞ்சள்.

செம்மணி - கண்ணின் கருமணி யைச்சூழ்ந்திருக்குஞ் சிவந்த மணி, குருந்தக்கல், குருவிந் தம், கெம்பு, பதுமராகம், மாணிக்கம், மாமிசகந்தி.

செம்மந்தாரம் - ஓர்பூமரம்.

செம்மரம் - அழிஞ்சில்.

செம்மருதல் - களிப்படைதல்.

செம்மலை - ஆவிரை.

செம்மலைப்பாலை - ஓரிசை, செம் பாலை.

செம்மலா - சிவந்தமலர், நெற்றி மாலை.

செம்மல் - அரசன், அருகன், ஈசன், எப்பொருட்குமிறைவன், சாதிப்பூ, செம்முதல், தருக்கு, தலைமகன், தலைமை, பழம்பூ, புதல்வன், பூவாடல், பெருமை, பெருமையிற் சிறந்தோன், வலி.

செம்மறி - ஆட்டின்பொது, ஓர் வகையாடு.

செம்மாத்தல் - அகந்தையாயிருத்தல், இறுமாந்திருத்தல், கிமிர்ச்சியாயிருத்தல்.

செம்மாப்பு - இறுமாப்பு.

செம்மார் - சக்கிலியர், தோற்றுன்னர்.

செம்மை - அழகு, இணக்கம், ஒழுக்கம், கனம், சிவப்பு, சுத்தம், செப்பம், செவ்வை, பெருமை, மாணிக்கம், முறைமை.

செம்மைக்கல் - கானக்கல்.

செம்மைபண்ணல் - அலங்கரித்தல், ஒழுங்கு படுத்தல்.

செம்மையாதல் - நேராதல்.

செம்மொழி - நயமொழி, நற்சொல்.

செம்மொழிச்சிலேடை - ஓர் வகைச் சிலேடையணி.

செயநீர் - தாதுப்பொருளைக் கரைக்கும் நீர்.

செயநீர்க்கருத்தன் - நவட்சாரம்.

செயந்தி - திருச்செயந்தி.

செயபரம் - மரமஞ்சள்.

செயபீதம் - கௌரிபாஷாணம்.

செயப்படுபொருள் - வினைமுதற் ளுழிற் பயனுறுவதாகிய இரண்டாம் வேற்றுமைப்பொருள்.

செயப்படுபொருள்குன்றுதவினை- செயப்படுபொருள் உள்ள வினை.

செயப்பாட்டுவினை - மூன்றும் வேற்றுமைக் கர்த்தாவைக் கொண்டு முடிவது.

செயலறுநிலை - செயலற்று நிற் கை, கையறு நிலை.

செயலுவமம்-செயலையேயுவமான மாகக் கொண்டு வழிப்பது.

செயலை - அசோகமரம்.

செயல் - ஒழுக்கம், காவல், செய் கை, சேறு, தொழில்.

செயற்கை - செயல், விகாரம்.

செயற்கைப்பொருள் - ஒருபொ ருளை மற்றொரு பொருளாகச் செய்யப்படுபொருள்.

செயற்கைஅளபெடை - விகாரத் தால் வந்த அளபெடை.

செயற்கையளபெடை - செய்யு ளில் வருமளபெடை.

செயிரியர் - வீணை முதலிய வியக்குவோர்.

செயிர் - ஊனம், குற்றம், கோபம், சினம், செயிரென்னேவல், துன்பம், நோய்.

செயிர்த்தல் - சினத்தல்.

செயிர்ப்பு - கோபம்.

செயிற்றியம் - நாடகத்தமிழ்நூல்களுளொன்று.

செய் - ஒருவமைச்சொல், செய்கை, சிவப்பு, செய்யென்னேவல், வயலினோரளவை, வயல்.

செய்கடன் - நித்யகருமம், முறைமை.

செய்கரை - கட்டுக்கரை.

செய்கின்ற - நிகழ்காலப்பெயரெச்ச வாய்பாடு.

செய்கை - உடன்பாடு, ஒழுக்கம், செயற்கை, தொழில், பண்படுத்துவது, வேளாண்மை.

செய்தல் - உண்டாக்கல், செயல், செய்குதல்.

செய்தது - வினையாலணையும் பெயர்.

செய்தி - இயல்பு, ஒழுக்கம், காரியம், சரித்திரம், செய்கை, செய்வாய் என்னு முற்று, தன்மை.

செய்து - இறந்தகாலத்தெரிநிலை வினையெச்சவாய்பாடு.

செய்பவன் - கர்த்தா.

செய்பொருள் - செய்யப்படு பொருள்.

செய்ய - அழகிய, சிவந்த, சிறந்த, செப்பமான, வினையெச்சம்.

செய்யல் - செயல், சேறு.

செய்யவன் - சிவந்தமேனியன், சூரியன், செவ்வாய்.

செய்யன் - செவ்வியன், சிவன், நேராளி.

செய்யா - தெரிநிலை வினையெச்ச வாய்பாட்டினொன்று.

செய்யாள் - இலக்குமி, சீதை.

செய்யிய - அகரவீற்று வினை யெச்ச வாய்ப்பாடு.

செய்யிழை - பெண்.

செய்யுட்சொல் - உயர்ந்தசொல், திரிசொல்.

செய்யுட்பொருத்தம் - செய்யு ளில் முதல் சொல் வைப்பதில் கவனிக்கவேண்டிய விஷயங் கள் பத்து, அவை—உண்டி, எழுத்து, கணம், கதி, சொல், தாளம், நாள், பால், மங்கலம், வருணம் என்ப.

செய்யுட்டாரணை - ஒன்பது தாரணையினொன்று.

செய்யுணடை - செய்யுள் வழக்கு.

செய்யும் - இருதிணைக்கு மைம் பாற்குமுரிய வருங்கால வினை முற்று, வருகாலப் பெயரெச்ச வாய்ப்பாடு.

செய்யுளுருப்பு - செய்யுட்கு வேண்டு முறுப்பு.

செய்யுளியல் - யாப்பிலோர்பிரிவு.

செய்யுள் - பாட்டு, விளைநிலம்.

செய்யுள்வழக்கம் - கவிகளில் வழங்கும் வழக்கம்.

செய்யுள்விகாரம் - செய்யுள் விகாரமெட்டு, அவை—இடைக்குறை, கடைக்குறை, குறுக்கல், தொகுத்தல், நீட்டல், மெலித்தல், முதற்குறை, வலித்தல், விரித்தல் என்ப.

செய்யோன் - அருகன், செந்நிறமுள்ளோன், செம்மையுடையோன், செவ்வாய்.

செய்வினை - சூனியம், செய்கை, செய்தொழில்.

செரித்தல்-சமித்தல், சீரணித்தல்.

செரு - சண்டை, போர்.

செருகல்-அடைதல், சொறுகுதல்.

செருக்கல் - செருக்குதல், மிக மகிழ்தல்.

செருக்களம் - போர்க்களம்.

செருக்களவஞ்சி - ஓர் பிரபந்தம்.

செருக்கு- அகங்காரம், ஆண்மை, ஆணவம், இறுமாப்பு, ஒலி, களிப்பு, செருக்கென்னேவல், செல்வம், மயக்கம், மனோராச்சியம்.

செருக்குதல் - அகங்கரித்தல், களிக்குதல், பாக்கு முதலியன அடைத்தல், மயக்கமுறல்.

செருத்தல் - எருமைமடி, பசுவின் மடி.

செருத்தி - விருதுக்கொடி.

செருநர் - படைவீரர்.

செருந்தி - ஓர்மரம், கோரை, மணித்தக்காளி, வாட்கோரை.

செருப்படி } ஓர்வகை மூலிகை,
செருப்படை } செருப்படிநாயன்.

செருப்பு-ஒருமலை,காமேூடுதோல்.

செருமல் - அடைசுதல், இருமுதல், திணித்தல், நெருக்கல்.

செலகம் - மல்லிகை.

செலதம் - கோரைக்கிழங்கு.

செலம் - சலம், வெட்டிவேர்.

செலல் - கழிதல், துன்பம், போதல்.

செலவிடல் - அனுப்புதல், எறிதல், செலவழித்தல், விடுதல்.

செலவு - உத்திரவு, செலவிடுதல், செல்லும்பொருப்பு, நீங்குகை, பயணம், பெருங்காப்பியவுறுப்புளொன்று, போக்கு, போதல், போனகாலம், முடிவு, வழி, வீதி.

செவியம் - இலாமிச்சை.

செலு-செலுத்தல், நறுவிலிமரம், மீன்செலு.

செலுத்தல் } அனுப்புதல்,
செலுத்துதல் } கொடுத்தல்,
செருகுதல், நடத்துதல், நிறைவேற்றல், விடுதல்.

செல் - இடி, உண்டியற்சீட்டு, கறையான், செல்லென்னேவல், கையொப்பம், மேகம், வேல்.

செல்காலம் - இறந்தகாலம், காரியஞ் சித்திக்குங்காலம்.

செல்லல் - கெடுதல், துன்பம், நடத்தல், பரத்தல், போகாதே, போதல், வெருப்பு.

செல்லியம் - கோழி.

செல்லுதல் - அடைதல், கழிதல், காரிய சித்தியாதல், சாதல், போதல், வழங்குதல்.

செல்வம் - அழகு, இன்பம், ஐசுவரியம், கல்வி, சீர், சுவர்க்கம், பெருக்கம், பாக்கியம்.

செல்வன் - அரசன், அருகன், கடவுள், செல்வமுள்ளோன், மகன்.

செல்வி - இலக்குமி, ஐசுவரியமுடையாள், தலைவி, மகள்.

செவி - காது, கேள்வி.

செவிகொடுத்தல் - உற்றுக் கேட்டல்.

செவிகொள்ளல் - கேட்டல்.

செவிசாய்த்தல்-செவிகொடுத்தல்.

செவிடு - ஒரு அளவு, செவிப் புலன்கெடல்.

செவிட்டல் - அழித்தல், ஒருக் கடிதத்தல், கொல்லல்.

செவிமலர் - ஓர்வகைக்காதணி.

செவியம் - செவ்வியம்.

செவியறிவுறுத்தல் - செவியுப தேசமாய்ச் சொல்லும்புத்தி.

செவியறிவுறூஉ - உபதேசம், ஓர் பிரபந்தம், அஃது — அவை யடைக்கியற் பொருளுறக் கூறுவது.

செவியறை - காதில்லான், செவிடன்.

செவியிலி-காதில்லாதது, காதில் லாதவள், காதில்லாதவன்.

செவிரம் - பாசி.

செவிலி-அக்காள், தாதி, வளர்த் தாய்.

செவை - செம்மை.

செவ் - சிவப்பு, செம்மை.

செவ்வகத்தி - ஓரகத்தி.

செவ்வணி - சிவப்புடை, செந்நிற வணி.

செவ்வண் - செங்குத்து.

செவ்வந்தி - ஓர் பூச்செடி.

செவ்வரக்கு - சாதிலிங்கம்.

செவ்வரத்தை - செவ்வரத்தம்.

செவ்வலரி - ஓரலரி.

செவ்வல்லி - செவ்வாம்பல்.

செவ்வழி - ஓர்பண், அஃது—நெய்தநிலத்திராகம், செவ்விய மார்க்கம்.

செவ்வழிப்பாலை - ஓரிராகம்.

செவ்வழியாழி - நால்யகையாழி னொன்று.

செவ்வனுர் - செவ்வல்லி.

செவ்வனிறை - நேரான பிரதி யுத்திரம்.

செவ்வன் - செவ்வையாக.

செவ்வாய் - ஓர் கிரகம், சிவந்த வாய்.

செவ்வாரை - ஓர்வகை ஆரை.

செவ்வி - அழகு, காலம், சித்திரைநாள், செம்மை, தகுதி, பருவம்.

செவ்வியம்-ஓர்மருந்து,அஃது—பஞ்சமூலத்தொன்று, மிளகுக் கொடி.

செவ்வியருமை - அருஞ்சமயம்.

செவ்வியான் . கிரகஸ்தன்.

செவ்விண்டு - ஓரிண்டஞ்செடி.

செவ்வு - சிவப்பு, செவ்வை, முத்துக்களின் நிறையளவு.

செவ்வுறல் - செப்பமாதல்.

செவ்வெண் - எண்ணிடைச் சொல்தொகைநிலை, செவ்விய தாகிய எண்.

செவ்வேள் - குமரன்.

செவ்வை - சுத்தம், செப்பம்.

செழித்தல் - செழிக்குதல், பெருகுதல்.

செழியன் - பாண்டியன்.

செழிப்பு - ஐசுவரியம், செழுமை, பொலிவு, வளர்ச்சி.

செழு - செழுமையான, செழித்த.

செழுமறை - நெருப்பு.

செழுமை - அழகு, கொழுப்பு, சவுந்தரியம், தழைவு நிறைவு, மாட்சிமை, வளமை.

செறல் - கொலை, கோபம், பகை.

செறி - செறியென்னேவல், நெருக்கம்.

செறிதல் - அடக்கம், இணைதல், இயைதல், இறுகல், உறவு செய்தல், கலத்தல், குளித்தல், சேர்தல், நெருங்கல், பொருந்தல், மிகுதல்.

செறித்தல் - அடக்கல், அழித்தல், கொல்லல், சேர்த்தல், நெரித்தல், பாதிடல், மூழ்கல், வைத்தல்.

செறிவு - குணலங்காரம் பத்தினொன்று, அஃது, நெகிழிசையின்றி வரச்செய்யுட்டொடுப்பது, நிறைவு, நெருக்கம், மரப்பொந்து, மிகுதி.

செறு - சிறுவயல், செறுவென்னேவல், பாத்தி, வயல்.

செறுத்தல்-அடக்கல், கொல்லல், கோபித்தல், தூர்த்தல், நெருக்குதல், வெறுத்தல.

செறுநர் - பகைவர்.

செறுப்பு - கொலை, செறிதல்.

செறும்பு - சலஞ்சாதித்தல், சிறும்பு, செற்றம், வெறுப்பு.

செறுவு - கொலை, வயல்.

செற்றம் - கோபம், சலஞ்சாதித்தல், சினம்.

செற்றலர் - பகைவர்.

செற்றல் - அழித்தல், கெடுத்தல், கொல்லல், செறிவு, செறுத்தல், நெருக்கல், பதித்தல், வெறுத்தல்.

செற்றார் - கொலைசெய்வோர், பகைவர்.

செற்று - செடி, சொற்றென்னேவல், நெருக்கம்.

சென்றுதேய்ந்திறுதல் - நாற்குற்றம் பத்திலொன்று, அஃது—செல்லச் செல்லச் சொல்வலி பொருள்வலி இரண்டுந் தேய்ந்து முடியச்சொல்லுதல்.

சென்னி - அச்வினிநாள், சிகரம், சோழன், தலை, பாணன், மலையுச்சி, முடி.

சென்னியர் - பாணர்.

சென்னை - கதுப்பு, சென்னைப்பட்டினம்.

சே

சே - அழிஞ்சில் மரம், இடப விராசி, உயர்வு, எதிர்மறை, எருது, ஒலிக்குறிப்பு, ஓரெழுத்து, சிவப்பு, செம்மைப் பொருளைக்காட்டுமோர்விகார மொழி, சேரான்மரம், தெரிநிலைவினைப்பகுதி, படுக்கை, விலங்கேற்றின்பொது.

சேகண்டி - சேமக்கம், தெருக் காவல்.

சேகரம்-அழகு,கூட்டம், சம்பாத்தியம், சேகரித்தல், தலை, தலையில் முடிக்கப்படுவன,மாமரம், முடி; முருங்கை.

சேகரி - நாயுருவி.

சேகிலி - வாழை.

சேகு - தழும்பு, திடம்பகை, மரவயிரம், வயிரம்.

சேக்கு - முலைப்பால்.

சேக்குதல்-உறங்குதல், சிவத்தல்.

சேக்கை - உடற்றழும்பு,கற்கடக விராசி, சிவத்தல், செம்பசளை, நண்டு, மக்கட்படுக்கை, முலை, விலங்கின் படுக்கை, வலை.

சேங்கன்று- நாம்பன்கன்று, நாம்பன், இளவெருது.

சேசனம் - நனைத்தல், பெண்ணைமை, பொசிகை.

சேசூரணம் - கௌரிபாஷாணம்.

சேகுனம்-தெளித்தல், புசித்தல்.

சேசே - ஒலிக்குறிப்பு.

சேச்சை - பாலை, முல்லை.

சேடகம் - கேடகம், பரிசை.

சேடம் - அடிமை, அழித்தல். எச்சில், குறை, மிச்சப்பொருள்.

சேடர் - அடிமையார், அறிவுடையோர், ஏவல்செய்வோர், நெய்வாரினொருசாரார்.

சேடன் } அடிமைக்காரன்,
சேஷன் } அனந்தன், இளையோன், ஏவல்செய்வோன், ஓர் சாதியான், கட்டிளமையோன், பலதேவன், பாங்கன்.

சேடி - அடிமைக்காரி, அழகுள்ளவள், இடையர்வீதி, இளையாள், ஏவல்செய்வாள், தோழி, வித்தியாதரருலகு.

சேடித்தல் - அலங்கரித்தல், குறைத்தல், மிஞ்சிநிற்றல்.

சேடியர் - அடிமைகளிற் சிறந்தோர், ஏவல்செய்பெண்கள், பாங்கியர்.

சேடு - அழகு, ஆகாயம், இளமை, சவுக்கு, திரட்சி, நன்மை, பெருமை.

சேட்சி - தூரம்.

சேட்டம் - அழகு, ஆனிமாதம், சிரேட்டம், செழிப்பு, திறம், முதன்மை, மேன்மை.

சேட்டன் - தமையன், மூத்தோன்.

சேட்டா - செய்தல், பிரயாசம், முயற்சி.

சேட்டித்தல் - காரியப்படுத்தல், திறப்படல், நடத்தல்.

சேட்டை - அக்காள், அசைகை, இயக்கம், குணங்கெட்டதொழில், கேட்டைநாள், செய்கை, தொந்தரவு, தொழில், பெருமையிற்சிறந்தோன், முறம், மூதேவி, விசாகநாள்.

சேட்டைப்படல் - உருவாதல்.

சேட்படைநிலை - காதலன்றலைவியோடு சேராது தோழி தடுத்தல், தூரப்படல்.

சேணம் - கல்லணை, மெத்தை.

சேணுடு - விண்ணுலகு.

சேணுடர் - வானவர்.

சேணி - ஏணி, தாங்கல், முறை, வித்தியாதரருலகு.

சேண் - அகலம், ஆகாயம், உயர்ச்சி, தூரம், தேவருலகம், நீளம்.

சேதகம் - சிவப்பு, சேறு.

சேதநகி - கடுக்காய்மரம்.

சேதம் - அழிவு, இடையூறு, கீழ்வாயிலக்கம், கேடு, துண்டு, நட்டம், பிரிவு, வெட்டல்.

சேதனம் - அசையும்பொருள், அறிவு, வளர்ச்சி, வெட்டுதல்.

சேதனன் - அறிவுடையோன், ஆத்துமா.

சேதா - செவ்வியபசு, நற்பசு.

சேதாம்பல் - செவ்வாம்பல்.

சேதாரம் - அழிவு, கேடு, தேமா மரம், பொன்னுரை, வெட்சி மரம்.

சேதி - ஒரு நாடு, ஒரு வமிசம், செய்தி, புதினம்.

சேதித்தல் - அரிதல், அழித்தல், வெட்டல்.

சேதிமம் - தேவர்கோயில்.

சேது - இராமேச்சுரம், சிவப்பு, செய்வரை, சேதுவணை, சேது தீர்த்தம், பாலம்.

சேதுகாவலன் } மறவநாட்டரசன்.
சேதுபதி }

சேதுபந்தனம் - அணைக்கட்டு.

சேதுபுராணம் - ஓர் புராணம்.

சேத்தல் - சிவத்தல், தங்குதல்.

சேத்திரஜ்ஞன் - ஆன்மா, மூவகை சரீரத்தையறிபவன், வேளாளன்.

சேத்திரம் - உடம்பு, காற்று, மூவகைச்சரீரம், அவை—ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம், என்ப; தலம், புண்ணியபூமி, மனைவி, வயல்.

சேத்திரக்கோவை - ஓர் நூல்.

சேத்து - ஆசைச்சொல், உறுப்பு, ஐயம், ஒப்பு, கருத்து, சிவப்பு, செம்மையுடையது, சொல், நெருக்கம், மிகுசிவப்பு, வயல்.

சேந்தன் - முருகன், திவாகர மென்னும் நிகண்டு செய்வித் தோன்.

சேந்து - அசோகம், ஓர்வினை யெச்சம், சிவப்பு, நெருப்பு.

சேபாலங்கொட்டை - சேங் கொட்டை.

சேபாலிகை - கருநொச்சிமரம்.

சேப்பு - சிவப்பு.

சேமக்கலம்-எறிமணி, சேகண்டி.

சேமநிதி - சேமத்திரவியம்,புதை யல்.

சேமம்-அரணானவிடம், இன்பம், காவல், சிறைச்சாலை, தஞ்சம், புதையல்.

சேமரம் - அழிஞ்சில், சேரான்.

சேமித்தல் - காப்பாற்றிவைத் தல், புதைத்தல்.

சேமுஷி - புத்தி.

சேமை } ஓர்செடி.
சேம்பு }

சேயமம் - கௌரிபாஷாணம்.

சேயம் - ஓட்டம், கரை, கூடப் பட்டது, வெற்றி.

சேயவன் - கந்தன், செவ்வாய்.

சேயன்-தூரத்திலுள்ளவன், மகன், வெல்லத்தக்கபகை வன்.

சேயா - கடுக்காய்.

சேயார் - தூரத்தார், பகைவர், பிறர்.

சேயிலம் - இலுப்பை.

சேயிழை - ஆபரணம், நல்லணி நூல் நூற்கும் மடந்தை, பெண்.

சேயேபசம் - மரமஞ்சள்.

சேயோன் - சிவன், முருகன்.

சேய் - இளமை, குமரன், குழந்தை, சிவப்பு, செவ்வாய், தூரம், நீளம், மகன், மனை, மூங்கில்.

சேய்த்து - செம்மை, தூரம், நீளம்.

சேய்நீர் - ஓர்வித மருந்துநீர்.

சேய்மை - தூரம், நீளம்.

சேய்மைச்சுட்டு - தூரப்பொருளைச் சுட்டிக்காட்டல்.

சேர - அணித்தாக, ஒருங்கு, ஒன்றாக, முதுமை.

சேரங்கை - செரங்கை, அது ஒரு கை கொண்டது.

சேரமண்டலம் - சேரநாடு.

சேரமான்
சேரமான்பெருமான் } அறுபத்துமூவரிலொருவர், சேரன்.

சேரலர்
சேரார் } பகைவர்.

சேரலன் - சேரன், பகைவன்.

சேரல் - கிட்டல், கொழியலரிசி, சேரன்.

சேரா - கள்.

சோரான் - செங்கொட்டைமரம், பகைவன்.

சேரி - ஊர், தெரு.

சேரிப்பரத்தையர் - பொதுஸ்த்ரீ களிலோர் வகையார்.

சேருகம் - நாகணவாய்ப்புள்.

சேர்-ஓர் அளவு, ஓர்முகத்தலளவு, ஒருவமையுருபு, சேரென்னேவல், தளை, தானியப்போர், திரட்சி, பிணையல்.

சேர்க்கை - ஒன்றிப்பு, சேர்க்குதல், சேருமிடம், நண்பு, புணர்ச்சி.

சேர்தல் - அடுத்தல் - அடைதல், இடைவிடாது சிந்தித்தல், இணங்கல், ஒருமித்தல், கிட்டுதல், கூடுதல், திரட்சி, புணர்தல், பொருந்தல்.

சேர்த்தல் - அடுத்தல், அணிதல், அறுத்தல், இணைத்தல், கலத்தல், கூட்டுதல், சமைத்தல், சேகரித்தல், சேர்த்திடல்.

சேர்ந்தலே - உற்றசினேகம், ஒன்றிப்பு.

சேர்ந்தார் - உற்றார், சினேகிதர்.

சேர்ந்தார்க்கொல்லி - தீ.

சேர்பு - சேர்மானம், பொருந்தி, வீடு.

சேர்ப்பது - கோலல்.

சேர்ப்பன் - நெய்தநிலத்தலைவன்.

சேர்ப்பு - அனுபந்தம், இறங்கு துறை, கடற்கரை, கரை, கலப்பு, சேர்க்கப்படுவது.

சேர்மானம் - ஒன்றிப்பு, கலப்பு, கூட்டு.

சேர்விடம் - சந்திக்குமிடம், மனிதர்படுக்கை.

சேர்வு - அடைதல், ஐக்கியம், கூட்டு, திரட்டு, மருதநிலத்தூர், வீடு.

சேர்வை - ஐக்கியம், கலப்புச் சரக்கு, கூட்டம், சேகரிப்பு, சேர்ப்பு, சேர்மானம், சேனை.

சேர்வைக்காரன் - சேனைத்தலைவன், போர்ச்சேவகன்.

சேலகம் - கோரைக்கிழங்கு.

சேலம் - ஓரூர், புடவை, பொருமை, மயிற்றோகைக்கண்.

சேலுகன் - வேலைக்காரன்.

சேலேகம் - சந்தனம், சிந்தூரம்.

சேலை - அசோகு, சீலை, மகளிராடை.

சேலோதம் - சந்தனம்.

சேல் - கயல்.

சேவகம் - சேவகத்தொழில், சோம்பு, துயில், பேயுள்ளி, யானை துயிலிடம், வணக்கம், வீரம், வேலை.

சேவகனூர் - ஐயனூர்.

சேவகன் - ஐயன், சிற்றுமுட்டி, பணிவிடை செய்பவன், பேயுள்ளி, வீரன்.

சேவகன்பூடு - காந்தள், சிறுபுள்ளடி, சிற்றுமுட்டி.

சேவடி - சிவந்தபாதம்.

சேவதி - குபேரன்நிதி.

சேவநம் - தைத்தல்.

சேவல் - காவல், கோழி, சக்கரவாகம், சேறு, மயிலொழிந்த பறவையாண்.

சேவற்கொடியோன் - ஐயனார், குமரன்.

சேவற்பண்ணை - ஓர் பூமரம், சாவற்பண்ணை.

சேவியம் - வெள்ளைவெட்டிவேர்.

சேவாலம் - நேர்வாளம்.

சேவாலிசம் - கருநொச்சி.

சேவை - ஊழியம், கெடுதல், செல்லல், தொழுகை, வழிபடுதல்.

சேறல் - எழுச்சி, செல்லல், நடத்தல்.

சேறு - அளறு, இனிமை, கள், கும்பி, குழம்பு, குறிப்பு, செறிவு, தித்திப்பு, திருவிழா, தேன்.

சேறும் - செல்லுதும்.

சேர்கண்ணி - அரிதாரம்.

சேனம் - பருந்து.

சேனாங்கம் -சேனையினோருறுப்பு.

சேனா - ஒரு பூண்டு, மலங்குமீன்.

சேனாபதி - படைத்தலைவன், முருகன்.

சேனாமுகம் - படையிலோர் தொகை, அஃது — பதாதி மூன்றுகொண்டது,முற்படை.

சேனாவரையர் - தொல்காப்பிய உரையாசிரியர்.

சேனாவு - தகரை.

சேனை - ஆயுதம், கடைவீதி, படை, மிகுதி.

சேனைத்தலைவன் - படைத்தலைவன்.

சேனைப்பால் - சிவனிப்பால்.

சை

சை - இகழ்ச்சிக்குறிப்பு, ஓரெழுத்து.

சைகதம் - மணல், மணற்கரை.

சைக்கினை-கண்சமிக்கை, சாடை.

சைசவம் - இளமை.

சைதன்னியம் - அறிவு, ஆத்துமா, கடவுள், தத்துவஞானம்.

சைத்தியம் - சீதத்தன்மை, பலிபீடம், புத்தாலயம்.

சைத்திரம் - சித்திரைமாதம், சித்திரவேலை, வெற்றி.

சைத்திரி - சித்திரைமாதம், யாகமிருபத்தொன்றி னொன்று.

சைத்திரியம் - தெளிவு, திடசித்தம்.

சைநர் - அருகன், புத்தர்.

சைநிகன் - சேனைத்தலைவன்.

சைந்தவம் - இந்துப்பு, குதிரை, சிந்துநதி, தலை.

சைந்தவி - ஓரிராகம்.

சைந்யம் - சதுரங்கபலம்.

சைமினி - ஓராசிரியர்—அவர் பூர்வமீமாம்ஸை ஸூத்திரம் செய்தவர், ஓர்முனி, யமன் பட்டணம்.

சைமினிநகரோன் - யமன்.

சையம் - கல், குடகுமலை, செல்வம், மலை.

சையுத்தம் - மயக்கம்.

சையை - சைகை.

சையெனெல்- இகழ்ச்சிக்குறிப்பு, வெறுப்புக்காட்டல்.

சையோகம்-கலத்தல், கூட்டம், சம்யோகசம்பந்தம்.

சையோகை - சிவத்துக்கின்பந் தருஞ் சக்தி, மனைவி.

சைரிகம் - உழவெருது, கலப்பு.

சைரிகன் - உழவன்.

சைரிபம் - எருமை.

சைரியம் - பெருங்குறிச்சி.

சைலகம் - சாம்பிராணி, மலையிருவேலி.

சைலம்-கற்றன்மை, சேலை, மலை.

சைவசமயம் - சிவசமயம்.

சைவசித்தாந்தம் - ஓர் நூல்.

சைவம் - சிவசமயம், அவை—ஊர்த்தசைவம், அநாதிசைவம், ஆதிசைவம், மகாசைவம், பேதசைவம், அபேதசைவம் அந்தரசைவம், குணசைவம், நிற்குணசைவம், அத்துவாசைவம், யோகசைவம், ஞானசைவம், அணுசைவம், கிரியாசைவம், நாலுபாதசைவம், சுத்தசைவம் என்பன, பதினெண்புராணத்தொன்று.

சைவர் - சிவசமயத்தோர், இவர்-ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தரசைவர், பிரவாசைவர், அந்தியசைவர்.

சைவலம் - பாசி.

சைவியம் - சைவத்திற்குரியது.

சைனர் - சமணர்.

சைனன் - அருகன், சினனை வணங்குவோன், புத்தன்.

சைனியம் } சேனை.
சைன்னியம் }

சொ

சொ - ஓரெழுத்து.

சொகுசு - அழகு, சௌக்கியம், நாகரீகம்.

சொக்கட்டான் - ஓர் சூதாட்டம்.

சொக்கட்டான்கவறு-பாய்ச்சிகை.

சொக்கதேவன் - கூடை, கூடைக் கட்டு, பொன்னுக்கு வீங்கி.

சொக்கநாதன் - சிவன்.

சொக்கம் - அழகு, ஓர்கூத்து, கலப்பின்மை, களவு, களிம்பின்மை, கெம்புக்கல், சிறப்பு, சுத்தநிருத்தம், தூய்மை, நன்மை, மாணிக்கம், மேன்மை.

சொக்கரை - குறைவு, சிறிய அடைப்பு, மதில் முதலியவற்றின் துவாரம்.

சொக்கர் - அழகர், சொக்கநாதர், பொன்னையுடையவர்.

சொக்கவி - மூக்கிலிச்செடி.

சொக்காலி } சிறு பூளைப்பூடு.
சொக்காளி }

சொக்கு - அழகு, அறியாமை, கண்ணுறக்கம், கதுப்பு, சொக்கன், சொக்கென்னேவல், சோர்வு, பொன், மயக்கு.

சொச்சம் - குறை, பணவட்டி, மாசின்மை, மிச்சம்.

சொடக்கு - சுடுகு, கிலுகிலுப்பை, சோம்பற்றன்மை, செட்டி.

சொட்டு - குட்டு, குற்றம், சொட்டென்னேவல், திவலை, துண்டு.

சொட்டுதல் - அணைப்புதல், அபகரித்தல், இடித்தல், குட்டுதல்.

சொட்டை - ஓராயுதம், கோணல், கொன்னை, பரிகாசம், பள்ளம், வளைதடி.

சொண்டி - உத்தியோகம், கடனுறுதி, வேர்க்கொம்பு.

சொண்டு - அற்பன், ஆயுதநுனி, உதடு, உத்தியோகம், கனத்த விளிம்பு, தலையழுக்கு, நிந்தை, பறவைமூக்கு.

சொத்து - உடைமை, குறை, பசை, பொருள்.

சொத்துவம் - உரிமை, சுயம்பு.

சொத்தை - கதுப்பு, சீர்க்கேடு, புழுத்துளைத்தல்.

சொப்பனவத்தை - பஞ்சாவத்தையினொன்று.

சொம் - ஆஸ்தி, உடைமை, உரிமைப்பொருள், சொத்து.

சொரங்கம் - கச்சோலம்.

சொரசத்தோரசி - இலவங்கப்பட்டை, இலவங்கம்.

சொரிதல் - உதிர்தல், கொட்டல், சிந்துதல், பொழிதல், மிகவீதல்.

சொரிதரல் - ஈதல், சுழலல், பொழிதல், மிகத்தருதல்.

சொரிவு - ஈவு, உதிர்வு, தாரானம், பொழிவு.

சொருகுதல் - செருகுதல்.

சொரூபசாரம் - ஓர் சைவநூல்.

சொரூபஞானம் - மெய்ஞ்ஞானம்.

சொரூபம் - அழகு, உடம்பு, சாயல், பரம், வடிவு, விக்கிரகம்.

சொரூபலக்கணம் - சிறப்பியல்பு.

சொரூபன் - கடவுள்.

சொரூபானந்தம் - ஓர்வேதாந்த நூல், பூரணானந்தம்.

சொரூபானந்தர் - ஓர் யோகி.

சொர்க்கம் - கூத்தின்விகற்பம், சுவர்க்கம்.

சொர்ணம் - பொன்.

சொர்ணக்கல் - இராசவர்த்தம்.

சொர்ணபேதி - சுவர்ணத்திராவகம்.

சொர்ணமாக்கி-பவளபாஷாணம்.

சொலித்தல் } இடத்தல், சுவா
சொலித்திடல் } லித்தல், பிரகாசித்தல்.

சொலியல் - கலைதல்.

சொலியன் - முடக்கொத்தான்.

சொல் - உறுதிச்சொல், எழுத்தினைச்சொல், கட்டளை, கள், செந்நெல், செந்நெல்கதிர், சொல்லென்னேவல், நாமகள், நெல், புகழ், பேச்சு, மொழி, வாக்கியம், பெயர்ச்சொல்முதலியன.

சொல்லணி - சொற்றொடைவகைச்சிறப்பு.

சொல்லல்-கூறல், சொல்லுதல்.

சொல்லாகுபெயர் - ஓராகுபெயர்.

சொல்லாடல் - பேசல்.

சொல்லானந்தம் - அறுவகையானந்தங்களுளொன்று; அது-சொல்லால்வருங்குற்றம்.

சொல்விசையளபெடை - சொல்லிசையை நிறைக்க வருவது.

சொல்லிலக்கணம் - பதவிலக்கணம்.

சொல்லின் முடிவினப்பொருள் முடித்தல் - முப்பத்திரண்டுத்தியினென்று.

சொல்லுதல் - புலமைபாடுதல், மொழிதல்.

சொல்லுறுதி - மெய்வார்த்தை.

சொல்லெச்சம் - சொல்லெஞ்சநிற்பது.

சொல்லெஞ்சணி - ஓரணி.

சொல்லேருழவர் - புலவர், மந்திரிகள்.

சொல்வகை - சொல்லின் வகை, நூலுரை பதினொன்கினொன்று, விலங்குறுப்பினுளொன்று.

சொல்வன்மை - சொல்வளம், சொல்லுறுதி, வாக்குவல்லபம்.

சொல்விளம்பி - கள்.

சொள்ளல் - குறைவு, சொத்தை.

சொள்ளை - இழுக்கு, சொட்டு, பழுதுபட்டது, புழுவரித்தது.

சொறி - காஞ்சொறி, குட்டம், சொறிசிரங்கு, சொறியென்னேவல், தினவு.

சொறிகட்டை - ஆவுறஞ்சுதறி.

சொறிக்கல் - சுக்கான்கல், தவளைக்கல், மஞ்சட்கல்.

சொறிக்கிட்டம் - கீச்சுக்கிட்டம்.

சொறிதல்-அரித்தல்,பறண்டுதல்.

சொறியன் - சொறியுள்ளவன், தவளை.

சொறிவு - தினவு.

சொற்கம் - மாணிக்கம், முலை.

சொற்கருவி - உரைக்காரக வேது, அண்ணம் உதடு, நா, பல்.

சொற்காத்தல் - சொற்றவறுமை.

சொற்குறி - சூதபாஷாணம்.

சொற்குற்றம் - சொற்பிழை.

சொற்சீரடி - தளைகள் ஒன்றும் பலவுமடுத்து வருவது.

சொற்சுவை - சொன்னலம், சொல்லின்பம்.

சொற்சோர்வு - சொற்பிசகு.

சொற்பின்வருநிலை - மொழிந்த சொல்லே மொழியினும் பொருள் வேறுபட்டு நிற்பது.

சொற்பொருட் பின்வருநிலை - சொல்லும் பொருளுமொன்றே மறித்து வருவது.

சொற்பொருள் - சத்தார்த்தம், சொல்லுக்குப்பொருளெழுதும் உரை ; இதனை சொற்பொருளுரை, பதவுரையெனவும் வழங்குவர்.

சொற்பொருள்விரித்தல் - முப்பத்திரண்டுத்தியிலொன்று.

சொற்றல் - சொல்லல்.

சொற்றொடர்நிலைச்செய்யுள் - அந்தாதி, ஓர்பிரபந்தம்.

சொனகு - பெரும்புல்.

சொனகம்-உத்தாமணி, வேலிப்பருத்தி.

சொன்மாலை - ஏற்றமொழி, புகழ்ச்சி.

சொன்றி - சுக்கு, சோறு.

சொன்னகாரர் - தட்டார்.

சொன்னசீரம் - கரும்பு.

சொன்னபேதி - ஓர் மருந்து.

சொன்னம் - பொன்.

சொன்னல் - இரும்பு, சோளம்.

சொன்னீர்மை - சொற்பயன்.

சோ

சோ - அரண், உமை, ஓரெழுத்து, ஒலிக்குறிப்பு, வியப்புச்சொல், பாணாசுரன் நகர்.

சோகம் - உண்டை, ஒட்டகம், கடுகுரோகணி, சோம்பல், சோர்வு, திரள், துன்பம், தொடை, பஞ்சபாணாவத்தையி லொன்று.

சோகநீக்கி - மாதவி.

சோகரிகன் - வேட்டைக்காரன்.

சோகரத்தல் - சோர்தல், துக்கப் படுதல், துன்புறல்,வதங்குதல்.

சோகாரி - கடம்பு.

சோகி - பலகறை, பிடாரன், விஷவைத்தியன்.

சோகித்தல் - அவசப்படல், துக்கப்படுதல்.

சோகு - பிசாசம்.

சோகை-அப்பிராணி, ஓர்நோய்.

சோங்கம் - அகில்மரம், கிச்சிலிக் கிழங்கு.

சோங்கு - ஓர் மரக்கலம், குருகு, துப்பாக்கி முதலியவற்றினடி, மலையின்கண்சோலை,மறத்தல்.

சோசக்காய் - தேங்காய்.

சோசனம் - உள்ளி, துக்கம்.

சோடசகலை - பதினாறுகலை, அவை—அகாரம், உகாரம், மகாரம், விந்து, அர்த்தசந்திரன், நிரோதினி, நாதம்,நாதாந்தம், சந்தி, வியாபினி, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை, ஸமனை, உன்மனை என்பன.

சோடசம் - பதினாறு, மரப்பட்டைநார்.

சோடசாவதானம் - பதினறவதானம்.

சோடசி - யாகமிருபத்தொன்றினொன்று.

சோடசோபசாரம்-பதினாறுவகை உபசாரம், அவை— அடைகாய்தல், அமுதமேந்தல், ஆசமந நீர்தரல், அடைசாத்தல், கருப்பூரதீபமேந்தல், கால் கழுவ நீர்தரல், கைகழுவ நீர்தரல், தவிசளித்தல், தேய்வைபூசல், நறும்புகைகாட்டல், நீராட்டல், மஞ்சளரிசிதூவல், மந்திர மலராலருச்சித்தல், மலர்சாத்தல், முப்புரிநூறரல், விளக்கிடல் என்பன, (ஆவாஹநம், தாபநம், சந்நிதானம், சந்நிரோதம், அவகுண்டநம்,தேனு முத்திரை, பாத்தியம், அர்க்கியம், ஆசமநீயம், புட்பதானம் தூபம், தீபம், நைவேத்தியம், பாநீயம், செபசமர்ப்பணே, ஆராத்திகை என்னு மிவற்றையே சைவர்கள் சோடசோபசாரம் என்பர்.)

சோடணம் - உமிந்து குடித்தல், உலர்த்தல்.

சோடம் - உலருதல், சந்தோஷம், பொறுமை, மார்ப்புச்சட்டை.

சோடித்தல் - அலங்கரித்தல், கலைத்தல், வற்றுதல்.

சோடு-இணையானவை, இரண்டு, கவசம், சரியொப்பு, தொடு தோல்.

சோடை - சடைந்தது, சடைவு, வறட்சி.

சோட்டை - ஆசை, பேராசை.

சோணகிரி } அருணாசலம்.
சோணசைலம் }

சோணநதி - கங்கையின் ஒருப நதி.

சோணம் - இரத்தம், ஓர் யாறு, கடல், சிவப்பு, செங்கரும்பு, செந்தூரம், தீ.

சோணாகம் - பெருவாகை.

சோணாசலம் - சோணகிரி.

சோணாடு - சோழநாடு.

சோணிதபுரம் - பாணாஸுரன் பட்டினம்.

சோணிதம் - இரத்தம், சிவப்பு, சுரோணிதம், மஞ்சள்.

சோணேசன் - சிவன்.

சோணை - அருகு, அருணைமாநகர், காதினருகு, சோணைநதி, புகையிலை முதலியவற்றினடிப் புரம்.

சோதகம் - கழிக்குந்தொகை, சுத்தம்பண்ணல், துளி, மழை விடல்.

சோதகர் - ஏழு தலைமுறையிற் புத்திரர்.

சோதம் - ஒழுகல், சுத்தமானநீர்.

சோதரன் - சகோதரன்.

சோதனம் - சுத்தஞ் செய்தல், சோதித்தல், துரிசு, புடமிடுகை.

சோதனை - அளவு, ஆராய்வு, கட்டளை, சோதிப்பு, பிரமாணம், புடமிடுகை.

சோதி - அருகன், இடிவு, உணர்வு, ஒளி, கடவுள், கருப்பூரம், சாதிலிங்கம், சிவன், சுவாதிநாள், சூரியன், சோதியென்னேவல், தீ, பிரகாசம், பூராகம், விண்மீன், விஷ்ணு.

சோதிடநூல் - கலைஞான மறுபத்து நான்கினொன்று.

சோதிடம் - சோதிடநூல், நன்னிமித்தம்.

சோதிதம் - அறிவிக்கப்பட்டது, கழிந்துவந்தபேறு, சந்திரனது பதினாறு கலைகளிலொன்று.

சோதித்தல் - அளத்தல், ஆராய்தல், இலங்கல், சுத்திபண்ணல், பரீட்சித்தல்.

சோதியம் - வாலுளுவை.

சோதிராத்திரி - நடுராத்திரி.

சோதிவிருட்சம் - இராவரி.

சோதினி-செத்தை, துடைப்பம்.

சோத்தம் - ஸ்தோத்திரம்.

சோத்தி - அத்தசாமம், சுழுத்தி, நித்திரை.

சோத்தியம் - அதிசயம், கழிக்கப்படுந்தொகை, சுத்தம், சோதிக்கப்படுவது, தவறு, வினா.

சோத்திரம்-காது, கேள்வி, செவி.

சோர்தை - உடர்தை, தடை.

சோபகிருது - ஓர் வருஷம்.

சோபம் - அசைவு, அழகு, ஆட்டம், ஆயாசம், இரக்கம், ஒளி, கள், சோம்பல், சோர்வு, தாமதகுணத்தொன்று, பத்துக் கோடிகொண்டகோடி, பிரபை.

சோபனம் - அழகு, சகுணம், சந்தோஷம், சுபம், தாமரை, நன்மை, நித்தியயோகத்தொன்று, பல்லாண்டு, முகூர்த்தம், வாழ்த்து.

சோபாதானம் - முதற்காரணமாயுள்ளது.

சோபாலிகை - அடம்பு, அடுப்பு, சுவாலை, விரிதூறு.

சோபானம் - கற்படி, தாழ்வாரம், நன்னிமித்தம், வசதி.

சோபிதம்-சௌந்திரம், பிரபை.

சோபை - அழகு, ஒருவகை நோய், ஒளி.

சோப்பம் - அயர்வு, சோர்வு.

சோப்பு - அடி, சொப்பென்னேவல்.

சோமகதி - சந்திரன் தினகதி.

சோமசுதன் - புதன்.

சோமசுந்தரன் - ஓர்பாண்டியன், சிவன்.

சோமசேகரன் - ஓர்சோழன், ஓர் பாண்டியன், சிவன்.

சோமதாரி - இந்துப்பு, சிவன்.

சோமதாரை - ஆகாயம்.

சோமநாதன் - சிவன்.

சோமநாதி - பெருங்காயம்.

சோமபந்து - ஆம்பல், சூரியன், புதன்.

சோமம் - ஆட்டாங்கொடி, ஆதாயம், ஓர்பூடு, ஓர்யாகம், கஞ்சி, கள்.

சோமராகம் - பாலைப்பண்ணின் திறமைந்தனுளொன்று.

சோமவல்லி - சீந்தில்.

சோமவாரம் - திங்கட்கிழமை.

சோமனுப்பு - இந்துப்பு, பச்சைக் கருப்பூரம்.

சோமன் - அட்டவசுக்களிலொருவன், அமுதம், ஓர் வள்ளல், கருப்பூரம், காற்று, குபேரன், சந்திரன், சவர்க்காரம், சிவன், சீலை, தண்ணீர், தூசு, நமன், நீலபாஷாணம், புதன், மலை, வேட்டி.

சோமாரணியம் - ஓர் வனம்.

சோமுகன் - ஓரஸுரன்.

சோமேசன் - சிவன்.

சோம்பலம் - சேங்கொட்டை.

சோம்பல் - அழுங்கல், சோம்புதல், மயக்கம், வசூரி.

சோம்பு - அழுங்கல், சோம்பல், சோம்பென்னேவல், தாமத குணத்தொன்று, பெருஞ்சீரகம், மடி, மந்தம்.

சோம்புதல் - உறங்கல், தாமதித்தல், மடியாதல், வாட்டங்கொள்ளுதல்.

சோம்பேறி - சுவர்ணபேதி, சோம்பி.

சோரசத்துரு - சவ்வீரம்.

சோரபேதி -அஞ்சனபாஷாணம்.

சோரம் - களவு, வஞ்சனை, விபசாரம்.

சோரர் - திருடர்.

சோரல் - சோருதல், தளர்தல், வாடல்.

சோரன் - ஆட்டுக்குட்டி, ஓர் வருடதேவதை, திருடன்.

சோராவாரி - கொள்ளை, மானபங்கம்.

சோரி-இரத்தம், சிறுசெருப்படி.

சோர்தல் - அவிழ்தல், அழிதல், கண்ணீர் முதலியன சொரிதல், சுழலல், சொரிதல், தவறுதல், தளர்தல், வதங்குதல், வாடல், விழுதல்.

சோர்த்தல் - கவர்தல், திருடல்.

சோர்வு - அயர்ச்சி, அழிதல், கழலுகை, களவு, குறைவு, தவறு, தளர்வு, நிறையழிவு, நெகிழ்வு, மயக்கம், மறதி, மெலிவு, வதக்கம்.

சோலி - காரியம், தொந்தரை, தோணியிலொதுங்கிடம், மார்க்கச்சு.

சோலை - தோப்பு, பூஞ்சோலை, பொழில், மரச்செறிவு, வனம்.

சோழகக்கச்சான் - தென்மேற்றிசை, தென்மேற்றிசைக் காற்று.

சோழகக்கொண்டல் - தென்கீழ்த்திசை, தென்கீழ்த்திசைக் காற்று.

சோழங்கன் - சோழன்.

சோழன் - தமிழ் நாட்டு மூவேந்தரிலொருவன்.

சோழியன் - ஒருவகை வேளாளன், சோழகுலத்தான்.

சோளம் - ஓர்பயிர், சங்கஞ்செடி.

சோளி - ஒரு கூடை, பிச்சைக்காரர் பை.

சோறு - அன்னம், பரணிநாள், பூஞ்சுண்ணம்.

சோற்றுலாத்தி - கண்ணேறு முதலிய நீங்கும்பொருட்டுச் சோறு.

சோற்றிலை - கற்றாழை.

சோனகம் - ஓர்தேசம், பதினென்பாடையிலொன்று.

சோனகர் - துலுக்கர்.

சோனை - சொரிதல், திருவோணநாள், விடாமழை.

சோனைப்புல் - அக்கதேவி.

சோனைமழை - பெருமழை.

சௌ

சௌ - ஓரெழுத்து, பள்ளி யெழுச்சி பாடுவோன்.

சௌகதன்-சூனியவாதி, புத்தன்.

சௌகந்தம் - நறுமணம்.

சௌகதிகம் - சந்தேகம்.

சௌகந்தி - கந்தபாஷாணம்.

சௌகந்திகம் - கருங்குவளை, செங்குவளை, பதுமராகமணி.

சௌகரியம் - சுகம்.

சௌக்கியம் - சந்தோஷம், சுகம், வசதி.

சௌகுமாரியம் - இளமை.

சௌசம் - சுத்தம்.

சௌசன்னியம் - அன்பு, இரக்கம், சிநேகம், பட்சம்.

சௌசிகன் - தையற்காரன்.

சௌசேயன் - வண்ணான்.

சௌண்டீரியன் - வீரன்.

சௌண்டி - ஓர் பிதிர், திப்பிலி.

சௌண்டிகர் - கள் விற்போர்.

சௌதாயம் - நன்கொடை, பந்தயப்பொருள்.

சௌதம் - அரண்மனை, சாலை, மலிவு, வெள்ளி.

சௌத்திராந்திகம் - நாத்திகவாதம்.

சௌந்தரமுகம் - மலர்ந்தமுகம்.

சௌந்தரியலஹரி - ஓர் நூல்.

சௌந்தரியம் - அழகு.

சௌபஞ்சனம் - புனல்முருங்கை.

சௌபரி - ஓர் முனி.

சௌபன்னம் - சுக்கு, மரகதம்.

சௌபாக்கியம் - நித்தியயோகத்தொன்று, மிகுபாக்கியம்.

சௌமன் - புதன்.

சௌமிய - ஓர் வருஷம்.

சௌமியம் - அழகு, சாந்தம்.

சௌமியன் - அருகன், சாந்தன், பதினோருருத்திரர்களி லொருவன், புதன்.

சௌரபம் - குங்குமம், பரிமளம்.

சௌரபேயம் - எருது.

சௌரம் - சூரியமதம், நாள், அட்டாதசவுபபுராணத்தொன்று.

சௌராட்டிரம் } ஓரிராகம், ஓர்
சௌராஷ்டிரம் } தேசம்.

சௌரி - கருடன், கன்னன், சனி, தாருகன்மனைவி, திருமால், துர்க்கை, நமன்.

சௌரியம் - களவு, பலம், வீரம்.

சௌரியன் - கன்னன், சூரன், சூரபத்மன், சூரியபுத்திரன்.

சௌவர்ணம் - சுக்கு, மரகதம்.

சௌவஸ்திகன் - புரோஹிதன்.

சௌவிதன் - அண்ணகன், அந்தப்புரக்காவற்காரன்.

ஔவீரம் - இலந்தைமரம்.
ஔளம் - ஓர் சடங்கு.
ஔனகன் - ஓரிருடி.
ஔனகீயம் - ஒருபநிஷதம்.
ஔனந்தி - பலராமன்.
ஔனிகன் - ஊன்விற்போன், புலைஞன்.

ஞ

ஞ - ஒரெழுத்து.
ஞஃகான் - ஞ.
ஞண்டு - உருண்டு, கர்க்கடகவிராசி.
ஞமகண்டன் } காந்துரைகோளி
யமகண்டம் } னென்று.
ஞமலி - கள், நாய், மயில்.
ஞமன் - நமன்.
ஞயம் - நயம்.
ஞரல்வு - ஒலி.
ஞலவல் - மின்மினிப்பூச்சி.
ஞஞ - மயிற்குரல்.

ஞா

- ஒரெழுத்து.
ஞாங்கர் - இடம், இனி, கைவேல், பக்கம், முன், மேல், வேல்.
ஞாஞ்சில் - கலப்பை, மதிலுறுப்பு.

ஞாட்பு - கூட்டம், படை, பாரம், பூசல், போர்க்களம், வலி.

ஞாஞ்ணை - விண்ணுலகெளி.

ஞாண் - கயிறு, விண்ணுண்.

ஞாதம் - அறியப்பட்டது.

ஞாதா - அறிவாளன்.

ஞாதி - சுற்றம், தந்தை, தாயத்தான்.

ஞாத்ரு - அறிவுள்ள ஆத்மா, காண்போன்.

ஞாபகம் - அரும்பொருள், அறிவு, இலக்கிய மெடுத்துக்காட்டல்.

ஞாபகக்கருவி } அறியுங்கருவி.
ஞாபகவேது }

ஞாபகத்துணைக்கருவி - அறிவிற்குக் காரணமாய கருவி; அஃது கண், செவி, மூக்கு, மெய், வாய்.

ஞாபகநிமித்தக்கருவி - ஆத்துமா.

ஞாயில் - மதிலுறுப்பு.

ஞாயிறு - ஸூரியன்.

ஞாயிறுதிரும்பி - ஸூரியகாந்தி.

ஞாலமாது - ஊமத்தை, பூமிதேவி.

ஞாலமுண்டோன் - திருமால்.

ஞாலம் - பூமி.

ஞாலம்படைத்தோன் - பிரமன்.

ஞாவல் - நாவல்.

ஞாலுதல் - தொங்கல், நாவல்.

ஞாழல் - குங்குமமரம், கோங்கு மரம், பலினிமரம், பொன்னாவிரை, மயிற்கொன்றை, சங்குபுட்பம், மரவைரம்.

ஞாஜி - கள், நாய்.

ஞானிகம் - வள்ளிச்செடி.

ஞானியூர்தி - வயிரவன்.

ஞாற்சி - ஞாவல்.

ஞானகஞ்சுகன் - கடவுள்.

ஞானகாண்டம் - வேதத்தினோர் பகுதி.

ஞானசக்தி - மூன்று சக்தியி னொன்று.

ஞானதீட்சை - ஞானோபதேசம்.

ஞானபாகை - வேதநூற்பொருள் களிலொன்று.

ஞானபாதம் - ஞானநிலை.

ஞானபூர்வகம் - முன்னறிவு.

ஞானமூர்த்தி - ஸரஸ்வதி, சிவன்.

ஞானவல்லி - பார்வதி.

ஞானம் - அறிவு, இராசதகுணத் தொன்று, கல்வி, சாத்துவிக குணத்தொன்று, நல்லொழுக்கம்.

ஞானன் - பிரமன்.

ஞானகரன் - கடவுள்.

ஞானாவரணீயம் - அறிவுமங்குதல்.

ஞானானந்தம் - பேரின்பம்.

ஞானானந்தன் - கடவுள்.

ஞானி - அருகன், அறிஞன், நாலாம்பாதத்தோன், பிரமன்.

ஞானேந்திரியம் - அறிகருவி; அஃது—மெய், வாய், கண், மூக்கு, செவி.

ஞானோதயம் - மெய்யறிவு.

ஞான்று - இசைநிறை, ஓரிடைச்சொல், காலம், நாள்.

ஞி

ஞி - ஓரெழுத்து.

ஞிமிர் - ஒலி, நிமிரென்னேவல்.

ஞிமிர்தல் - ஒலித்தல், நிமிர்தல்.

ஞிமிறு - வண்டு.

ஞெ

ஞே - ஓரெழுத்து.

ஞெகிழம் - பொற்சிலம்பு.

ஞெகிழி - சிலம்பணி, சிலம்பு, தீ, தீப்பொறி, நெருப்புக்கொள்ளி.

ஞெகிழ்தல் - அலையல், அவிழ்தல், கழலல், கழுவல், சோரல்.

ஞெண்டு - கர்க்கடகவிராசி, நண்டு.

ஞெமிர்தல் - ஒடிதல், நெரிதல், பரத்தல்.

ஞெமிர்த்தல் - ஒடித்தல், நெரித்தல், பரப்பல்.

ஞெமுங்கல் - அழுந்தல்.

ஞெரிதல் - நெரிதல், முறிதல்.

ஞெரித்தல்-நெரித்தல், முறித்தல்.

ஞெரேலெனல் - அச்சக்குறிப்பு, ஒலி, விரைவுக்குறிப்பு.

ஞெலிகோல் - தீக்கடைகோல்.

ஞெலிதல் - கடைதல், குடைதல்.

ஞெளிர் - உள்ளோசை, ஒலி.

ஞெள்ளல் - உடன்படல், ஒலித்தல், சீக்கிரம், சோர்வு, பள்ளம், மிகுதி, மேன்மை, வீதி.

ஞெள்ளெனல் - அநுகரணவோசை.

ஞே

ஞே - ஓரெழுத்து.

ஞேயம் - அறியப்படுபொருள், அன்பு, சினேகம், நெய்.

ஞேயர்-அறிவுடையோர், சிநேகர்.

ஞேயா - பெருமருந்து.

ஞொ

ஞொ - ஓரெழுத்து.

ஞொள்கல் - அச்சக்குறிப்பு, அலைதல், இணைத்தல், சோம்பல்.

த

த - ஓரெழுத்து. குபேரன், பிரமன்.

தகசு - ஓர் மிருகம்.

தகடு - அடர்பு, இலை, ஐமை வடிவு, தட்டு, மண்படை.

தகதகெனல் - ஒளிக்குறிப்பு.

தகப்பன் - ஈன்றோன்.

தகமை - தகைமை.

தகம் - உட்டணம், எரித்தல், நித்திரை, நீர், வேகம்.

தகரம் - ஈயம், ஓரெழுத்து, தகரம், மயிர்ச்சாந்து, வாசனைப் பண்டம், விலங்கின்பிள்ளை.

தகர் - சுறுவிறுண், செம்மறிக்கடா, தகரென்னேவல், துண்டு, தருவாட்டேறு, பராகம், பலாசு, பூமி, மேடவிராசி, யாளி, யானை இவற்றிறுண்.

தகர்த்தல் - அடித்தல், உடைத்தல், குட்டுதல், நெரித்தல்.

தகல் - தகுதல், திராய்.

தகவு - அறிவு, உரிமை, உவமை, ஒழுக்கம், கிருபை, குணம், தகுதிப்பொருள், தகுதி, தெளிவு, நன்மை, நீதி, பாத்திரம்.

தகழி - அகல்.

தகழிகை - உண்கலம்.

தகனம் - சுடல்.

தகனன் - அக்ணிதேவன், நெருப்பு.

தகனை - உலோகக்கட்டி.

தகனோபலம் - சூரியகாந்தம்.

தகா-தந்திரம், தாகம், பேராசை.

தகாமை - ஒவ்வாமை, தகுதியின்மை.

தகித்தல்-எரித்தல், சீரணித்தல், சுடுதல்.

தகிலிமா - செங்கொட்டைமரம்.

தகுணிதம் - ஓர்வாச்சியம்.

தகுதல் - இயலுதல், உரிமை, ஏற்குதல்.

தகுதி - அறிவு, உரிமை, ஒழுக்கம், குணம், சனக்கூட்டம், பாத்திரம், பொறுமை.

தகுதியோர் - அறிஞர், தமர், பெருமையிற் சிறந்தோர்.

தகுவ - இயன்றவை.

தகுவர் - அசுரர்.

தகுளம் - மகளிர் விளையாட்டு.

தகை - அழகு, அன்பு, குணம், கவசம், தகையென்னேவல், தளர்வு, பெருமை, முகடு.

தகைதல் - ஆணையிடல், இளைத்தல், தடுத்தல், வாட்டுதல்.

தகைப்பு - இளைப்பு, தடுப்பு, மதிற்சுற்று.

தகைமை - அழகு, குணம், தன்மை, பெருமை.

தக்ககன் - அட்டநாகத்தொன்று.

தக்கடி - குதர்க்கம்.

தக்கடை - தராசு.

தக்கணகோளார்த்தம் - தென்பாதியுருண்டை.

தக்கணதுருவம் - தென்துருவம்.

தக்கணமந்தோச்சம் - கிரஹங்கள் சூரியனுக்குச் சமீபத்தில் செல்லும் எல்லை.

தக்கணம் - தாளப்பிரமாணத்தொன்று; அஃது—எட்டு மாத்திரைகளை ஓர் கலையாகக் கொண்டது, தெற்கு, வலப்பக்கம்.
தக்கணாக்கினி - தக்ஷிணாக்கினி.
தக்கணாட்சம்- உத்திரவிட்சேபம்.
தக்கணாயனம் } நிரட்ச ரேகைக்
தட்சிணாயனம் } குத் தெற்காய்ச் சூரியன் செல்லுதல்.
தக்கன் - அட்டநாகத்தொன்று, நவப்பிரமாவிலொருவன்.
தக்கவர் - தகுதியுடையோர்.
தக்கன்மகன்சிதைத்தோன் - வீரபத்திரன்.
தக்காரி - வாதமடக்கி.
தக்கார் - அறிஞர், உறவோர், தகுதியுடையோர், பெருமையிற் சிறந்தோர்.
தக்காளி - ஓர் செடி.
தக்கிரம் - மோர்.
தக்குவித்தல் - ஆட்சிக்குட்படுத்தல்.
தக்கேசி - ஓர் பண்.
தக்கை-காதிடுதக்கை, கிடைச்சி, தெப்பம், பம்பைவாச்சியம், பலவகைப்பறை.
தக்கோர் - அறிஞர், தக்கார்.
தக்கோலம் - ஓர் ஊரின் பெயர், சிறுநாவற்பூ, திப்பிலி, வாசனைப்பண்டம், வால்மிளகு.
தங்கம் - உயர்ந்தபொன், சுத்தம், பயம்.
தங்கல் - தங்கல், தாங்கல்.
தங்குடித்தமர்- தாயத்தார்.

தங்கை - இளையாள்.

தங்கைச்சி - கூவளை.

தசகண்டசித்து - இராமன்.

தசகண்டன்
தசக்கிரீவன் } இராவணன்.

தசகரம் - பத்துவித வியசனங்கள், அவை—அபாவனை, காமம், சிற்றின்ப கவி, சூது, நடனம், பகற்றுயில், மதுவூண், மாயம், விளையாட்டு, வேட்டம்.

தசதானம் - பத்துத்தானம், அஃது—உப்பு, எள், நெய், நெல், பசு, பூமி, பொன், வஸ்திரம், வெல்லம், வெள்ளி.

தசநாடி - பத்துநரம்பு; அத்தி, அலம்புடா, இடை, காந்தாரி, குஹூ, சங்கிலி, சிகுவை, சுழிமுனை, பிங்கலை, புருஷன்.

தசப்பிராதுர்பவம்-ஆசிரியவிருத்தம், உற்பவமாலை.

தசப்பொருத்தம் - செய்யுட் பொருத்தம், மணப்பொருத்தம் பத்து.

தசமி - பத்தாந்திதி.

தசமுகன் - இராவணன்.

தசமூலம் - பத்துவகை மருந்துவேர்; அஃது—கண்டங்கத்திரி, சிறுமல்லிகை, சிறுவழுதுணை, தழுதாழை, நெரிஞ்சி, பாதிரி, பெருங்குமிழ், பெருமல்லிகை, வாகை, வில்வம்.

தசம் - சிவிகை, பத்து.

தசரதன் - இராமன் தந்தை.

தசவாயு- பிராண வாயு பத்து; அஃது—பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன்.
தசனம் - பல், போர்க்கவசம், மலைமுடி.
தசாங்கம் - அரசர்க்குரிய பத்து அங்கம்; அவை—ஊர், கரி, கொடி, செங்கோல், நாடு, பரி, மலை, மாலை, முரசு, யாறு.
தசாங்கதத்தயல் } நேரிசை
தசாங்கபத்து } வெண்பா.
தசாட்சரி - ஓர்மந்திரவகை.
தசாநாதன் - உச்சத்தானத்திருத்தல்.
தசாபலன் - கிரகபலன்.
தசாவதாரம் - திருமாலவதாரங்கள்பத்து, அவை—மத்ஸ்யம், கூர்மம், வராஹம், நரஸிம்ஹம், வாமனம், இராமன், பரசுராமன், கிருஷ்ணன், புத்தன், கல்கி.
தசானனன் - இராவணன்.
தசிரம் - உட்டுளை.
தசுகரம் - களவு - தஸ்கரம்.
தசும்பர் - தசும்பு.
தசும்பு - குடம், கொப்பரி, பொன்.
தசை - ஊன், தாது, நிலைமை, புலால்.
தச்சன் - சித்திரைநாள், தச்சன்.
தஞ்சம் - எளிமை, தாழ்வு, துணை, பற்றுக்கோடு, பெருமை.

தஞ்சை - தஞ்சாவூர்.

தடத்தம் - நடுவாய் நிற்றல்.

தடம் - ஓமகுண்டம், கரை, குளம், பெருமை, மலை, மலைப் பக்கம், வரம்பு, வழி.

தடவரல் - தடவல்.

தடவல் - தடவல், வீணை வாசித் தல்.

தடவு - தடவென்னேவல், தூபக் கால், பெருமை, வளைவு.

தடறு - ஆயுதவுறை.

தடா - பானை, மிடா.

தடாகம் - குளம்.

தடாரி - பம்பை, பேரிகை, மத்த ளம், வாச்சியப்பொது.

தடி - அளவுகோல், ஆற்றங்கரை, உடம்பு, உலக்கை, ஊன், தறுவயல், தடியென்னேவல், தண்டு, பற்றுக்கோடு, மின், வயல், வளைதடி, வில்.

தடிதல் - அறுத்தல், குறைத்தல், தறித்தல், மின்னுதல், வெட் டல்.

தடித்தல் - கனத்தல், தாமதித் தல், புடைத்தல்.

தடித்து - மின்னல்.

தடிப்பு-கனப்பு, தழும்பு, பருமை.

தடினி - யாறு.

தடுத்தல்
தடுப்பு } ஆணையிடல்.

தடை - கவசம், தடக்கு, தடுத் தல், மறியல்.

தட்சிணாக்கினி - வேதாக்கினி மூன்றிலொன்று.

தட்சிணாமூர்த்தம் - குருமூர்த்தம்.

தட்சிணாமூர்த்தி - சிவன், அகத்தியன்.

தட்சிணாயநாந்தம் - சூரியகதியின் தென்னெல்லை.

தட்டம் - உண்கலம், பல், பாம்பினச்சுப்பல், மக்கட்படுக்கை.

தட்டல் - அடித்தல், அபகரித்தல், ஆணையிடல், இட்டல், தடுத்தல், தாளம்போடல்.

தட்டான் - கோஷ்டம், புடோல், பொற்கொல்லன்.

தட்டி - காவல், கேடகம், கோட்டம், படல், பலகை.

தட்டு - உபகட்டு, கம்புமுதலிய புன்பயிர்த்தாள், குறை, குற்றம், தட்டென்னேவல், தராசுத்தட்டு, திரிகை, தேர்நடு, பரிசை, மரவட்டணை, முட்டு, புறம், வட்டம், வளைவு, விலக்கு.

தட்டை - அரிதாள், கவண், கிளிகடிகோல், தினைத்தாள், மூங்கில், மொட்டை.

தட்பம் - குளிர்ச்சி.

தணக்கு - தணக்கு, நுணாமரம்.

தணத்தல் - நீங்கல், பிரிதல், போகல்.

தணல் - நெருப்பு.

தணவம் - அரசமரம்.

தணிகை - திருத்தணிகை.

தணிசு - கவிசு, குறைவு, தாழ்ச்சி.

தணிதல் - ஆறுதல், இளகுதல், குளிர்தல், குறைதல், பருத்தல்.

தணித்தல் - அவித்தல், ஆற்றல்.

தணியல் - கள்.

தணிவு - ஆறுதல், குறைவு.

தண் - குளிர்ச்சி.

தண்கதிர் } சந்திரன்.
தண்சுடர் }

தண்டகமாலை - ஓர் பிரபந்தம், வெண்பா அல்லது புணர்ச்சி மாலை.

தண்டகம் - ஆபரணம், கரிக் குருவி, குருந்தறி, தண்டகாரணியம், தொண்டைமண்டலம், நுரை, வடமொழியில் ஓர் வகை அகவற்பா.

தண்டகன் - ஓரரக்கன், ஓரரசன்.

தண்டகாரணியம் - ஓர் வனம்.

தண்டதரன் - யமன்.

தண்டநாரகன் - அரசன், சேனாதிபதி, நந்தி.

தண்டபாணி - தண்டேசன், நமன், முருகன், விஷ்ணு.

தண்டமிழ் - தண்ணிய தமிழ்.

தண்டம் - அபராதம், அரசன் கொடுங்கோன்மையாளி றை யிருத்தல், ஊன்றுகோல், ஓர் புருடப்பிரமாணம், குடைக் காம்பு, தண்டிப்பு, நாடு, நால் வகையுபாயத்தி ெனான்று, படை, பண்டாரம் பற்றுக் கோடு, யானைத்துதிக்கை, யானைசெல்வழி, வணங்கல்.

தண்டலை - ஓரூர், சோலை, பூந் தோட்டம்.

தண்டன் - அரசன், கடவுள், குயவன், நமன், வணக்கம், வணங்கல்.

தண்டாச்சிறப்பினள் - ஸரஸ்வதி.

தண்டாமை - நிலைநீங்காமை.

தண்டாயுதபாணி - குமரன்.

தண்டாயுதன் - ஐயனார், வயிர வன், வீமன்.

தண்டி - ஓர்புலவன், தண்டி யென்னேவல், தண்டியடிகள், தண்டேசன், வாயில்காப் போன், வானப்பிரஸதன்.

தண்டிகை - சிவிகை.

தண்டித்தல் - கண்டித்தல், வெட் டல்.

தண்டியலங்காரம் - ஓர் நூல். (அணியிலக்கணம்)

தண்டு - ஓந்தி, சிவிகை, சேனை, தடி, தண்டாயுதம், தண்டென்னேவல், துளையுடைப்பொருள், நமனுயுதம், படை, பூவிதழ், மிதுனவிராசி, மூங்கில், வரம்பு, வளைதடி, வாழைத்தாறு, வில், வீணை.

தண்டுதல் - தண்டல்.

தண்டுலம்-அரிசி, வாயுவிளங்கம்.

தண்டேசன் } சிவன் தொண்டரறுபத்துமூவரிலொருவன்.
தண்டேசுரன் }

தண்டை - காலணி, பிரப்பங்கேடகம்.

தண்ணடை - நாடு, பச்சிலை, மருதநிலத்தூர்.

தண்ணம் - ஓர்கட்பறை, காடு, குளிர், பறைப்பொது, மழு.

தண்ணவன் - சந்திரன்.

தண்ணளி - இரக்கம், கருணை, கிருபை.

தண்ணீர்விட்டான் - ஓர் பூடு, சாத்தாவாரி.

தண்ணுமை - உடுக்கை, உறுமிமேளம், ஓர்கட்பறை, பேரிகை, மத்தளம்.

தண்ணெனல் - குளிர்தல்.

தண்மை - அழகு, இகழத்தகுபொருள், இன்பம், எளிமை, குளிர்ச்சி, அஃது—எண்வகையூறுகளிலொன்று, சாந்தம், தாழ்வு, புல்லறிவு.

ததம் - அகலம், வாச்சியவகை, விரிவு.

ததல் - நிலே.

ததாகதன் - புத்தன்.

ததாகாரம் - அநச்சரூபம், விஸ்தாரம்.

ததி-ஓர்பிசின், கிரகம், தத்துவம், தயிர், சிரை, பருவம், பொழுது.

ததீசி - ஒரு முனிவர்.

ததும்பல் - அசைதல், தளும்பு தல், நிறைதல், பெருகுதல், வழிதல்.

ததைதல் - மிடைதல், வெளிப் படாது நெருங்கி நிற்றல்.

தத்தம் - ஈகை, சுவீகாரம்.

தத்தரம் - நடுக்கம், விரைவு.

தத்தல் - தவளே, தாண்டல், பாய்தல்.

தத்திகாரம் - பொய்.

தத்தியம் - மெய்.

தத்துவக்கட்டளே - ஓர் நூல்.

தத்துவத்திரயம் - மூவகைதத்து வம்; அஃது - ஆத்மதத்துவம், சிவதத்துவம், வித்யாதத்துவம்.

தத்துவப்பிரகாசம் } ஓர் சைவ
தத்துவவிளக்கம் } நூல், உண் மைவிளக்கம்.

தத்துவம்-அதிகாரம், இயற்கை, உண்மை தத்துவநூல், பிரு துவி முதலிய கருவிகள்.

தத்துவவாதம் - தத்துவமே—உண்மையே கடவுள் என்னும் சமயம்.

தத்துவன் - அதிகாரி, அரசன், அருகன், உண்மையுள்ளோன், உருத்திரன், கடவுள், பிரமன், விஷ்ணு.

தத்துவாசமம் - அங்காதிபாதம்.

தத்துவாதீதன் - கடவுள்.

தத்தை - கிள்ளை, முன் பிறந்தாள்.

தநம் - சந்தனம், மனம்.

தநயன் - மகன்.

தநுச்சாயை - சரீரநிழல்.

தநுத்திராணம் - கவசம்.

தந்தக்காரி - வாதமடக்கி.

தந்தசடம் - எலுமிச்சை, விளா மரம்.

தந்தசூகம் - பாம்பு.

தந்ததாவனம் - பல்துலக்கல்.

தந்தபலை - திப்பிலி.

தந்தபீஜம் - மாதுளை.

தந்தம் - பல், யானைக்கொம்பு.

தந்தாவளம் - யானை.

தந்தி - ஆண்யானை, நெய்வோன், பாம்பு.

தந்திமுகன் - விநாயகன்.

தந்திரகலை } ஆகமத்தோர்
தந்திராகமம் } பிரிவு.

தந்திரபாலன் - சேனபதி.

தந்திரம் - ஆகமநூல், உபாயம், கூட்டம், நூல், படை, யாழ் நரம்பு,

தந்திரர் - கந்தருவர்.

தந்திரவுத்தி - நூலுக்குள்ளபதின் மூன்று விகல்பநடையி லொன்று.

தந்திரி - தந்திரக்காரன், படைத் தலைவன், மந்திரி, யாழ்நரம்பி னேசை, யாழ்நரம்பு.

தந்திரை - சோம்பல், நித்திரை.

தந்திவீமுரியோன் - சிவன்.

தந்து - கல்விநூல், பஞ்சிநூல்.

தந்துரை - பாயிரம்.

தந்துவாயர் - நெய்வோர்.

தந்தை - தகப்பன்.

தபசி - தவத்தோன்.

தபசு - தவம்.

தபதியர் - கம்மாளர், தச்சர்.

தபம் - தவம், மாசிமாதம், வெப் பம்.

தபனம் - தாகம், மனத்துயர், வெப்பம்.

தபனன் - சூரியன், நெருப்பு.

தபுதல் - கெடுதல், சாதல்.

தபுதாரம் - ஊடிய தலைவியைத் தலைவன் காதலித்திருத்தல்.

தபோதனர் - முனிவர்.

தபோலோகம் - மேலேழுலகத் தொன்று.

தப்பட்டை - ஓர் பறை.

தப்பு - ஓர் பறை. குற்றம், தப் பென்னேவல், பொய்.

தப்புதல் - சப்பளித்தல், சீலை தப்புதல், தவறுதல், பிழைத் தல், விலகுதல்.

தமஈ - இருள், தாமசகுணம்.

தமப்பிரபை - ஏழுநரகத் தொன்று.

தமம் - இராகு, இருள், கீழ்ப் படுதல், சேறு, தன்னேயடக் கல், துக்கம், பாவம், புரச் சரணதண்டம், மனவிருள், மாயை.

தமயந்தி - நளராசன் மனேவி.

தமயன் - தமையன்.

தமரகம் - உடுக்கு, வங்கம்.

தமரத்தை - ஓர் மரம்.

தமரம்-அரக்கு, ஈயம், பேரொலி.

தமரல் - பெரிதொலித்தல்.

தமருகம் - உடுக்கை.

தமரோசை - கிலுகிலுப்பை.

தமர்-உறவோர், தம்மவர், மூடர். (பிங்)

தமனகம் - மருக்கொழுந்து.

தமனகன் - ஓர் நரியின் பெயர், (பஞ்)

தமனி - வன்னிமரம்.

தமனியம் - பொன்.

தமனியன் - இரணியன், சனி, பிரமன்.

தமன் - இராகு, கடவுள், கிருட்டிணன், சந்திரன், தம்மவன்.

தமாலம் - இலை, இரவு, பச்சிலைமரம், பட்டயம், மூங்கிற்றோல்.

தமி-ஒப்பின்மை, தனிமை, தாக்கின்மை, உதவியின்மை.

தமிசு - வேங்கைமரம்.

தமியம் - கள்.

தமியன் - எளியன், தனியன்.

தமிழோர் - தமிழ்ப்புலவர்.

தமிழ் - இனிமை, ஓர் பாடை, நீர்மை.

தமிழ்நாடன் - பாண்டியன்.

தமிழ்மொழியாக்கம் - தமிழ்ச்சொல்லமைதி.

தமிழ்வாணர் - தமிழ்ப்புலவர்.

தமிழ்வேதம்-குறள், திருமந்திரம், திருவாசகம், தேவாரம், நாலாயிரப்பிரபந்தம்.

தமுக்கு - ஓர்பறை.

தமையம் - அரிதாரம்.

தமையன் - அண்ணன்.

தம் - அசைச்சொல், கொடை, சாரியை, தற்காத்தல், நன்முகூர்த்தம், பங்கிடுதல், புண்ணியம்.

தம்பம்-கவசம், சங்கீதம், தூண், நிலை, பற்றுக்கோடு, பாவம், யானைத்தறி, வஞ்சம்.

தம்பலம் - இந்திரகோபம், நிற வகை, வெற்றிலைச்சாரம்.

தம்பலை - நிலவிலந்தை.

தம்பல் - சேறு, தம்பலம்.

தம்பனம் - அசைவற நிறுத்தல்.

தம்பி - தம்பியென்னேவல், பின் பிறந்தான்.

தம்பித்தல் - தடுத்தல், நிறுத்தல், வாயுமுதலிய வடக்கல்.

தம்மவன் - சுற்றத்தான்.

தம்மனை - தாய்.

தம்மிலம் - மயிர்முடி.

தயக்கம் - அசைவு, பிரபை.

தயங்கல் - அசைதல், ஒளிசெய் தல், திகைத்தல்.

தயாவிருத்தி - கிருபை மிகுதல், தயாவிருத்தி பதினொன்கு; அவை—கல்விபயிற்றல், துயர் தீர்த்தல், தண்டத்தினீக்கல், ஐயந்தீர்த்தல், பிறர்குணத்து அழுக்காறின்றிப் பொருத்தல், பிறரால் செய்யப்படுந் தீமை மறந்து நன்மை நினைத்தல், பிறர்க்குவேண்டி தெய்வம்வழி படல், இவை உயிர்க்கேழுபகா ரம், உணவு, பரமை, உடை, இடம், அடிமைகாத்தல், சிறை நோய் மூன்றுந்தீர்த்தல், பிண

மடக்கல், இவை உடற்கு எழு பகாரம், பிறர்க்கு பொருள் வரவை உவத்தல், செல்வம் பொருத்தல், பிறர் கருமத்திற்கு உடன்படல், தீமைக் கஞ்சல், பிறர் கருமம் முடிக்க விரைதல், பிறர்ஐயக்தீர்த்தல், நன்மை கடைபிடித்தல், பிறர் துயர்க்கிரங்கல்.

தயாளம் - கிருபை.

தயாளன் - கிருபையுடையோன்.

தயாளு - கிருபாலு.

தயிதம் - பிரியவஸ்து.

தயிதை - மனைவி.

தயினியம் - எளிமை, தைனியம்.

தயை - கிருபை.

தரகு - ஓரளவு, தரவு.

தரக்கு (கூடிய)புலி, புலிக்குடத்தி.

தரங்கம் - கலக்கம், நீர்த்திரை.

தரங்கிணி - ஆறு, ஓரிராகம்.

தரங்கு - ஈட்டிநுனி, தங்கல், வழி.

தரணம் - அரிசி, இமயம், சூரியன், தாித்தல், தாண்டல்.

தரணி - சூரியன், பூமி, மலை.

தரணீதரன் - அரசன் ஆமை, திருமால்.

தரம் - அச்சம், அரக்கு, கூட்டம், குண்டு, சங்கு, சமானம், பக்குவம், பருத்திப்பொதி, மலை, முறை, வகை, வலி.

தரல் - தருதல், தாராய் என்னுமுற்று.

தரவு - கலிப்பாவினோருறுப்பு, தலைவன் கட்டளை, பிடரி.

தரளம் - அசைவு, திரட்சி, முத்து.

தரனை - கஞ்சி, கள்.

தரன் - அட்டவசுக்களிலொருவன்.

தரா - ஓர் கசப்புக்கீரை, சங்கு, தரா, பூசநாள், பூமி.

தராங்கம் - மலை.

தராசு - துலாக்கோல், துலாராசி, பரணிநாள்.

தராதரம் - இனம், தரம், திறம், மலை.

தராதலம் - பூமி.

தராபதி - அரசன்.

தரிசனம் - அறிவு, கண், கனு, கண்ணாடி, காட்சி, மனக்காட்சி.

தரிசனவேதி - தாழ்ந்தலோகங்களை பொன்னாக்குமுறை.

தரிசனுவரணீயம் - எண், குற்றத்தொன்று, அஃது—காட்சி மறைப்பு.

தரிசனீயம் } அழகுள்ளது,
தரிசியம் } தோன்றுவது.

தரிசித்தல் - காணல், ஞானக் கண்ணால் காணல்.

தரிஞ்சகம் - அன்றில்.

தரித்தல் - அணிதல், சுமத்தல், தங்கல்.

தரித்திரம் - வறுமை.

தரித்திரீ - பூமி, வறியன்.

தரிப்பு - தரித்தல்.

தரியலர் } பகைவர்.
தரியலார் }

தரு - மரப்பொது.

தருக்கசிந்தாமணி - ஓர் நூல்.

தருக்கம் - நியாயம், பொருள், தருக்கவித்தை, திருட்டாந்தரம்.

தருக்கல் - அகங்கரித்தல், களித்தல்.

தருக்கு - அஹங்காரம், களிப்பு, தருக்கென்றேவல்.

தருசம் - ஊனம், பெருமை, பொறுமை.

தருணம் - ஆமணக்கு, இளமை, எண்ணம், சமயம்.

தருணி - மங்கைப்பருவத்தாள்.

தருதல் - உண்டாக்கல், கொடுத்தல்.

தருப்பகன் - மன்மதன்.

தருப்பசயனம் - ஓர்தலம், தருப் பைப்பாய், தருப்பையிற் படுக்கை.

தருப்பணம் - இன்ப நிறைவுறச் செய்தல், ஓர் தாளம், கண் ணாடி, மந்திரநீரிறைக்கை.

தருப்பை - குசம்.

தருமகே(க்ஷே)த்திரம் - குருக் கேத்திரம்.

தருமக்கிழவர் - வைசியர்பொது.

தருமதேவதை - அம்பாலிகை, நந்தி.

தருமநாள் - பரணிநாள்.

தருமநூல் - தருமசாத்திரம்.

தருமபுரம் - யமனுடைய பட்ட ணம்.

தருமம் - அம்பு, அறம், உபநிட தம், ஒப்பு, சுத்தம், தொழில், நல்லொழுக்கம் நியாயப்பிர மாணம், நீதி, யாகாதிதருமம், வேதம்.

தருமராசன் - அருகன், தருமன், பாண்டுமக்களில் மூத்தோன், புத்தன்.

தருவி - சட்டுவம்.

தரை - கர்ப்பாசயம், நரம்பு, பூமி, மூலே.

தர்க்கம் - தருக்கம்.

தர்ப்பகன் - மன்மதன்.

தர்ப்பம் - கர்வம், கஸ்தூரி.

தலத்தாது - நிலப்பனை.

தலம் - ஆழம், இடம், இலை, உலகின் பொது, உள்ளங்கால், கருவியுறை, கலப்பு, காடு, கீழ், குவியல், கைகொட்டல், துவாரம், நிமித்தம், பனைமரம், பாதி, பிளப்பு, பூமி, விரித்தகை.

தலன் - தலம்.

தலாகவம் - போர்க்களம்.

தலை - அதிகாரம், ஆகாயம், ஆதி, இடம், தலை, தலைமை, திசை' பெருமை.

தலைக்கடை - முதல் பிரதாள வாயில்.

தலைக்குடி - முதற்குடி.

தலைக்குறை - கவந்தம், சொல்லின் முதல் குறைதல்.

தலைக்கூடுதல் - ஒன்றித்தல்.

தலைக்கோலம் - தலையணி.

தலைசாய்தல் - நாணித்தல், வணங்குதல்.

தலைச்சீரா - தலையணியுங்கவசம்.

தலைச்சுருளி - பெருமருந்து.

தலைச்செய்தல் - பலன்படல், வாழ்ந்து தழைத்தல்.

தலைதட்டுதல் - பறைவெட்டுதல்.

தலைதாழ்தல் - நாணித்தல் வணங்கல்.

தலைத்திராணம் - தலைச்சீரா.

தலைத்தூக்கம் - அமைவு, தலை தாழ்தல், நாணித்தல்.

தலைநாள் - அச்விநீநாள்.

தலைபோடம் - பொடுதலை.

தலைப்படல்-எதிர்த்தல், தொடங்கல், வளர்தல், வாழ்தல்.

தலைப்பாடு - கூடுதல், வளர்ச்சி.

தலைப்பெய்தல் - கூட்டல்.

தலைப்பு - காரியமுடிவு, நுதி, விடுதலைப்பு.

தலைமகள் - தலைவி.

தலைமகன் - அதிகாரி, புருடன், பெருமையிற்சிறந்தோன், முதற்புத்திரன்.

தலைமடக்கு - ஆதிமடக்கு.

தலைமை - முதன்மை.

தலையணை - உபாதானம்.

தலையல் - நீந்துபுனல், புதுப்புனல், வரவு, மழைபெய்துவிடுதல்.

தலையாகுமோனை - அடிமோனைத்தொடை.

தலையாகெதுகை - அடிதோறும் முதற்சீரின் முதலெழுத்தொழிய மற்றவையொத்திருத்தல்.

தலையாயார் - பெரியோர்.

தலையுவா - அமாவாசை.

தலைவன் - அண்ணன், அரசன், எப்பொருட்குமிறைவன், குரு, புருடன், மூத்தோன்.

தலைவி - எப்பொருட்குமிறைவி, மனைவி.

தலைவிரித்தான் - சாரணை, செருப்படி.

தல்லி - தாய்.

தவ - குன்றல், மிகுதி.

தவக்கம் - தடை, தாகம், தேவை, வாட்டம், விருப்பம்.

தவசி - தவம்.

தவசி - ஓர் பூடு, முருங்கை.

தவத்தர் - தீ, முனிவர், வெப்பம்.

தவம் - தவசி, வில்.

தவர்-தவசொன்னேவல், முனிவர்.

தவர்தல் - சிர்தல், தப்புதல்.

தவலல் - குறைதல், கெடுதல்.

தவலோகம் - மேலேழுலகி லொன்று.

தவல் - குறைதல்.

தவளம் - கர்ப்பூரம், சங்கபாஷாணம், வெண்மிளகு, வெண்மை.

தவளாங்கம் - வெள்ளைமேனி.

தவளை - தவளை, மண்டூகம்.

தவளோற்பலம் - வெள்ளாம்பல்.

தவறல் - கடத்தல், குறைதல், சாதல், தப்புதல்.

தவறு - குற்றம், தப்பு, தவறென்னேவல்.

தவறுதல் - அழிதல், சாதல், தப்புதல், வழுவுதல்.

தவனகம் - மருக்கொழுந்து.

தவனம் - ஆசை, தாகம்.

தவனன் - சூரியன், நெருப்பு.

தவன் - எத்தன், புருடன், தவசி.

தவாநிலை - தவறாநிலை, வழுவாநிலை.

தவாவினை - தவறாச்செயல், மலை, முத்தி.

தவிசு - தடுக்கு, பாய், மெத்தை.

தவிடு - தாகப்படல், தவிடு.

தவித்தல் - அரிசியின் றுகள், இளைத்தல்.

தவித்திரம் - மான்றோலினாற் செய்த விசிறி.

தவிர்தல் - ஒழிதல்.

தவிர்த்தல் - ஒழிவித்தல், வற்றுதல், விலகுதல்.

தவிர்ப்பு-ஒழிவு, தடை, விலக்கு.

தவில் - ஓர் பறை.

தவுசெலம் - முருங்கை.

தவுரிதகம் - குதிரையின் ஐந்து கதியொன்று.

தவ்வி - அகப்பை, சட்டுவம்.

தவ்வை - அக்காள், செவிலித்தாய், மூதேவி.

தழங்கல் - ஒலித்தல்.

தழலல் - அழலல்.

தழல் - கவண், கார்த்திகைநாள், கிளிகடிகோல், தழலென்னேவல், தீ.

தழற்சி - அழற்சி.

தழாத்தொடர் - உருபும்பயனிலையுந்தழுவாதுபுணரும்புணர்ச்சி.

தழால் - தழுவல்.

தழிஞ்சி - சாய்ந்தார்மேற்படாமை.

தழீஇந்தழீஇமெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.

தழுதணை - படர்தாமரை.

தழுதாமை - வாதமடக்கி.

தழுதாழை - ஓர் மரம், அஃது, தசமூலத்தொன்று.

தழும்பு - காயம், குற்றம், நாத்தழும்பு, மறு.

தழுவணை - அணைக்குந்தலையணி கடலட்டை, சாய்மானமான மெத்தை,

தழுவல் - தழுவுதல்.

தழுவுதல் - எற்றுக்கொள்ளுதல் கட்டியணைத்தல், கலத்தல்.

தழை - இலை, தழையென்னேவல், தளிர், பீலிக்குடை, மயிற்றோகை.

தழைக்கை
தழைதல் } தளிர்த்தல்.

தழைத்தல் - செழித்தல், தளிர்த்தல், வாழ்தல்.

தளதளெனல் - இளக்கக்குறிப்பு, ஒளிக்குறிப்பு.

தளப்பம் - தளப்பற்று மரம், தளர்வு.

தளம் - இலை, உப்பரிகை, கப்பலின் தட்டு, கூட்டம், சாடி, சாந்து, தடிப்பு, நிலத்தின்றளம், படை, பூவிதழ்.

தளம்பல் - அசைதல், ததும்பல், தடுக்கல், நிலைகுலைதல், முட்டுப்படல்.

தளர்ச்சி } சோம்பல், சோர்வு,
தளர்தல் } மெலிவு, வருத்தம்.

தளவம் } முல்லைக்கொடி.
தளவு }

தளி - குளிர், கோயில், மழைத்துளி, விளக்குத்தண்டு.

தளிகை - உண்கலம், புற்கைக்கட்டி.

தளிமம் - அழகு, கட்டில், திண்ணை, மக்கட்படுக்கை, மெத்தை, வாள், வீடுகட்டு நிலம்.

தளிரடி - மெல்லடி, பெண்.

தளிரியல் - பெண்.

தளிர் - தழை, தளிரென்னேவல்.

தளிர்த்தல் - குளிர்த்தல்.

தளுக்கிடுதல் - அழுத்தமாகுதல், மினுக்குதல்.

தளுக்கு - ஒளி, தளுக்கென்னேவல், மினுக்கு, மூக்குத்தி.

தளை - ஆண்மயிர், கட்டு, கால்விலங்கு; காற்சங்கிலி, காற்றம்பு, தளையென்னேவல், பாசம், பந்தம், யாப்புறுப்பெட்டினொன்று.

தளைதட்டல் - தளைதவறல்.

தளைதல் - பிணித்தல்.

தளைப்படுதல் - தறைப்படல்.

தளைப்பொருத்தம் - செய்யுட்டளையினிணக்கம்.

தள்ளல் - தள்ளல், பொய், வியங்கோண்முற்று.

தள்ளாடல் - அசைதல்.

தறி - கட்டுத்தறி, தறியென்னேவல், தூண், நெய்வார்கருவி, முளை, வெட்டு.

தறிகை - உளி, கோடரி, தறி, மழு.

தறித்தல் - வெட்டல்.

தறுகணாளர் - படைவீரார்.

தறுகண் / தறுகண்மை } அஞ்சாமை, குரூரம், வீரம்.

தறுதல் தடைப்படல், தவறுதல்.

தறை - ஆணியின் சடை, தரை.

தற்காலம் - தற்சமயம்.

தற்காலசுத்தபுடம் - குறித்த காலத்துக் கிரகணங்களிற்கும் நிலையைச் சரியாயறியுஞ் சுத்தகணிதம்.

தற்காலமத்திமம் - குறித்த காலத்துக் கிரணங்கணிற்கு நிலையைப் பொதுவாக வறியு மத்திம கணிதம்.

தற்காவல் - கற்பு நிறை, தற்காப்பு.

தற்காத்தல் - இரட்சித்தல், தன்னைக் காத்தல், பாதுகாத்தல்.

தற்காப்பு - பாதுகாப்பு.

தற்கிழமை, ஒற்றுமையாயுரியது.

தற்குணம் - விசேஷகுணம்.

தற்குறிப்பேற்றம் - ஓரலங்காரம்.

தற்சமம் - வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் பொதுச்சொல் லால்வருவது.

தற்சனி - சுட்டுவிரல்.

தற்சாட்சி - மனச்சாட்சி.

தற்சிவம் - ஈசுவரன்.

தற்சுட்டு- தன்னைக்குறிப்பித்தல்.

தற்செயல் - தானகநிகழ்வது.

தற்செல்வம் - வலி.

தற்பதம் - கடவுள்.

தற்பம் - அகந்தை, மேனிலை, வஞ்சனை, மக்கட் படுக்கை, மனைவி, மெத்தை.

தற்பரன் - கடவுள், சிவன்.

தற்பவம் - ஆரியசிறப்பெழுத்தானும் பொதுவுஞ் சிறப்புமாகிய இரண்டெழுத்தானுந் தமிழ் சிறந்துவருவது.

தற்பாடி - வானம்பாடி.

தற்புருடம் - சிவனைம் முகத்தொன்று.

தற்போதம் - தன்னையுங்கடவுளையுமறியு மறிவு, ஈசுவரனியற்கையறிவு.

தனகு - உள்ளக் களிப்பு.

தனஞ்சயன் - அருச்சுனன், உபவாயுக்கள் ஐந்திலொன்று, அஃது — உயிர்போகினும் போகாதுடலை வீக்கித் தலை கிழித்தகலும், தீ.

தனதன் - ஈகையாளன், குபேரன்.

தனபதி - குபேரன்.

தனம் - எண்ணிலோரடையாளம், சம்பத்து, தன்மை, பசுக் கன்று, பொன், முலை.

தனயன் - புத்திரன்.

தனலக்குமி } இலக்குமி.
தனலட்சுமி }

தனவைசியர் - செட்டிமார்கள்.

தனவையாதம் - தறுகாஞ்சொறி.

தனுது - தனது.

தனி - ஒப்பின்மை, ஒற்றை, கலப்பின்மை, சுத்தம், தனிமை, தனியென்னேவல்.

தனிகம் } கொத்தமல்லி.
தனிகா }

தனிக்காப்பு - ஒரேபாட்டிலடங்கிய காப்பு.

தனிக்குறில்-தனிக்குற்றெழுத்து

தனிக்கோலான் - ஏகாதிபதி. கடவுள்.

தனிச்சொல் - தனிச்சீர், தனிமொழி, வெண்பா.

தனிட்டை - அவிட்டநாள்.

தனிதம் - முழக்கம்.

தனித்தல் - உதவியற்றிருத்தல். தனிமை.

தனிநிலை - ஆய்தவெழுத்து.

தனிப்பாடு - முத்தகம், அஃது— ஒன்றன்பேரிற் சொன்ன ஒற்றைக்கவி.

தனிமுதல் - கடவுள்.

தனிமை - உவமையின்மை, ஏகாந்தம், தனிப்பு, பிரிவு.

தனிமொழி - தனியே நிற்குஞ் சொல்.

தனிவலிப்பெருமாள் - குப்பைமேனி.

தனிவீடு - மோக்ஷம்.

தனை - அளவு.

தனு - அத்தி, உடல், கசியபன் மனைவி, சிறுமை, தனுவிராசி, தக்கன் மகள், வில்.

தனுசர் - அசுரர்.

தனுசன் - மகன்.

தனுசாரி - இந்திரன், திருமால்.

தனுத்திரம் - போர்க்கவசம்.

தனுர்வேதம் - உபவேதம் நான்கி லொன்று.

தனேசன் - குபேரன்.

தனை - அளவு, எண்.

தன் - தான், அசைச்சொல்.

தன்பொருட்டனுமானம் - பிறர் பொருட்டனுமானம்.

தன்மம் - அறம், தருமம்.

தன்மேம்பாட்டுரை - ஓரலங் காரம்.

தன்மாத்திகாயம் - புண்ணிய பாவசரீரம்.

தன்மாத்திரை - பூதங்களினுதி.

தன்மை - ஓரலங்காரம், குணம், சுபாவம், நிலைபரம் யான் முதலிய தன்மைப்பெயர், மாதிரி, மூவிடத் தொன்று.

தன்மைச்சொல் - சொல்வோன் றன்னைக் குறிக்குஞ் சொல்.

தன்மைப்பன்மை - தன்மைப் பெயரில் அநேகம்.

தன்மைப்பன்மை வினைமுற்று - தன்னோடு சேர்ந்த பலர்பால் முற்றுவினை.

தன்மைப்பொருள் - தன்மையிடப் பொருள்.

தன்வந்திரி - சிவன், சூரியன், தேவர் மருத்துவன்.

தன்வினை - எழுவாய்க் கருத்தா வின் புடைபெயர்ச்சியாய் நிக முந் தொழில்.

தன்னமை-இணக்கம், ஒத்தாசை, சிநேகம், தாழ்மை.

தன்னம் - அற்பம், சிறுமை, பசுவின் கன்று, மான்கன்று.

தன்னியம் - தனது, திரவியம், முலைப்பால்.

தன்னியாசி - ஒரிராகம்.

தன்னிரை மீட்டல் - எண்வகை வெற்றியிலொன்று.

தன்னிலை - சுபாவநிலை.

தன்னினி - வேங்கைமரம்.

தன்னை - இரண்டாம் வேற்றுமையுருபுடைய படர்க்கை யொருமை விரவுப்பெயர், தாய், தமையன், தமக்கை.

தா

தா-அழிவு, ஒரெழுத்து, குற்றம். கேடு, தாண்டுதல், தாவென்னேவல், பகை, பாய்தல், பிரம்மன், வருத்தம், வலி.

தாகம் - ஆசை, உணவு, எரிவு, எருது, தூண், நீர்வேட்கை, அஃது — உயிர் வேதனையி லொன்று.

தாக்கணங்கு - இலக்குமி.

தாக்கம் - அதைப்பு, கனப்பு, வீக்கம்.

தாக்கல் - எதிர்த்தல், பாய்தல்.

தாக்கு - அடி, அதிர்ச்சி, உரம், கனம், தாக்கென்னேவல், பெருக்கு, போர், வலி.

தாக்குதல் - அடித்தல், எண்கூட்டிப் பெருக்கல், எதிர்த்தல், கனத்தல், தள்ளுதல், தாழுதல், பாய்தல், முட்டுண்ணல்.

தாங்கல் - காத்தல், குளம், சுமத்தல்.

தாங்கி - ஆதாரம், பூணுகக் கட்டுவது.

தாசநந்தினி - வியாசன்றாய்.

தாசபாலனம் - தயாவிருத்தி பதினொன்கினொன்று.

தாசரதி - இராமன்.

தாசன்-அடிமை, ஊழியக்காரன், தவல்கேட்போன், ஞானி, சூத்திரன், வலையன்.

தாசி - அடிமைப்பெண், பரணிநாள், மேகவன்னப்பூவுள மருதோன்றிமரம்.

தாசு - இரண்டரை நாழிகைக் கொண்ட நேரம், சூதாடு கருவி. நாழிகைவட்டம்.

தாசேரகம் - ஒட்டகம்.

தாடகை - ஓரரக்கி.

தாடங்கம் - காதணி, தோடு.

தாடனம் - அடித்தல்.

தாடாளன் - முயற்சியுள்ளோன்.

தாடி-மாடு முதலியவற்றின்கழுத்தாரம், மோவாய், மோவாய் மயிர்.

தாடிமஞ்சம் - சத்திக்கொடி.

தாடிமம் - சிற்றேலம், தாது மாதுளை.

தாட்சயம் - விவேகம்.

தாட்சாயணம் - பொன், பொன்னுபரணம்.

தாட்சிண்ணியம்-இணக்கம், இரக்கம் தாழ்மை.

தாட்டாந்தம் - திருட்டாந்தப் பட்டது.

தாட்படை - கோழி.

தாணித்தல் - தறைதல், தாளித்தல், துப்பாக்கியில் மருந்திடுதல், பலப்படுத்தல்.

தாணு-குறுந்தறி, தவன், தூண், நிலை, நிலைபெறுதல், மலை. வெற்றி.

தாண்டகம் - இருபத்தாறெழுத்தின் மிக்க வெழுத்தானடி கொண்டு வரும்பா.

தாண்டல் - ஆடல், கெலித்தல். தாண்டுதல், கடத்தல்.

தாண்டவம் - கூத்து, தவன் கூத்து, திருக்கூத்து.

தாண்டவராயன் } தவன்.
தாண்டவன் }

தாண்டி - நடனநூல்.

தாண்டுறல் - ஆடுதல், கடத்தல், பாய்தல், வெல்லுதல்.

தாதகி - ஆத்திமரம்.

தாதன் - அடிமை, தாசன், தொண்டன்.

தாதா . ஈகையாளன், தகப்பன், பிரமன்.

தாதான்மியம் - ஒற்றுமை.

தாதி - அடியவள் செவிலித்தாய்.

தாது - இரசமாதியேழு, ஏலம், ஓர் வருடம், கந்தகம் கடுக்காய், காவிக்கல், தாது மாதளை, நரம்பு, பாஷாணம், பூந்தாது, பொன்னுதியேழு, மண்ணுதி யைந்து, விளைதாது.

தாதுமாதளை - பூமாதளை.

தாதுவாதம்- கலைஞானமறுபத்து நான்கிலொன்று.

தாதை - தகப்பன், பிரமன்.

தாதைதாதை - பாட்டன்.

தாத்திரம்-கூன்வாள், கோடாலி.

தாத்திரி, - நெல்லி, பூமி, மாதா.

தாத்துரு - பன்னிரண்டாதித் தரிலொருவன்.

தாதி - ஓர் நதி, ஓர் மரம், கொத்துமல்லி, நிதாநம், வாசஸ் தாநம்.

தாந்தவம் - நூற்றல், நெய்குதல்.

தாந்திரிகம் - ஓர் நோய், தந்தி ரத்திற்கடுத்தது, நியாயத்திற் குரியது.

தாபகம்-ஆக்கம், நிலைநிறுத்தல். வெப்பம், வைத்தல்.

தாபதநிலை - கைம்மை நிலை, தவ வொழுக்கம்.

தாபதம் - முனிவரிருக்கும்வாசம்.

தாபதர் - சடைமுடியர், சமண முனிவர், முனிவர்.

தாபத்திரயம்-மூவகைத்துன்பம்; அஃது — தெய்விகம், ஆன் மிகம், பௌதிகம்.

தாபநீயம் - உபநிடதத்தொன்று.

தாபம் - காடு, தாகம், துக்கம், துன்பம், வெப்பம்.

தாபரம் - ஆதாரம், உடல், கோயில், தஞ்சம், துணை, நிலைத்திணைப் பொருள், பூமி.

தாபரன் - கடவுள்.

தாபிஞ்சம் - ஆமணக்கு தமாலம், பச்சிலை மரம்.

தாபிதம் - சூடு, தாபித்தல்.

தாப்பிசை.
தாப்பிசைப்பொருள்கோள் } பொருள்கோளெட்டினொன்று.

தாப்பு - ஊஞ்சல், தாம்பு என்ப தின் விகாரம்.

தாமணி - தாம்பு, கயிறு.

தாமதம் - தாமதித்தல், முக்குண த்தொன்று.

தாமநிதி - சூரியன்.

தாமம் - அஞ்சத்தக்கது, அணை கயிறு, இடம், உடல், ஒழுங்கு, ஒளி, கிரணம், கீர்த்தி, கொன் றைமரம், சுகம், தாமணி, தீங்கு, நகரம், பிரபை, பிறப்பு, புள்ளினதாரம், பூ, பூமாலை,

பெருமை, போர்க்களம், மகத்துவம், மணி, வடம், மலை, முடியுறுப்பு, மூவாறு கோவை மணியுள்ள மாதரிடையணி, வீடு.

தாமரசம் - செம்பு, தாமரை, பொன்.

தாமரம் - நீர், நெய்.

தாமரைக்கண்ணன் - விட்டுணு.

தாமரைச்சத்துரு-ஓர்பாஷாணம்.

தாமரைநண்பன் } சூரியன்.
தாமரைநாயகன் }

தாமரையாசனன் - பிரமன்.

தாமரையாசனி } இலக்குமி.
தாமரையாள் }

தாமரையான் - பிரமன்.

தாமரைவாசி - அரிதாரம், ஓர் பாஷாணம்.

தாமலகி - நிலநெல்லி.

தாமிரபருணி - ஓர்யாறு, மேற்றிசையானைக்குப் பெண்யானை.

தாமிரம் - செம்பு.

தாமிரபீசம் - கொள்.

தாமோதரன் - ஆமை, திருமால்.

தாம் - அசைச்சொல், சாரியை.

தாம்பு - கயிறு, தாமணிக்கயிறு.

தாம்பூலம் - வெற்றிலை.

தாம்பூலவல்லி } வெற்றிலை, வெற்றிலைக்கொடி.
தாம்பூலி }

தாயகம் - ஈகையுடைமை, பிறந்தகம்.

தாயத்தார்-ஞாதிகள், தாயாதிகள்.

தாயம் - உடைத்தல், உபகாரம், உரித்து, சூதாடுகருவி, சமய வாய்ப்பு, சுற்றம், தந்தை வழிச்சுற்றம், துன்பம், நட்டம், பங்கு.

தாயவிபாகம் - உரிமைப்பொருள் பிரித்தல்.

தாயுமானார் / தாயுமானவர் } ஓரடியார், செவ்வந்தியீசர்.

தாய் - அன்னை, அரசன்றேவி, ஊட்டுத்தாய், மாதா, மூதற்றாம், முதன்மை.

தாரகம் - ஆதாரம், உச்சவிசை, ஓங்காரம், பிரணவம், வெள்ளி.

தாரகன்-குழந்தை தாங்குவோன், மகன்.

தாரகாகணம் - நட்சத்திரக் கூட்டம்.

தாரகாபதி - சந்திரன்.

தாரகை - கண்மணி, விண்மீன்.

தாரகைமாலை - ஓர் பிரபந்தம்.

தாரண - ஓர் வருடம்.

தாரணம் - அட்டாங்கயோகத்தொன்று, உறுதி, தரித்தல், தெப்பம், நிலை.

தாரணி - பூமி.

தாரணை - அட்டாங்கயோகத்தொன்று, அதிவாசம், உறுதி, கடன், கட்டளை, கிரமம், சரிநிலை, ஞாபகம், தரித்தல், நிலை, புலனடக்கல்.

தாரம்-அரிதாரம், அரும்பண்டம், இங்குலிகம், ஓங்காரம், தேவதாரம், நா, பச்சைப் பாம்பினஞ்சு, பாதரஸம், பிரணவம், மனைவி, மூக்காற் பிறக்குமிசை, வல்லிசை, வீணைநரம்பி லொன்று, வெண்கலம், வெள்ளி.

தாரா-ஓர்புள், குருகு, விண்மீன்.

தாராகணம்-விண்மீன், கூட்டம்.

தாராதரம் - மேகம்.

தாராபதம் - வானம்.

தாராபதி - சந்திரன், வியாழன்.

தாராளம் - இஷ்டம், உதாரம், கொடை, தைரியம், பொலிவு, மிகுதி, விலாசம்.

தாரி - அரிதாரம், உடையோன், குணம், தரிப்பவன், வழி.

தாரு - பித்தளை, மரக்கொம்பு, மரப்பொது.

தாருகவிநாசனி } காளி.
தாருகற்செற்றாள் }

தாருகற்செற்றோன் } குமரன்.
தாருகாரி }

தாருகன் - ஓரசுரன்.

தாருகாரி - குமரன்.

தாருகாவனம் - ஓர் வனம்.

தாருணம் - அச்சம், பயங்கரம்.

தாருண்யம் - இளம்பருவம்.

தாரை - அபிஷேகம், ஒப்பு, ஒழுங்கு, கண், கண்மணி, காளம், கீர்த்தி, குதிரைநடை, கூர்மை, கொடிப்படை, சந்ததி, சிறுசன்னம், சீலை, சுக்கிரீவன் மனைவி, தத்தம்பண்ணுநீர், திகிரி, திரள், தேவகுரு, நா, நேரோடல், படையின் முன்னணி, பண்டியுருள், பாய்தல், மலைச்சாரல், மழை, மனைவி, வலி, வழி, விண்மீன், வியாழன்.

தார் - கிண்கிணிமாலை, கொடிப் படை, படை, படைவகுப்பு, பூ, பூவரும்பு, மாலை.

தார்க்கிகன் - தருக்கசாஸ்திரி.

தாலகி - கள்.

தார்க்கியன் - கருடன்.

தாலகேதனன் } பீஷ்மன்
தாலத்வசன் } பலராமன்.

தாலமேழுடையான் - அக்கினி பகவான்.

தாலம் - உண்கலம், கூந்தற்பனை, தட்டம், தாலம்ப பாஷாணம், தேன், நா, பனை, பூமி, யானைச் செவி.

தாலம்பபாஷாணம் - ஓர் பாஷா ணம்.

தாலவட்டம் - பூமி, யானைச் செவி, யானைவால், விசிறி.

தாலவிருந்தம் - பேராலவட்டம், விசிறி.

தாலவ்யம் - அண்ணத்தாற் பிறக்குமெழுத்து.

தாலாலம் - பழிமொழி.

தாலி - மங்கலநாண்.

தாலு - அண்ணம், நா.

தால் - தாலாட்டு, பிள்ளைக்கவி யுறுப்பினொன்று.

தாவடம் - இருப்பிடம், உருத்திர மணிமாலை.

தாவடி - பிரயாணம், போர்.

தாவட்டம் - ஒர்கல், சிற்ப நூலி னொன்று.

தாவந்தம் - இக்கட்டு, நரகம்.

தாவம் - காடு, காட்டுத்தீ, மருத நிலத்தூர், வெப்பம்.

தாவரம்-அசரம், இடம், இட்டம் உடல், உதவி, எழு பிறப்பி னொன்று, நிலை, பூமி, மரப் பொது, மலை, வின்னாண்.

தாவல் - தாண்டல், பாய்தல், பரத்தல்.

தாவளம் - இருப்பிடம், கடை. தாங்கல், பொதிகாரர், மருத நிலத்தூர்.

தாவளி - கம்பளி.

தாவனம் - அசைவு, சுத்திசெய் தல், தாபனம்.

தாவு-இளைப்பாருமிடம், குதிரை நடை, தாவென்னேவல், பகை, பற்றுக்கோடு, வருத்தம், வலி.

தாவுதல் - அழிதல், எட்டிப்பிடித்தல், தாண்டல், பரத்தல்.

தாழி - அரிதாரம் குடம், சாடி, சிவதை, பரணிநாள்.

தாழிசை - பாவினத்தொன்று.

தாழை - தாழைமரம், தென்னமரம்.

தாழ் - சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம், தாழ்க்கோல், தாழென்னேவல், நீளம்.

தாழ்தல் - அமிழ்ந்துதல், ஆசை, ஆசைப்பெருக்கம், குறைதல், சரிதல், தங்கல், வணங்கல்.

தாழ்த்தல்-அடக்கம் பண்ணுதல், இருத்தல், கீழ்ப்படுத்தல், குறைத்தல், தாழ்த்துதல், புதைத்தல், மந்தப்படுதல்.

தாழ்வடம் - முத்துக்கோவை முதலியன.

தாழ்வாரம் - வீட்டிறப்பு.

தாழ்வு-ஈனம், கீழ்மை, குறைவு, தவறு, பள்ளம்.

தாளகம்
தாளக்கம் } அரிதாரம்.

தாளம்- ஓர் வாச்சியம், இலயை, சுதி, கலைஞானமறுபத்துநான்கினொன்று, பனை, பொன்னரிதாரம்.

தாளாண்மை - ஊக்கம், முயற்சி.

தாளாளர் - முயற்சியுடையோர், வைசியர் பொது.

தாவரன் - கடவுள்.

தாளி - அனுடநாள், ஓர்செடி, தாளியென்னேவல், பனைமரம்.

தாளிசம் - ஓர் செடி.

தாளிதம் - தாளிப்பு.

தாள் - அடி, அருவி, ஆதி, ஒட்டு, கதவுறுதாள், கால், சரணம், முயற்சி, நெல்முதலியவற்றின் ருள், விற்குதை.

தாறு - அங்குசம், அளவு, இருப்பு முள், ஈந்து கமுகு வாழை யிவற்றின் குலை, நூற்குழி, வில்லின்குதை.

தாறுகன்னி - வெள்ளைக்காக் கணம்.

தாற்பரியம் - எண்ணம், கருத்து, கொள்கை, நோக்கம்.

தாற்பரியவுரை - கருத்துரை.

தாற்றுக்கதிர் - கொத்தாய்க் காய்க்குங்கதிர்.

தாற்றுக்கோல் - துறட்டி, முட் கோல்.

தாற்றுதல் - தரித்தல், புடைத் தாற்றிக் கழித்தல்.

தாற்றுப்பூ - கொத்தாய்நிற்கும்பூ.

தானம் - அடித்தல், அவத்தை, இடம், இராகம், ஈகை, உயிர் நிலை, கொடை, துண்டித்தல், தேவலோகம், யானை, யானை மதம், வலி.

தானவண்ணம் - சுரவிகற்பப் பாட்டு.

தானவம்-மிருது.

தானவர் - அசுரர்.

தானவன் - அசுரன்.

தானவாரி - விட்டுணு.

தானுதிபதி - படைத்தலைவன்.

தானுபதி - தூதன்.

தானி - இருப்பிடம், தானத்திலுள்ளது, பண்டகசாலை.

தானிகம் - கொத்துமல்லி.

தானியம் - பண்டம்.

தானியாகுபெயர் - ஓர் பொருளின் பெயர், அது இருக்குமிடத்துக்காவது.

தானு - காற்று, கொடையாளன், வெற்றியாளன்.

தானை - ஆயுதப்பொது, தூசு, படை.

தானைத்தலைவன் - படைத்தலைவன்.

தானைத்தறுகணாளர் - படைவீரர்.

தானைமாலை - ஆசிரியப்பா, ஓர் பிரபந்தம்,

தான் - தேற்றச்சொல், அசைச்சொல், படர்க்கை யொருமைப் பொதுப்பெயர், தாதான்மியம்.

தான்றி . தான்றிமரம்.

தி

தி - ஓரெழுத்து.

திகசம் - ஓமம்.

திகந்தம் - திக்கறுதி.

திகம்பரம் - நிருவாணம்.

திகம்பரர் - சமணமுனிவர்.

திகம்பரன்-அருகன், சிவன், நிருவாணி.

திகம்பரி - பார்வதி.

திகரம் - அவா, இளைப்பு, ஓரெழுத்து, சோர்வு, முட்டுத்தொய்வு.

திகழல் - ஒளிசெய்தல்.

திகழ் - ஒளி, திகழென்னேவல்.

திகழ்ச்சி, திகழ்தல் - ஒளி, தோற்றம், விளக்கம்.

திகறு - கொடிவேலி.

திகிரி - உருளை, சக்கராயுதம், தேர், மலை, மூங்கில், வட்டம்.

திகிரிகை - சக்கிரம்.

திகிரிக்கல்-கோரோசனை, சக்கரவாளகிரி.

திகில் - திடுக்காட்டம், பயம்.

திகு - தாளக்குறிப்பு.

திகை - திகையென்னேவல், திசை, தேமல்.

திகைத்தல் - நடுநடுங்கல், பிரமித்தல், மயங்கல்.

திக்கயம்-அட்டயானை, அவை—ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், குஞ்சரம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீபம்.

திக்காரம் - தள்ளல், நிந்தை.

திக்கு - திசை. பேச்சுத்தடக்கு.

திக்குப்பாலகர் - எட்டுத்திசையுங்காப்போர், அவர்—இந்திரன், அக்கினி, இயமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்.

திக்குமுக்கு - மூச்சுமுட்டு.

திக்குறு - புனமுறுக்கு.

திங்கட்குடையோன்- மன்மதன்.

திங்களாள். - மிருகசீரிடம்.

திங்கள் - சந்திரன், மாதம்.

திசாயம் - குங்கிலியம்.

திசை-ஏழனுருபு, திக்கு, நிலை, நோக்கு.

திசைச்சொல் / திசைமொழி } கொடுந்தமிழ் மொழியாகியும், அந்நியமொழியாகியும் வருவது.

திசைமுகன் - பிரமன்.

திடம் - உறுதி, மெய், வலி.

திடர் / திடல் } திட்டை, மேடு.

திடர்ச்சுண்டி / திடற்சுண்டி } வறட் சுண்டி.

திடீரெனல் - ஒலிக்குறிப்பு, சீக்கிரக்குறிப்பு.

திடுக்கம் - அச்சம், துணிக்கம்.

திடுக்கிடுதல் - அச்சத்தால் மனமசைதல், பயத்தாலுடல் கம்பித்தல்.

திடுதிடெனல் - ஈடுக்கொரலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.

திட்கல் - அச்சக்குறிப்பு.

திட்டம் - உறுதி, ஒப்புரவு, கட்டளை, கணிசம், சரி, செவ்வை, திறம், நிலவரம், பூரணம்.

திட்டல் - சபித்தல், வைதல்.

திட்டனம் - இலுப்பை.

திட்டி-கண், சந்தோஷம், ஞானம், தினை, நுழைவாயில், பார்வை.

திட்டிக்கல் } அஞ்சனக்கல்.
திட்டிமணி }

திட்டித்தம்பம்-கண்கட்டுவித்தை.

திட்டு - கனையச்சுவர், சபிப்பு, சிறுதிடல், திட்டென்னேவல், மேடு.

திட்டுதல் - சயித்தல்.

திட்டை - உரல், கண், திடர், திண்ணை, மேடு.

திட்பம்-காலநுட்பம், சொல்வலி, பொருள்வலி, திண்மை, நிசம்.

திணி - திணியென்னேவல், திண்மை.

திணிகம் - போர்.

திணிதல் - திண்மையாயிருதல்.

திணித்தல் - அடைத்தல், துறுத்தல்,

திணுக்கம் - திணுங்கல், நெருக்கம்.

திணுங்கல் - நெருங்கல்.

திணை - அஃறிணை, அகத்திணை, இடம், உயர்திணை, ஐந்து நிலம்—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்; ஒழுக்கம், குடி, குலம், புறத்திணை, பூமி, பெருந்திணை.

திணைப்பெயர் - குறிஞ்சி முதலிய நிலங் காரணமாய் வரும் பெயர்.

திணைமயக்கம் - ஐந்திணையுமாறி வருவது, பலநிலத்தோரைக் கலந்துரைத்தல்.

திணைவழு - உயர்திணை யெழுவாய்க் கிழிதிணை விகுதியும், இழிதிணை யெழுவாய்க் குயர்திணை விகுதியுமேற்றிப் பேசுவது.

திண் - பலம், வலி.

திண்கல் - சுக்கான்கல்.

திண்டகம் - கிலுகிலுப்பை.

திண்டி - ஓரசுரன், தம்பட்டம், பசலைக்கொடி, யானை.

திண்டிமம் - தம்பட்டம்.

திண்டிறல் - அதிவீரம்.

திண்டு - வளைந்த மெத்தை.

திண்டோன் - திண்புயம்.

திண்ணகம் - செம்மறிக்கடா, தட்டார்கருவியி லொன்று, துருவாட்டேறு.

திண்ணம் - மெய், வலி.

திண்ணன் - பலவான், வேடன்.

திண்ணியன் - வலியுடையோன்.

திண்ணெனல் - தந்திரநாதம்.

திண்ணை - வேதிகை.

திண்மை - உறுதி, எண்வகை யூறிலொன்று, திண்ணம்,

திதத்தாபகம் } தாக்கிமீளல்,
திதித்தாபகம் } நிலைப்படுத்தல்.

திதம் - அக்கினி, உறுதி, நிலை.

திதலை } தேமல்.
திதனி }

திதளம் - மாமரம்.

திதி-இருப்பு, காசியபபிரமனின் மனைவி, காத்தல், சங்கை, சந்திரநாள், திதியென்னேவல், நிலை, நிலைபெறுதல், பாக்கியம்,

திதித்தல் - நிலைபெறுதல்.

திதிசுதர் } அசுரர்.
திதிமைந்தர் }

திதிட்சை - பொறுமை.

திதீக்கை } தமேதகநிட்டை.
திதீட்சை }

தித்தகம் - மலைவேம்பு.

தித்தம் - அக்கினி, எண்ணெய், கசப்பு, நிலவேம்பு, மலைவேம்பு, வாசனை.

தித்தா - தாளக்குறிப்பு, பீதரோகிணி, வட்டத்திருப்பி.

தித்தி - ஒருதுகுழல், ஓர் பனை, குரவம், சதி, தித்திப்பு, தித்தியென்னேவல், தின்னற்குரியன, பேரீந்து, வேள்விக்குண்டம்.

தித்திரம் - அரத்தை.

தித்திரி - ஓர் கவுதாரி, ஓர்குடி, கிச்சிலிக்குருவி.

தித்திரு
தித்திருச்சி } நாணல்.

தித்திடம்
திந்திருணி } புளியமரம்.

திப்பி - கோது.

திப்பியம் - ஓமம், விளக்கம்.

திப்பிலி - அலைவு, திப்பிலி.

திமி - குத்தல், கடல், நூறு யோசனை நீளமுள்ள மீன்.

திமிங்கிலகிலம் - திமிங்கிலத்தை விழுங்குமீன்.

திமிங்கிலம் - யானையைவிழுங்கு மீன்.

திமிசம்
திமிசு } வேங்கைமரம.

திமிதிமி - திமிங்கிலம்.

திமிதிமியெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு, காளக்குறிப்பு, விரைவுக் குறிப்பு.

திமிரம் - இருள், குருடு, நரகம், பாரம், விறைப்பு.

திமிராரி - சூரியன்.

திமிர்தம் - ஒலி.

திமிர்தல் - பூசுதல், வளர்தல்.

திமிர்ப்பூச்சி - வயிற்றுப்புழு.

திமிலம் - பேரொலி, யானைமீன்.

திமிலர் - நெய்தனிலமாக்கள்.

திமிலிடுதல்-ஒலித்தல்,நெருக்கல்.

திமிலை - பம்பைமேளம்.

திமில்-எருத்துத்திமில், தோணி, மரக்கலம், வேங்கைமரம்.

திமிறல்-துலுக்குதல், தேய்த்தல், பறித்தல், மீறுதல், வளர்தல்.

திமைத்தல் - இளைப்புதல்.

தியக்கம், தியக்கு - அசைவு, கலக்கம், சோர்வு.

தியங்கல் - சோரல்.

தியசம் - மரமஞ்சள்.

தியந்தி - திராய்.

தியாகம் - உதாரம், கைவிடல்; கொடை, துறத்தல்.

தியாகராயர், தியாகர் - சிவன்.

தியாகி - கொடையாளன்.

தியாச்சியம் - விலக்கு,ஒவ்வொரு நட்சத்திரத்திலுஞ் சுபகாரியங் களுக்கு விலக்கப்பட்டநேரம்.

தியாமம் - நான்முகப்புள்.

தியானசமாதி - யோகநிலையி ளொன்று.

தியானம் - அட்டயோகத்தொன்று, அனுட்டானம், சிந்திப்பு, நினைவு.

தியோதம் - பிரகாசம், வெயில்.

திரகமூலகம் - முடக்கொத்தான்.

திரகத்தாரு - நிலப்பனை.

திரக்கம் - கொன்றை.

திரக்காரம் - நிந்தை.

திரங்கல் - திரைதல், மிளகு.

திரச்சீனமுகம் - நாணத்தால் தலையாட்டுமுகம்.

திரடம் - வெண்ணொச்சி.

திரட்சி - உண்டை, கூட்டம், திரண்டதன்மை, முத்து.

திரட்டல் - கூட்டல்.

திரட்டு - இருது, சேர்ப்பு, கூட்டம், திரட்டென்னேவல், திரளை, முழுமை.

திரட்டுக்கோவை - ஓர் கோவை.

திரட்டுதல்-உருட்டுதல், சேர்த்தல்.

திரணபதி - வாழை.

திரணம் - துரும்பு, புல்.

திரணி - ஓர் செடி.

திரணை - கம்பி, திரண்டது, திரளை.

திரண்டகொடிச்சி - புற்றும்பழம்.

திரந்திகம் - திப்பிலிமூலம்.

திரமம் - சாதிலிங்கம்.

திரமாதம் - ஆவணி, கார்த்திகை, மாசி, வைகாசி.

திரமிடம் - தமிழ்.

திரம் - உறுதி, திராசி, நிலை, பெலன்.

திரயோதசி- பதின்மூன்றாந்திதி.

திராசி - இடபம், கும்பம், சிங் கம், விருச்சிகம்.

திரலடி - ஏலம்.

திரவணம் - பாய்தல், போதல், வெப்பம்.

திரவம் - சாரம், நீர்முதலியவற்றி னெகிழ்ச்சி, பொசிதல்.

திரவாதி - காட்டாமணக்கு.

திரவிடம் - திரமிடம்.

திரவியம் - ஓர்மருந்து, நிதி, பாக் கியம், பித்தளை, பொருள், பொன், மூலபதம்.

திரளல் - திரட்சி.

திரள் - உண்டை, குழியம், கூட் டம், திரளென்னேவல், திரளை, படை.

திராசம் - அச்சம்.

திராட்சம் - கொடிமுந்திரிகை.

திராமரம் - பவளமல்லிகை.

திராமிடம் - திரமிடம்.

திராய் - ஓர் பூண்டு.

திராவகம் - செய்நீர்.

திராவகநீறு - வெடியுப்புச் சுண் ணம்.

திராவிடம் - ஓர்தேசம், தமிழ்.

திரி - திரிசீலை, திரியென்னேவல், மூன்று, விளக்குத்திரி.

திரிகளம் - யானை நெருஞ்சில்.

திரிகடி - இந்திரன் சங்கு.

திரிகடுகம்
திரிகடுகு } ஓர் நூல், மூன்று காரம், அஃது — சுக்கு, திப்பிலி, மிளகு, முச்சொல்லலங்காரம்.

திரிகண்டகம் - நெருஞ்சில்.

திரிகத்தம் - ஓர் தேயம்.

திரிகரணம் - முப்பொறி, மனம், மெய், வாக்கு.

திரிகாலம் - முக்காலம், காலை, நண்பகல், மாலை.

திரிகாலோசிதம் - தருப்பை.

திருகுணம் - முக்குணம், ஸத்துவம், ரஜஸ், தமஸ்.

திரிகூடம் - ஓர்மலை.

திரிகை - இடக்கைமேளம், எந்திரம், குலாலசக்கிரம், திரிதல்.

திரிகோணம் - முக்கோணம்.

திரிகோணமிதி - முக்கோணசாத்திரம்.

திரிசங்கு - ஓரரசன்.

திரிசங்குமண்டலம் - ஓர் நட்சத்திரமண்டலம்.

திரிசாரம் - எவச்சாரம், சத்திசாரம், நவச்சாரம், மூவகையுப்பு.

திரிசூலம் - முத்தலைவேல்.

திரிசொல் - ஒருபொருள்குறித்த பல சொல்லாகியும், பலபொருள் குறித்த ஒரு சொல்லாகியும் அரிதாகக் கற்றோரறிகின்ற பொருளனவாய் வருவது, ஒருபொருட் பலபெயர், பலபொருளொருபெயர், அரும்பதம், உவமைச்சொல், விகாரப்பட்டசொல்.

திரிச்சிரமம் - முக்காலானுட்டானம்.

திரிதண்டசந்நியாசி - வைஷ்ணவ சந்நியாசி.

திரிதண்டி - திரிதண்டசந்நியாசி, கரணமூன்று மடக்கினோன்.

திரிதரல் - சுழலல், திரிதல், மீளல்.

திரிதராட்டிரன்மைந்தன் - துரியோதனன்.

திரிதல் - உலாவல், கெடுதல், சுழலல், கடத்தல்.

திரிதியம் - செவ்வள்ளி.

திரிதியை - மூன்றும்திதி.

திரிதேகம் - மூவகையுடல்.

திரிநேத்திரன் - சிவன், முக்கண்ணன்.

திரிபங்கி - மிறைக்கவியி லொன்று.

திரிபதாகை - பரதவுறுப்புக்களி லொன்று.

திரிபலம்
திரிபலை } கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய்.

திரிபாகி - ஓர் மிறைக்கவி.

திரிபு - வினையெச்சம், வேறுபாடு.

திரிபுக்காட்சி-ஒன்றை வேறொன்றாய்க் காணுதல்.

திரிபுசம் - முக்கோணவடிவம்.

திரிபுடி - முக்குணம், ஞாதுரு, ஞானம், ஞேயம்.

திரிபுடை - ஓர் தாளம்.

திரிபுரசுந்தரி - பார்வதி.

திரிபுரதகனன் - சிவன்.

திரிபுரமல்லிகை - ஓர் மல்லிகை.

திரிபுரமெரித்தான் - சிவன், நொச்சி, மாவிலங்கு.

திரிபுரம் - முப்புரம்.

திரிபுராந்தகன் - சிவன்.

திரிபுரி - சாறடை.

திரிபுவனம் - மூவுலகு.

திரிப்பு - மாற்றுதல், முறுக்கு.

திருமூர்த்தி - மும்மூர்த்தி.

திருமூலம் - சிறுதேக்கு.

திரியம்பகன் - அரன், அருகன்

திரியாமை - இரவு, நீலக்கல், யமுனையாறு.

திரிலிங்கம் - கரலக்ஷணத்தினொன்று, முப்பால்.

திரிலோகம் - மூவுலகம், பூமி, அந்தரம், சுவர்க்கம்.

திரிலோகாதிபதி - இந்திரன்.

திரிலோகி - விஷ்ணு.

திரிவர்க்கம் - அகவியல் மூன்று; அஃது — அசுத்தம், அறியாமை, சுத்தம்; அரசியல் மூன்று; அஃது—ஆதாயம், நட்டம், மத்திமம்; இயல்பாய் விரும்புவது; அஃது - கடமை, செல்வம், பெண்போகம்.

திரிவேணி, திரிவேணிசங்கமம். - கங்கை, யமுனை, ஸரஸ்வதீ இம்மூன்றும் கூடுமிடம்.

திரு - அழகு, இலக்குமி, செல்வம், தெய்விகம், மங்கலமொழியினொன்று, மேன்மை, யானைப்பாகன் தட்டுமோசை.

திருகல் - முறுக்கல், வளைத்தல்.

திருகு - கள்ளம், திருகென்னேவல், முறுக்கு, வஞ்சனை.

திருகுதாழை - ஓர் தாழை.

திருக்கடைக்காப்பு - ஓர் பதிகம், கோவிற்கதவு சாத்தல், இவ்வியப்பிரபந்தத்தின் முடிவு.

திருக்கடையூர் - ஓர் சிவத்தலம்.

திருக்கழுக்குன்றம் - ஓர் சிவத்தலம்.

திருக்காளத்தி - ஓர் சிவத்தலம்.

திருக்கு - கண், குற்றம், முறுக்கு, வஞ்சனை.

திருக்கூட்டம் - சிவனடியார்கூட்டம்.

திருக்கை - ஓர்மீன்.

திருக்கோலம் - திருவேடம், துருவமண்டலம், தேவலோகம்.

திருசியம் - கண்ணுக்குத் தோன்றுவது.

திருச்செந்தூர் } ஓர் சுப்பிரமணியத்தலம்.
திருச்சீரலைவாய்

திருடம் - இரும்பு, தத்துவம், பெலன்.

திருடல் - களவு.

திருடன் - கள்ளன்.

திருட்டம் - இட்டம், (பார்க்கப்பட்டது) தெளிவு.

திருட்டி - அறிவு, கண், பார்வை, விஷம்.

திருட்டு - அணுப்பு, களவு.

திருதம் - தரித்தல்.

திருதி - உறுதி, ஓர்யோகம், துணை, சந்தோஷம், திருப்தி.

திருத்தம் - ஒப்புரவு, ஒழுங்கு, திருந்தல்.

திருத்தம் - திருந்தல்.

திருத்தல் - திருந்தச்செய்தல்.

திருநாமச்செடி - ஓர் பூண்டு.

திருநாமத்துத்தி - ஓர் துத்தி.

திருநாளைப்போவார் - சிவனடியார் அறுபத்து மூவரிலொருவர்.

திருநாள் - உற்சவநாள்.

திருநீலகண்டன் - சிவனடியாரிலொருவன்.

திருநீறு - விபூதி.

திருநீற்றுப்பச்சை } உருத்திரச்
திருநீற்றுப்பத்திரி } சடைப்பூடு.

திருந்தகைமை - மேன்மை.

திருந்தலர் } பகைவர்.
திருந்தார் }

திருந்துதல் - செய்துமுடித்தல், திருத்தமாதல், திருந்தல், தேறுதல்.

திருப்பணி - கோவில்வேலை, தெய்விகத்தொண்டு.

திருப்பதி - வடமலை.

திருப்பரங்குன்று - ஓர் சுப்பிரமணியஸ்தலம்.

திருப்புதல் - திரும்பச் செய்தல், மாறவைத்தல், மீட்குதல்.

திருப்பூட்டுதல் - மங்கலியந் தரித்தல்.

திருமகண்மைந்தன் - மன்மதன்.

திருமகள் - இலக்குமி.

திருமயிலை - ஓர் ஸ்தலம்.

திருமரம் - அரசமரம்.

திருமலர் - தாமரை.

திருமலை - கயிலாயமலை, திருப்பதி.

திருமறுமார்பன் - அருகன்.

திருமாலுந்தி - தாமரை.

திருமால் - விஷ்ணு.

திருமால்புதல்வன் - மன்மதன்.

திருமாநகரம் - வைகுந்தம்.

திருமுகம் - கடவுள் ஸந்நிதானம், சிரீமுகம், நிருபம், பெரியோர் சமுகம்.

திருமுருகாற்றுப்படை-ஓர் இயற் பாராட்டுச்செய்யுள்.

திருமுறை - தமிழ் வேதவகுப்பு.

திருமுற்றம் - குதிரைவையாளி வீதி, கோயிற்சந்நிதானம்.

திருமேனி - குப்பைமேனி, திவ்விய தேகம்.

திரும்பல் - திரும்புதல், மீளல்.

திருவடி - திவ்வியபாதம்.

திருவட்டி - கள்ளி.

திருவணை - ஸேது.

திருவண்ணமலை - அருணசலம்.

திருவருட்பயன் - ஓர் நூல்.

திருவலகு - கோவில் முதலிய விளக்கும் துடைப்பம்.

திருவள்ளுவர் - ஓர்நூல், குறளாசிரியர்.

திருவாசகம் - திருவாக்கு, மாணிக்கவாசகர் செய்தருளிய திருமுறை.

திருவாதிரை - ஆதிரைநாள்.

திருவாய்மொழி-ஆழ்வார்பாடல். தெய்வவாக்கு, பெரியோரது சொல்.

திருவாவினன்குடி - பழனி.

திருவாளன் - செல்வன்.

திருவானைக்கா - ஓர் ஸ்தலம்.

திருவாலி-கள்வன், கைம்பெண், வறியன்.

திருவிளையாடல் - ஓர் புராணம், தெய்வவிளையாட்டு.

திருவுந்தியார் - திருவாசகத்தோருறுப்பு, திருவாசகம்.

திருவுரு - விக்கிரகம்.

திருவுளம் - திவ்யசித்தம்.

திருவுறுப்பு - நுதல்மேலணி.

திருவேங்கடம் - திருப்பதி.

திருவேரகம் - ஸ்வாமிமலை.

திருவொற்றியூர் - ஓர் சிவஸ்தலம்.

திருவோணம் - ஓணம்.

திருவோலக்கம்-மகாதிவ்ய சபை.

திரேக்காணம் - இராசியை மூன்றாய்ப் பகிருதல்.

திரேதம் - ஓர்யுகம், திரேதாயுகம்.

திரேதாக்கினி - முத்தீ.

திரை - அலை, இடுதிரை, கடல், திரைச்சீலை, திரைதல், திரையென்னேவல், புனற்றிரை, யாறு.

திரைத்தல் - திரைக்குதல்.

திரையல் - சுருங்கல், வெற்றிலை.

திரையன் - தொண்டைமான், நெய்தனிலத்தலைவன்.

திரைராசிகம்- முத்தொகைவினா.

திரோதம் } அறிவை மயக்கு
திரோதயம் } தல்.

திரோதானம் - அதரிசனம், மறைப்பு.

திரோபாவம் - ஐந்து தொழில் களிலொன்று.

திலகம் - கலித்துறை, சிந்தூரம், சுட்டி, பொட்டு, மஞ்சாடி மரம், மேன்மை.

திலட்சாரம் - கருந்திலாலவணம்.

திலதம் - சுட்டி, நெற்றித்திலதம், பொட்டு.

திலம் - எள், மஞ்சாடி மரம்.

திலவம் - விளாம்பட்டை.

திலீபன் - ஓரரசன்.

திலோதம் - எள்ளுநீர்.

தில் - அசைச்சொல், காலம், ஒழியிசை, விழைவு.

தில்லம் - காடு.

தில்லானா - ஓர்சந்தக்குறிப்பு, தாளக்குறிப்பு.

தில்லை - ஓர் மரம், சிதம்பரம்.

தில்லையம்பலம் - சிற்றம்பலம்.

தில்லைவனம் - சிதம்பரம்.

திவசம் - நாள்.

திவண்டல் - துவளல்.

திவம்-ஆகாயம், காடு, தோற்றம், நாள், பகல், மோக்கம், விளக்கம்.

திவரம் - நாடு.

திவலை - சிதறுந்துளி, மழை, மழைத்துளி.

திவவு - படிக்கட்டு, வீணைவலிக்கட்டு.

திவளல் - துவளல், மெலிதல்.

திவறல் - சாதல்.

திவா - பகல்.

திவாகரம் - ஓர் நிகண்டு, காலம், சூரியகாந்தப்பூ.

திவாகரன்-ஸூரியன், திவாகர நிகண்டு செய்தவன்.

திவாகீர்த்தி - ஆந்தை, சண்டாளன், நாவிதன்.

திவாமானம் - பகல்.

திவார்த்தம் - பகலிற்பாதி, மத்தியானம்.

திவேச்சுரன் - பன்னிரண்டு ஆதித்யர்களில் ஒருவன்.

திவோதாசன் - காசியரசன்.

திவ்வியம் - ஆணை, இனிமையானது, ஓர்வகைச் சந்தனம், கிராம்பு, தெய்விகமானது, மேன்மையானது.

திளைத்தல் - அழுந்துதல், அநுபவித்தல், நிறைதல், நெருங்கல்' பெருகுதல்.

திறத்தல் - திறக்குதல், வலுத்தல், வழிவெட்டிவிடுதல், விரித்தல், விளக்கல்.

திறம்-உசிதம், காரணம், குணம், குறைநரம்புள்ளவீணை, கூறுபாடு, தத்துவம், தன்மை, திறமை, பக்கம், பாக்கியம், மேன்மை, வலி.

திறம்பல் - மாறுபடல்.

திறலோன் - திண்ணியன்.

திறல் - தைரியம், பகை, போர், வலி.

திறவு - திறத்தல், வழி.

திறள் - கடன், வரலாறு.

திறனில்யாழ் - செய்தல் யாழ்த் திறம்.

திறன் - காரணம், குணம், கூறுபாடு.

திறை - அரசிறை.

திறுதிறுப்பு - அச்சக்குறிப்பு.

திறைகொள்ளுதல் - திறைவாருதல், வெல்லுதல்.

திறையளத்தல்-இறைகொடுத்தல்.

தினகரன் - சூரியன், திவாகரன்.

தினகவி - அரசர்க்குப் புகழ்ச்சியாயந்திசந்தி சொல்லுங் கவி, ஓர் புலவன்.

தினமணி - சூரியன்.

தினம் - நாள், பகல்.

தினவிருத்தி - நாடோறும், நாள் வேலை, நித்தம்.

தினவு - சொறி.

திஞந்தம் - மாலைப்பொழுது.

தினை - ஓர் பயிர், ஓர் தானியம், சாமை, சிறுமை.

தினைப்புனம் - தினைவிளையுபுலம்.

தின்றல் - புசித்தல், மெல்லுதல்.

தீ

தீ - அறிவு, இனிமை, ஓரெழுத்து தித்திப்பு, தீமை, தீயென்னேவல், நரகம், நெருப்பு, பஞ்ச பூதத்தொன்று.

தீகன் - சந்திரன்.

தீக்கஞ்சி - ஆரதிக்கருப்பூரம்.

தீக்கணம் - அட்டகணத்தினொன்று, நேரசை நடுவும் நிரையசையிருபாலும் நிற்பன.

தீக்கதிக்கும்பச்சை-நாகப்பச்சை.

தீக்கதிர் - உலையாணிக்கோல், சூரியன்.

தீக்கருமம் - ஈமக்கிரியை, துற்கிரியை.

தீக்கல் - தீத்தட்டிக்கல்.

தீக்குணர் - கீழ்மக்கள்.

தீக்குருவி - தழல்விழுங்கி.

தீக்குவெறுங்குகை-சவர்க்காரம்.

தீக்கூர்மை-இந்துப்பு,நிலாசாரம்.

தீக்கை
தீட்சை } விரதநியமம்.

தீக்கையோன் - அரன், ஆசான், தீட்சை பெற்றவன்.

தீக்கோள் - தூர்க்கிரகம்.

தீங்கிரை - தீயோர்.

தீங்கு - இனிமை,குற்றம், தீமை, கேடு.

தீச்சலம் - கடல்நுரை.

தீச்சொல் - சாபம், பழிச்சொல்.

தீட்சணம் - ஆயுதம், இரும்பு, உக்கிரம், உப்பு, உறைப்பு, கூர்மை, கொள்ளைநோய், கோபம், சீக்கிரம், நஞ்சு, போர், மரணம், வெப்பம்.

தீட்சதன் - சீடன், தீட்சைபெற்றவன்.

தீட்டல் - எழுதல், கட்டல், சித்திரமெழுதல்.

தீட்டுக்கோல் - எழுதுகோல்.

தீட்டு - அழுக்கு. ஆசௌசம், எழுதுதல், சூதகம், தீட்டென்னேவல், மகளிர் சூதகம்.

தீட்டுதல் - அழுத்துதல், எழுதுதல், கட்டுதல், கூராக்கல், சாதித்தல், சித்தரித்தல், மினுக்குதல்.

தீட்பு - இழிவு, கீழ்மை.
தீண்டல் - தொடல்.
தீண்டியம் - பவழக்குறிஞ்சி.
தீதல் - கருகுதல்.
தீது - குற்றம், தீமை.
தீதை - அறிவு, கன்னி.
தீத்தம் - சிவாகமத்தொன்று, பிரகாசம், பெருங்காயம், பொன்.
தீத்தாங்கி- தீ மறைக்கும்பலகை.
தீத்தி - அழகு, சரகதி, பிரகாசம், வெண்கலம்.
தீத்திரள் - ஊழித்தீ, சுவாலைக் கூட்டம்.
தீத்தீண்டல் - ஓர் சடங்கு.
தீபகம் - ஓரலங்காரம், மஞ்சள், விளக்கு.
தீபகாந்தி - வைரக்கல்.
தீபக்கொடிச்சி - ஆரதிகருப்பூரம்
தீபமத்திகை - விளக்குத்தண்டு.
தீபம் - சோதிநாள், விளக்கு, தீவகம், தீவு.
தீபவதி - யாறு.
தீபவராடி - வராடித்திறத்தி னொன்று.
தீபனம் - ஆகாரம், பசி, பிரகாசம், மஞ்சள்.
தீபாவளி - தீபாவளிப்பண்டிகை, விளக்குகளின் வரிசை.
தீபிகை - விளக்கு.

தீபம் - நெருப்பு.

தீப்படுதல் - அழிதல், எரிச்சலடைதல், எரிந்துபோதல்.

தீமான் - பண்டிதன், புத்திமான், வியாழன்.

தீமுகம் - உலைமுகம்.

தீமுறுகல் - ஓர் பாஷாணம்

தீம் - இனிமை, தித்திப்பு.

தீம்பு - கீழ்மை, பொல்லாங்கு.

தீமை - பொல்லாங்கு.

தீம்பர் - கீழ்மக்கள்.

தீம்புகை - வாசனைப்புகை.

தீயகம் - நரகம்.

தீயம் - தித்திப்பு.

தீயர் } கீழ்மக்கள், வேடர்,
தீயோர் } மூடர்.

தீயனி - காய்.

தீயாக்கிரை - பொன்னாங்காணி.

தீயெச்சம் - அவியாநெருப்பு.

தீரம்-கரை, சிறுவரம்பு, தைரியம், வலி.

தீர்க்கசந்தி - வடமொழிச்சந்தி.

தீர்க்கம் - அந்தரம், ஆறுமேழாமிராசிகள், திட்டம், தெளிவு, நிச்சயம், நீளம், நெட்டுயிரடையாளம், நெட்டுயிரெழுத்து, பூரணம்.

தீர்தல் - எழுதல், செல்லுதல், நடத்தல், நீளம், முடிதல், விடுதல்.

தீர்த்தகரர்
தீர்த்தங்கரர் } சமணமுனிவர்.

தீர்த்தம் - திருவிழா, தீநீர்.

தீர்த்தர் - கடவுளர், பரிசுத்தர்.

தீர்த்தல் - நீங்கல், முடித்தல், விடுதல்.

தீர்த்தன் - அருகன், உபாத்தியாயன், குரு, சிவன்.

தீர்த்திகை - யாறு.

தீர்ப்பு - தீர்த்தல். நியமம், நிவிருத்தி, முடிபு.

தீர்வை - இறை, கீரி, சுங்கம்.

தீவகம் - விளக்கு, ஓர் அலங்காரம், அது—முதனிலைத்தீவகம், இடை நிலைத்தீவகம், கடை நிலைத்தீவகம் என மூவகையாகும்.

தீவலஞ்செய்தல் - அக்கினியைப்பிரதட்சிணஞ் செய்தல்.

தீவி - புலி.

தீவிகை - தீபிகை.

தீவிரம் - சடுதி, சூரியகிரணம், நரகம், பெருங்கோபம், மூர்க்கம்.

தீவிரங்கும்வயிரம் - மீனம்பர்.

தீவினி - காய்.

தீவினை - பாவம்.

தீவு - இடைக்குறை, சுவை, தீவாந்தரம், ஆரதேசம்.

தீவேட்டல் - யாகஞ் செய்தல், மணமுடித்தல்.

தீவேள்வி - கலியாணம்.

தீழ்ப்பு - கீழ்மை, தீட்டு.

தீற்றுதல் - ஊட்டுதல், சுத்தம் பண்ணுதல், சுவர் முதலிய மெழுகுதல்.

தீனம்-இட்டம், எளிமை, வறுமை.

தீனர் - இரப்போர், கீம்பர்,

தீனன் - தரித்திரர்.

து

து - அனுபவம், ஒரெழுத்து, சோமானம், இருதிணை முப்பாலொருமைத்தன்மை விகுதி, துவ்வென்னேவல், பிரிவு.

துகளிதம் - தூள்.

துகன் - குற்றம், பராகம், புழுதி.

துகிரிகை - சாந்து, சித்திரம்.

துகிர் - பவளம்.

துகிலிகை - எழுதுகோல், சித்திரம்.

துகில் - சீலை, விருதுக்கொடி.

துகினம் - சந்திரகிரணம், பனி.

துகைத்தல் - இடித்தல், உழக்கல், நலங்கல், வருத்தல், வருந்துதல்.

துக்கம் - கிலேசம், குற்றம், துன்பம், நரகம், சோ.

துக்கிதன் - துன்புறவோன்.

துங்கபத்திரை - ஓர் யாறு.

துங்கம் - உயர்ச்சி, நுனி, பரிசுத்தம், பெருமை, மங்தோச்சம், மலை வெற்றி.

துங்கன் - உயர்ந்தோன்.

துசகம் - மாதளை.

துசம் - இருபிறப்புள்ளன, உமி, குங்கிலியம், கொடி, தவிடு, துவசம், பல்.

துச்சம் - அற்பம், கீழ்மை, கொம்மட்டி, பதர், பொய், வெறுமை.

துச்சுவனன் - இந்திரன்.

துச்சன் - அற்பன், கீழ்மகன்.

துச்சாதனன் } துரியோதனன்
துச்சாசனன் } தம்பி.

துச்சி - அனுபவம், பரீட்சை. புசிப்பு, பூநீறு.

துச்சில் - ஒதுக்கிடம், சரீரம், கூடு, தங்குமிடம்.

துஞ்சல் - உறங்கல், சாதல், சோம்பல், நிலைபெறுதல், வாடுதல்.

துஞ்சுதல்-உறங்கல், சாதல், துஞ்சல், நித்திரைசெய்தல்.

துடக்கறுப்பான் - கொத்தான் கொடி, முடக்கொற்றான்.

துடக்கு - கட்டு, சிக்கு, மகளிர் சூதகம்.

துடங்கு - துடங்கென்னேவல், துலங்குமரம்.

துடர்ச்சி - தொடர்ச்சி, வரிசை.

துடவை - உழவுகோல்லே, பூந் தோட்டம்.

துடி - அகில், இசங்கு, உடுக்கை, உதடு, ஏலம், காலநுட்பம், குமரனுடல், குறிஞ்சி நிலப்பறை, கூதாளிச்செடி, ஸப்தகன்னிகைகளாடல், துடியென்னேவல், பாலைநிலப்பறை, மேன்மை, வலி.

துடித்தல் - அசைதல், அதிகப்படுதல், உருக்கங் கொள்ளல், குதித்தல், துள்ளுதல், பதறல், மின்னல்.

துடியடி - யானைக்கன்று.

துடியாஞ்சி - இசங்கு.

துடுக்கு - குறும்பு, தீக்குணம், விரைவு.

துடுப்பு - அகப்பை, நுடுப்பு.

துடுமெனல் - ஒலிக்குறிப்பு.

துடுவை - நெய்த்துடுப்பு.

துடை - சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம், துடையென்னேவல், தொடை.

துடைத்தல் - அழித்தல், சீய்த்தல், தள்ளுதல், துடைக்குதல், நாசம்பண்ணுதல், விட்டுவிடுதல், வீழ்த்தல்.

துடைப்பம் - வாருகோல்.

துடைவாசி - விஷமூங்கில்.

துட்கல் } அச்சக்குறிப்பு.
துட்கெனல் }

துட்டர் - தீயர்.

துட்டவி - ஓர் செடி.

துட்டன் - தீயன், தேன்.

துட்டு - தீமை,பணத்தின்விகிதம்.

துட்டுவம் - அற்பம்.

துட்டை - வசவி.

துணங்கறல் - இருள், திருவிழா.

துணங்கை - இருகையு முடக்கிப் புடைப்பு டை யொற்றியாடல், கூத்து, திருவிழா.

துணர்-பூ,பூங்கொத்து, பூந்தாது.

துணர்த்தல் - முகைத்தல்.

துணவு - சீக்கிரம், நுணு.

துணி - ஒளி, சோதிநாள், துணி யென்னேவல்,துணிவு,துண்டு, தூக்கங்கள்,தெளிவு, தேரிடக் கியம்.

துணிதல் - தீர்மானித்தல், தெளி தல், நிச்சயித்தல்.

துணித்தல்-அறுத்தல், வெட்டல்.

துணிநர் - அறிதிற்கொள்ளுவார்.

துணிபு - தீர்ப்பு, தெளிவு.

துணிபொருள் - நிசப்பொருள்.

துணிவு-திடன், துண்டு, தெளிவு, தீர்ப்பு, நம்பிக்கை, நோக்கம், வெட்டு.

துணிவுரை - சந்தேகப்பட நின்ற விடத்து இதற்கு இதுவே பொருளெனத் துணிந்தெழு தும் உரை, விருத்தியுரை.

துணுக்கம்-அச்சம், உள்ளோசை.

துணுக்கெனல் - அச்சக்குறிப்பு.

துணை-அளவு,ஆயுதமுனை, இணை, உதவி, ஒப்பு, சகாயம், சல்லியம், சோடு.

துணைக்கருவி - உபகருவி.

துணைக்காரணம் - உபகரணம்.

துணைமை - உதவி.

துணைவர் - மந்திரிகள்.

துணைவன் - உதவிக்காரன், கடவுள், சகோதரன், தலைவன், தோழன், மந்திரி.

துணைவி - சகோதரி, தோழி, மனைவி.

துணைவு - விரைவு.

துண்டம் - கைவாய்க்கால், சாரைப்பாம்பு, துணி, துண்டித்தல், முகம், மூக்கு, பறவை மூக்கு, யானைத்துதிக்கை.

துண்டி-கழி, கொப்பூழ், துண்டு, துண்டு நிலம்.

துண்டித்தல் - அறுத்தல், தறித்தல், வெட்டல்.

துண்டிவிநாயகன்-காசிக்கணபதி.

துண்டீரன் - ஓரரசன்.

துண்டீரபுரம் - காஞ்சீபுரம்.

துண்ணெனல் - அச்சக் குறிப்பு, விரைவுக்குறிப்பு.

துதமுகம் - பரதவுறுப்புக்களு ளொன்று, அஃது—வேண்டாமைக்கு வலமிடந் தலையாட்டல்.

துதம் - அசைவு.

துதி - துதித்தல், துதியென்னேவல், தோத்திரம்.

துதித்தல் - வழுத்தல்.

துதியம் - சவரிலோத்திரம்.

துதியை - இரண்டாந்திதி.

துதை - நெருக்கம்.

துதைதல் - நெருங்கல், மிகுதல்.

துதைத்தல் - நெருக்கல்.

துத்தநா - முயற்புல்.

துத்தபாஷாணம்-ஓர்பாஷாணம்.

துத்தம் - ஏழிசையினொன்று, கண்மருந்து, சமனிசை, நாண் முகப்புல், நாய், நாவினுற் பிறக்குமிசை,பால், யாழினோர் நரம்பு, வயிறு.

துத்தல்-அநுபவித்தல்,புசித்தல்.

துத்தன் - கபடன், தப்பிலி.

துத்தி - உண்டற்குரியன, ஓர் செடி, தேமல், பாம்பின் படப் பொறி.

துத்து - கம்பளி, தப்பிதம் பொய், வஞ்சனை.

துத்தூரம் - ஊமத்தை.

துநீ - நதி, பறவைமுட்டை.

துந்தகடம் - கோதுமைநொய்.

துந்துபி - ஓர்வருடம், பேரிகை.

துந்துமாரி - முதலெழு வள்ளலி லொருவர்.

துந்துமி - ஓரசுரன், ஓர் வருஷம், பறையின் பொது, பேரிகை.

துப்பகம் - நெய்.

துப்பரவு - முழுமை, மேன்மை.

துப்பல் - உமிழ்நீர், துப்புதல்.

துப்பிரசம் - கருஞ்சொண்டி.

துப்பு - அரக்கு, அறிவு, அநுபவம், ஆயுதப்பொது, உணவு, கறை,குற்றம், சகாயம்,சாமர்த்தியம், சிவப்பு, சுத்தம், சோதித்தல், துணை, துணைக்காரணம், துப்பென்னேவல்,நெய், பகை, பவளம், பானம், பொலிவு, மிகுதி, மேன்மை, வலி.

துப்புரவாக்கல் - சுத்தஞ்செய்தல்.

துப்புரவு - அலங்காரம், ஐம்பொறிநுகர்தல், ஒப்புரவு, ஒழுங்கு, சுத்தம்.

துமானம் - ஆபரணப்பெட்டி.

துமி - சிறுதிவலை, துமியென்னேவல், மழைத்துளி.

துமிதம் - நீர்த்துளி.

துமிதல்-வெட்டுண்ணல், தொலைதல்.

துமித்தல் - அறுத்தல், வெட்டல்.

தும் - தன்மைப்பன்மை விகுதி.

தும்பகா - தும்பை, தும்பரம், தும்பராஷ்டகம், பேரரத்தை.

தும்பம் - வீணைக்காய்.

தும்பரம் - அத்தி,

தும்பராட்டகம் - பேராரத்தை.

தும்பன் - தீயன்.

தும்பி - கருவண்டு, கொத்தான், சுரை, யானைவண்டிஞெண், வண்டு.

தும்பிலி - ஓர் மரம்.

தும்பு-கயிறு, குறைவு,சிம்பு, நார்.

தும்புரு - ஓர் கந்தருவன். (நாரதன் நண்பன்) வீணை, வீணைப் பயிற்சியுள்ளவன்.

தும்பை - ஓர் செடி, கறவைப்பசு, கூட்டம், பொருதல், போர், வென்றோர்க்கு மாலை, வெற்றிலை.

தும்பைமாலை - ஓர் பிரபந்தம், போர்வென்றோர்க்கு மாலை.

தும்மிட்டி - ஓர் செடி.

தும்மர் - உயிர்ப்பு, தும்முதல், விடுதல், வியங்கோண்முற்று.

தும்மு - கொசுகு, தும்மல், தும் மென்னேவல்.

துயக்கல் - தளர்த்தல்.

துயக்கு - சோர்வு, தளர்ச்சி.

துயங்கல் - தளர்தல்.

துயரம் - கிலேசம், துன்பம்.

துயரி - யாழ்நரம்பு.

துயருறுவோன் - தரித்திரன்.

துயர் - கிலேசம், துன்பம்.

துயலல் - அசைதல்.

துயவு - அறிவின்றிரிபு.

துயிலல் - நித்திரை செய்தல்.

துயிலாதார்
துயிலார் } தேவர்.

துயிலிடம் - மக்கட்படுக்கை.

துயிலெடை - நித்திரையினின் றெழுப்புதல்.

துயிலெடைநிலை - ஓர்பிரபந்தம்.

துயில் - துயிலென்னேவல், நித்திரை.

துயில்கூரல் - நித்திரைசெய்தல்.

துயிறல் - நித்திரைசெய்தல்.

துயிற்றல்-நித்திரை செய்வித்தல்.

துயிலி - தொய்யில்.

துய் - அறிவின்றிரிபு, உணவு, துய்யென்னேவல், நூற்கும் பஞ்சிற்றொடர் நுனி.

துய்த்தல் - அனுபவித்தல், ஐம் பொறி நுகர்தல், நூனூற்றல், புசித்தல்.

துய்யனையிரவியாக்கி - பவளப்புற் றுப் பாஷாணம்.

துய்யவன் - சுத்தன், வெள்ளி மணல்.

துய்யாள் - அழகுள்ளவள், சுத்த முடையாள், ஸரஸ்வதி.

துரககதி - குதிரைப்பாய்ச்சல், குதிரைநடை.

துரகதமூலம் - நீர்முள்ளி.
துரகதம் } குதிரை,குதிரைப்பற்
துரகம் } பாஷாணம், மனம்.
துரங்கம் - குதிரை, மனம்.
துரத்தல்-அகற்றல், செலுத்தல்.
துரந்தரம் - பொதியெருது, வல்லபம்.
துரந்தரன் - பாரந்தாங்குவோன், வல்லோன்.
துரபிமானம் - வீண்பெருமை.
துரம் - சுமை, பாரம், பொறுப்பு.
துரவு - கிணறு, தூது.
துராசை - வீணாசை.
துராபம் - பெறுதற்கரியது.
துராரோகம் - பனை. பேரீந்து.
துராலேபம் - சிறுகாஞ்சொறி.
துரால் - செற்றை, துரும்பு, துன்பம்.
துரி - எழுதுகோல், நூற்பாத் திருத்தும் படைமயிர்.
துரிசி - குற்றம், துருசி, துன்பம்.
துரிசு - குற்றம். துன்பம்,
துரிஞ்சில்-உசிலமரம்,வௌவால்.
துரிதம் - ஓர் தாளம், கலக்கம், காலதசப்பிரமாணத்தொன்று, அஃது துடியிரண்டு கொண்டது, கேடு, சீக்கிரம், துன்பம், பாவம்.
துரியம் - சுத்தநிலை, சுமத்தல், நான்காமவத்தை, பரமாத்மா, பொதியெருது.

துரியர் - சுத்தர்.

துரியாதீதம்-ஆன்மாக்கள் மிகத் தூய்மையாய் நிற்கும் நிலை.

துரியோதனன் - ஸுயோதனன்.

துரீ - பாவாற்றி.

துருக்கம் - ஒடுக்க வழி, கஸ்தூரி, கஸ்தூரிமிருகம், கலக்கம், காடு, குங்குமமரம், சேரற்கரிய விடம், மலைமேற்கோட்டை, மான்.

துருக்கு - மிலேச்ச ஜாதி.

துருசு - களிப்பு, சீக்கிரம்.

துருத்தி - ஆட்டிடைக்குறை, ஊதுந்துருத்தி, நீர்த்துருத்தி.

துருபதன் - துரோபதையின் தந்தை.

துருபவருணி - காட்டாமணக்கு.

துருமம் - கற்பகம், மரப்பொது, மனக்கலக்கம்

துருமோற்பலம் - கோங்குமரம்.

துரும்பு - திரணம்.

துருவண்ணம் - வெள்ளி.

துருவமண்டலம் - துருவபதம்.

துருவம் - அசையாநிலை, உபாயம், எழு தாளத்தொன்று, கிரஹ புடம், துருவ நட்சத்திரம், நிச்சயம், நித்தியயோகத் தொன்று, நிலைபேறு, பூச்சக் கரத்தில் முனை, வட்டத்தின் முனை.

துருவல் - கடைதல், துளைத்தல், தேடல்.

துருவன் - உத்தானபாதன் மகன், அஷ்டவஸுக்களிலொருவன், துருவநக்ஷத்திரம்.

துருவாசன் - ஓர் ரிஷி.

துருவாடு - ஓராடு.

துருவாட்டி - சிற்றேலம்.

துருவாதி - காட்டாமணக்கு.

துருவை - செம்மறியாடு.

துருளக்கம் - குங்கிலியம்.

துரைச்சி - உலோககிட்டம்.

துரோகம் - கலக்கம், குற்றம், கொடும்பாவம், தப்பிதம்.

துரோணம் - எண்காற்புள், ஏழு மேகங்களிலொன்று, ஓர் பரம், காக்கை, தனுவிராசி, தும்பைச் செடி, பதக்கு, வில்.

துரோணாசாரியன் } ஓர் வில்லா
துரோணன் } சிரியன், அச்வத்தாமன் தந்தை, குருகுலத்தரசர்குரு.

துரோபதை - பஞ்ச கன்னிகைகளிலொருவள், அவள் பாண்டவர் மனைவி.

துர் - கெட்ட.

துர்க்கந்தம் - தீயவாசனை.

துர்க்கம் - மலைமேற் கோட்டை,

துர்க்கை - கொற்றவை, பூரநட்சத்திரம்.

துர்த்தூரம் - ஊமத்தை.

துர்ப்பரிகம் - சிறு காஞ்சொறி.

துர்லபம் - அருமை, கிடைக்கத் தகாதது.

துர்வர்ணம் - வெள்ளி.

துலக்கல் - விளக்கல்.

துலங்கல் - ஒளிசெய்தல்.

துலம் - கனம், கோரை, நிறை, நீர்முள்ளி.

துலவம் - பஞ்சு.

துலா-ஏற்றமரம், கைமரம், நிகர், நிறைகோல்.

துலாகோடி - ஓர்நிறை, காலணியினொன்று, பத்துக்கோடி.

துலாம்-ஏற்றவுறுப்பு, ஓர்இராசி, ஓர்நிறை.

துலாயனம் - துலாராசியில் சூரியன் வருங்காலம்.

துலிதம் - அசைவு, ஒப்பு, நிறுக்கப்பட்டது.

துலுக்கு - அசைவு, ஓர் பாஷை.

துலை - ஒப்பு, கனம், துலாராசி, நிறை, நீரிறைக்குந்துலை, நூறு பலம்.

துலோயம் - கருஞ்சுண்டி.

துல்லபம் - அருமை.

துல்லம் - பேரொலி.

துல்லியபக்கம் - உவமை.

துல்லியயோகிதாலங்காரம் - ஒப்புமை கூட்டவணி.

துவக்கல் -ஆரம்பித்தல், கட்டல், தொடங்கல்.

துவக்கு-உடல், சங்கிலி, சம்பந்தம், துவக்கென்னேவல், தோல், பிணக்கு.

துவங்கிசம்-கேடு, சேதம், நட்டம்.

துவசம் - அடையாளம், கொடி, விருதுக்கொடி.

துவசர் - கள்விற்போர்.

துவசல் - தொடிசு.

துவசாரோஹணம் - கொடியேற்றம்.

துவட்சி - அசைவு, பலவீனம், வாட்சி.

துவட்டல் - துடைத்தல், துவட்டுதல், வியங்கோள்முற்று.

துவட்டர் - கம்மாளர், தச்சர்.

துவட்டாநாள் - சித்திரைநாள்.

துவந்துவம் - இரண்டு, ஒன்றைத் தொடர்ந்தது.

துவம் - அசையாநிலை, சத்துவம்.

துவரம் - துவர்ப்பு.

துவரை - ஓர் பயறு, துவாரகை.

துவர் - சிவப்பு, துவர்ப்பு, பகை, பவளம், விறகு.

துவர்க்காய் – பாக்கு.

துவர்ச்சிகை - கடுக்காய்ப் பிஞ்சு.

துவர்தல் - திமிர்தல், தெளிதல்.

துவர்த்தல் - துவர்ப்புக்கொள்ளுதல், பூசுதல்.

துவர்ப்பு - அறுசுவையினொன்று.

துவலல் - துவறல்.

துவலை - துளி, மழை, மழைத் தூவல்.

துவல் - சீக்கிரம், துவலென் னேவல்.

துவளல் - அசைதல், திவளல், வியங்கோள்முற்று.

துவறல் - துவலைவிடுதல், விரைவு.

துவனி - தொனி.

துவன் - வட்டத்திருப்பி.

துவன்றல் - சாதல், நிறைதல், நெருங்கல், பொலிவு.

துவாதசம் - பன்னிரண்டு.

துவாதசாங்கிசம் - இலக்கினத் தைப் பன்னிரு கூறுக்கல்.

துவாதசாந்தம் - பன்னிரண்டா மவஸ்தை.

துவாதசாத்மா - ஸூரியன்.

துவாதசி - ஓர் திதி.

துவாந்தம் - இருள், நரகம்.

துவாபரம் - ஓர் யுகம்.

துவாரகேசன் - விஷ்ணு.

துவாரகை - ஸப்தபுரிகளி லொன்று.

துவாரபாலர் - வாயிற்காப்போர், கோயில் வாசலில் வைத்திருக் கும் பேருரு.

துவாரம் - வாயில்.

துவி - இரண்டு.

துவிகாபா - வட்டத்திருப்பி.

துவிகாயாசின் - செம்முருங்கை.

துவிசம் - பல், முட்டையிற் பிறப்பன.

துவிசன் - இருபிறப்பாளன்.
துவிதகேந்திரம் - துவிதீயகேந்திரம்.
துவிதபாவனை - இரண்டாகப் பாவிக்கை.
துவிதம் - இரண்டு, மாத்வம்.
துவிதாத்மகம் - ஜாதிக்காய்.
துவிருத்தி - கூறியது கூறல்.
துவீபம் - தீவு.
துவேசம் - பகை, வெறுப்பு.
துவை - இறைச்சி, ஒலி, துவையென்னேவல், பருகுதற்குரியன, பிண்ணுக்கு, புளியங்கறி.
துவைதம் - இருமை.
துவைத்தல்-ஒலித்தல்,பேரொலி, வாச்சியம் வாசித்தல், விடுதல்.
துவைபாயனன்- வேதவியாஸன்.
துவ்வல் - புசித்தல்.
துவ்வாதார் / துவ்வார் } தரித்திரர்.
துவ்வாமை-பொறுமை,வெறுப்பு.
துவ்வு - அநுபவம், ஐம்பொறிநுகர்ச்சி.
துவ்வுதல் - அநுபவித்தல்.
துழைத்தல் - குழைத்தல்.
துழனி - ஒலி, பறவைகூட்டத்தொலி.
துழாய் - துளசி.
துழாய்மௌலி - திருமால்.
துழாய்வனம் - துளசிக்காடு.

துழாவல் - கலத்தல், வெட்டல்.
துளக்கம் - அசைவு, அச்சம், ஒளி, ஜோதி நாள், கலக்கம்.
துளக்கலாகாநிலை - அசைக்கப் படாதநிலை.
துளங்கல் - அசைதல், ஒளிசெய் தல், கலங்கல்.
துளங்கொளி - கேட்டைநாள், மிக்கொளி.
துளம்பிக்கிரி - ஆடுதொண்டை.
துளவம் } துளசி
துளவு }
துளவன் - திருமால்.
துளாரி - நெய்வார்கருவியி னொன்று.
துளி - திவலை, துளியென்னேவல், பெண்ணாமை, மழை, மழைத் துளி.
துளித்தல் - மழைபெய்தல்.
துளிர் - தளிர், துளிரென்னேவல்.
துளிர்த்தல் - செழித்தல், தளிர்த்தல்
துளும்பல் - அலைதல், எழுதுதல், திமிர்தல், திமிறல்.
துளுவம் - ஓர் தேசம், பதி னெட்டு பாஷைகளிலொன்று.
துளை - துவாரம், துளையென் னேவல், மூங்கில், வாயில்.
துளைத்தல் - துளைக்குதல்.
துள்ளல் - ஆடு, கலிப்பாவோசை, குதித்தல், கூத்து, கொசுகு.
துறக்கம் - தேவலோகம்.
துறட்டி - யானைத்தோட்டி.

துறத்தல் - துறவு, நீக்கல்.
துறவர் - முனிவர்.
துறவி - முனி.
துறு - உணவு, கூட்டம், துறுகல், துறுவென்னேவல்.
துறுட்டி - சிற்றேலம்.
துறுத்தல் - துறுக்குதல்.
துறுபவம் - நெருக்கம்.
துறுமல் - திரட்சி, நெருங்கல்.
துறுவல் - நெருக்கல், புசித்தல்.
துறை - ஆறு, அகப்பொருட்டுறை, இடம், இறங்குதுறை, எல்லை, காரியம், தங்குமிடம், நீர்த்துறை, நூற்பாவினத்தொன்று, வழி.
துறைபோகுதல் - நூல் கற்றறிதல், முடிவறிதல்.
துறைவல்லோர் - கற்றோர்.
துறைவன்-நெய்த நிலத்தலைவன்
துற்றல்-உண்டல், குவிதல், நிறைதல்.
துற்று - சோறு, துறுகல், துற்றென்னேவல், நெருக்கம்.
துளவி - திப்பிலி.
துனி - அச்சம், ஆறு, கோபம், சினம், துன்பம், நோய், புலவி நீட்டம், வெறுப்பு.
துன்பு - துன்பம்.
துன்புறுவோன் - சீழுதன்.
துன்மதி - அவமதி, ஓர் வருஷம்.
துன்முகி - ஓர் வருஷம், ஓராக்கி.

துன்றல் - நெருங்கல், கிட்டல்.

துன்னம் - தைத்தல்.

துன்மை - தின்மை.

துன்னர் - சக்கிலியர், செம்பர், தையற்காரர்.

துன்னல் - கிட்டல், தைத்தல், நெருங்கல், வியங்கோண் முற்று.

துன்னர்
துன்னுதார்
துன்னோர்
} பகைவர்.

துன்னு - இறைச்சி, துன்னென் னேவல், முதுகு.

துன்னுதல் - சேர்தல்.

துன்னுநர்-அடுத்தோர்,சிநேகிதர்.

தூ

தூ-ஓரெழுத்து,சீ, சுத்தம், தசை, தூவெனனேவல்,பகை,பற்றுக் கோடு, புள்ளிறகு, வெண்மை.

தூகம் - காற்று.

தூக்கம் - ஆபரணத்தொங்கல், காதணி, சல்லியம், நித்திரை.

தூக்கு - ஆராய்தல், உவமைச் சொல், உறி, காற்றுலாம், செய்யுள், தூக்குதல், தூக்கு நூல், துலாராசி, தூக்கங்கள், தூக்கணங்குருவி, நிறை, நிறை கோல், பா.

தூங்கல் - ஆடல், உறங்கல், கூத்து, சோம்பல், தாழ்வு, யானை, வஞ்சிப்பாவினோசை.

தூங்கிசைச்செப்பல் - வெண்பாவினம்.

தூங்கிசைகவல் - கலிப்பா வினம்.

தூங்கிசைத்துள்ளல் - ஆசிரியப்பாவினம்.

தூசரம் - மங்கினவெள்ளை.

தூசர் - வெண்ணார்.

தூசி - குதிரை, கொடிப்படை, படைவகுப்பு, புழுதி.

தூசிகம் - புளியாரை.

தூசு-சித்திரைநாள், சீலை, தூய்து, யானைகட்டுங்கயிறு.

தூசுப்பு - தண்ணீர்விட்டான்.

தூடணம் } தூஷணம் } அசப்பியம், குற்றம், நிபந்தனை, பழுது படுதல், மீறுதல்.

தூட்டி - சீலை.

தூணம் - அம்புக்கூடு, தூக்கணம், தூண், பகை.

தூணி - அம்புக்கூடு, ஓரளவு.

தூணிகர் - செட்டிகள்.

தூணியங்கம் - அத்திப்பிசின்.

தூணீரம் - அம்புக்கூடு.

தூண் - தூண், பற்றுக்கோடு.

தூண்டல்-எழுப்பல், செலுத்தல்.

தூண்டில்-தோட்டி, மீன்பிடிக்கும் கருவியிலொன்று.

தூதர் - ஒற்றர், கிங்கரர், சமாதானம் பேசுவோர்.

தூதன் - செய்தியறிவிப்போன், தானாதிபதி.

தூது - ஓர்பிரபந்தம், தூதுசெல்வோன், புதன்.

தூதுணம் - தூக்கணங்குருவி.

தூதுவன் - தூதன்.

தூதுளை - தூதுளைச்செடி.

தூபமுட்டி - தூபக்கால்.

தூபம் - புகை.

தூபரம் - கொம்பிலாவிலங்கு.

தூபிதம் - சூடு.

தூமகேது - கேது, கொடுமை, தீ, வால் நட்சத்திரம், விண்வீழ்க்கொள்ளி.

தூமப்பிரவை - ஓர் நரகவட்டம்.

தூமம்-புகை, மட்கலஞ்சுடு சூளை, புளிநரளை.

தூமலம் - கருமைமிக்க சிவப்பு.

தூமான் - ஆசனம், பீடிகை.

தூமாகாரம் - புகைவடிவு.

தூமிரம் - கருமைமிக்க சிவப்பு.

தூமிராக்கன் - செங்கண்ணன்.

தூமை-தூய்மை, மகளிர் சூதகம், வெண்மை.

தூம்பிரம் - தூமிரம்.

தூம்பு - அருநெறி, இடுக்கு வழி, ஈயம், உட்டுளை, ஜலதாரை, மடை, மரக்கால், மூங்கில், வழி, வாயில்.

தூயவர் - சுத்தர், முனிவர்.

தூயவுடம்பினனுதல் - இறைவனெண்குணத்தொன்று.

தூயாள் - ஸரஸ்வதி.

தூய்தன்மை - அசுத்தம்,

தூயதாக்கல் - சுத்தமாக்குதல், செப்பம் பண்ணல்.

தூய்து - சுத்தமானது.

தூய்மை - சுத்தம்.

தூரகாரி-வருங் காரியமறிவோன்.

தூரணி - தீவிரம், பலம், மனம்.

தூரம்-இசைக்கருவி, ஊமத்தை, சேய்மை, புறம்பு, விசாலம், வித்தியாசம்.

தூரல் - துன்பம், தூருதல், வருத்தம்.

தூரி, தூரிகை } எழுதுகோல்.
தூரிக்கோல் }

தூரியம்-இசைக்கருவி, உவகைப் பறை, எருது, எழுதுகோல், எறிபடை, கைவேல், நல்லாடை, பறைப்பொது, முரசு.

தூரேத்தி - கம்பங்கிராய்.

தூரோணம் - ஓர் அளவை, கவிழ்தும்பை.

தூர் - சேறு, தூரென்னேவல், தூர்வை, மண்டி, வேர்.

தூர்க்கை - பூரநாள்.

தூர்த்தல் - கூட்டல், செறுத்தல், நிறைத்தல்.

தூர்த்தன் - காமுகன், வஞ்சகன், விடன்.

தூர்த்தை - தூர்த்த குணமுள்ளவள்.

தூர்மம் - தேட்கொடுக்கி.

தூர்வகம் - சுமத்தல், பொதியெருது.

தூர்வாசம் - பதினெண்புராணங்களிலொன்று.

தூர்வு - தூர்ப்பு.

தூர்வை - அறுகு, செற்றை.

தூலம் - ஆகாயம், இலவமரம், கோரை, நஞ்சு, நீர்முள்ளி, பஞ்சு, பஞ்சபூத காரியதேகம், பருமை, வீட்டுத்திரம்.

தூவத்தி - வாள்.

தூவல் - அம்பிறகு, எழுதுமிறகு, சிந்தல், மழை, மழை பெய்தல், மழைத்துளி, மழைத் தூவல்.

தூவி - அன்னத்திறகு, இறகு, மயிற்றோகை, மீன் சிறகு.

தூவு - ஊன், தூவென்னேவல்.

தூவுதல் - சிந்துதல், தெளித்தல்.

தூவம், தூளணம் } தூள்.

தூளி - அநுமானிதம், தூளியென்னேவல், பராகம், புழுதி.

தூளிதம் - தூளாக்கப்பட்டது.

தூள் - புழுதி, பூந்தாது, பொடி.

தூறல் - பழிச்சொல், மழை, மழைத்துளி, மழைபெய்தல்.

தூறு - கூட்டம், சிலும்பல், சிறுபற்றை, தூறென்னேவல், பழிச்சொல்.

தூறுதல் - இளைத்தல், சிதறுதல், தூறுபடுதல், மழை துமித்தல்.

தூற்றல் - சிதறுதல், தூற்றுதல், பழிகூறல், மழை தூரல்.

தூற்றுமைக்கொற்றன் - ஓர் கொற்றன்.

தூனம் - அசைதல், வருத்தம்.

தூனனம் - அகற்றல், அசைதல்.

தெ

தே - ஓரெழுத்து.

தெகின் - படர்கொடி.

தெகுட்டி
தெகுட்டிகை } தேட்கொடுக்கி.

தெகுளம்-நிறைதல், பெருகுதல்.

தெகுளல் - பெருகல்.

தெங்கணம் - ஓர்தேயம்.

தெங்கந்தீவு - எழு தீவுகளி லொன்று.

தெங்கு - தென்னமரம்.

தெட்டல் - வஞ்சித்தல்.

தெட்டு - எத்து, யானைக்கணையம், வஞ்சனை.

தெட்பம் - தெளிவு, முதிர்ச்சி.

தெண்டிரை - கடல்.

தெண்ணீர் - தெளிநீர்.

தெண்மை - திறமை, தெளிவு.

தெந்தி - நேர்வாளம்.

தெப்பம் - நீந்துந்தெப்பம்.

தெம்முனை - இரணகளம்.

தெய்ய - இசைநிறை, இடைச் சொல்.

தெய்வதம் - தெய்வம்.

தெய்வமந்திரி - வியாழன்.

தெய்வம்-ஊழ், கடவுள், வருடம், எண்வகை மணத்தினொன்று, ஐவகையாகத்தொன்று.

தெய்வயானைகாந்தன் - குமரன்.

தெய்வவிருதன் - பீஷ்மன்.

தெரிசொல் - காரணம், சத்தியம்.

தெரிதரல் - அறிதல், தோன்றல்.

தெரிதல் - அறிதல், ஆராய்தல், ஆலோசனை, காணல், தெரிந்து கொள்ளுதல்.

தெரித்தல்-எழுதல், கொழித்தல், சொல்லுதல், மாறுபாடு.

தெரிநிலை-விளங்க நிற்பது, காலந் தெரியநிற்பது.

தெரிநிலைவினை - குறிப்புவினை.

தெரிநிலைவினைப் பெயரெச்சம் - செயலுங்காலமும் விளக்கிப் பெயரையவாவி நிற்பது.

தெரிநிலைவினைமுற்று - செயல், காலம், வினையெனு மூன்றையும் விளக்கி முற்றுப் பெற்று நிற்பது.

தெரிமா - சிங்கம்.

தெரியலர்-அறியாதார், பகைஞர்.

தெரியல் - ஆராய்தல், காணல், பூமாலை.

தெரியிழை - பெண்.

தெரிவு-அறிவு,ஆராய்வு,தெரிதல்.

தெரிவை - பெண்பொது, முப்பத்தோரு வயதுப்பெண்.

தெரு - வழி, வீதி.

தெருட்சி - அறிவு, தெளிவு.

தெருட்டல் - உறுதிப்படுத்தல், வற்புறுத்தல்.

தெருமரல் - சுழலல், நம்பிக்கையற்றிருத்தல்.

தெருளல் - தெளிவு.

தெருளுடைமை- அறிவுடைமை.

தெருள் - அறிவு, தெருளென்னேவல், தெளிவு.

தெலுங்கு-ஓர் தேசம், ஓர் பாடை.

தெல் - அஞ்சல், கலாதி, நெடுங்கிடங்கு, நெடும்பாத்தி.

தெல்லாட்டம் - இழுப்பறிப்படுதல், பாத்தி கட்டுதல்.

தெவம் - மாமரம்.

தெவிட்டல்-உமிழ்தல், ஒலித்தல், நிறைதல், நினைத்தல்.

தெவிளல் - நிறைதல்.

தெவு - கொள்ளுதல்.

தெவுட்டல் - அடைத்தல், ஒளித்தல், கொப்பளித்தல், தங்கல், நிறைதல்,நினைத்தல்,மறைத்தல்.

தெவுளல் - பெருகுதல்.

தெவ் - சத்துரு, பகை, போர்.

தெவ்வர் - பகைவர்.

தெவ்வர் - முனைப்பதி, பகைவர், மேற் சென்றோருறைவிடம்.

தெவ்வினை - போர்.

தெவ்வு-சத்துரு, சந்திரன், பகை, போர்.

தெழித்தல் - அதட்டல், கோபம், சினக்குறிப்பு, துவைத்தல், பேரொலி.

தெளிஞர்-அறிவுடையோர், கல்வியிற் சிறந்தோர்.

தெளிதல் - அறிதல், ஆராய்தல், ஆலோசனை, ஊடுருவுதல், கலக்கம், கொழுக்குதல், துணத்தல், தெளிவு.

தெளித்தல் - ஒலித்தல், கொழித்தல், துப்புரவாக்கல், தூவல், தெரித்தல், நிச்சயித்தல், விதைத்தல்.

தெளிர் - உள்ளோசை.

தெளிர்தல் - பிரகாசித்தல், பேசலாவெழுமொலி.

தெளிவு - அறிவு, குணலங்காரம் பத்தினொன்று, கொழுப்பு, தீர்க்கம், துணிவு, மனத்தேற்றம், வெளிச்சம்.

தெள்கு - தெள்.

தெள்விளி - ஓர்பண், மகிழ்ச்சியாலார்த்தல்.

தெள்ளல்-கொழித்தல், தெளிதல்.

தெள்ளி - யானை.

தெள்ளிச்சி - பூநீறு.

தெள்ளிமை - அறிவு, தெளிவு.

தெள்ளியர் } அறிவுடை
தெள்ளியோர் } யோர்.

தெள்ளுதல் - கொழித்தல், தெரிதல், தெளிதல்.

தென்னேணம் - மகளிர் விளையாட்டிலொன்று.

தெறித்தல் - தெறிக்குதல்.

தெறிப்பு - அதைப்பு, சிந்துதல், சுண்டுகை, முறிவு.

தெறுக்கால் - தேள், விருச்சிகவிராசி.

தெறுதல் - அழித்தல், தங்கல்.

தெறுத்தல் - நெரித்தல்.

தெறுநர் - பகைவர்.

தெற்றல்-அலைத்தல், இழைத்தல், இறுக்கல்.

தெற்றி-சித்திரகூடம், திண்ணை.

தெற்று - அடைப்பு, இழைப்பு, தெற்றல், தெற்றென்னேவல், பின்னல், விரைவுக்குறிப்பு.

தெற்றெனவு - தெளிவு.

தெனாது - தெற்கிலுள்ளது.

தென் - அழகு, இசை, எதிர், கருப்பு, தெற்கு, தென்னமரம்.

தென்கலை - தமிழ்.

தென்கால் - தென்காற்று.

தென்கீழ்த்திசைப் பாலகன் } அக்கி
தென்கீழ்த்திசையிறை } தேவன்

தென்குமரி - ஓராறு, கன்னியா குமரிமுனை.

தென்சார் - தென்பக்கம்.

தென்படுதல் - கிடைத்தல்.

தென்பாண்டி - கொடுந் தமிழ் நாட்டிலொன்று.

தென்பால் - தென்பக்கம்.

தென்புலத்தார் - பிதிருதேவதை கள்.

தென்புலம் - இயமலோகம்.

தென்மதுரை - ஆலவாய்.

தென்மலை - பொதியமலை.

தென்மேற்றிசைப்பாலன் - நிரு ருதி தேவன்.

தென்விதேகம் - நவகண்டத் தொன்று.

தென்றல் - தென்காற்று, முன் பனிப்பருவத்தின் காற்று.

தென்றற்றேரோன் - மன்மதன்.

தென்றி - தென்காற்று, தெற்கு.

தென்றிசைக்கோன் }
தென்றிசைப்பாலன் } இயமன்.

தென்னவன் }
தென்னன் } பாண்டியன்.

தென்வினிலம் - போர்க்களம்.

தென்னை - தென்னமரம்.

தே

தே-ஓரெழுத்து, கடவுள், கிருபை.

தேகத்திரயம் - மூவகைச்சரீரம்.

தேகபந்தம் - சரீரப்பற்று.

தேகசாரம் - மூளை.

தேகம் - உடல்.

தேகயாத்திரை-உண்டி, மரணம்.

தேகரசம் - வியர்வை.

தேகனி - மஞ்சள்.

தேகி - சரீரி, சீவாத்துமா.

தேக்கம் - தியக்கம், நிறைவு.

தேக்கல் - தியங்குதல், நிறைதல்.

தேக்கு - ஓர்மரம், கமுகு, தித்திப்பு, தெவிட்டு, தேக்கென்னேவல்.

தேக்குதல் - தடைபண்ணுதல், தெவிட்டுதல், நிறைதல்.

தேக்கெறிதல் - ஏப்பமிடல், தெவிட்டல், நிறைதல்.

தேங்கல் - அச்சக்குறிப்பு, நிறைதல்

தேங்குதல் - நிறைதல்.

தேசகன் - ஆளுகைக்காரன்.

தேசகாலம் - இடமும் நேரமும், நெடும்பொழுது.

தேசம் - இடம், உறைப்பு, கட்டளை, கூர்மை, நாடு, பங்கு, பிரபை.

தேசாட்சி - ஓர் இராகம்.

தேசாவரம் - ஓர் பூண்டு.

தேசி - எலுமிச்சை, ஓரிராகம், பாதவுறுப்பொன்று, பெருங் குதிரை.

தேசிகம் - அவ்வவநாட்டுச்சொல், அழகு, ஒளி, ஓர் எலுமிச்சை காந்தி, கூத்து, பொன்.

தேசிகன் - உபாத்தியாயன், குரு, தேசாந்தரி, வணிகன்.

தேசிகர் - செட்டிகள்.

தேசியம் - திசைச்சொல்.

தேசு - அழகு, உறைப்பு, ஒளி, காங்கை, கீர்த்தி, கூர், பலம், பொன், மகத்துவம், மனக்கதி, மூளை, விந்து, வீரம்.

தேசோபிந்து - ஓர் உபநிஷதம்.

தேசாவதி - யானைத்திப்பிலி.

தேடல் - தேடுதல்.

தேட்கடை - ஓர்பூடு, மூலநாள்.

தேட்கொடுக்கி - ஓர்பூடு.

தேட்டு - தேடுதல்.

தேட்டை - தெளிவு, தேட்டம்.

தேமல் - படர்சுணங்கு.

தேமனம் - சிரமம், புளிப்பு.

தேமா - இருநேரசைச்சீர் வாய்பாடு, தித்திப்புள்ளமாமரம்.

தேமாங்கனி - நேர் நேர் நிரையசைச்சீர் வாய்பாடு.

தேமாங்காய் - மூன்றுநேரசைச்சீர் வாய்பாடு.

தேமாநறுநிழல் - நேர்நேர்நிரை நிரைசீர் வாய்பாடு.

தேமாநறும்பூ - நேர்நேர்நிரை நேர் சீர்க்கு வாய்பாடு.

தேமாந்தண்ணிழல் - நேர் நேர் நிரையென்னும் சீர்.

தேமாந்தண்பூ - நான்குநேரசைச் சீர் வாய்பாடு.

தேம் - இடம், ஏழனுருபு, கள், தித்திப்பு, தேன், வாசனை.

தேம்பல் - இளைத்தல், பழம்பூ, மெலிதல், வாடல்.

தேயசு - அழகு, ஒளி, விந்து.

தேம்பாவணி - ஓர் காப்பியம்.

தேயம் - இடம், உடல், ஒளி, களவு, கொடை, நாடு.

தேயு - நெருப்பு, சிவன் அஷ்ட மூர்த்தங்களிலொன்று.

தேய்தல் - இளைப்பு, உரைத்தல், குறைதல்.

தேய்த்தல், தேய்ப்பு - அழித்தல், உரைத்தல், குறைத்தல், கொல்லல்.

தேய்வு - அழிவு, குறைவு, மெலிவு.

தேய்வை - பரிமளச்சாந்து.

தேரகன் - தேர்ப்பாகன்.

தேரர் - புத்தர்.

தேரலர் - தேரார்.

தேரன், தேரையன் - சித்தவைத்தியமுழுதுமுணர்ந்த வோர் புலவன்.

தேரார் - கல்லாதார், கீழ்மக்கள், தேரென்னேவல்.

தேர்ச்சி - ஆராய்தல், எண்ணல், கல்வி, தெளிவு.

தேர்ச்சித்துணைவர் - மந்திரிகள்.

தேர்தல் - அறிதல், ஆராய்தல், சொல்லல், தெளிதல்.

தேர்வு - ஆராய்வு, தெளிவு.

தேவகன் - தேவகிதந்தை.

தேவகாந்தாரி - ஓர் இராகம்.

தேவகி - கண்ணன்றாய், வஸுதேவன் மனைவி.

தேவகீஸுநு
தேவகிநந்தனன் } கண்ணன்.
தேவகிமைந்தன்

தேவகுலம் - தேவர்கோயில்.

தேவகுரு - வியாழன்.

தேவசாட்சி - ஆணை.

தேவசேனுபதி - குமரன்.

தேவடன் - சிற்பி.

தேவதத்தம் - அர்ச்சுனன் சங்கு.

தேவதத்தன் - உபவாயுக்களி லொன்று, புத்தன்றம்பி, வாயு.

தேவதாசன் - அரிச்சந்திரன் மகன்.

தேவதாரம் - ஐந்தருவினென்று. ஓர்மரம், செம்புளிச்சைமரம்.

தேவதாரி
தேவதாரு } தேவதாரம்.

தேவதாருவனம் - ஓர் வனம்.
தேவதாளி - ஓர் பூண்டு.
தேவதுந்துபி - தெய்வப்பறை.
தேவதேவன் - சிவன்.
தேவநகர் - தேவர்கோயில்.
தேவநாயகன் - கடவுள், தேவர் தலைவன்.
தேவநிகாயம் - மோக்கம்.
தேவபசு - காமதேனு.
தேவப்பிரதிமை - விக்கிரகம்.
தேவப்பிரம்மா - நாரதன்.
தேவமணி - அநன்மணி, குதிரை நற்சுழியினொன்று, சிவன்.
தேவமாதா - அதிதி.
தேவமாநகம் - கௌஸ்துபம்.
தேவயானம்-உத்திராயணம்,தேவதைகளின்மார்க்கம், விமானம்.
தேவயானி - சுக்கிரன் புத்திரி.
தேவயோனி - தெய்வப்பிறப்பு.
தேவரன் - கொழுந்தன்.
தேவராதன் - மிதிலையரசன்.
தேவவிரதன் - பீஷ்மன்.
தேவனம் - அழகு, ஒளி, சூதாடு கருவி, தாமரை, தூக்கம், துதி, தோழி, நந்தனவனம்.
தேவன் - அரசன், அருகன், கடவுள்.
தேவாங்கம் - பட்டுச்சீலை.
தேவாதி - கடவுள்.

தேவாலயம் - தேவர்கோயில், பொன்மலை.

தேவி - அரசி, காளி, துர்க்கை, பார்வதி, மனைவி.

தேவை - அவசரம், ஒரூர், வேண்டுந்தன்மை.

தேளி - ஓர்மீன்.

தேள் - அனுஷநாள், தேன், விருச்சிகவிராசி.

தேறலர் } பகைவர், அறியாதார்.
தேறலார் }

தேறல் - கள், உதங்கல், துணிவு, தேன், நிச்சயம்.

தேறு - சுத்தம், தேற்றுமரம், தேறென்னேவல், நிச்சயம்.

தேறுநர் - கற்றோர், வாய்மையுடையோர்.

தேற்றம் - கருமமுடிக்குந்துணிவு, நிச்சயம்.

தேற்றல் - தேற்றுதல்.

தேற்று - ஓர்மரம்.

தேற்றார் - அறிவீனர், பகைவர்.

தேனர் - திருடர்.

தேனு - பசு, குதிரை, தேவபசு, பாற்பசு.

தேனுகன் - ஓரஸுரன்.

தேனுகாரி - கிருஷ்ணன்.

தேன் - கள், பெண்வண்டு, வண்டு, வாசனை.

தை

தை - ஒரெழுத்து, ஓர் மாதம், தாளக்குறிப்பிளென்று, தைக்கத் தக்கவை, தையென்னேவல், பூசநாள், மகரராசி.

தைஜசம் - அக்கினி ஸம்பந்தம், அஹங்காரமூன்றினொன்று, பூதாதியஹங்காரம், வைகரிய அஹங்காரம், தைஜச அஹங்காரம், சிவஞானஸித்தி.

தைதல் - அலங்கரித்தல்.

தைதுலம் / தைதுலை — ஓர் கரணம்.

தைத்தல் - தள்ளல்.

தைத்தியமந்திரி - சுக்கிரன்.

தைத்தியர் - அஸுரர்.

தைத்தியாரி - விஷ்ணு.

தைத்திரியம்-இரண்டாம்வேதம்.

தைப்பை-சட்டை,தைத்தவுடுப்பு.

தையல் - அழகு, பெண்.

தைவரல் - அடிவருடல்.

தைவினை / தைவேளை — அசகண்டர்.

தைனியம் - எளிமை, கோபம்.

தொ

தொ - ஒரெழுத்து.

தொகல் - கூடல்.

தொகாநிலை / தொகாநிலைத்தொடர் — வினையுருபு முதலிய விரிந்து நிற்றல்.

தொகுதி - கூட்டம், திரட்சி.

தொகுதிப்பெயர்-குழூஉப் பெயர்.

தொகுத்தல் - எழுத்தாயினுஞ் சாரியையாயினுங் குறைத்துச் சுருக்குதல், கூட்டல், விரிந்து கிடந்ததைத் தொகுத்து முடித்தல்.

தொகுத்துச்சுட்டல்-ஒருத்தி, பலவற்றையுந் தொகையாக்கிச் சொல்லுதல்.

தொகுத்துரை - பொழிப்புரை, வேற்றுமை சாரியை முதலிய உறுப்புக்களைத் தொகுத்தெழுமுறை.

தொகை - உருபு மறைதல், கூட்டம், தொக்கு நிற்றல், பலவற்றைத் தொகுத்துக் கூறுந் தொகைச்சொல்.

தொகைநிலை - வேற்றுமையுருபு முதலில் தொக்கு நிற்றல்.

தொகைநிலைச்செய்யுள் - ஓர் பிரபந்தம்.

தொகைநிலையுருவகம் - ஓரலங்காரம்.

தொகைப்பொருள் - விரிந்த பொருளினடக்கம்.

தொகையுவமம் - உவமைத் தொகை.

தொகைவிரி-தொகுத்தும் விரித்தும் முடித்தல்.

தொக்கார் - சேர்ந்தார்.

தொக்கு - ஆடை, உடல், தோல், மரப்பட்டை.

நீர் - கடல், குணம், சாறு, தண்மை, நீரென்னேவல், நீவிர், புனல், நீர், பஞ்சபூதத் தொன்று, பூராடநாள், முன்னிலைப் பெயர்.

நீர்க்கடம்பு - ஓர் கடம்பு.

நீர்க்கணம் - அட்ட கணத் தொன்று.

நீர்க்கமலி - அல்லி.

நீர்க்காகம், நீர்க்காக்கை - ஓர் காகம்.

நீர்க்காசம் - இளைநோய்.

நீர்க்காவி - கருங்குவளை.

நீர்க்கிராம்பு - ஓர் பூண்டு.

நீர்க்கீழ், நீர்த்தானம் - உதயத்திற்கு நான்காமிடம்.

நீர்க்குண்டி - வெண்ணொச்சி.

நீர்க்குளிரி - ஓர் செடி.

நீர்க்குறிஞ்சா - ஓர் குறிஞ்சா.

நீர்க்கொழுந்து - நீர்முகம்.

நீர்க்கோழி - ஓர் நீர்வாழ்பறவை.

நீர்ச்சங்கு - ஓர் செடி.

நீர்ச்சின்னி - ஓர்செடி.

நீர்ச்சுண்டி - ஓர்சுண்டி, வறட்சுண்டி.

நீர்ச்செம்பை - ஓர்மரம்.

நீர்ச்சேம்பு - ஓர் செடி.

நீர்த்தானம் - நீர்க்கீழ்.

நீர்த்திவலை - நீர்த்துளி.

நீர்நாய் - நாய் மீன்.

நீர்நாள் - பூராடநாள்.
நீர்நிலை - குளம்.
நீர்நொச்சி - ஓர்நொச்சி.
நீர்பெய்கலன் - கமண்டலம்.
நீர்ப்பகண்டை - ஓர் பூடு.
நீர்ப்பஞ்சு - கடற்காளான்.
நீர்ப்பனை - புல்லாமணக்கு.
நீர்ப்பாசி - ஓர் பாஷாணம்.
நீர்ப்பூலா } ஓர்பூல்.
நீரீப்பூல் }
நீர்மீட்டான் } தண்ணீர் விட்டான்.
நீர்விட்டான் }
நீர்முள்ளி - ஓர்முள்ளி, முள்ளி.
நீர்மேனெருப்பு - கல்லுருவி.
நீர்மை - ஒப்புரவை, குணம்.
நீர்வஞ்சி - ஓர்வகைப்பிரம்பு.
நீர்வல்லி - வெற்றிலைக்கொடி.
நீர்வள்ளி - நீர்விட்டான், நீர்வல்லி.
நீர்வாத்து - ஓர்வாத்து.
நீர்வேட்கை - நீர்த்தாகம்.
நீலகண்டன் - சிவன்.
நீலகாசம் } ஓர் நேத்திரரோகம்.
நீலமணிகாசம் }
நீலகிரி - அட்டபருவதத் தொன்று, அத்தமிக்குமலை.
நீலக்காவி - அவுரி.
நீலந்தர் - இராகம் பாடுவோர்.

நீலபாஷாணம் - ஓர் வைப்புப் பாஷாணம்.

நீலமணி - கண்ணிற்கருமணி, நீலரத்தினம், மரகதமணி.

நீலமேனியன் - நீலவண்ணன்.

நீலம் - இருள், கருங்குவளை, கறுப்பு, காற்று, துருசு, நஞ்சு, நீல நிறம், நீலமணி, பனை.

நீலவண்ணன் - விட்டுணு.

நீலன் - ஓரரசன், ஓர் வானரப் படைத்தலைவன், சனி.

நீலாஞ்சனம் - கல்லீயம், துருசி.

நீலாம்பரன் - பலபத்திரன்.

நீலாம்பரி - ஓரிராகம்.

நீலி - அவுரி, கருநொச்சி, கறுப்பு, காளி, துர்க்கை, பார்வதி, மேக வண்ணப்பூவுள்ளமருதோன்றி மரம்.

நீலோற்பலம் - கருங்குவளை.

நீல் - காற்று, நீலம், வாதம்.

நீவரம் - சேறு, நீர், வியாபாரம்.

நீவல் - தடவல், துடைத்தல்.

நீவாரம் - வனநெல், செந்தினை, நாடு.

நீவான் - மீகாமன்.

நீவி - கொய்சகம், சீலை.

நீவியம் - சீலை.

நீவுதல் - தடவுதல், தட்டுதல், துடைத்தல், பூசுதல்.

நீழல் - ஒளி, நிழல், நோய்.

நீளம் - தூரம், நெடுமை.

நீளல் - ஓடல், தூரம்.

நீளிடை - சேய்மை.

நீள் - உயர்ச்சி, ஒளி, நீளென்னேவல்.

நீறணிந்தோன் - சிவன்.

நீறு - சாம்பர், சுண்ணம், திருநீறு, துகள், நீறென்னேவல், பராகம், புழுதி, விபூதி.

நு

நு - ஆயுதப்பொது, ஓரெழுத்து, ஐயம், சங்கை, வினாவென்பவைகளைக் காட்டுமோருபசருக்கம், தியானம், தோணி, நிந்தை, நேரம், புகழ்.

நுகம் - நுகத்தடி.

நுகர்ச்சி - அநுபவம், உண்டல்.

நுகர்தல் - அநுபவித்தல், புசித்தல், விழுங்கல்.

நுகைவு - இளக்கம், தணிவு, தளர்வு, மிருது.

நுங்கல் - விழுங்கல்.

நுங்கு - பனநுங்கு.

நுங்கை - உன்றங்கை.

நுசுப்பு - இடை.

நுடங்கல் - அணுகல், ஆடல், துவளல், முடங்கல்.

நுட்பம் - ஓரலங்காரம், காலநுட்பம், நுண்மை, பொருள் நுணுக்கம்.

நுணக்கம் - நுணங்கல்.

நுணங்கல் - துவளல், நுண்மை, முடங்கல், மெலிதல்.

நுணங்கு - தேமல், நுணங்கென்னேவல், நுண்மை.

நுணலை - ஓர்மீன், தவளை.

நுணல் - தவளையினோர்பேதம்.

நுணவு-தணக்கமரம், நுணாமரம்.

நுணவை - நுணவு.

நுணா - நுணாமரம்.

நுணித்தல் - குணம், நுணுக்கல்.

நுணுக்கம் - கூர்மை, நுண்மை.

நுணுக்கல் - நுண்மையாக்கல்.

நுணுங்கல் - நுண்மை.

நுணுங்கு - நுணுங்கென்னேவல், நுண்மை.

நுண் - அணு, நுண்மை, அளிவு.

நுண்ணறிவு - கூரிய.

நுண்ணிடை - சிற்றிடை, பெண்.

நுண்ணியர் - அறிவுடையோர், பெரியோர், மந்திரிகள்,

நுண்பொடி - புழுதி.

நுண்பொருள் - நுண்ணியபொருள்.

நுண்மை - கூர்மை, நுட்பம், நேர்த்தி.

நுதம் - துதி.

நுதலணி - சுட்டி, நுதற்சுடிகை.

நுதலல் - கருதல், குறித்தல், சொல்லல்.

நுதலியபொருள் - நூலிற்சொல்லிய பொருள்.

நுதல்-சொல், நுதலென்னேவல், நெற்றி, புருவம்.

நுதற்சுடிகை - நுதலணி.

நுதற்கண் - நெற்றிக்கண்.

நுதி - முனை, வணக்கம்.

நுதிவிழுதல் - பஞ்சாங்க வாக்கியத்துக்கு வேண்டிய திருத்தம், பஞ்சாங்க வாக்கியம்.

நுதுத்தல் - அடக்கல், அவித்தல், ஆசையடக்கல்.

நுந்துதல்-தள்ளுதல், தூண்டுதல்.

நுந்தை - உன்றந்தை.

நுபம் - எருக்கு.

நுமன் - உம்மவன்.

நும் - விரவுத்திணை முன்னிலைப் பன்மை, சாரியை, உம்முடைய, எல்லாரும்.

நுரை - குமிழி, நுரை, நுரையென்னேவல், வெண்ணெய்.

நுரைத்தல் - நுரைக்குதல்.

நுவணம், நுவணை - கல்விநூல், தினைமாவு, பஞ்சினூல்.

நுவலல், நுவற்சி - சொல்லல், பாடஞ்சொல்லலின் வரலாறு.

நுவலா நுவற்சி - ஓரலங்காரம்.

நுவல்-சொல், நுவலென்னேவல்.

நுவற்சி - சொல்லல், நுவலல்.

நுழை - சிறுவாயில், துவாரம், நுண்மை, நுழையென்னேவல், பலகணி.

நுழைத்தல் - நுழைவித்தல்.

நுளம்பு - கொசுகு, மின்மினி.

நுளை - ஈனம்.

நுளைச்சி - நெய்தனிலப்பெண்.

நுளையர் - நெய்தனிலமாக்கள்.

நுனி - நுண்மை, நுனியென்னேவல், முனை.

நுனித்தல் - உற்றுராய்தல், கூர்மை செய்தல்.

நுனை - முனை.

நுன் - உனது.

நூ

நூ - ஆபரணம், ஓரெழுத்து.

நூக்கல் - நூக்கம், தோதகத்திமரம், நூக்கு, செலுத்தல், தள்ளல், நெய்வார்கருவியினொன்று.

நூங்கல் - பெருத்தல், மிகுதல்.

நூங்கு - பெருமை, மிகுதி.

நூடி - சிற்றேலம்.

நூதனம் - புதுமை.

நூதனன் - புதியோன்.

நூபம் - இடபராசி, எருக்கு, எருது.

நூபுரம் - காற்சிலம்பு, பாதகிண்கிணி.

நூப்பு - தணிப்பு.

நூரல் - அவிதல், ஆறல், பதனழிதல்.

நூலாசிரியன் - நூலாக்கியோன்.

நூலியாப்பு - நூலமைக்கும்விதம், அஃது—தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்ப்பு.

நூலுத்தி - தந்திரவுத்தி.

நூலுரையுணர்வோர் - ஒல்லுநர்.

நூலோர் - அறிஞர், அந்தணர், மந்திரிகள்.

நூல் - ஆலோசனை, இழை, எண்ணம், கல்விநூல், முதனூல், வழிநூல், சார்புநூல், நூலென்னேவல்.

நூல்வல்லோர் - கல்விமான்கள், மந்திரிகள்.

நூவு - எள்.

நூழில் - குவித்தல், கொட்டிக்கொத்தான், கொலை, படர்கொடி, யானை.

நூழை - சிறிதுவாரம், நுண்மை.

நூறல் - அழித்தல்.

நூறு - ஓரெண், சதம், நூறென்னேவல்.

நூறை - மலங்குமீன்.

நூற்பயன் - நூலினது பயன், அவை — அறம், பொருள், இன்பம், வீடு.

நூற்பா - அகவல், சூத்திரப்பா.

நூற்புறனடை - நூலின் புறத்திலமைக்குங் காப்புமொழி.

நூற்பொருள் - நூலிற்சொல்லப்படுபொருள்.

நூற்றந்தாதி - ஓர் பிரபந்தம்.

நூற்றல் - நூற்குதல்.

நூற்றீட்சை - சாஸ்திரதீட்சை.

நூனம் - குறைவு, நிச்சயம்.

நூனயம் - கல்விநயம், நூலின் மேன்மை.

நூனாழி - நாடா.

நூன்முகம்-நூற்றுறை, பாயிரம்.

நூன்முடிவு - நூலினது பொருளொக்கம்.

நெ

நேகல் - கனிதல், நெகிழ்தல்.

நெகிழம் - பாதச்சிலம்பு.

நெகிழ்ச்சி - இளக்கம், தளர்ச்சி.

நெகிழ்தல் - அழுந்தல், அவிழ்தல், இரங்குதல், இளகுதல், உருகுதல், குழைதல், தளரல், நழுவல், நுகைத்தல், பிரிதல், பொசித்தல், மலர்தல்.

நெகிழ்தம் - குழைதல், மலர்தல்.

நெக்குடைதல் - நெகிழ்ந்துருகல்.

நெக்குரோதம் - ஆல்.

நெச்சி - கடுக்காய்.

நெஞ்சகம் - நெஞ்சு.

நெஞ்சறிவிளக்கம் - ஓர் நூல்.

நெஞ்சு - மனம், மார்பு.

நெஞ்சுவிடுதூது - ஓர் பிரபந்தம், சைவசித்தாந்த நூல் பதினான்கி லொன்று.

நெடடெநெடெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.

நெடி - சிள்வண்டு, நாற்றம்.

நெடித்தல்-பொழுதுநீட்டித்தல்.

நெடியவட்டம் - மரவட்டணம்.

நெடியோன் - துளசி, விட்டுணு.

நெடிலடி - ஐஞ்சீரடி.

நெடிலி - ஓர் கடற்புள்.

நெடிலெதுகை-அடிதோறு நெடி லெழுத்தெதுகையாய்வருவது.

நெடில் - நீளம், நெட்டெழுத்து, மூங்கில்.

நெடுங்கழுத்தன் - ஒட்டகம்.

நெடுங்குரலன் - கழுதை.

நெடுங்கேடு - தீராக்கேடு.

நெடுநீர் - கடல்.

நெடுந்தகை - பெரியோன்.

நெடுந்தகைமை - மேன்மை.

நெடுந்துயில் -சாவு.

நெடுமால் - விட்டுணு.

நெடுமை - நீளம், பெண்மயிர்.

நெடுமொழி - தன்மேம்பாடுரைத்தல், புகழ்ச்சி.

நெடும்பா - ஆடாதொடை.

நெட்டி - நெட்டிச்செடி.

நெட்டிசை - நீண்டொலிக்கு மிசை, விருத்தம்.

நெட்டிலிங்கு - அசோகு.

நெட்டில் - மூங்கில்.

நெட்டு - இணுக்கு, காம்பு, குலை, சீய்த்தல், தள்ளுதல்.

நெட்டுயிர் - நெட்டொலிவுயிரெழுத்து, அஃது—இரண்டு மாத்திரையொலிப்பது.

நெட்டெழுத்து - கையொப்பம், நெடிலெழுத்து.

நெட்டை - நெடுமை, நெட்டி, முழுவெலும்பு.

நெத்தகர் - ஓர்பூடு.

நெய் - இரத்தம், சித்திரைநாள், நிணம், நெய், நெய்யென்னேவல், நெய்க்கடல், சத்தசமுத்திரத்தொன்று.

நெய்க்குறி - தேரையர் செய்த ஓர் வைத்திய நூல்.

நெய்க்கொட்டான் - பூவந்தி.

நெய்ச்சட்டி-குவளை, செங்கழுநீர்.

நெய்ச்சிட்டி - சிற்றிலைச்செடி.

நெய்ச்சுட்டி - ஓர் கீரை.

நெய்தல் - ஆடை முதலிய நெய்குதல், ஆம்பல், கடலுங் கடல் சார்ந்த இடமும், திணை.

நெய்தற்கருப்பொருள் - நெய்த நிலவினைப்பொருள்.

நெய்தற்குப்பொருள் - நெய்தனி லத்துற்பத்திபொருள்கள், அவை வருணன் முதற் கடலாடலீருயபதினன்கு.

நெய்தற்பதி - நெய்தற்றலைவன், நெய்நிலத்தூர்.

நெய்தற்பறை - சாப்பறை, நெய்த னிலப்பறை.

நெய்தற்றலைவன் - நெய்தனிலத் தலைவன், வருணன்.

நெய்தற்றிறம் - நெய்தற்பண்.

நெய்தற்றெய்வம் - வருணன்.

நெய்தனிலத்தலைவன்-சேர்ப்பன்.

நெய்தனிலத்தியாழ்-விளரியாழ்.

நெய்தனிலத்தினீர் - உவர்நீர்.

நெய்தனிலத்தூர் - பாக்கம்.

நெய்தநிலப்பறவை-கடற்காக்கை.

நெய்தனிலப்பறை - பம்பை.

நெய்தனிலப்பெண் - அளத்தி, நுளைச்சி, பரத்தி.

நெய்தனிலமரம் - அடம்பு, கோங்கு, தாழை, புன்னை, முள்ளி.

நெய்தனிலமாக்கடொழில் - கடலாடல், மீன் உப்புப்படுத்தல்.

நெய்தனிலமாக்கள் } அளவர்,
நெய்தன்மாக்கள் } நுளையர்.
பரதவர்.

நெய்தனிலமாக்களுணு - விலைக்குப் பெற்றன.

நெய்தன்முதற்பொருள்- கடலுங் கடல்சார்ந்தவிடமும், சிறுபொழுதாய வெற்பாடும், பெரும்பொழுதாறும்.

நெய்தை - பெருமை.

நெய்த்தோர் - இரத்தம்.

நெய்ப்பீர்க்கு - நுரைப்பீர்க்கு.

நெய்யரி - பன்னாடை.

நெய்யல் - நெய்தல்.

நெய்வார் - நெசவுகாரர்.

நெரிதரல் - ஓடல், சாய்தல்.

நெரிதல் - சாய்தல்.

நெரித்தல் - நெரியச்செய்தல்.

நெரிநெட்டி } சம்பம்
நெரிநெட்டிக்கோரை } புல்.

நெரிமீட்டான் - ஓர் பூண்டு.

நெரிவு - நெரிதல்.

நெருக்கடி - இக்கட்டு, கடுமை, பலவந்தம், வருத்தம்.

நெருக்கம் - இடைஞ்சல், இடைவிடாமை, ஒடுக்கம், கிட்டுமானம், நெருங்கல்.

நெருக்கல் - நெருக்குதல்.

நெருங்கல் - உறுதிச்சொல், கொல்லல், செறிவு.

நெருஞ்சில் - ஓர் முட்பூண்டு.

நெருடல் - இழைமுதலிய நெருடல், உறுதித்தடவல், வஞ்சித்தல்.

நெருநல் - முன்னை நாள்.

நெருப்பு - தீ.

நெருப்புக்கண் - சிவனது நெற்றிக்கண்.

நெருப்புக்கல் - தீத்தட்டிக்கல்.

நெருப்புறுவிறகு - நெருப்புக் கட்டை.

நெரேலெனல் - ஒலிக்குறிப்பு.

நெல் - ஓர் பயிர்.

நெல்லி - நெல்லிமரம்.

நெளி - கைவிரலணி, நெளியென்னேவல்.

நெளித்தல் - நெளிதல்.

நெளிர் } பேசலாலெழு
நெளிர்தல் } மொலி.

நெறநெறெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.

நெறி - ஒழுங்கு, கற்பு, சன்மார்க்கம், செவ்வை, நீதி, நெறியென்னேவல், வழி.

நெறித்தல் - செவ்வே நிற்றல்.

நெறியிலார் - கீழ்மக்கள்.

நெற்றி - நுதல், படைவகுப்பு.

நெற்றித்தலம் } நெற்றி.
நெற்றியந்தலம் }

நெற்று - பழமுதிர்ச்சி.

நென்னல் - முன்னை நாள்.

நே

நே - ஓரெழுத்து, நேயம்.

நேசகன் - வண்ணான்.

நேசம் - நேயம்.

நேசசன் - அன்பன்.

நேடல் - தேடல், விரும்பல்.

நேத்திரசம் - கண்ணீர்.

நேத்திரம் - கண், பட்டுச்சீலை.

நேத்திராஞ்சனம் - கண்மருந்து.

நேபாலிகை - ஓர் பாஷாணம்.

நேபாளம் - ஓர்தேசம்.

நேமம் - அணுப்பு, சாயங்காலம், நியமம், நேரம்,பங்கு, பிளப்பு, முறை, மேல், வேர், வேலி.

நேமி - ஓர்புள், கடல், சக்கரம், தேருருளை, பூமி, மூங்கில், வட்டம்.

நேமிநாதம் - ஓரிலக்கணநூல்.

நேமிநாதன் - அருகன், கடவுள், விட்டுணு.

நேமிப்புள் - சக்கரவாகப்புள்.

நேமியான் } விட்டுணு.
நேமியோன் }

நேமிவல்லவன்-அரசன், கடவுள்.

நேயம்-அன்பு,உறவு, எண்ணெய், நன்மை, நெய், நிலப்பனை.

நேர - உவமைச்சொல்.

நேரசை - குற்றெழுத்தேனும் நெட்டெழுத்தேனும் தனித்தும் ஒற்றடுத்தும் வருவது.

நேரசைக்கலித்துறை - நேரசையாய்த் தொடங்கும் கலித்துறை.

நேரடி - அளவடி.

நேரம் - காலம்.

நேரலர்
நேரார் } பகைவர்.

நேரி - ஓர்மலை.

நேரிசம் - எறிபடை.

நேரிசைக்கலிப்பா - கலிப்பாவி னோர்பேதம்.

நேரிசைச் சிந்தியல் வெண்பா - மூன்றடியாகி நேரிசை வெண்பாப்போல விரண்டாமடியி னிறுதி தனிச்சொற் பெற்று வருவது.

நேரிசையாசிரியப்பா - ஈற்றயலடி மூச்சீராக மற்றையடியெல்லா நாற்சீராக வருவது.

நேரிசையொத்தாழிசைக்கலிப்பா- ஓர்வகைக் கலிப்பா அஃது—தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகமென்னும், நான்குறுப் புக்கொண்டுவருவது.

நேரிசைவெண்பா - வெண்பாவி லோர்வகை.

நேரியன்
நேரிவெற்பன் } சோழன்.
நேரிறை

நேரேடம் } காவன்மரம்.
நேரேடு }

நேரொன்றாசிரியத்தளை - நேரும் நேரும் ஒன்றாசிரியத்தளை.

நேர் - உடன்பாடு, உவமை, செவ்வை, நீளம், நுட்பம், நேரசை, நேரென்னேவல், பாதி.

நேர்தல் - ஈதல், உடன் படல், எதிர்த்தல், கிட்டல், பொருதல், வேண்டல்.

நேர்த்தார் - சிநேகிதர்.

நேர்பாடு - நீளம்.

நேர்பு - எழுச்சி, நீளம்.

நேர்மை - இணக்கம், செவ்வை, நிதானம், நுண்மை.

நேர்வளம் - செவ்வழி யாழ்த்திறம், பாலையாழ்த்திறம்.

நேர்வாளம் - ஓர் மரம்.

நேர்வான் - சித்திரைநாள்.

நை

நை - இகழ்ச்சிக்குறிப்பு, ஓரெழுத்து, நையென்னேவல்.

நைசிகம் - ஓர் மருந்து, காக்கை, நசியம்.

நைடதம் - ஓர் காவியம், நிடதம்.

நைதல் - இரங்குதல், கெடுதல், தளர்தல், வாடல்.

நைதிகை - முல்லைக்கொடி.

நையுதனல் - இரக்கக் குறிப்பு, மெலிவின் குறிப்பு.

நைத்திகம் - நித்தியத்துவம்.

நைமிசம் }
நைமிசாரணியம் } ஓராரணியம்.

நைமித்தியம் - விசேடாராதனை.

நையாயிகம் - ஓர் மதம்.

நையாயிகன் - நையாயிகசமயி.

நைருதி - நிருதிதிசை.

நைவளம் - குறிஞ்சியாழ்த்திறம்.

நைவு - நைதல்.

நைவேத்தனம் - நிவேதனம்.

நைவேத்தியம் - காணிக்கை.

நொ

நொ-ஓரெழுத்து துன்பம், நொவ்வென்னேவல், நோய்.

நொசிவு - நுண்மை, வருத்தம்.

நொச்சி - ஓர் செடி, சிற்றூர், நொச்சிமாலை (தன்னரண்காப்பார்க்குமாலை), மதில்.

நொச்சிமாலை - ஓர் பிரபந்தம், நொச்சி.

நொடி - காலநுட்பம், சொல், நொடியென்னேவல்.

நொடித்தல் - சொல்லல், நொடிக்குதல்.

நொடை - விலை, விற்றல்.

நொண்டல் - நொண்டுதல், முகத்தல், விழுங்கல்.

நொண்டி - ஓர் நாடகவகை, கால்முடவன், பொய்க்கால்.

நொதி - பெருஞ்சேறு.

நொதுத்தல் - அவித்தல்.

நொதுமலர் - அயலோர்.

நொதுமல் - அயல்.

நொய் - பொய்மை.

நொய்தல் - நுண்மை.

நொய்தெனல் - சீக்கிரக்குறிப்பு.

நொய்மை - உருக்கம், எண்வகை யூறினொன்று, எளிமை, கேடு, தளர்வு, நொய்வு, மிருது, வறுமை.

நொய்யசொல் - நிந்தை.

நொய்யெனல் - நுண்மையின் குறிப்பு.

நொய்வு - நொய்மை.

நொலை
நொலையல் } அப்பவர்க்கம்.

நொவ்வு - தளர்வு, பொய்மை வருத்தம்.

நொள்கல் - அச்சக்குறிப்பு, முகத்தல்.

நொள்ளல் - கொசுகு, நுளம்பு.

நொள்ளை - குருடு, நாகரவண்டு.

நொறில் - அடக்கம், விரைவு.

நொறுங்கு - நொய்மை, நொறுங்கென்னேவல்.

நொறுங்குதல் - நொய்தாதல்.

நொன்னை - சரசம்.

நோ

நோ - ஓரெழுத்து, நோதல், நோவென்னேவல்.

நோக்கம்-அருமை, அழகு, உயர்ச்சி, கண்பார்வை, விருப்பம்.

நோக்கர் - கழைக்கூத்தர்.

நோக்கல் - காணல், காத்தல், கருத்துச் செலுத்தல்.

நோக்கு - அழகு, கண், நோக்கென்னேவல்.

நோண்டல் - கிண்டல், தோண்டல், மூகத்தல்.

நோதல் - துக்கித்தல், துன்புறல், நோயுறல், வறுமை.

நோயெச்சம் - நோய்க்குறை.

நோய் - துன்பம், வருத்தம், வியாதி.

நோய்முகன் - சனி.

நோலாமை - தவமின்மை, பொறையின்மை.

நோவு - நோய்.

நோழிகை - நூலிற்பந்து.

நோற்பு-தவம்,நோற்றல்,பொறுத்தல்.

நோற்றல் - தவஞ்செய்தல், பொறுத்தல்.

நோனமை - தவமின்மை, நோலாமை, பொறாமை.

நோனர் - தவமிலார், பகைவர்.

நோன்பு - உபவாசம், தவம்.

நோன்மை - தவம், பெருமை, பொறுமை, வலி.

நோன்றல் - தள்ளல், நிலை நிறுத்தல், பொறுத்தல்.

நோன்றாள் - வலியகால்.

ப

ப - ஓரெழுத்து, ஒருமாவின்குறி, காற்று, சாபம், பெரும் காற்று.

பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா- பல தாழிசைகளோடு மற்றை யுருப்புகளையும்பெற்றுவருவது.

பஃறாழிசைவெண்பா-ஓர் வெண் பா.

பஃறி-இரேவதி, ஓடம், மரக்கலம்.

பஃறுளி - குமரியாற்றிற்குத் தெற்கேயுள்ள தோராறு.

பஃறொடைவெண்பா-ஓர் வெண் பா.

பகடக்காரன் - அதட்டி, எத்தன், தந்திரி, வெளிவேஷக்காரன்.

பகடம் - சிலம்பம், தந்திரம், வெருட்டு, வெளிவேஷம்.

பகடு - ஆண்யானை, இடபம், எருமைக்கடா, ஓடம், தெப்பம், பெருமை, பொதியெருது.

பகடை - அதிர்ஷ்டம், சூதாயங்களிலொன்று.

பகட்டு - அதட்டு, தந்திரம், பகட்டென்னேவல், பார்வை, மினுக்கம், வெருட்டு, வெளிவேஷம்.

பகண்டை - இலுகிலுப்பை, சிவற் பக்ஷி.

பகபகெனல் - ஈரொலிக்குறிப்பு.

பகம் - அவாவின்மை, அழகு, ஈச்சுரத்தன்மை, கீர்த்தி, செல்வம், ஞானம் வீரியமாதியறு குணம், கொக்கு, பெண்குறி, மகத்துவம், முக்தி.

பகரம்-அலங்காரம், ஓரெழுத்து, சிறப்பு, மினுக்கம்.

பகர்ச்சி - சொல்.

பகர்தல் - சொல்லல், விற்றல்.

பகர்வு - பகர்தல்.

பகலவன் - சூரியன், பரணிநாள்.

பகலோன் - பகலவன்.

பகல் - ஒளி, சூரியன், தினம், நடு, நாள், நுகத்திலாணி, பகுத்தல், பிரிதல், பிளத்தல். மத்தியானம், மூர்த்தம்.

பகல்மானம் - பகனாழிகை.

பகவதி-தருமதேவதை, துர்க்கை, பார்வதி.

பகவதிநாள் - பூரநாள்.

பகவற்கீதை - மகாபாரதத்தி னோர்பாகம்.

பகவற்பத்தன் - தேவபத்தன்.

பகவன் - அயன், அரன், அரி, அருகன், கடவுள், குரு, புத்தன்.

பகவான் - கடவுள், துவாத சாதித்தரிலொருவன், சித்திரை.

பகவு - துண்டு, பங்கு, பிளப்பு, வெடியுப்பு.

பகழி - அம்பிற்குதை, அம்பு.

பகன் - ஓரசுரன், துவாதசாதித்தரிலொருவன்.

பகன்றை - கிலுகிலுப்பை, சீலேதை, சிந்தில்.

பகாசுரவைரி - வீமன்.

பகாப்பதம் - பகுப்பிற் பயன் படாப்பதம்.

பகாப்பொருள் - கடவுள்.

பகாரி - கண்ணன், வீமன்.

பகாலம் - கபாலம்.

பகிடி - பரிகாசம்.

பகிரண்டம் - பேரண்டம்.

பகிர் - பகிரென்னேவல், பகுப்பு, பங்கு, வெடியுப்பு.

பகிர்தல் - பங்கிடல், பிளத்தல்.

பகினி - உடன் பிறந்தாள்.

பகீரதன் - சூரியகுலத்தரசரிலொருவன்.

பகீரதி - கங்கை.

பகு - பகுவென்னேவல், பலது, வெகு.

பகுதி - இயல்பு, குடியிறை, பகுத்தல், பகுபதத்தோருறுப்பு, பங்கு, படை, பிரிவு, பிரகிருதி.

பகுத்தல் - ஈதல், தறித்தல், பங்கிடல், வெட்டல்.

பகுத்தறிதல் - பிரித்தறிதல்,மன நியாயமறிதல்.

பகுத்தறிவு - மனநியாயம்,நன்மை தீமை, தெளியுமறிவு.

பகுபதம் - பகுதி விகுதி முதலிய வுறுப்பினானியன்றபதம். அஃது இருவகை பெயர்ப்பகுதம், வினைப்பகுபதம்.

பகுபதவுறுப்பு - பகுபதத்தின் உறுப்பு—(பகுதி,விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி,விகாரம்).

பகுப்பு - பகுதி, பகுத்தல்,விரிவு.

பகுவாய் - அகன்றவாய், பிழா.

பகுளசத்தமி - கிருட்டிண பக்கச் சத்தமி.

பகுளம் - கிருட்டிண பக்கம்.

பகை - பகை, பகையென்னேவல், விரோதம்.

பகைஞர்-சத்துருக்கள், பகைவர்.

பகைத்தல் - பகைகொள்ளல், முரணல்.

பகைத்தானம் - ஆறுமிடம், கிரகநிலையிந்திரொன்று.

பகைத்தொடை-முரண்டொடை.

பகைநிலைகவர்தல் - பகைவரது காலிகளைக்கோடல், அஃது— எண்வகை வெற்றியினொன்று.

பகைப்பு- பகைத்தல், விரோதம்.

பகைமுன்னெதிருன்றல் - பகைவர்க்கு முன்னெதிர்த்தல், அஃது—எண்வகை வெற்றியி னென்று.

பகைமேற்செல்லல் - மாற்றாரைப் பொரப்போதல், இஃது—எண்வகை வெற்றியிஜென்று.

பகைமை - விரோதம்.

பகையகம் - போர்க்களம்.

பகோளம் - வானவட்டம்.

பக்கணம் - உண்டல், ஊர், பண்டம்விற்குமிடம், வேடர், வீதி.

பக்கம் - அருகு, இடம், இறகு, கோட்பாடு, சமீபம், நட்பு.

பக்கரசம் - மது.

பக்கரை - அங்கவடி, சேணம்.

பக்கர் - சுற்றத்தார்.

பக்கி-பக்கியென்னேவல், பறவை

பக்கித்தல் - உண்டல், புசித்தல்.

பக்குவம் - அமைதல், ஆத்ம பரிபாகம், பருவம், முதிர்வு.

பக்குவர் - மூவகைப் பக்குவமுடையோர் (கருமகாண்டிகர், ஞானகாண்டிகர், பத்திகாண்டிகர்.)

பக்குவாசயம் - அன்னுசயம்.

பக்குவாத்மா - பரிபாகி.

பங்கசம் - பங்கயம்.

பங்கசாதம் - தாமரை.

பங்கம் - அசைவு, அச்சம், ஈனம் எத்து, அலை, குழைசேறு, குளம், குற்றம், துண்டு, தூசு, தோல்வி, நீர்ப்பாய்ச்சல், நோய், பந்தயம், பயம், பழுது, பிளப்பு, பின்னம், புழுதி, முடம், வத்திரம், வெட்கம், வேறுபாடு.

பங்கம்பாலை } ஆடுதின்னாப்
பங்கம்பாளை } பாலை.

பங்கயத்தவன் - பிரமன்.

பங்கயம் - தாமரை.

பங்கயன் - சூரியன், பிரமன்.

பங்கயாசனன் - பிரமன்.

பங்கி - ஆண்மயிர், கஞ்சாமயிர், பிரிவு, புறமயிர்.

பங்கு - கூட்டு, கூறு, சனி, பாதி, முடம், முடவன்.

பங்குசம் - தலைக்கோலம்.

பங்குனன் - அருச்சுனன், பங்குனி.

பங்குனி - உத்திரநாள், ஓர்மாதம்.

பங்கூரம் - மரமஞ்சள்.

பங்கேருகம் - தாமரை.

பசத்தல் - துன்பத்தாளிறம் வேறுபடல், பசுமையாதல், மங்கல்.

பசப்பல் - பசப்புதல்.

பசப்பு - ஈரடிப்பிடிப்பு, ஏய்ப்பு, சாரம், பசலை, பச்சைநிறம், பொன்மை, மயப்பு.

பசமந்திரம் - மரமஞ்சள்.

பசலை - தேமல், பசப்பு.

பசளை - எரு முதலிய வுரம், ஓர் கீரை.

பசனம் - சங்கோசை, சமைத்தல், சிற்றின்பம், வணக்கம்.

பசனை - சேவை.

பசி - அக்கினி உதரக்கனல், பசியென்னேவல்.

பசித்தல் - உதரக்கனலெழும்பல்.

பசிரி } ஓர் கீரை.
பயிரி }

பசு - இடப இராசி, உயிர், எருது, பசு, யாகத்துக்குரியவாடு, (ஆன்மா).

பசுகரணம் - ஆத்மகரணம்.

பசுக்காவலர் - வைசியரில் ஒரு வகையர் (இடையர்).

பசுங்கதிர் - இளங்கதிர், சந்திரன்.

பசுங்கதிர்த்தே - சந்திரன்.

பசுங்கரந்தை - ஓர் கரந்தை.

பசுங்கொத்தான் - ஓர் கொத்தான்.

பசுதருமம் - கைமைப்புணர்ச்சி, பரதாரப்புணர்ச்சி, பொதுமக்கடன்மை, மனுநீதிவழு, மிருக நடை.

பசுத்துவம் - ஆத்துமதத்துவம், மிருகத்தனம்.

பசுநரம்பு - பச்சைநிறநரம்பு.

பசுநா - பிராய்மரம், வில்வம்.

பசந்து-அழகு, நேர்த்தி, பசுமை, மேன்மை.

பசுந்தக்காளி - ஓர் தக்காளி.

பசுபதி - அஷ்டமூர்த்திகளி லொருவன், சிவன்.

பசுபந்தம் - ஓர் யாகம்.

பசுபாசம் - மூலமலம்.

பசுபாலனம் - பசுக்காத்தல்.

பசுபாலன் - கோபாலன்.

பசுபாவம்-ஆத்மவியல்பு, உயிர்க் குச்செய்யும் பாவம்.

பசுமுன்னை - ஓர் முன்னை.

பசுமை - ஈரம், உண்மை, குளிர் மை, சாரம், சிறப்பு, செல்வம், செல்வி, பச்சை, பொன்னிறம், மெய்.

பசும்பிடி - பச்சிலை மரம்.

பசும்புல் - பச்சைப்புல், பயிர்.

பசை - அன்பு, ஆசை, இலாபம், ஈரம், ஒட்டும்பசை, குழைவு, சாரம், செந்தளிப்பு, தளைவு, பசையென்னேவல், பற்று, விருப்பம்.

பசைதல் - அன்புகொள்ளல், ஒட் டுதல், சாரமுடைத்தாதல், பசையாக்கல், பிசைதல்.

பசைந்தார் - சிநேகிதர்.

பசையற்றவன் - அமித்திரன், வறியன், வன்கண்ணன்.

பசைவு - அன்பு, நட்பு, பிசைதல்.

பச்சிமம் - நெற்றி, பின், மேற்கு.

பச்சிலை - ஓர்மரம், பசும்பிடி.

பச்சை - அவியாதது, இளமை, இன்பம், ஈரம், ஓர் நிறம், ஓர் புதர், தோல், பசுமை, புதன், மரகதம், மிகுதிக்குறிப்புச் சொல், மூலபல வருக்கம், வாசனை, விஷ்ணு.

பச்சைச்சடையன் - வயிரவன்.

பஞ்ச - ஐந்து.

பஞ்சகதி - துரககதியைந்து, அவை—மயூரகதி, மல்லகதி, வானரகதி, விடபகதி, வியாக்கிரகதி.

பஞ்சகந்தம் - வாசனைப்பொருளைந்து, அவை—இலவங்கம், ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம்.

பஞ்சகம் - ஐந்தின் கூட்டம், யுத்தகளம்.

பஞ்சகம்மாளர் - ஐவகைக்கம்மாளர், அவர்—கன்னார், கொல்லர், சிற்பர், தச்சர், தட்டார்.

பஞ்சகலை-ஐவகைக்கலை, அவை—சாந்தி, சாந்தியாதீதம், நிவிர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, (தத்துவம்).

பஞ்சகவ்வியம் - கோமயம், கோமூத்திரம், தயிர், நெய், பால், என்பன.

பஞ்சகன்னிகள் - ஐந்து கன்னிகைப்பெண்கள்; அவர்—அகலியை, சீதை, தாரை, துரோபதை, மந்தோதரி.

பஞ்சகாலம் - கருப்புக்காலம்.

பஞ்சகாவியம் - ஐவகைக்காப்பியம், அவை—குண்டலகேசி, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி.

பஞ்சகிருத்தியம் - பிரபஞ்சத்தொழிலைந்து, அவை—ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபாவம், அனுக்கிரகம்.

பஞ்சகுத்தம் - ஆமை.

பஞ்சகோசம் - அன்னமுதலியவைந்திஞலாயகூடு, அவை—அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம்.

பஞ்சகோலம் - சித்திரமூலம், சுக்கு, செவ்வியம், திப்பிலி, திப்பிலிமூலம்.

பஞ்சக்கருவி - ஐந்துவகைச்சத்தக்கருவி, அவை—கஞ்சம், கண்டம், துளை, தோல், நரம்பு இவற்றலாயது, அன்றியும் ஐந்து பொறி, அவை—கண், செவி, மூக்கு, மெய், வாய்.

பஞ்சசத்தி - இச்சாசத்தி, கிரியாசத்தி, சிற்சத்தி, ஞானசத்தி, பராசத்தி.

பஞ்சசயனம் - ஐந்தாலாயமெத்தை, அவை—அன்னத்தூவி, இலவம்பஞ்சு, செம்பஞ்சு, மயிற்றூவி மெத்தை, வெண்பஞ்சு.

பஞ்சசரன் - மன்மதன்.

பஞ்சசாகம் - முன்கை.

பஞ்சசாயகன் - மன்மதன்.

பஞ்சசிகை - சௌளம்பண்ணுவிடுமைந்திடம், அவை-தலையுச்சி, கண்புருவம், முழங்கை முதல் கை வரையும்.

பஞ்சசீலம் - கொல்லாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை, கள்ளாமை, காமமின்மை.

பஞ்சசுத்தி - ஐவகைச்சுத்தி, அவை-ஆத்மசுத்தி, இலிங்கசுத்தி, திரவிய சுத்தி, பூதசுத்தி, மந்திரசுத்தி.

பஞ்சணை - பஞ்சாலாயமெத்தை.

பஞ்சதசி - பூரணை, ஓர்வேதாந்த நூல்.

பஞ்சபட்சி - எழுத்துப்பொருத்தமறியுமைந்து பட்சி, அவை-வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் அவைகட்கு முறையே எழுத்து, அ, இ, உ, எ, ஒ; ஓர் சாத்திரம், வைப்புப் பாஷாணம் முப்பத்திரண்டினொன்று.

பஞ்சபல்லவம் - அருச்சனைக்கேற்ற ஐந்து பத்திரம், அவை-ஆத்தி, மா, முட்கிளுவை, முல்லை, வில்வம்.

பஞ்சபாணம் - மன்மதாத்திரமைந்து, அவை-அசோகு, முல்லை, வனசம், சூதம், நீலம், அவை முறையேதைக்குமிடம், உச்சி, நெற்றி, நெஞ்சு, முலை, குய்யம்.

பஞ்சபாணன் - மன்மதன்.

பஞ்சபாணி - பார்வதி.

பஞ்சபாரதீயம் - நாரதர் செய்த இசைத்தமிழ் நூல்.

பஞ்சமகதி - மோக்கம்.

பஞ்சமம் - அழகு, ஐந்து, ஓர் பண், சத்தசுரத்தொன்று, சமர்த்து.

பஞ்சமலம் - ஐந்துமலம்.

பஞ்சமி - ஐந்தாந்திதி (அவிட்ட முதலைந்து நாள்.)

பஞ்சமூலம் - (தசமூலம்) சிறு பஞ்சமூலம்: கண்டங்கத்தரி வேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லி வேர், நெருஞ்சிவேர். பெரும் பஞ்சமூலம்: வில்வ வேர், பெருங்குமிழ், தழுதாழை, பாதிரிவேர், வாகை.

பஞ்சம் - ஐந்து, கருப்பு, விழுதல்.

பஞ்சரத்தினம் - ஐவகை நிதி: சுகந்தி, பொன், மரகதம், மாணிக்கம், முத்து, ஓர் பிரபந்தம்.

பஞ்சரம் - இடம், உடல், கழுகு, கூடு, செருந்திமரம், பன்னுங் கூடு, மட்கலம் வளையுங்கூடம்.

பஞ்சரித்தல் - உபசாரமாய்ப் பேசல், குதலைபேசல், கெஞ்சிக்கேட்டல், விரிவாய்ப்பேசல்.

பஞ்சலட்சணம் - இலக்கணமைந்து, அவை—எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, புராணவுறுப்பைந்து, அவை—சரிதைத்தலைவர் வமிசம், பிரபஞ்சத்தோற்றம், பிரபஞ்சநாசம், மனுக்களரசாட்சி, மனுவமிச வரலாறு.

பஞ்சலோகம் - ஐந்துலோகம், அவை-இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளி.

பஞ்சவடி - ஓர் தலம்.

பஞ்சவர் - பாண்டு மக்கள்.

பஞ்சவர்ஆதன் - கண்ணன்.

பஞ்சவன்னம் - ஐந்துவன்னம், அவை-கருமை, செம்மை, பச்சை, மஞ்சள், வெண்மை.

பஞ்சவன் - பாண்டியன்.

பஞ்சவாசம் - ஐவகைவாசம், அவை—இலவங்கம், ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம்.

பஞ்சவிடயம் - ஐந்துபொறியினுலறியப்படுவன, அவை—இரசம், உருபம், கந்தம், சத்தம், பரிசம்.

பஞ்சனம் - அழித்தல்.

பஞ்சாங்கம் - ஆமை, குதிரை, சோதிடத்திற்குரிய வைந் துறுப்பு, அவை—திதி, நட் சத்திரம், வாரம், யோகம், கரணம்.

பஞ்சாநநம் - சிங்கம்.

பஞ்சாநநன் - சிவன்.

பஞ்சாய் - கோரை.

பஞ்சி - தூறு, பஞ்சு.

பஞ்சிகம் - தாளி.

பஞ்சிதம் - விண்மீன்.

பஞ்சு - சீலை, தூறு, நூற்கும் பஞ்சு, பருத்தி.

பஞ்சுரம் - ஓர்பண், குறிஞ்சி யாழ்த்திறம், பாலைநிலத்திரா கம்.

பஞ்சூகம் - பெருமை.

பஞ்சை - எளிமை, தரித்திரன்.

படகம் - இரணபேரி, கலகம், கவரிமா, கோல், தம்பட்டம், திரைச்சீலை, பரண், விஷ்ணு கரந்தை.

படகாரன்-ஓவியன், நெய்வோன்.

படகு - தெப்பம்.

படக்குப்படெனல் - அச்சக் குறிப்பு, அடித்தல், ஈரடுக் கொலிக் குறிப்பு.

படங்கு - கூடாரம், சலாகை, பெருங்கொடி, பெருவரிச்சல், மெய்போற் பேசுதல், மேற் கட்டி, பதங்கம்.

படபடப்பு - துடிதுடிப்பு, விரைதல்.

படப்பம் - மருங்கிலூர் சூழ்பதி.

படப்பை - ஆவின்கொட்டில், கொல்லை, நாடு, மருதநிலத்தூர்.

படமஞ்சரி - ஓரிராகம்.

படம் - எழுதும்படம், காற்றோட்டி, சீலை, திரைச்சீலை, பாம்பின் படம், யானைமுகபடாம், விருதுக்கொடி.

படர் - இழிமக்கள், ஏவல் செய்வோர், கருத்து, செலவு, துகிற்கொடி, துன்பம், துன்புறுவோர், நடை, நினைப்பு, நோவு, பகை, படரென்னேவல், படைவீரர், மேடு, வருத்தம், வழி.

படர்க்கை - மூன்றுமிடம்.

படர்ச்சி - நடை, பரப்பு, பரவுதல்.

படர்தல் - அகலம் நடத்தல், நினைத்தல், பரவுதல், விரிதல்.

படலம் - அடுக்கு, அதிகரிப்பு, இரத்தினக்குற்றம், இலக்கியச் செய்யுட் கூறுபாடு, கூட்டம், திசை, திலகம், நேத்திரபடலம், பரிவாரம், படல், மூடி.

படலிகை - இளைப்பு, கைமணி, படலம், பூந்தட்டு, பெரும்பீர்க்கு, வட்டம், வட்டவடிவு.

படலை - கட்டுக்கதவு, கோத்தமாலை, தார்மணி, பிறந்தவடிவு, பரந்த வாய்ப்பறை, பூமாலை, வெளிக்கதவு.

படல் - அகப்படுதல், அத்தமித்தல், உண்டாதல், ஒன்றுடனே தோய்தல், கெடுதல், சாதல், தட்டி, தெறித்தல், படுதல், பதிதல், புலனிலேறுதல், பூத்தல், முட்டுதல்.

படவாசம் - கூடாரம்.

படிவை - செருப்படி.

படனம் - படித்தல், மனப்பாடம், வாசித்தல்.

படன் - இழிகுலன், படைவீரன்.

படாப்பழி - பெரும்பழி.

படாரெனல் - ஒலிக்குறிப்பு.

படி - ஒப்பு, ஓரளவு, குணம், குதிரையங்கபடி, சம்பளம், சோபானம், தரம், தாழ்வாரம், நாழி, நிறையறிபடி, நீர்நிலை, நூறு பலங்கொண்ட நிறை, பகை, படியென்னேவல், பூமி, வாயிற்படி, விதம்.

படிகட்டுதல் - இடைகட்டுதல், படிகொடுத்தல்.

படிகம்-கூத்து, பளிங்கு, பிச்சை, வெள்ளிலோத்திரம்.

படிகர் - வாயிலார்.

படிசம் - தூண்டில்.

படிதல் - அமருதல், அமைதல், கலத்தல், குளித்தல், கூத்து, திருந்தல்.

படித்தரம் - கட்டளை, நிபந்தனை.

படித்தல் - சொல்லுதல், பழகுதல், வாசித்தல்.

படித்திரம் - சூட்டிரைச்சி.

படிப்பனே - சமர்த்து, படிப்பு, போதனே.

படிப்பினே - படிப்பளவு, வங்க மணல்.

படிப்பு - அறிவு, கல்வி, சொல்லல், பழக்கம், புத்தி, வாசனே, வாசிப்பு.

படிமதாளம்-நவதாளத்தொன்று.

படிமம்-கண்ணுடி, சுத்தம், பாவை, வெண்மை, வெறியாட்டு.

படிமானம் - கீழ்படிதல், தகுதி, திருத்தம், விலே குறைதல்.

படிமை - தவவேடம்.

படிவம் - உடலுருவம், உடல், சித்திரரூபம், நோன்பு, வடிவு.

படிவு - அடங்குகை, அழுந்துகை, கீழ்ப்படிவு, குளித்தல், தாங்குதல், தாழ்தல், வணக்கம், வடிவு.

படிறர் - திருடர், தூர்த்தர், பொய்யர், வஞ்சகர்.

படிறு - களவு, பொய், வஞ்சகம்.

படீரம் - உதரம், உயரம், சந்தனம், சிவப்பு, வயல், வாதம்.

படு - உப்பு, குலே, கள், குளம், கூர்மை, கொத்து, சம்பத்து, நன்மை, நீர் நிலே, படுவென்னேவல், மரக்குலே, மிகுதிக் குறிப்பு, வெப்பம்.

படுகர் - இழிந்தேறும்வழி, குளம், பள்ளம், மருதநிலம், வயல்.

படுகை - ஆற்றங்கரை யடுத்த வயல்.

படுக்கை - அடிப்பட்டடை, படுத்தல், பல்லணம், மக்கட்படுக்கை, விலங்கின் படுக்கை.

படுதல் - அகப்படுதல், அத்தமித்தல், இல்லாமை, உண்டாதல், ஒலி, சகித்தல், சாதல், படுந்தன்மை, பதித்தல், புலப்படுதல், பூத்தல், முட்டுதல்.

படுத்தல் - அகப்படுதல், கொலைசெய்தல், சயனித்தல், சயனிப்பித்தல், செய்தல், செறித்தல்.

படுநிலம் - பாலைநிலம், மயானம், யுத்தபூமி.

படுவன் - ஓர் சிலந்தி, ஓர் போய், ஓர் பூண்டு.

படுவான்-அழிவான், மேற்றிசை.

படை - அடுக்கு, ஆயுதம், கலப்பை, கல்லணை, செதிள், தானை, இஃது - அரசியலிறென்று, திரள், நித்திரை, நிரை, படையென்னேவல், போர், போர்ப்படை, மெத்தை.

படைக்கலம் - ஆயுதப்பொது.

படைச்சால் - உழவுசால்.

படைத்தலைவன் - சேனாதிபதி.

படைத்தல் - உடைத்தாதல், சிருட்டித்தல், சோறு முதலியவுண்கலத்திடுதல்.

படைத்துணை - போர்க்குதவி, போர்த்துணைவன்.

படைபயிற்றல்-சிலம்பம்பழக்கல்.

படைப்பு-சம்பாத்தியம், சிருட்டி, சிருட்டிக்கப்பட்டது.

படையன் - அடித்தல், அடிமை.

படையிறங்குதல் - பாளையம் போடுதல்.

படையுறுப்பு - படையணி.

படையுறை - ஆயுதவுறை.

படையெடுத்தல்-சேனையெழுதல்

படைவீடு - ஆயுதசாலை, தேவாலயம், பாசறை.

படோலம் - யானைக்கட்டுத்தறி, முள்ளு வெள்ளரி.

படோலி - நிலவு.

படோலிகை - புடல்.

படோல் - பேய்ப்புடல்.

பட்சம் - உருக்கம், செட்டை, தரம், நேசம், பக்கம், பதினைந்து நாட்கொண்டது, மீனம்பர், வகுப்பு.

பட்டகம் - பண்டசாலை, புழுக்கொல்லிச்செடி.

பட்டங்கட்டி - கைக்கோளரிற்றலைவன், நெய்த நிலமக்களிற் றலைவன், பட்டவத்தனன்.

பட்டஞ்சூடுதல் - அபிஷேகமடைதல், பட்டமணிதல்.

பட்டடை - அடைகல், கழுத் தணி, குவியல், தலை தாங்கி, தாங்கு பலகை, தாபரம், தானிய உறை, நரம்புகளின் இளி.

பட்டம் - ஆயுதம், எழுதும்படி செய்ததகடு, கடுதாசிப்பட்டம், கவரிமா,குளம்,சதுக்கம், சீலை, தீர்க்கம், நாற்காலி, நெற்றிப் பட்டம், பட்டினம், பரிசை, மனிதர் படுக்கை, வழி, வாள், விலங்கின்படுக்கை,பட்டப்பேர்

பட்டயம் - பிரசித்தப்பத்திரிகை, வாள்.

பட்டாங்கு - ஊழ், சித்திரச் சேலை, பரிகாசம், மெய்.

பட்டாபிஷேகம் - பட்டந்தரித் தல், முடிசூட்டுதல்.

பட்டாரகர் - கடவுள், குருக்கள்.

பட்டாரகன் - அரசன், அருகன், கடவுள், குரு, சூரியன்.

பட்டி - அட்டவணை, ஆட்டுக் கிடை, இடம், ஓர் செடி, ஓர் சிகிச்சை, களவு, கள்வன், சிற் றூர், சீலை, தெப்பம், நாய், நெகிழ்ச்சி, படலி, பலகறை, பிள்ளை, மந்தை, வாலையென்னுமோர் கருவி, விக்கிரமாதித்தன் மந் திரி, வெற்றிலைச்சுருள், வேசி.

பட்டிகை - அரைநாண், சீலை, சீந்தில், செவ்வந்தி, தெப்பம், தோணி, மூலைக்கச்சு.

பட்டிடை - நந்தியாவட்டை.

பட்டிமை - களவு, வஞ்சம்.

பட்டினம்-ஊர், நெய்த நிலத்தூர்.

பட்டு - உல்லாசம், சிற்றூர், பட்டுச்சீலை, மடிப்பு.

பட்டை - மரத்தோல்.

பணாமணி - நாகமணி.

பணம் - காசு, கிரகம், சூதாடுதல், திரவியம், பருமை, பாம்பின் படம், பாம்பு,பொற்காசு, வியாபாரச் சரக்கு.

பணயம் - அடகு,பணம்,பொருத்தம் பணம்.

பணவம் - தம்பட்டம்.

பணவிடை - வராகனிலொன் பதிலொருபங்கு.

பணவை - அட்டாலை, ஓரளவு, கழுகு, தாங்கு பலகை, பரண்.

பணாடவி - ஆதிசேடன்.

பணி - ஆபரணம், ஈகை, எருமை, ஏவல், கட்டளை, செய்கை, சொல், தொண்டு, தொழில், தோற் கருவி, பட்டாடை, பணியென்னேவல், பாம்பு, வார்த்தை, வேலை.

பணிக்கம் - திருத்தம்.

பணிக்கன் - உபாத்தியாயன்.

பணிக்கு - ஆசான்வேலை, பணிக்கை.

பணிச்சக்கரம் - வித்திடும் திணக் குறிப்புச் சக்கரம்.

பணிதல் - இறங்கல், உண்டடல், குறைதல், தாழ்தல், வணங்கல், வளைதல்.

பணித்தல் - ஈதல், ஏவுதல், கட்டளையிடல், குறைத்தல், கொடுத்தல், சொல்லல், தாழ்த்தல்.

பணிப்பெண் - குற்றேவற்காரி.

பணிமொழி - பணிந்தவார்த்தை.

பணியல் - வணங்கல்.

பணியார் - பகைவர்.

பணியிறுக்கு-தண்ணீர் விட்டான்

பணிலம் - சங்கு, வலம்புரிச் சங்கு, வார்த்தை.

பணிவு - தாழ்வு, பதுங்குகை, வணக்கம்.

பணை - அரசமரம், குதிரைப் பந்தி, பணையென்னேவல், பருமை, பழைப்பொது, பிழைத்தல், பெருமை, மரக் கொம்பு, மருதநிலப்பறை, மருதநிலம், முரசு, மூங்கில், வயல், விலங்கின் படுக்கை.

பணைத்தல் - கிளைத்தல், பருத்தல், பிழைத்தல்.

பணைத்திராய் - ஓர் பூண்டு.

பணையம் - பணயம்.

பண் - அமைவு, இசைப்பாட்டு, ஓரொழியம், குதிரைக்கல்லணை, சீர், செவ்வை, தகுதி, நிந்தை, நிறை நரம்புள்ள வீணை, நீர்நிலை, படுகுழி, பண்ணென்னேவல், பாய்மரக்கயிறு, மகளிர் கூட்டம்.

பண்கொடி - பிரம்பு.

பண்செய்தல் - பணிவிடை செய்தல், பண் படுத்தல்.

பண்டகேந்திரம் - ஓர் கணிதம்.

பண்டசாலை - அணிகலன் முதலியவைக்கும் வீடு, களஞ்சியம்.

பண்டமாற்று - விற்பனவு.

பண்டம் - உணவுப்பொருள், கலைஞானம், தானியம், பண்ணிகாரம், பொருள், பொன், மெய்யறிவு, வயிறு.

பண்டர் - பாட்டிற் கீழ் மக்கள்.

பண்டனம் - போர்.

பண்டாகி - கத்தரி.

பண்டாரம் - பலபண்டம், பொக்கசம்.

பண்டி - உரோகணிநாள், பண்டி, வயிறு.

பண்டிதன் - சுக்கிரன், புதன், புலவன், வைத்தியன்.

பண்டிலன் - ஆதன்.

பண்டு - பழமை.

பண்டுகம் - அசமதாகம், செவ்வகத்தி.

பண்டை - கல்வி, ஞானம், பண்டு.

பண்டையர்
பண்டையோர் } முன்னோர்.

பண்ணல் - செய்தல்.

பண்ணவர் - கடவுளர், குருமார், திண்ணியர், தேவர், பாடகர், முனிவர்.

பண்ணவன் - அருகன், ஆசிரியன், கடவுள், குரு, திண்ணியன், தேவன், பாடகன்.

பண்ணிகாரம்
பண்ணியங்கூலம் } பலபண்டம்.

பண்ணியம் - அப்பவர்க்கம், பல பண்டம், விலைப்பொருள்.

பண்ணுவர் - குதிரைப்பாகர், யானைப்பாகர்.

பண்ணுறுத்தல் - சீர்ப்படுத்தல், வாகனங்களை ஆயத்தம் பண்ணல்.

பண்ணை - ஓர் கீரை, குளம், சமுசாரம், தோப்பு, நீர்நிலை, படகு, மனை, மகளிர் கூட்டம், மகளிர் விளையாட்டு, மரக்கலம், மருதநிலம், வயல், விலங்கின்படுக்கை விலங்கின்மேற் சேணம், விவசாயம்.

பண்படல் - செவ்விதாதல்.

பண்படி - பண்புப்பகுதி.

பண்படுதல் - அமைதல், உதவுதல், ஏவல் செய்தல், சீர்திருந்தல், சொற்படி செய்தல்.

பண்பாகுபெயர் - பண்பினாலாய ஆக்கப்பெயர்.

பண்பி - பண்பையுடைய பொருள் நிலை.

பண்பிற்பகாநிலைப்பதம் - சொல் நிலையால் பகுபதங்கள் ஆயினும் பகுதி ஆய பண்புப்பொருளின்றும் வேறு பொருள் பகுப்படாத பதம்.

பண்பு - அளவு, குணத்தோடு குணிக்குண்டாகும் ஒற்றுமை நயம், தகுதி, வண்ணம், வடிவு விதம், சுவை முதலியவை பற்றி வருவது, ஐம்பொறிகளால் உணரப்படுவது.

பண்புத்தற்கிழமை - குணசம்பந்தப்பொருள்.

பண்புத்தொகை - ஆகிய முதலி பண்புருவு தொக்கி நிற்பவை.

பண்புப்பெயர் - உரிப்பெயர்.

பண்புமறிநிலை - ஓரலங்காரம்.

பண்புரிச்சொல் - பொறிகளாலறியப்படுங்குணம்.

பண்புரைப்பார் - தூதர்.

பண்புவமை - ஒன்றின் பண்பை மற்றொன்றிற் கொப்பிடுவது.

பண்மை - தகுதி.

பதகம் - பறவை.

பதகன் - கீழ்மகன், பாதகன்.

பதகை - திரிபதகை.

பதக்கம்-பதக்கம், மாதரணிவடம்.

பதக்கு - இரண்டு மரக்கால் கொண்ட ஓர் அளவை.

பதங்கமம் - பறவைப்பொது, விட்டில்.

பதங்கம் - திராவகம், பறவைப் பொது, பாதரசம், விட்டில்.

பதங்கன் - சூரியன்.

பதங்கு - ஓட்டு வரிசை, குழி, பிளவு.

பதசம் - பறவை.

பதச்சேதம் - சொற் பிரிப்பு.

பதடி - பதர்.

பதணம்-மதிலுண்மேடை, மதில்.

பதம்யாசம்-ஓர்பூடு, காலடி, நடை.

பதபஞ்சனம் - சொல்லிலக்கணம், சொற் பிரிவு.

பதபதெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.

பதபாதம் - காலடி.

பதப்பால் - மதிலுறுப்பு.

பதப்புணர்ச்சி - சொல்லொடு சொல் கூடுதல், நிலைமொழி வருமொழிகள் புணரும் புணர்ச்சி.

பதப்பேறு - பதமுத்திபெறல்.

பதப்பொருட்காட்சியணி - ஓர லங்காரம்.

பதப்பொருத்தம் - சொற்பொருத்தம்.

பதப்பொருள்-பதவுரை, அஃது— உரையிலக்கணமைந்தி ஞென்று.

பதமம் - சந்திரன், பறவை, விட்டிற் பறவை.

பதமுடித்தல் - பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரமெனு மாறையும் கொண்டு மொழிகளைப் பிரித்துக்காட்டல்.

பதமை - அமைதி, இணக்கம், தாழ்மை, மிருது, மெத்தனவு, மெல்லோசை.

பதமுத்தி - ஞானம், பதார்த்த முத்தி, பதவிமுத்தி.

பதம் - அடையாளம், அழகு, அறுகு, ஆடை, இடம், இன்பம், ஈரம், உண்டல், எழுத்தாயைபதம், ஒளி, ஓர்மொழியிற் பிரகிருதியாய் நிற்பது, கால், காலம், குழைவு, கூர்மை, கொக்கு, சிந்து, சொல், சோறு, தின்றல், தெரு, நாழிகை, பக்குவம், பதவி, பாவினோருறுப்பு, பூரட்டாதி, பொருள், பொழுது, முயற்சி, வரிசை, வழி, வேஷம்.

பதரி - இலந்தை.

பதர் - அற்பம், பலனற்றது.

பதலை - சிறுமலை, தாழி, தோணி, மத்தளம், மரக்கலம், மலை, வாயகன்றபறை.

பதவி - கடவுளர் பதவி— சாலோகம், சாமீப்யம், சாரூபயம், சாயுச்சியம், இடம், உலம், ஒழுங்கு, கதி, செல்வம், நிலை, நிலைபரம், முத்திவழி.

பதவியகுணம் - மெத்தெனவு.

பதவியடைதல் - கதியடைதல், பாதமடைதல்.

பதவியது - சாதுவானது, மிருதுவானது.

பதவியல் - நன்னூலிலோரியல், பதப்புணர்ச்சி யிலக்கணம்.

பதவுரை - சொற்றோறும் பொருளுரைத்தல்.

பதவை - வழி.

பதறல் - தளம்புதல், திடுக்கிடல், நடுங்கல், வரைதல்.

பதனகேந்திரம் - கிரகவிட்சேப கேந்திரம், உதயத்திலிருந்து நாலாம் எழாம் பத்தாமிடம்.

பதனம் - இறக்கம், இறக்குதல், களைதல், தாழ்தல், பத்திரம், பாவம், பேணல், போதல், வியோமாட்சரேகை, விழுதல்.

பதனழிதல் - ஊழ்த்தல்.

பதன் - பக்குவம், பதம்.

பதாகன் - அரசன்.

பதாகினி - படை.

பதாகை - அடையாளம், அதிட்டம், கூத்திஞேர்விகற்பம், விருதுக்கொடி.

பதாசனம் - பாதபீடிகை.

பதாதி - அமைதியின்மை, காலாள், படை, படையிஞேர் தொகை.

பதாரம் - காலிற்றுகள், தெப்பம்.

பதார்த்தசாரம்-ஓர்வைத்தியநூல்.

பதார்த்தசிந்தாமணி - ஓர் வைத்தியநூல்.

பதார்த்தம் - கறி, பதப்பொருள், பாக்கியம், பொருள்.

பதி - அரசன், இடம், ஊர், எப்பொருட்குமிறைவன், குரு, கொழுநன், சிவன், தலைவன், நகரம், பதித்தல், பதியென்னேவல், பதிவு, பூமி, மருதநிலத்தார், மூத்தோன், வீடு, வேர்.

பதிகம் - பத்துச்செய்யுளான்முற்றுப்பெற்ற செய்யுள், பாசி, பாயிரம்.

பதிகன் - காலாள், வழிச்செல்வோன்.

பதிக்கினி - கணவனைக்கொல்லி.

பதிசேவை - புருஷனுக்குக் கீழ்படிதல்.

பதிச்சம் - வாலுளுவை.

பதிஞானம் - சிவஞானம்.

பதிதம் - கூத்திஞேர்விகற்பம், தவறு.

பதிதல் - அழுந்துதல், ஊன்றல், எழுத்துப்பதிதல், ஒடுங்குதல், கீழ்ப்படிதல், தங்குதல், தாழ்தல், பணிதல், பள்ளமாதல்.

பதிதன் - குலஞ்சமய முதலிய வொழுக்கத்திற்றுறந்தோன்.

பதித்தல் - புதைத்தல்.

பதித்திரி - உலைத்துருத்தி.

பதிநூல் - கடவுளது தன்மையை விளக்கு நூல்.

பதிபக்தி - நாயகவிசுவாசம்.

பதிபடை - பதிவிருக்குஞ்சேனை.

பதிப்பிரஞ்ஞன் - வழியறிந்தோன்.

பதிப்பிராணை } கற்புடையாள், பதிவிரதை } பத்தினி.

பதியம் - பதிக்கப்பட்ட நாற்று, பத்துச்செய்யுளான் முடியும் பிரபந்தம், பாசி, பாசிப்பூடு.

பதிரன் - செவிடன்.

பதிவு - குனிவு, சாய்வு, பதிதல்.

பதிற்றந்தாதி - ஓர் பிரபந்தம்.

பதிற்றுப்பத்து - எட்டுத்தொகையுள் நான்காவது நூல்.

பதுக்கை - சிறு திட்டை, சிறுதூறு, பாறை.

பதுங்கல் - ஒளித்தல்.

பதுமகோசம் - கரலட்சண மிருபத்து மூன்றினென்று, அஃது—ஐந்து விரல்களும் மேனேக்க விற்போல் வளைத் துக் காட்டுவது.

பதுமக்காழ் - தாமரைவிதை.

பதுமநாபன் - விட்டுணு.

பதுமநிதி - தாமரையுருவாய்க் கிடக்கும் பொன், அஃது— இந்திரனிருவகை நிதிகளி லொன்று, குபேரன் நவநிதி களினுமொன்று.

பதுமபந்து - சூரியன், தேனீ.

பதுமம் - அட்டாதசபுராணத் தொன்று, ஈயம், கோடா கோடி, சோதிநாள், தாமரை, முடியுறுப்பு, யோகி நிலையி னொன்று.

பதுமயோனி - பிரமன்.

பதுமராகம் - செம்பு, நவமணியி லொன்று.

பதுமரேகை - கைரேகையி லொன்று.

பதுமனர் - ஒருரையாசிரியர், (நாலடியார்)

பதுமன் - அட்டநாகத்தொன்று, பிரமன்.

பதுமினி - நால்வகைப் பெண் களில் முதலவள்.

பதுமை - இலக்குமி, பதிமை.

பதைத்தல் - அச்சக்குறிப்பு.

பதோதகம் - நடையினீர் பருகல், பாததீர்த்தம்.

பத்தகேசரி - கருப்பூரம்.

பத்ததி - ஒழுங்கு, கருமங்களை விதிக்கிற வொருநூல், சொற்பயன், வழி.

பத்தம் - உணு, உண்மை, கட்டு, நன்றியறிகை.

பத்தல் - நீரிறைக்கும் பத்தல், யாழிலோருறுப்பு.

பத்தன் - அன்புடையோன், தொண்டன்.

பத்தா - புருடன்.

பத்தி - அடைப்பு, அன்பு, ஆராதனை, ஒழுக்கம், ஒழுங்கு, தூணினிடை, வெளி, தொண்டு, நடை, நம்பிக்கை, நிரை, பங்கு, பதாதி, பாத்தி, முறைமை, வரிசை, வழிபாடு, விசுவாசம்.

பத்திகாண்டிதர் - மூவகைப்பக்குவரிலொருவகுப்பார்.

பத்தியம் - ஆந்திரமாரியமிவற்றின் செய்யுள், இணக்கம், இதம், கடமரம், தமிழ், பாடல், போசனம், மருந்திற்கிசைந்த புசிப்பு.

பத்திரம் - அம்பு, அழகு, இலை, இறகு, உடைவாள், மலை, முடி புறுப்பு.

பத்திரவாகன் - சீட்டோலை கொண்டு போவோன்.

பத்திரன் - சிவன், வீரபத்திரன்.
பத்திராசனம் - சிங்காசனம்.
பத்திரி - அம்பு, இலை, காளி, குதிரை, பறவை.
பத்திரை - இரண்டாம் ஏழாம் பன்னிரண்டாந் திதி, காளி, நற்பசு, மஞ்சள்.
பத்திரைகேள்வன்-வீரபத்திரன்.
பத்திரோதகம் - இலைமேற்றங்கு நீர்.
பத்தினி - கற்புடையாள்.
பத்து - ஓரெண்.
பந்தகம் - பந்தனை.
பந்தம் - அழகு, உண்டை, உறவு ஏற்பாடு, கட்டு, கயிறு, கொண்டை, கைவிளக்கு, தளை, இஃது — யாப்புறுப்பெட்டி னொன்று, திரட்சி, தீக்கொளுத்தும் பந்து, தொடர், பெருந்துருத்தி, மதில், மயிர் முடி, முடிச்சு, முறை, விலங்கு.
பந்தர் - ஓர் நகர், பந்தல், பாசத்துக்குள்ளானவர்கள், நிழல்.
பந்தனம் - அரைஞாண், கட்டல், கட்டு, காவல் செய்தல்.
பந்தனாலயம் - சிறைச்சாலை.
பந்தனை - பந்தித்தல், மகள்.
பந்தன் - சீர்பந்த பாஷாணம்.
பந்தி - ஒழுங்கு, ஓர்பண், கீர்த்தி, குதிரை, யானை நிற்குஞ்சாலை, கூட்டம், சபை, பந்தியென்னேவல்.

பந்தித்தல் - பிணித்தல்.

பந்து - உறவு, சுற்றம், திரட்சி, திரிகை, மட்டத்துருபதி, விளையாடும் பந்து.

பந்தரம் - அழகு.

பந்துவராளி - ஓர்ராகம்.

பப்பரப்புளி - தொதி, பெருக்க மரம்.

பப்பரம் - ஓர்தேசம், பதினெண் பாடையிலொன்று, பருப்பம்.

பப்பரவாகனன் - அருச்சுனன் குமாரன்.

பப்பு - ஒப்பு, பரப்பு.

பப்புவர் - புகழ்வோர்.

பமரம் - பிரமரம், பேரொலி, வண்டு.

பம் - கிரகம், விண்மீன்.

பம்பரம் - மந்தரமலை, விளையாடுங்கருவி.

பம்பல் - ஆரவாரித்தல், எழுச்சி, நெருங்கல், பரவல், பொலிதல்,

பம்பை - ஓர் நதி, ஓர்வாத்தியம், முல்லை நிலப்பறை.

பம்மல் - செம்முதல், பொருத்திக்கட்டுகை, மந்தாரம், மந்திப்பு, மூடுதல்.

பயங்கரம் - அச்சம், பயப்படுதல்.

பயசு - நீர், பால்.

பயத்தல் - உண்டாதல், கிடைத்தல், பெறுதல்.

பயந்தாள் - தாய்.
பயப்படல் - அஞ்சல்.
பயப்பு - கிருபை, நிறம், பசப்பு.
பயம் - அச்சம், அமிர்தம், குளம், சுதை, நீர், பயன், பால், மன்னர் விழைச்சி.
பயம்பு - பள்ளம்,யானைபடுக்குழி.
பயல் - பையல்—பையன்.
பயறு - சித்திரைநாள், பயறு.
பயனிலான் - வேசி.
பயனிலை - பயன்முடிவு, பொருண் முடிபு.
பயனிலசொல்லல் - நால்வகை யிழிசொல் லொன்று, கோள், பொய்மொழி, கடுஞ்சொல்.
பயனுரைத்தல் - உரைசொல்லுதல்.
பயனுவமம் } ஒருவமாலங்
பயனுவமை } காரம்.
பயன் - அகலம், இலாபம்,சொல்லுரை, நீர், பலன், பால்.
பயானகம்-அச்சம், இராகு, சுவை ஒன்பதினொன்று, புலி.
பயிக்கம் - பிச்சை.
பயிர் - இடும்பயிர், பயில், பறவைக்குரல், விலங்கொலி.
பயிர்த்தல்-பேசலாலெழுமொலி.
பயிர்ப்பு - அசுத்தம், அருவருப்பு, மகடூஉக்குணநான்கினொன்று.
பயிலல் - சொல்லுதல், படித்தல்.

பயில் - சைகை, சொல், பயி லென்னேவல், பாதி.

பயிறல் - ஒலித்தல், கூடுதல், சொல்லுதல், பேசலாமெழு மொழி.

பயிற்றுதல் - படிப்பித்தல்.

பயினி - இணக்கம், கூடல்.

பயின் - உட்படுகுருத்து, பிசின்.

பயோததி - கடல், பாற்கடல்.

பயோதரப்பத்து - ஓர்பிரபந்தம்.

பயோதரம் - கடல்,முலை,மேகம்.

பர - திவ்விய, பிற, முன், மே லான, வளமுள்ள, விரோத மான, வேறு.

பரகதி - முத்தி.

பரகாயப்பிரவேசம் - கூடுவிட் டுக் கூடுபாய்தல்.

பரகிதபுடம் - பரகித சாஸ்திரத் தாற் கணித்தறிந்த கிரகநிலை.

பரகிதமூலச்சா - திரிகோண மீதியிலுள்ள சாவாக்கியங்கள்.

பரகிதம் - ஓர் சோதிடநூல்.

பரகுடிலம் - பிரணவ மந்திரம்.

பரசமயம், பரமதம் } புறச்சமயம்.

பரசு - கோடரி, பரசென்னே வல், மழு.

பரசுகோததி-பிரமானந்தசாகரம்

பரசுசூரியன் - பரிவேடம்.

பரசுதல் - துதித்தல்.

பரசுபாணி - பரசுராமன், சிவன், விநாயகன்.

பரசுராமன்-சமதக்கினிமைந்தன், திருமாலவதாரத்தொருவன்.

பரஞ்சுடர்
பரஞ்சோதி } கடவுள்.

பரடு - கரடு.

பரணம் - ஆதரவு, கவசம், காப்பாற்றுதல், சம்பளம், தாங்குதல், பட்டுச்சீலை, பரணி, பாரம்.

பரணர் - ஓர் சங்கப்புலவர்.

பரணி - அடுப்பு, அணிகலச்செப்பு, ஆயிரம்யானைகொன்ற தலைவனைப் பாடும் பிரபந்தம், எரி மதகு, ஓர்நாள், கூத்து.

பரண் - பரண்.

பரதகண்டம்
பரதவருடம் } நவகண்டத்தொன்று.

பரதம் - ஒரெண், கூத்து, பாதநூல், பரதகண்டம்.

பரதர் - செட்டிகள், துரியோதனன் குலத்தோர், நெய்தனிலமாக்கள்.

பரதவர் - நெய்தநிலமக்கள்.

பரதன் - இராமன்தம்பி, சந்திரகுலத்தோரரசன், பரதமுணர்ந்தோன், பரதநூல் செய்தோன்.

பரதாக்கிரஜன் - இராமன்.

பரதி - கூத்தாடிச்சி.

பரதிருஅனயோகம் - பிறர்செய்யுந்தீமையை மறந்து நன்றி செயல்.

பரத்தர் - ஆர்த்தர்.

பரத்தல் - பரவுதல்.

பரத்தி - நெய்தநிலப்பெண், பரவப்பெண்.

பரத்தியானம் - தேவதியானம்

பரத்திரி } வேசி.
பரத்தை }

பரத்துவம் - கடவுட்டன்மை, வித்தியாசம்.

பரத்துவாசன் - கரிக்குருவி, சத்த விருடிகளிலொருவன், துரோணசாரியன் றந்தை.

பரத்தையிற்பிரிவு - தலைமகன் பரத்தையிடத்துப் பிரிதல்.

பரநியாசம் - பற்றொழித்தல்.

பரந்தவட்டம் - கைம்மணி.

பரந்தவட்டிகை - சேமக்கலம்.

பரந்தாமம் - பரஞ்சோதி.

பரபட்சம் - எதிர்ப்பட்சம், விரோதம்.

பரபதம் - மேன்மை, மோட்சம்.

பரபிருதம் - காக்கை, குயில்.

பரபுட்டம் - குயில், ஆர்த்தன்.

பரபுட்டை - வேசி.

பரபோகம் - பேரின்பம்.

பரப்பிரமம் - பிரமம்.

பரப்பு - அகலம், கடல், பரத்தல், பரப்பென்னேவல், மிகுதி, வ்சாலம், வீதி.

பரப்புதல் - பரப்பச்செய்தல், பரவுதல்.

பரமகதி - முத்தி.

பரமக்கியானம் - பரமஞானம்.

பரமசமாதி
பரமசாந்தி } யோகநிலை.

பரமசாயுச்சியம் - கடவுளோடு ஐக்கியமாதல்.

பரமசுந்தரி - தருமதேவதை.

பரமசைதன்னியம் - ஈச்வரன்.

பரமபதம் - வைகுந்தம்.

பரமம் - கடவுள், சிவன், பரமன் பிரமம்.

பரமாகாயம் - வெருவெளி.

பரமாத்துமா - கடவுள்.

பரமாத்மம் - கிரகமண்டல நாடி மண்டலங்களாலாகும் கோணம்.

பரமார்த்தம் - ஞானார்த்தம், மேலான பொருள்.

பரமானந்தம் - ஞானானந்தம், பிரம்மம், பேரின்பம்.

பரமேச்சுரன் - கடவுள், சிவன், விட்டுணு.

பரமேட்டி - அயன், அரன், அரி, அருகன்.

பரம் - அத்திமரம், உடல், கடவுள், கவசம், கேடகம், குதிரைக்கல்லணை, செயல், தனிமை, பழமை, பாரம், மிகுதி, முற்றத்துறத்தல், முன்பு, மோக்கம்.

பரம்பரம் - முறைமை, வமிசம்.

பரம்பு - கழனிதிருத்தும் பலகை, வரம்பு, விசாலம்.

பரம்புதல் - பெருகுதல், விசாலித்தல்.

பரர் - அந்நியர், பகைவர்.

பரல் - பருக்கைக்கல், விதை.

பரவசம் - தன்வசமற்றிருத்தல், பிரமாணத்தோடு பண்ணும் வாக்கு, பிரமை, மிகுகளிப்பு, மூர்ச்சை.

பரவல் - சொல்லுதல், பரத்தல், புகழ்தல், வணங்கல்.

பரவுதல் - சொல்லல், துதித்தல், பரப்பிச் செப்பம்பண்ணுதல், பரப்புதல், வணங்கல், விரிதல்.

பரவை - இலக்குமிகூத்து, கடல், சுந்தரர் மனைவி, திடல், நீர்ப் பரப்பு பிரபலம், வழக்கு.

பரன் - கடவுள், சிவன், விட்டுணு.

பராகம் - ஓர் வாசனைத்தூள், கிரகணம், கீர்த்தி, சந்தனம், தூளி, பூந்தாது, மகரந்தம்.

பராகாயம் - பரவெளி.

பராக்கிரமம் - வலிமை, வீரம்.

பராக்கு - அசட்டை, நோக்கம், பொழுது கழித்தல், விளையாட்டு, வேறுபுலனுயிருத்தல்.

பராங்கதன் - சிவன்.

பராங்கவம் - சமுத்திரம்.

பராசத்தி - சிற்சத்தி.

பராசயம் . தோல்வி.

பராசரம் - அட்டாதசவுபபுராணத்தொன்று, அட்டாதச தருமநூலிலொன்று.

பராசரியம் - சிற்பநூன் முப்பத்திரண்டினொன்று.

பராசரன் - வியாசன்றந்தை.

பராசனம் - கொலை.

பராசனன் - கொலைசெய்வோன்.

பராடம் - பாலைநிலம்.

பராதாரம் - காக்கை.

பராதீனம் - பிறர்சார்பிலிருக்கை.

பராத்தம் - பரார்த்தம்.

பராபரம்-கடவுள், சிவம், நன்மை, தீமை, நடுத்தரம், முன்பின்.

பராபவ - ஓராண்டு.

பராபவம் - அபசாரம், தோல்வி.

பராமரிசம் - நன்கு விசாரித்தறிகை, பகுத்தறிவு.

பராமரித்தல் - ஆதரித்தல், ஆராய்தல், நடத்தல், பத்திரப்படுத்தல், வளர்த்தல், விசாரித்தல்.

பராமுகம் - அசட்டை, கவனிப்பின்மை, பின்னோக்கிய முகம்.

பராயணம் - அறுசமயத்தொரு வகுப்பு, இராசிமண்டலம், பகுதி, பற்று, விருப்பு, வேதாத்தியயனம்.

பராயணன்- குறிக்கொள்வோன், வேதாத்தியயனர்.

பராயணி - கன்னன்.

பராயத்தம் - பிறரதீனம்.

பராரை - உள்ளோசை, பருமரத் தடி.

பரார்த்தசங்கை - அனந்தமாலி கை.

பரார்த்தம் - ஆயிரங்கோடி, ஓரெண், பிரமகற்பத்தரை.

பரார்த்தவனுமானம் - பிறர் பொருட்டாமனுமானம்.

பராவல் - பரவல்.

பராவிருத்தமுகம் - ஓர்பரத வுறுப்பு, அஃது—வேண்டா மைக்கு முகந்திருப்பல்.

பரானுகூலி - பிறர்க்குதவு வோன், விபசாரி.

பரான்னம் - பிறரிடத்தில்வாங்கி யுண்ணுமன்னம்.

பரி - அச்விநீ, அடையாளம், அலங்காரம், அன்பு, உண்மை, உயர்ச்சி, உள்ளக்களிப்பு, கருமை, தாழ்த்தல், குதிரை, சுமை, செல்வம், துக்கம், துன்பம், நெருக்கிடை, பங்கு, பரியென்னேவல், பருத்தி, பாதுகாத்தல், பெருமை, மிகுதி, முடிவு, வணக்கம், வருத்தம், வழி, விசாலம், விரிவு, விரைவு.

பரிகட்டநம் - ஓர்வகைக்கோட்ரி.

பரிகதம் - அறிவு, ஆதாயம், தடை, மறதி, விசாரணை.

பரிகதை - தரித்திரம்.

பரிகம் - அகழ், அழித்தல், இருப்புத்தண்டு, கதவிற்றுள், கிழங்கு, நித்தியயோகத்தொன்று, நீர்ச்சாடி, மதிலுண்மேடை, மதில், வளைதடி, வெளிக்கதவு.

பரிகம்பம் - பயங்கரம்.

பரிகரணம் } பிடித்தல்,
பரிகரமாணம் } விடுதல்.

பரிகரம் - இடைக்கட்டு, தீர்ப்பு, துவக்கம், படுக்கை, பரிவாரம்.

பரிகரித்தல் - காத்தல், பத்தியம் பண்ணல், பிராயச்சித்தம் செய்தல், மாற்றல், வைத்தியம்பண்ணுதல்.

பரிகரிப்பு - குணமாக்கல், வகை செய்தல், விலக்கல்.

பரிகருத்தனம் - சூன்றல்.

பரிகருமம் - அலங்கரிப்பு, சுத்தி.

பரிகலச்சேடம் - உச்சிட்டம், மகாத்துமாக்களின் விசேடம்.

பரிகலத்தார் - பரிவாரசனம்.

பரிகலம் - சேனை, பரிவாரப் பேய், பரிவாரம், மகாத்து மாக்களுண்ணும் பாத்திரம்.

பரிகாலிதம்-உருகுதல், பாய்தல்.

பரிகற்பனம் - உணவு முதலிய தேடல்.

பரிகாசப்பட்டன் - பரிகாசக்காரன்.

பரிகாசப்போர் - பகிடிச்சண்டை.

பரிகாசம் - பகிடி, நிந்தனை, மிகுநகை.

பரிகாதம்-ஆயுதம், கொல்லுதல்.

பரிகாதரம்-கதாயுதம்,பெருந்தடி.

பரிகாரம் - அவசங்கை, சூழ்தல், பரிகரித்தல், பிராயச்சித்தம். பெண்மயிர்,மிகுதி,வைத்தியம்.

பரிகாரி - வைத்தியன்.

பரிகிருசம் - மெலிவு.

பரிகீர்த்தனம் - சொல்லுதல், புகழ்தல்.

பரிகை - அகழ், அன்பு, உருக்கம், மதிலுண்மேடை.

பரிக்கந்தி - அமுக்கிராக்கிழங்கு.

பரிக்காரம் - அலங்காரம், துலக்கம்.

பரிக்காரர் - குதிரைக்காரர், யானைக்காரர்.

பரிக்கிரகம் - அழிவு, ஆணை, இணக்கம், ஏற்றுக்கொள்ளுதல், நிலைபேறு, பிற்படை, மனையாள், மூலம்.

பரிக்கிரகித்தல்-கைக்கொள்ளல்.

பரிக்கிரமம் - அலைந்து திரிதல், சுற்றுதல்,போதல்,விளையாட்டு.

பரிக்கிரயம் - சூழல், மீட்பு.

பரிக்கிராகம் - பலிபீடம்.

பரிக்கிரியை - வேலியடைத்தல்.
பரிக்கை - பரீட்சை.
பரிசைக்குன்று - நாகப்பச்சை.
பரிசணித்தல் - மிருதுவாய்ப் பேசுதல்.
பரிசதன்மாத்திரை - பரிசவுணர்வின்மூலம்.
பரிசதீட்சை - ஓர் தீட்சை, அஃது—பிரளயாகலர்க்குப் பரிசத்தினுல் மலமறுத்தல்.
பரிசத்தலன் - கூட்டாளி.
பரிசம் - கற்பாஷாணம், தொடல், தொடுதலை யறியு மறிவு; இஃது--பஞ்சபுலனிலொன்று, மணவாளன், பெண்ணின் பிதா மாதாவுக்குக் கொடுக்கும் வெகுமானம்.
பரிசயம் - ஐக்கம், பரிசனை, பழக்கம்.
பரிசரம்-அகலம்,மரணம், முறை.
பரிசரன் - காவற்காரன், தோழன், படைத்தலைவன்.
பரிசருப்பம் - சூழ்தல்.
பரிசனம் - உறவு, ஏவல் செய்வோர், சூழ்வோர், தொடுதல், பரிசிப்பு.
பரிசனவேதி - இழிந்தலோகங்களைப் பொன்னுக்கு மருந்து.
பரிசனன் - காற்று.
பரிசனை - பழக்கம்.
பரிசாதனம் - செய்து முடித்தல், தீர்மானம்.

பரிசாரகம் - ஏவல் வேலை.

பரிசாரகன் - ஏவல்செய்வோன், கூடப்போகிறவன்.

பரிசாரம் - பரிவாரம், பெண் மயிர்.

பரிசாரிகை - ஏவல்செய்பவள்.

பரிசித்தல் } தீண்டல், பழகுதல்.
பரிசிப்பு }

பரிசிரமம் - பிரயாசம், வருத்தம்.

பரிசியம் - கூட்டம்.

பரிசிலாளர் - இரப்போர்.

பரிசில் - ஈகை, வெகுமதி.

பரிசு - ஈகை, சங்கை மண்பு, பயணச்சனம்.

பரிசுகேடு - சங்கையீனம்.

பரிசுத்தம் - முழுதுஞ்சுத்தம், முழுமை.

பரிசுத்தவான் } சுத்தமுள்ளோன்.
பரிசுத்தன் }

பரிசுத்தாவி - சுத்தமான ஆவி.

பரிசுத்தி - பரிசுத்தம், முற்றுக.

பரிசுத்தை - சுத்தமுள்ளவன்.

பரிசை - கேடகம்.

பரிச்சதம் - போர்வை, மூடி.

பரிச்சித்து - அருச்சுனன் பௌத்திரன்.

பரிச்சேதம் - இலக்கியச்செய்யுட் கூறுபாடு, எல்லை, துண்டிப்பு, பிரிவு, மாற்று, முற்றும், பரிச்சேதம்:--காலபரிச்சேதம்,தேச பரிச்சேதம்,வஸ்துபரிச்சேதம்.

பரிஞ்சு - வாட்பிடி.

பரிட்டினகம்-பட்சிவட்டமிடுதல்.

பரிணமித்தல் - வேறுபடல்.

பரிணயம் - கலியாணம்.

பரிணமசரீரம் - ஒன்று திரிந்துண்டான தேகம்.

பரிணமம் - வேறுபாடு, விகாரம்.

பரிதல் - அறுத்தல், அன்பு, அன்போடுபேசல், இரங்கல், ஒடிதல், தறித்தல், வெட்டல்.

பரிதாபி - ஓர் வருடம்.

பரிதி - ஒளி, சக்கராயுதம், சூரியன், சூரியசந்திரரைச் சூழ்ந்தோன்றும் வட்டம், தேருருளை, யூபஸ்தம்பம், வட்டம்.

பரித்தல் - காத்தல், சுமத்தல், தரித்தல், தாங்குதல், தூபரித்தல்.

பரித்தியாகம் - முற்றும் விடல்.

பரித்தியாகி - சந்நியாசி.

பரிபவம் - அவசங்கை, துறந்தோன், இகழத்தகு பொருள், இழிவு, எளிமை, தோல்வி, வியாகுலம்.

பரிபாகம் - பக்குவம், முதிர்வு.

பரிபாகி - முத்தியடையும் பக்குவன்.

பரிபாடல் - தலைச்சங்கப்புலவர் செய்தபரிபா டலென்னும்நூல்.

பரிபாடை - குழூஉக்குறி, சங்கேதம்.

பரிபாலனம் - அருளுதல், ஆளுகை, காவல், சமாளித்தல், தற்காத்தல்.

பரிபுரம் - காற்சிலம்பு, பாதகிண்கிணி.

பரிபூரணன் - சிவன்.

பரிபூரணி - இலக்குமி, பார்வதி.

பரிப்பு - சுமை.

பரிமண்டலம் - உண்டை.

பரிமந்தம் - அற்புதம், மந்தம்.

பரிமளகந்தி - வியாசன்றாய்.

பரிமளம் - சந்தோஷம், சம்போகம், மிகுமணம்.

பரிமாணம் - அளபு.

பரிமா - குதிரை.

பரிமாவடிப்போர் - குதிரைப்பாகர்.

பரிமாறுதல் - உட்கொள்ளுதல், ஊடாடுதல்.

பரிமாற்றம் - ஊடாட்டம், கலப்பு, நடமாடுதல், புணர்ச்சி.

பரிமிதம் - அளவு பட்டது, ஒரெல்லைக்குட்டுப்பட்டது.

பரிமுகம் - அச்சுவினி நாள், கனைக்கால்.

பரிமேயம் - அளவுபட்டது, பரிமிதம்.

பரிமேலழகர் - குறளுரையாசிரியர்.

பரியகம் - காற்சரி, கைச்சரி, பாதகிண்கிணி.

பரியங்கம் - கட்டில், மக்கட்படுக்கை.

பரியந்தம் - எல்லை, முடிவு, வரைக்கும்.

பரியயம் - அசட்டை, எதிரிடை, ஒழுங்கின்மை, படுக்கை.

பரியவசானம் - முடிவு.

பரியவத்தை - எதிரிடை.

பரியவம் - பலர்சொல்லுநெறி.

பரியாயசந்தேகம் - அற்பசந்தேகம்.

பரியாத்தி - காத்தல், சம்பாதித்தல், சம்மதம், தகுதி, திருத்தி, பகுத்தறிதல் விலக்குதல்.

பரியாயச்சொல் - ஒருபொருள் குறித்த மறுசொல், பலமுறை.

பரியாயம் - ஒழுங்கு, ஒன்றற்குரியன, ஓரலங்காரம், சமயம், சுபாயம், செய்யப்படுபொருள், மாதிரி, முகவுரை.

பரியாலோசனம் - கருத்துக் கூர்ந்து யோசித்தல்.

பரியாண - சேணம்.

பரியானம் - பரிவாரம்.

பரிவட்டம் - சீலை, தலையிற் கட்டுஞ்சீலை, நெய்வோர்கருவியிலொன்று, விக்கிரகத்தினுடை.

பரிவயம்- அரிசி, நெடுநாள் கூடியிருத்தல், யெளவனம்.

பரிவருத்தனை - ஓரலங்காரம், பண்டமாற்று.

பரிவாகிதமுகம் - மதத்தாற்றலையை ஒருபுறஞ் சாயத்துச் சிறிதாய்ச்சுற்றி யாட்டல்.

பரிவாதம் - குற்றச்சாட்டு, பழிச்சொல், வீணை வியக்கும் வில்.

பரிவாரம் - அணி செய்வோர், உறை, படை, பரிசனம்.

பரிவிருத்தி- ஓரலங்காரம், இருகசார வாக்கியம் கிரக வட்டம், சுற்றுதல், முடிவு, முழுவட்டம்.

பரிவு - அன்பு, இன்பம், சுகம், துன்பம், பக்குவம்.

பரிவேடம் - சூரிய சந்திரரைச் சூழத்தோன்று வட்டம், சுற்றளவு, சூழ்தல்.

பரிவேதனம் - ஆராய்வு, சம்பாத்தியம், மிகு உபத்திரவம், விவாகம்.

பரீகம்-நித்தியயோகத்தொன்று.

பரீட்சணம் - சோதனை.

பரீட்சித்தல் - ஆராய்தல், பழகுதல்.

பரீட்சை - அப்பியாசம், ஆராய்வு, பழக்கம்.

பரீட்டி - ஆயத்தம், ஆராய்வு, ஊழியம்.

பரீதாவி - ஓராண்டு.

பரீவாதம் - கடிந்து கொள்ளல், வீணைவாசித்தல்.

பரீவாரம் - பரிவாரம், வாளுறை.

பரு - கடல், கணு, குரு, சிலந்தி நோய், பருமை, பருவென் னேவல்.

பருகல் - உண்டல், குடித்தல், நுகருதல்.

பருகுதல் - நுககருதல், பருகல், புசித்தல்.

பருக்கை - உருண்டை, சோறு, பருக்கைக்கல், பளிங்கு.

பருணிதர் - பரிணிதர், புலவர்.

பருத்தல் - பருமையாதல்.

பருத்தி - ஓர்செடி.

பருந்தலை - பெரியதலை, பெரு மையிற் சிறந்தோர், மேட்டி மைகாரர்.

பருந்தின்வீழ்வு - சூத்திர நிலை நான்கிலொன்று, அஃது — ஓரிடத்துச் சூத்திரம் பின்னே ரிடத்துச்சூத்திரத்தை அவாவி நிற்பது.

பருந்து - ஓர் பறவை.

பருப்பதம் - மலை.

பருப்பம் - அளவு, பருத்தல், பருமை.

பருப்பதி - பார்வதி.

பருப்பு - அதிகப்படல், பருத்தல் பருப்பு.

பருப்பொருள் - நுண்மையற்ற பொருள், பரும்படியான பொருள்.

பருமம் - அங்கி, கவசம், குதிரைக் கல்லணை, மூவாறு கோவை, மணியணி.

பெருவாஞ்சை - பேராசை.

பெருவாரி - கொள்ளைநோய்.

பெருவாரிக்காய்ச்சல் - கோதாரிக்காய்ச்சல்.

பெருவாழ்வு - மிகுசெல்வம்.

பெருவிடை - நெடுவிடை.

பெருவியாதி - கிரந்தி நோய், குஷ்டம், மசூரிகை.

பெருவிரியன் - ஓர் பாம்பு.

பெருவெக்கைநோய் - வாந்திபிராந்தி.

பெருவெளி - ஏகவெளி.

பெருவெள்ளம் - மிகுவெள்ளம்.

பெருவெள்ளை - ஓர் நெல்.

பெலக்குதல் - பலத்தல்.

பெலசாலி - பெலனுள்ளோன்.

பெலட்சயம் - பெலவீனம்.

பெலத்தல்-பலப்படல், மிகுத்தல்.

பெலபிடி - பெலன், பேருதவி.

பெலப்படுதல் - உறுதிப்படல், திரப்படுதல்.

பெலப்படுத்துதல் - உறுதிப்படுத்துதல், திரப்படுத்துதல்.

பெலப்பித்தல்-பெலப்படுத்துதல்

பெலப்பு - உதவி, பெலன்.

பெலபேறுதல் - பெலப்படுதல்.

பெலம் - பலம்.

பெலவந்தம் - பலவந்தம்.

பெலவறுதி - பலகீனம்.

பெலன் - உறுதி, வலிமை, மூன்றுமிடம், பலம்.

பெலன்செய்தல் - உறுதிப்படல், பலித்தல்,வலிமைகொள்ளுதல்.

பெலி - காணிக்கை

பெலிபீடம் - பலிபீடம்.

பெல்லி - சூனியம், துறட்டியின் முள்.

பெல்லித்தடி - பூட்டைப்பிடி.

பெறல் - பெறுதல்.

பெறுவிலை-அதிகவிலை, குறைந்தவிலை.

பெறுக்கல் - பொறுக்கல்.

பெறுதல் - அடைதல், கிடைத்தல், பிரசவித்தல்.

பெறுதி-பெறுதல், பெறும் விலை.

பெறுத்தல் - பெறுவித்தல்.

பெறுமதி- உறுதி, தகுதி, திராணி, பெறும்விலை, வெகுமதி.

பெறுமானம் - பெறத்தக்கவிலை.

பெறுவகொள்வோர்
பெறுவதுகொள்வோர் } கூத்தியர்.

பெற்றத்துவசன் - சிவன்.

பெற்றம் - இடபவிராசி, எருது, காற்று, பசுசாதிப்பொது.

பெற்றூர் - ஈன்றூர்.

பெற்றி
பெற்றிமை } குணம், தன்மை.

பென்னம்பெரிது - மிகப்பெரிது.

பே

பே - ஓரெழுத்து, நுரை.

பேகடம் - ஓர்வகைமீன்.

பேகம் - தவளை, முகில்.

பேகன் - கடையெழுவள்ளலிலொருவன், தவளை ஆண்.

பேகி - பெண்டவளை.

பேசகம் - ஆந்தை, கூகை, முகில், யானைவாலடி, யானைவானுனி, வாயில்.

பேசகி - யானை.

பேசலம்-உலக்கை,ஊமை,குயில், மிருது.

பேசலன் - சிவன்.

பேசல் - சொல்லல்.

பேசாதபேச்சு - அசப்பியம்.

பேசாமை - மௌனம்.

பேசி - இடியேறு, உடை, ஓர் யாறு, தசை, நரம்பு,பூமொட்டு, முட்டை.

பேசிகோசம் - முட்டை.

பேசிலம் - யானை.

பேசுதல் - பறைதல்.

பேசுவாயன் - பரிந்துபேசுபவன், வாயாடி.

பேச்சல் - பறைச்சல்.

பேச்சழிதல் - பேச்சுத்தப்புதல்.

பேச்சறுதல் - மௌனம்.

பேச்சறுதி - தீர்மானம்.

பேச்சற்றவன் - பேசமாட்டாதவன், பொய்யன், மௌனி.

பேச்சாட்டுத்துணை - பேச்சுத்துணை.

பேச்சாளி - நிதானி.

பேச்சு - சம்பாஷணை, சொல், பாஷை, பேசுதல்.

பேச்சுக்குற்றம் - சொற்குற்றம்.

பேச்சுக்கொடுத்தல் - பேச்சு வளர்த்தல்.

பேச்சுநடத்தல் - சம்பாஷித்தல்.

பேச்சுவளர்த்தல் - நீடிக்கப் பேசல்.

பேச்சுவாயன் - வாயாடி.

பேச்சுறுதி - பேச்சு நிதானம்.

பேடகம் - கூடை, திரள்.

பேடணம் - திரிகைக்கல்,பொடி செய்தல்.

பேடம் - தெப்பம், வெள்ளாடு.
பேடர் - அலியர்.
பேடி - அலி, பெண்ணாடு.
பேடிகை - கூடை.
பேடிசம் - மயக்கு.
பேடிசவித்தை-மயக்குத்தொழில்
பேடியர் - அலியர்.
பேடு - அலி, ஊர், காமனுடல், பறவைப்பெண், பெண்.
பேடுமூஞ்சி - பெண்முகம்.
பேடை-கூடை, பறவைப்பெண்.
பேட்டி - பெரியவராது வரவு காத்திருத்தல்.
பேட்டை - நகரத்தருகுஞ் சந்தை கூடலுமாகியவூர்,பட்டைக்கரை
பேணகம் - ஓர் பணிகாரம்.
பேணம், பேணரவு } பேணுதல்.
பேணலர் - பேணார்.
பேணல் - ஆசைப்பெருக்கம், கருத்து, காத்தல், குறித்தல், விரும்பல்.
பேணார் - பகைவர்.
பேணுதல் - காப்பாற்றுதல், பேணல்.
பேண்-துலாத்தாங்கி, பேணென்னேவல்.
பேதகமணி - வெண்காரம்.
பேதகம் - பேதம்.
பேதகன் - தப்பிதகாரன்.

பேதசைவம் - ஓர் சைவம்.

பேததாரணை - நவதாரணையி ரைன்று.

பேதநம் - பன்றி.

பேதம் - ஒவ்வாமை, சிவாகம மிருபத்தெட்டினென்று, பகை, பிரிவினை, வேற்றுமை.

பேதலித்தல் - மறப்பு, இஃது— உபாயநான்கினென்று, வேற்று மைப்படல்.

பேதலிப்பு }
பேதலிமை } வேற்றுமை.

பேதனம் - பேதிப்பு.

பேதாதிபேதம் }
பேதாபேதம் } பலபேதம்.

பேதி - இரதம், கழிச்சல், பேத மானவன், பேதிப்பது, பேதி யென்னேவல், விரேசனம், வெளி.

பேதிகாரி - ஆற்றுத்தும்மட்டி, பேதிமருந்து, பேய்க்குமட்டி.

பேதிதம் - பிளத்தல்.

பேதித்தல் - பகைத்தல், விரோ சனித்தல், வேற்றுமைப்படு தல், வேற்றுமைப் படுத்தல்.

பேதிபண்ணுதல் - விரேசனஞ் செய்தல்.

பேதிப்பு - பேதம்.

பேது - மதிமயக்கம்.

பேதுரம் - வச்சிராயுதம்.

பேதுறல் - பேதுறுதல், மதி மயங்குதல்.

பேதுறவு - மதிமயக்கு.
பேதுறுதல் - புத்திகலங்குதல்.
பேதை - அறிவிலான், ஏழுவயதுப்பெண், சுபாவி, தரித்திரன், பெண், பேடி.
பேதைமை - அறிவின்மை, ஏழைமை, சுபாவம்.
பேதையர் - அறிவீனர், ஏழு வயதிற்பெண்கள், கீழ்மக்கள், தரித்திரர், பாலைநிலமகளிர்.
பேத்துவம் - அமுதம், நெய்.
பேத்தை - ஓர்மீன், கெளிசு, பற்பேத்தை.
பேத்தைபற்றுதல் - கெளிசு பற்றுதல்.
பேநன் - சந்திரன், சூரியன்.
பேம் - பயம்.
பேயகற்றுதல் - பேயோட்டுதல்.
பேயத்தி - ஓர் மரம்.
பேயம் - கஞ்சி, நீர், பால்.
பேயவரை - ஓரவரை.
பேயன் - மதிகேடன்.
பேயன்வாழை - ஓர் வாழை.
பேயாடுதல் - பேயுருக்கொள்ளுதல்.
பேயாட்டி - பேய்வித்தைக்காரன்.
பேயாட்டுதல் - பிசாசையுருக்கொள்ளுவித்தல்.
பேயாமணக்கு - ஓராமணக்கு.
பேயுள்ளி - ஓருள்ளி.

பேயுறைதல் - பேய் குடிகொள்ளுதல்.

பேயூடம் } அமுதம், ஈன்றவேழா
பேயூஷம் } நாட் கறக்கும்பால், நவநீதம்.

பேயூமத்தை - மருளூமத்தை.

பேயேற்றுதல் - பேயை யேவி விடுதல்,

பேயோடாடி - சிவன்.

பேயோட்டி - ஓர் மரம், பேய் துரத்துவோன்.

பேயோட்டுதல் - பேயகற்றல்.

பேயோணன்-ஓர்வகையோணன்

பேய் - பிசாசம், மதிகெட்டது.

பேய்க்கண் - வெருண்டபார்வை.

பேய்க்கரும்பு - ஓர் கரும்பு.

பேய்க்காடு - பேயுறையுங்காடு.

பேய்க்காளான் - ஓர் காளான்.

பேய்க்குணம் - பேய்த்தனம்.

பேய்க்குப்பார்த்தல் - பேயைப் துரத்துதல்.

பேய்க்குமட்டி - ஓர் கொடி.

பேய்க்குறை -பேய்த்தொடர்ச்சி.

பேய்க்குன்றி - ஓர் குன்றி.

பேய்க்கூண்டு - மாயவித்தை படிக்குமோரிடம்.

பேய்க்கொம்மட்டி - பேய்க் குமட்டி.

பேய்க்கோலம் - கோலக்கோடு.

பேய்ச்சத்தம் - அவசத்தம்.

பேய்ச்சாளை - ஓர் மீன்.
பேய்ச்சி - பேய்க்குணமுள்ளாள்.
பேய்ச்சுரை - ஓர்சுரை.
பேய்த்தக்காளி - ஓர் செடி.
பேய்த்தண்ணீர் - மதுநீர்.
பேய்த்தனம் - அறிவின்மை.
பேய்த்திபிட்டி - ஓர் பூடு.
பேய்த்தும்பை - ஓர் தும்பை.
பேய்த்தேர் - கானல்.
பேய்நரி - வெறிநரி.
பேய்நாய் - வெறிநாய்.
பேய்பிடித்தல் - பிசாசுபிடித்தல்.
பேய்ப்பசளை, பேய்பயனை } ஓர் கீரை.
பேய்ப்பலவன் - படுவன்கீரை.
பேய்ப்பள்ளி - பேய்க்கூண்டு.
பேய்ப்பார்வை-மருண்டபார்வை.
பேய்ப்பாற்சோற்றி - ஓர்பாற்சோற்றி.
பேய்ப்பிடி - வீண்பிடி.
பேய்ப்பிரம்பு - ஓர் பிரம்பு.
பேய்ப்பீர்க்கு - ஓர் பீர்க்கு.
பேய்ப்புடல், பேய்ப்புடோல் } ஓர் புடோல்.
பேய்ப்புத்தி - மதியீனம்.
பேய்ப்புல் - கணைப்புல்.
பேய்ப்போக்கு - ஒழுங்கின்மையான நடை.
பேய்மகன் - கெட்டவன்.

பேய்மருட்டி - ஓர் செடி.

பேய்மனம் - அங்கலாய்த்தமனம்.

பேய்முகம் - அவலட்சணமுமம்.

பேய்முசுட்டை - ஓர்கொடி.

பேய்முல்லை - ஓர் கொடி.

பேய்முன்னை - ஓர் மரம்.

பேய்வித்தை - சூனியவித்தை.

பேய்வெருட்டி - ஓர்பூடு.

பேரகத்தி - ஓரகத்தி.

பேரடம் - வெண்ணொச்சி.

பேரடிபடுதல் - பெயர் பிராபல்யமாகுதல்.

பேரணி - நடுச்சேனை.

பேரணிகலம் - பெரும் பதக்கம்.

பேரண்டம் - உலகம், நரி.

பேரப்பிள்ளை - பாட்டப்பிள்ளை.

பேரமட்டி } ஓர் செடி.
பேரமுட்டி }

பேரம் - உடல், காச்மீரதேயம், பேரிகை.

பேரம்பலம் - சிதம்பரத்துச்சபைகளிலொன்று.

பேரரத்தை - பஞ்சமூலத்தொன்று.

பேரவம் - நரி.

பேரவன் - அரக்கன், அரசன்.

பேரவியல் - பெரும்புழுக்கு.

பேரறிவு - மூதறிவு.

பேரன் - பெயரன்.

பேரன்புடைமை - மிகுந்த வன்பாயிருத்தல்; இஃது—அறத்துறுப்பினொன்று.
பேராசிரியர் - சிறந்த உரையாசிரியரிலொருவர்.
பேராசை - மிகுவாசை.
பேராட்டி-பெருமை யுடையவள்.
பேராண்டு - அறுபது வருடங் கொண்ட காலம்.
பேராண்மை - அரியசெயல்.
பேராந்தை - கிலாமுகிப்புள்.
பேராமட்டி - பேரமட்டி.
பேராமணக்கு - ஓாமணக்கு.
பேராமுட்டி - ஓர்கொடி.
பேராலவட்டம் - ஓராலவட்டம்.
பேராழம் - பெரிய ஆழம்.
பேராழி - பெருங்கடல்.
பேராழிமாமுனி - வள்ளுவன் றந்தை.
பேராளன் - கீர்த்தியுடையோன், மிருகசீரிடம்.
பேராளி - பேருள்ளவன்.
பேரானந்தம் - சந்தோஷம், மோட்சம்.
பேரி } பறைப்பொது,
பேரிகை } முரசு.
பேரிடி - முழக்கம்.
பேரிடுதல் - நாமஞ்சூடுதல்.
பேரியாழ் - நால்வகையாழி னொன்று.
பேரிலக்கம் - முழுவிலக்கம்.

பேரிளம்பெண் - நாற்பது வயதுப்பெண்.

பேரின்பம் - ஆனந்தம், மோட்ச சந்தோஷம்.

பேரீஞ்சு } ஓர் மரம்.
பேரீந்து }

பேரு - சமுத்திரம், சூரியன், தீ, பொன்மலே.

பேருண்டம் - கருப்பந்தரித்தல், பயம், பறவை விசேஷம்.

பேருண்டி-பேருணவு, இஃது— தாமத குணத்தொன்று.

பேருந்தம் - நரி.

பேருமரி - ஓர் பூடு.

பேருறுதி-திடவத்தாட்சி.

பேரூர் - பெரும்பதி, மேலேச் சிதம்பரம்.

பேரூழி - உருத்திர சங்காரம்.

பேரெடுத்தல் - கீர்த்திபெறுதல்.

பேரெடுபடுதல் - பிரபலமாதல்.

பேரெண் - பேரிலக்கம்.

பேரெல்லேவெண்பா - எட்டடி வெண்பா.

பேரெழும்புதல் - பிரபலமாதல்.

பேரேடு - கணக்கேட்டிலோர் வகை.

பேரொலி - மிகுவொலி.

பேரொளி - மிகுபிரபை.

பேரோசை - பேரொலி.

பேர் - பெயர், பெரிய, பெரும்.

பேர்க்குறி - பெயர்க்குறி.
பேர்ச்சி - பெயர்ச்சி.
பேர்தரித்தல் - நாமஞ்சூட்டல்.
பேர்தல் - பெயர்தல், போகல்.
பேர்த்தல் - பெயர்த்தல்.
பேர்த்தி - பெயர்த்தி.
பேலகம் - தெப்பம்.
பேலம்-சிறுபங்கு, பீசம், போதல்.
பேலவம் - மிருது.
பேலன் - தீரன்.
பேவி - குதிரை.
பேலிகை - எச்சில்.
பேலுதல் - மலங்கழித்தல்.
பேழை - பேடகம், பெட்டி.
பேழ் - பெருமை.
பேழ்வாய் - பெருவாய்.
பேறு - இலாபம், கொடை, செல்வம், கல்லூழ் பெறுதல், வரம், வாய்ப்பு.
பேறுகாலம் / பேற்றுக்காலம் } பெறுங்காலம்.
பேனம் - நுரை.
பேனவாகி - இடி.
பேனுக்கிரம் - நீர்க்குமிழி.
பேனுசனி - இந்திரன்.
பேன் - தலையிற்பற்றும் பூச்சி.

பை

பை - அழகு, ஓரெழுத்து, குடர், நிறம், பசுமை, பச்சைநிறம், பாம்பின் படம், பையென் னேவல், பொக்கணம், மந்தக் குணம், மெத்தெனவு.

பைகோவு
பைகோவை } ஓர்தேயம்.

பைகோவைச்சிவப்பு - ஓர்வகை மாணிக்கம்.

பைக்கம் - பிச்சை.

பைக்கூறை - பை.

பைங்கண் - பசியகண்.

பைங்கழை-பசுமையான மூங்கில்.

பைங்காய் - பசுங்காய்.

பைங்கிளி - பச்சைக்கிளி.

பைங்கூழ் - நோய், பயிர்.

பைசந்தி
பச்யந்தி } வாக்கு நான்கி னொன்று.

பைசாசநிலே - ஒரு தாளினின்று மற்றைத்தாண் முடக்கிநிற்றல். இஃது—யுத்த நிலே நான்கி னொன்று.

பைசாசமணம் - எண்வகைமணத் திலொன்று, இஃது—துயின் றுளேச்சென்று மணமுடிப்பது.

பைசாசம் - இரும்பு, எண்வகை மணத்திலொன்று, பிசாசம்.

பைசாசி - இராக்கதத்தி, சடா மாஞ்சில், பிராகிருத பாஷை யினோர் வகை.

பைசார் - ஓர் தொடுதோல்.

பைஞ்ஞீலம் - பசியசிலம், மக்கட் பரப்பு.

பைஞ்ஞீலி - ஓர் பட்டினம்.

பைஞ்ஞீல் - மக்கட்பரப்பு.

பைண்டின்ணியம் - யாசகம் பண்ணி வயிறு வளர்த்தல்.

பைதல் - துன்பம், பையல்.

பைதிரம் - நாடு.

பைத்தம் } பித்தம்.
பைத்திகம் }

பைத்தல்-கோபம், சினக்குறிப்பு, பசுமையாதல், பாம்பு படம் விரித்தல்.

பைத்தியம்-பயித்தியம், மதிகேடு.

பைத்திராகோத்திரம் - பிதிர்களின தோர்நாள்; அது மனிதருக்கோர் மாதம்.

பைத்து - பசுமை.

பைத்ருகம் - பித்ரு சம்பந்தம்.

பைத்ருகதநம் -பிதுரார்ஜிததநம்.

பைத்ருகபூமி - பிதுரார்ஜிதபூமி.

பைந்தினை - ஓர்தினை.

பைந்தொடி - பச்சை வளையல், பெண்.

பைபீலம் - எறும்பு.

பைபீலவாதம் } எறும்புகளின்
பைபீலிகாவாதம் } பேச்சறிதல்; அஃது—கலைஞான மறுபத்து நான்கினொன்று.

பைபீலிகை - எறும்பு.

பைபைய - மெல்லமெல்ல.

பைமை - தவப்பெண், பசுமை.

பைம் - பசுமையான.

பைம்பூண் - பொன்னுபரணம்.

பைம்பொன் - பசும்பொன், மேரு கிரி.

பைய - மெல்ல.

பையல் - பயல்.

பையன் - சிறுவன்.

பையுள் - அற்பம், சிறுமை, துன் பம், நோய்.

பையெனல் - மந்தக்குறிப்பு.

பைரவம் - அச்சம், உட்சமயமாறி ஞென்று.

பைரவன் - சிவன், சிவமூர்த்தங் களுளொன்று, வயிரவன்.

பைரவி - ஒரிராசம், காளி.

பைலவான் } வேதவியாசமாணுக்
பைலன் } கருளொருவன்.

பைவரல் - துயருறல்.

பொ

பொஃகுட்டு - சேற்றிலெழுங் குமிழி, தாமரைக்கொட்டை, மலை.

பொக்கசம் - திரவியசாலை, திர வியம்.

பொக்கசவைப்பு - புதைத்ததிர வியம்.

பொக்கணம் - ஓர் வகைப்பை, சோளி, பெருமருந்து.

பொக்கணி - ஓர் பானபாத்திரம், குழியுரல், விரிந்த தொப்புள்.

பொக்கணே - கல்வளை, குழியுறல், மரப்பொந்து.

பொக்கம் - பொய், பொலிவு, மிகுதி, வாய்.

பொக்கல்வாய் - பொக்குவாய்.

பொக்கிஷகாரன் - திரவியவான், பொக்கிஷவிசாரணைக்காரன்.

பொக்கிஷம் - பொக்கசம்.

பொக்கிலவணம் - திலாலவணம்.

பொக்கு - குற்றம், பொள்ளல்.

பொக்குப்பொக்கெனல் - ஒலிக் குறிப்பு.

பொக்குவாய் - பல்லற்றவாய்.

பொக்குளிப்பான் - கொப்பளிப் பான்.

பொக்கெனல் - விரைவின் குறிப்பு.

பொக்கை - சிறுதுளை.

பொக்கைவாய் - பொக்குவாய்.

பொக்கைவாய்ச்சி - பொக்கு வாய்ச்சி.

பொங்கடி - யானை.

பொங்கம் - நெற்றி, பரிமளிப்பு, பொலிவு.

பொங்கர் - இலவமரம், சோலை, மரக்கொம்பு, மலை, வாடற்பூ.

பொங்கலாண்டி - பொங்கற் காரன்.

பொங்கல் - உயர்ச்சி, கிளர்தல், சமைத்தல், பொலிதல், மிகுதி, கள்.

பொங்கழி - ஆற்றுநெல்.

பொங்காரம் - பொங்கல்.

பொங்குசனி - இரண்டாமுறை ஏழரையாய் வருஞ் சனி.

பொங்குதல் - கொதித்துக் கிளர்தல், கோபித்தல். சாதஞ் சமைத்தல், நொதித்தல், பொலிதல்.

பொசிதல் - இரகசியம் வெளித்தல், நீரரும்பல், நீர் பறிதல்.

பொசித்தல் - புசித்தல்.

பொசிவு - அருகிச்செல்லல்.

பொசுக்குதல் - சுடுதல்.

பொசுங்கல் - சுருகினது, கருகுதல்.

பொசுங்குதல் - வெம்மையாற் றீய்தல்.

பொசுபொசுத்தல் - இரகசியம் பேசல், கொஞ்சங் கொஞ்சமாய் வெளிப்படுதல்.

பொசுபொசெனல்-ஒலிக்குறிப்பு.

பொச்சடித்தல் - வெறு நாக்கடித்தல்.

பொச்சம்-அவா, உணவு, குற்றம், தேங்காய் மட்டை, விருப்பம்.

பொச்சாத்தல் } பொல்லாங்கு,
பொச்சாப்பு } மறதி.

பொச்சாலிநெல் - ஓர் நெல்.

பொச்சாவாமை - மறவாமை.

பொச்சு-பொய்ச்சு, பயனில்லது.

பொச்சை - கரிகாடு, காடு, சிறுமலை, புழுக்கூடு, மலை.

பொஞ்சுதல் - ஒவ்வுதல்.

பொடி - சிறிசு, சூரணம், பஸ்மம், பராகம், புழுதி, பொடியென்னேவல்.

பொடிச்சி - சிறுபெண்.

பொடிச்சிலை - மஞ்சட்கல்.

பொடிதல் - கெடுதல், திட்டுதல், தூளாதல்.

பொடித்தல்-கெடுத்தல், தூளாக்கல், மயிர் சிலிர்த்தல், மூளைத்தல்.

பொடிபண்ணல் - துண்டித்தல், மாவாக்கல், சுண்ணமாக்கல்.

பொடிபொடிதல்-மிகத்தூளாதல்.

பொடிபொட்டு - சிறியது, பதரானது.

பொடிப்பு - புளகம்.

பொடியன் - சிறுவன்.

பொடியாதல் - துகளாதல்.

பொடிவிளக்கணம் - பொன் முதலியவற்றைப் பொருத்திச்சுடுதல்.

பொடிவு - திட்டு, பொடிதல்.

பொடிவெட்டி - பொன் வெள்ளி முதலிய வெட்டுங் கத்திரிகை.

பொடுகன் - சிற்றாள்.

பொடுகு-ஓர்பூடு, சிறிசு, சொடுகு.

பொடுதலை - ஓர் பூண்டு.

பொடுபொடுத்தல்
பொடுபொடுப்பு
பொடுபொடெனல் } அபூரணம், ஓர்குறிப்பு, காய்தல், சீக்கிரக்குறிப்பு.

பொட்டணம்
பொட்டணி
பொட்டளி
பொட்டில் } பொதி.

பொடிலுப்பு - வெடியுப்பு.

பொட்டு - ஓர்பூச்சி, சங்கை, தாலிப்பொட்டு, தானியப் பொட்டு, நுழைவழி, நெற்றித் திலகம்.

பொட்டுக்கட்டுதல் - தாலிகட்டு தல்.

பொட்டுக்குலைதல் - சங்கைகெடு தல்.

பொட்டுக்குத்துதல் - திலகமெழு தல்.

பொட்டுக்கேடு - சங்கைக்கேடு.

பொட்டுத்தாலி - பொட்டாகாரத் தாலி.

பொட்டுப்பூச்சி - ஓர் சில்ரிப் பூச்சி.

பொட்டெனல் - சீக்கிரகுறிப்பு.

பொட்டை - குருடு, கூசியகண்.

பொதி - அம்பலம், ஓலைக்குடை, கரிகாடு, பொதியப்பட்டது, பொதியமலை, பொதியென் னேவல், மலரரும்பு, மூட்டை.

பொதிகாரன் - பொதிமாடு செலுத்துவோன்.

பொதிகை - பொதியம்.

பொதிசோறு - கட்டுச்சோறு.

பொதிதல் - திணித்தல்.

பொதிப்போதா - பெருநாரை.

பொதியமுனி - அகத்தியன்.

பொதியம் - தென்மலை.

பொதியவிழ்த்தல் - கட்டமுத விழ்த்தல், பூ முதலியவிரிதல்.

பொதியவெற்பன் - பாண்டியன்.

பொதியன் - அகத்தியன்.

பொதியல் - அம்பலம், பொதிய மலை.

பொதியெருது - பொதியெடுக்கு மெருது.

பொதிர் - நடுக்கம், பொதிரென் னேவல், மிகுதல்.

பொதிர்தல் - மிகுதல்.

பொதிர்ப்பு - அச்சம், நடுக்கம்.

பொதிர்வு - மிகுதல்.

பொதிவு - பொதிதல்.

பொதின்பொதினெனல் } ஒலிக்
பொதீர்பொதீரெனல் } குறிப்பு.

பொது - சாதாரணம், பலர்முன்னிலை.

பொதுக்கட்டுதல் - நடுக்கட்டுதல்.

பொதுக்கு - ஒதுக்கு, பொதுக் கென்னேவல், மறைப்பு.

பொதுக்குதல் - மறைத்தல்.

பொதுச்சீர் - நான்கசையாய் வருஞ்சீர்.

பொதுச்சூத்திரம் - தொகைச் சூத்திரம்.

பொதுச்சொல்-பொதுப்பொருள்

பொதுச்சொல் - திணை, பால், இடம், காலங்களைக்குறித்துப் பொதுவாயிருக்குஞ்சொல்.

பொதுத்தல் - துளைத்தல்.

பொதுத்தன்மை-பொதுவியல்பு.

பொதுத்திணை - பலதிணைக்கும் பொதுச்சொல்.

பொதுத்திரீ
பொதுஸ்தீரீ } வேசி.

பொதுநவேர் - மத்தியஸ்தர்.

பொதுநலம் - எல்லார்க்கும் பொதுவாயிருக்கும் நிலம்.

பொதுநிறம் - பலநிறக்கலப்பு.

பொதுநீங்குவமை - இயைபின் மையணி.

பொதுநோக்கம் - பொதுப்பார்வை.

பொதுநோக்கு - சமபார்வை.

பொதுபொதுத்தல்
பொதுபொதெனல் } ஒலிக்குறிப்பு, மெது மெதுத்தல்.

பொதுப்பணம் - பலர்க்கு முரிய பணம்.

பொதுப்பெண் - பொதுமகள்.

பொதுப்பெயர் - திணை, பால், இடங்களைக் குறித்துப் பொது வாய் வரும்பெயர்.

பொதுப்பொருள் - பலர்க்கு முரியபொருள்.

பொதுமகள் - வேசி.

பொதுமத்தியம் - பொது.

பொதுமனிதன் - நடுவன்.

பொதுமாது - வேசை.

பொதுமுதல் - பங்கானமுதல்.

பொதுமை - பொதுத்தன்மை.

பொதுமொழி - பொதுப்பெயர்.

பொதும்பர் - மரச்செறிவு, மரப்பொந்து.

பொதும்பு - பொந்து.

பொதுவகத்திணை - அகத்திணைப் பொது.

பொதுவசனம் - பலவற்றை நோக்குஞ்சொல்.

பொதுவர் - இடையர்.

பொதுவறுசிறப்பு - தனக்கே யுரிய சிறப்பு.

பொதுவருமானம் - ஓரளவை.

பொதுவார்த்தை - பட்சபாத மில்லாத சொல்.

பொதுவி - முல்லைநிலப்பெண்.

பொதுவிதி - பொதுவான நிர்ணயம்.

பொதுவியர் - இடைச்சியர்.

பொதுவில் - அம்பலம்.

பொதுவெழுத்து - தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவாய் வழங்குமெழுத்து.

பொதுவைத்தல் - நடுக்கட்டுதல்.

பொதுளல் } செழித்தல்,
பொதுளுதல் } நெருங்குதல்.

பொத்தலூசி - துளையூசி.

பொத்தல் - துவாரம், துளைத்தல், புரைதல், மூடுதல்.

பொத்தாறு } ஏர்க்கால்.
பொத்தாறுகட்டை }

பொத்தி - வாழை முதலியவற்றின் காய்ப்பொத்தி, பிருக்கிழங்குத்தோற் பொத்தி.

பொத்திக்கரம்பன் - தண்டுக்கிரந்தி.

பொத்திக்காளான் - ஓர்காளான்.

பொத்திதள்ளுதல் - வாழைமுதலிய பொத்தி போடுதல்.

பொத்து - ஆண்குறி, தவறு, புரைவு, பெண்குறி, பொத்தென்னேவல், பொந்து, பொய், மூடுதல்.

பொத்தல் - புரைதல், மூடுதல்.

பொத்துப்பாய் - பருக்கன்பாய்.

பொத்துப்பொத்தெனல் - ஒலிக்குறிப்பு.

பொத்துமான் - ஓர்வகைமான்.

பொத்தை - பருத்தது.

பொத்தைச்சி - கும்மலி.

பொத்தையன் - நீர்ப்பிடியான சரீரமுள்ளவன்.

பொர்ந்தி - சரீரம், மரவாள், மொத்தி.

பொந்து - மரப்பொந்து, வங்கு.

பொந்தையக்கோல் - ஓர் வகைப் பற்றுக்கோல்.

பொம்மலாட்டம் - பாவைக் கூத்து.

பொம்மலி - பருத்தவன்.

பொம்மல் - சோறு, பொம்மை, பொருமல், பொலிவு, மிகுதி.

பொம்மெனல் - அநுகரண வோசை.

பொம்மை - பிரதிமை.

பொய் - அசத்தியம், இஃது— தாமத குணத்தொன்று, சிறு சிராய், பஞ்ச பாதகத்து மொன்று, பொய்யென்னேவல், மரப் பொந்து, வேஷம்.

பொய்கை - குளம், கோட்டான்.

பொய்கையார் - ஓர் புலவர்.

பொய்க்கடி - பருங்கடி.

பொய்க்கண் - கண்மண்டை.

பொய்கண்ணி - பிஞ்சு பிடியாத கண்ணி.

பொய்க்கண்ணுறக்கம் - குறைக் கணித்திரை.

பொய்க்கதை - கட்டுக்கதை.

பொய்க்கால் - போலிக்கால்.

பொய்க்கிளை - பிஞ்சு பிடியாத முளை.

பொய்க்குதல் - பொய்சொல்லு தல், பொய்யாய்ப்போதல்.

பொய்க்குரல் - போலிச்சத்தம்.

பொய்க்குழி - நாற்று நட்டகுழி, பொறிக்கிடங்கு.

பொய்க்கூடு - சரீரம், பொய்ச் சரீரம்.

பொய்க்கை - பொய்த்தல், போலிக்கை.

பொய்க்கொட்டை - பொய்ப் பிஞ்சு.

பொய்க்கோலம் - கரவடவேடம், போலிவேடம்.

பொய்சொல்லல் - தப்புப்பேசல்; இது—வாக்கின் தீக்குண நான்கினொன்று.

பொய்ச்சத்தம் - பொய்க்குரல்.

பொய்ச்சத்தியம் - பொய்யாணை.

பொய்ச்சாட்சி - கள்ளச்சாட்சி.

பொய்ச்சாத்தல் - மறத்தல்.

பொய்ச்சு - கொட்டை சுளையற்றது, பயனில்லது.

பொய்தல் - தோழி, மகளிர் கூட்டம், மகளிர் விளையாட்டு.

பொய்த்தலை - போலித்தலை.

பொய்நீர் - கானல்நீர்.

பொய்படுதல் } பொய்யாதல்.
பொய்ப்படுதல் }

பொய்ப்பத்திரம் - கள்ளச்சீட்டு.

பொய்ப்பிஞ்சு - நிலையாப்பிஞ்சு.

பொய்ப்பு - பொய்த்தல்.

பொய்ப்பூ - பிஞ்சு பிடியாதபூ.

பொய்முயக்கம் - அன்பிலாக்கூட்டம்.

பொய்மூளை - பொய்க்கிளை.

பொய்மூக்கு - உண் மூக்கு.

பொய்மை - கரவடம், பொய், பொய்வேஷம், மாயம்.

பொய்யடி - பகடம், வெருட்டு.

பொய்யன் - பொய்சொல்வோன்.

பொய்யாணை - பொய்ச்சத்தியம்.

பொய்யாமை - தவறாமை, பொய் மொழி கூறாமை.

பொய்யாமொழி - சத்தியம் தவறாமை.

பொய்யாமொழிப்புலவர் - ஓர்புலவர், திருவள்ளுவ நாயனர்.

பொய்யுடல் - நிலையற்றவுடல்.

பொய்யுறக்கம் - குறைநித்திரை.

பொய்வார்த்தை- பொய்ப்பேச்சு.

பொய்வாழ்க்கை- அநித்யவாழ்வு.

பொய்வாழ்வு - பொய்வாழ்க்கை.

பொய்வேஷம் - கரவடவேஷம், போலிக்கோலம்.

பொரி - கரிகாடு, நெற்பொரி முதலியன, பொரியென்னேவல்.

பொரிகாரம் - வெண்காரம்.

பொறிக்கறி - பொரியல்.

பொரிதல் - எரிச்சற் படுதல், தீதல், பொரியாதல், பொருக்குவெடித்தல்.

பொரித்தல் - அலப்பல், குஞ்சு பிறப்பித்தல், பொரியச்செய்தல், வறுத்தல்.

பொரிபொரிச்சான் - வெடியலவன்.

பொரிமலர் - புன்கு.

பொரிப்பூண்டு - ஓர் பூண்டு.

பொரிமா - பொரியரிசிமா.

பொரிமாச்சிந்தி } வீணெண்ண
பொரிமாத்தட்டி } மெண்ணுவோன்.

பொரியரிசி - பொரித்தரிசி.

பொரியல் - பொரிக்கறி, பொரிதல்.

பொரிவிளங்காய் - பொரிமரத்திரளை.

பொருகளம் - போர்க்களம்.

பொருகு - சோறு.

பொருக்காங்கட்டி - பொருக்கு மண்கட்டி.

பொருக்கு - செதில், தகட்டுவெடி வாய் வெடிக்கும் வண்டல்.

பொருக்கெனல்-சீக்கிரக்குறிப்பு.

பொருட்காட்சியணி - ஓரலங்காரம்;அஃது—ஒன்றன் செய்கையினு னற்பொருளை யாயினுந் தீப்பொருளையாயினுந் தெரிவித்தல்.

பொருட்சிதைவு - பொருட்சேதம்.

பொருட்சிறப்பு - அருத்தாலங்காரம்.

பொருட்சுவை - அருத்தரசம்.

பொருட்செல்வம் - திரவிய சம்பத்து.

பொருட்செல்வி - இலக்குமி.

பொருட்டிரிபு - கருத்துத்திரிபு.

பொருட்டு - காரணம், நிமித்தம், மேம்பட்டது.

பொருட்டொடர்நிலைச்செய்யுள் - ஓர்பிரபந்தம்; அஃது—பொருளாற் றொடர்ந்து வருவது.

பொருட்படுதல் - பயன் படுதல்.

பொருட்படுத்தல் - ஒரு பொருளாகமதித்தல், பயன்படுத்தல்.

பொருட்பால் - பொருளின்பகுதி.

பொருட்பிறிதின்கிழமை - தன்னோ டொற்றுமை யில்லாப் பொருள்.

பொருட்பெண்டிர் - வேசிகள்.

பொருட்பெற்றி - பொருளின் குணம்.

பொருட்பேறு - திரவியலாபம்.

பொருணயம் - கருத்து, நயப்பு.

பொருணி - கள்.

பொருணிலை - பயனிலை.

பொருண்முடிவு - கருத்துமுடிவு.

பொருண்மை - பொருட்டன்மை.

பொருதல் - அலைபோதல், ஒப்புதல், தும்பை, பொருந்தல், போர்செய்தல்; இஃது—அரசரறுதொழிலிஜென்று.

பொருதுதல் - பொருந்தல்.

பொருத்தக்கடுதாசி - உடம்படுகைக்கடுதாசி.

பொருத்தம் - இணக்கம், சகுதி, பொருத்தனை.

பொருத்தல் - பொருத்துதல்.

பொருத்தனை - பொருத்தம்.

பொருத்து - இணக்குகை, இசைப்பு, சந்து, பொருத்தென்னேவல், மரக்கண், மூட்டு.

பொருத்துதல் - அமைத்தல், பொருந்தச்செய்தல்.

பொருத்தோலை - பொருத்தச்சீட்டு.

பொருநர் - அரசர், கூத்தர், நாடகர், படைத்தலைவர், படைவீரர், புகழ்வோர்.

பொருநன் - அரசன், குறிஞ்சிநிலத்தலைவன், திண்ணியன், நாடகன், படைத்தலைவன், படைவீரன்.

பொருநை - ஓராறு.

பொருநைத்துறைவன் - சேரன்.

பொருந்தநதி - சூதநதி.

பொருந்தம் - பொருநை.

பொருந்தர் - நெய்வார்.

பொருந்தவர் - பகைவர்.

பொருந்தல் - அடுத்தல், அமைதல், இயைதல், கலத்தல், சம்மதித்தல்.

பொருந்தாமை - இயையாமை, வெறுப்பு.

பொருந்துதல் - பொருந்துதல்.

பொருபுவி - பாலைநிலம், போர்க்களம்.

பொருபொருத்தல் - அறத்தீதல், மனவெறிச்சற்படல்.

பொருபொரும்பான் - ஓர் மரம்.

பொருபொரெனல்-ஒலிக்குறிப்பு

பொருப்பன் - குறிஞ்சிநிலத்தலைவன்.

பொருப்பு - கொல்லிமலை, மலை.

பொருப்புவில்லான் - சிவன்.

பொருமலி - கொழுத்தபெண்.

பொருமல் } அழுதல், ஊறிக்
பொருமுதல் } கசிதல், வீங்கல்.

பொரும்பி - சுழலாவாரை.

பொருவ - உவமவுருபு.

பொருவாய் - ஓர்மீன்.

பொருவு - உவமை, குற்றம், பொருவென்னேவல்.

பொருவுதல் - ஒப்பல்.

பொருளகத்திணை - தனக்குறுப்பெனப் பலவற்றை யடக்கிக்கொள்வது.

பொருளணி - பொருளான் வருமலங்காரம்.

பொருளந்தாதி - ஈற்றுப்பொருளை முதற்பொருளடியாகப் பாடல்.

பொருளவுனுதி - பொருளானுயர்பு தோன்றக்கூறு மலங்காரம்.

பொருளாகுபெயர் - முதற்பொருளின் பேரைச் சினைப்பொருட்கு வழங்குவது.

பொருளாசை - திரவியவாஞ்சை.

பொருளாலணையும்பெயர் - சுற்றம், எண், குழுஉ, பொருண் முதலியவற்றான் வரும் பெயர்.

பொருளானந்தம்-சொற்பொருட்குற்றம்.

பொருளிலக்கணம் - அறம்பொருளின்பமென்பவைகளை விளக்குமிலக்கணம்; இஃது—பஞ்சலட்சணத்தொன்று.

பொருளின்பம் - பொருட்சுவை.

பொருளீட்டல் - பொருள்சம்பாதித்தல்; இதுஃ—சூத்திரர்யர்க்குரியவறுதொழிலினொன்று.

பொருளுவமம் - பொருட்டன்மையை யுவமிப்பது; (உ-ம்) நீர்போலுந்திருவுளம்.

பொருள் - அருத்தாபத்தி, உடைமை, உண்மை, குணம், சம்பத்து; இஃது—நூற்பயனான்கினொன்று; சொற்பொருள், தலைமை, பணம், பலபண்டம், பிள்ளை, பொன், வஸ்து.

பொருள்கோள் - ஆசுரமணம், பயனிலை.

பொருள்பண்ணுதல் - அருத்தம் பண்ணுதல், மதித்தல்.

பொருள்வயிற்பிரிவு - அகப் பொருட்டுறையினொன்று.

பொருள்விளங்கவைத்தல்- அருத் தம்விளங்கவைத்தல்;இஃது— நூற்குணம் பத்தினொன்று.

பொருள்வீடு-பொருட்பற்றறுதல்.

பொருனன் - பொருநன்.

பொருனை - பொருநை.

பொலங்கலம் - ஆபரணம்.

பொலந்துறவு - பெருந்தவம்.

பொலம்
பொலன் } அழகு, பொல்லாங்கு, பொன், பொன்மை நிறம், மேன்மை.

பொலி - தூற்றுநெல், பொலி யென்னேவல்.

பொலிகடா - பொலியெருது.

பொலிக்கந்து - பொலியருகிற் கந்து.

பொலிக்கடா - பட்டிக்கடா.

பொலிக்கட்டை - பொலியெருது கட்டுங்கட்டை.

பொலிக்கொடி - வைக்கோல்.

பொலிசை - இலாபம்.

பொலிதல் - அதிகரிப்பு, அழகு, எழுச்சி, சிறத்தல், தாராளம், பருமை, புணர்தல், மிகுதல்.

பொலிதூற்றுதல் - தானியந்தூற் றுதல்.

பொலிநடையன்-பொலியெருது.

பொலியளவு - நிறையளவு.

பொலியெருது - போரடிக்கிற எருதுகளிற் பொலிக்கட்டைக் கடுத்தஎருது, மாப்பிள்ளைமாடு.

பொலிவு - அழகு, பொலிதல்.

பொலுகுதல் - நீர் பறிதல்.

பொலுபொலுத்தல் - உதிருதல்.

பொலுபொலுப்பு - உதிர்வு.

பொலுபொலெனல் - பொலுபொலுத்தல்.

பொல் - பொல்லு.

பொல்லம் - துண்டு, தைத்தல்.

பொல்லர் - சக்கிலியர், செம்மார், தையற்காரர்.

பொல்லன் - பொல்லான்.

பொல்லாங்கு - ஈனம், தீங்கு, மறதி.

பொல்லாநடை - தீநடை.

பொல்லாநிலம்-நரகம், மயானம்.

பொல்லாப்பு - பொல்லாங்கு.

பொல்லாமணி - பொள்ளாமணி.

பொல்லாமை - பொல்லாங்கு.

பொல்லார் - தீயோர்.

பொல்லு - ஊன்றுகோல், தடி, பதர்.

பொழிதல் - ஈதல், சொரிதல், மழைபெய்தல்.

பொழிப்பளபெடை - முதற்சொற் கண்ணும் மூன்றாஞ்சொற் கண்ணுமளபெடை வரத்தொடுப்பது.

பொழிப்பியைபு - முதற்சீர்க் கண்ணும் மூன்றாஞ்சீர்க் கண்ணும் இயைபுவரத்தொடுப்பது

பொழிப்பு-அனுமானம், குறிப்பு, சுருக்கம், தொகைப்பொருள்.

பொழிப்புத்திரட்டல் - பொழிப்புரையுரைத்தல்.

பொழிப்புத்திரட்டு - பொருட்டொகுப்பு.

பொழிப்புமுரண் - முதற் சீர்க் கண்ணும் மூன்றாஞ்சீர்க் கண்ணும் முரண்வரத்தொடுப்பது.

பொழிப்புமோனை - முதற்சீர்க் கண்ணும்மூன்றாஞ்சீர்க்கண்ணு மோனைவரத்தொடுப்பது.

பொழிப்புரை - பொருடொகுத்துரைக்குமுறை.

பொழிப்பெதுகை - முதற்சீர்க் கண்ணும் மூன்றாஞ்சீர்க்கண் ணுமெதுகைவரத்தொடுப்பது.

பொழில்-உலகப்பொது, சோலை, காடு, பூந்தோட்டம், பூமி, பெருமை.

பொழிவு - பலன், புகழ்ச்சி, பொழிதல், மேன்மை, வருமானம்.

பொழுதறுதி - அத்தமன பரியந்தம்.

பொழுதிற்கூடல் - பொழுதொடு புணர்தல்.

பொழுது - காலம், சூரியன்.

பொழுதுசாய்தல் - பொழுது மதியந்திரும்பல்.

பொழுதுபடுதல் - சூரியனத்தமித்தல்.

பொழுதுபுகுதல் - பொழுதத்தமித்தல்.

பொழுதுபோக்கல் - பொழுது கழிய விளையாடல்.

பொழுதுபோக்கு - பராக்கு, பாராட்டு.

பொழுதுபோக்குதல் - காலம் விடுதல், பராக்குப் பண்ணல்.

பொழுதுவணங்கி - ஓர்பூச்செடி.

பொழுதுவிடிதல் - சூரியனுதித்தல்.

பொழுதுவிடுதல் - பொழுது போக்குதல்.

பொழுதொடுபுணர்தல் - வணிகரெண்குணத்தொன்று.

பொளி - துளை, மண்வெட்டி வெட்டு, வரம்பு.

பொளிதல் } கன் முதலிய
பொளிவு } கோதல்.

பொள்ளல் - அப்பவருக்கம், தழும்பு, பொத்தல், பொளிதல், மரப்பொந்து.

பொள்ளாமணி - துளையாமணி.

பொள்ளுதல் - பொந்துபோதல்.

பொள்ளெனல் - அநுகரணவோசை, சீக்கிரக்குறிப்பு, சீக்கிரம்.

பொறாமை-எரிச்சல், தரியாமை.

பொறி - அடையாளம், அறிவு, இயந்திரம், இலக்குமி, இலிபி, எழுத்து, கைவரை, செல்வம், தீப்பொறி, தேமல், தேர், புலப்பொறி, புள்ளி, பொருள், பொலிவு, பொறி, பொறியச் சுவடு, பொறியென்னேவல், பொறிவு, மதிலுறுப்பு, மரக்கலம், முத்திரை.

பொறிக்கல் - சிலாநாகக்கல், சுக்கான்கல்.

பொறிக்குதல் - பொறித்தல்.

பொறிதல் - சுறுக்குதல், பறிதல்.

பொறித்தட்டுதல் - கண் மின்னுதல், பறிதல்.

பொறித்தல் - எழுதல், சித்திரமெழுதல், பொறியச்செய்தல்.

பொறிப்பு - பொறித்தல்.

பொறியார்த்தல்-கண்மின்னுதல்.

பொறியிலார் - அதிட்டகீனர், கீழ்மக்கள்.

பொறியிலி - அறிவிலி, விதிகேடன்.

பொறியேற்றுதல் - பொறிவைத்தல்.

பொறிவு-சாய்ந்த பதிவு, தொங்கு பறிவு, பொறிதல்.

பொறுக்கல் } தாங்குதல்,
பொறுக்குதல் } பெறுக்கல்.

பொறுக்கி - பெறுக்கி.

பொறுக்கு - பொறுக்கி, பொறுக் கென்னேவல்.

பொறுதி - ஓய்வு, தணிவு, தாமதம், பொறுமை, மன்னித்தல்.

பொறுத்தல் - தரித்தல், தாஙகுதல், பொறுமை, மன்னித்தல்.

பொறுப்பாளி-பொறுப்புக்காரன்

பொறுப்பானவன் - பிரதான மானவன்.

பொறுப்பித்தல் - சுமத்துதல்.

பொறுப்பு-சென்மானம், பாரம், பிரதானம், பொறுத்தல், பொறுமை.

பொறுமை - சகிப்பு, பொறுதி.

பொறை - கருப்பம், சலதாரை முதலிய வடைக்குங்கல், சிறுமலை, சுமை, பாரம், பூமி, பொறுமை; இது—பெரியோரியல்புளொன்று, சாத்துவிக குணத்துமொன்று, மலை.

பொறைசாலி - பொறுதிக்காரன்.

பொறையன் - சேரன், தருமராசன்.

பொறையிலார் - பூரியர், வேடர்.

பொறையுயிர்த்தல் - பாரங்கழித்தல், மகப்பெறுதல்.

பொற்கசை - பொற்கம்பி.

பொற்கணக்கு - பொன்னிறை யளவு.

பொற்கண்டை-பொற்கெண்டை

பொற்கம்பி - பொன்னின்கம்பி.

பொற்கலம் - பொன்பாத்திரம்.

பொற்கலை - பொன்வஸ்திரம்.

பொற்காசு - கொள்ளு, பொன் னின் காசு.

பொற்காரை - ஓர் கழுத்தணி.

பொற்கொல்லன் - கம்மாளன்.

பொற்குவை - பொன்குவியல்.

பொற்சபை - கநகசபை.

பொற்சரக்கு - உயர்ந்தசரக்கு.

பொற்சரிகை - பொன்னூல்.

பொற்சிலை - பொன்மலை.

பொற்சீந்தில் - ஓர் சீந்தில்.

பொற்சுண்ணம் - பொற்றூள்.

பொற்ப - பொற்புக்கொள்ள.

பொற்பணதி - பொன்னுபரணம்.

பொற்பராகம் - பொற்பொடி.

பொற்பணி - பொன்னுபரணம்.

பொற்பாளம் - பொற்சலாகை.

பொற்பிரகாசம் - பொன்னொளி.

பொற்பு - அலங்கரிப்பு, அழகு, ஒப்பனை, பொலிவு, மிகுதி.

பொற்புறுத்தல் - அலங்கரித்தல்.

பொற்பூ - பொன்மலர்.

பொற்பூச்சு - மலாம்பூச்சு.

பொற்பூவராகன் - ஓர் வராகன்.

பொற்பொருப்பு - மேருமலை.

பொற்றகடு - பொன்னின்றகடு.

பொற்றலைக்கையாந்தகரை - ஓர் கையாந்தகரை.

பொற்றாமரை - பொன்னுருவத் தாமரை.

பொற்றிக்கீரை - ஓர் கீரை.

பொற்றை - சிறுதூறி, சிறுமலை, மலை.

பொற்றொடி-பெண்,பொன்வளை.

பொன் - அழகு, இரும்பு, இலக்குமி, ஓர் நாணயம், சூரியன், பஞ்சலோகப்பொது,பொலிவு, பொன், வியாழம்.

பொன்காத்தபூதம் - புதையல் காத்தபூதம்.

பொன்செய்கொல்லர் - தட்டார்.

பொன்புனைதல் - அகப்பொருட் டுறையினொன்று.

பொன்பூணுதல் - கடுக்கன் முதலிய வணிதல்.

பொன்மணி - பொன்னினாற் செய்தமணி.

பொன்மயம் - பொற்பிரகாசம்.

பொன்மயிர்க்கொன்றை - ஓர் கொன்றை.

பொன்மலாம் - பொற்பூச்சு.

பொன்மலை - மகாமேரு.

பொன்மழை - புட்கலாவர்த்த முகில் பொழியுமழை.
பொன்முடியார் - ஓர் புலவர்.
பொன்முழை - பொற்காசினச்சு.
பொன்மெழுகு - ஓர் மெழுகு.
பொன்மை - பொன்னிறம்.
பொன்வண்டு-பொன்னிறவண்டு.
பொன்வண்ணத்தந்தாதி - ஓர் பாடல்.
பொன்வலயம் - பொன் வளையம்.
பொன்வன்னக்காரிளை - கெந்தகம்.
பொன்வாய்ப்புள்-கிச்சிலிக்குருவி
பொன்வானம் - பித்தளைமலை.
பொன்வித்து - நாகமணல்.
பொன்விலை - அரியவிலை.
பொன்வினைமாக்கள் - தட்டார்.
பொன்றல், பொன்றுதல் - அழிதல், குறைதல், சாதல்.
பொன்னகர் - தேவலோகம்.
பொன்னகர்க்கிறைவன் - இந்திரன்.
பொன்னகை-பொன்னுபரணம்.
பொன்னத்துப்பெட்டி - தாலி கூறை வைத்துக்கொண்டு போகும் பெட்டி.
பொன்னப்பிரகம் - ஓரப்பிரகம்.
பொன்னம்பர் - ஓர் மருந்து.
பொன்னரிமாலை, பொன்னரியமாலை - ஓர் ஆபரணம்.

பொன்னவண்டு - பொன்னிற வண்டு.

பொன்னவன் - இரணியன், வியாழன்.

பொன்னாங்கண்ணி - பொன்னாங் காணி.

பொன்னாங்காணி - ஓர் கீரை.

பொன்னாசை - திரவியவாஞ்சை; அஃது-ஆசைமூன்றிலொன்று.

பொன்னாந்தட்டான் - ஓர் பட்சி.

பொன்னாபரணம் - பொன்னகை.

பொன்னாவிரை - ஓர் செடி.

பொன்னி - காவேரி.

பொன்னித்துறைவன் - சோழன்.

பொன்னிமிளை - ஓர்கல்.

பொன்னிலம் - தேவலோகம்.

பொன்னிறமாட்சி - பொன்னிமிளை.

பொன்னுக்குவீங்கி - கடைக் கட்டு.

பொன்னுருக்குதல் - பொன்னை நீராக்குதல்.

பொன்னுரை - தேய்மானம்.

பொன்னுலகு - தேவலோகம்.

பொன்னுமத்தை - ஒருமத்தை.

பொன்னூல் - பொன்னாற் சமைக்குநூல்

பொன்னெயில்வட்டம் - அருகனிருக்குமிடம்.

பொன்னெயிற்கோன் - அருகன்.

போ

போ1-அசைச்சொல், ஓரெழுத்து, போவென்னேவல்.

போகடல் - போகவிடல்.

போகபூமி - தேவலோகம், நல்வினைப்பயனனுபவிக்கும் பூமி, விளைநிலம்.

போகம்-அனுபோகம், செல்வம், பாம்பினுடல், விளைவு, பெண், ஆடை, அணிகலன், போசனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி.

போகர் - ஓர் சித்தர்:—போகர் எழுநூறு, போகர் திருமந்திரம், போகர்நிகண்டு, போகர் யோகமார்க்கம்.

போகல் - உயர்ச்சி, செல்லல், நீளம்.

போகவதி - நரகர்பதி, நல்லனுபவமுடையாள்.

போகஸ்தானம் - ஆனந்தமய கோசம், உடல்.

போகாங்கபூசை - சிவகணிபர்க்குச் செய்யும் பூசை.

போகி - அரசன், இந்திரன், ஓர் பண்டிகை, கார்போகிவிதை, தலைமைக்காரன், பாம்பு, போகியென்னேவல்.

போகில் - கொப்பூழ், பறவை, பூவரும்பு.

போக்கடி - அழிவு, சுயேச்சை, நட்டம், போக்கடியென்னேவல், வழிச்செலவு.

போக்கணம் - இலச்சை, கட்டுச்சோறு.

போகு - நெடுமை.

போகுதல் - அழிதல், செல்லல், நீளம், நேர்மை, மாறுதல்.

போக்கல் - செலுத்தல்.

போக்கறுபனுவல் - பயனற்ற செய்யுள்.

போக்கியம்-அனுபவம், செல்வம்.

போக்கியல் - சரிதகம்.

போக்கியார் - ஓர் சங்கப்புலவர்.

போக்கு - அறையிருப்பு, சாட்டு, சாவு, பழக்கம், போகுதல், போக்கென்னேவல், வழி.

போக்குதல் - அழித்தல், அனுப்புதல், செலுத்தல், விடுதல்.

போசனம் - உணவு, புசித்தல்.

போசனன் - ஓரரசன், செல்வன்.

போடகம் - ஓர் நோய்.

போடகம் - ஓர் தேசம்.

போடல் - அடித்தல், எறிதல், போடுதல், வழுவவிடல், வைத்தல்

போடுதல் - அணிதல், இடுதல், ஈறுதல்.

போதகம் - இளமை, உபதேசம், காஞ்சிரை, சிங்கக்குட்டி, பசளை, புலிக்குட்டி, மரக்கன்று, யானை, யானைக்கன்று.

போதகன் - உபதேசி, உவாத்தி, ஒற்றன்.

போதகரன்-எழுச்சிபாடுவோன்.

போதகி - பெண்ணார்க்குருவி.

போதப்பிரகாரம் - அறிவகை—(உத்தேசம், இலக்கணம், பரீக்கை.)

போதம்-அறிவு, கன்று, ஞானம், பரணி, நாள், மரக்கலம்.

போதரல் - கொண்டுபோதல், கொண்வேரல், போதல்.

போதரவிடல்-உயர்த்தல், போகவிடல்.

போதரவு - ஆறுதல், உபசரணை, கணிசம், பேணுதல்.

போதல் - அகலல், நீளல், அழிதல்,உட்படல், திருத்தியாதல், நீளல், போகல், வரல்.

போதவாகன் - தோணியோட்டுவோன்.

போதனம் - அறிவித்தல், அறிவு, தூபங்காட்டல்.

போதனை - கற்பனை, தூண்டுகை, போதிப்பு.

போதன் - அருகன், அறிஞன், பிரமன்.

போதா - பெருநாரை.

போதார்த்தம் - ஞானசாரம்.

போதாந்தன் - கடவுள்.

போதாமை - குறைவு, வெறுப்பு.

போதாயனர் - ஓரிருடி.

போதாயனீயம் - ஓர் தரும நூல்.

போதி - அரசமரம், அறிவு, போதியென்னேவல், மலை.

போதிகை - குறுந்தறி.

போதித்தல் - கற்பித்தல், புத்தி சொல்லுதல், போதகஞ் செய்தல்.

போதிப்பு - உபதேசப், படிப்பினை, போதித்தல்.

போதிவேந்தன் - புத்தன், மலையரசன்.

போது - காலம், பூ, பூமலரும் பருவத்தரும்பு, போவென்னேவல், சூரியன்.

போதுதல் - அகலல், செல்லல், தகுதியாதல், திருத்தியாதல், நீளல்.

போதை - மயக்கம், மூதறிவு.

போதைப்புல் - கருப்பூரப்புல், காவட்டம்புல்.

போத்திரி - பன்றி.

போத்து - எருமை, காட்டுப்பசு பசு, புலி, புல்வாய், பூனை, மயில், மரை இவற்றின்ஆண், செம்போத்தினாண், நீர்ச்சாதியினாண், மரக்கன்று, விலங்கின் படுக்கை.

போந்தின்றூரோன் - சேரன்.
போந்து-அனுடநாள், பனைமரம்.
போந்தை - அனுடநாள், இளம் பனை, பனை.
போம் - அசைச்சொல், அச்சம், பெயரெச்சம்.
போருடன்றல் - போர் செய்தல்.
போரேறு - செவ்வாய், போர் வீரன்.
போர் - சதயநாள், நெற்போர், பொருதல், போரென்னேவல்.
போர்க்கெழுச்சி- படையெழுச்சி.
போர்க்கெழுவஞ்சி - ஓர் பிரபந்தம்.
போர்த்தல் } மூடுதல்.
போர்ப்பு }
போர்ப்பறை - இரணபேரிகை.
போர்மடந்தை - வீரலக்குமி.
போர்வேந்தன் - போர்செய்யு மரசன்.
போர்வை - தோல், மூடுதல்.
போல - உவமைச்சொல், ஒப்ப.
போலல் - உவமை.
போலி - ஒட்டகம், ஒப்பு, ஒன்று போலொன்றிருத்தல், சாயல், பொய்.
போலியெழுத்து - ஒலியொத்த வெழுத்து, பதிலெழுத்து.
போலும் - இசை நிறையசைச் சொல், பெயரெச்சம்.

போல் - உவமை, பதர், பொந்து, போலென்னேவல், மூங்கில்.

போழ் - பிளவு, போழென்னே வல்.

போழ்தல்-பிளத்தல், வெடித்தல்.

போழ்து - காலம், பொழுது.

போழ்முகம் - பன்றி.

போளம் - ஓர் வாசனைப்பண்டம், நிலக்கடம்பு, மணிவகையி லொன்று.

போளி - அப்பவர்க்கம்.

போறல் - போலல்.

போற்றலர் } மகைவர்.
போற்ருர்

போற்றல் - பாதுகாத்தல், புகழ் தல், வணங்கல்.

போற்றி - துதி, பாட்டன், வணக்கம்.

போற்றிக்கலிவெண்பா-ஓர் செய் யுள்.

போற்று - காப்பு, துதி, போற் றென்னேவல்.

போறுதல் - ஈட்டுதல், காத்தல், துதித்தல், புகழ்தல், பேணு தல், வணங்கல், வளர்த்தல், விரும்புதல்.

போனகத்தி - ஊட்டுந்தாய், சமைக்கிறவள், வெள்ளாட்டி.

பௌ

பௌஞ்சு - சேனை.

பௌடம் - தைமாதம்.

பௌடிகம்-அட்டாதச புராணத்தொன்று, முதல் வேதம்.

பௌடியம் - பௌடிகம்.

பௌடியன் - ஒரேகாதிபதி.

பௌண்டரம் - வீமன்சங்கு.

பௌண்டிரம் - ஓர் தேயம்.

பௌதி - இராத்திரி.

பௌதிகஞானம் - புத்தஞானம்.

பௌதிகம் - பூதசம்பந்தம், உலகம்.

பௌத்தம் - புத்தமதம்.

பௌத்தன் - புத்தசமயி.

பௌத்திரன் - பெயரன்.

பௌமம் - நிலத்திற்பிறப்பன.

பௌமன் - செவ்வாய்.

பௌமி - லீதை.

பௌரணை-பூரணை, மரக்கன்று.

பௌரவர் - குருகுலவேந்தர்.

பௌராணிகம் - புராணமதம்.

பௌராணிகன் - புராணிகன்.

பௌரிகன் - குபேரன்.

பௌருஷம் - பருஷத்தன்மை.

பௌரோகித்தியம் - புரோகிதத்தன்மை.

பௌர்ணமி - பௌரணை.

பௌலத்தி - சூர்ப்பனகை.

பௌலஸ்த்யன் - இராவணன், குபேரன், விபீஷணன்.

பௌலோமி - புலோமசை, இந்திரன் மனைவி.

பௌவம் - உப்பு, கடல், நீர்க்குமிழி, நுரை, பூரணை மரக்கணு.

பௌளி - ஓரிராகம்.

ம

ம - இயமன், இறந்தகால விடைநிலை, ஓரெழுத்து, ஓர் மந்திரம், காலம், சந்திரன், சிவன், நஞ்சு, நேரம், பிரமன், விஷ்ணு.

மஃகான் - மகரக்குறுக்கம்.

மக - இளமை, காணிக்கை, குழந்தை, பிள்ளை, மகன்.

மககம் - ஆமை.

மககன் - மேன்மகன், விஷ்ணு.

மகங்காரம் - அகங்காரம்.

மகசம் - அறிவு, விதம்.

மகடி - ஓர் குழல், ஓர் வித்தை, ஓர் விளையாட்டு, மகிடி.

மகடூஉ - பெண்.

மகடூஉக்குணம் - பெண்டன்மைக் குரிய குணம்.

மகண்மை - மகட்டன்மை.

மகதந்திரம் - சிற்பநூல்முப்பத்திரண்டிலொன்று.

மகதம் - ஓர்தேசம், ஓர் பாஷை.

மகதி - சேம்பு, திப்பிலி, நாரதன் வீணை.

மகதேசுவரன்-சராசந்தன், மகத தேசத்தரசன்.

மகத்திருநாள் - மாசிமகம்.

மகத்து - பெரியது, மேன்மையான, விசாலம்.

மகத்துவம் - மேன்மை.

மகபதி - இந்திரன்.

மகமது - நபி.

மகமுறை-யாகக்கிரமம், விருந்து.

மகமை - தருமக்கொடை.

மகம் - இன்பம், ஓர் நாள், பலி, பிரபை, யாகம், விழவு.

மகரகுண்டலம் - காதணியினொன்று.

மகரகேதனம் - மச்சக்கொடி.

மகரகேதனன் } மன்மதன்.
மகரகேது

மகரக்குறுக்கம் - தன்மாத்திரையிற்குறைந்த மகரம்.

மகரச்சா- சாவாக்கியத்தொன்று.

மகரதோரணம் - வாயிலிற்றூக்குந்தோரணம், மகரமீன் வடிவம் போன்ற தோரணம்.

மகரத்துவசன் - காமன்.

மகரந்தம் - கள், குயில், தேமா மரம், தேனீ, தேன், பூந்தாது.

மகரந்தவதி - பாதிரிப்பூ, மது விசேஷம்.

மகரமண்டலம் - உத்தரவீதிக் கடை.

மகரமாதம் - தை.

மகரம்-இராசசின்னத்தொன்று, ஓரிராசி, ஓரெழுத்து, ஓர் சாயம், ஓர் நிதானம், காமன் கொடி, குபேரன் நவநிதிகளி லொன்று, சுறுமீன், பூந்தாது, முதலை, விருப்பம், குரங்கு செறியென்னும் ஓர் ஆபரணம்.

மகரப்பூ - வெந்தயம்.

மகரயாழ். நால்வகை யாழி னொன்று.

மகரரேகை-தனவானிலக்கணம்.

மகரவாழை -மருகு.

மகரவியூகம் - மகரவடிவமாக வகுக்கப்பட்டபடைத்தொகுதி.

மகராங்கள் - காமன்.

மகராலயம் - கடல்.

மகரி - கடல்.

மகரிகை - தோரணம்.

மகரிஷி - பெரியரிஷி.

மகலோகம் - மேலேழுலகி னொன்று.

மகவதி - இந்திராணி.

மகவன் - இந்திரன்.

மகவு - கோட்டில்வாழ்விலங்கின் பிள்ளை, பிள்ளை.

மகளிரான்மலர்மரம் - மகடூஉக் காரணமாயமலருமரம்; அவை- அசோகு, எழிலம்பாலை, குரா, குருக்கத்தி, சண்பகம், பாதிரி, புன்னை, மகிழம், மரா, முல்லை இவை முறையே, உதைக்க, நட்புற, அணைக்க, பாட, நிழல் பட, நிந்திக்க, ஆட, சுவைக்க, பார்க்க, நகைக்க, தளிர்த்துப் பூப்பனவாம்.

மகளிர் - பெண்கள்.

மகள் - புத்திரி.

மகன் - ஆண்பிள்ளைப்பொது. புதல்வன், புருடன்.

மகன்மை - ஆண்டன்மை.

மகா - பெருமை, மிகுதி மேன்மை யிவற்றைவிளக்குமோருப சர்க்கம்.

மகாகந்தம் - உள்ளி.

மகாகர்வம் - பத்துவட்சங்கோடி.

மகாகவம் - யுத்தம்.

மகாகாலன் - உருத்திரன்.

மகாகுதம் - போர்ப்பறை.

மகாதனம் - தூபம், பொன், வேளாண்மை.

மகாதாது - பொன்.

மகாதுந்துபி - போர்ப்பறை.

மகாதுருமம் - அரசு.

மகாத்துமா - அறிஞன்.

மகாநாகம்-புன்னைமரம், பெருஞ் சர்ப்பம்.

மகாநாதம் - சங்கு, சிங்கம், பேரொலி, முகில், யானை, வாச்சியக்கருவி.

மகாநிதி - குபேரன் நவநிதியிலொன்று.

மகாநிம்பம் - பூவரசமரம், பெருவேம்பு.

மகாபதம் - துர்க்கதி, மன்மதலோகம், ராஜமார்க்கம்.

மகாபத்மம் - குபேரன் நவநிதியிலொன்று, பத்துகோடாகோடி, வெண்டாமரை.

மகாபத்திரம் - பனைமரம்.

மகாபலம் - ஆகாசம், குடம், சித்தம், தெங்கு.

மகாபலன் - காற்று, பலவான்.

மகாபவன் - சுக்கிரன்.

மகாபிரளயம் - பிரமகற்பத்தழிவு, யுகமுடிவு.

மகாபிலம் - ஆகாசம்.

மகாபுருஷன் - உத்தமன்.

மகாபூதம் - பஞ்சபூதம்.

மகாமகம் - மாசிமகத்திற்குருவருநாள்.

மகாமாத்திரன் - செல்வன், மந்திரி, யானைப்பாகன்.

மகாமாயி - துர்க்கை.

மகாமாயை - பஞ்சமாயையிலொன்று.

மகாமாரி - பார்வதி.

மகாமிருத்யு - சிவன்.

மகாமுனி - அகத்தியன், புத்தன், வசிட்டன், வியாசன்.

மகாமூஷிகம் - பெருச்சாளி.

மகாமேரு - பொன்மலே.

மகாயுகம்-நான்குயுகங் கூடினது.

மகாரசதம் - பொன்.

மகாரண்ணியம் - பெருங்காடு.

மகாரதம் - பதினோராயிரந்தேர்க்குமுதற்றேர், பேராசை.

மகாரதன்-பதினோராயிரந்தேர்க்காரருடனே பொருவோன், பதினோராயிரம் தேருக்குத் தலேவன்.

மகாராசன் - அதிபதி, அரசன், கவலேயற்றவன், குபேரன், சமணகுரு, செல்வமுடையோன்.

மகாராட்டிரம் - ஓர் தேசம், ஓர் பாஷை.

மகாருத்திரன் - மஹாதேவன்.

மகாரூபகம் - நாடகத்தமிழ்.

மகாரௌரவம் - ஓர் நரகம்.

மகார் - மக்கட்பன்மை.

மகாலயன் - கடவுள், பிரமன்.

மகாவிலயம் - ஆகாசம், இதயம், குகை, நீர்ச்சாடி.

மகாவிஷுவம்-மேஷஸங்க்ராந்தி

மகாவீதி - ஓர் நரகம்.

மகாவீரம் - அர்க்கியபாத்திரம், ஓமாக்கினி, குயில், சிங்கம், வெண்குதிரை.

மகாவீரன் - அக்கினி, கலுழன், விஷ்ணு, வீரன்.

மகானந்தம் - முக்தி.

மகான்னவம் - கடல்.

மகி - பூமி.

மகிகை - மூடுபனி.

மகிடமர்த்தனி - துர்க்கை.

மகிடவாகனன் - யமன்.

மகிடாசூரன் - ஓரஸுரன்.

மகிடி - மௌடி.

மசிதம் - சிவன்சூலம்.

மகிதலம் - பூமி.

மகிந்தகம் - எலி, கீரி.

மகிபதி } அரசன்.
மகிபன் }

மகிமா - மகத்துவம், மிகவும் பருத்தல், அஃது—எட்டுச் சித்திகளிலொன்று.

மகிமை - கனம், பெருமை.

மகிலை - பெண், வெறிகாறி.

மகிழ் - ஓர்மரம், களிப்பு, மகிழென்னேவல்.

மகிழ்ச்சி - இன்பம், களிப்பு, சந்தோஷம்.

மகிழ்தல் - களித்தல், சந்தோஷித்தல்.

மகிழ்நன் - கணவன், மருதநிலத் தலைவன்.

மகிழ்வு - இன்பம், களிப்பு, சந் தோஷம்.

மகிளம் - பூவிதழ்.

மகிளித்தல் மக்களித்தல்.

மகினம் - இராச்சியம்.

மகி - ஓர்யாறு, பசு, பூமி.

மகீசுதன் - செவ்வாய்.

மகீசுதை - சீதை.

மகீதரம் - மலை.

மகீதலம் - பூமி.

மகீபதி - மகீபன் } அரசன்.
மகிபாலன்

மகீருகம் - தாவரயோநி.

மகீலதை - நாங்கூழ்.

மகுடபங்கம் - கிரீடாவமானம்.

மகுடம்-சல்லடைக்கொப்பு, சிவ காமமிருபத்தெட்டினொன்று, மத்தள முதலியவற்றின் விளிம்பு, முடி, முடியுறுப்பு.

மகுடராமக்கிரியம் - ஓர் பண்.

மகுடவர்த்தனன் - முடிதரிக்கு மரசன்.

மகுடி - மகிடி.

மகுரம் - கண்ணாடி, தண்டசக் கிரம், பளிங்கு, பூமொட்டு.

மகுலம் - மகிழமரம்.

மகூலம் - மலர்ந்தபூ.

மகேசம் - அப்பிரகம், இந்திரன், சிவன்.

மகேசுவரன் - சிவன்.

மகேசுவரி - பார்வதி.

மகேந்திரகதளி - ஓர் வாழை.

மகேந்திரசாலம் - ஓர் மாயவித்தை, அஃது—கலைஞான மறுபத்து நான்கினொன்று.

மகேந்திரபல்லவன் - ஓர் பல்லவ அரசன்.

மகேந்திரநகரி - அமராவதி.

மகேந்திரம் - ஓர் மலை.

மகேந்திரன் - இந்திரன்.

மகேந்திராணி - இந்திராணி.

மகைசுவரியம் - செல்வம்.

மகோததி - கடல்.

மகோதயம் - ஓர்புண்ணியகாலம், பெருமை, முக்தி, மேன்மை, விடுதல்.

மகோதாம் - பெருவயிறு.

மகோதரன்-இராவணன் மந்திரிகளிலொருவன்.

மகோந்நதம் - பனைமரம், பெரிய பதவி.

மகோபநிடதம் - ஒருபநிடதம்.

மகோற்பலம் - தாமரை.

மகோன்மதம் - மருள்வெறி.

மகௌடதம் - சுக்கு, திப்பிலி, வசம்பு.

மக்கடிதத்தல் - அழித்தல்.

மக்கம் - ஓர் தேசம்.
மக்கல் - உக்குதல்.
மக்களித்தல்-சுளுக்குதல், திரும்புதல், புரள்தல்.
மக்கள் - மகார், மனிதர், இவர் எழுவகைப்பிறப்பினொருவர்.
மக்கனம் - கேலி.
மக்கன் - பலவான்.
மக்கி - உக்கன்மாக்கல், ஓர் குளிகை.
மக்கினம்-அமிழ்ந்தல், வெட்கம்.
மக்குதல் - உக்கியழிதல்.
மக்குலம் - சிலாசத்து.
மங்கலகாரியம் - சுபகாரியம்.
மங்கலகௌசிகம் - ஓரிராகம்.
மங்கலச்சொல் - மங்கலமொழி.
மங்கலஸ்நாநம் - மங்கல காரியத்திற்கு முழுகுதல்.
மங்கலபாடகர் - கடிகைமாக்கள், சோபனம் பாடுவோர்.
மங்கலப்பிரதன் - சுபத்தைத் கொடுப்பவன்.
மங்கலப்பிரதை - மஞ்சள்.
மங்கலமொழி - சோபன வார்த்தை, செய்யுட்களின் முதற்கவியின் முதலில் வரும் சுபமொழி, அவை—அமிழ்தம், ஆரணம், உலகம், எழுத்து, கங்கை, கடல், சீர், சொல், திரு, தேர், திலம், நீர், பரி, பரிதி, புகழ், புனல், பூ, பொன் மணி, மதி, மலை, யானைமுதலியன.

மங்கலம் - கலியாணம், சுபம், சேகரிப்பு, சோபனம், தகனபலி, தருமம், பொலிவு, வாழ்த்து.

மங்கலம்பாடுதல்-சோபனம் பாடுதல்.

மங்கலவள்ளை - ஓர் பிரபக்தம்.

மங்கலவாரம்-செவ்வாய்க்கிழமை

மங்கலன் - செவ்வாய், நாவிதன்.

மங்கலியகம் - சிறுகடலை.

மங்கலியம் - தாலி.

மங்கலை - உமை, கற்புடையாள், சுமங்கலி.

மங்கல் - ஒளியின்மை, கெடுதல், தோற்றக்குறைவு.

மங்கல்லியம் - சந்தம், செவ்வீயம், தயிர், பொன்.

மங்களம் - சுபகாரியம், காரியம், வாழ்த்து.

மங்களாசரணை-மங்கள வழிபாடு, அது—வாழ்த்து, வணக்கம், வஸ்து நிர்தேசம் என மூவகைப்படும்.

மங்குகாலம் - துன்பகாலம், மரணவேளை.

மங்குசனி - முதல்முறை வருஞ் சனி.

மங்குதல் - கெடுதல், தோற்றங் குறைதல், மழுங்குதல்.

மங்குரம் - பளிங்கு.

மங்குல்-ஆகாயம், இரவு, மேகம்.

மங்குளம் - இருள், கலக்கம், மந்தாரம்.
மங்கை - பெண்.
மங்கைபங்கன் } சிவன்.
மங்கைபாகன் }
மசகம் - கொசுகு, நீர்த்துருத்தி, மயக்கம், மயிர்.
மசகி - அத்திமரம்.
மசகுதல் - வணங்குதல், மயிர்த்துதல்.
மசண்டை - கருகுமாலை.
மசமசத்தல் - தினவுகொள்ளல்.
மசமசப்பு - சொறிவு.
மசம் - அளவு, கொசுகு, கோபம், தொனி.
மசனம் - அனர்த்தம், வருந்துதல்.
மசாரகம் - இந்த்ரநீலமணி.
மசாரம் - மரகதம், நீலரத்தினம்.
மசானம் - மயானம்.
மசி - மசியென்னேவல், மை.
மசிதல் - மசிந்துகுழைதல்.
மசிபதம் - தூவல்.
மசியல் - மசிக்கப்பட்டது.
மசிவு - மசிதல்.
மசிலம் - வண்ணார்சேரி.
மசுக்கரம் - மூங்கில்.
மசுரம் - கடலை.
மசுரை } வேசி.
மசூரை }

மகுரம் - மூட்டுப்பூச்சி.

மகுரன் - தட்டான்.

மகுரகம் - வட்டத்தலையணை.

மகுரிகம் - சின்னமுத்து.

மச்சகந்தி - வியாசன்றாய்.

மச்சம் - ஓர் தேசம், பதினெண் புராணத்தொன்று, மச்சம், இஃது — திருமாலவதாரத் தொன்று.

மச்சிகை - மோர்.

மச்சு - குற்றம், சுவர்க்குமேல் வெளியடைப்பு, மஞ்சு, மேனிலை.

மச்சேந்திரநாதர் - நவநாதசித்தரி லொருவர்.

மச்சை - உட்சுரம், மீனம்பர், மூளை.

மஞ்சகம் - கட்டில், மேடை.

மஞ்சமண்டபம்-பள்ளிமண்டபம்.

மஞ்சம் - கடல், கட்டில்.

மஞ்சரம் - முத்து.

மஞ்சரி - ஓர் பிரபந்தம், ஓர் மருந்து, தளிர், பூங்கொத்து, பூத்திரள், பூமாலை, முத்து.

மஞ்சரீகம் - மிருதுவான மருக் கொழுந்து.

மஞ்சலன் - விற்காரன்.

மஞ்சள் - அரிசலம்.

மஞ்சனச்சாலை - கானமண்டபம்.

மஞ்சனம் - குளித்தல், முழுகல்.

மஞ்சன் - மகன்.

மஞ்சாடி - இரண்டு குன்றுமணி கொண்ட நிறை, ஓர் மரம்.

மஞ்சி - பேடகம், பேழை.

மஞ்சிகம்-தாளிக்கொடி,பேடகம்.

மஞ்சிகன் - நாவிதன்.

மஞ்சிகை - காதணி, குண்டலம், தாளிக்கொடி, பேழை, வேசி.

மஞ்சிட்டி - ஓர் கொடி.

மஞ்சிபலை - வாழை.

மஞ்சிமம் - அழகு.

மஞ்சிரம் - காலாழி.

மஞ்சிலை - செங்கல்.

மஞ்சு - அழகு, ஆபரணம், இளமை, கட்டில், களஞ்சியம், பனி, முகடு, மேகம், யானைமுதுகு, வலி.

மஞ்சுகம் - கொக்கு.

மஞ்சுபாஷிணி - நயவசனி.

மஞ்சுளம் - அழகு.

மஞ்சுட்டை-கோட்டை, பேழை.

மஞ்சுரம் - கடலை.

மஞ்ஞை - மயில்.

மஞ்ஞையூர்தி - கந்தன்.

மடக்கடி - கலக்கம், முடக்கு.

மடக்கம் - அடக்கம், முடக்கு.

மடக்கல் - அடக்கல், வளைத்தல்.

மடக்கு - ஓலங்காரம், ஓர் பாத்திரம், மடக்கென்னேவல், மடங்கடிப்பு, மூடக்கு.

மடக்குக்கத்தி - பூச்சாத்தி.

மடக்கொடி - பெண்.

மடங்கடித்தல் - தோற்றோடச் செய்தல், முறியடித்தல்.

மடங்கலர் - பகைவர்.

மடங்கல்-இடி, இயமன், காலன், கீழ்ப்படிதல், சிங்கம், தாழை, மீளல், முடங்கல், யுகமுடிவு, வடவாமுகாக்கினி, வியாதி.

மடங்கற்கொடியோன் - வீமன்.

மடங்கு - அளவு, இழைக்கயிறு, பங்கு, மடங்கென்னேவல், வியாதி.

மடங்குதல் - கீழ்ப்படிதல், மீளல், முடங்கல்.

மடதி - ஆலங்கட்டி.

மடத்தல்-அறியாமையாயிருத்தல்

மடத்தனம் - அறியாமை.

மடநல்லார் - பெண்கள்.

மடநோக்கு - எண்ணமு மச்சமும் கூடிய பார்வை.

மடந்தை - பருவமாகாதபெண், பெண்.

மடப்பம் - ஐந்நூறு கிராமத்திற்குத் தலைக்கிராமம், அரண்மனையிற் பெண்.

மடமடத்தல் } ஈரடுக்கொலிக்
மடமடப்பு } குறிப்பு.

மடமை - அறிவின்மை, இஃது—பெண்கள் நாற்குணத்து மொன்று.

மடம் - அறப்புறம், இரதம், கோயில், சத்திரம், மடமை, முனிவர் வாசம்.

மடலரிதாரம் - ஓரரிதாரம்.

மடலூர்தல் } மடற்குதிரையிவர்தல், இஃது—
மடலேறுதல் } அகப்பொருட்டுறையினொன்று.

மடல் - நந்து, கமுகு, தாழை, தெங்கு, பனை, வாழை யிவற்றின் பூமடி, எற்றமடல், ஓர் பிரபந்தம், ஓலைமடல், காதின் மடல், பூவிதழ், வாழை முதலியவற்றின் மடல்.

மடவரல் } இளம்பெண்.
மடவாள் }

மடவார் - அறிவீனர், பெண்கள்.

மடவை - ஓர்மீன், கடவுமரம்.

மடற்பனை - மடற்கொண்டபனை.

மடற்றுற்றம் - ஓர் துத்தம்.

மடன்-அறியாமை, அறிவிலான், உன்மத்தம்.

மடன்மா - மடற்குதிரை.

மடாதிபதி - மடத்தலைவன்.

மடி - அடங்கல், கேடு, சீலை, சோம்பல், சோறு, தாழை, நோய், பொய், மடங்குதல், மடிந்தது, மடியென்னேவல், முலைமேற்றிரள், வயிறு, வலையினருகு.

மடிக்குதல் - உபாயமாய்ச்செயித்தல், கொல்லுதல், மடக்குதல், முடக்குதல்.

மடிதல் - கெடுதல், சாதல், மடங்குதல்.

மடிபிடி - சண்டை, மடிச்சீலையிற் பிடிக்கும்பிடி.

மடிப்பிணை - வங்கமணல்.

மடிப்பு-மடக்கு, மடித்திருப்பது, மோசம், வஞ்சகம்.

மடிப்புக்காரன்-தீதுசெய்வோன், வஞ்சகன்.

மடிப்பை - அடைப்பை.

மடிமை - சோம்பு.

மடிவிடுதல்-மடிதளர்தல், அது—பசுமுதலியன சினைக்குறிகாட்டல்.

மடிவித்தல் - மடியச்செய்தல்.

மடிவு - கேடு, சாவு, தரித்திரம், மடக்கம், மடிதல்.

மடு - ஆற்றினுட்பள்ளம், குளம், மடுவென்னேவல்.

மடுத்தல் - நிறைத்தல், மடிப்புச்செய்தல், வாய்முதலியவற்றுளுட்கொள்ளல்.

மடை - ஆபரணக்கடைப்பூட்டு, சோறு, துவாரம்,தேவதைகட்குப் படைப்பது, நீர்பாயுமடை, மதகு.

மடைத்தொழிலோன் - சமையற்காரன், இவன் அரசர்க்குறுதிச்சுற்றத்தொருவன்.

மடைத்தொழில் - சமையல்வேலை.

மடைப்பண்டம் - அலங்கார நைவேத்யம்.

மடைப்பள்ளி - அடுக்களை.

மடைமாற்றுதல் - மடைக்கழித்தல்.

மடைமுகம் - ஆற்றுவரம்.

மடைவேலை - சமையல்வேலை, புத்தியற்றவேலை.

மட்கலம் - மண்பாண்டம்.

மட்கல் } அழுக்கேறல், ஒளி
மட்குதல் } மழுங்கல்.

மட்குகை - மண்குகை, மழுங்குதல்.

மட்சம் - குரோதம், சமூகம்.

மட்சிகை - ஈ.

மட்டக்கோல் - மட்டங்கட்டுங்கோல்.

மட்டங்கட்டுதல் - சரியாய் நிறுத்தல், நிதானம் பண்ணல்.

மட்டந்தட்டுதல் - ஒப்புரவு தட்டுதல்.

மட்டம் - அளவு, எல்லை, உத்தேசம், ஒப்புரவு, கரும்பு, நெல், மூங்கில், வாழையிவற்றின் கன்று; கேடகம், சமம், வாலயானை, வாலக்குதிரை, மூன்றுரூத்துடையதாளம்.

மட்டம்பிடித்தல் - கப்பித்தல், நிதானம் பண்ணல்.

மட்டறிதல் - அளவறிதல், குறிப்பறிதல்.

மட்டி - ஒழுங்கின்மை, கடன் மட்டி, படைக்கலம், மட்டியென்னேவல், மதிகேடன்.

மட்டித்தல் - பூசுதல், மட்டுக்கட்டுதல், மண்டலித்தல், முறித்தல்.

மட்டியம் - ஏழுவகைத்தாளத்தொன்று.

மட்டு - அவதி, அளவு, எல்லை, கள்.

மட்டுமதியம் - அளவு, நிதானம்.

மட்டை - உடற்குறை, ஓர்பாம்பு, கமுகு, தெங்கு, பனை, வாழையிவற்றின்மட்டை, முட்டாள்.

மணங்கல் - பானை, மிடா.

மணங்கு - ஆட்டுக்குட்டி, இருவாட்சி, ஓர் நிறை.

மணத்தக்காளி - ஓர் செடி.

மணத்தல் - கமழ்தல், கூடல், மோத்தல், வேட்டல்.

மணப்பு - மயப்பு, வாசனை.

மணப்பொருத்தம் - விவாகத்திற்குரிய பொருத்தம் பத்து; அவை—இராசி, இராசித்தலைவர், இரச்சு, கணம், ஸ்திரீதீர்க்கம், தினம், மாகேந்திரம், யோனி, வசியம், வேதை.

மணலி - மருக்கொழுந்து.

மணல் - வெள்ளைமண்

மணல்வாரி - ஓர் நெல், ஓர்புல். மணல் நீக்குங்கருவி.

மணவாட்டி - மனைவி.

மணவாளன் - ஆண்மகன், நாயகன்.

மணவாளி - புதுமணப்பெண், மாப்பிளை.

மணவை - அடுப்பு.

மணற்காளான் - தவளை, மணலிலே முளைக்குங்காளான்.

மணற்கூகை - தவளை.

மணற்கோவை - ஓர் கொவ்வை.

மணாட்டி - மணவாட்டி.

மணாளன் - ஆண்மகன், மணவாளன்.

மணி - அடிக்குழமணி, அழகு, ஆட்டின் களகம்பளம், இரண்டரை நாழிகைகொண்டநேரம், உருத்திராக்கம், எறிமணி, ஓசை, கண்விழி, கறுப்பு, சங்கு முதலிய வற்றாலாயமணி, தாமரைக் கொட்டை, துளசி, நவமணிப் பொது, நன்மை, நீர்க்கவசம், நெல் முதலிய தானியம், பருக்கைக்கல், பறவையின் கழுத்தாரம், பெண் குறியினுறுப்பு, பொன்முதலியவற்றாலாயமணி, மருந்துக்கல், முத்து, யானை மணி.

மணிகடம் - உத்தாமணி.

மணிகண்டன் - சிவன்.

மணிகம் - நீர்க்குடம்.

மணிகாசம்-கண்ணேயுளொன்று.

மணிகாரகன்-சாணைபிடிப்போன்

மணிகாரம் - வெண்காரம்.

மணிகூடம் - ஓர் பர்வதம்.

மணிக்கட்டு - புயத்தின்கீழ்.

மணிக்கரம்பு - தக்காளி.

மணிக்கிரீவன் - குபேரன்மக்களி லொருவன்.

மணிக்குடர் - சிறுகுடர்.

மணிக்கூடு - நாழிகைவட்டம்.

மணிக்கோவை - மணிமாலை.

மணிசகம் - சந்திரகாந்தம்.

மணிச்சோதி - ரத்னகாந்தி, வாயு தேவன் வில்.

மணிதம் - மணியோசை.

மணிதனு - வானவில்.

மணித்தீபம் - பாற்கடலின்னடுவே யுள்ளவொருதீவு.

மணித்தக்காளி - ஓர் செடி.

மணிநா - மணியினாக்கு.

மணிந்தம் - கைக்குளைச்சு.

மணிபத்திரன் - ஓர் சைனபோத கன்.

மணிபந்தம் - மணிக்கட்டு.

மணிபிடித்தல் - தானியம் பிடித் தல்.

மணிபீஜம் - மாதுளை.

மணிபுரம் - கலிங்கத்திலுள்ள வோர் பட்டணம்.

மணிபுஷ்பகம் - சகாதேவன் சங்கு.

மணிபூரகம்-ஆருதாரத்தொன்று அஃது—நாபித்தானம்.

மணிபூரம் - இரைக்குடர், கொப்பூழ்.

மணிப்பவம் - இருபது.

மணிப்புளகு-நெய்க்கொட்டான்.

மணிப்புரு - ஓர் புரு.

மணிப்புன்கு - பொன்னுங்காய்.

மணிமந்தம் - இந்துப்பு.

மணிமலை - பொன்மலை.

மணிமாலை - இலக்குமி, ஓர் பிரபந்தம், கழுத்தணிமாலை, தந்தரேகை, பிரபை, முத்துவடம்.

மணிமேகலை - பஞ்சகாவியத்தொன்று.

மணியகாரன் - விசாரணைகாரன்.

மணியம் - மணியகாரன், வேலை.

மணியாசம் - துலக்கம், மணியாசப்பலகை.

மணியாசி - ஓர் மரம்.

மணியாசிக்கட்டை - சாந்தழுத்தும் பலகை.

மணியீரல் - ஓரீரல்.

மணிராககம் - இங்குலிகம்.

மணிவடம் - அக்கமாலை, இரத்தினமாலை, பாதசாலம், முத்துமாலை, வீரக்கழல்.

மணிவீசம் - மாதுளை.

மணீசகம் - சந்திரகாந்தம்.

மணீவகம் - பூ.

மணை - தருவலகு, பணிமுதலிய முட்டு, பாதபடி, மழுங்கல்.

மணையது - மழுங்கலாயுதம்.

மண் - அணு, ஒப்பனை, கழுவுதல், சுட்டசாந்து, துகள், நிலம், பூமி, மண்ணென்னேவல், மலை, மாட்சிமை, முழவின் மார்ச்சனை.

மண்கட்டுதல் - கருக்கட்டுதல்.

மண்கட்டை - உடம்பு, வாணக் குழலினெதிரடைப்பு.

மண்கனை - ஓர் பறை, வாச்சியப் பொது.

மண்கலம் - ஓடு, மண்பாண்டம்.

மண்கல் - செங்கல், வெண்சுக் கான்கல்.

மண்குகை - நிலவறை, மண்ணாற் செய்த குகை.

மண்சிலை - கற்காவி.

மண்செய்கை - மண்வேலை.

மண்டகம் - ஓர் சிற்றுண்டி, சர்க் கரை போடாதபூரி.

மண்டகாரகம் - சாராயம் வடிப் போன்.

மண்டக்கு - முத்துக்குளிப்பவர் களை யிழுக்குங்கயிறு.

மண்டநம் - அலங்காரம், ஆபர ணம்.

மண்டபம் - மாடம்.

மண்டம் - அலங்காரம், ஆமணக்கு, தயிரேடு, தலை, மண்டை.

மண்டயந்தம் - அலங்காரம், சோறு.

மண்டலகம் - சூரியன் வட்டாகாரம், பளிங்கு.

மண்டலகிருத்தம் - ஓர்வகைக் கூத்து, அஃது—சுற்றியாடு கிருத்தம்.

மண்டலநிலை - இருகாலும்பக்கல் வளைய மண்டலித்து நிற்றல்.

மண்டலபுருடன் - சூடாமணி நிகண்டு செய்தவர், சூரியன்.

மண்டலமட்டி - சிற்றிலுப்பை.

மண்டலம் - இயந்திரம், இருகாலும் பக்கல்வளைய நிற்குநிலை, உண்டை, குவியல், சூரியமண்டல முதலியன, தேயம், நகக்குறி, நாடு, நாற்பது நாள் கொண்டது, பூமி, வட்டம்.

மண்டலவந்தாதி - ஈற்றடியிறுதியும் முதலடிமுதலுமொன்றாக வருவது.

மண்டலவிதி - சக்கரங்கீறுவதற்கானவோர்விதி.

மண்டலாகாரம் - வட்டாகாரம்.

மண்டலாதிபதி - ஏகசக்ராதிபதி.

மண்டலார்த்தம்-அர்த்தகோளம், பாதிவிட்டம்.

மண்டலி - ஓரெலி, ஓர்வகைப் பாம்பு, கூட்டம், நாய், பாம்பு, பூமி, பூனை, மண்டலியென்னேவல்.

மண்டலிகன் - இருபதுயோசனை விஸ்தாரமான தேசத்தை யாள்வோன்.

மண்டலித்தல் - வட்டமிடுதல்.

மண்டலீகரணம் - உருட்டல்.

மண்டலேசன் - அரசன், உலகாதிபதி, மண்டலாதிபதி.

மண்டல் - நெருங்கல், மண்டுதல், மிகுதல்.

மண்டி - இருகான்முடக்கி நிற்கு நிலை; கலங்கனீர், களஞ்சியம், கள் முதலியவற்றினடையல்.

மண்டிதம் - அலங்காரம், சிறுகீரை.

மண்டிலம் - குதிரை, நடனம், நாடு, போர், வட்டமாயோடல், வட்டம்.

மண்டு - மண்டல்.

மண்டுகால் - முட்டுக்கால்.

மண்டுதல் - நெருங்கல் மிகக் குடித்தல்.

மண்டூகபன்னி - அழிஞ்சில்.

மண்டூகம் - கீச்சுக்கிட்டம், தவளை.

மண்டை - இரப்போர்கலம், தலையோடு.

மண்டோதகம் - கோலமிடுதல்.

மண்டோதரி - இராவணன் மனைவி.

மண்ணம் - சுண்ணும்பு.

மண்ணரசு - பூவரசமரம்.

மண்ணரியான் - குயவன்.

மண்ணுசை - ஆசை மூன்றி னென்று.

மண்ணியற்று - மண் பாத்திரம்.

மண்ணிலம் - பூமி.

மண்ணில்வேந்தன் - அரசமரம், முடிதும்பை, வெற்றிலை.

மண்ணிறுதம் - உவர்மண்.

மண்ணீடு - திண்ணை, மாடம், மூச்சாந்திட்டவீடு.

மண்ணீட்டாளர் - குயவர், சிற்பாசியர்.

மண்ணீரல் - மண்ணிரவீறல்.

மண்ணீர் - கழுவுநீர்.

மண்ணுதல் - அலங்கரித்தல், கழுவல்.

மண்ணை - அறிவிலான், இளமை, வாலுளுவை.

மண்ணோரம் - பட்சபாதம்.

மண்பாண்டம் - மட்கலம்.

மண்பிடி - மட்பசை.

மண்மலி - மருக்கொழுந்து.

மண்மாரி - புழுதிமழை.

மண்வெட்டி-ஓராயுதம், குயவன்.

மதகந்தை - மஸ்துள்ளது.

மதகமனம் - குழுக்கடா.

மதகயம் - ஆண் யானை.

மதகு - சலதாரை.

மதகுபலகை - நீர்தாங்கு பலகை.

மதக்கம் - ஆகாசம், மயக்கம், வதக்கம்.

மதங்கசம் - யானை.

மதங்கநாதன் - நவநாதசித்தரி லொருவன்.

மதங்கம் - ஓர்பறை, ஓர் மலை, கலம்பகவுறுப்புப் பதினெட்டி னொன்று, முகில், யானை.

மதங்கர் - ஓர்முனி, பாணர்.

மதங்கி - காளி, பதினாறு வயதுப் பெண், பாடுவிச்சி, பார்வதி.

மதசலம் - மதநீர்.

மதசாநம் - அன்னப்பறவை.

மதசாரம் - இலவு.

மதனசலம் - யானை.

மதத்தல்-கொழுத்தல், செருக்கு தல், மயங்குதல், வெறித்தல்.

மதனசரம் - மன்மதபாணம்.

மதநம் - கடைதல்.

மதநலீலை - கலவி.

மதநியை - மல்லிகைக்கொடி.

மதநீர் - மதசலம்.

மதப்பு - கொழுப்பு, செருக்கு, மயக்கு.

மதப்பூ - மராட்டிமொக்கு.

மதமதப்பு - மிகுமதப்பு.

மதமதெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு, சுரணை குன்றல், மதமுறல்.

மதமத்தகம் - கஞ்சா.

மதமத்தம்பூ - ஊமத்தை.

மதமத்தன் - மதத்தினால் மயங்கிக்கிடப்பவன்.

மதம் - அறிவு, கருத்து, கன்மதம், கொழுப்பு, சந்தோஷம், சமயம், சம்மதம், செருக்கு, அஃது — உட்பகையாறினொன்று, தாது, நாவிச்சட்டம், நோக்கம், பெருமை, பைத்தியம், போதனை, மதாளிப்பு, மஸ்துள்ளது, மாயையாக்கை, பதினெண்குற்றத்துளொன்று யானைமதம், வலி, விகாரமெட்டினொன்று, விருப்பம், வெறி.

மதராகன் - சேவல், மன்மதன்.

மதரபன்னி - வட்டத்திருப்பி.

மதர் - ஆச்சல், களிப்பு, செருக்கு, மதாரென்னேவல், மிகுதி.

மதர்த்தல் - களித்தல், செழித்தல்.

மதர்ப்பு - அழகு, ஆசைப்பெருக்கம், இடம், இறுமாப்பு, செழிப்பு, மிகுதி, வலிமை.

மதலிகை - ஆபரணத்தொடக்கு, வடிவு, ஆக்கம்.

மதலை - கொடுங்கை, கொன்றை மரம், சரக்கொன்றை, தூண், மார்க்கவெறி, மதவெற்பு.

மதளை - மழலை.

மதனகேதநம் - மன்மதன் கொடி, மீன்.

மதனசமுத்திரம் - பாற்கடல்.

மதனம் - ஈ, கடைதல், காமம், தேன்மெழுகு, மஸ்து, மருக்காரை, மனக்கலக்கம், மௌனம், வசந்தகாலம்.

மதனன் - காமன்.

மதனவத்தை - பிரிவு.

மதனை - கள்.

மதனோற்சவம் - வேனில்விழா.

மதன் } அழகு, ஓரசுரன், கலக்கம், காமன், மாட்சிமை, வலி, வளமை.
மது

மதாசாரம் - சமயவொழுக்கு.

மதாணி - ஆபரணம், பதக்கம்.

மதானுசாரம் - சமயத்தைக் கைக்கொள்ளுதல்.

மதாரம் - கஸ்தூரி, பன்றி, யானை.

மதாரன் - எத்தன், தூர்த்தன்.

மதாலசை - ஓர் அப்ஸரஸ்.

மதாலம் - கொன்றை.

மதார் - மதர்.

மதாலாபி - குயில்.

மதாவளம் - யானை.

மதாளித்தல் - ஓங்கி வளர்தல்.

மதாளிப்பு - செழிப்பு.

மதி - அறிவு, இடைச்சொல், கற்கடகவிராசி, சங்கை, சந்திரன், ஞாபகம், திங்கள், நிதானம், பானபாத்திரம், புத்தி, மதியென்னேவல், மாதம், முன்னிலையசைச்சொல், விருப்பம்.

மதிகம் - மோர்.

மதிகாந்தி - பளிங்கு.

மதிகூர்மை - இந்துப்பு.

மதிகேடு - அறிவின்மை.

மதிக்கணம் - கணமெட்டினொன்று, அது—நிரைநேர் நேரடுத்து வருவது, சந்திரகணம்.

மதிக்கலை - பதினாறு.

மதிக்கல் - சந்திரகாந்தக்கல்.

மதிதம் - மோர்.

மதிதனு - பொன்மணல்.

மதிதாக்னி - கடைந்தெடுத்த நெருப்பு.

மதிதிசை - வடதிசை.

மதித்தல் - எண்ணல், கடைதல், கணித்தல், கருதல், கொழுத்தல், வரையறுத்தல்.

மதிநாள் - மிருகசீருடநாள்.

மதிபதிச்சம் - வாலுளுவை.

மதிப்பகை - இராகு, கேது.

மதிப்பிராந்தி - பிழை, மதிமயக்கம்.

மதிமகன் - புதன்.

மதிமணல் - வெள்ளிமணல்.

மதிமண்டலம்- சந்திரமண்டலம்.

மதிமயக்கம் - புத்திமயக்கம்.

மதிமறு - சந்திரகளங்கம்.

மதியம் - கணிசம், சந்திரன், நடு, மத்தியானம்.

மதியழிவு - அறிவுகேடு.

மதியாணிக்கட்டை - நுகத்தடு வாணி.

மதியிலி - மதகேடன்.

மதியீனம் - புத்தியீனம்.

மதியுணி - இராகு, கேது.

மதிரம் - மது.

மதிராக்ருஹம் - கள்விற்கும் வீடு.

மதிலுண்மேடை - கொத்தளம்.

மதிலுறுப்பு - மதிலின்சித்திரம்.

மதில் - மதின்.

மதில்காத்தல் - புறப்பொருட் டுறைகளிலொன்று, அஃது— பகைவர் மேவிடாமலுப்பரிகை யைச்சூழ்தல்.

மதில்வளைத்தல் - புறப்பொருட் டுறைகளிலொன்று, அஃது— மாற்றாருப்பரிகையைச்சூழ்தல்.

மதிவல்லோர் - மந்திரிமார்.

மதின் - சுற்றுச்சுவர், இஃது— இராசசின்னத்தொன்று.

மது - அசோகு, அதிமதுரம், அமுதம், இருப்பைப்பூத்திராவகம், உருசி, ஓரரக்கன், கள், சித்திரைமாதம், தேன், நீர், பால், மகரந்தம், மஸ்துள்ளது.

மதுகண்டம் - குயில்.

மதுகந்தம் - இலுப்பைமரம், மகிழமரம்.

மதுகம் - அதிமதுரம், இருப்பை, எட்டிமரம், தரா, தித்திப்பு, துத்தநாகம்.

மதுகரம் - ஆண்வண்டு, கள், தேனீ, பழம், வண்டு.

மதுகரன் - அன்பன்.

மதுகரி - தேனீ,

மதுகாரை - ஓர் மரம்.

மதுகுக்குடிகை - எலுமிச்சை.

மதுகை - வலி, வெற்றி.

மதுகைடபன் - ஓரசுரன்.

மதுகோஷம் - குயில், தேன்கூடு

மதுசகாயன் - காமன்.

மதுசாரதி - மன்மதன்.

மதுசூதனன் - திருமால்.

மதுதூதம் - மாமரம்.

மதுதூலி - கருப்பஞ்சாற்றுப் பாணி.

மதுத்துருமம் - இலுப்பைமரம்.

மதுபதி - யோகினி, காளி.

மதுபம் - கள், வண்டு.

மதுபாணிகை - அவுரி, ஓர் பூடு.

மதுபாயி - வண்டு.

மதுபானம் - சுராபானம்.

மதுபீசம் - மாதுளை.

மதுப்பிரியன் - பலராமன்.

மதுமதனன் - விஷ்ணு.

மதுமத்தை - ஒருமத்தை.

மதுமூலம் - ஓர் கிழங்கு.

மதுரகவி - நாற்கவியினொன்று.

மதுரம் - இனிமை, கரும்பு, சாராயம், சொற்சுவை, பனைப் பொது, முந்திரிகை.

மதுரபாடனம் - கலைஞானமறு பத்து நான்கினொன்று.

மதுரம் - அதிமரம், இனிப்பு, ஓர் கவி, சமனிசை, செஞ்சந் தணம், தித்திப்பு, தத்தநாகம், நஞ்சு, மதுரை, முந்திரிகை, மூளை.

மதுரவசனம் - நயவசனம்.

மதுராலாபை - நாகணவாய்ப்புள்.

மதுரவல்லி - வெற்றிலைக்கொடி.

மதுரித்தல் - உருசித்தல், தித் தித்தல்.

மதுரிபு - விஷ்ணு.

மதுரேசன் - கிருஷ்ணன், பாண் டியன்.

மதுரை - ஓர்தேசம், கள், மதுர வஸ்து.

மதுர்ச்சி - பொன்னிமிளை.

மதுலம் - மஸ்துள்ள பொருள்.

மதுவம் - கள், வண்டு.

மதூகம் - இருப்பை, எட்டிமரம், வண்டு.

மதூலி - அதிமதுரம், மாமரம்.

மதோன்மத்தர் - மிகுகளிப்புடையோர், மிகுவெறியர்.

மத்குணம் - மூட்டைப்பூச்சி.

மத்தகமூலம் - கழுத்து.

மத்கம்-சென்னி, நெற்றி, பொல்லாநிலம், யானைமத்தகம்.

மத்தகாசம்-கண்ணோயிலொன்று.

மத்தகாசி - மேன்மையுடையாள்.

மத்தகாசினீ - உத்தமஸ்திரீ.

மத்தகுணம் - மதகுணம், யானை.

மத்தம் - எருமைக்கடா, களிப்பு, குயில், பூமத்தை, மதம், மத்து, வெறி.

மத்தவாரணம் - அத்தவட்டத் தலையணை, நந்தனவனம், பாக்கு வெற்றிலைத்துவையல், மதயானை, மேல் வீட்டுத்தாழ்வாரம்.

மத்தளம் - ஓர் பறை.

மத்தனம் - கடித்தல், கடைதல், தேய்த்தல்.

மஸ்தன் } புலன்வேறுபட்டிருப்
மஸ்தான் } போன், பைத்தியக்காரன்.

மத்தி - நடு.

மத்திகை - குதிரைச்சம்மட்டி, கூடம், பூமாலை, விளக்குத் தண்டு.

மத்தித்தல் தேய்த்தல்.

மத்திமகண்டம் - நவகண்டத்தொன்று.

மத்திமக்கூர்மை - திலாலவணம்.

மத்திமதீபகம் - ஓரலங்காரம்.

மத்திமபட்சம் - நடுத்தரம்.

மத்திமம் - இடை, குறைவு, சமனிசை, இது — மூவிசையினொன்று, நடு.

மத்திமன் - நடுத்தரமானவன், நடுவுள்ளவன்.

மத்திமை - நடுவிரல், வாக்கு நான்கினொன்று.

மத்தியட்சம் - நடுநியாயம்.

மத்தியதேசம் - குருக்கேத்திரத்திற்குத் தெற்கும், அளகபாதத்திற்குவடக்கும், இமயத்திற்கு மேற்கும், விந்தியத்திற்குக்கிழக்குமாகவுள்ள பூமி.

மத்யஸ்தம் - நடுநிலை நியாயம்.

மத்யஸ்தன் - நடுநியாயக்காரன்.

மத்தியமம் - இடை, சத்தசுருதியினொன்று, நடுவிரல், மத்தி.

மத்தியமாவதி - ஓரிராகம்.

மத்தியமை - குமரி, நடுவிரல்.

மத்தியம் - இடை, கள், தீழ்ப்பு, நடு, மேற்கு, விபரீதசாதனை.

மத்திரிப்பு - சினம்.

மத்து-ஊமத்தை, தயிர் முதலிய கடையுமத்து.

மத்துவம் - இலகிரி, மத்துவ மதம்.

மத்தேபம் - யானை.

மத்தை - ஊமத்தை, மஸ்துள்ளது.

மந்தகதி - தாமதநடை.

மந்தகாமி - மையநடப்பவன்.

மந்தகேந்திரம் - கிரகநடையி ெனான்று.

மந்தசம் - வெண்ணெ.

மந்தசானம் - அக்கினி, சீவன், நித்திரை.

மந்ததரம் - சோம்பு.

மந்தநகடி - தயிர்கடைதறி.

மந்தப்படுதல் - அசீரணித்தல், அவிவேகப்படுதல், கூர்மையற்றுப்போதல்.

மந்தம் - அழித்தல், அற்பம், உலகவழிவு, ஓர் நோய், கடைதல், கண்ணேயிெனான்று, கூர்மையின்மை, சோம்பல்,பீழை, மத்து, மெல்லனவு.

மந்தரம் - அறிவின்மை, ஓர்மலை, கீழ்மை, கோட்டை, கோபம், சோம்பு, தடிப்பு, தடை, தயிர்கடைதறி, தேவலோகம், பருமை, பழம், பளிங்கு, பொக்கிஷம், மந்தாரம், மாலை, வெண்ணெ.

மந்தரன் - ஒற்றன், சோம்பன்.

மந்தரை - விரோசனன் புத்திரி.

மந்தபவோசை - மெல்லிய வோசை, இது—மூவிசையி னொன்று.

மந்தனம்-அழித்தல், ஆலோசனை, கடைதல், புகழ், யானைமுக படாம்.

மநதனி - தயிர்கடைதாழி.

மந்தன் - கூர்மையிலான், சனி, நமன்.

மந்தாநம் - புகழ்.

மந்தாகினி - அறுபதாண்டுள்ள வள், கங்கை.

மந்தாசியம் - வெட்கம்.

மந்தாட்சம் - வெட்கம்.

மந்தாரச்சிலை - ஓர் மருந்துக்கல்.

மந்தாரமஞ்சி - சூதபாஷாணம்.

மந்தாரமேரு - தொட்டிப்பாஷா ணம்.

மந்தாரம் - ஐந்தருவிலொன்று, செம்பரத்தை,பூங்காரம்,மப்பு.

மந்தார்த்தம் - சூரியனது மையத் திருந்துவேறொரு கிரகத்திற் குள்ள தூரவளவு.

மந்தானம் - மத்து.

மந்தி - குரங்கு, பெண் குரங்கு, பெண்முசு, மந்தியென்னே வல், வண்டு.

மந்திரகூர்மை - இந்துப்பு.

மந்திரசஞ்சீவி - இந்திரகோபம்.

மந்திரசாத்திரம் - கலைஞானமறு பத்து நான்கினுென்று.

மந்திரதாரணை - நவதாரணையி னென்று.

மந்திரஸ்நாநம் - எழ்வகை ஸ்நா னத்தொன்று.

மந்திரம் - ஆலோசனை, இரகசிய மாகப் பேசுதல், இராசமனை, உள், எண்ணம், ஓர் தேயம், ஒருபநிஷதம், கடல், கள்ளு, குதிரைக்கூட்டம், குதிரைப் பந்தி, கோயில், தாழ்த்திசை, நாப்புடைப்பெய ராதுச்சரித் தல், பொருப்பு, வீடு, வேதம்.

மந்திராலோசனை - இரகசியா லோசனை.

மந்திரி - குபேரன், சுக்கிரன், தந்திரி, தேர்ச்சித்துணைவன், புதன், மந்திரியென்னேவல், வருங்காரியஞ் சொல்வோன், வியாழன்.

மந்திரித்தல் - செபித்தல்.

மந்து - அரசன், செடி, தப்பிதம், மனிதன்.

மந்தையன் - அவிவேகி, கூர்மை யற்றவன்.

மந்தைவெளி - மேய்ச்சனிலம்.

மந்தோச்சம் - கிரகவட்டத்தின் தூரமானமுனை.

மந்தோதரி-இராவணன் மனைவி.

மப்பு - மந்தாரம், மயக்கம்.

மம - அதிட்டம், நீர்.

மமகாரம் - அகந்தை.

மமதை - அகந்தை, தனிமை, பெருமை.

மம்மர் - துன்பம், மயக்கம்.

மயக்கடி - மயக்கம்.

மயக்கமின்மை - அறத்துறுப்பி னொன்று, அஃது—தெளிவு.

மயக்கம் - இணக்கம், உன்மத்தம், இஃது — முக்குணத் தொன்று, கூடுங்கூட்டம், சோம்பு.

மயக்கவணி - ஓரலங்காரம்.

மயக்கவொழிப்பு - அபந்துதியுரு பகத்தொன்று.

மயக்கு - மயக்கம், மயக்கென் னேவல்.

மயக்குறல் - கலங்குதல்.

மயங்கல் } அறிவுகெடுதல்,
மயங்குதல் } அன்பினமிழ்தல், இணங்கல், கூடல், மதிகலங்கல், வரம்புகடந்து வருதல்.

மயங்கவைத்தல் - இதுவோ அதுவோ எனத்துணியப்படாமற் சொல்லல்.

மயங்கிசைக்கொச்சைக்கலிப்பா - தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகமென்னுமாறுறுப்பு மிக்குங்குறைந்தும் பிறழ்ந்து முறழ்ந்தும் பலவாறு மயங்கி வருவது.

மயடம் - புற்குடிசை.
மயப்பு - சாரம், செல்வமுடை மை, நிறம்.
மயம் - அழகு, ஒட்டை, ஓர் சிற்ப நூல்.
மயர்வு - மயக்கம்.
மயல் - உன்மதமத்தம், செத்தை, பயம், பிசாசம், மந்தம், மயக்கம்.
மயன் - ஓர் தேவதச்சன், கின்ன ரன், தச்சன், வினைஞன்.
மயானஞானம் - மயானவைராக் கியம்.
மயிந்துதல் - பதுங்குதல்,
மயிரோசனை - ஓர் மருந்து.
மயிர் - உரோமம்.
மயிர்க்குந்தம் - ஓர் மருந்து.
மயிர்க்குழற்சி - உரோமப்புளகி தம், மயிர்க்குழைவு.
மயிர்க்கூச்சு-உரோமப்புளகிதம்.
மயிர்க்கூச்செறிதல்- மயிர்சிலிர்த் தல்.
மயிர்மாணிக்கம் - ஓர்செடி, பசு வுடற்றிரட்சி.
மயிர்முடி - குடுமி.
மயிர்வாரி - சீப்பு.
மயிர்வினை - கத்தரிகை, சௌ ளம்பண்ணல்.
மயிலடி - மாதர்காலாழியி னொன்று.
மயிலடிக்குருந்து - ஓர் மரம்.

மயிலம் - மயிலிறகு.

மயிலெண்ணெ - ஓர் மருந்தெண்ணெய்.

மயிலை - இருவாட்சி, கருமை கொண்ட வெள்ளை, மீனவிராசி, மீன்.

மயில் - மயூரம்.

மயில்வாகனன் - குமரன்.

மயிற்குரல் - அகவல்.

மயிற்பிச்சம் - மயிலிறகுக்குடை.

மயிற்பீலி - மயிலிறகு.

மயிற்றுத்தம் - வெண்டுத்தம்.

மயிற்றோகை - மயில்வால்.

மயு - குதிரைமுகம்.

மயூகம்-அழகு, கடிகாரவூசி,நிழல், கிரணம், சுவாலை, பிரபை.

மயூரகதி - துரககதியிந்தி ஞொன்று.

மயூரகம் - துருசி, மயில்.

மயூரக்கிரீவகம் - துத்தம்.

மயூரம் - மயில்.

மயூராரி - ஓந்தி, பல்லி.

மயேசன் - சிவன்.

மரகதபத்ரி - நீர்ப்பாசி.

மரகதம் - பச்சைநிறம், பச்சைமணி, இது நவமணியொன்று.

மரகதவல்லி - உமை, தருமதேவதை.

மரகதன் - குபேரன்.

மரக்கணு - மரக்கெட்டு.

மரக்கலப்பாய் - கப்பற்பாய்.

மரக்கலம் - கப்பல், தோணி.

மரக்கலன் - மீகாமன்.

மரக்கா - நந்தனவனம்.

மரக்காரை - ஓர் மரம்.

மரக்கால் - ஆயிலியம், உப்பளம், கலத்தின் பன்னிரண்டிலொரு பங்கு, அஃது — குறுணி; கொத்து, சோதிநாள், திருமால், துர்க்கைகூத்து, முகந்தளக்குங் கருவியினென்று, வள்ளம்.

மரக்காளான் - மரத்தில் முளைக்கும் காளான்.

மரக்கொம்பு - மரத்தின்கொம்பு.

மரக்கோல் - தோணியோட்டுங் கம்பு, மோட்டம்பு.

மரச்சிலைக்கல் - கண்டகிச்சிலை.

மரச்செப்பு - மரவை.

மரச்செறிவு-சோலை,மரப்பொது.

மரணகண்டிகை - ஓர் நூல்.

மரணம் - சாவு, இஃது—மாயையாக்கை பதினெண் குற்றத்தொன்று, பஞ்சபாணவத்தையினென்று, அஃது—மயக்கமுமாய்தலும்.

மரணயோகம் - நாசயோகம்.

மரதம் - சாவு.

மரதன் - கோவிந்தன், சிவன்.

மரத்தல்-பிரமித்தல், விறைத்தல்.

மரத்தோல் - கீரை.

மரநா - விறைத்தநாக்கு.

மரநாய் - மரத்தில் வாழுநாய்.

மரந்தம் - பூந்தேன்.

மரபு - தன்மை, பழமை, முறைமை, வமிசம், வழி.

மரபுப்பெயர் - தொன்றுதொட்டு வழங்கி வருஞ்சொல்.

மரப்பட்டை - மரத்தோல்.

மரப்பத்தல் - இறைமரம்.

மரப்பொது - சோலை.

மரப்போர் - மரப்பொந்து.

மரமஞ்சள் - ஓர் மஞ்சள்.

மரமரம் - சருகுமுதலியவற்று லெழுமொலி.

மரமரிவாள் - ஈர்வாள்.

மரல் - அரலை, ஓர் கற்றாழை.

மரவட்டணை-தட்டு, நெடும்பரிசை

மரவட்டை - ஒரட்டை.

மரவணில் - ஓர் அணில்.

மரவண்டு - ஓர்வகைவண்டு.

மரவம் - குங்குமமரம்.

மரவாணி - மரக்கொடுதி.

மரவிடை . பிரயோசந்தருமரம்.

மரவினைஞர் - தச்சர்.

மரவுப்பு - ஒருப்பு.

மரவுரி - ஓர்மரம், நார்ச்சீரை.
மரவெண்ணெ - ஓர் தயிலம்.
மரவை - மரச்செப்பு.
மரவொல்லி - கதம்பையொல்லி.
மரா - அரசமரம், ஆச்சாமரம், வெண்கடம்பு.
மராடம் - ஓர் தேசம்.
மராரம் - பண்டகசாலை.
மராலம் - அன்னம், கண்ணிமை, குதிரை, தாரா, மாதளை.
மரிச்சல் - பொறுமை, மரீசம்.
மரிசி - புதுவரம்பு வழி.
மரிசிதம் - பொறுமை.
மரித்தல் - சாதல்.
மரியாதம் - ஒழுங்கு, நீதி.
மரியாதை - அமைவித்தநிச்சயம், எல்லை, ஒழுக்கம், கரை, சரிமுறை, வரம்பு.
மரியை - எல்லை, நிச்சயித்த நிபந்தனை, நீதி, பெரியோர்கள்.
மரீசம் - மிளகு.
மரீசி - ஓர் முனிவர், கிரணம், பிசுனன்.
மரீசிகா - கானல்.
மரு - ஓர்பரிமளப்புல், மருவென்னேவல், மலை, வருத்தரம், வாசனை.
மருகம் - மான்.
மருகன் - மருமகன்.

மருகி - மருமகள்.

மருகு - மகரவாழை, மருகன்.

மருக்ககம் - சிலம்பி.

மருக்கம்-காற்று, குரங்கு, சரீரம்.

மருக்காரை - ஓர் காரை.

மருக்கொழுந்து-ஓர்வாசனைப்புல்.

மருங்கு - இடம், இடை, ஒழுங்கு, பக்கம்.

மருங்குல் - இடை, பக்கம்.

மருட்டம் - கள்.

மருட்டல் - எத்துதல், மயக்குதல்.

மருட்டி - எத்துதி, கள்.

மருட்டு - எய்ப்பு. மயக்கு.

மருட்டுதல் - எத்துதல், மயக்கல்.

மருட்பா - ஐந்து பாவிலொன்று, அஃது—முதற்கண் வெண்பாவும், கடைக்கண்ணகவலுமாய் வருவது.

மருட்பார்வை - வெருண்டபார்வை.

மருண்மா - யானை.

மருதணி } நாடுசார் நிலம்.
மருதநிலம் }

மருதநிலவேந்தன் - இந்திரன்.

மருதப்பண் - ஓர் பண்.

மருதப்பறை - ஓர் பறை.

மருதமுதற்பொருள் - பழனமும் பழனஞ்சார்த்தவிடமும், வைகறையென்னுஞ் சிறுபொழுதும், ஆறுபெரும்பொழுதுகளுமாம்.

மருதம் - ஐந்து நிலத்தொன்று, அது—வயலும், வயல்சார்ந்த விடமும், ஓர்மரம், காற்று, மருதநிலைப்பண், வயல்.

மருதயாழ் - ஓர் யாழ்.

மருதாணி - ஓர்பூடு.

மருத்தன் - ஓரரசன், வாயு.

மருத்துவம் - பரிகரிப்பு,வைத்தியம்.

மருத்துவர் - அச்வினிதேவதைகள், வைத்தியர்.

மருந்தம் - தாலம்பபாஷாணம், நஞ்சு.

மருந்து - அமுதம், ஓஷதி, ஔஷதம்.

மருப்பு - இஞ்சி, மரக்கொம்பு, விலங்கின்கொம்பு.

மருமம் - மார்பு.

மருமரம் - இலைமுதலியவற்றுலெழுமொலி.

மருமான் - மகன், மருமகன், வழித்தோன்றல்.

மருவகம் - இராகு, ஓர் நாரை, புலி, மருக்கொழுந்து.

மருவலர் - பகைவர்.

மருவலர் } அணைதல், கலத்தல்,
மருவதல் } கிட்டல், சருவுதல், தழுவுதல், பொருந்துதல், வருதல்.

மருளல் } அஞ்சல், எழுத்திலா
மருளுதல் } வோசை, பேசலாவெழுமொழி, மயங்குதல், வெருளுதல்.

மருளிந்தம் - ஓர் பண்.

மருளூமத்தை - ஒருமத்தை.

மருள் - உவமையுருபு, உன்மத்தம், ஓர்கிழங்கு, கள், குறிஞ்சியாழ்த்திறம், பிசாசம், மயக்கம், மருளென்னேவல்.

மருஉ - மருவிவருமொழி, மருஉமொழி, இலக்கண மில்லாமற் சொல்லைக்குறித்துப் பெரியோரால் வழங்குஞ்சொல்.

மரூகம் - மயில்.

மரை - ஓர்மிருகம், தவளை, தாமரை.

மர்த்தலம் - மத்தளம்.

மலகரி - ஓரிராகம்.

மலைக்கடி - கலக்கம்.

மலக்கம் - கலக்கம்.

மலக்கனம் - பொன்னம்பர்.

மலங்கல் - கலங்கல், குளம்.

மலங்கு-ஓர்மீன், மலங்கென்னேவல்.

மலசம் - சிதல்.

மலடன் - பிள்ளையில்லாதவன்.

மலடு - கருவற்றது.

மலத்திரம் - மும்மலம்.

மலபரிபாகம் - பந்தபாச நீங்கிப் பக்குவமடைதல்.

மலமலத்தல் - ஓரொலிக்குறிப்பு.

மலம் - அழுக்கு, இரத்தம், கட்டம், கண் பீளை, கருப்பூரம், கறள், குறும்பி, சலம், தாது, நகம், பந்தம், பாவம், மண்டி, மூக்குச்சளி, மூளை, வேர்வை.

மலயாசலம் - பொதிகை.

மலயோத்பவம் - சந்தனம்.

மலரவன் - பிரமன்.

மலருக்குநாயகன் - கருவண்டு.

மலருதல் - மலர்தல்.

மலரோன் - பிரமன்.

மலர் - அலர், ஒருவாய்பாடு, பூ, மலரென்னேவல், மலர்ச்சியானது.

மலர்ச்சி - அலர்ச்சி, எழுச்சி, களிப்பு, பொலிவு.

மலர்தல் - எதிர்தல், தோன்றல், நிறைதல், விரிதல்.

மலர்தாங்கி - ஓர்கொடி.

மர்த்தாள் - மலர்க்காம்பு.

மலர்த்திரள் - பூங்கொத்து.

மலர்த்தேன்-பூந்தாது, பூக்தேன்.

மலர்வு - மலர்ச்சி.

மலன் - லோபி.

மலாகை - ஆதி, ஆர்த்தை, பெண்யானை.

மலாடு - மலைநாடு, தமிழ்நாடுகளி லொன்று.

மலார் . மலாறு.

மலாவகம் - பிண்ணாக்கு.

மலிதல் - நிறைதல், பெருகல்.

மலிநீ - ரஜஸ்வலை.

மலி - நிறைந்த.

மலிவு - நயம், மிகுதி.

மலினமுகம் - அக்கினி, ஆவி, கருங்குரங்கு.

மலினமுகன் - இறந்தோன், தீக் கடவுள், தீயோன், முசு, வண்டு.

மலிமை - கருமை, குற்றம், மாசு, மோர்.

மலீமசம் - அழுக்கு, இரும்பு.

மலை - உவமை, பருப்பதம், மலை யென்னேவல்.

மலைகளிறு - போர்க்களிறு.

மலைக்கரு - சாத்திரவேதி.

மலைக்கற்றாழை - ஓர் கற்றாழை.

மலைக்கால் - ஆட்டுக்கல்.

மலைக்குகை - மலைமுழைஞ்சு.

மலைக்குருவி - சாத்திரவேதி.

மலைக்கொடுமுடி - மலையுச்சி.

மலைசாரி - கிளிஞ்சல்.

மலைச்சக்கரம் - சாலக்கிராமம்.

மலைச்சக்கரவள்ளி - ஓர் வள்ளிக் கொடி.

மலைச்சாரல் - மலையருகு.

மலைதல்-அணிதல் உவமையாதல், எதிர்த்தல், ஒருவழிபடாது நிற்றல், பொருதல், மறுத்தல்.

மலைதாங்கி - ஓர்கொடி.

மலைத்தல்-தடுமாறல், பொருதல்.

மலைத்தொடக்கு - கல்மதம்.

மலைத்தும்பை - ஓர் தும்பை.

மலைத்துவரை - ஓர் துவரை.

மலைநாடன் - சேரன்.

மலைநாடு - சேரநாடு.

மலைநாதம் - கல்மதம், சாத்திர வேதி, வக்கிராந்த பாஷாணம்.

மலைபடுதிரவியம் - மலையிலுண்டாகுந் திரவியம், அது— மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம்.

மலைப்பச்சை - ஓர் பூடு.

மலைப்பாழி - மலைக்குகை.

மலைப்பாறை - மலைத்திட்டை, மலைப்பக்கம்.

மலைப்பு - கூத்தின் விகற்பம், திகைப்பு, போர், மலைவு.

மலைமகள் - உமை.

மலைமுழை } மலைக்குகை.
மலைமுழைஞ்சு }

மலையக்கால் - தென்றல்.

மலையசம் - சந்தனம், தென்றல், மலையாடு.

மலையடிப்பாடி - குறிஞ்சி நிலக் கிராமம்.

மலையமான் - சேரன்.

மலையம் - இந்திரன்கா, குறிஞ்சி யாழ்த்திறம், தோட்டம், பொதியமலை, மலை, மலையினுச்சி.

மலையரண்-மலையிலுலாயகாவல், இது—நான்கரணிலொன்று.

மலையருவி-மலையிலிருந்துவீழ்நீர்.

மலையன் - ஓர்சாமை, கடையெழு வள்ளலிலொருவன், குறிஞ்சி நிலத்தலைவன், சேரன்.

மலையாடு - ஓர்வகை ஆடு.

மலையாரம் - சந்தனம்.

மலையாளம் - ஓர்தேசம்.

மலையானிலம் - தென்றல்.

மலையிரும்பு - உலோகமணல்.

மலையினுச்சி - மலைமுடி, மாமிச பேதி.

மலையின்முனிவன் - மிளகு.

மலையுருக்கன் - ஓர் வெற்றிலைக் கொடி.

மலைவாசிக்கொம்பு - பன்றிக் கொம்பு.

மலைவாணர்-வேடர், மலைவாழ்நர்.

மலைவீரியம் - அன்னபேதி.

மலைவு - உவமை, போர், மயக்கம், மாறுபாடு.

மலைவேம்பு - ஓர்வேம்பு.

மல்-கூத்தினோர்விகற்பம், கூத்து, திருமால், பெருகல், வலி, வளமை.

மலரல் - நிறைதல், பெருகல்.

மல்குதல் - நிறைதல்.

மல்லகசாலை - மற்களரி.

மல்லகதி - நாககதியைந்தி னொன்று.

மல்லகை - மல்லிகை.

மல்லகச்செட்டி - மற்பிடிக்குஞ் சாதி.

மல்லசம் - மிளகு.

மல்லதூர்யம் - ஓர் வாத்தியம்.

மல்லநாகம் - இந்திரன்யானை.

மல்லம் - ஓர் பாத்திரம், கதுப்பு, தட்டம், மற்பிடி, யாகமிச்சில்.

மல்லயுத்தம் - மற்பிடி, அது — கலைஞான மறுபத்து நான்கி னொன்று.

மல்லரி - பம்பைமேளம்.

மல்வர் - மற்போர் செய்வோர், வலியோர்.

மல்லல் - செழிப்பு, மிகுதி, வலி, வளமை.

மல்லண் - திண்ணியன், மல்வல் லன், வலியோன்.

மல்லாக்குப்பறிதல் - உட்புறம் மேலாதல்.

மல்லாய் - ஓர் பாத்திரம்.

மல்லாரி - ஓரிராகம், பம்பை மேளம்.

மல்லாருதல் - மல்லார்தல்.

மல்லி - மல்லிகை, மிகப்பருத்து ரத்தவன்.

மல்லிகம் - பிரப்பஞ்செடி.

மல்லிகாட்சம்-வெண்கட்குதிரை.

மல்லிகாமோதினி - குண்டுமல்லிகை.

மல்லிகை - ஓர்பாத்திரம், ஓர்பூச் செடி, விளக்குத்தண்டு.

மல்லிபத்திரம் - ஓர் காளான்.

மல்லு - ஓர்கூத்து, ஓர்போர்.

மல்லுக்கட்டுதல் - போராட்டமாடுதல், மல்லுப்பிடித்தல்.

மல்லுப்பிடித்தல் - மற்பிடித்தல்.

மல்லூகம் - புழு.

மல்லை - இரப்போர் கலம், மௌனம், வட்டம்.

மவுடி - முடி.

மவுலி - மௌலி.

மவுனம் - மோனம்.

மழம் - இளமை.

மழலை - நிரம்பாமென்சொல்.

மழவன் - கட்டிளமையோன்.

மழவு - இளமை, குழந்தை.

மழு - எரியிரும்பு, பரசாயுதம்.

மழுக்கம் - கூரின்மை, தோற்றமின்மை, மங்கல்.

மழுக்குதல் - அடித்தல், அரிசி மினுக்குதல், கூர்மை மழுங்கச் செய்தல், தோற்றம்கொள்ளா மற்பண்ணல்.

மழுங்கல் - ஒளிமழுங்கல், ஓர் வகைப்பொன், கூர்கெடுதல், பேர்குறைதல், பொலிவழிதல்.

மழுவன் - அஞ்சாதவன், நகர் காப்போன், பிடித்ததை விடாதவன்.

மழுவெடுத்தல் - பொய்யை நிலையாக்கல்.

மழை - குளிர்ச்சி, நீர், மாரி, மேகம்.

மழைக்கண்ணி - ஓர் பட்சி.

மழைக்காற்று - குளிர்காற்று.

மழைப்புகார் - மழைமுகில்.

மழைவண்ணக்குறிஞ்சி-ஓர்செடி.

மழைவண்ணன் - திருமால்.

மளமளத்தல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.

மளிகாரம் - வெண்காரம்.

மளிகை - பண்டகசாலை, பல பொருட்கடைவீடு.

மளுக்கெனல் - ஒலிக்குறிப்பு.

மள்ளம் - வலி.

மள்ளர்-உழவர், குறவர், குறிஞ்சி நிலமாக்கள், திண்ணியர், படைவீடு, மறவர்.

மள்ளு - கைமரம்.

மறதி - மறப்பு, அது—தாமத குணத்தொன்று.

மறத்தல் - பொச்சாப்பு.

மறத்தியர்- பாலைநிலப்பெண்கள்.

மறநிலைப்பொருள் - மறத்தாற் கவர்பொருள், பகைவர்பொருள், திறைப்பொருள், சூதில் வெல்பொருள் முதலியன.

மறநிலையறம் - புறப்பொருட்டுறையினொன்று, அஃது—நிரை மீட்டுப்பகைவென்று செஞ்சோற்றுக்கடன் கழியாதாரைத்தண்டித்துக் குறைவுறச் செய்தல்.

மறநிலையின்பம் - அகப்பொருட்டுறையினொன்று, அஃது—இலக்கமெய்தல், ஏறுதழுவன் முதலிய மறத்தகையாற்கன்னியை மணமுடித்தின்புறுதல்.

மறப்பிலி - கடவுள்.

மறப்பு - மறதி.

மறப்புலி - சிங்கம்.

மறமலி - யானை.

மறமறத்தல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.

மறம் - ஓர்பிரபந்தம்,அது—கலம்பகத்திறுேருறுப்புமாம், கொலை, கோபம், சினம், நமன், பாவம், பிணக்கு, வலி, வறுமை, வீரம்.

மறம்வைத்தல்-வன்மம் வைத்தல்.

மறலி - நமன், மயக்கம்.

மறல் - எழுச்சி, ஓர் கூத்து, காலன், குற்றம், சாதல், தரித்திரம், நமன், பகை, பிணக்கு, போர், மயக்கம், மறதி.

மறவர் - படைவீரர், பாலைநில மாக்கள், வேடர்.

மறவி-சனம், கள், மறதி, மறந்து செய்யுங்குற்றம்.

மருடர் }
மருராட்டியர் } மகாராஷ்டிரர்.

மறி - அழுங்கு, ஆடு, குதிரை, மான் இவற்றின்குட்டி, ஆடு, குதிரை, மானிவற்றின்பெண், மறியென்னேவல், மான்,மேடவிராசி.

மறிக்கல் - சுக்கான்கல்.

மறிதரல் - மீளல்.

மறித்தல் - காவற்படுத்தல், தடுத்தல், திருப்புதல்,மடக்கல்.

மறிப்பு - தடுப்பு, திருப்பு.

மறியல் - சிறை, தடை.

மறு - குற்றம், மறுவென்னேவல் மற்றை, மாசு.

மறுகல் - மறுகுதல்.

மறுகலித்தல் - மறுதலித்தல்.

மறுகு - தெரு, மறுகென்னேவல்.

மறுகுதல் - சுழலல், புரளுதல், மயங்கல், மனங்குழம்புதல்.

மறுக்கம் - இக்கட்டு, மனக்குழப்பம்.

மறுதலை - எதிரி.

மறுத்தல் - இல்லையெனல், கொடாமை, தவறு, நீக்கல், மறையுழவுதல், வெட்கம்.

மறுப்படுதல் - ஊறடைதல், வசைப்படல்.

மறுப்பு - மறுக்குதல்.

மறுமாடி - மஞ்சுக்கட்டை, மலைப்பிளவு.

மறுமை - மரணத்தின் பின்வருநிலைபரம், வருபிறப்பு.

மறுமைப்பயன் - மரணத்தின் பின்னடைவது.

மறுமொழி - உத்தரம்.

மறுவல், மறுவி - கஸ்தூரிமிருகம்.

மறுவுத்திரம் - பிரதியுத்திரம்.

மறை - அடக்கம், இரகசியம், இரண்டாமுழவு, எதிர்மறுப்பு, ஒலிப்பிடம், கேடகம், சொல், புள்ளி, மந்திரம், மறையென்னேவல், மறைவு, வேதம்.

மறைக்காடு - வேதாரணியம்.

மறைக்கொடியோன் - துரோணாசாரியன், பிரமன்.

மறைதல் - ஒலித்தல், தோன்றாமல் போதல்.

மறைத்தலைவி-இலக்குமி, உமை, சரச்சுவதி.

மறைபாடு - மறைவு.

மறைபுகல் - அடைக்கலம்புகுதல்,
மறைபொருள் - உட்பொருள்.
மறைப்பு - மறைத்தல், மறைவு.
மறைப்பொருள் - வேதார்த்தம்.
மறைமுடி - உபநிஷதம், வேதத்துச்சி.
மறைமுடிவு-கடவுள், வேதாந்தம்.
மறையோன் - அந்தணன், பிரமன், வியாழன்.
மறைவு - ஒதுக்கு, தோன்றுமை.
மற்கடப்பிடி - குரங்குப்பிடி.
மற்கடம் - குரங்கு.
மற்கரை - குசை, மலடி.
மற்கொல் - பகை.
மற்போர் - மல்யுத்தம்.
மற்ற - அடுத்த, பிற, மற்றவை, வேறு.
மற்றவர் - ஏனையோர், பிறர், மறுபெயர்.
மற்று - அசைநிலை, பிறிதின்பொருள், வினைமாற்றுப்பொருள், என்பவற்றைத்தருமிடைச்சொல்.
மற்றை } சுட்டியதற்கினம்.
மற்றைய }
மற்றையது - மற்றது.
மற்றொன்றுவிரித்தல் - சொல்லத்தொடங்கியது சிறுக மற்றொன்றை இடையிலே விரித்துச்சொல்லுதல்.

மற்றோ - அதிசயவிரக்கச்சொல்.

மனக்கசப்பு - மனவெறுப்பு.

மனக்கசிவு - மனவுருக்கம்.

மனக்கறை - மனக்களங்கம்.

மனக்கிடக்கை - மனவெண்ணம்.

மனக்கிலேசம் - மனத்துயர், மனப்பீடை.

மனக்குவிவு - மனவொருமிப்பு.

மனக்குழப்பம் - ஒருமிப்பின்மை.

மனக்குள்ளம்-தந்திரம்,வஞ்சகம்.

மனக்குறிப்பு-கருத்து, நோக்கம்.

மனக்குறை - பிரியவீனம்.

மனக்கூச்சம் - வெட்கம்.

மனக்கொடுமை - மனப்பொல்லாங்கு.

மனக்கொதி - எரிச்சல், கோபம்.

மனக்கோட்டம்- மனங்கோணல்

மனங்கசிதல் - இரங்கல், மனமுருகல்.

மனங்கரைதல் - துக்கித்தல்,மனமிளகுதல்.

மனங்கு - இருபத்தைந்து திருத்தல்கொண்டது, கைப்படை.

மனங்குவிதல் - மனங்கூம்புதல்.

மனங்கூம்புதல் - மனமடங்கல்.

மனசு - மனது.

மனச்சஞ்சலம்
மனச்சடைவு } துக்கம்.

மனச்சாட்சி - பகுத்தறியுமறிவு.

மனச்சார்வு - மனப்பற்று.
மனச்சான்று - மனச்சாட்சி.
மனச்சுத்தம் - இருதயத்தூய்மை.
மனச்சோர்வு - மனவயர்ச்சி.
மனதார - மனப்பூர்வமாக.
மனது - மனம்.
மனத்தழிவு - மனவொடுக்கம்.
மனத்தழுக்கம் - அழுக்காறு.
மனத்தளர்ச்சி - மனமெலிவு.
மனத்தூய்மை - மனச்சுத்தம்.
மனத்தேற்றம் - மனத்திடன்.
மனநசிவு - மனக்குறை.
மனநிலை } மனந்தளம்பாமை.
மனநிறை }
மனநிறைவு - மனப்பூரணம்.
மனநெரிடு - வஞ்சகம்.
மனநெரிவு - மனக்குறை.
மனநேர்மை-மனதறிந்தவுண்மை.
மனந்தளம்புதல் - மனமசைதல்.
மனந்தளர்தல் - தைரியங்கெடல்.
மனந்தீதல் - ஏங்குதல், மனம் புழுங்குதல்.
மனந்தெளிதல் - மனந்தேறுதல்.
மனப்படுத்தல்- சம்மதப்படுத்தல்.
மனப்பற்று - சிநேகம்.
மனப்பிணக்கு - மனமாறுபாடு.
மனப்பிணி மஞேவியாதி.
மனப்பிரமை - மனமயக்கம்.

மனப்பொருத்தம் - மனவொன்றிப்பு.

மனப்பொலிவு - மனத்தாராளம்.

மனமடிவு - மனத்துயரம்.

மனமலர்ச்சி - சந்தோஷம்.

மனமலிநம் - மனவழுக்கு.

மனமிடுக்கு - மனவலி.

மனம்-இந்துப்பு, சிந்தை, —இஃது உட்கரண நான்கினொன்று, முப்பொறியினுமொன்று.

மனவலி - ஊக்கம்.

மனவிகாரம் - மனத்திரிபு.

மனவிழி - இசைப்பாட்டு.

மனவிறப்பு - மனவொடுக்கம்.

மனவு - அக்கு, சங்கு, புடவை, மணிப்பொது.

மனவுறுதி - மனவுச்சாகம்.

மனவெழுச்சி - மனவூக்கம்.

மனனம் - சிந்தித்தல்.

மனைவை - பெண்யானை.

மனையி - மனுமனைவி.

மனைவு - அரைப்பட்டிகை.

மனிதர் - மானிடர்.

மனு - தருமநூல் பதினெட்டினொன்று, நிதி, மந்திரம், மனுச்சக்கரவர்த்திகள்.

மனுசேந்திரன் - அரசன்.

மனுநீதி - மனுமுறை.

மனுவர் - கொல்லர், மானுடர்.

மனை - பதினாறரையேயரைக் காற் குழி கொண்டநிலம், மனைவி, வீடு.

மனைக்கிழத்தி - மனையாட்டி.

மனைத்தாயம் - இல்லொழுக்கத் தின்றிறமை, வீட்டுரிமை.

மனைமாட்சி - இல்லறத்திற்குரிய நற்குண நற்செய்கைகள்.

மனையாட்டி - மனைவி.

மனைவாழ்க்கை - இல்லறம்.

மனைவி - நாயகி.

மனோகரம் - அழகு, இச்சை, சந்தோஷம்.

மனோசங்கற்பம் - மனக்கருத்து.

மனோசன் - மன்மதன்.

மனோசிலை - ஓர் மருந்து, விளைவுப்பாஷாண முப்பத்திரண்டினொன்று.

மனோதைரியம் - மனத்திடன், மனமுயற்சி.

மனோபலம் - தைரியம்.

மனோபவம் - மனதிலேபிறந்தது.

மனோபவன் - மன்மதன்.

மனோபாவம் - மனநிலை, மனவெண்ணம்.

மனோபீஷ்டம் - மனப்பிரியம்.

மனோரஞ்சிதம் - ஓர் புஷ்பம், மனப்பிரியம்.

மனோரதம் - இச்சை, இன்பம், விருப்பம்.

மனோலம் - பரிகாசம்.

மனோலயம் - மனவொடுக்கம்.

மனோலி - மகிழுக்காரன், பரிகாசம்.

மனோவிகாரம் - மனச்சஞ்சலம், மனதின்றிரிபு.

மனோவியாபாரம் - மனதின் தொழில்.

மனோவிருத்தி - மனதின்வியாபாரம்.

மனோவேகம்-எரிச்சல், மனக்கதி.

மனோற்சாசம் - மனமுயற்சி.

மனோற்பவன் - மன்மதன்.

மனோன்மணி - அப்பிரகம், ஓர் சக்தி.

மனோன்மணித்தாய் - இந்துப்பு.

மன் - அசைச்சொல், அரசன், ஆக்கம், இறந்தகால விடைநிலை, ஒழியிசை, கழிவு, நிலைபேறு, பெருமை, பெரும்பான்மை, மிகுதி.

மன்மகன் - அரசனுடைய குமாரன்.

மன்மதை - மக்கட்பரம்பு.

மன்மத - ஓர் வருஷம்.

மன்மதம் - காமம், விழா.

மன்மதன் - காமன்.

மன்மதாலயம் - மாமரம்.

மன்விருத்தம் - ஆசிரியவிருத்தம்.

மன்ற - அசைச்சொல்.

மன்றகம் - சபை.

மன்றம் - சபை, நிச்சயம், நெடுந்தெரு, பலர்கூடும்வெளி, வாசனை, வெளி.

மன்றல் - கலியாணம், நெடுந்தெரு, வாசனை.

மன்றாடுதல் - இரந்து கேட்டல்.

மன்றாட்டம் . வேண்டுதல்.

மன்று - கனகசபை, சபை, நீதிமன்றம், வெளி.

மன்றுபடுதல் - வெளிப்படல்.

மன்றுளாடி - சிவன்.

மன்னர் - அரசர்.

மன்னர்பின்னோர் - வைசியர்.

மன்னர்மன்னவன் - இராசாதிராசன், துரியோதனன்.

மன்னல் - மன்னுதல்.

மன்னன் - அரசன், உத்திரட்டாதிநாள், எப்பொருட்குமிறைவன்.

மன்னூர் - ஓரூர், பகைவர்.

மன்னித்தல் - பொறுத்தல்.

மன்னிப்பு - பொறுதி.

மன்னிப்பு-இடைஞ்சல், கோபம், துக்கம், பலி, பெருமை.

மன்னியை - பிடர்நரம்பு, விசைநரம்பு

மன்னிறைதருதல்- வேளாண்மை மாந்தரியல்பினொன்று.

மன்னுடைமன்றம் - இராசசபை.

மன்னுதல் - சேர்தல், நிலைபெறு தல்,

மன்னுமான் - கடவுள்.

மன்னுலகு - தேவலோகம்.

மன்னெச்சி - மனவிதனம்.

மன்னை - ததுப்பு.

மன்னோ - அசைச்சொல்.

மா

மா - அசைச்சொல், அழகு, அழைத்தல், அளவு, அறிவு, ஆணி, இடித்தமா, இடை, இலக்குமி, எதிர்மறையுபசருக்கம், ஐயவுபசருக்கம், ஓரசைச்சொல், ஓரெண், அஃது— இருபதிலொன்று; ஓரெழுத்து ஓர் மரம், கட்டு, கறுப்பு, பன்றி, யானையிவற்றிலொன்று, சரசுவதி, சீலை, செல்வம், தாய், துகள், நிறம், பரி, பிரபை, பெருமை,மகத்துவம், மரணம், மிகுதி, மென்மை, வண்டு, வயல், வலி, வியங்கோளொடுவருமசைச்சொல்,விலங்கின்பொது, வெறுப்பு.

மாகக்கல் - கானக்கல்.

மாகட்டகம் - செந்நாயுருவி.

மாகதர் - துதிபாடுபவர், பாணர், மகததேயத்தார்.

மாகதி - சீனி, திப்பிலி, பிராகிருதபாஷையிலோர் பிரிவு, முல்லைக்கொடி.

மாகந்தம் - மாமரம்.

மாகந்தி - நெல்லிமரம்.

மாகம் - ஆகாயம், மகநாள், மாசி மாதம்.

மாகயம் - கௌரிபாஷாணம்.

மாகரி - ஆண்யானை.

மாகாணம் - நாடு.

மாகாணி - ஒரெண், அஃது—பதினாறிலொருபங்கு.

மாகாளன் - அயன்படைத்தலைவன்.

மாகாளி - சத்தமாதிருகைகளிலொருவள்.

மாகினம் - இராச்சியம்.

மாகுலவர் - வேடர்.

மாகேசுவரி -சத்தமாதிருகைகளிலொருவள், பார்வதீ.

மாகேந்திரம் - நித்தியயோகத்தொன்று, மணப்பொருத்தம் பத்திலொன்று.

மாகேயம் - பவளம்.

மாகை - பசு.

மாக்கருவி - குதிரைக்கல்லணை.

மாக்கள் - பிள்ளைகள், மனிதர்.

மாங்கல்லியசூத்திரம் - தாலிக்கொடி.

மாசம் - மாதம்.

மாசரம் - கஞ்சிமேலேடு.

மாசலம் - நோய், முதலை.

மாசலன் - கள்வன்.
மாசறல்-குற்றந்தீர்தல், நன்மை.
மாசனம் - பெரியோர்.
மாசாத்தன் - கண்ணகை தந்தை.
மாசாந்தம் - அமாவாசியை.
மாசாலம் - ஓர் மாயவித்தை.
மாசி - இறந்தோர்க்கு மாதந்தோறும் செய்யுமோர் சடங்கு, ஓர் மருந்து, மர்மாதம், புது வரம்பு, மக நாள்.
மாசிகை - பறவை.
மாசிங்கம் - கலங்கொம்பு.
மாசிபத்திரி - ஓர்பூடு.
மாசிரம் - சீக்கிரம்.
மாசு - அழுக்கு, அற்பம், கருமை குற்றம், மழை, மறு, மேகம்.
மாசுணம் - பாம்பு.
மாசேனன் - அருகன், கடவுள், குமரன், திருமால்.
மாசேனை - மிகுதி.
மாசை - பொன்.
மாச்சிலை - மாக்கல்லு.
மாஞ்சி - ஓர் வாசனைப்பண்டம்.
மாஞ்சில் - ஓர் மருந்து.
மாடகம் - வீணை முறுக்காணி.
மாடக்குழி - விளக்குவைக்குஞ் சுவரறை.
மாடப்புறு - ஓர்புறு.
மாடம் - உமுந்து, மண்டபம், மாளிகை.

மாடல் - செய்தல்.

மாடி - அரண்மனே, இக்கட்டு, இரணைப்பல், கோபம், தரித்திரம், குளிர், புடவையோரம்.

மாடியம் - பாதை.

மாடு - அகன்மணி, இடம், இரத்தினம், சீதனம், செல்வம், பக்கம், பசுப்பொது, பொன்.

மாடை - அரைவராகனிடைப்பொன், விரிந்து முன் வளைந்திருத்தல்.

மாட்சி
மாட்சிமை } அழகு, பெருமை.

மாட்டல் - மாட்டுதல்.

மாட்டறைதல் - உறுதியின்கீழ்ப்புறத்தெழுதல்.

மாட்டாங்கோல் - மாடோட்டுங்கோல்.

மாட்டார் - எலாதார்.

மாட்டிக்கிடை - பசுத்தொழுவம்.

மாட்டுக்கொட்டில் - பசுக்கொட்டில்.

மாட்டுதல் - இயலுதல், கடாவுதல், கட்டுதல், சம்மதித்தல், செருக்குதல், பூணுதல், மாள்வித்தல்.

மாட்டெடுத்தெழுதல்-ஓர்யுத்தி, அஃது — ஒன்றற்குச்சொல்வப்பட்டவிலக்கணத்தை யதனைப்பெறுதற்குரியமற்றொன்றற்கு மாட்டிச்சொல்லி நடத்தல்.

மாட்டேற்று - புறத்துச்செலுத்துகை.

மாணம் - மாட்சிமை.

மாணல் - நன்மை, மாட்சிமை.

மாணவகம் - கல்வி.

மாணவகன் - அறிவீனன், பிரமசாரி, பிள்ளை, மாணுக்கன்.

மாணவம் - பதினாறு கோர்வையுள்ள முத்தாரம்.

மாணவன் - பிள்ளை, மனிதன்.

மாணுக்கன் - கற்போன்.

மாணுமை - மாட்சிமைப்படாமை

மாணுர் - பகைவர்.

மாணி - ஆண்குறி, பிரமசாரி.

மாணிகை - எட்டுப்பலங்கொண்ட நிறை.

மாணிக்கம் - சிவப்புக்கல், செம்மணி, அஃது—நவமணியி னென்று.

மாணிக்கவாசகன் - திருவாதவூரன்.

மாணிபந்தம் - உப்பு.

மாண் - மாட்சிமை, மாணென்னேவல்.

மாண்டல் - மாட்சிமைப்படுதல்.

மாண்டார் - இறந்தோர், பெரியோர்.

மாண்டூக்கியம் - ஒருபநிடதம்.

மாண்பு - அழகு, பெருமை, மாட்சிமை.

மாதங்கம் - அரசு, உத்தியாபரணம், யானை.

மாதங்கர் - சண்டாளர்.

மாதங்கி - காளி, துர்க்கை.

மாதண்டம் - பெரும்பாதை.

மாதநம் - லவங்கம்.

மாதப்பிறப்பு - சூரியனோரிராசியினின்று மற்றோரிராசிக்குச் செல்லுஞ் சமயம்.

மாதம் - கடைதல், கொல்லல், சந்தோஷம், பாதை, பெருமை, மாசம்.

மாதிரி - காளி.

மாதர் - அழகு ஆசை, இசைச்சொல், மகளிர், தலைவியர்.

மாதர்குணச்சலம் - கெந்தகம்.

மாதலி - இந்திரன்சாரதி.

மாதுதவம் - இனிமை, கள், தவம் வசந்தகாலம், வைகாசிமாதம்.

மாதவர் - முனிவர்.

மாதவன் - திருமால், வசந்தன்.

மாதவி - அருச்சுனன்மனைவி, ஓர் கொடி, கண்ணன் மனைவி, கள்ளிளையட்டவெல்லம், குருக்கத்தி, கோவலன் கூத்தி, சீனி, துளசி, துர்க்கை, தூதிகை, நாடகக்கணிகை, வசந்தகால மல்லிகை.

மாதவிகொழுநன் - அருச்சுனன்.

மாதளை - ஓர்மரம்.

மாதளைச்சிலை - மாந்தளிர்க்கல்.

மாதனம் - கராம்பு.

மாதா - தாய், பார்வதி.

மாதாந்தம் - மாதவறுதி.

மாதி - வட்டமாயோடல்.

மாதிகம் - குதிரைமார்க்கம்.

மாதிசை - மகாதிசை.

மாதிபொதி - நெருஞ்சில்.

மாதிரம் - ஆகாயம், திசை, பூமி, மண்டலம், மலை, யானை.

மாதிரி - ஒப்பு, சாயல், விதம்.

மாதிரு - ஆகாயம், இரேவதி, இலக்குமி, பசு, பூமி, மாதா.

மாதிருகை - அரிவரி, கைத்தாய், தேவி, மாதா.

மாது - அசைச்சொல், பெண், விருப்பம்.

மாதுபாகம் - புஷ்பராகம்.

மாதுரம் - மல்லிகை.

மாதுரி - சாராயம்.

மாதுரியம் - மிகுமதுரம்.

மாதுரு - தாய்.

மாதுலுங்கம் - மாதுளை.

மாதுலன் - மாமன்.

மாதேவன் - சிவன்.

மாதொருபாகன் - சிவன்.

மாதோ - அசைச்சொல்.

மாத்தகை - மிகுதகை.

மாத்திரம் - அளவு, தனிமை.

மாத்திரை - அளவு, அற்பம், காதணி, காலநுட்பம், கால விரைவு, குளிகை, குற்றுயி ரெழுத்து, பாக்கியம், மட்டு, மிதம், வரை.

மாத்திரைக்கோல் - அளவைக் கோல்.

மாத்வீகம் - இலப்பைப்பூச்சாரா யம்.

மாநவன் - பாலகன், மனிதன்.

மாந்தப்புல் - ஓர்புல்.

மாந்தர் - ஆண்மக்கள், மனிதர்.

மாந்தல் - அவிந்தடங்கல், உள் ளழிதல், குடித்தல், புசித்தல்.

மாந்தளிர்ச்சிலை - கற்காவி.

மாந்தளிர்ப்பச்சை - கொக்குக்கல்.

மாந்தாதுரு - ஓரரசன்.

மாந்தி - மாமரம்.

மாந்தியம் - மந்தமானது.

மாபலன் - காற்று.

மாபலி - மாவலி.

மாபனம் - அளவு, தராசு.

மாபுலி - சிங்கம்.

மாபூதி - சத்தநரகிலொன்று.

மாப்பு - மிகுதி, மீன்றிரள்.

மாமகன் - அம்மான், பிசுனன், மன்மதன்.

மாமணி - மாணிக்கம்.

மாமாத்திரா - வைத்தியர்.

மாமாயை - மகாமாயை.

மாமிசச்சிலை - கார்நிறக்கல்.

மாமிசபேதி - ஓர்பூடு.

மாமுனி - அருகன், நாயுருவி, வசிட்டன்.

மாமூலனார் - ஓர் சங்கப்புலவர்.

மாமேரு - மகாமேரு.

மாமை - அழகு, நிறம்.

மாயம்-அழகு, கறுப்பு, தந்திரம், தீமை, பொய், மாயை, வஞ்சகம்.

மாயயாக்கை - மாயாதேகம்.

மாயரூபம் - மெய்போலத் தோற்றும்பொய்யுருவம்.

மாயவள் - இடாகினி, காளியேவல் செய்பவள், தெய்வப் பெண்.

மாயவன் - திருமால்.

மாயவன்மேனி - நாகப்பச்சை.

மாயவித்தை - தந்திரத்தொழில்.

மாயன் - கரியவன், திருமால்.

மாயாகாரியம் - மாயையிற்றோன்றுவது.

மாயாசக்தி-பஞ்சசக்தியிலொன்று.

மாயாசுதன் - புத்தன்.

மாயாதம் - முதலை.

மாயாதாரகம் - மாயையை முதற் காரணமாகவுடையது.

மாயாதாரணை - நவதாரணையி ஒன்று.

மாயாதேவி - புத்தன்றாய்.

மாயாதேவிசுதன் - புத்தன்.

மாயாபஞ்சகம் - மாயையைந்து; அவை—தமம், மாயை, மோகம், அவித்தை, அநிருதம்.

மாயாபாசம் - பந்தமாயை.

மாயாபுரி - சத்தபுரியிலொன்று, பித்தளை, மாயாசரீரம்.

மாயாமலம் - மும்மலத்தொன்று.

மாயாவாதம் - ஓர் சமயம்.

மாயாவி - மாயை செய்வோன்.

மாயாவினோதம் - மாயை விளையாட்டு.

மாயு - பித்தம்.

மாயூரம் - ஓரூர், மயில்.

மாயை - அறிவு, இந்திரசால முதலியன, இரக்கம், இரதிதேவி, இலக்குமி, காளி, சத்தபுரியிலொன்று, பொய், மாயம், மாயாசக்தி, வஞ்சகம், வித்தியாதத்துவ மேழிலொன்று, அது—மறைப்பு.

மாயோபாதானம் - மாயையையுபாதானமாகவுடையது.

மாயோனாள் . திருவோணம்.

மாயோன் - திருமால்.

மாயோன்மருகன் - குமரன்.

மாய் - ஆச்சா.

மாய்ச்சல் - சாவருத்தம்.

மாய்ச்சி - பாம்புகொல்லி.

மாய்தல் - கெடுதல், சாதல், மடிதல், மலைதல்.

மாய்த்தல் - கெடுத்தல், கொல்லல், மடித்தல், மறைத்தல், வருத்தல்.

மாய்மாலம்-எத்து, பே, மாசாலம்.

மாய்வு - சாவு, மறைவு.

மாரகம் - மரணம், மரணகாரணம், மாரி.

மாரகாகனம் - குயில்.

மாரசயன் - புத்தன்.

மாரணம் - கொலை, மந்திரத்தாற் கொல்லல்.

மாரணவித்தை - சூனியவித்தை.

மாரதம் - நால்வகைரதத்தி லொன்று.

மாரதன் - மகாரதன்.

மாரம் - கோட்டகசாலை.

மாரன் - மன்மதன்.

மாராயம் - உவகை, வாழ்த்து.

மாரி - ஒட்டுரோகம், கள், சாவு, நீர், பற்பலரிறக்குநோய், மழை, மேகம், வடுகி.

மாரிநாள் - உத்திரநாள்.

மாரீசம் - அட்டாதச வுபபுராணத்தொன்று.

மாரீசன் - இராவணன் மாமன்.

மாருண்டம் - பாதை, பாம்பு முட்டை.

மாருதம் - காற்று, பிராணவாயு.

மாருதராதம் - வங்கமணல்.

மாருதவன்னக்கல் - காகச்சிலை.

மாருதவீமன்- ஏகம்பபாஷாணம்.

மாருதி - அனுமான், வீமன்.

மார் - உயர்திணைப் பன்மைப் படர்க்கை விகுதி.

மார்கழி - ஓர்மாதம், மிருகசீருடம்.

மார்க்கசிரம் - மார்கழிமாதம்.

மார்க்கணம் - அம்பு, தேடல்.

மார்க்கணர் - இரப்போர்.

மார்க்கண்டேயம் - அட்டாதசவுபபுராணத்தொன்று.

மார்க்கண்டேயர் - ஓர் முனிவர்.

மார்க்கம் - ஆராய்வு, ஓர்கூத்து, கையாந்தகரை, தாளப்பிரமாணம் பத்திலொன்று, தெரு, நெடுந்தெரு, மார்கழி மாதம், வழி.

மார்ச்சனம் - துடைப்பு.

மார்ச்சனி - விளக்குமாறு.

மாரச்சனை - முழுவொலி.

மார்ச்சாரகம் - மயில்.

மார்ச்சாரம் - பூனை.

மார்ச்சாலநியாயம் - ஓர் நியாயம்.

மார்ச்சாலம்-கோமேதகம், பூனை.

மார்த்தாண்டம் - அட்டாதசவுப புராணத்தொன்று.

மார்த்தாண்டன் - சூரியன்.

மார்பகம் - நெஞ்சு.

மார்பு - அகலம், நெஞ்சத்தால் வருபெயர்.

மாலதி - சிறுசண்பகம், மல்லிகை, முல்லை.

மாலம் - குங்குமமரம், பேய்.

மாலயற்கரியான் - சிவன்.

மாலர் - கவசம், புலையர், வேடர்.

மாலவன் - புதன்.

மாலி - ஓரரக்கன், மாலேப்பணிந்தவன்.

மாலிகை - நிரல்படநிற்குங் குழூஉ, மாலே.

மாலிமி - இளமைப்பருவத்திற் செய் நட்பு.

மாலியவான் - ஓரரக்கன்.

மாலினி - காளி.

மாலுகம் - வேம்பு.

மாலுக்கிளேயான் - துர்க்கை.

மாலுதானம் - கண்குத்திப்பாம்பு.

மாலுந்திவந்தோன் - பிரமன்.

மாலுமி - மீகாமன்.

மாலுறல் - மயங்கல், மாறுகொள நினேத்தல்.

மாலூரம் - வில்வமரம்.

மாலூர்தி - கருடன்.

மாலே-அந்திப்பொழுது, அரசன் மனே, இயல்பு, இரா, ஒழுங்கு, சொல், பூ, பொன், மணி இவற்றினென்றல் தொடுத்த தொடை, நோய்.

மால் - அருகன், இந்திரன், கருமை, காற்று, சோழன், திருமால், புதன், பெருமை, மயக்கம், மேகம், வேட்கை.

மால்கொடை } துளசி.
மால்முருகு

மால்பு - கண்ணேணி.

மாவகம் - இலுப்பை, காஞ்சிரை.

மாவலர்-குதிரைப்பாகர், யானைப் பாகர்.

மாவலி - ஓர் சக்கரவர்த்தி.

மாவிரதம் - மகாவிரதம்.

மாவிரதியர் - சிவசமயத்தோர் வகையோர்.

மாவிருக்கம் - சதுரக்கள்ளி.

மாவிலந்தம் விடத்தேர்.

மாவிளம் - வில்வமரம்.

மாவீரன் - அதிவீரன்.

மாவுரம் - வலி.

மாவெனல் - அழைத்தல்.

மாழாத்தல் - மயக்கம்.

மாழை - அழகு, அறிவின்மை, உலோகக்கட்டி, ஓலை, திரட்சி, புளிமா, பொன், மாமரம்.

மாழ்கல் - சாதல், மயக்கம், மேவல்.

மாழ்கு - சா, மாழ்கென்னேவல், மிருகசீரிடம்.

மாழ்தல் - சோம்பல், மயக்கம்.

மாள் - முன்னிலையசைச்சொல்.

மாளல்
மாள்தல் } சாதல்.

மாளவகௌளம் - ஓரிசை.

மாளவம் - ஓர்தேசம், ஓரிராகம்.

மாளவி - ஓரிராகம்.

மாளிகை - அரசன்மனை, வீடு.

மாளுதல் - இறத்தல்.

மாறல் - ஆடல், தவிர்தல், விடுதல், வேறுபடல், பெருக்கல்.

மாறன் - பாண்டியன்.

மாறு - கைம்மாறு, துடைப்பம்.

மாறுகம் - சீலை.

மாறுகொளக்கூறல் - நூற்குற்றம் பத்தினொன்று.

மாறுகோள் - ஒவ்வாமை, விரோதம்.

மாறுதல் - மயங்குதல்.

மாறுபடுபுகழ்நிலை - ஓரலங்காரம்.

மாற்றம் - சொல், பகை, வேற்றுமை.

மாற்றலர் - பகைவர்.

மாற்றல் - ஒன்று கொடுத்து ஒன்று வாங்கல், கொடாமை, ஒன்றை யொன்றெருக்கல்.

மாற்றவள் - சக்களத்தி.

மாற்றார் - பகைவர்.

மான-உவமைச்சொல், முன்னிலை யசைச்சொல், வினையெச்சம்.

மானசம் - கருத்து, மனது, மான தவாவி.

மானசாரம் - ஓர் சிற்பநூல்.

மானதக்காட்சி - பொறிவழியிற் கண்ட வுருவை மனத்தாற் குறித்துணர்தல்.

மானததீட்சை - அகத்தீட்சை.

மானதபூசை - மனோபூசை.

மானதப்பிரத்தியட்சம் - மான தக்காட்சி.

மானபோதம் - ஓர் சிற்பநூல்.

மானமா - கவரிமா.

மானம் - அபிமானம், அளவு, உவமை, குற்றம், பெருமை, வலி, வெட்கம், கால கணிதம், ஸௌரமானம், சாந்திரமா னம் முதலியன.

மானல்-இலச்சை, ஐயம், ஒத்தல், மயக்கம்.

மானவம் - ஓர்தருமநூல், ஒருப புராணம்.

மானவர் - ஆண்மக்கள், படை வீரர், மனிதர், மானமுடை யோர்.

மானவு - தெளிவு.

மானார் - பகைவர், பெண்கள்.

மானி - மானமுடையோன்.

மானிகை - ஓர் முகத்தலளவு, சாராயம்.

மானிடத்தன்மன் - குபேரன்.

மானிடமேந்தி } சிவன்.
மானேந்தி

மானிடர் } மனிதர்
மானுடர்

மானிதம் - கனம்.

மானியம்-சம்மானம், அரசர்கள் சம்மானத்தால் விட்டநிலம்.

மானினி - பெண்.

மானுடயாகம் - பஞ்சமகாயக்கியத்தொன்று.

மானேந்தி - சந்திரன்.

மானேறு - உத்திரநாள், கலைமான்.

மான் - உருவம், மகரமீன், மகரராசி, மான், விலங்கின்பொது.

மான்குளம்பு - அடம்பு.

மான்செவி - இலக்கள்ளி.

மான்மகன் - பிரமன், மன்மதன்.

மான்மதம் - கஸ்தூரி.

மான்றலை - மிருகசீரிடம்.

மான்றல் - மயக்கம்.

மி

மி - ஓரெழுத்து.

மிகப்படல் - மிகுதல்.

மிகல் - அதிகரித்தல், மிகுதி.

மிகவல்லோர் - அறிஞர்.

மிகன்மக்கள் - பெரியோர்.

மிகுகொடையாளன் - கன்னன்.

மிகுண்டம் - சாரணை.

மிகுதி - அதிகம், திரட்சி, பூரிப்பு, பொலிவு.

மிகுத்தியல் - வில்வம்.

மிகுந்தவனம் - தண்ணீர்விட்டான்.

மிகுப்பலத்தம் - காத்தோட்டி.

மிகை - குற்றம் கேடு, துன்பம், மிகுதி, வருத்தம்.

மிகைப்படக்கூறல் - நூற்குற்றம் பத்திலொன்று.

மிக்கவை - ஊன், சோறு, நியாய மல்லவை, நிறைதல்.

மிக்கிளமை - கட்டிளமை.

மிக்கோர் - அறிஞர்.

மிக்கோன் - உயர்ந்தவன்.

மிசிரம் - கலப்பு.

மிசை-உணர்வு, உயர்ச்சி, சோறு, தரித்திரம், மிசையென்னேவல், மேடு, மேல்.

மிசைதல் - அனுபவித்தல், உண்டல்.

மிசைத்திரள் - கரடு.

மிசைவடம் - வீரதண்டை.

மிச்சம் - சேடம், மிகுதி.

மிச்சில் - எச்சில், ஒழிபொருள்.

மிச்சை-அஞ்ஞானம், தரித்திரம்.

மிஞிறு - வண்டு.

மிஞ்சல் - மிகுதல்.

மிடல் - வலி.

மிடறு - கண்டம், கழுத்து, கீழ் வாய், தொண்டை.

மிடா - பானை, மிடா.

மிடி-மிடியென்னேவல், வறுமை.

மிடித்தல் - வறுமைபுறல்.

மிடிமை - வறுமை.

மிடியன் - வறியன்.

மிடை - தூறு, மிடையென்னே வல்.

மிடைதல் - நெருங்கல்.

மிண்டன் - திண்ணியன்.

மிண்டு - மதத்தாற் பிழைத்தல், மிண்டென்னேவல்.

மிண்டுதல் - நெருங்கல்.

மிதத்தல் - மிதப்பு.

மிதம் அளவு.

மிதலை - கொப்பூழ்.

மிதவை - சோறு, தெப்பம்.

மிதி - மிதித்தல், மிதியென்னே வல்.

மிதித்தல் - காலான்மிதித்தல், குதித்தல்.

மிதியடி - பாதக்குறடு.

மிதிலை - சனகநகர்.

மிதுனம் - இரட்டை, புணர்ச்சி, மிதுன விராசி.

மித்தியம் } பொய்.
மித்திமை }

மித்தியாவாசகம் - பொய்மொழி.

மித்திரநாள் - அனுடநாள்.

மித்திரபேதம் - நட்புப்பிரித்தல்.
மித்திரம் - நட்பு.
மித்திரர் - சிநேகிதர்.
மித்திரன்-சிநேகிதன், சூரியன்.
மித்தை - பொய்.
மியா - முன்னிலையசைச்சொல்.
மிரதம் - பாம்பு.
மிரிகை - பிருடை.
மிரிஞ்சி - செம்முருங்கை.
மிரியல் - மிளகு.
மிருகக்ஷீரம் - மான்பால்.
மிருகசயிடகம் - எருக்கு.
மிருகசிரம் - ஓர்நாள், கடலட்சண முப்பத்து மூன்றிலொன்று.
மிருகசீரிடம் - ஓர் நாள்.
மிருகசீவனன் - வேடன்.
மிருகசைடகம் - ஆண்பூனை.
மிருகண்டன் - ஓர் இருடி.
மிருகதஞ்சகன் - நாய்.
மிருகதந்தம் - பன்றிக்கொம்பு.
மிருகதரன் - சந்திரன்.
மிருகநாபி - கஸ்தூரிப்பூனை, கஸ்தூரி.
மிருகநாபிசம் - கஸ்தூரி.
மிருகபதி - சிங்கம்.
மிருகபந்தினி - மான்வலை.
மிருகபாலிகை - கஸ்தூரிப்பூனை.
மிருகமதம் - கஸ்தூரி.
மிருகம் - மான், விலங்கின்பொது.
மிருகாசன் - சிங்கம்.

மிருகவாகனன் - வாயு.
மிருகவ்வியம் - வேட்டை.
மிருகாங்கம் - காற்று.
மிருகாங்கன் - சந்திரன், சிவன்.
மிருகாதனம் - ஓர்வகைப்புலி, சிவிங்கி.
மிருகாதி - புலி.
மிருகாயினம் - மான்றோல்.
மிருகாரசிங்கி - ஓர் பாஷாணம்.
மிருகாரி - சிங்கம், நாய், புலி.
மிருகேந்திரன் - மிருகபதி.
மிருசம் - காட்சி.
மிருடங்கணம் - பிள்ளை.
மிருடன் - சிவன்.
மிருடாலகம் - மாமரம்.
மிரோடதயம் - பொய்.
மிருணாளம் - தாமரைக்கொடி.
மிருதங்கம்-ஓர்வாத்தியம், முழவு.
மிருதசஞ்சீவனி } இறந்தவர்
மிருதசஞ்சீவி } களை எழுப்பு மருந்து.
மிருதபாஷாணம் - ஓர் பாஷாணம்.
மிருதம் - போர், மிருதகம், நீர் வள்ளி.
மிருதாரசிங்கி - ஓர்வகைப்பாஷாணம்.
மிருதி - தருமநூல், மரணம்.
மிருது - சாந்தம், மென்மை.
மிருதுபாடிதம் - மென்மொழி.

மிருதுவாதம் - சிறுதென்றல்.
மிருதுன்னகம் - பொன்.
மிருதூற்பலம் - நீலோற்பலம்.
மிருதை - பூமி.
மிருத்தஞ்சயன் - சிவன்.
மிருத்திகை - மண்.
மிருத்திபு - மரணம், யமன்.
மிருத்து - மண், மரணம்.
மிருத்துசாந்தி - அவமிருத்தை நீக்குஞ்சாந்தி.
மிருத்துசூதகம் - மரணசூதகம்.
மிருத்துபஞ்சகம் }
மிருத்துபயம் } மரணபயம்.
மிருத்துசம் - மூங்கில்.
மிலாங்கலி - செங்காந்தன்.
மிலேச்சகந்தம்-வெள்வெங்காயம்
மிலேச்சம் - சரச்சுவதியாற்றின் வடதேசம்.
மிலேச்சாசம் - கோதுமை.
மிலைச்சல் - அணிதல்.
மிலைதல் - சூடுதல்.
மிழலை - ஒரு சிவதலம், மழலைச் சொல்.
மிழற்றல் - சொல்லல், நிரம்பா மென்சொல், பேசலாவெழு மொலி, பாடுதல்.
மிளகாய் - மிளகுகாய்.
மிளகு - ஓர்சரக்கு.
மிளகுசம்பா - ஓர்வகைநெல்.
மிளகுசாறு - மிளகுதண்ணீர்.

மிளகுதூள் - மிளகுபொடி.

மிளிர் - ஒளி, பெருமை.

மிளிர்தல் - ஒளிசெய்தல், கதிர் வீசுதல், பெருமைப்படல்.

மிளிறு - கரடி.

மிறல் - பெருமை.

மிறை - அச்சம், குற்றம், வருத்தம்.

மிறைக்கவி - சித்திரக்கவி.

மிறைத்தல் - துன்பப்படல்.

மினவு - உபசரிக்க.

மினுக்கம் - ஒளி.

மினுக்கு - விளக்கு, துலக்கு.

மினுக்குப்பசை - நெய்வாரிடும் பசையிதென்று.

மினுக்குமினுக்கென - மினு மினுக்க.

மினுங்கு - பிரகாசி.

மினுங்குதல் - மிளிர்தல்.

மினுமினுக்க - இலங்க.

மின் - ஒளி, பன்மை முன்னிலை ஏவல் வினை முற்று விகுதி, பெண்மகள், மின்னல், மின்னென்னேவல்.

மின்னல் - ஒளிசெய்தல்.

மின்னி - கருங்காக்கணம், நீர்ப் பயறு.

மின்னுதல் - பிரகாசித்தல், மின்னற்காலுதல்.

மீ

மீ - ஆகாயம், உயர்ச்சி, ஓரெழுத்து, மேல்.

மீகண் - கண்ணினது மேலிடம்.
மீகான் - மீகாமன்.
மீக்குவம் - மருதமரம்.
மீக்குர்தல் - பெருகுதல்.
மீக்கூறுதல் - புகழ்தல், மெச்சல்.
மீக்கூற்று - புகழ்.
மீக்கோள் - ஏறுதல், மேற்போர்வை.
மீச்செலவு - மேற்போதல்.
மீட்சு - மீளுதல்.
மீட்டல் - சுண்டுதல், மீட்டுதல் வீணை வாசித்தல்.
மீட்டும் - திரும்பவும்.
மீதுரை - பலகால் விளம்பல்.
மீதூர்தல் - நெருங்கல்.
மீந்தோல் - மேற்றோல்.
மீமாஞ்சை - ஓர்சமயம், பிரமாணத்தாலுண்மையறிதல், பூர்வமீமாஞ்சை, உத்திரமீமாஞ்சை.
மீமிசை - மேல், ஒருபொருட் பன்மொழியடுக்கு.
மீளல் - திரும்பல்.
மீளாக்கதி - மோக்கம்.
மீளி - அரசன், திண்ணியன், பாலைநிலத்தலைவன், பெருமை, மேன்மக்கள், வலி.
மீளுதல் - திரும்பிப்போதல்.
மீனகேதனன், மீனக்கொடியோன் - பாண்டியன், மன்மதன்.

மீனஞ்சு - மீன்கொல்லிப்பூடு.
மீனம் - மீனவிராசி, மீன்.
மீனம்பர் - செம்மீன்வயிரம்.
மீனவன் - மீனக்கொடியோர்.
மீனாட்சி - குபேரன் புத்திரி, அங்கயற்கண்ணி.
மீனெறி - மீன்குத்திக்குருவி.
மீனேறு - மகரமீன்.
மீன் - சித்திரைநாள், நெய்தற்பறை, மகரமீன், மச்சம், விண்மீன்.

மு

மு - ஓரெழுத்து.
முகக்கட்டு - தாடி.
முகக்குறி - முகச்சாடை.
முகக்கோட்டம் - முகப்பொலிவழிவு.
முகடி - மூதேவி.
முகடு - சுவர்ப்புறத்து நீண்ட வுத்திரம், மலையுச்சி.
முகடேந்தல் - மேற்கொள்ளல்.
முகசம் - பல்லு.
முகத்தலளவையாகுபெயர் - அளவுக்குரியபெயரை யளக்குங் கருவிக்கு வழங்குவது.
முகத்தல் - மணத்தல், முகத்தலளவை, மொண்டுகொள்ளல், மொள்ளல்.
முகத்துதி - முகமன்வார்த்தை.
முகத்துவாரம் - 'கடலுமாறும் பொருந்துமிடம், முகப்பு, வாயில்.

முகநட்பு - பொய் நட்பு.

முகபடாம் - யானையின் முகப் போர்வை.

முகமன் - உபசாரம்.

முகமுகெனல்- ஈரொலிக்குறிப்பு.

முகம் - இடம், தொடக்கம், தோற்றம், முகம், வாயில்.

முகரிமை - பேரறிவு, திவ்விய ஞானம்.

முகரெனல் - ஒலிக்குறிப்பு.

முகவணை - முகவுரை.

முகவை - அகப்பை.

முகவுரை-நூலுக்கு முகம்போலச் சிறந்திருப்பது, முன்னுரைக் கப்படுவது.

முகன் - முகம்.

முகாரி - ஓரிராகம்.

முகில் - மேகம்.

முகிழம் - மலரும் பருவத்தரும்பு.

முகிழிதம் - முகிழம்.

முகிழ் - முகிழம், முகிழெழன்னே வல், கரலட்சணத்திறென்று.

முகிழ்த்தல் - குவிதல்.

முகினி - புளியமரம்.

முகுந்தன் - திருமால்.

முகுரம் - கண்ணாடி.

முகுன் - மலரும்பருவத்தரும்பு.

முகூர்த்தம் - ஓர்காலவரையறை, அஃது — இரண்டு நாழிகை கொண்டது.

முகை - கூட்டம், மலரும் பருவத்தரும்பு, மிடா, முகையென்னேவல்.

முகைத்தல் - அரும்புதல்.

முக்கணன் - சிவன், விநாயகன், வீரபத்திரன்.

முக்கணி - காளி, பார்வதி.

முக்கல் - பேசலாவெழுமொலி.

முக்கறட்டை - ஓர் செடி.

முக்கனி - கதலி, பலா, மா இவற்றின் கனி.

முக்காணி-சிற்றிலக்கத்தொன்று.

முக்காணியர் - அந்தணர்களிலோர் பிரிவினர்.

முக்காலம் - இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம், என மூன்று நேரம்.

முக்குடுமி - சூலம்.

முக்குடை - பொன்மணிமுத்து இவைகளாலாகிய குடை.

முக்குடைச்செல்வன் - அருகன்.

முக்குணம் - மூன்றுகுணம்.

முக்குளம் - பூராடம்.

முக்குளி - கோழி முளையான்.

முக்குற்றங்கடிந்தோன் - கடவுள், புத்தன்.

முக்குற்றம் - காமம், வெகுளி, மயக்கம்.

முக்கூடல் - ஓர்மலை.

முக்கூட்டு - பரணிநாள், அடுப்பு.

முக்கூற்று - ஒருவன், ஒருத்தி, ஒன்று என்கிற மூன்று பால்கள்.

முக்கோல் - திருவோணம், திரிதண்டம்.

முசகம் - எலி.

முசர் - தயிர்.

முசலம்-இருப்புலக்கை,உலக்கை.

முசலி - உடும்பு, ஓணான், தாழை, பலபத்திரன், பல்லி, முதலை.

முசலிகாசனம் } யோகநிலையி
முசலிகாதனம் } லொன்று.

முசலிகை - முசலி.

முசல் - முயல்.

முசித்தல் - மெலிதல்.

முசிப்பு - மெலிவு.

முசிரம் - வள்ளற்றன்மை.

முசு - ஓர் சாதிக்குரங்கு.

முசுகுந்தன் - ஓர் சக்கரவர்த்தி.

முசுடர் } கீழ்மக்கள்.
முசுண்டர் }

முசுட்டை - ஓர்கொடி.

முசுண்டி - படைக்கலம்.

முசுப்பதி - பாசறை.

முசுமுசுக்கை - ஓர் செடி.

முச்சகம் - பூமி, அந்தரம், சுவர்க்கம்.

முச்சத்தி - இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி.

முச்சந்தி - முத்தெருக்கூடுமிடம்.
முச்சி-உச்சி, உச்சிக்கொண்டை, மயிர்முடி.
முச்சியர் - உறைகாரர்.
முச்சிரம் - சூலம்.
முச்சில் - சிறுமுறம்.
முச்சீரடி - சிந்தடி.
முச்சுடர் - ஆதித்தன், சந்திரன், அக்கினி.
முச்சுட்டு - அ, இ, உ, என்னும் மூன்று சுட்டிடைச்சொல்.
முச்சொல்லலங்காரம் - ஓரலங்காரம்.
முஞல் - கொசுகு.
முஞ்சல் - சாதல், முற்றும், வியங்கோள்முற்று.
முடக்கம் - முடங்குதல்.
முடக்கு - முடக்கென்னேவல், முடங்கல், விரலணி.
முடங்கல் - ஓலை, தாழை, நோய், மடங்கல், மூங்கில்.
முடங்கு - நோய், முடங்கென்னேவல்.
முடங்குளை - சிங்கம், குதிரையின் பிடரிமயிர்.
முடத்தெங்கு- முடங்கியதெங்கு.
முடமுடெனல் - அனுகரணவோசை.
முடலை - உண்டை, நாற்றம், பெருமை, வலி.

முடவன் - அருணன், சனி, நொண்டி முடவன்.
முடி - கிரீடம், குடுமி, தலை, துழாய், நாற்றுமுடி, மயிர்முடி, முடியென்னேவல், முடிவு.
முடிதல் - கடை, சாதல், முடிச்சு முடிதல்.
முடிதும்பை - ஓர்பூடு.
முடித்தல் - முற்றுவித்தல்.
முடித்துக்காட்டல் - முப்பத்திரண்டு உத்தியிலொன்று.
முடிந்ததுமுடித்தல் - சொல்லி முடிந்ததைத்தொகுத்து முடித்தல்,
முடிபு - சொல் பொருள்முடிவு.
முடியல் - எல்லாம்.
முடிவு - கடை.
முடிவிடங்கூறல் - தான் சொல்லும் இலக்கணத்திற்கு இலக்கியந்தோன்றும் இடத்தைச் சொல்லுதல்.
முடுகல் - எதிர்த்தல், சீக்கிரம், மொய்த்தல், வலி.
முடுகியல் - வண்ணம்.
முடுகு-அராகம், கடமைப்பெண், முடுகென்னேவல்.
முடுகுவெண்பா - ஓர் வகை வெண்பா.
முடுக்கர் - மலைக்குகை.
முடுக்கல் - ஓட்டல், மொய்த்தல்.
முடுவல் - செந்நாய், நாய், பெண்ணாய்.

முடிவெற்படையோன் - வயிரவன்.

முடை - ஓலைக்குடை, கந்தம், தீயவாசனை, நாற்றம், புலால், முடையென்னேவல்.

முடைச்சேரி - முல்லை நிலத்தூர்.

முடைதல் - இளைத்தல், பிணைத் தல், முடைதல்.

முட்கரம் - ஒட்டாரம்.

முட்டம் - ஓரூர்.

முட்டி - எட்டிமரம், கைப்பிடி, பிச்சை, கலைக்கியானம், கர லட்சணமிருபத்து மூன்றி னொன்று.

முட்டிகை - தட்டார் குறடு.

முட்டு - கடிவாளம், குறைவு, முட்டென்னேவல், முட்டுகை, அடைப்பு.

முட்டுதல் - எதிர்த்தல், குறை வுறல், தாக்குதல்.

முட்டுப்பாடு - குறைபாடு, தீமை.

முட்டை - அண்டம், தவிடு.

முட்டைப்பாசி - ஓர் பாசி.

முட்பன்றி - முள்ளம்பன்றி.

முணங்கல் - அடங்கல்.

முணங்கு - அடக்கம்.

முண்டகம் - ஒருபசிடதம், கள், தாமரை, தாழை, நெற்றி,முட் செடி, முள்ளிச்செடி.

முண்டகன் - பிரமன்.

முண்டகாசனை - இலக்குமி.

முண்டம் - உடற்குறை, தலை, திரட்சி, மொட்டைத்தலை, நெற்றி, நிர்வாண சரீரம்.

முண்டணம் - மழித்தல்.

முண்டன் - நாவிதன்.

முண்டி - நாவிதன், முண்டியென்னேவல், மொட்டைத்தலையன்,

முண்டிதம் - மொட்டை.

முண்டித்தல் - மழித்தல்.

முண்டை - விதவை.

முண்மா - முட்பன்றி.

முதம் - உவகை.

முதல - முதற்று.

முதலல் - முதலாதல்.

முதலி - முதல்வல்.

முதலுதல் - முதலல்.

முதலெழுஞ்சனி - மகத்துச்சனி.

முதலெழுத்து - சார்பெழுத்துக்குக்காரணமான தலைமையானவெழுத்து.

முதலை - நீர்வாழ் முதலை.

முதலோன் - கடவுள்.

முதல் - ஆதி, எழனுருபு, முதலென்னேவல்.

முதல்வர் - வானோர்.

முதல்வள்ளல் - குறிப்பறிந்திவோன்.

முதல்வன் - அரசன், அரன், அருகன், கடவுள்.

முதல்வி - தலைவி.

முதல்வினை - கர்த்தாவின்றொழில்,

முதல்வேதம் - இருக்கு.

முதற்கண் - முதலிடம்.

முதற்கருவி - செயப்படுபொருளோடொற்றுமையுடையது.

முதற்காரணம் - ஆதிகாரணம்.

முதற்குறிப்பு - ஒருபாட்டிலே முதல் நிற்குஞ் சொல்லை மாத்திரம் குறித்ததும், ஒரு சொல்லில் முதல் நிற்கும் எழுத்தை மாத்திரங் குறித்ததும்.

முதற்பா - வெண்பா.

முதற்பெயர் - சினைப்பெயரல்லாதது.

முதற்பொருள் - ஆதிகாரணப் பொருள், கடவுள்.

முதனுவிளிம்பு - அடிநாவின் ஓரம்.

முதனாள் - அசுவினி நாள்.

முதனிலை - எழுத்துக்கள் மொழிக்கு முன்னிற்கும் இலக்கணம், பகுதி.

முதனிலைத்தீவகம் } தீபகாலங்
முதனிலைவிளக்கு } காரத்தி
னொன்று.

முதனிலைத்தொழிற்பெயர் - பகுதிப்பொருண்மாத்திரமாய் நிற்கும் வினைச்சொல்.

முதனூல் - ஆதிநூல், முதல்வன் வாக்கு.

முதன்மாணுக்கர் - தலைமாணுக்கர்.

முதன்மை - தலைமை.

முதிதம் - உவகை.

முதியர் - மூத்தோர், பெரியோர், கற்ருேர்.

முதிரம் - மேகம்.

முதிரை - அவரை, காராமணி, துவரை யிவைமுதலியன, ஓர் மரம்.

முதிர்ச்சி - முதிர்வு.

முதிர்தல் } காய்தல், வறத்தல், முற்றல்.
முதிர்ந்திடல் }

முதிர்ப்பு - கலக்கம்.

முதிர்வேனில் - ஆனியாடியின் பருவம்.

முது - பழமை.

முதுகாஞ்சி - ஓர் பிரபந்தம்.

முதுகாடு - பிறங்கியல், சுடுகாடு.

முதுகு - பின்புறம்.

முதுகுன்று - விருத்தாசலம்.

முதுக்குறைவு - பேரறிவு, ஞானவுணர்ச்சி, பெண்புத்தியறிகை.

முதுசொல் - பழஞ்சொல்.

முதுநிலம் - களர், பெரும்பாழ் நிலம்.

முதுமகன் - சனி.

முதுமை - பழமை, பழமொழி, மூப்பு.

முதுமொழி - முதுசொல்.

முதுவர் - புலவர், மந்திரிகள், முதுணர்ந்தோர், மூத்தோர்.

முதை - காடுவெட்டிச்சுட்ட கொல்லை.

முதைப்புனம் - பழங்கொல்லை.

முதையல் - முதுகாடு.

முத்தகம் - சுருக்குவாளிமரம், தனித்தனியே முற்றுப்பெருஞ் செய்யுள்.

முத்தக்காசு - கோரைக்கிழங்கு.

முத்தமாடல் } முத்தமிடல்.
முத்தாடல் }

முத்தகுதி-மூன்றுதகுதி வழக்கு.

முத்தமிழறியோன்- அகத்தியன், வயிரவன்.

முத்தமிழ்-இயல், இசை, நாடகம்.

முத்தம் - உதடு, பிரியம், மருத நிலம், முத்து, முத்தாதனம்.

முத்தரையர் - செல்வர்.

முத்தர் - திடர், பக்குவர்.

முத்தலை - சூலம்.

முத்தலைவேலோன் - வயிரவன்.

முத்தன் - அரசன், அருகன், புத்தன், வயிரவன், முத்தி பெற்றோன்.

முத்தாகலாபம் - முத்தாரம்.

முத்தாகாரம் - முத்துச்சிப்பி.

முத்தாதனம் - யோகனிலையி லொன்று.

